உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அரசகுலசேகர புலவ சிகாரத்தினம்

ஆகிய

அதிவீரராமபாண்டியர்

அருளிச்செய்த

கூர்மபுராண மூலமும்

பூருவகாண்டம்.	ஏழாஞ்சங்கியை.	விளம்பிஷு பங்குனிமீ.

சைவப்பிரசாரணரும்,

சென்னை:—C. M. S. Z. கலாசாலைத்

தமிழ்ப் பண்டிதரும்

ஆகிய,

யாழ்ப்பாணம்

நா-கதிரைவேற்பிள்ளை அவர்கள்

இயற்றியவுரையும்.

இவை

சென்னை,

பிரம்பூர்க் குயப்பேட்டை

வித்தியா ரத்நாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

1899.

Registered Copy Right.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கூர்மபுராணம்

மூலமும் உரையும்.

வேதாகம உபநிடத சித்தாந்த சாரங்களையெல்லாம் உள்ளடக்கி, உலகத்தின் தோற்றமொடுக்கம், மனுவந்தரம், முனிவராற்றல், அரசபாரம்பரியம், அவர்கள்சரிதம் என்னும் புராணவிலக்கண மைந்தும் வாய்ந்து, வடமொழிக் கடற்கண் விளங்கும் கூர்மபுராணப் பொருளைத் தண்டமிழ்த் தென்மொழியார்க்கு நன்கறிவுறுக்கப் பொருட்டொடர்நிலைச் செய்யுளென்னும் பெருங்காப்பியத்திற் பெயர்த்து யாப்பான்புக்க ஆசிரியன், எடுத்துக்கொண்ட வஃது ஆதிதைவிகம், ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம் என்னுமிவையின் மூன்வரு மிடையூறியாவுந்தீர்த்து இனிது முடிதற்பொருட்டும், முடிந்தது நின்று நிலவுதற்பொருட்டும் எண்குணமமைந்த விறைவற் காத்தலை வேண்டியதாம்.

காப்பு.

வெண்ணிலாக் கற்றை கான்று விளங்குமோர் பிறைக்கோ டின்றி
யெண்ணிலோர் பாகங் கூந்தற் பிடியென விருந்த வாற்றூற்
பெண்ணொரு பாகம் வைத்த பித்தனுக னுருவு காட்டு
மண்ணலங் களிநல் யானை யடிமலர் சென்னி வைப்பாம்.

(இதன்பொருள்.)

எண்இல் ஓர்பாகம்-ஒன்றானும் அளவுபடுத்தற்கரிய திருமேனியி னொருபகுதி, வெ[illegible] கற்றை கான்று விளங்கும்-வெள்ளிய சந்திரிகைத் தொகுதியைப் பொழிந்து [illegible]நின்ற, பிறைஓர்கோடுஇன்றி-பிறைச்சந்திரனைப்போன்ற ஒப்பற்ற கொம்பொன்[illegible]லாமல், கூந்தல் பிடிஎன இருந்த ஆற்றல்-பிடர்க்க ணுரோமங்கள் செறிதலையுடைய [illegible]னபோல் விளங்கிய தன்மையானும், ஓர்பாகம்-மற்றை யொருபகுதி, கோடு இருக்[illegible]-களிற்றி யானைபோலக் கொம்பொன்றனை யுடைத்தாந் தன்மையானும், பெண் [illegible]ம் வைத்த பித்தனுகன் உருவு காட்டும்-உமாதேவியாரைத் திருவுருவி னோர்கூறாகக் [illegible]ட சிவபிரானது திருவடிவத்தை யித்தன்மைத்தென்று காட்டியருளாநிற்கும், அண் [illegible]அம் களி நல்யானை-பெருமைத்தன்மையும் அழகும் மதக்களிப்புமுள்ள நல்லயானை [illegible]ய விநாயகக்கடவுளது, அடிமலர் சென்னி வைப்பாம் - திருவடிகளாகிய செந்தாமரை [illegible]ர்களைச் சிரமீது யாம் சூடுவோம் என்க.

. கருமந்தொடங்குவோர் யாவராயினும் முதலில் விக்கினகர்த்தா வாகிய விநாயகக் கடவுளையே காப்பாக வைக்கவேண்டு மென்றும், வைக்கின் அஃது முட்டின்றி யாமென்றும், [illegible]ன்றேலாகாதென்றும் வரம்பெற்ற தலைமையராகலின் இவனும் விநாயககாப்பைவேண்[illegible]னன் என்க. உதாரணம் வருமாறு:—

கூர்மபுராணம்.

பார்க்கவபுராணம்-திருவவதாரப்படலம்.

முராரி யாதிய தேவர்கள் முதலுறு முழுதுல கினிலுள்ளோர்
விராவி யாதொரு காரிய மாயினும் விளக்குறச் செயவென்றே
பராவி யுன்னருச் சனைசெய்வோர் மனத்துறு பான்மைதக் தருளுன்னன்
பிராது செய்பவர் காரிய மூறுசெய் திடுதியென் றிவைசொல்வான்.

சத்தி யொருகூறாகவும், சிவம் ஒருகூறாகவு மமைந்துள்ள அர்த்தநாரீசுர வடிவம் போல, ஒருபாகங் கொம்பின்றிப் பிடியுருவாகவும், மற்றோர்பாகங் கொம்பிருந்து களிற் றுருவாகவுங் காட்டும் வடிவமைந்த யானையாகிய விநாயகக் கடவுளது திருவடிப்போது களை யாம் சிரமேற் றரிப்பாம் என்பது கருத்து.

வெண்ணிலா-என்பது இனமின்மையின் விசேடிக்கப் படாதாயினும் செய்யுட்கு அணி யாய் நிற்றலால் வழீஇ யமைதன் மரபாம். என்னை? "இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை-வழக்காறல்ல செய்யுளுள்ளே" என்றார் தொல்காப்பியனாராகலின். இது போல்வருவனவற்றை யினமின்றிச் செய்யுளில் வருஉங் கருமதாரயன் என்பர் பிரயோக விவாகநூலாரும். பிறைஎன்பது கலைநிரம்பா மதியாகவும், கற்றை காள்று என்றது வளர்ந் துறுந்துணிபினுனென்க. இன்றி-உகர மிகரமாத் திரிந்த வினையெச்சக் குறிப்பு. எண்ணின்-எனப்பாடங்கொண்டு, நினையுங்கால் என வினையெச்சப் பொருட்டாகவும், வலம் இடமாகிய என்ணத்தில் என ஐந்தனுருபேற்ற பெயர்ப்பொருட்டாகவும் உரைப்பாரு முளர். இறை வன்றிருவுரு பசுபாசஞானங்களா னறிவருந் தகைத்தாகலானும், ஓர்பாகம் எனவே "எடு த்தமொழியினஞ் செப்பலுமுரித்தே,, என்னுந் தொல்காப்பியவிதிப்படி இனமாகிய மற் றையபாகமுங் குறிப்பா னுணரப்படு முரித்தானு மவைசிறப்பன்றாம். "பிடியென் பெண் பெயர் யானைமேற்றே" என்பது விதியாகலிற் பிடி-என்பதற்கு யானையென்றாம். என என்னு முவம உருபிடைச்சொல் ஈண்டுப் பண்புணர்த்தும் பொருட்டாய், இருந்த வென் பதன் முதனிலை வினைகொண்டது.

"பெண்பாலெல்லாம் பெண்ணெனற்குரிய,, என்றபடி பெண் என்னுஞ்சொல் இரு திணைப் பெண்மைக்கும் பொதுவாயினும், அடைகொடுத்துரைக்கி னஃறிணைப் பொருளா மென்றும், வாளாகூறின் உயர்திணைப் பொருளாமென்றும் ஈச்சினார்க்கினிய ருரைத்தமை யானும், "பெண்ணும்பிணவும் மக்கட்குரிய" என்று தொல்காப்பியனாரும் பின்விதந்தோ துப வாகலானும், அஃதுயர்திணைப் பெண்மை மேற்றாய்க் கட்புலனுயதோர் அமை[illegible] தன்மைப் பொருட்டாகாமே பெண்பாலாய தன்மைப் பொருட்டாய்ப் பராச[illegible] உமையம்மையாரை யுணர்த்திநின்றது. பிஞ்ஞகன்-தலைக்கோலத்தை யுடையவன்[illegible] ஆகுபெயர். யாம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

முக்குணத்தாலாய மூவர்களுள் முதலிருவர்க்குஞ் சத்துவராசதங்களை ஒரோ[illegible] சரித்து, இறுதியினிற்கும் எம்பிரானுய உருத்திரர்க்குத் தாமதகுணத்தைச் சா[illegible] அவர்செயலியாவும் கருவிகொண்டறுத்துக் காயப்புண்ணாற்றுந் தருமவைத்திய[illegible] மைபோலவும், புதல்வர் தஞ்சொல்லைப் போற்றுவிடத்து வளாரிலடித்துறுக்கிப் [illegible] மிடுந் தந்தைதாயர் தண்டம்போலவும், அழுக்கெடுக்கும் வண்ணான்வெள் ளாவியிலே[illegible] துக் கல்லின் மழுக்கும் வண்மைபோலவும் புறத்துக் காணப்படினும், அகத்தவையெல்[illegible] ஆன்மாக்கட்குக் கன்மத்தையூட்டி மலமுங்கழீஇ யந்தமிலின்பத் தழிவில்வீட்டை ய[illegible] பான்செய்யும் பெருங்கருணைத் திறனுப் பிறங்கலான், வெண்ணிற விளக்கம் வாய்ந்த ச[illegible] துவ்குண ரூபசுதந்தரன் சங்கரனேயென்றும், அவனியல்பினையும், அடையு முபாயங்களை யும் உண்மையிற்கூறுஞ் சிவபுராணங்களே சத்துவகுண புராணமாம் என்றும், இப்புரா ணமும் அவற்றொன்றாய்ச் சத்துவகுணத்த தாமென்று முணர்த்துவான் "வெண்மை"

என்ற வண்ணப் பண்புமொழியை முதலில்வரித்தும்,அப்புராண மென்பெயர்த்தோ வென்பார்க்கு, வெண்ணிறமுள்ள திருப்பாற்கடலி லமுதங் கடைந்தகாலத்துக் கூர்மரூபமாகிய விட்டுணுவினால் தாமரைமலரில்வாழு மிலக்குமி கற்பவிருத்தாந்தங்களை யெடுத்துரைக்கப் பட்டமையாற் **கூர்மபுராணம்** என்னும் பெயர்த்தெனக் குறிப்புரைப்பான், பால், தவள முதலிய வெண்மைப் பண்புக்குரியவாய பரியாயச்சொற்களை யெடுக்காது,நீருக்குரிய எழுத்தாகிய வகரத்தை முதலாகவுள்ள மொழியையே வைத்துக் கூறினான் என்க. என்னை? வகரவெழுத்தால் நீரும், அதனால் அதனதுநிறமாகிய வெண்மையும், குறியாகிய தாமரையும், அதிதேவதையாகிய விட்டுணுவும்,தோற்றமும் உண்மைவிளக்கத்தாற் பெறப்படுவவாகலின்.

இறைவன் பொங்கியெழுந்து முரணெனமுடுகிய கங்கையைக் குறைத்தடக்கிய திருமுடியிற்றானே, மங்கியிழிந்து சரணெனச் சார்ந்த சந்திரனை நிறைத்தடக்குந் தன்மைபோல, அவனது மெய்ம்மைப் புகழ்மிக்க விப்புராணப் பொருளை மேற்கொண் டடைவார் மேலாவிளங்குவார் என்றும், "அலர்மதியு மென்கவியுங் களங்குறையுங் கலைகுறையு மானக் காலும்-புலவரொலா மிகமகிழ்ந்தே யமுதெனவே பயனுகர்ந்து புகழா நிற்பர்-நிலவுமிழு மதிகரவு புரிபவர்க்கும் விரகியர்க்கு நெருப்பாத் தோன்று-முலகினிலென் கவியழுக்காறுடையவர்க்கும் பேதையர்க்கு முவட்பெய் தாதே" என்றும், "மாய்தலும்பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந்-தேய்தலுமுடைமையைத் திங்கள் செப்புமால்" என்று சிந்தாமணியிற் கூறியாங்கு, இப்புராணமும் உலகத் தோற்ற மொடுக்கமுதலிய பஞ்சலக்கணங்களையும் உணர்த்து மென்றுங் குறிப்பா லுணர்த்துவான் "நிலாக் கற்றை கான்று விளங்கும்பிறை', எனவும், பிறைச்சந்திரன் வெள்ளியதாய் வளைந்து, இருளைப்போழ்ந்து, அமுதவொளியை யளித்து, உடுக்கணத்தலைமைபூண்டு, அசுவினிமுதலிய நட்சத்திரங்களுள் கிரமந்தப்பாமே கலந்து அவைகளையளிக்கச் சுழன்று, அருவு முருவும் அருவுருவுமுடைத்தாய், இரவினும், பகலினும்,இராப்பகலினு நிலவி,உலகத்தானும், பதினெண்கணங்களானும் பரவப்படுந்தன்மைத்தாய், வானிலியங்கும் நவக்கிரகங்களுள் ஏனைய கிரகங்கள்போலக் காணப்படாத (இராகுகேதுக்களாகிய) பொருள்களைத் தன்கட்காட்டி, முகத்திற்சிறந்து விளங்கி யொளிரும் பெருமைத்தாகலின் அவ்வொப்புமை கொண்ட கோடென்பான் "பிறைக்கோடு" எனவுங் கூறினான்.

இங்ஙனம் அடைமொழி புணர்த்திச் சந்திரனை முதலில்விசேடித்தமை ஆசிரியன்தன் குலமுறை போற்றியதன்றி, சந்திரன் சத்தியம்ச மாகலானும், சத்தியே தொடப்படும் பொருளாகவும், ஒலியாகவும், கேட்கப்படுவனவாகவும், அவற்றின்சுவையாகவும், வித்தையாகவும், அவற்றிற் கிறைவியாகவும் நின்றமை நோக்கியாம்.

இலிங்கபுராணம்-அட்டமூர்த்த முரைத்த வத்தியாயம்.

மாயிரு ஞால மீன்றருள் வல்லி கூறதாம் வயங்கு வெண்மதிய
மேய தண்கலையால் விண்ணவர் தம்மை விழைந்துறை தென்புலத் தோரை
யெய்வுற நிறைய வூட்டி நன்காய விருந்தவப் பயிர்கண் மற்றெவையுந்
தேய்வுறு வாகி நாடொறு மிகுந்து நீதற வளர்ந்திடச் செய்யும்.

ஷை. சிவன்விபூதியுந் தேவிவிபூதியு முரைத்த வத்தியாயம்.

ஒலியெ லாமொளி ரொண்ணுத லிறைவியவ் வொலியை
மலைவின் றுகவே கேட்பவன் மதிமுகி ழணிந்தோன்
சொலவு றைந்திடு சுவையெலாந் தேவியச் சுவையை
யுலைவின் றுகவே யறிபவ னொளிர்மழுப் படையோன்.

சைவபுராணம்-சிவஞ்சத்தி யுருவிபூதி யுரைத்த வத்தியாயம்.

ஆணெலா மிறைவன் பெண்ணெலாந் தேவி யாகுமா லறிந்துநா முரைக்கிற்
பேணுறு விடய முமையவ ளவற்றை நுகர்பவன் பிஞ்ஞக னுமாற்
பாணியா தியாவுங் கேட்பவன் சிவனுந் தேவியே கேட்டிடப் படுவ
வேணுறத் தொடுவோன் சிவன்றொடப் படுவ யாவையு மிறைவியா மியம்பின்.

ஓர்கூறு கொம்புண்மையால் ஆண்போலவும், மற்றோர்கூறு கொம்பின்மையால் பெண்போலவும், இரண்டுங் கூடியமையால் அலிபோலவும் விளங்கலின் அவன், அவள், அதுவென்னும் ஆண்பெண் ணலியாகிச், சராசரங்களாகி, சத்தசத்தாய், சதசத்தாய், எல்லாமா யல்லவுமாய், யார்க்கும் ளைத்தற்கரிதாய் விளங்குந் தற்பரசிவத்தி னிலக்கணத் தையும்,அதுகொண்ட கேவலவடிவங்களு ளொன்றாய அர்த்தநாரீசுர மூர்த்தத்தின் றன்மை யையுந் தன்வடிவாற்காட்டும் யானையென்பான் "கோடின்றி யெண்ணிலோர்பாகங் கூந்தற் பிடியென விருந்தவாற்றாற்-பெண்ணொருபாகம் வைத்த பிஞ்ஞகனுருவுகாட்டும் யானை"என் றான்.அர்த்தநாரீசுர மூர்த்தமாவது-முன்னொர்காலத்துப் பிருங்கிமுனிவர் சிவபிரானைமாத் திரம் வணங்கிவர, இடப்பாகத்திருந்தருளு மிறைவியாற்றாளாய் வேறாயிருந்தமையா லன்றோ விதுநேர்ந்ததென்று தவங்கிடந்து, ஓர்கூறாய் இறைவன் திருமேனியின் அமரப்பெற்ற வடிவாம். அதனை "உமையுந் தானும் வேறன்மை யுருவினிடத்துத் தெளிப்பான்போ-லிமை ய மயிலை யொருபாதி வடிவி னிறுவி நாற்கரத்து-மமைய வனசந் திரிசூல மபய வரத மிவை தாங்கி-நமையு முய்யக் கொண்டருளு நாரிபாகன் திருவுருவம்" என்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளானறிக. களி-என்றது மும்மதத்தா லுண்டாகிய களிப்பு. மும்மதமாவன:— கன்னமதம்,கரமதம்,பீசமதம் என்பனவாம். யானையுறுப்புக் கழுத்தின்மேலன்றி யின்மை யான் மும்மதத்தனுதல் யாங்ஙனமென்பார்க்கு, மும்மதம் யானைக்கு அடையென்பாரும், ஒருகோட்டன் முதலியனபோல விநாயகப்பிரானுக்கு அடையாய்நிற்றலின் யானைக்கன் றென மறுத்து, இச்சாஞானக்கிரியைகளே மும்மதமென் றுருவகிக்கப் பட்டனவென்பா ரும், அங்ஙனுயிற் குமரவேளாதியோரையு மக்கருத்துநோக்கி மும்மதத்தினர்என மொழி யப்படாமையான் அஃது மன்றென மறுப்பாரும், பஞ்சாக்கரபேதமாகிய எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து முதலியனவும், பஞ்சாக்கரமென வழங்கப்படுமோறுபோல மும் மதத்தின்வகையான ஒருமத மிருமதமும் மும்மதமென வழங்கப்படும் என்பாரும் உளராக லின், இவ்வாசிரிய னவையிற்றை யெல்லாமறுத்துக் களிற்றுருக் கொண்டமையான் மும் மதத்தன் என்பான் "களிநல் யானைமுகன்" எனுது, "களிநல்யானை" என்றான். இக் கருத்தைப் பற்றியன்றோ தணிகைப்புராணத்தாரும், "மும்ம தத்தனென் றொருபெயர் தனக்கு மொய்கூந்தற் - கொம்மை வெம்முலைக் கொற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்- கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃறெனுங் கானத் - தம்ம முந்துபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம்,, என்று பகர்ந்தாரென்க. நல்லுயிர்களையும் பேணினுரையும் நலிந்து, தாமும் நலியப்பட்டுநிற்கும் இருகோட்டு மண்ணிடத்து யானைகளையும், நாற்கோட்டு விண்ணி டத்து வேழத்தையும் போலாது, ஒருகோடு மறுகோடு முடைத்தாய், எண்ணிடத்துள்ள விக்கரியோ "சொல்லாரும், பாதாள மூவுருவிப் பாரேழும் விண்ணேழு - மாதார மாகி யகண்டமிறைந்-தோத, வரிதா யெளிதா யருமறையா றங்கத்-துருவா யுயிரா யுணர்வாய்ப்- பெரிதாய, வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித் - துய்ய கடலைத் துகளெழுப்பி- யையமுறுங், காமக் குரோதமத மார்ச்சரியக் காய்ந்தடர்த்துச் - சாமத் தொழிலின் றலை மிதித்துக் - காமத்தாற், கத்துஞ் சமயக் கணக்கின்விறற் கட்டழித்துத்-தத்தம் பயங்கொ லைக ளாங்கழித்தே - தத்திவரும், பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்தம்-மாசைக் கருத்தை யறவீசி-நேசத்தா, லானவே கங்கொண்டருண் மும்மதத்தினு-லானையார் தத்து வங்க ளுள்புகுந்து - தேனைப், பருகிக் களித்துயர்ந்த பன்மறைநாற் கோட்டான் மருவித்

திகழ்ஞான வானையாய்" அன்பாகத் தறியிற் கட்டுப்பட்டு, சிவபோதக் கவளமுண்டு, புலப் பகைகடிந்து, அருண்மதம்பொழிந்து ஒருபெரும்பொருளளிக்கும் உவாவென்பான்"நல்யானை" என்றும் "பூவினதியல்பே பொருந்தக்கூறின் - மங்கலமாதலு நாற்றமுண்டைமையுங் காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலுங்-கண்டோ ருவத்தலும் விழையப் படுத லும்" என்றபடி அவ்யானையாகிய இறைவனடியும் பூவின்குணத்தைப் பொருந்திவிளங்க லுண்மையானும், "அடிச்சந்த மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்டென்-முடிச் சந்த மாமல ராக்குமுன்னோன்" எனத் திருக்கோவையாரிற் றிருவாய்மலர்ந்தருளியாங்கு, சென்னிக்கண் யாவரானுஞ் சூடற்குத்தகுதியானது பூவாதலானும், அவற்றை மலர் என் றுங் கூறினன் என்க. அன்றியு மவன்றிருவடி கிரியாசத்தி, ஞானசத்தியாக விரிதலின் மலர் எனப்படு மென்பாருமுளர்.

வைப்பாம்-என்றது, ஆசிரியன்றன்னை யுயர்த்துரைத்த வுபசாரமன்று. மன்னுயிரெல் லா மன்னுள் வேந்தன் றன்னுயி ரென்னுந் தகுதிய தாகலானும்,ஆசிரியரு மன்பதை புரக் கு மாண்பின ராகலானும், இவனும் தன்னொடு மற்றையுயிர்களும் பயனடைவான் சேர்த் துரைத்த பன்மையைக் குறிக்குந் தன்மைச் சொல்லாம். அதனை, "அவைதாம், அம்மா மெம்மே மென்னுங் கிளவியு - மும்மொடு வருஉங் கடதற வென்னு - மந்நாற் கிளவியோ டாயென் கிளவியும்-பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. வைப்பாம் என்ற காயத்தொண்டானே மற்றைய வாக்கின்றொண்டு மனத்தின்றொண்டும் பெறப்படும்.

யானையாகிய விநாயகக்கடவுளது திருவுருவம்,பிற்றுகனது திருவுருவத்தை நினைப்பிக்கு மென்றலால், இச்செய்யுள் மிருதிமதாலங்காரம் என்னும் நினைப்பணியாம். இதுபுறப் பொருளிற் கைக்கிளைப்புறனுய பாடாண்டிணைப் பகுதியிற் கடவுள்வாழ்த்து என்னுந்துறை.

கடவுள் வாழ்த்து.

அஃதாவது, நூல்செய்வோன் இம்மைப்பயனையாதல் மறுமைப்பயனையாதல், இரண் டனையுமாதல் பெறுவான் றன்பொருட்டானும், பிறர்பொருட்டானும், இருவர்பொருட்டா னும் வேண்டித் தான்வழிபடுகடவுளையாதல், எடுத்துக்கொண்டபொருட்கு ஏற்புடைக்கட வுளையாதல் வாழ்த்துதலாம். பரவலும் புகழ்ச்சியுந் தலைவன் கண்ணவாய்,பரிசில் பெறுதல் பாடுவோன் கண்ண மாகலின், இஃது ஒருதலைக்காமமாகிய கைக்கிளைக்குப் புறனாயிற்று. ஆகவே யிவ்வாழ்த்து இகபரமிரண்டும் வேண்டி யிருவர் பொருட்டானும் வாழ்த்திய இரு வாழ்த்துமாம். என்னை? காப்பியத்தலைவனும், வழிபடுகடவுளும் சிவனேயாகலான். ஈண் டுக் கடவுள்வாழ்த் தென்றான் அடியவரையுஞ் சேர்த்ததென்னெனில் "பாலைநெய்தல் பாடி யதும் பாம்பொழியப் பாடியதுங்-காலனையன் றேவிக் கராக்கொண்ட - பாலன், மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்-கரணம்போ லல்லாமை காண்" எனத் திருக்களிற்றுப் படியாரிற் றிருவாய் மலர்ந்தருளியதனானும் "அறிவாற் சிவனென்பது திண்ணமென்று" ஆணையிட் டோதத்தமையானும் கடவுள் என்றெனக. மற்றைய குருவணக்கமும், ஆசிரியன் றன்குருவாகலானும்" பணிசெய்திடு குருவேசிவன் சிவனே குருப்பழிதீர் - துணிவாகிய விஞ்சைச்சிவன் பூசை தொடர்ந்தாற்றின் "எனச் சைவபுராணங் கூறுமாற்றானும் ஒக்கு மென்க.

சிவபெருமான்.

சீர்பூத்த குழவிமதி யமுதிறைப்பக் கங்கைசெழுந் திவலை தூற்ற
வார்பூத்த பொம்மன்முலைக் கௌரியிரு கண்களிப்ப வானோர் போற்ற
வேர்பூத்த மணிமன்றத் தானந்த நடம்புரியு மெண்டோண் முக்கட்
கார்பூத்த களமிடற்றோன் கமலமலர்ச் சேவடியெங் கருத்துள் வைப்பாம்.

(இ-ள்)சீர்பூத்த குழவி மதி அமுது இறைப்ப-சிறப்புமலிந்த இளஞ்சந்திரன் கிரணங்களாகிய அமிர்தத்தைப் பொழியவும், கங்கை செழுந்திவலை தூற்ற - கங்கையானது வளப்பமுள்ள நீர்த்துளிகளைத் துமிக்கவும், வார் பூத்த பொம்மல் முலை கௌரி - கச்சினுள்விரிந்த பொலிவாகிய தனங்களையுடைய சிவகாமியம்மையார், இருகண் களிப்ப-இருதிருக்கண்களாலுந் தரிசித் துவகைகொள்ளவும், வானோர் போற்ற-தேவர்கள் துதித்து நிற்கவும்,ஏர்பூத்த மணி மன்றத்து-அழகுநிறைந்த கனகசபையின்கண், ஆனந்த நடம் புரியும்-ஆனந்த திருத்தாண்டவத்தைச் செய்தருளுகின்ற, எண் தோள் முக்கண் - எட்டுப் புயங்களையும் மூன்று கண்களையு முடைய, கார் பூத்த கறைமிடற்றோன் - மேகத்தைப்போல அருணிறைந்த நீலகண்டத்தை யுடைய நடேசப்பெருமானது, கமலம் மலர் சேவடி-தாமரை மலர்போன்ற செவ்விய திருவடிகளை,எம் கருத்துள் வைப்பாம்-எம்மனத்துள் வைத்துத் தியானிப்பாம்.

"சீர்பூத்த"எனமுதற்றொடங்கியது பாட்டுடைத்தலைவனது இயற்பெயர்க்கேற்ப மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்த மாண்பாம். என்னை? "தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்-வகுத்தபா லுண்டிவருணம்-பகுத்தநாட், டப்பாக் கதிகணமென்றீரைந்தின் றன்மையினைச் - செப்புவதா முன்மொழியின் சீர்" என **வெண்பாப் பாட்டியல்** விதித்தலின். அம்மொழிக்கண் முறையே சீரென்னு மங்கலமும்,மூவசைச்சீர்ச் சொல்லும், பஞ்சாக்கரமும், பாலத்தானமும்,பெண்பாலும்,அமிர்தவுணவும், அந்தணவருணமும்,இரேவதிநாளும், தேவகதியும், நிறக்ககணமும் அமைந்திருத்தல் காண்க. "அப்பிறை பதினெண்கண னுமேத்தவும்படுமே" எனப் **புறப்பாட்டினும்**, "குறைபல மாமதி கொளினு மன்னதா-லுறுபய னோக்கியே யுலகம் போற்றல்போல்"எனக் **கந்தபுராணத்தும்**, "குழவித் திங்க ளிமையவரேத்த-வழகொடுமுடித்த வருமைத்து" எனச் **சிலப்பதிகாரத்தும்**, "அங்கண் விசும்பி னிருள்போழ்ந் தகல்வா னெழுந்த-திங்கள் மறுவுஞ் சிலர்கைதொழச் செல்லு மன்றே" எனச் **சூளாமணியினும்**, "ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய-வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்."என **நாலடியாரினும்** விதந்தவாறே பதினெண்கணங்களானன்றிப் பூவுலகிலுள்ள பௌத்த சமண சமயிகளானும் பரவப்படலானும்,பிரதமைமுதற் சதுர்த்தசியீருவுள்ள பதினான்குகலைகளி னமிர்தத்தை அக்கினிமுதலிய தேவர்களும், அமாவாசி தினத்துள்ள ஓர்கலையி னமுதத்தினை மூவகைப் பிதிரர்களும் உண்டளிக்கும் மேன்மைத்தாய் விளங்கலானும்,மதியை "சீர்பூத்த" என்று விசேடித்தான். குழவி-இளமையுடையது, "மழவுங் குழவு மிளமைப் பொருள" என்றலின். மதி - மதவையுடையது; யாவரானும் மதிக்கப்படுவது என்றுமாம். "குழவிக்கோட் டிளம்பிறையுங் குளிர்மதியுங் கூடினபோல்"எனச் **சிந்தாமணியார்** செப்பலான்,ஈண்டுக் குழவி மதி என்றது குழவிப்பருவத்து ஒருகலையை யுடைத்தாய்ப் பின்பு இளமைப்பருவத்தே நின்றபிறை எனப் பொருள்கொள்க. சந்திரன் தக்கனதுசாபத்தாற் கலைகள் குன்றப்பெற்று இறைவற் சரணடைந்தானாக, அவன்றன் முடியேற்றி வளர்ந்துந் தேய்ந்தும் வரக்கடவதென்றானன்றி, தான்சூடுங்காலின்ற வோர்கலை யென்றுந் தேயாதிருக்க வரமுமீந்தான் என்றது புராணம். சூடினபிறை யிருகலை யுடைத்து என்றார் **அடியார்க்குநல்லார்**. ஆகலின், குழவி என்றது சூடுங்காலின்ற கலைப்பிறையும், மதி என்றது குழவிப்பருவமொழித்ததன் மேற்றுமாதலின் இறைப்ப-என்று பாடங்கொண்டு பொழிந்த எனப் பொருளுரைத்தாம்.

இன்னுஞ் சந்திரனை ஆதிதைவிகசந்திரன், ஆதியாத்மிகசந்திரன், ஆதிபௌதிகசந்திரன் எனமூவகைப்படுத்து, மந்திரரூபமாகிய ஆதிதைவிகமதியே மேலாவைக்கப்பட்டதென்றும்,அத்தமதியை மேற்கொண்டமை "தூமதி சடைமிசைச் சூடுதூநெறி-யாமதியானென வமைத்த வாறே" என்ற **திருவெண்காட்டடிக** ளருள்வாக்கானே சன்மார்க்கத்தின் வழித்தாயுள்ள சிவஞானமயமாய் நிற்பவர் தாமேயென்பதை ஆன்மாக்கள் கண்டுய்

வான் கொண்டதற்குறியுமென்னல் சாலுமென்றவாறும். "பிள்ளை குழவி கன்றே போத்தெனக்-கொள்ளவ ழமையு மோரறி வுயிர்க்கே" என்றதின் உம்மையை எச்சப்படுத்துக் குழவிமதி என்றதை யமைக்க. "குழவிவெண் டிங்கட்கோட்டின், குழவி வெண்மதிக் கோடுழ" எனப் பிறருங்கூறுப. அமுது - அமிர்தம் என்னும் வடசொல்லின்றிரிபு. மரணத்தை யொழிப்பது என்று பொருள். அமுதுறைப்ப-எனப்பாடபேதமுமுண்டு. மதிஎன விதத்தலானும்,உறைத்தலும்,தூற்றலும் ஒருபொருளவாய்க் காணப்படலானும் அதுசிறப்பன்று. "செழுமை வளனுங் கொழுப்பு மாகும்" என்றவிதிப்படி செழுந்திவலை-என்பதற்குக் கொழுப்பாகிய துளி எனக்கோடல் இழுக்காமென்க. என்னை? வளமென்பது ஆக்கம் என்றும், கொழுப்பென்பது ஊன்றெடக்கத்தனவென்றும் **நச்சினார்க்கினிய** ருரைத்தாராகலின்.

மதிஅமுதிறைப்ப - கங்கைசெழுந்திவலைதூற்ற என்பன இல்லமெழுகிற்று, சோறட்டது என்றாற்போல வினைமுதற் றொழிலுறுவனவற்றை வினைமுதல்போல அதன்மேற் படக்கூறிய கர்த்திருவற் பாவமென்னுங் கருமக்கருத்தா. கண்களிப்ப என்றது, வாள்எறியும் என்றாற்போலக் கருவியைத் தானேசெய்வதாகக் கூறிய கருவிக் கருத்தாவாம். இவ்வழுவமைதி "செயப்படுபொருளைச் செய்ததுபோலத்-தொழிற்படக்கிளத்தலும் வழக்கியன் மரபே" என்ற **தொல்காப்பிய** விதியினடங்கும். மாடக்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாய திங்கள்ஞாயிறும் போல இன்றியமையாச் சிறப்பினவாய், பூண்வார் விரியப் பொருப்பென வெழுந்து, வல்லின் பொற்பெனத் திரண்டு, தெங்கிளநீரென வமுதுட்கொண்டு, மருப்பெனக் கூர்த்து, மாரகிரீட வனப்புற்று, பிதிரணிக் திணைந்து பரந்தனவாய், ஆதி நாயகன் கருணையா யமல போதநீரதாய், உலகெலா மீன்றளிப்பினும் உண்ணப்படாதனவாய், சாயாதென்று மொருபடித்தாய் விளங்குந் தனங்களையுடைய கன்னியாகலின் "வார்பூத்தபொம்மன் முலைக்கௌரி" என்றான். அதனை "சிவஞ்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று - முவந்திருவரும்புணர்ந்திங் குலகுயி ரெல்லாமீன்றும்-பவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்-தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியுமன்றே" என்னுஞ் **சிவஞானசித்தியார்த்** திருவிருத்தத்தாற்றெளிக.கௌரி-கிரியிற்பிறந்தவள் எனப்பொருள் படலால்உடைமைப்பொரு ளென்னும் விசிட்டத்திரவியத்தின்மே னிற்குந் தத்திதப்பிரத்தியயம். இதனையறியார் பத்தாட்டைப்பெண் என்பர். அது "பொம்மன் முலைக்கௌரி" எனவும், அடுத்த செய்யுளில் "புலவியிலுடைந்த...கௌரி" எனவுங் கூறலாற் பொருந்தாதென்க.கௌரிகளித்லாவது-தனது நெற்றிப்பகையாகிய பிறைமதியும்,வாழ்க்கைப்பகையாகிய கங்கையும் கலங்முறையே அமுதிறைக்கவும், திவலைதூற்றவும், தனக்கு மகிழ்ச்சி பெருகவும் இறைவன் விளையாடு நடனுவேசத்தால் என்க. இதனை "அல்குற் பகையு நெற்றிப் பகையுமாஞ் - சீதமதியு மரவும்விழுஞ் செயற்கு முவகை செயாமலலை-மா துபணியு மதற்குமன மகிழு முமையை வணங்குவாம்" எனப் **பிரபுலிங்கலீலையினும்**, "உண்மையறி வானந்த வுருவாகியெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்-றண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசராசரங்களீன்ற - பெண்மையுரு வாகியதன் னுணர்ந்தக் கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கு-மன்மையதா மம்பலத்து ளாடியருள் பேரொளியை யகத்துள் வைப்பாம்" எனத் **திருவிளையாடற்புராணத்துங்** கூறுமாற்றுனறிக.

அருட்காமக் கொடிப்பாகன் றன்னுனை சிதம்பரங்கன் டவர்க்கு முத்தி - பொருக்காலு மிருக்காலு முக்காலு முண்மையீ துண்மையீது" என்றபடி தரிசித்தமாத்திரத்து முத்திதந்து, விராட்புருடனுக் கிருதயகமலம்போல விளங்கி, கோயில் என்ற குறிமகிமையையுங் கொண்டு நிலவும் சிதம்பரத்தின்கணுள்ள கனகசபையே 'மற்றைய சபைகளி னின்றும் உயர்வுடைத்தாய், தகரவித்தையிலே சிதாகாசம் என்று விதக்கப்பட்ட,

சிற்சபையாய்த் திகழலான் "ஏர்பூத்த மணிமன்றத்து" என்றும், "புரமெரித்தல் சூர்மார் துணைபடுத்தல் கஞ்ச - னுரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்—பெரியவ வரன்முதலாகவே லன்முதன் மாயோ னமர்முத லாடிய வாறு" எனவும், கடையமயி ராணிமரக் கால்-விந்தை கந்தன்-குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்-சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங் - கொட்டியிவை காண்பதினேர் கூத்து." எனவும் நாடக நூலார் கூறிய பதினோர் கூத்துப்போலாது, தூலசூக்கும பஞ்சாக்கரமே திருமேனி யாகக்கொண்டு, மூன்று திருக்கரங்களாலும் இருதிருவடிகளாலும் பஞ்சகிருத்தியங்களை யியற்றி ஆன்மாக்கட்கெல்லாம் பேரின்பவீடளிப்பான் அனவரதமுந் தாண்டவஞ் செய் தருளலின் "அனந்தநடம்புரியும்" என்றும், அதுசெய்யும் பதியாவான் எண்குணங்க ளென்னும் எட்டுப்புயங்களையும்,சோமசூரியாக்கினிஎன்னுந் திரிநேத்திரங்களையுங் கொண்டு நின்றான் என்பான் "எண்டோண்முக்கண்" என்றும், மேகம் தன்பயனோக்காது உவரி குடித்து,அமுதமூற்றி யுலகைநிலைபெறச்செய்தன்மான,அவனுங் கடலாலங்குடித்து அருள் சுரந் தமரரைக்காக்க நீலகண்டங்கொண்டவன்மை பதியிலக்கணத்தை விளக்குமென் பான் "கார்பூத்த கறைமிடற்றோன்" என்றுங் கழறினன் என்க. கார் ஆகுபெயர். கறை-நஞ்சு. கறைமிடற்றின் பெருமையை "கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை-மறைநவிலந் தணர் நுவலவும்படுமே" எனப் பாரதம்பாடிய பெருந்தேவனாரும், "மாயிருஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்றாளாடு-நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல் கிற் றம்ம-நாயகன் கண்டங்கறுதே லங்காட்டமரர் - சேயிழை மாதர்க்குச் செங்கைகளுங் கொங்கைகளுஞ் சிவக்கும்போலும்" எனக் குமரகுருபர சுவாமிகளுங் கூறுமாற்றா னுணர்க. இறைவற்கெண்டோள் நாடகமாடுதற்கண் வேண்டப்படும்.என்னை? உடுக்கையும் அக்கினியுஞ் சூலமுந் தாங்க மூன்று திருக்கரமும், அபயவரதாத்தங்க ளிரண்டும் ஆகிய வைந்தனோடு அகக்கூத்திற்குரிய எழிற்கை, தொழிற்கை, பொருட்கையென்னு மூன்று திருக்கரமுஞ் சேர்க்க எட்டாதல்காண்க. முக்கண்கொண்டமை "முக்கணனென்பது முத் தீவேள்வியிற்-றெருக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே" என்று பதினோராந்திருமுறை யிற் கூறப்பட்டதனா னுய்த்துணரப்படும். மிடற்றோன் எனஒகாரமாய்த் திரிந்தது "ஆவோ வாகும் பெயருமாருளவே-யாயிடனறிதல் செய்யுளுள்ளே" என்ற விதியினென்க.

சேவடி என்றது செம்மையாகிய அடிஎனவிரித்துத் தேவாதி கணங்களின் வணக்கத் தில் முடிகள் உரிஞ்சுதலாற் சிவந்தபாதம் எனவும், செவ்விய அடிஎனவிரித்துப் பக்கு வான்மாக்கட்குத் திருவடித் தீக்கைபுரிந்து பவந்தொலைத்தற் செவ்வியையுடைய பாதம் என வும் பொருள் கொள்ளப்படும். கருத்து - மறந்ததை நினைத்தல், ஆகுபெயராய் மனத்தை யுணர்த்திற்று. ஸ்ரீமதானந்த நடராசப்பெருமானது திருவடியே பேரின்பவீடாகலின், அத னையாந் திரிகரணங்களானும் வணங்குவாம் என்பது கருத்து. (க)

சி வ ச த் தி.

புலவியி னுடைந்த சங்கம் புரிசடைத் திங்கட் கீற்றின்
மலைவற விணைக்கு மேல்வை மழுவலான் குறித்து நோக்க
முலைமுகங் கோட்டி நோக்கி நாணொடு முறுவல் பூத்துக்
கலைநிறை மதியிற் செய்யுங் கௌரிதாள் சென்னி சேர்ப்பாம்.

(இ-ள்.) புலவியில் உடைந்த சங்கு - பிணக்கின் முதிர்ச்சியில் உடைபட்ட சங்குவளையற் றுண்டத்தை, அம் புரி சடை திங்கள்கீற்றின்-அழகிய முறுகுதலைக்கொண்ட சடைமுடிக்க ணுள்ள சந்திரனாகிய பிறைத்துண்டத்தோடு, மலைவு அற இணைக்கும் ஏல்வை மழுவல்லான் குறித்து நோக்க-மயக்க நீங்கப் பொருத்துஞ் சமயத்தில் மழுவாயுதத்தைத் தரித்தநாயகன்

குறிப்பாகப் பார்க்க, முகம் முலை கோட்டி நோக்கி - தன்முகத்தினைக் கொங்கை வளைக்குங் குனித்துச் சிறப்புநோக்கஞ் செய்து, நாணொடு முறுவல் பூத்து-நாணத்தோடு நகைக் குறிப்பினையுங் காட்டி, கலை நிறை மதியின் செய்யும் கௌரி தாள் - கலைகள் நிறைந்த சந்திரன் போல இணைத்துச்செய்த உமாதேவியாரது திருவடிகளை, சென்னி சேர்ப்பாம்-யாம் தலையின்மீது வைப்பாம்.

புலவி - தொழிற்பெயர். சங்கு-அதனாலாய வளையலை யுணர்த்தலான் ஆகுபெயர். புரிசடை-வினைத்தொகை. திங்கள்-தித்திப்பாகிய மதுவை யுடையது. மழுவில் வல்லவன் என்னலுமாம். வல்லான் என்பது தொகுத்தல் விகாரமாய் நின்றது. நாணுவது-செய்யத் தகாதனவற்றின்க ணுள்ள மொடுங்குதல். முறுவல்-மெல்ல நகுதல். வெளிப்படாமற் சிரித்தல் என்பர் **பரிமேலழகர்**. நச்சினார்க்கினியரும் முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூவகைப்படுத்தலவர் **மெய்ப்பாட்டியலில்**.

தன்னுயகனொடு ஊடிய காலத்து உடைபட்ட சங்குவளையற் பாதியைப் பிறையோடிணைக்கத் தொடங்க, அதனையவன் குறித்துப் பார்த்தமையால் நாணமுற்றுத் தலை குனிந்து புன்னகை கொண்டாளாய்ப் பின்னர் இணைத்துப் பூரணமதி போலச் செய்த இறைவியின் பாதங்களைத் தலையிற் சேர்ப்பாம் என்க.

"கலவி யாகிய காமத்தின் பயன்-புலவியாதலாற் பொன்னங் கொம்பனார்" எனச் **சிந்தாமணியிற்** கூறியாங்கு, உண்ணவேண்டியனவற்றை யின்சுவை யாக்கற்கு உப்பு வேண்டுமளவிற்றாதல் போலக் கலவியின்ப நுகர்வுக்கும் அளவிற்றாக வேண்டப்படுவது புலவியாம். அஃதாவது, இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி யொருவரோ டொருவர் புலத்தலாம். அது பெரும்பான்மை கற்பொழுக்கினுஞ் சிறுபான்மை களவொழுக்கினும் வருமென்ப. எனவே, "ஒழுக்கம் விழுப்பந்தரும்" என்பதை யுயிர்க்குணர்த்து மெண்ணுனே தேவியானவள் தலைவனொடு பூவமளிக்க ணிருந்துழி யவன் மாட்டுப் புலத்தற்காரண மில்லையாகவும், காதல் கைம்மிகுதலானும், குறிப்பறிதற் காரணமாகவும், தன்னெற்றிக் கெதிராய வெண்ணுட் குழவிப் பிறையை முடியிலேற்றி வளர்த்து நிறுத்தலை யோர்காரணமாகக் கொண்டு, அப்பகையை யவன்மே லேற்றி நிழற்கண் வைத்த நீர்போலத் தன்னன்புடையான் மாட்டு நுணுக்கமாய பிணக்கினைவைத்தாள் என்பான் "புலவி" என்றும், வைத்துழி "நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை - பூவன்ன கண்ணா ரகத்து" என்றருளியவாறே தவறில்லாத நற்குணத் தலைவர்க்குத் தம்பூவன்ன கண்ணார் நெஞ்சின்க ணிகழும் புலவிமிகுதியே நலத்ததாகலான், இறைவனும் அதனை நீக்காமே நீளப் புலந்தான். புலக்கவே "துனியும் புலவியு மில்லாயிற் காமங்-கனியுங் கருக்காயு மற்று." என்று **தேவர்** தெளித்தாங்கு,முதிர்கலாமாய ஊடல் தோன்றிற்று. தோன்றவே, தலைவி வளைமுதலிய அணிகளை உடைத்துங் கழற்றியும் வீசியும் நின்றாள் என்பான் "உடைந்த சங்கு" என்றும், அங்ஙனம் இல்வலியுறுத்துநின்ற விறைவி புகுமுகம் புரிதல், நகுநயமறைத்த லாதிய பொதுமெய்ப்பாடுற் றாளாய், கூழை விரித்தல், காதொன்று களைதல்,உடைபெயர்த் துடுத்த லிவைசெய்து, ஊழணி தைவருகின் றாளாய்,தன்பகைப் பிறைத்துண்டத்தை மாற்றுவான் அஃதொத்த சங்குவளையற் றுண்டத்தை யெடுத்து, பிறைகொல்லோ வளைத் துண்டு கொலோ வென்று கண்டார் மருளாவண்ணம் இணைக்கவந்தாள் என்பான் "புரிசடைத் திங்கட் கீற்றின்-மலைவற விணைக்கு மேல்வை" என்றும், தலைவியினுள்ளச் சிதைவறிந்த வழியன்றித் தலைவன் அவளைக் கையுங்காலு மெய்யுறத் தீண்டிக் கண்ணுறா னாகலின், இறைவனுங் குறிப்புநோக்கங் கொண்டா னென்பான் "குறித்து நோக்க" என்றும், "யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்-றானோக்கி மெல்ல நகும்" என்றபடி இறைவனோக்குங் காற் றானெதிர்நோக்காது தாழ்ந்து நிலத்தை நோக்கினாள் என்

பான் "முலைமுகங் கோட்டி" என்றும், நோக்காக்கால் தானிறைவனை நோக்கித் தன்னுள்ளே சிரித்து மகிழ்ச்சியாற் பொருந்தற் குறிப்பை யினிது விளக்கினள், என்பான் "நோக்கி நாணொடு முறுவல் பூத்து" என்றும், விளக்கிய குறிப்பறிந்த தலைவன் "அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல-மறுவுண்டோ மாதர் முகத்து. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற் - காதலை வாழி மதி" என்று மதியை யிழித்து இறைவியி னலம்புனைக் துரைத்த லறிந்து, அவள் தண்டத்தை முன்போ லிணைத்துக் கலைநிறை மதியம்போ லாக்கித் தானும் அகமுக மிகமலர்ந்து, "ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்-கூடியார் பெற்ற பயன்." ஆகலின் றலைவற் சேர்ந்தாள் என்பான் "கலைநிறை மதியிற் செய்யுங் கௌரி" என்றும், அவள் திருவடியைத் தியானிக்கின் றுன்ப மொருவப் பேரின்ப மருவும் என்பான் "தாள் சென்னி சேர்ப்பாம்" என்றுங் கழறினன் என்க. இவையிற்றைப் பின்வருஞ் செய்யுட் களா னுய்த்துணர்க.

சைவபுராணம்–கடவுள்வாழ்த்து.

ஆடகப் பசும்பொ னணிபெற வணிந்த வலர்மலர்ப் பூவணை யதனி
னூடிய வுமையா ளூடறீர்த் தருள்வா னொளிதிகழ் பூஞ்சிலம் போடு
பாடக மணிந்த சீறடிப் பஞ்சி யொளியினுற் பனிமதி சிவப்பத்
தோடவிழ்கொன்றைமவுலிதாழ்த்திறைஞ்சுஞ்சுடர்மழுவண்ணலைத்தொழுவாம்.

கட்டழ குடைய முகத்தினுக் குடைந்த கதிர்மதி கண்டுறச் சாம்பு
மட்டவிழ் கமல நின்முகத் தெழிலை வாய்க்கவும் பெறுங்கொலோ வென்று
விட்டலர் கடுக்கை நறுமலர்த் தொடையல் புனைந்தவன் வியந்தெடுத் துரைப்ப
வட்டவான் முகஞ்சாய்த் திளநகை புரியு மலைமக டாள்வணங் கிடுவாம்.

இன்னுங் "கலைநிறை மதியிற் செய்யுங் கௌரி" என்பதற்கு முன் ஊடலாற் புலந்திருந்தமுகம் அதுநீங்கியவிடத்துப் பூரணசந்திரனைப்போல மலர்ச்சி காட்டிய கௌரி என்னலு மொன்று. இவ்வொழுக்கம் "படைப்பாதி தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையு நாலு - மிடப்பாக மாதராளோ டியைந்துயிர்க் கின்ப மென்று - மடைப்பானும்" என்ற **சித்தியார்** முறைப்படி, கடவுளாவான் படைப்புக்கு வாதுளாகமத்தி னோதியவாறே உலகத்தினைத் தன்றிருமேனியில் ஒவ்வோ ருறுப்புக்களி னின்றுந் தோன்றுமாறு செய்தலும், சங்காரத்திற்குத் தோற்றுவித்த முறையே யொடுக்குதலும், மறைப்புக்கு ஊனநடன மியற்றுதலும், அநுக்கிரகத்திற்கு யோகிருந்து காட்டுதலும் உரிமையா மாறுபோலத் திதித்தொழிற்கு மாதராளோடு இயையவேண்டுதலா லிவ்வாறு கைகோளாக் கூறப்பட்டது. அன்றியும், இதனுல் உலகோற்பத்தி நிமித்தமாகச் சிவத்தின் றிருநோக்குறுங்காலை மாயையானது தன்னிலை கலங்கித் தொழிற் படுதலை யொருவாறு குறிப்பித்த தென்க. (உ)

விநாயகக்கடவுள்.

மற்றைய கடவுட் போற்றி வரம்பெற விடையூ றெய்தா
தொற்றைவெண் கோட்டு வேழ முவப்பமுன் வழுத்து கின்றோர்
முற்றுமக் களிற்றை யேத்தி முன்னிய யாவும் வாளா
பெற்றிடா தயலார்ப் போற்றும் பேதைமை யென்கொன் மாதோ.

(இ-ள்.) மற்றைய கடவுள் போற்றி - பிறகடவுளைத் துதித்து, வரம் பெற இடையூறு எய்தாது-அவராலளிக்கப்படும் வரத்தைப் பெறுவதற்கு விக்கினங்களை யுண்டாக்காமல், முன்-தொடக்கத்திற்றானே, வெள் ஒற்றை கோட்டு வேழம் உவப்ப வழுத்துகின்றோர்-வெள்ளிய ஒற்றைக் கொம்பினை யுடைய யானையாகிய விநாயகக்கடவுளை மகிழ்விக்

கும்படி துதிக்கின்றோர், முற்றும் அ களிற்றை ஏத்தி - முடிவுவரைக்கும் அவ்வேழக் கடவுளையே துதிசெய்து, முன்னிய யாவும் வாளா பெற்றிடாது - தாம் நினைத்தவை யெவற்றையும் வருத்தமின்றிப் பெற்றுக் கொள்ளாமல், அயலார் போற்றும் பேதைமை என்கொல்-அவ்வயற் றேவர்களைத் துதிக்கும் அறியாமை யாதென்றிருந்தது?

மாது-ஓ-அசைநிலைகள். விநாயகக்கடவுளை வாழ்த்திய வாழ்த்திரண்டனுள், முன்னையது காப்பும், இஃது தந்தை, தாய், மைந்தர் என்னு முறைமை பற்றியது மாம். மற்றைய என்னும் பெயரின் முதனிலை யிடைச்சொல் வேழக்கடவுள் ஒழிந்த கடவுளைக் குறித்து நின்றது. அந்னை "மற்றைய தென்னுங் கிளவி தானே-சுட்டு நிலையொழிய வினங்குறித் தன்றே" என்ற **தோல்காப்பிய** விதியானறிக. கடவுள் என்பதனைச் செய்யுள் - பாய்த்துள் என்ப போலக் கட-உள் எனப் பிரித்துத் தொழிலாகு பெயராக்கிக் கடத்தலையுடைய பொருள் என்ப. கருத்தாப் பொருள் விகுதியாக் கொண்டும், கடந்த உள்ளத்தை யுடையவர் என வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக் கொண்டும் பொருளுரைப்பாரு முளர். கடத்த லாவது-பசுபாச ஞானங்களா னறிவருந் தன்மை. அநாதி மலமுத்த பதியாகிய வேழக்கடவுளே கடவுளெனற் குரியானென்றும், பிறந்திறந் துழலும் மற்றையோரைக் கடவுளெனக் கரைதல், அயன், அமரர், வெள்ளாடு என்றிவை போல உபசாரமாமென்றுங் கொள்க. கடவுள்-சாதியொருமை, அது உயர்திணை யாகப் பொருள்படுதலை "கால முலக முயிரே யுடம்பே-பால்வரை தெய்வம் ... ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம்-பால்பிரிந் திசையா வுயர்திணை மேன" எனத் **திணைவழுக்காத்தசூத்திரத்தாற்** றெளிக. எய்தாது என்றதிற் பிறவினை விகுதி தொக்கு நின்றது. ஒற்றை என்றது மென்றொடர் வன்றொடராகிய ஐயீற் றுடைக் குற்றுகரம். வேழம்-மூங்கில். அது தான்விளையும் மலைக்குத் தானியாகு பெயராய், மலை தன்னிடத்து வசிக்கும் யானையை யுணர்த்தலின் இருமடி யாகுபெயர்.

நாற்கோட் டிருகோட்டி யானைகள் போலாது தேவ யானையாய், தன்னொரு கோட்டானே கயமுகற் காய்ந்து விண்ணுலகைப் புரந்தும், பாரதம், சௌந்தரியலகரி என்னு நூல்களை மாமேருக்கட் பொறித்து மண்ணுலகைப் புரந்தும் வருமாட்சி யுடைத்தாகலின் "ஒற்றை வெண்கோட்டு வேழம்" என்று விசேடிக்கப் பட்டது.

கந்தபுராணம்.

தடக்கையி லேந்து கோட்டைத் தந்தியா மவுணன் மீது
விடுத்தலு மனையன் மார்பை வெய்தெனக் கீண்டு போகி
யுடற்படி மிசையே வீழ்த்தி யொல்லையி லோடித் தெண்ணீர்க்
கடற்படிந் தமலன் மைந்தன் கரத்தில்வந் திருந்த தன்றே.

இலிங்கபுராணம்.

பிறைதவழு மெழிறோன்றிப் பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர்செய் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப
மறைபுகழுஞ் சௌந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல்கெழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம்.

மகாபாரதம்.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

வேழம் என்றதனுனே நதிசரம், வனசரம், கிரிசரம் என்னும் யானைவகையுள் வன சாமும், கிரிசாமும் பெறப்படும். பெறவே விநாயகப் பெருமான் லீலாமாத்திரை யாகக் கொண்டருளிய மூர்த்தங்களாகிய "வக்கிர துண்டர் வயங்கிய சிந்தா மணிவளர் கசானன ரருள்செய்-விக்கின ராசர் விறன்மயூ ரேசர் விளங்கிய பாலசந் திரர்சீர்-தொக்கதூ மிரகே துப்பெய ரிறைவர் துலங்கிய கணேசரென் வினைதீர் - மெய்க்கண பதியே மகோற்கடர் துண்டி விநாயகர் வல்லபை கணேசர்" என்னும் பன்னிரு திருமூர்த்தங் களினுஞ் சிறப் புடைத்தாய், துணைவராய் குமரவேட்கு வள்ளியம்மையாரைக் கூட்டி அவர் கருத்தை முற்றுவித்து, அவர் காரணமாகக் களவு, கற்பென்னு மிருகைகோளு மியலச் செய்வான் கொண்டருளிய குஞ்சரமூர்த்தமே விசேடித்த தென்பான் "வேழம்" என்றும் "களிறு" என்றுங் கூறினன். களிற்றை என்பதன்கண் பிரிநிலைப் பொருளில் வந்த ஏகாரந் தொக் கது. முற்றும்-முழுவதும் என எஞ்சாப் பொருட்டு. களிறு - மதக்களிப்பினை யுடையது, "வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்" என்பது மரபியற்சூத்திரம். வாளா என்பது சும்மா எனப் பொருள் படுதலின் வருத்தமின்றி யென்றும். அயற்றேவர்களைத் துதிப் பதாற் பிரயோசன மில்லை யெனக் கொண்டு, வாளா போற்றும் பேதைமை என்றியைக் கினுமாம். ஈண்டு அயலார் என்றது மணி யொளி போன்று அபேதமாய் விளங்குந் தந்தை, தாய், துணைவரொழிந்த மற்றைய தேவர்களையாம். பெற்றிடாது - இடு - பகுதிப்பொருள் விகுதி. என்-எவனென்னும் வினைப்பெயரின் மரூஉ. கொல் என்னு மிடைச்சொல் துணி வின்கண் ஐயஞ்சிறிது நினைத்தற் பொருளில் வந்தது. "அயலார்ப் போற்றும் பேதைமை யென் கொல்" என உலகர் மாட்டுவைத்த அன்பானே யிரங்கிக் கூறலான், இதன்கண் ஆர்வம் என்னும் அலங்கார மிருத்தல் காண்க. (௩)

குமாரக்கடவுள்.

கள்வாய் மடுத்துப் புரையேறிக் கனைத்துக் குமட்டி யெதிரெடுக்கும்
புள்வார் கடப்ப நறுந்தெரியல் புரளுந் தடந்தோள் வரையனைத்தும்
வெள்வே னெடுங்கட் குறத்திமுலை வேழ முழக்கக் களிகூருந்
தள்ளா மதுகை முருகனிரு சரண மெமது தலைக்கொள்வாம்.

(இ-ள்.) கள் வாய் மடுத்து புரை ஏறி கனைத்து குமட்டி எதிர் எடுக்கும்-தேனையுண்டு புரைக்கேறிக் கனைத்தல் செய்து புரட்டித் தேக்கெடுக்கின்ற, புள் வார் கடப்பம் நறு தெரி யல் புரளும் - பறவைகளாய வண்டுகள் மொய்க்கின்ற நேர்மையை யுடைய கடப்பமலரா லாகிய நறிய மாலையானது புரளுகின்ற, தடம் தோள் வரை அனைத்தும் — பெரிய புயங்க ளாகிய மலைகளியாவும், வெள் வேல் நெடு கண் குறத்தி முலை வேழம் உழக்க களிகூரும்- வெள்ளிய வேற்படை போன்ற நீண்டகண்களை யுடைய வள்ளியம்மையாரது தனங்களா கிய யானைகள் ஏறி யுழக்குந்தோறுங் களி சிறக்கப் பெறுகின்ற, தள்ளாத மதுகை முருகன் இருசரணம்-ஒழியாத வெற்றிப் பாட்டினை யுடைய குமாரக்கடவுளது இருதிருவடிகளையும், எமது தலை கொள்வாம்-எமது சிரமேற் கொள்வாம்.

புரையேறல் - மடுத்தன துவாரவழியி னுட்புகுதல். கனைத்தல்-செருமுதல். (வண்டு களுக்கு ஒலித்தல்.) குமட்டல் - உள்ளிருந்து வெளிவரத் தேக்கல். எதிரெடுத்தல்—வாந்தி பண்ணுதல். வார்-முதனிலைத் தொழிற்பெயர் "வார்தல் போக லொழுகன் மூன்று-நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள" என்னுந் தொல்காப்பிய விதிப்படி நேர்மை என்று பொருள். புள்வார் என்பதற்கு வண்டுகளாகிய புயல்கள் எனினும் பொருந்தும். அங்ஙனங் கொள்ளுமிடத்து, கள் என்பதனைத் தொழிலாகுபெயராய்க் கொண்டு, கள்வாய் மடுத்து- கடலினீரைவாயான்மடுத்து, புரையேறி-கருமைநிறங்கொண்டு, கனைத்து-முழங்கி, குமட்டி-

தமித்து, எதிர்காலும் - எதிராகமழையைப் பொழிகின்ற என்று மேகத்தின் ஒப்புமை காண்க. கடப்பம்-வலித்தல் விகாரத்தோடு அம்முச் சாரியை பெற்றுநின்றது. "இருள்படப் பொதுளிய பராரை மராஅத் - துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்" என்றார் **பத்துப் பாட்டினும்.** அளக்கலாகா வளவும் பொருளுந்-துளக்கலாகா நிலையுந் தோற்றமும்-வறப் பினும் வளந்தரும் வண்மையுங் கொண்டு விளங்கலின், தோளினைவரை என்றான். தோளுக்கு வளந்தரும் வண்மையாவது - "வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள் - விண் செலன் மரபி னையர்க் கேந்திய தொருகை-யுக்கஞ் சேர்த்திய தொருகை-நலம்பெறு கலிங் கத்துக் குறங்கின்மிசை-யசைஇய தொருகை-யங்குசங் கடாவ வொருகை யிருகை-யையிரு வட்டமோ டெஃகுவலந் திரிப்ப வொருகை - மார்பொடு விளங்க வொருகை - தாரொடு பொலிய வொருகை-கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப-வொருகை, பாடின் படுமணி யிரட்ட வொருகை-நீனிற விசும்பின் மலிதுளி பொழியவொருகை - வானவர் மகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்-பன்னிரு கையும் பாற்பட வியற்றும்" வளமென்க.

வரை என்னுங் கணுவின் பெயர் சினையாகு பெயராய் மூங்கிலை யுணர்த்த, அது விளை தற் கிடமாய மலையையுணர்த்தி நிற்றலின் இருமடியாகுபெயர். தோளினை வரையென் றதற் கேற்ப முலையை வேழம் என்றான், குறிஞ்சிக் கருப்பொருளுட் சிறந்ததாய் உரத் தொடு மதர்த்துக் கூர்த்தலின். அனைத்தும் என்றது பன்னிரண்டு என்னும் எண்ணின் றொகைபெற நின்றது. உழக்கலாவது-தோள் ஞெமுங்கப் புல்லுதல். கூர் என்னும் உரிச் சொல் முன்சிறவா துள்ளதொன்று சிறத்தலாகிய குறிப்புப் பொருட்டு. தள்ளா என்னும் ஈறுகுறைந்த எதிர்மறைப் பெயரெச்சம், மதுகை என்னும் பெயர் கொண்டது. "குன் றங் கொன்ற குன்றாக் கொற்றத்து - விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்றார் **நக்கீரரும்.** முருகன் - முருகையுடையவன். முருகு - தெய்வத்தன்மையும், இளமையும், அழகுமாம். மேலாய வீட்டின்பத்தின் றன்மையைக் காரணவகையா னுணர்த்துங் களவு கற்பென்னுங் கைகோளிரண்டனையும் உலகினிமித்த மியற்றிக் காட்டுவான் கொண்ட எங்கடவுளாய குமரவேள், களவொழுக்கத்தை வள்ளியம்மையாரானும், கற்பொழுக்கத் தைத் தெய்வயானையம்மையாரானும் காட்டுதலானும், களவு முன்னதாய்க் கற்பு பின்ன தாய் நிகழலானும், தன்றிணைக்குரிய மகள் வள்ளியம்மையாராகலானும், இச்சா ஞானக் கிரியா சத்திகளுள் முற்பட்ட இச்சாசத்தியும் அவளேயாகலானும், அவற்கிச்சை வள்ளிநாய கியே யென்பதை விளக்கல் காரணமாகவே நூலார் பெரும்பாலுங் குறமகளை விசேடித்த லென்க. அதனை "கள்ளுறைந் திடுபூந் தண்டார்க் கடம்பமர் காளை பன்னாட்-பிள்ளைமைத் தொழின்மேற் கொண்டு பெட்புட னொழுகும் வண்ணம்-வள்ளியைத் தன்பால் வைத்து" எனக் **கந்தபுராணத்தும்,** "செம்மான் மகளைத் திருடுந் திருடன்" எனக் **கந்தரனுபூதி யினும்,** "நீலச் சிகண்டியி லேறும்பிரா னெந்த நேரத்திலுங்-கோலக் குறத்தி யுடன்வரு வான்" என **அலங்காரத்தும்** "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" எனத் **திருமுருகாற் றுப்படையினும்** உரைத்தமைகொண் டுய்த்துணர்க. இரு சரணம் என்றதில் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. (௪)

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்.

வெள்ளாங் குருகி னிளம்பிள்ளை விளையாட் டயர முகையவிழுங்
கள்ளார் கமலத் தடம்புடைசூழ் காழி நகரி னிடைத்தோன்றி
நள்ளார் சமயக் குறும்பெறிந்து நங்கை பாகன் பதம்போற்றித்
தெள்ளா ரமிர்தக் கவிதைபொழி சிறுவன் பாதந் தலைக்கொள்வாம்.

(இ-ள்.) வெள் ஆம் குருகின் இளம்பிள்ளை விளையாட்டு அயர-வெண்மையாகிய அன் னப் பறவைகளினது இளம்பருவப் பார்ப்பினங்கள் விளையாட்டைச் செய்தலால், முகை அவி ழும் கள் ஆர் கமலம் தடம் புடை சூழ் - கட்டவிழப் பெறுகின்ற தேனிறைந்த தாமரைத்,

தடாகங்கள் பக்கத்திற் சூழப்பட்ட, காழி நகரின் இடைதோன்றி-சீகாழிப் பதியினிடத்தே திருவவதாரஞ் செய்து,சமயநள்ளார் குறும்பு எறிந்து-சமயிகளாகிய டீகைவர்களது பொல்லாங்கை யழித்து, நங்கை பாகன் பதம் போற்றி-உமாதேவி பாகராகிய சிவபெருமானது திருவடிகளையே மெய்ப்பொருளாப் புகழ்ந்து, தெள் ஆர் அமிர்தம் கவிதை பொழி - தெளிவும் அருமையு மமைந்த அமுதம்போன்ற தேவாரத் திருப் பதிகங்களைப் பொழிந்த, சிறுவன் பாதம் தலை கொள்வாம்-இளமைப் பருவத்தினராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரது திருவடிகளைச் சிரமீது தரிப்பாம்.

குருகு என்றது பறவைப் பொதுப்பெயராயினும் வெள்ளாம் என்றடைகொடுத் துரைத்தமையானும், "மடையிடை யனமெங்கு நிறையப் பரந்து கமலத்து வைகும்" என நாயனாரே திருவாய்மலர்ந் தருளியபடி கமலத் தடத்தில் விளையாடற்குச் சிறந்தன அன்னப்பறவை யாதலானும் அன்னங்கள் என்றும். "மாற்றருஞ் சிறப்பின்" என்னும் **மரபியற்சூத்திரப்படி** பிள்ளை என்னும் இளமைப்பெயர் அடைமொழி புணர்த்தமையானும், "அவற்றுள்,பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" என்றதனானும் அன்னப் பார்ப்பின் பாற் படும். காரன்னமு முண்மையின் வெள்ளாங்குருகு என்றது இனஞ்சுட்டின பண்பு. அதனை "தோடார் கமலப்பள்ளி - மேயவகையிற் றுஞ்சும் வெள்ளையன்னங் காண்மின்" எனத் **தணமாலையாரிலம்பகத்திற்** கூறியவாற்றா னறிக.

இளம்பிள்ளை விளையாட் டாதலின் "அயர" என்றான். அயர என்னுஞ் செயவெனெச்சங் காரணப்பொருளில் வந்தது. கமலத் தடம் எனச்சிறப்பித்தமை மருதநிலங் கொண்டு, ஞானப்பா லூட்டிய நற்றுனம் வாய்ந்த நகரெனற்காம். அதனை "பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்-பாவான் மலிஞானப் பாலுண்டு-நாவான், மறித்தஞ் செவியமுதா வார்த்தபிரான் றண்டை-வெறித்தண் கமலமே வீடு" என்றதனா னறிக.

காழி என்பது சோழநாடு, பவழம்,தவழம் என்றாற் போலக் காளி என்ற சொல்லின் ளகரம், தமிழிற் சிறந்த ழகரமாய்த் திரிந்து நின்றது. அது அந்நகரின் றுவாதசநாமக் காரணக் குறியுளொன்று. காரணமாவதூ:— காளிதேவி சிவபிரானோடு எதிர்த்து நடனமாடித் தோற்றமையால், தேவர்களு முனிவர்களுஞ் சினந்து "நுண்ணியற்கை யாயநூல்கள் நூறுகோடி பழகினும்-பெண்ணியற்கை போவதன்று பேதைநீ யகந்தையா - லண்ணலைப் பிழைத்தபாவ மகலுமாறு மற்றவன்-கண்ணருட் கிடைக்கிலுன் களங்கம்விட் டிகக்குமால்" என்றுகூற, அவளிந் நகர்க்கண் வந்து தோணியப்பரைப் பூசித்துத் தன்பாவ நீங்கப் பெற்றதனானும், முன்னோர் காலத்து வைனதேயன் பாம்பினங்களைக் கொன்று தின்று வருதலைக் கண்ட காளியன் என்னும் பாம்பானது, அக்கருடனோடு போர்புரிந்து ஆற்றாமல், முற்சாபநிமித்தம் அது அணுகப்பெறாத யமுனையாற்றின் மடுவிற்கு ளொளித்திருந்து வருமுயிர்களை யெல்லாந் தின்றிருந்தது. அவ்வாறிருக்கையில் ஆயனாய் நின்ற மாயவன் அம்மடுவைக்கண்டு, கருநீர் பொருந்துங் காரண மென்னை யென்று காண்பான் புக்கபோது காளிய நாகங்கண்டு வளைத்தது. கண்ணமூர்த்தி யுடனே அணிமாவடிவுகொண்டு படங்களிற்பாய்ந்து உதைத்துப் பௌரிக் கூத்தாடச் சர்ப்பந் தளர்ந்து நல்லறி வுற்றுக் காக்குமாறு ஓலமிட்டது. கண்ணனுங் கருணை கூர்ந்து தோணிபுரந் தொழுகவென்ன, வந்நனே வந்து பூசித்துக் கருடனுக் குடையாத வலிமையையும், தன்கிளைகள் மதிக்குஞ் சீரினையும் பெற்றமையாலும் அதற் குக் காளிநகரொன்று பேர்கண்டது.

சீகாழிப்புராணம்.

இறைதவழ் கொம்மை வனமுலைக் காளி யிறைஞ்சலாற் காளியம் புரியென்
றழகிய வொருபே ரிந்நகர்க் குற்ற தன்றியுங் காளித னெனுமோர்
புழையெயிற் றுரக வேந்தனாற் காளி புரமெனும் பேருமன் றுளதெ
னுழைபடுதட் பேர்வை முனிவர்கேட் டுவப்ப வுறுதவச் சூதனுண் டுரைப்பான்,

நள்ளார் என்றது சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன் என்னு நால்வகைப் பௌத்தர்களையும், நிகண்டவாதி, ஆசீவகன் என்னும் இருவகைச் சமணரையும் என்க. ஐராத்மவாதம், அகத்திருவாதம், ஆகாசம், காலம், திக்கு, காரணத் பாவமு மில்லையென்றும், குணியும் அவயவியும் இல்லையென்றுங் கொள்ளலாதிய நெறியல்லா நெறிகொண்டு, இடைத்தோன்றி யுயிர்கட் கிதமின்மை செய்தலின் குறும்பென்றான்.

தன்னை நுகர்ந்தாரை நரைதிரை பிணிமூப்புச் சாக்காடின்றிப் புண்ணிய முள்ளளவும் போகமூட்டிப் பிறிதுநுகாமற் றடுக்குந் தன்மை யுடைத்தாய்,மறுமையிற் சென்றுபெறும் அமுதத்தினும், நாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்கவிதைகள் பதினாறாயிரமும் மெய்யன்புடன் பாராயணஞ் செய்வாரைக் குற்றநீக்கி, அழிதன் மாலையவாய இகமுத்திரார்த்த பலபோக விராகமுண்டாக்கி, யென்றுமொருபடித்தாய் நிற்கும் பேரின்பத்தை யளிக்கும் பெருமையாற் சிறந்ததாதலின் “தெள்ளாரமுதக் கவிதை” எனப்பட்டன.

தோன்றி, எறிந்து, போற்றி என்னும் வினையெச்சங்கள் பொழி என்னு முதனிலையையும், ஈன்ற வினைத்தொகையாய்ச் சிறுவன் என்னும் பெயரையுங் கொண்டு முடிந்தது. (௫)

திருநாவுக்கரசுநாயனர்.

புல்ல ராய சமண்புலையர் பொருந்த வீக்கிக் கடற்புகுத்துங்
கல்லே புணையாக் கரையேறிக் கவர்வாய் புள்ளின் வாய்கிழித்த
கொல்லே றுகைக்குங் காமாரி குளிர்பொற் கமலத் தாள்பழிச்சுஞ்
சொல்லே புணையாப் பவக்கடலுங் கடந்தோன் பாதந் துதித்திடுவோம்.

(இ-ள்.) புல்லர் ஆய சமண் புலையர்-அறிவீனராகிய சமண நீசர்கள், பொருந்த வீக்கி கடல் புகுத்தும்-பொருந்துமாறு கட்டிச் சமுத்திரத்தி லாழும்படிவிட்ட, கல்லே புணையா கரைஏறி - கல்லினையே தெப்பமாகக் கொண்டு அச்சமுத்திரத்தை நீந்திக் கரை சேர்ந்ததன்றி, பவம் கடலும்-பிறவியாகிய சமுத்திரத்தையும், கவர்வு ஆய் புள்ளின் வாய் கிழித்த-தன்னைக் கவர்ந்து கொள்வதை யாராய்ந்துவந்த குக்குடத்தினது வாயைக் கிழித்துக் கொன்ற, கொல் ஏறு உகைக்கும் காமாரி-கோபக் குறிப்பினையுடைய திருமாலாகிய இடபத்தை (வாகனமாகக்கொண்டு) செலுத்துகின்ற சிவபெருமானது, குளிர் பொன் கமலம் தாள் பழிச்சும் - குளிர்மையாகிய பொன்போன்ற தாமரைமலரையொத்த திருவடிகளைத் துதிக்கும், சொல்லே புணையா கடந்தோன் - தேவாரத்திருமொழிகளையே தோணியாகக் கொண்டு நீந்தி முத்திக்கரைசேர்ந்த திருநாவுக்கரசுநாயனரது, பாதம் துதித்திடுவோம்-திருவடிகளை (யாம்) வாழ்த்துவாம்.

கல்லே தோணியாகக் கருங் கடலையும், காமாரி தாள்துதிக்குஞ் சொல்லே கலமாகப் பிறவிப் பெருங்கடலையும் நீந்தி முத்திக்கரையேறிய நாவின்முதல்வரது திருவடிகளை யாம் துதிப்பாம் என்பது கருத்து.

பாயுடைசூழ்ந்த அரையினராய், மயிர்பறிப்புண்ட தலையினராய், அத்தி நாத்தி யென்னு மந்திரோச்சாரண வாயினராய், சைவசித்தாந்த உண்மைகளையும், அதனைக் கொண்டொழுகும் மெய்யடியாரையுங் கண்டக்காலுங் கேட்டக்காலும் கண்டுமுட்டு, கேட்டுமுட்டென் றுழல் வாராய், பொய்யொழுக்க மேலீட்டால் உண்மையறிந்துங் கொலையுநூற்றுங் குணத்தைக்கொண்டாராகலின் “புல்லராய சமண்புலையர்” என்றான். கடல் - என்பதனை கள்-தல் எனப் பிரித்துத் தோண்டப்பட்டது என்று பொருள் கொள்ப. கல்லே, சொல்லே என்பவற்றின்கணுள்ள ஏகாரங்கள் பிரிநிலைப்பொருளில் வந்தன. ஆய் புள் - வினைத்தொகை.

கவர்வு-கைக்கொள்ளல். "கொள்ளைமாக்த ரின்னுது கவரும் என்றாற்போல. அதனை "கூறிய ளைவி" என்பதனாற் கொள்க.

புள்ளின் வாய் கிழித்ததாவது:—கண்ணன் ஆயர் பாடிச் சிறுவரோடும் ஆன்கன்று மேய்த்துத் தாமரைத் தடாக மொன்றில் வந்திருப்ப, வடமதுரை யரசனான கஞ்சனேவ லால் ஓரசுரன் குக்குடமென்னும் புள்ளுருக் கொண்டு சென்று வாயாற் கௌவி விழுங் கினன். விழுங்குவதறிந்த வாசுதேவன் அப்புள்ளின் வாயைக் கிழித்துத் தலையிற் புடைத் துக் கொன்றனன். அதனை இந்நூலிற் கண்ணனவதரித்த அத்தியாயத்தில்-அ0-அக, செய் யுட்களானும், பாகவதபுராணம் குக்குடாசுரன் வதைப்படலம். "அக்கிரம மேவுமது ரைக்கரச னேவக்-குக்குடமெய் யாகியசு ரன்குறுக மாயோன்-சக்கர மெடுத்தகையி னாற் றலை புடைப்ப-வக்கண மரற்றியுயிர் மாண்டவுணன் வீழ்ந்தான்" என்னுஞ் செய்யுளானும் அறிக. கிழித்த கொல் என்பதனை எச்சத்திரிபாக் கொண்டு, கிழித்துக்கொன்ற எனினுமாம். கொல்-காரணத்தைக் காரியமாக உபசரித்தது.

திருமால் நந்தியல்லாமல், தருமநந்தி, அதிகாரநந்தியென வேறும் ஏறுண்மையால் "கிழித்த கொல் ஏறு" என்றான். அதனை உகைத்தமையாவது:—திரிபுரசங்காரகாலத்தில் எம்மைக் கருவியாக் கொண்டன்றோ விறைவன் புரமவை யழிக்கப் போந்தா னென்று அகங்கரித்த தேவர்களி னஞ்ஞானத்தை நீக்குவான் ஊன்றியமாத்திரையே அச்சொடிந்து விழத் திருமால் இடபவுருவேற்று எம்பிரானைத் தாங்கி யவனு மற்றாக, அதனையறிந்து எம் பிரானோர்திருவிளையாட் டென்னவிற் றாங்கலாற்றாது சரிந்து தளர்ந்து வீழ்ந்த திருமாலும் மற்றைய தேவர்களுங் குறையிரந்து துதிக்க,அதற் கருள் கூர்ந்து வாகனமாகும் வன்மை கொடுத்து ஊர்தியாக உகைத்தா னென்றது உபதேசகாண்டம்.இன்னும் அதனை "கட கரியும் பரிமாவுந் தேருமுவந் தேறாதே-யிடபமுவந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ-தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி - லிடபமதாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ" என்னுந் திருவாசகத் திருவாக்கானுந் தெளிக. காமாரி - வடநூன் முடிபு. மன்மதனை யழித்தவன் என்பதுபொருள். கமலம் - ஆகுபெயர். பழிச்சல்-வழுத் துத லென்னுஞ் சொல்லினது குறிப்புப் பொருளில் வந்தது. "பரவும் பழிச்சும் வழுத் தின் பொருள்"என்றார் தொல்காப்பியனாரும்.பவக்கடலும் என்றதன் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்" என்றருளிய வாற் றானே இறைவன் திருவடியெய்தப் பெற்றனராகலின் "பவக்கடலுங் கடந்தோன்" என் றான். பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா-ரிறைவனடி சேரா தார்" என்று திருக்குறளுஞ் செப்புமாறறிக. துதித்திடுவோம் - இடு, பகுதிப்பொருள்விகுதி. நாவுக்கரையனை நாவாற் றுதித்தலே அவனருளை யடைதற்குச் சிறந்ததாய உபாய மென்பதுதோன்ற "பாதந்துதித் திடுவோம்" என்று கூறப்பட்டது.

இச்செய்யுளின் கருத்தமைத்தே "அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ண லஞ்செழுத்தா லஞ்சா-மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்டகீல - நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந் துதற் கரிய வேழு - பிறப்பெனுங் கடலு நீந்த பிரானடி வணக்கஞ் செய்வாம்" என்று பரஞ்சோதி முனிவரும் பகர்தல் காண்க. (௬)

சுந்தரமூர்த்தி நாயனார்.

உரவுநீர்த் திரைக்கடலின் மலரயனோ டுலகனைத்து முந்தி யூத்த
கரியமால் வெண்கேழ லுருவாகித் தனித்தேடி யின்னுங் காணா
முருகுலாந் தாமரைத்தாள் சிவப்பூரப் புரமெரித்த முறுவ லானைப்
பரவைபாற் றூதேகப் பணித்தகா வலன்மலர்த்தாள் பணிதல் செய்வாம்.

(இ-ள்.) புரம் எரித்த முறுவலானை-முப்புரங்களையும் எரித்த இளநகைப்பினையுடைய சிவபெருமானை, உருவு நீர் திரை கடலின் மலர் அயனொடு உலகு அனைத்தும்-வலியநீரொடு அலைகள் செறிந்துள்ள சமுத்திரத்தினிடத்தே தாமரைமலரி லிருக்கும் பிரமனையும் உலக முழுவதையும், உந்தி பூத்த கரிய மால்-திருநாபியினின்றுந் தோற்றுவித்த கருநிறமுடைய திருமால், வெண் கேழல் உரு ஆகி தனி தேடி-வெள்ளை நிறமுடைய வராகவடிவெடுத்துத் தனித்துப் பாதலங் கீண்டு தேடியும், இன்னும் காணு முருகு உலாவும் தாமரை தாள் சிவப்பு ஊர - இதுகாறும் அறியப்படாத வாசனை பரந்த தாமரைமலர் போன்ற மென் மையாகிய திருவடிகள் கன்றிச் சிவப்பு நிறங் கொள்ள, பரவை பால் தூது ஏக பணித்த நாவலன் மலர் தாள் - பரவையாரிடத்துத் தூதாகப் போய்வரத் தேவாரத் திருப்பதிகத் தானே விதித்த சுந்தரமூர்த்தி நாயனாரது பூவினையொத்த பாதங்களை, பணிதல் செய்வாம்-(யாம்) வணங்குவாம்.

அயன்-பிறத்தலில்லாதவன், அஃதுபசாரமாம். கடல் என்றது நைமித்திகப் பிரளய சலத்தினை. அதில் அயனொடு உலகனைத்தையுந் தோற்றுவித்தமையை இந்நூலில் பிரம விட்டுணுக்களுக்குச் சிவன்றோன்றி வரங்கொடுத்த அத்தியாயத்திற் காண்க. "கரியமால் வெண்கேழல் உருவாகி" இதனுள் கருமை என்றும், வெண்மை என்றும் வந்தமையால் முரணலங்காரம். என்னை? "பொருளினு மொழியினும் பொருந்தக் காட்சியின்-முரணக் கூறுதன் முரணென மொழிப" என்றார் வீரசோழியத் தாகலின். பெருமை, மயக்கம், விருப்பம் எனப் பொருள் படும் மால் என்னுஞ்சொல் ஆகுபெயராய், அவற்றை யுடை யவன்மேனின்றது. காணு என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் தாள் என்னும் பெயர் கொண்டது. உலாம் என்பது "செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்" என்ற நன் னூல் விதிப்படி உயிர்மெய் கெட்டு நின்றது. தாமரை-ஆகுபெயர். பணிதல்செய்வாம்-இத னுள் செய் என்பது துணைவினை.

பன்றி,தான்றேடி யடைதற் குரிய சடைக்காட்டினை நாடாது, அன்னந் தேடுதற்குரிய பாதகமலத்தைத் தேடியமையாற் காணுதாயிற்று. மலர்போன்ற மென்மையாகிய தாள் வன்மைப்பூமிற் பட்டமையினுற் சிவப் பூர்ந்த தென்க. முறுவல் - வீரத்தெழுந்த வெகுளி நகை. இதனை எள்ளனகையி னடக்குவர் பாரத்துவாசியாசிரியர். நாவலன்-திருநாவலூரி லவதரித்தவன்; நாவில்வல்லவன். இறைவனைத் தூதாகச் சிவப்பூரப் பணித்த நாவின் வன் மையன் என்றதுங் குறிப்பு. தூதாவது ஒருவருழை யொருவரது மாற்றங்கொண்டு தக வுரைக்குந் தன்மை. அது தலை, இடை, கடையென மூன்று மென்ப வடநூலார். "அவற் றுள், ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன." என்ற அகத்திணையியல் விதிப்படி தூதுசெல் வோன் உயர்வுடைத் தோழனுகலின்,நாவலனும் பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பாணுளிரவினிற் றனிப்போக விறைவனைப் பணித்தமையால் தம்பிரான் றோழன் ஆனுனென்க. அதனை யிவ்வடிக ளருளுமாற்று னறிக.

திருவாரூர்த் தேவாரம். (ஏழாந்திருமுறை.)

ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
வேழையேன் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே. (எ)

மாணிக்கவாசக சுவாமிகள்.

உரைத்தற் கரிய முதுக்குறைவி னுரமை பேச வுரைபுகன்று
கிரைத்தேற் றெதிர்ந்த சாக்கியர்புன் சமயக் குறும்பி னிலையெறிந்து

வரைத்தோள் வழுதி தளைவிடுப்ப வையை யழைத்து மணிமன்றிற்
பரத்தூ டமர்ந்த வாதவூர்ப் பரமன் பாதம் வணங்குவாம்.

(இ-ள்.) வரை தோள் வழுதி தளை விடுப்ப வையை அழைத்து-மலையையொத்த புயங்களையுடைய அரிமர்த்தனபாண்டியன் தம்மை மந்திரித்தொழிலினின்றும் விடுக்கும்படி வையையாற்றை யழைப்பித்தும், ஊமை முதுக்குறைவின் உரைத்தற்கு அரிய பேச-ஊமைப் பெண்ணானது பேரறிவோடுஞ் சொல்லுதற் கரியனவாய பொருள்களைச் சொல்லும்படி, உரை புகன்று-வினவுரைகளை மொழிந்தும், நிரைத்து ஏற்று எதிர்ந்த சாக்கியர்-கூட்டங்கொண் டெதிர்த்து வாதித்த புத்தரது, புன்சமயம் குறும்பின் நிலை எறிந்து-இழிந்த மதமாகிய பகைநிலையை அறுத்தும், மணி மன்றில் பரத்தூடு அமர்ந்த வாதவூர் பரமன்-அழகிய கனகசபையின்கண் பரவெளியிற் கலந்த திருவாதவூரடிகளது,பாதம் பழிச்சுவாம்-திருவடிகளை (யாம்) துதிப்பாம்.

அமைச்சியலினின்று நீங்குங் காரணமாக வையையாற்றை யழைப்பித்தும், ஊமைப் பெண் பேரறிவோடு பேச வினவுரை பகர்ந்தும், புத்தரை வாதில் வென்றும், கனகசபையிற் சென்று சுத்தசிவத்தோ டிரண்டறக் கலந்த மாணிக்கவாசக சுவாமிகளது திருவடிகளை யாம் துதிப்பாம் என்பது கருத்து.

ஊமை - அதனையுடைய பெண்மேல் நின்றது. அவள் சோழராசன் மகளாம். அரிய-வினையாலணையும் பெயர். புத்தர் கேட்ட வினாக்கட் கெல்லாம் அவ்வூமைப் பெண்ணையே உத்தரங் கூற விதித்தார் என்பான் "ஊமை பேச வுரைபுகன்று" என்றான். அதனை" "பற்றி நன்குண ராத புத்தர் பகர்ந்த தர்க்க மதற்கெலாங்-கற்ற றிந்தவர் போல மன்னிய கன்னி மாறுரை கூறினாண்-மற்று மங்கையர் சாழ லாம்வினை யாட லாக மகிழ்ச்சியா-லுற்ற தன்பொரு டன்னை வாசக மாக வுண்மைய ரோதினார்." என்னுந் திருவாதவூரடிகள்புராணச் செய்யுளானு மறிக. சாக்கியர்-நால்வகைப் பௌத்தர். அவர்கள் சமயக்குறும்பி னிலைகளையும், அவை யெறியப் படுதலையும் மேற்படி புராணத்துப் புத்தரைவாதில் வென்ற சருக்கத்தும், சிவஞானசித்தியார் பரபக்கத்துங் காண்க. சிவபத்தர்களாய திரிபுரத் தசுரர்களை மறுமதத்தவர்க ளாக்கி யழிப்பிக்க நினைந்த விட்டுணுமூர்த்தி யானவர் குருவேடங் கொண்டு நாரதரைச் சீடராக்கி, பொய்ம்மைகள் பொதிந்த பிடகாகமத்தை வஞ்சமாக உபதேசித்துப் பரவச் செய்த சமயம் ஆகலின், "புன்சமயம்" என்று புகலப்பட்டது. பிரமாணம் வருமாறு:—

ஞானவரண விளக்கம்.

இப்படி யிறைவர் தம்பா லெய்திய வரங்க ளாலே
முப்புரத் துள்ளோ ரெல்லா மூவுல கழிக்கு மாற்றாற்
றப்புதல் குறித்துக் கண்ணன் சார்ந்துநா ரதர்தம் மோடுஞ்
செப்பிய மதங்க ளான்குந் தீர்ந்திட வுரைத்த வாறே.

தளை விடுப்ப-என்றதற்குத் தண்டத் தொழிலி னின்றும் விடுவிக்க என்பது மொன்று திருவாத வூரடிகள் தம்மை விடுவிக்குங் காரணத்தா னன்றி, தாம் புத்தரது சமயக்குறும்பினிலை யெறிந்து, சைவசமய உண்மையைத் தாபித்தது போலப் பிற்காலத்துந் திருவேடிட்டுச் சமணமதக் குறும்பெறிந்து, தாபித்தற் கேதுவாய் நிற்குங் காரணத்தானும் அழைப்பித்தமை தோன்ற "வையை அழைத்து" என்றான். விடுப்ப, அழைத்து என்பவற்றில் பிறவினைவிகுதிகள் தொக்கு நின்றன. வையை யாற்றின் பெருமையை "கார்க்கடலொலியில்... உலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்-புலவர்நாவிற் பொருந்திய பூங்கொடி-வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" எனப் புறஞ்சேரி யிறுத்தகாதையிற் புகலப்படுதல் காண்க. பரத்தூடு அமர்தலாவது-சுத்தசிவத்தோடு இரண்டறக் கலத்தல்,புகன்று, எறிந்து,

அழைத்து என்னும் வினையெச்சங்கள், அமர்ந்த என்பதன் முதனிலை வினை கொள்ள, அது பரமன் என்னும் பெயர் கொண்டது. (அ)

ஆசாரியர்.

பாழியங் குடுமிப் பொலங்கிரி குழைத்துப் படிந்தபின் பாயிருள் செறிந்து
காழ்பழுத் தொழுகு மெம்மனக் கருங்கல் குழைத்துநற் கருணைநீ ராட்டி
யாழ்கடற் பிறவித் துன்பமுற் றழுந்தா தடிமலர்ப் புணையளித் தாண்ட
சூழ்சுடர் ஞானத் திருவுரு வமைந்த சுவாமிதே வன்பதம் பணிவாம்.

(இ-ள்.) பாழி அம் குடுமி பொலம் கிரி குழைத்து படிந்தபின்-வலிய அழகாகிய சிகரங்களை யுடைய மேருமலையை வளைத்துப் பழகிய பின்பு, பாய் இருள் செறிந்து காழ் பழுத்து ஒழுகும் - பரந்த மலவிருள் அடர்தலால் வைரமுதிர்ந்து விளங்கும், எம் மனக் கருங்கல் குழைத்து-எமது மனமென்னும் பெரிய கல்லை யிளகச் செய்து, அருள் கருணை நீர் ஆட்டி-தம்மால் அளிக்கப்படுகின்ற அருள்வெள்ளத்துள் மூழ்குவித்து, துன்பம் பிறவி ஆழ் கடல் உற்று அழுந்தாது-துன்பங்கள் மிக்க பிறப்பென்னும் ஆழ்ந்த சமுத்திரத்திற் படிந்து மூழ்காவண்ணம், மலர் அடி புணை அளித்து ஆண்ட - பூவினை யொத்த திருவடியாகிய தெப்பத்தை யீந்து காத்தருளிய, சுடர் சூழ் ஞானம் திரு உரு அமைந்த சுவாமி தேவன் - ஒளிகவிந்த சிவஞானமே ஓர் திருவடிவாகக் கொண் டெழுந்தருளிய சுவாமி தேவன் என்னும் இயற்பெயர் வாய்ந்த ஆசாரியரது, பதம் பணிவாம்-பாதங்களை (யாம்) வணங்குவாம்.

மேருமலையானது, உலகம் நிலை பெற வன்மையாக அதனடுவில் நாட்டப் பட்டதாதலின் பாழி என்றதற்கு வலிமை எனப் பொருள்கொள்ளப் பட்டது. சிந்தாமணியில் "பாழி நம்படை" என்றதற்கு நச்சினர்க்கினியரும் இங்ஙனுரைத்தல் காண்க. "உச்சி வாய்த்திடு மேகலை யினிற்பல சிகர மல்கும்" என்ற புராணப்படி பலசிகரங்கொள்ளலின், பருத்த எனினுமாம். பொன் என்னும் பெயர் ஈற்று னகரங் கெட்டு, லகார மகாரந் தோன்றப் பெற்று வருமொழிக் கினமாய்த் திரிந்து, பொலங் - என நின்றது, "பொன்னென் கிளவி யீறுகெட முறையின்-முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ்-செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்ற தோல்காப்பிய விதியா னென்க. வன்மையான ஒன்றைச் செய்து முடிக்கப் பழக்கம் வேண்டுமாகலின், பொலங் கிரியைக் குழைத்துப் பழகி, அதனினும் வலிய கருங்கன் மனத்தைக் கரைத்தான் என்றபடி. அதனை "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண் டென்னை யாண்டுகொண்ட-செவ்வரை மேனியன்" எனத் திருக்கோவையாரினும், "மேருவுந் தனுவாக வளைய விலையோ-பாழான வென்மனங் குவியவொரு தந்திரம் பண்ணுவ துனக்கருமையோ" எனத் தாயுமானசுவாமிகள் பாடலினும், "நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக" எனக் கந்தரனுபூதி யினுங் கூறினமை காண்க. தன்குலத்தாரையுஞ் சேர்த்து "எம்" எனப் பன்மையாகக் கூறினன். பின்-காலப்பொருளில் வந்த விடைச்சொல். பிறவித் துன்பமாவது-தன்னைப் பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும்,தெய்வத்தைப் பற்றி வருவனவும் ஆகிய மூவகைத் துன்பங்களுமாம். இதனால் "மானைக் காட்டி மான்பிடிப்பவர்போன்-மானுடவடிவாய் வந்தனந் தென்னீர்-மீனது போல விழியுறநோக்கி - யானதோர் கமடம் போலகத் துன்னிப்-பறவைபோலப் பரிசஞ்செய்து-நிறமிகு முன்னூற் றெளிவுரை பகர்ந்து-பக்குவத் தடைவே பாலித்தருணீ-புக்கிட வேண்டிப் போந்ததென் றிசைத்தான்" எனத் திருச்சிற்றம்பல நாடிகள் கூறியபோல, ஆசாரியன் சட்சுதீக்கையினால் மனத்தை வளைத்து மாசுபோக்கித் திருவடித்தீக்கையினால் அருள்புரிந்தமை பெறப்பட்டது. (க)

சிறப்புப் பாயிரம்.

கடலக முழுதும் பொதிந்தபேழ் வயிற்றுக் கடவுண்மோட் டாமையெம் பெருமான், வடமொழி தொகுத்த தெய்வமாக் கதையை வடித்தசெந் தமிழினாற் செய்தான், படுமதஞ் செருக்கிப் பாகுடல் பிளந்து படர்சிறை மழலை வண் டோச்சு, மடுசினக் களிற்று மானவேல் வழுதி யடலதி வீரபூ பதியே.

(இ-ள்.) படு மதம் செருக்கி பாகு உடல் பிளந்து - சுரக்கின்ற மதத்தினாலே தருக்குற்றுத் தன்னைக் கடாவும் பாகனது உடலையுங் கிழித்து, படர் சிறை மழலை வண்டு ஓச்சும் அடு சினம் களிறு-பரந்த சிறகையுடைய மழலைச் சொற்கள் போல ஒலிக்கின்ற வண்டுகளை யோட்டுங் கொலைச் சினமுடைய யானைச் சேனையையும், மான வேல் அடல் பூபதி அதிவீரவழுதி-பெருமைதங்கிய வேற்படையினையும் வெற்றிப் பாட்டினையு முடைய பூமிக்கதிபனாகிய அதிவீர ராமபாண்டியன் என்பவன், கடல் அகம் முழுதும் பொதிந்த பேழ் வயிறு எம் கடவுள் மோடு ஆமைப் பெருமான்-சமுத்திரத்தி னிடம் முழுவதையும் அடக்கிய பெரியவயிற்றினையுடைய எங்கடவுளாய உயர்வுடைய கூர்மப் பிரான், வடமொழி தொகுத்த தெய்வம் மா கதையை-வடமொழியிற் றொகுத்துரைத்த தெய்வத்தன்மையுள்ள சிறந்த சரிதங்கள்வாய்ந்த இப்புராணத்தை, வடித்த செந்தமிழினால் செய்தான்-தெள்ளிய செந்தமிழ்ப் பாக்களால் செய்தான்.

அதிவீரராம பாண்டிய மகாராசன், வடமொழியில் விட்டுணுவாகிய கூர்மத்தினாற் சொல்லப்பட்ட கூர்மபுராணத்தைச் செந்தமிழ் யாப்பிற் றெளிவுறச் செய்தான் என்பது கருத்து.

"முனைபுகு சேவகன் முனிந்தார்ப் பதுபோற்-கசடறக் கற்ற கல்வி யாற்றலாற், றன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே" என்றபடி, இது ஆசிரியன் றன்னைப் பிறன்போலும் நாக்கி கூறியதாம். இங்ஙனமே நைடத முதலிய நூல்களினுங் கூறினமை காண்க. இது வடமொழியார் வழக்கன்றி, தென்மொழியினுந் தேவாரம், திருவாசகம், சிவஞானபோதம், திருவுந்தியார், சிந்தாமணி, சிலப்பதிகாரம், பதினெண்கீழ்க் கணக்கு, பிரயோக விவேகம், திவாகரம் முதலிய நூலாரும் ஆண்ட வழக்காகலானும், ஆசிரியனும் இறைமாட்சி யுடையனாய், கல்வி கேள்வி யறிவுநீஇக் குற்றங் கடிந்து, பெரியோரைத் துணைக்கொண்டு, வெருவரா வினைசெய்யுஞ் செங்கோன் மன்ன னாகலானுந் தான்றற் புகழ்தல் தகுதியாய் மிகைபடாதென்க. மற்றைய யாமைவடிவங்கள் போலாது, பாற்கடலின் ஆழம் அகலங்களுக்குத் தக்க வயிறு வாய்த்த வடிவமுள்ள கூர்மம் என்பான் "கடலக முழுதும் பொதிந்த பேழ்வயிற்றுக் கடவுண் மோட்டாமை" என்றும், தன்குலத்திற் கண்ணனா யவதரித்த சிறப்பின் காரணத்தானே "எம்பெருமான்" என்றுங் கூறினான். முழுதும் - என்பது எஞ்சாப்பொருட்டு. "முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே" என்றார் தொல்காப்பியனார் ஆகலின். "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" என்றமையானும், வழக்கினுள்ளும் "இது ஒரு கதை" யென்ப ஆகலானும், கதை எனவே பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது எனப்படலான், அதனை மறுப்பான் "தெய்வமாக்கதை" என்று விசேடித்தான். "யானை யுடைய படைகாண்டன் முன்னினிதே" என்று இனியவைநாற்பதிற் கூறியபடி, நாற் சேனைகளுள் மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர்செய்யும் வன்மையானும், விலங்கினுள் கைம்மா வாகலானும், களிறு சிறந்ததாகலின் "படுமதஞ் செருக்கிப் பாகுடல் பிளந்து படர்சிறை மழலைவண் டோச்சு-மடுசினக் களிறு" என்றும், "வென்ற வாளின் மண்ணோ டொன்ற" என்று உழிஞையினும், "மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமும்" என்று பாடாண்டிணையினுங் கூறிய வாளினை வாகைத் திணையிற் கூறாது, "பெரும்பகை தாங்கும் வேலி னானும்" என்று வேலிற்கே வாகை கூறியது,

காவற் ருெழில் பூண்ட மாயோ னைம்படையும் போலாது அழித்தற் ருெழிலோர்க்கே யுரித்தாய் முக்கட் கடவுளும் முருக நாதனுங் கூற்றத்தேவனும் ஏந்தி வெற்றி பெறுதற்குச் சிறந்த தென்பது பற்றி யெனப் **புறத்திணையியலுட்** கூறினமையால், ஈண்டும் வேலினை வியந்து "மானவேல் வழுதி" என்றுங் கூறினன். "நீரோந்தி நெய்ம்மிதந்து நிணம் வாய்ப்பில்கி யழல்விம்மிப்-போரேந்திப் பூவணிந்து புலவு நாறும் புகழ்வேலோன்" என மூந்தி **யிலம்பகத்துங்** கூறினமை காண்க. செந்தமிழ்-செவ்வியதமிழ். வடித்த செந்தமிழினுற் செய்தான் எனவே, இது மொழிபெயர்த்த வகைத்தாய் வழிநூலெனப் படும். என்னை? "தொகுத்தல் விரித்த ருெகைவிரி மொழிபெயர்த்-ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே" என்ருர் **தொல்காப்பியனுர்** ஆகலின்.

கடவுள் வாழ்த்து-முற்றிற்று.

பதிகம்.

பிரதீக மென்பது பதிகம் என நின்றது. பதிகம் எனினும், பாயிரம் எனினும் ஒக்கும். "பாயிர காந்தி பதிக மென்ப." என்ருர் **பிரயோக விவேகத்தாரும்.** அஃதாவது நூலின் வரலாறுரைத்தல். எந்நூலுரைப்பினும் அந்நூற்குப் பாயிர முரைத்துரைக்க என்பது இலக்கணம். நூல் கேட்கின்ருன் வரலாறு கேட்கிற் கொழுச்சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறு போல அந்நூல் இனிது விளக்குமாகலான் என்க. என்னை? "பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு-நுண்பொருட் டாகிய நூலினிது விளக்கும்" என்றலின். கேளாக்கால் குன்றின் முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான்போலவுங் கேட்பான் இடர்ப்படுமாகலின், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமமைந்த சுடர்கள்போலவும் இன்றியமையாச் சிறப்பிற் றென்று **நச்சினுர்க்கினிய** ருரைத்தலின், ஈண்டு இவனுங் கூறினன் என்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கெழு மாய னோதுஞ் சிறப்புடைக் காதை கேளா
வேர்குலாய்க் கிடந்த திண்டோ ளிந்திரத் துய்ம்ம னென்னும்
பார்புகழ்ந் தினிதி னேத்தும் பஞ்சவர் குலத்திற் ருேன்றும்
வேரியந் தொடையன் மார்பன் வீட்டின்ப மடைந்த வாறும்.

(இ-ள்.) பார் புகழ்ந்து இனிதின் ஏத்தும் பஞ்சவர் குலத்தில் தோன்றும் - உலகத்தாராற் புகழ் சொல்லி நன்கு துதிக்கப்படுகின்ற பாண்டியர் மரபிற் பிறந்த, ஏர் குலாய் கிடந்த திண் தோள் இந்திரத்துய்ம்மன் என்னும்-அழகு குடியிருக்கப் பெற்ற வலிய புயங்களையுடைய இந்திரத்துய்ம்மன் என்னும் பெயரைக் கொண்ட, வேரி அம் தொடையல் மார்பன்-வாசனையாற் சிறந்த வேப்பமாலையைத் தரித்த மார்பினனுகிய அரசனுனவன், சீர் கெழு மாயன் ஓதும் சிறப்பு உடை காதை கேளா-திருவை மருவிய(கூர்மமாகிய)விட்டுணுவினுற் சொல்லப்பட்ட இப்புராணத்தைக் கேட்டறிந்து, வீடு இன்பம் அடைந்த ஆறும்-முத்தியின்பத்தைப் பெற்றபடியும் என்க.

இப்பதிகத்தின் முதல் தொடங்கி யீறவரையு முள்ள கவிகள் குளக மெனப்படும். என்னை? "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்." என்று **தண்டி யலங்காரத்திற்** கூறலான். ஸ்ரீ என்னும் வடமொழி, தமிழில் சீ எனவும், சீர் எனவும் வருதலிற் சீர் என்பதற்குத் திரு என்ருும். கெழு என்பது "லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன் - னும்முங்"

கெழுவு முளப்படப் பிறவு-மன்ன மரபின் வழியிடைத் தோன்றிச்-செய்யுட் டொடர்வயின் மெய் பெற நிலையும்-வேற்றுமை குறித்த பொருள்வயி னான." என்னுந் தொல்காப்பிய விதிப்படி, கான்கெழுநாடு - என்றாற் போலப் புள்ளியீறுவழிவந்த சாரியைச் சொல்லாம். சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லு நெறிக்கணின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாததுமாய் நிற்பது. அவற்றுள், இது சிறிதுபொருள் பயப்ப நின்றது. பொருந்துதல் என்று பொருள்படும். "முடி கெழு வேந்தர்" என்றார் இளங் கோவடிகளும். சிறப்புடைமையாவது செய்யுளுறுப்பு முப்பத்துநான்கும் வாய்ந்து, முத னூலொடு மாறுகோடாமே மெல்லென்ற சொல்லான் அறம், பொருள், இன்பம், வீடென்னும் விழுமியபொருள் பயத்தலுடைமையாம். காதை - கதையையுடையதீ, காப்பியம். இதனை அடியார்க்குநல்லார் உரைப்பாயிரத்துள் அறிக. கேளா உடன்பாட்டு வினையெச்சம். அது அடைந்த என்பதன் முதனிலைவினை கொண்டது. இந்திரத்துய்ம்மன் பூமாதும், கலைமாதும், சயமாதும், புகழ்மாதுங் குடிகொண் டிருக்கப் பெற்ற குரிசில் என்பான் தோளினையும், மார்பத்தையும் வியந்தான் என்க. பார்-பார்க்கப்படுவது, பருமையையுடையது, பூமி. அது இடவாகு பெயராய் மக்களை யுணர்த்திற்று. ஆறும் என்பதற்குச் சீவக சிந்தாமணிப் பதிகத்தில், படியும் என்றுரைத்தார் நச்சினார்க்கினியர். (௧)

வளிதட வரினும் பாடு மகதியாழ் முனிவ னோடுந்
தளிமதுப் பிலிற்று மென்பூந் தருநிழ லரசன் கேட்ப
வளியுடன் கூர்ம முன்ன மறைந்திடும் வருண நான்கின்
றெளிவுறு மொழுக்க நான்காச் சிரமமுந் தெரித்த வாறும்.

(இ-ள்.) வளி தடவரினும் பாடும் மகதியாழ் முனிவனோடும்-காற்றினியக்கம்படினும் பாடுகின்ற மகதிஎன்னும் பெயர்வாய்ந்த வீணைக்கிறைவனாகிய நாரதமுனியோடும், மது தளி பிலிற்றும் மெல் பூ தரு நிழல் அரசன் கேட்ப-தேன்றுளிகளைச் சிந்துகின்ற மெல்லிய மலர்களையுடைய பஞ்சதருவினீழலில் வீற்றிருக்குந் தேவராசனாகிய இந்திரனுங் கேட்க, கூர்மம் அளியுடன் முன் அறைந்திடும்-கூர்மமாகிய விட்டுணுவினால் அன்புடனே முற்காலத்துச் சொல்லப் பட்ட, நான்கு வருணம் ஆச்சிரமத்தின் தெளிவு உறும் ஒழுக்கும் - நால் வகைப்பட்ட வருணாச்சிரமங்களின் தெளிவு பொருந்திய ஒழுக்கத்தினையும், நான்கு ஆச்சிரமமும் தெரித்த ஆறும்-நால்வகை யாச்சிரம முறையினையும் அறிவித்தபடியும்.

தடவரினும்-இதில், வா-துணைவினை. "நாரதன் வீணையி னயந்தெரி பாடலும்" என்றார் சிலப்பதிகாரத்தும். பஞ்சதருக்களாவன-சந்தானம், அரிசந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பன. ஓடு-எண்ணுப் பொருளது. முன்னம்-இதில், அம்-சாரியை. காலப் பொருட்டு. நால்வகை வருணமாவது-பிரம, சத்திரிய, வைசிய, சூத்திரசாதிகளாம். ஆச்சிரமம்-நிலை. அவையாவன:—பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்பனவாம். கூர்மம்-கு-பூமியில், ஊர்ம - வேகமாய்ச்சரிப்பது, ஆமை. இது விட்டுணுவின் தசாவதாரத்துள் இரண்டாம் அவதாரம். (௨)

எள்ளருஞ் சிறப்பு வாய்ந்த வியல்பிர கிருதித் தோற்றந்
தெள்ளிதி னுரைத்த வாறுந் தேன்றுளி மாரி சிந்தும்
வள்ளவாய்க் கமலப் புத்தேட் கினிதினின் வகுத்த காலம்
பள்ளநீ ருலகம் யாவு மறிந்திடப் பகர்ந்த வாறும்.

(இ-ள்.) எள் அரு சிறப்பு வாய்ந்த இயல் பிரகிருதி தோற்றம்-இகழ்தலில்லாத சிறப்புப் பொருந்திய தன்மையையுடைய பிரகிருதியினது தோற்றத்தை, தெள்ளிதின் உரைத்த ஆறும்-தெளிவாகச் சொல்லியபடியும், தேம் துளி மாரி சிந்தும் வள்ளம் வாய் கமலப் புத்

தேள் கு இனிதின் வகுத்த காலம்-தேன்றுளி மழையைப் பொழிகின்ற கிள்ளைப்போன்ற வாயினையுடைய தாமரைமலராசனனாகிய பிரமற்கு நயமாக விதித்த ஆயுட்கால அளவையை, பள்ளம் நீர் உலகம் யாவும் அறிந்திட பகர்ந்த ஆறும்-ஆழமாகிய நீரைக்கொண்ட சமுத்திரத்தாற் சூழப்பட்ட உலகத்தவர்கள் எல்லாம் அறியுமாறு சொற்றபடியும்.

பிரகிருதி என்பது தமிழிற் பகுதி என்று வரும், பிரகிருதி மாயை என்று பொருள். இனிதினின்-இன் - சாரியை. உலகம் என்றது பலபொருள் ஒருசொல் லாகலின், ஈண்டு உயர்ந்தோரை யுணர்த்திற்று, உலகம் அவரையே கண்ணாக வுடைமையின். என்னை? "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே-நிகழ்ச்சி யவர்கட் டாக லான." என்று தொல்காப்பியம் விதித்தலின். இடு-பகுதிப்பொருள் விகுதி. (௩)

துறுமயிர்க் குறுந்தாட் செங்கட் டுணிகதிர் நிலவு காலும்
பிறைநிக ரெயிற்றுப் பேழ்வாய்ப் பிறங்கொளி வராக கற்பம்
பறைவுற வறைந்த வாறும் பல்வகைத் தோற்றத் தோடுஞ்
செறிதமோ குணச்சி ருட்டி சிறப்புட னுரைத்த வாறும்.

(இ-ள்.) துறு மயிர் குறு தாள்-நெருங்கிய உரோமங்களையுடைய குறுகிய கால்களையும், செங்கண்-சிவந்த கண்களையும், துணி கதிர் நிலவு காலும் பிறை எயிறு - கூறுபட்ட கிரணங்களாகிய சந்திரிகையை வீசுகின்ற பிறையையொத்த பற்களையும்,பேழ் வாய்-பெரிய வாயினையு முடைத்தாய், பிறங்கு ஒளி வராக கற்பம் பறைவு உற அறைந்த ஆறும்-விளங்கிய சுவேதவராக கற்பத்தின் றன்மையைத் தெரிவு பொருந்தச் சொற்றபடியும், பல்வகை தோற்றம் ஓடும்-பலவகைத் தோற்றமும், செறி தமோகுண சிருட்டி சிறப்புடன் உரைத்த ஆறும்-பொருந்திய தமோகுண சிருட்டியுஞ் சிறப்போடு செப்பிய படியும்.

அத்து - சாரியை. குறுந்தாள் - வலித்தல் விகாரம். பிறங்கல் - விளங்குதல். ஒளி-வெண்மை. பறைதல்-சொல்லுதல், தெரித்தல். தமோகுணம் - தாமதகுணம். நிலா என்பது "குறியத னிறுதிச் சினைகெட வுகர-மறிய வருதல் செய்யு ளுள்ளே." என்ற உயிர் மயங்கியற் சூத்திரப்படி நிலவு என நின்றது. (௪)

தண்ணறுந் துளவி னோனுந் தாமரைப் பொகுட்டின் மேய
விண்ணவன் றானும் போற்ற விழைவொடு வரத்தை முன்னங்
கண்ணுத லீந்த வாறுங் காலனைக் காலாற் செற்ற
வண்ணலன் பொழுக வட்ட மூர்த்தியா யமர்ந்த வாறும்.

(இ-ள்.) முன்-முற்காலத்தில், தண் நறு துளவினோனும் தாமரை பொகுட்டில் மேய விண்ணவனும் விழைவு ஒடு போற்ற-குளிர்ந்த நறிய துழாய்மாலையை யணிந்த விட்டுணுவும் தாமரைமலரி னடுவிலிருக்கும் பிரமனும் அன்போடு துதிக்க, கண் நுதல் வரத்தை ஈந்த ஆறும்-நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் அவர்க்கு வரங்களைக் கொடுத்தருளிய படியும், காலனை காலின் செற்ற அண்ணல் - யமனைத் திருவடியா லுதைத் தொறுத்த பெருமான், அன்பு ஒழுக அட்டமூர்த்தி ஆய் அமர்ந்த ஆறும்-அன்பு பெருக அட்டமூர்த்தியாகி யிருந்த படியும்.

அம்-தான் - சாரியைகள். துளவினன் என்றது ஓகாரமாய்த் திரிந்தது, "ஆவோவாகும் பெயருமா ருளவே-யாயிட னறிதல் செய்யு ளுள்ளே." என்ற தொல்காப்பிய விதியா னென்க. காலன்-காலத்தை முடிவுசெய்பவன். அண்ணல்-பெருமை; அதையுடையவனுக்கு ஆகுபெயர். அட்டமூர்த்தத்தை "எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழி-லெட்டுவான்குணத் தீசனெம் மான்றனை-யெட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே-யெட்டுமூர்த்,

தியு மெம்மு ளொடுங்குமே.'' என்ற தேவாரத் திருப்பதிகத்தானும், "நிலநீர் நெருப் புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்-புலனய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின் றான்'' என்றருளிய திருவாசகத் திருவாக்கானுமறிக. (ரு)

பொற்பிதி ரணிந்து வீங்கும் புணர்முலை யமுதத் தீஞ்சொற்
கற்பகக் கொம்பர் போலுங் கௌரியைத் தவங்க ளாற்றி
யற்பொடு மிமய வேந்த னரிதினிற் பயந்த வாறும்
வெற்பிளங் கொடியை யீசன் விழைவுடன் வேட்ட வாறும்.

(இ-ள்.) இமய வேந்தன் அன்பு ஒடும் தவங்கள் ஆற்றி-இமயமலையரசன் அன்புடனே தவங்களைச் செய்து, பொன் பிதிர் அணிந்து வீங்கும் புணர் முலை-பொன்போன்ற தேமலைக்கொண்டு பூரித்த நெருங்கிய தனங்களையும்,அமுதம் தீம் சொல்-அமிர்தத்தினை யொத்த தித்திப்பாகிய மொழிகளையுமுடைய, கற்பகம் கொம்பர் போலும் கௌரியை அரிதின் பயந்த ஆறும்-கற்பகதருவின் இளங்கொம்பு போலும் வடிவமைந்த உமாதேவியாரைப் புதல்வியாக அருமையுறப் பெற்ற படியும், ஈசன் வெற்பு இளங் கொடியை விழைவு உடன் வேட்ட ஆறும்-சிவபிரான் மலையின்கணுள்ள இளமைவாய்ந்த கொடிபோன்ற பார்வதி தேவியாரை அன்புடன் திருமணஞ் செய்தருளியபடியும்.

இன்-சாரியை. அன்பு-வலித்தல் விகாரம். "போகமும் பொருளு மீன்ற புணர் முலைத் தடங்கள்'' என்றார் பிறரும். உலகிலில்லாத மிக்க சுவையும் உறுதியுங் கொடுத்தலின் "அமுதத் தீஞ்சொல்'' என்றும், பூவுறப்புற்று வாடாது என்று மொருபடித்தாய்ப் போகமூட் டும் பொற்பினளாகலின் "கற்பகக் கொம்பர் போலுங் கௌரி'' என்றும், உயர்ந்தெழுந்த தோட் குன்றிற் படர்ந்து குழைக்குந் தன்மையால் "இளங்கொடி'' என்றுங் கூறினான். கொம்பர்-போலி. இமயம்-இம-பனி, ஜம்-தோற்றுதல், பனியுண்டாதற்குக் காரணமாகிய மலை. மலைத்தெய்வமாகலின் "வேந்தன்'' என்றான். உலகமெல்லாம் பெற்ற கன்னியைப் பெற்றவற் கொருவன் மகளாப் பெறுதல் அருமை என்பது தோன்ற "அரிதினின்'' என்று கூறப்பட்டது. (சா)

பிருகுவை முதலா வுள்ள முனிவரர் பிறந்த வாறு
மருவுமீ ரைந்து மன்னர்க் கொருத்தியவ் வயிற்றிற் றோன்ற
வரிதுணர் தக்கன் றன்னை யரன்முனிந் துரைத்த வாறும்
வெருவுற வன்னோன் வேள்வி வீரன்முன் னழித்த வாறும்.

(இ-ள்.) பிருகுவை முதல் ஆக உள்ள முனிவரர் பிறந்த ஆறும்-பிருகுமுனிவரை முதலாகவுள்ள முனிசிரேட்டர்கள் தோன்றிய படியும்,ஈரைந்து மன்னர்க்கு மருவும் அ ஒருத்தி வயிற்றில்-பிரசேதச்சு முதலாய அரசர்பதின்மரையுஞ் சேர்ந்த அந்த மாரிடை யென்னும் பெண்ணொருத்தியின் வயிற்றில், அரிது உணர் தக்கனை தோன்ற அரன் முனிந்து உரைத்த ஆறும்-பொய்ப் பொருளை யறிந்த தக்கனைப் பிறக்குமாறு சாபஞ் சொல்லியருளியபடியும், வீரன் அன்னோன் வெருவு உற வேள்வி அழித்த ஆறும்-வீரபத்திரக்கடவுள் அந்தக்கனும் பயப்பட அவனது யாகத்தை யழித்த படியும்.

இச்சரித விரிவுகளை யெல்லாம் அவ்வவ் வத்தியாயங்களிற் காண்க. முனிவரர் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. முனிவர்-தருமங்களை யறிந்தவர்,இறைவனை மனனஞ் செய் பவர். வரர்-சிரேட்டர். ஈரைந்து-இரண்டாற்பெருக்கிய ஐந்து என மத்தியபத லோபனாகவும், பத்து என வெகுவிரீகிப் பொருளாகவும் விரிக்க. மன்னர்க்கு-உருபுமயக்கம். "மனக் கவலை மாற்ற லரிது. உறற் பால நீண்டா விடுத லரிது'' என்பனபோல ஈண்டு அரிது என்றது இன்மைப் பொருள்குறித்தது. என்னை? தக்கன் விலக்கியகொண்டு சபிக்கப்பட்டான்

ஆகலின். தன்-சாரியை. அரன்-மலத்தை யழிப்பவன். "உயிர்க்குண் மலமொடுக்க லாலே புயிர்க்கு-ளுயிர்க்கு மரனெனும்பே ருண்டு." என்று சைவசமயநெறியிற் சாற்றப் பட்டது. அன்னோன் என்றதன்கண் எதிரது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது, அவனைச்சார்ந்த விண்டு முதலிய தேவர்களும் வெருவி நின்றமையின். (எ)

இரணிய னிரணி யாக்க னிறந்தபின் னமரி னேற்று
மருமலி துளவத் தண்டார் மாயவன் முதலி னோரைப்
பொருவருஞ் சமத்தில் வென்று காரிசூ லத்திற் பொன்றி
யரனுடை யுருவ மந்த காசுரன் பெற்ற வாறும். (16வது அத்யாயம்

(இ-ள்.) அந்தக அசுரன்-அந்தகாசுரன் என்பவன், இரணியன் இரணிய அக்கன் இறந்த பின்-இரணியன் இரணியாக்கனென்னும் அசுரர்கள் மடிந்தபின்பு, மரு மலி தண் துளவம் தார் மாயவன் முதலினோரை அமரின் ஏற்று-வாசனை மிகுந்த குளிர்ந்த துழாய் மாலையை யுடைய விட்டுணுமுதலிய தேவர்களை யுத்தத்தில் எதிர்த்து, பொரு அரு சமத்தில் வென்று - ஒப்பில்லாத அவ்யுத்தத்தில் அவர்களை யெல்லாம் வெற்றிகொண்டு, காரி சூலத்தின் பொன்றி - (பின்னர்) வைரவக் கடவுளினது சூலாயுதத்தால் மடிந்து, அரன் உடைய உருவம் பெற்ற ஆறும்-சிவசாருப்பிய முத்தியை யடைந்த படியும்.

இரணியன், இரணியாக்கன் என்பவர்கள் காசிபமுனிக்கு அதிதிவயிற்றிற் பிறந்தோர். இரணியன் - பொன்னிறமுடையவன். இரணிய அக்கன் - பொன்போன்ற கண்ணையுடையவன். மாயவன்-கருநிறம், வஞ்சம், மாயை, இவையிற்றை யுடையவன். காரி - கருநிற முடையவன். அந்தகாசுரன் ஏற்று, வென்று, பொன்றி, பெற்ற வாறும் என்றியையும். "இரணியன் பட்ட தெம்மிறை யெய்தினன்." என்று **கனகமாலையாரிலம்பகத்துங்** கூறப் பட்டது. தம்மை யிடிக்குத்துணையார் சொற்கொள்ளாதே வேறொரு தத்துவ மின்றென் றதனாற் கேடுவிளைந்து உதவியின்றி யழிந்தனர் என்றார்" பச்சைமாலனைய **நச்சினார்க்கினியரும்**. உடைய-விகாரப்பட்டு நின்றது. (அ)

மாவலி யளிப்ப ஞால முழுவது மாய னெய்திப்
பாவடிப் படுத்தி முன்னம் பண்பொடு கவர்ந்த வாறுந்
தேவரும் புகழும் வாணன் சிவனுருப் பெற்ற வாறு
மோவில் சீர்ப் புலத்தி யன்றன் மரபுநன் குரைத்த வாறும்.

(இ-ள்.) முன்-முற்காலத்தில், மாயன் மாவலி ஞாலம் அளிப்ப பா அடி முழுவதும் படுத்தி பண்பொடு கவர்ந்த ஆறும்-வாமனனாகிய திருமால் மாவலிச்சக்கிரவர்த்தி மூன்றடி மண் கொடுக்கத் தனது பரந்தஅடியினால் உலகமுழுவதையும் அளந்தடக்கி நன்காகக் கவர்ந்துகொண்ட படியும், தேவரும் புகழும் வாணன் சிவன் உரு பெற்ற ஆறும்-தேவர்களாலும் புகழப்படுகின்ற வாணன் என்னும் அசுரன் சிவசாருப முத்தியை யடைந்த படியும், ஓ இல் சீர் புலத்தியன் மரபு நன்கு உரைத்த ஆறும்-ஒழிதலில்லாத சிறப்பினையுடைய புலத்திய முனிவரது வம்சவரலாற்றைச் செவ்வையாகச் செப்பியபடியும்.

மாவலி - பெரியபலத்தை யுடையவன். படுத்தி - அகப்படுத்தி. தேவரும் என்றதின் உம்மை உயர்வு சிறப்புப்பொருள். சிவன்-மங்கலமுடையவன். அவனுருவம் பெறுதலாவது-மான், மழு, சதுர்ப்புய முதலியகொண்டு அவன்போல இன்பத்தை யனுபவித்தல். இதனைச் சிவசாரூப முத்தி யென்ப. இப்பேறு சகமார்க்கமென்னும் யோகமார்க்கத்தி னின்றவரே பெறுவர், "சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ் சலிப்பற்று முச்சதுர

முதலா தாரங்க-ளகமார்க்க மறிந்திவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங் கழிந்து போய் மேலேறி யலர்மதி மண்டிலத்தின்-முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக-ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று முழத்தலுழந் தவர் சிவன்ற னுருவத்தைப் பெறுவர்" என்றருளப்பட்ட சிவஞானசித்தியார்த் திருவிருத்தத் தாற் றெளிக. ஓ-ஓதல், ஒழிதல் எனப் பொருள் படுதலின் முதனிலைத் தொழிற்பெயர். "ஓவறவிமைக்குஞ் சேண்விளங் கவிரொளி." என்றார் பதினோராந்திருமுறையினும். ()

இருட்குறும் பெறியும் வெய்யோன் மரபினி திசைத்த வாறுந்
திருத்தகு குலத்தி ராமன் சிறப்புட னுதித்த வாறு
மருத்தியி னன்னோன் கான மடைதலு மணங்கை வௌவவ்
வெருக்கொள்வா ளரக்கர் கோனை வேரொடு மறுத்த வாறும்.

(இ-ள்.) இருள் குறும்பு எறியும் வெய்யோன் மரபு இனிது இசைத்த ஆறும் - இருளாகிய பகையை யோட்டுகின்ற சூரியனது வம்ச வுற்பத்தியை நன்றாகச் சொல்லியபடியும், திரு தகு குலத்து இராமன் சிறப்புடன் உதித்த ஆறும் - செல்வத்தான் மேம்பட்ட அச் சூரியகுலத்தில் இராமபிரான் மகிமையோ டவதரித்த படியும், அன்னோன் அருத்தியின் கானம் அடைதலும்-அவன் விருப்பத்தோடுங் காட்டினைச் சேர்ந்திருந்த படியும், அணங்கை வௌவு-தெய்வமகளாகிய சீதேவியைக் கவர்ந்து சென்ற, வெரு கொள் வாள் அவ் அரக்கர் கோனை-கண்டார்க்கு அச்சத்தைவிளைக்கும் வாளாயுதத்தை யுடைய அந்த இராக்கதர்க்குத் தலைவனாகிய இராவணனை, வேரொடும் அறுத்த ஆறும் - (இராமபிரான்) மூலபலத்தோடு மழித்தபடியும்.

வெய்யோன்-வெம்மையை உடையவன்,உஷ்ணகிரணன்.இனிதின் இசைத்தலாவது-பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்லென வாக்கின்க ணிகழும் பாவச்சொனான்கு மின்றி, அறம்பொரு ளின்பத்தைப் பயக்குஞ் சொற்களோடு வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், நல்லவாதல், விழுப்பயன்றருதல் முதலியகுணனயத்தோ டுரைத்தலாம். இராமன்-விரும்பினர் மனத்தை ரமிக்கச்செய்பவன், சற்குணங்களால் நிறைந்தவன். அத்து-இடப்பொருள்பட வந்த சாரியை யிடைச்சொல். அணங்கு - அழகுடையவள். தீண்டவருத் தும் தெய்வம் என்பர் தொல்லாசிரியர். (௧0)

சேதுவி னிராம னெய்திச் சிவலிங்க மமைத்துத் தூய
தாதவிழ் மலர்க டூவித் தாழ்ந்தருச் சித்த வாறு
மேதமி லயோத்தி யெய்தி யெரிமணி மௌலி சூடி
மாதவ ரோடுந் தீயோர் வரன்முறை கேட்ட வாறும்.

(இ-ள்.) இராமன் சேதுவின் எய்தி சிவலிங்கம் அமைத்து - இராமபிரான் சேது தீர்த்தக் கரைசென்றடைந்து சிவலிங்கஞ் செய்து,தாது அவிழ் தூயமலர்கள் தூவி தாழ்ந்து அருச்சித்த ஆறும்-மகரந்தம் பரந்துள்ள சுத்தமாகிய புட்பங்களைச் சொரிந்து வணங்கி யருச்சனை செய்த படியும், ஏதம் இல் அயோத்தி எய்தி எரி மணி மௌலி சூடி-குற்றமில்லாத அயோத்திநகரத்தை யடைந்து பிரகாசிக்கின்ற இரத்தினங்களா லிழைத்துச் செய்டப் பட்ட கிரீடத்தைப் புனைந்து (அரசாண்ட படியும்), மாதவர் ஓடும் தீயோர் வரன்முறை கேட்ட ஆறும்-அகத்திய முனிவர்பால் இராவணாதி யரக்கரின் பிறப்பு முறையைக் கேட் டறிந்த படியும்.

சிவலிங்கம் - சிவமாகிய லிங்கம். இதனை உவமோத்தர பத கருமதாரயன் என்ப. இலிங்கம் - படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரித்தல், பிரகாசம் என்றும் பொருள். இவற்றை "ஒலிமுதற் புலன்க ளின்றி யுரையிறந் துணர்வுக் கெட்டா-தலகில்பே ரொளியா யொன்று யுருவமா யமல மாகி - மலவறு குணங்க ளோடு வண்ண

மற் றழிவி லாது, நிலைபெறு சிவமென் றேத நிற்பதே யிலிங்க மாமால்'' என்று இலிங்க புராணத்தும், "பூதமிங் இயங்க ளுரைத்தவவ் வியத்தந் தன்னிடைப் பொருந்தியே யொடுங்கு - மாதலாற் சிவனே யிலிங்கத்தை யுடையோ னுங்கவ னுணையா லன்றி-யோது மவ் வியத்தஞ் சகத்தினைப் படைக்க வல்லதன் றுதித்திடு சகந்தான்-நீதிலவ் வியத்தத் தொடுங்கலா லதனை யிலிங்கமென் றேதெரிந் துரைப்பார்'' என்று வாயுசங்கிதையினும், "பொலிதரு மிலிங்க மெனுமொழிக் குரைக்கும் பொருள்பிர காசக மென்பர் - மலிதரு மறிஞ ராதலாற் சிவமே மன்னிய விலிங்கமாம்'' என்று சூதசங்கிதையினுங் கூறு மாற்று னறிக.

குற்றமாவது மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசன்மை என்னும் அறுவகைக் கேடுகளான் விளையாமையும், அதிபசியும் நீங்காநோயும், தீக்காற்று மிக்க குளிர் வெப்ப முடைமையும், சங்கேதத்தான் மாறுபட்டுக் கூடுங் கூட்டமும், உட்பகை ஆறலைப் பார் கள்வர் குறளைகூறுவா ராதிய மக்களும், பன்றி புலி கரடி யாதிய மாக்களுங் கொண் டிருத்தல். இவையின்றி, குன்றுத விளையுளைச் செய்யும் வேளாண் சிறப்பினரும், அற வோர் துறந்தோர் அந்தணர் முதலிய தக்காரும், "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்-கல லின் வந்த கருங்கறி மூடையும்-வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்-குடமலைப் பிறந்த வாரமு மகிலுந் - தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங் - கங்கை வாரியுங் காவிரிப் பயனு-மீழத் துணவுங் காழகத் தாக்கமும்-அரியவும் பெரியவும்'' என்று **பட்டினப் பாலை** யுள் பகர்ந்தாங்கு, கலத்தானுங் காலானும் ஈட்டுதலானே பெறுதற்கரிய பெரும்பொரு ளைத் தரும் புதுமையை யுடைய தீவமுதலிய தேயங்க ளொருங்கு தொக்காற் போன்ற வளந்தராநின்ற செல்வருஞ் சேரப்பெறீஇ, இருபுனல் வருபுனல் மலை யரணமென்றிவை வாய்ந்து, ஏமமுதலிய வைந்துமுடைய முத்திநகரொன்பான் "ஏதமிலயோத்தி'' என்று கூறினன். மாதவன் என்பது உயர்வுநோக்கிப் பன்மைப்பால் பெற்றுநின்றது. (கக)

வண்டுழா யலங்கற் றோளான் வைகுந்த மடைந்த வாறு
மண்டர் பாற் கடலை முன்னங் கடைதலு மமுதத் தோடுந்
தெண்டிரை முகட்டிற் றோன்றுந் திங்களன் மரபினுற்ற
வொண்டிறல் வேந்தர் தூய மரபினை யுரைத்த வாறும்.

(இ-ள்.) வண் துழாய் அலங்கல் தோளான் வைகுந்தம் அடைந்த ஆறும் - அழகிய துழாய் மாலையை யணிந்த புயங்களை யுடைய இராமமூர்த்தி வைகுந்தஞ் சேர்ந்தபடியும், முன் அண்டர் பாற்கடல் கடைதலும் - முன்னர்க்காலத்தில் தேவர்கள் திருப்பாற்கடலை மத்தித்தலும், அமுதம் ஒடு தெள் திரை முகடு இல் தோன்றும் - அமிர்தத்துடன் தெளி வாகிய அலைகளையுடைய அக்கடலின்மீது வெளிப்பட்ட, நல் திங்கள் மரபின் உற்ற ஒள் திறல் வேந்தர்-நன்காகிய சந்திரகுலத்திற் றோன்றிய வெற்றியும் வலியும் அமைந்த அரசர்க ளது, தூய மரபை உரைத்த ஆறும்-சுத்தமாகிய பிறப்பு முறைமையைக் கூறியபடியும்.

அத்து, அம், இன் சாரியைகள். ஒடு என்னு மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருள். திரை-ஆகுபெயர். ஒள்-வெற்றி. "உள்ளு வொளிசிறுன்'' என **நாலடியாரினுங்** காண்க. "களைகொண் டிரங்கு திரைக்கடல்வான் குழிசியாகக் கறையனல்வா-ளரவங் கயிறு மதி தறியா வமர ரமுதங் கடைந்தெடுப்ப'' என்றிவன் முன்னர்க் கூறியதனுல், தறியா யிருந் தது சந்திர னென்பது பெறப்படவும், ஈண்டு திரை முகட்டிற் றோன்றிய தென்றது முரா ணன்றோ வெனின்? "விழியி னெஞ்சின்வா னெருப்பினீ டுததியின் விதிபடைப் பினிற் றோன்றிப்-பொழியும் வெண்கதி ரவகை மதியுமப் பொழுதுதித் தென்ன'' என்று **வில்லி புத்தூரர் பாரதந்துக்** கூறப்படலான் மதிய மைவகைத்தாய் விதியுமிகலின் முரணன் றென்க. (கஉ)

வெண்மதி மரபிற் கண்ணன் மேதக வுதித்து வெம்போர்
நண்ணிய கஞ்சன் றன்னை நாமறக் கொன்று வீட்டிப்
பண்ணமை யமுதத் தீஞ்சொற் பாவைநப் பின்னை யாதி
யெண்ணறு மடவா ரின்ப மினிதினிற் றுய்த்த வாறும்.

(இ-ள்.) வெள் மதி மரபின் கண்ணன் மேதக உதித்து - வெண்மையாகிய சந்திர குலத்தில் விட்டுணுமூர்த்தி கண்ணனாக மேன்மைபொருந்த வவதரித்து, வெம்போர் நண்ணிய கஞ்சனை நாம் அற கொன்று வீட்டி-கொடிய யுத்தஞ் செய்தற்காக வந்த கஞ்சன் என்பவனைப் பயம் நீங்கக் கொன்று, பண் அமை அமுதம் தீம் சொல் பாவை நப்பின்னை ஆதி-பண்பொருந்தி யமுதினை யொத்த இனிய சொல்லையும் பாவைபோன்ற தன்மையையுமுடைய நப்பின்னைமுதலாய, எண் அறு மடவார் போகம் - அளவில்லாத பெண்களது போகத்தை, இனிதின் துய்த்த ஆறும்-மகிழ்வோடு அநுபவித்த படியும்.

கண்ணன் உதித்து, வீட்டி, துய்த்தவாறும் எனக்கூட்டுக. கண்ணன் - கரியவன், கிருஷ்ணன் என்னும் வடமொழித்திரிபு. தன், இன் சாரியைகள். நாம் என்பது அச்சப்பொருள் பயத்தலை "பேஎ முருமென வரூஉங் கிளவி-யாமுறை மூன்று மச்சப் பொருள." என்றதனு னறிக. கொன்றுவீட்டி என்பன, நிவந்தோங்கு பெருமலை என்றாற்போல ஒரு பொருட் கிருபெயர் நின்றவென்க. அதனை "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்ற சூத்திரத்தை உய்த்துக்கொண்டுணர்த லென்னுந் தந்திர வுத்தியாற் பொருள் கொண்டு அமைக்க. நெஞ்சு முதலிய பெருந்தானமெட்டினும், எடுத்தல் முதலிய கிரியைகளெட்டானும் பண்ணிப் படுத்துதலாற் பண்ணென்று பெயராயிற்று. மூலாதாரந் தொடங்கி யெழுத்தினுதம் ஆளத்தியாய்ப் பின்னிசை யென்றும் பண்ணென்றும் பெயராம். என்னை? "பாவோ டணைத லிசையென்றூர் பண்ணென்றார் - மேவார் பெருந்தான மெட்டானும்-பாவா-யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்-படுத்தமையாற் பண்ணென்று பார்.', என்றார் இசைநூலார் ஆகலின். நப்பின்னையை-நம்பின்னை, பின்னை, பிஞ்ஞை, சத்தியவதி, நீளாதேவி எனவுங் கூறுப. எண்ணறு மடவா ரென்றது உருக்குமணி, இலக்குமணை, சத்தியபாமை, சாம்பவதி, காளிந்தி, மித்திரவிந்தை, பத்திரை என்பவர்களையும், பதினாறுயிரம் இடைச்சியர்களையுமாம்.

இன்ப மினிதினிற் றுய்த்தமையாவது. "இன்பமும் பொருளு மறனு மென்றாங்-கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்-காமக் கூட்டங் காணுங் காலை-மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்-டுறையமை நல்யாழ்த் துணையோ ரியல்பே." என்ற தொல்காப்பிய விதிப்படி, இன்பத்தின் பகுதியாகிய ஐவகை யொழுக்கத்துள்ளுங் காமக்கூட்டத்தானே எட்டு மணத்தினுள்ளும் "அதிர்ப்பில்லைம் பூணரு மாடவருந் தம்மு-ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப-கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தன்காட்சிக்-கந்தருவர் கண்ட கலப்பு" என்றாங்கு கந்தருவகுமாருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுப் புணருங் காந்தருவமண வாயிலானும், ஏறுதழுவுதன் முதலிய அதன்பகுதியானுந் தமோறிக் கண்ணெதிர் நோக்கொத்த காரிகையரைக் கைகலந் தண்ணெகிழச் சேர்ந்து துய்த்தமையாம்.

(கஅ)

கண்ணன்வெண் பூதி பூசிக் கண்டிகை மாலை சூடிப்
புண்ணியத் திங்கள் வேணி யானிரு பாதம் போற்றித்
தண்ணறுந் தாமத் திண்டோட் சாம்பனைப் பயந்த வாறு
நண்ணரு மிலிங்க பூசை நயப்புடன் புரிந்த வாறும்.

(இ-ள்.) கண்ணன் வெள் பூதி பூசி-கண்ணமூர்த்தி வெள்ளிய விபூதியை யணிந்து, கண்டிகை மாலைசூடி-உருத்திராக்க மாலையுந்தரித்து, புண்ணியம் திங்கள் வேணியான்

இரு பாதம் போற்றி - நற்கிருத்தியங்களையுடைய சந்திரசேகரனது இருதிருவடிகளையுந் துதித்து, தண் நறுந் தாமம் திண் தோள் சாம்பனை பயந்த ஆறும் - குளிர்ந்த நறிய மாலையைத் தரித்த வலிய புயங்களையுடைய சாம்பன் என்னும் புத்திரனைப் பெற்றபடியும், நண் அரு இலிங்க பூசை நயப்புடன் புரிந்த ஆறும் - (பின்பு) செய்தற்கரிய சிவலிங்க பூசையை அன்பொடுஞ் செய்தபடியும்.

பூதி-அழிவில்லாத செல்வத்தைக் கொடுப்பது, "நீடலறுந் தீவினை யனைத்து நீற்றி விடலா னீறென்றும்-வீடில் வெறுக்கை தருதலினல் விபூதி யென்று முயிர்தோறுங் - கூடு மல மாசினைக் கழுவுங் குணத்தாற் சாரமென்றுமட - மோடவளர் சோதியைத் தரலாற் பசித மென்று முரைப்பார். ,, என்றது **பேரூர்ப்புராணம்.**

வேதமந்திர விதிவழுவாமல் விபூதியை முக்குறி பொருந்தத் தரிப்பதனல் சிவபெருமான், விட்டுணுமூர்த்தி, பிரமதேவர் என்னும் மும்மூர்த்திகளுக்கும் திருப்தியுண்டாம் என "சிவஸ்ய விஷ்ணோர் தேவானும் ப்ரம்மணஸ்த்ருப்திகாரணம் பஸ்மநா வேதமந்த்ரேண த்ரிபுண்டரஸ்யது தாரணத். ,, என்னுஞ் சுலோகங்களானே **பராசரஸ்மிருதி** பகர்வதனானும், ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தி னிடத்தே மனவுறுதி யுடையாரால் அகோராத்திரம் பூசிக்கப்படுகின்றேன். அன்றியும் பயங்கரம்விளைக்கும் முகங்களையும்,பலவகைப்பட்ட நகங்கள், ஆயுதங்கள், வடிவங்கள், அடையாளங்களையுங் கொண்டனவாய பலகணங்களும் விபூதி ருத்திராக்க தாரணஞ்செய்து கூப்பியகையுடன் அனவரதமுந் தியானித்திருக்கின்றன என்னுங் கருத்தடக்கி, "காச்யாம்ப்ரயதைரஹமங்வஹகம் பூஜ்யஸ்தத்ரகணைரௌத்திரானனை நானகா நானசஸ்திரதாரிணோ நாநாரூபதரா நானசிந்திதாஸ்தேஸர்வே பஸ்மதிக்தாங்காருத்திராக்ஷாபரணாஃ கிருதாஞ்ஜலயோநித்ய மபித்யாயந்தி,, என்னுஞ் சுலோகங்களானும், அங்ஙனமே விட்டுணு மூர்த்தியும் விபூதி ருத்திராக்க தாரண அஞ்சலியத்தராய்த் தென்றிசையின்கணிருந்து உபாசிக்கின்றார் என்பதுதோன்ற "தக்ஷிணபார்சி விஷ்ணு,, என்னுஞ் சுலோகத்தானும் **பஸ்மசாபால உபநிடதமும்,** பிரமனாதி மும்மூர்த்திகட்கும், அவர் தேவியர்க்கும், தேவர் முனிவர்களுக்குஞ் சிவசின்னமாகிய சைவதரும முண்டென "சிவேநவிஷ்ணுநாசைவ ப்ரம்மணவஜ்ரிணாததா - தேவதாபிர்த்ருதம் பஸ்ம த்ரிபுண்டரோத்தூளனாத்மநா-உமாதேவ்யாசவாண்யா சத்ருதம் சாங்யரபி ராதராத்-ஸர்வஸ்திரீபிர்த்ருதம் பஸ்மத்ரிபுண்டரோத் தூளனாத்மனா" என்னுஞ் சுலோகங்களானே **சூதசங்கிதையும்,** இங்ஙனம் விட்டுணுமூர்த்திக்கு விபூதிதாரணாதியவற்றை விதித்தவாறே ஸ்ரீ இராமமூர்த்திக்கும், "கரன் என்னும் இராக்கதன், மிகுகோபத்துடன் காலாக்கினிபோற் ஜொலித்தும், பொன்னிறமான மான்றோல் போர்த்தும், உடலமுழுவதும் விபூதியை உத்தூளனமாகத் தரித்தும் விளங்காநின்ற இராமனை நினைத்துப் பயங்கொண்டான் என "த்யாத்வா ரகுபதிம்க்ருத்தம் காலானலமிவாபரம்-பீதகிருஷ்ணஜினதரம் பஸ்மோத்தூளன விக்ரஹம். ,, என்னுஞ் சுலோகத்தானே **வான்மீகி இராமாயணமும்,** சூர்ப்பநகையானவள் பொன்னிறமாய சடாபாரங்கொண்டு, மேனியெங்கும் திருநீறணிந்த இராமச்சந்திரனைப் பார்த்தகாலத்துச் சாட்சாத்காரமாய் விளங்கும் பரமசிவனைப்போல நினைந்து மதனதாபமுற்றாள் என, "தத்ர திருஷ்ட்வா ராமநாதம்,, என்று தொடங்கி, "ஸ்வர்ண்வர்ண ஜடாபாரம் ஸாக்ஷாத் ருத்ரமிவாபரம் - பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் த்ருஷ்ட்வா காமவசங்கதா" என்றுமுடியுஞ் சுலோகங்களானே **அந்தியாத்ம ராமாயணமும்,** வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளக்கலானும், இராமகிருஷ்ணர்க்குச் சிவசின்னதாரணமும், சிவபூசையாதியவும் பெறப்படுதல் காண்க. கண்டிகை, இருபாதம் இவற்றின்முறையே எச்சவும்மையும், முற்றும்மையுந்தொக்கு நின்றன. (௧௪)

உலகெலாம் விழுங்கு சோதி யுமிழ்ந்தழற் பிழம்பாய் நின்ற
கலைமதிக் கண்ணிப் புத்தேள் கழலிணை சென்னி தேடி
யலர் செழுங் கமலத் தோனு மாயனு மறிந்தி டாத
மலைவறு காதை கண்ணன் மார்க்கண்டர்க் குரைத்த வாறும்.

(இ-ள்.) உலகு எல்லாம் விழுங்கு சோதி உமிழ்ந்து - உலக மெல்லாவற்றையுந் தன்னகப்படுத்திய ஒளியைக்கான்று, அழல் பிழம்பு ஆய் நின்ற கலை மதி கண்ணிபுத்தேள்-அக்கினித் திரளாய்நின்றருளிய கலையையுடைய பிறையாகிய் கொழுந்தைச்சூடிய சிவபெருமானது, இணை கழல் சென்னி - இருதிருவடிகளையும் முடியினையும், செழு கமலம் அலரோனும் மாயனும் தேடி அறிந்திடாத - வளப்பம் பொருந்திய தாமரை மலரிலிருக்கும் பிரமனும் விட்டுணுவுந் தேடிக்காணாத, மலைவு அறுகாதை - மயக்கமில்லாத சரிதத்தினை, கண்ணன் மார்க்கண்டர்க்கு உரைத்த ஆறும் - கண்ணமூர்த்தி மார்க்கண்டேயமுனிவர்க்குச் சொல்லியபடியும்.

எல்லாம் - தொகுத்தல். விழுங்குசோதி - வினைத்தொகை. மதிக்கண்ணி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கழல்-காலணி, "ஆடவர் கொடைவீ ரத்தா லணிவது கழலென் றுமே." என்றது நிகண்டு. அது ஆகுபெயராய்ப் பாதத்தை யுணர்த்திற்று. இணைகழலை மாயனும், சென்னியைக் கமலஅலரோனுந் தேடினர் என எதிர் நிரனிறையாக் கொள்க. சூடியபிறை ஒருகலையுடைத்தாகலின் "கண்ணி" என்றான். (கரு)

ஈனுல கத்தி னுள்ள விடர்தணித் தாண்ட வாறும்
கானமர் துளவ மாயன் வைகுந்தங் கலந்த வாறு
மூனமில் வியாத னெய்தி யுகத்தியல் புரைத்த வாறும்
வேனில்வேட் செற்றோன் காசி விழுச்சிறப் பிசைத்த வாறும்.

(இ-ள்.) கான் அமர் துளவம் மாயன்-வாசனை பொருந்திய துழாய்மாலையை யுடைய கண்ணமூர்த்தி, ஈனம் உலகத்தின் உள்ள இடர் தணித்து ஆண்ட ஆறும்-சிறுமை யுற்ற பூமிக்கு நேர்ந்த துன்பமாகிய பாரத்தை நீக்கிக் காத்த படியும், வைகுந்தம் கலந்த ஆறும்-அவன் வைகுந்த பதவியைச் சேர்ந்த படியும், ஊனம் இல் வியாதன் எய்தி-குற்றமில்லாத வியாசமுனி தோன்றி, யுகத்து இயல்பு உரைத்த ஆறும்-யுகத்தின்கணிகழுந் தருமங்களைத் தெரித்த படியும், வேனில் வேள் செற்றோன் விழு காசி சிறப்பு உரைத்த ஆறும்-வசந்த காலத்துக் கதிபனாகிய மன்மதனை யழித்த விசுவநாதப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற சிறந்த காசித்தலத்தினது மகிமையைக் கூறிய படியும்.

ஈன்-ஈனம் என்பதன் விகாரம். விழு—அம் கெட்டு நின்றது. "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்." என்பது உரிச்சொல்லியற் சூத்திரம். வியாதன் - வேதங் களைப் பிரித்தவன். வியாசம்-பிரித்தல். அதனை "கரையறு வேதமாங் கடலை நான்கவாய்ப்-பிரிவிலை யாக்கியே நிறுவு பெற்றியாற்-புரைதவிர் முனிவரன் புகழ்வி யாதனென்-றொருபெயர் பெற்றன னுலகம் போற்றவே." என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தாற் றெளிக. யுகத்து-இதின் அத்து ஏழனுருபின் பொருள்பட வந்தசாரியை. வேனில் - வெய்யிற் காலம், இளவேனில் முதுவேனில் என்ற விரண்டுமாம். குன்ற மெறிந்த காலாதீதக் குமரவேளு முண்மையால் "வேனில் வேள்" என்று அடைகொடுத்துப் பிரித்தோதினான்.

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்-பேசுற்ற வின்சொற் பிறிதென்க-வீசற்கு,நல்லோ னெறிசிலையோ நன்னுதலா யொண்கருப்பு-வில்லோன் மலரோ விருப்பு." டிடி கல்லா னெறிந்த சாக்கிய நாயனாரை மகிழ்ந்தும், மலரா னெறிந்த காமனைக் காய்ந்தும்

பத்திவலையிற் படுந் தன்மையை யுணர்த்தினன் என்பான் "வேனில் வேள்செற்றோன்,,என்றுங் கூறினன். இதனை "அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்-பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவ மாகும். ,, என்ற சிவஞானசித்தியார்ச்சுவபக்கச் செய்யுளானறிக. (௧௬)

மனுமர புரைத்த வாறு மண்டலத் தளவை யாவு
மினிதினி னிசைத்த வாறும் பனிக்குறும் பெறியும் வெய்யோர்
புனிதமா மியற்கை யாவும் புகரறப் புகன்ற வாறுங்
கனையிருட் பிழம்பு சீக்குங் கதிர்ச்சிறப் புரைத்த வாறும்.

(இ-ள்.) மனு மரபு உரைத்த ஆறும்-சுவாயம்பு மனுவினது வம்ச முறையைச் சொல்லிய படியும், மண்டலத்து அளவை யாவும் - சூரியன் முதலிய கிரகங்களினது மண்டலவளவெல்லாம், இனிதின் இசைத்த ஆறும் - நன்மையோடுரைத்த படியும், பனி குறும்பு எறியும் வெய்யோர்-பனியினமாகிய பகையை யழிக்கின்ற ஆதித்தர்களது, புனிதம் ஆகும் இயற்கை யாவும் புகர் அற புகன்ற ஆறும்-சுத்தமாகிய குணங்களை யெல்லாம் குற்ற நீங்கவுரைத்தபடியும், கனை இருள் பிழம்பு சீக்கும் கதிர் சிறப்பு உரைத்த ஆறும் - நெருங்கிய இருட் டொகுதியைத் தேய்க்கின்ற (சூரியர்களது) கிரணங்களின் சிறப்பைச் செப்பிய படியும்.

இன்-சாரியை. வெய்யோர் என்றது "காலமுகம்,, என்னுஞ் சொல்லதிகாரச் சூத்திரத்துள் ஞாயிறு திங்கள் என்பன உயர்திணை மேலனவாய்ப் பால் பிரிந்திசையா வெனவும்,"நின்றாங் கிசைத்தலிவணியல் பின்றே.,,எனவே,நின்ற முறைமையானே ஈறு பெற்று நின்று உயர்திணையா யிசைத்தல் இவணியல் பின்றெனவுங் கூறிய ஆசிரியர் "இசைத்தலு முரிய வேறிடத்தான." எனக் காலமுதலாகிய சொற்கள் உயர்திணையா யிசைத்தலு முரிய என்றாராகலின், உயர்திணையா யீறு பெற்றிசைத்து நின்றது. பனிக் குறும்பு - இருபெயரொட்டுப் பண்புத் தொகை. "அறுகாற் குறும் பெறிந்து, புன்கண் மாலைக் குறும்பெறிந்து,, என்றார் பிறரும். ஆதித்தர் பன்னிருவராகலின் வெய்யோர்-என்றான். (௧௭)

உரைத்திடு முலகீ ரேழின் செய்தியோர்ந் துரைத்த வாறும்
வரைத்தநா வலந்தீ வுற்ற வண்மைக டெரித்த வாறும்
பரித்திடு மேரு வெற்பின் சிறப்பினைப் பகர்ந்த வாறு
நிரைத்திடு நவகண் டத்தோ ரியற்கைக ணிகழ்த்து மாறும்.

(இ-ள்.) ஈரேழின் உரைத்திடும் உலகு செய்தி ஓர்ந்து இசைத்த ஆறும் - பதினான்கென்று சொல்லப்பட்ட உலகங்களி னியற்கைகளை ஆராய்ந்து கூறிய படியும், வரைத்த அம் நாவல் தீவு உற்ற வண்மைகள் தெரித்த ஆறும் - எல்லைப்படுத்திய அழகிய சம்புத்தீவினிடத்துப் பொருந்திய வளப்பங்களை யறிய வுரைத்த படியும், பரித்திடும் மேரு வெற்பு சிறப்பை பகர்ந்த ஆறும்-உலகத்தைக் காக்கின்ற மேருமலையின் சிறப்பினைச் சொல்லிய படியும், நிரைத்திடு நவகண்டத்தோர் இயற்கைகள் நிகழ்த்தும் ஆறும்-வரிசையா யுள்ள ஒன்பது கண்டங்களினும் வசிக்கின்றவர்களது நிலைமையைக் கூறியபடியும்.

இடு என்பன தமக்கென வேறு பொருளின்மையாற் பகுதிப்பொருள் விகுதி. பதினான்குலகம் ஆவது-கீழுலகம் ஏழு, மேலுலகம் ஏழுமாம். நவகண்டம் "இடையுரி வடசொலின்" என்ற நன்னூற் சூத்திரப்படி யியல்பாயிற்று. தன்னை யுண்டாரைப் பதின்மூவாயிரம் ஆண்டு வாழ்விக்கும் நாவற்கனியினது இரசம் சாம்பூநதம் என்னும் பெயரோடு மேருவை வலமாகவந்து அந்த நாவன்மூலத்தை யடைய ஓடிச் செல்லுமிடமாயிருத்

லால் சம்புத்தீவு எனவும், நாவலந்தீவு எனவும் பெயர்பெற்றது. "தோற்றிய நாவற் கனி யுணிற் பதின்மூ வாயிர மாண்டுதன் னுவர்க-ளூற்றமக் கனிநீர் மேருவைச் சூழ மோங்கு சாம் பூநதப் பெயரின். , பொற்ற வங்காவற் சிறப்பினு னுவர்நீர் போர்த்தமண் ணுவலந் தீவென்-றற்றது ,, என்றது தணிகைப்புராணம். "ஓர்ந்துரைத்த,,என்றான், திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும் - பொருளு மதனினூங் கில். '' எனவும், "ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்-காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. ,, எனவும் மாதானுபங்கி ஓத லான் என்க. (௧அ)

மாலைவெள் ளருவிக் குன்றின் வானவர் வதிந்த வாறுஞ்
சால்புறு மேனைத் தீவி னியற்கைகள் சாற்று மாறும்
பால்பட வெய்து மன்வந் தரவிதி பகர்ந்த வாறுஞ்
சீலநூல் வியாதன் மூன்று முகந்தொறுஞ் சேரு மாறும்.

(இ-ள்.) வானவர்-தேவர்கள், மாலை வெள் அருவி குன்றின் வதிந்த ஆறும்-ஒழுங்கு பட்ட வெள்ளிய அருவியையுடைய மலைகளில் இருந்த படியும், சால்பு உறும் ஏனைய தீவின் இயற்கைகள் சாற்றும் ஆறும்-தகுதிகொண்ட மற்றைய தீவுகளின் சிறப்புக்களைச் சொல்லியபடியும், பால் பட எய்தும் மன்வந்தர விதி பகர்ந்த ஆறும் - பலபிரிவாய் வரு கின்ற மனுவந்தரங்களின் நிலைமை கூறியபடியும், சீலம் நூல் வியாதன் மூன்றும் உகந் தொறும் சேரும் ஆறும்-ஒழுக்கமும் வித்தைகளு முடைய வியாசமுனிவர் மூன்றாவது யுக மாகிய துவாபரயுகங்கடோறும் உற்பவிக்கும் படியும்.

"மாலைவெள் ளருவி சூடி மற்றிதா தோன்று கின்ற-சோலைசூழ் வரையினெற்றிச் சூழ் கிளி சுமக்க லாற்று—மாலையந் தினைகள். ,, எனப் பதுமையாரிலம்பகத்தும் கூறப்பட் டது. ஏனைத்தீவு என்றது நாவலந்தீ வொழிந்து நின்றவற்றை. தொறு என்பது, "குன்று தொறாடலு. நின்றதன் பண்பே" எனத் தான்சார்ந்த மொழிக்குப் பன்மையு மிடமு முணர்த்து மிடைச்சொல்லென் றுரையாசிரியர் கூறுப வாகலின், ஈண்டுப் பன்மைப் பொருள்பட வந்தது. நூல் போறலின் நூலென்றது உவமவாகுபெயர். வியாதன் மூன் றுவ துகந்தோறுந் தோன்றுவதனை "முறையின் வந்தெய்து மூன்று முகந்தொறு முடிவி லாத-மறுவறு தவத்து வேத வியாதன்வந் துதிப்பன். '' என்னும் இலிங்கபுராணச் செய் யுளா னறிக. ஏனைய-அ, தொகுத்தல். இனிவருவன உத்தரகாண்டத்தன வாகும். (௧௯)

வதரிகாச் சிரமந் தன்னின் மகேச்சுரன் மேய வாறுந்
ததைமலர்த் துளவோன் கேட்பச் சாங்கிய மறைந்த வாறுஞ்
சிதைவில்சம் பிரதா யத்தைத் தெளிவுறப் பகர்ந்த வாறும்
பதமலர் பணிந்து போற்றப் பத்திமை யுரைத்த வாறும்.

(இ-ள்.) மகேச்சுரன் வதரிகாச்சிரமத்தின் மேய ஆறும்-மகேசுரமூர்த்தி வதரிகாச் சிரமத்தில் முனிவர் பொருட்டு எழுந்தருளிய படியும்,ததை துளவ மலரோன் கேட்ப சாங் கியம் அறைந்த ஆறும்-அவர் நெருங்கிய துழாய்மலர்மாலையை யணிந்த திருமால் கேட்கச் சாங்கிய யோகத்தை உபதேசித் தருளிய படியும், சிதைவு இல் சம்பிரதாயத்தை தெளிவு உற பகர்ந்த ஆறும்-(அவர்) அழிதலில்லாத சம்பிரதாயத்தைத் தெளிவுபொருந்தச் சொற்ற படியும், மலர் பதம் பணிந்து போற்ற பத்திமை உரைத்த ஆறும்-தாமரைமலர் போன்ற திருவடிகளை (முனிவர்) வணங்கித் துதிக்க அவர்க்குப் பத்திமையைப் புகன்றருளிய படியும்.

மகேச்சுரன்—மக ஈச்சுரன்=மகத்தாகிய ஐசுவரியமுடையவன். வதரிகா ஆச்சிரமம்= இலந்தைகளையுடைய நிலயம். சம்பிரதாயம்-பாரம்பரியம். மலர் என்பது பூவின் பேர்துப் பெயராகவும், ஈண்டுத் தாமரைமலரெனத் தந்துரைத்தது "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. ,, எனவும், "பூவிற்குத் தாமரையே,, எனவும், ஆன்றோர் விதந்த வழியென்க. மகேச்சுரன் என்னுஞ் சொல்லைத் திவசமாகக்கொள்க. ஆண்டன்மை, பெண்டன்மை என்பன ஆண்மை பெண்மை என நின்றாற்போலப் பத்தியின் தன்மை பத்திமை எனநின்றது. பத்தி, அன்பு, சிரத்தை என்பன ஒருபொருட் சொற்கள். தொடர்புபற்றாதே நிகழ்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லு மன்பு முதிர்ந்துழி உளதாவ தாகலின் வேண்டிற்றென்க. "அருளென்னு மன்பீன் குழவி,, என்றது மிக்கருத்ததேயாம். "பத்திமையு மடிமையையுங் கைவிடுவான் பாவியேன் ,, என ஏழாந்திருமுறையில் அருளப்பட்டமையு மறிக. (௨0)

விச்சுவ ரூபங் காட்டி விமலன்முன் னின்ற வாறு
மிச்சையிற் சத்தி பண்ணு மியல்பினை யிசைத்த வாறு
நச்சர வணிந்த புத்தேள் விபூதியை நவின்ற வாறு
மெச்சுசீர்ப் பிரபஞ் சத்தின் மிகுதியை யுரைத்த வாறும்.

(இ-ள்.) முன் விமலன் விச்சுவ ரூபம் காட்டி நின்ற ஆறும்-முற்காலத்தில் மலரகிதராகிய மகேசுரமூர்த்தி தமது பாரமேசுரரூபத்தைத் தரிசிக்குமாறு காட்டியருளிய படியும், இச்சையின் சத்தி பண்ணும் இயல்பினை இசைத்த ஆறும்-பரசிவத்தி னிச்சையினால் சிவசத்தி செய்யுந் தொழின்முறைமையைக் கூறியபடியும், நஞ்சு அரவு அணிந்த புத்தேள் விபூதியை நவின்ற ஆறும்-விடத்தினையுடைய சர்ப்பத்தை யாபரணமாகக் கொண்ட சிவபிரான் தமது ஐசுவரியகுணத்தை யுரைத்தபடியும், மெச்சு சீர் பிரபஞ்சத்தின் மிகுதியை உரைத்த ஆறும் - யாவரானுங் கொண்டாடப் படுகின்ற சிறப்பினையுடைய பிரபஞ்சத்தின் றோற்றத்தைக் கூறியபடியும்.

விசுவம்-உலகம்.விச்சுவம் என்றது விரித்தல் விகாரம். "ரூபபேதம் பொருந்தலொடு,, என்ற தொல்லாசிரியர்போல இவனும் உருவம் என்று கூறாது, வடமொழியிற் பிறந்தவண்ணமே ரூபம் என்று தற்சமமாகக் கூறினான். காட்டியது - காரணமூர்த்திக்குந் தேவர் முனிவர்களுக்குமாம். விமலன்—வி-இன்மை, மலம்-பாசம், பாசமில்லாதவன். சிவசத்தி யொன்றே கிரியாசத்தியாய்ப் படைத்தும், ஞானசத்தியாய்க் காத்தும், இச்சாசத்தியாய்ச் சங்கரித்தும், ஆதிசத்தியாய்த் திரோபவித்தும், பராசத்தியாய் அநுக்கிரகித்தும் நிற்குமாகலின் "இச்சையிற் சத்திபண்ணு மியல்பு,, என்றான். அதனை "சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதா-மிவள்பி ரிந்திடி னியங்கு தற்குமரி தரி தெனுமறை யிரைக்குமால். ,, என்னுஞ் சௌந்தரியலகரிச் செய்யுளானு முணர்க. நஞ்சு-நச்சு எனவலித்தல் விகாரம். "மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற் - றம்மின வன்றொட ராகா மன்னே. ,, என்ற விதியினடங்கும். அரா என்னுஞ் சொல், "குறியத னிறுதிச் சினைகெட வுகர-மறிய வருதல் செய்யு ளுள்ளே. ,,என்று தொல்காப்பியத்திற் கூறியபடி அரவு என நின்றது. (௨௧)

மரையயின் புணர்ப்பை நன்கின் வகுத்தெடுத் துரைத்த வாறு
மாயதத் துவத்தி னுற்ற தரிசன மறைந்த வாறும்
பாயநல் யோகம் யாவும் பாற்பட விசைத்த வாறு
மேயநற் கருமந் தன்னை யினிதினிற் புகன்ற வாறும்.

(இ-ள்.) மாயையின் புணர்ப்பை நன்கின் வகுத்து எடுத்துரைத்த ஆறும் - (மகேசுர மூர்த்தி) மாயாசத்தியின் செயல்களை (விகாரங்களை) தெளிவாகப் பிரித்துக் கூறியருளிய படியும், ஆய தத்துவத்தின் உற்ற தரிசனம் அறைந்த ஆறும்-மேலாய தத்துவப்பொருளிற் காணப்படுகின்ற காட்சியைச் சொற்றபடியும், பாய நல் யோகம் யாவும் பால்பட இசைத்த ஆறும் - நிறைந்த நன்மையைக் கொடுக்கின்ற யோகங்களெல்லாவற்றையும் பிரிவுபடச் சொல்லியபடியும், ஏய நல் கருமத்தை இனிதின் புகன்ற ஆறும்-உலகர்க்கு இயைந்த சற்கருமங்களைச் செவ்வையாகத் தெரித்தபடியும்.

மாயை-மயக்குந் தன்மையையுடையது. அதாவது போகவேதன விடய சுகதுக்கங்களில் மோகிக்கச் செய்தல். இதனை மாயேய மலமென்ப. மாயையாவது நெல்லிற்கு முளை தவிடு உமிபோல ஆன்மாவோடு அநாதியே பந்தித்து அதனுண்மை வடிவினை மறைத்துப் பொய்ம்மை செய்து, போகம் பந்தம் போத்திருத்துவம் என்பவற்றை முறையே செய்யும் மும்மலங்களுள் ஒன்றும். அதனை மாயாகாரிய விசேடமே யென்று பாசுபதனும்,பிரகிருதி காரிய விசேடமென்று சாங்கியனும், அஞ்ஞானமாம் என்று ஏகான்ம வாதியுங் கூறுகிற்பர். இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்கயோகம், மந்திரயோகம், பரிசயோகம், பாவயோகம், மாயோகம், பாசுபதயோகம்,கருமயோகம்,ஞானயோகம் என,யோகம் பலவகைப் படலால்"பாய நல் யோகம் யாவும்,, என்றான். (உஉ)

ஆசம னத்தின் செய்தி யரில்கெட வுரைத்த வாறுந்
தேசுடைப் பிரம சாரி யியற்கையைத் தெரித்த வாறு
மாசிலில் லறத்தின் செய்தி மாண்புட னுரைத்த வாறும்
பூசுரர் மகிழ்ச்சி பூப்பப் பொதுவிதி யுரைத்த வாறும்.

(இ-ள்.)பூசுரர் மகிழ்ச்சி பூப்ப-வதரிகாச்சிரமத்துள்ள முனிவர்களுக்குச் சந்தோஷம் அதிகரிக்க, ஆசமனத்தின் செய்தி அரில் கெட உரைத்த ஆறும் - ஆசமனத்தினது விதியைக் குற்றநீங்கச் சொல்லியருளிய படியும், தேசு உடைய பிரமசாரி இயற்கையை தெரித்த ஆறும்-அழகினையுடைய பிரமசாரியி னிலக்கணங்களை யறிவித்த படியும், மாசு இல் இல்லறத்தோர் செய்தி மாண்பு உடன் உரைத்த ஆறும் - குற்றமற்ற கிருகத்தாச்சிரமத்தாரது விதிகளை மாட்சிமைபொருந்தச் சொல்லியபடியும், பொதுவிதி உரைத்த ஆறும்-யாவர்க்கும் பொதுவாயுள்ள நியதங்களை யெடுத்துச் சொல்லியபடியும்.

இல்லறத்தோர்-மனையாளோடு கூடி யறத்தைச் செய்பவர். அறமாவது அவர்க்குரிய ஒழுக்கம். அதனை யவ்வத்தியாயத்திற் காண்க. இல்-ஆகுபெயர். துறவறத்தோர் போல மனத்தையும் பொறிகளையு மொறுத் தடக்கிக் கடுந்தவஞ்செய்து பேறடைதல் போலின்றி, அவற்றை யொறுக்கவேண்டாதே தவஞ்செய்வாரையுந் தத்தநெறியின்கணொழுகப் பண்ணி, ஐம்புல வின்பங்களாரத்துய்க்கும் மென்மையுடைய இல்வாழ்க்கையோடுகூடிப்பழியஞ்சி, ஆற்றி னொழுக்காது அறனொழுக்கலால் நோற்பாரி னோன்மையுடையராய்ப் பேற்றினை யிலகுவினடையும் பெருமையராகலின் "மாசிலில்லறத்தோர்,, என்றுயர்த்தி யுரைக்கப் பட்டார். பூசுரர்-பூ-பூமியில், சுரர்-தேவர், பூமியில் தேவராக விளங்குவோர். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்-தெய்வத்துள் வைக்கப் படும்.,,என்று உத்தரவேதம் உரைத்தமை காண்க. பூசுரர்க்கு மகிழ்ச்சி பூப்ப வுரைத்தலாவது - பிறிதொரு வெல்லுஞ் சொல் இல்லாமை யறிந்து தாஞ் சொல்லுஞ் சொல்லானது மழைத்துளிபோல் வந்தீண்டி யெல்லா அறிவுகளையு முளவாக்கவும், கேட்போரது திறனறிந்து,அவர் பின்னுங் கேட்டலை விரும்புமாறு வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை யவாவி, சுவைமிகுதியும் பிற்பயத்தலு முளவாகவும் ஏற்கும்வகை யியம்புதலாம். அதனை "விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்

தினிது - சொல்லுதல் வல்லார்ப் பெறின்,, என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாய னாருந் தெளித்தமை காண்க. (௨௩)

அல்லவை மொழிந்த வாறு நித்திய கரும மாய்ந்து
சொல்லிய வாறுந் தென்னம் புலத்தினோர் தெவிட்டத் துய்ப்ப
நல்லன வூட்டு மாறு நவையறு சிராத்தத் துண்ணப்
புல்லியோர் தம்மை நீக்கி நல்லவர்ப் புகன்ற வாறும்.

(இ-ள்.) அல்லவை மொழிந்த ஆறும் - செய்த்தகாத கருமங்க ளிவையென்று சொல்லிய படியும், நித்திய கருமம் ஆய்ந்து சொல்லிய ஆறும் - நித்தியகரும விதியை ஆராய்ந்துரைத்த படியும், தென் அம் புலத்தினோர் தெவிட்ட - தென்றிசைக்கண் அழகிய இடத்திலிருக்கும் பிதிர் தேவதைகள் திருப்தியடையுமாறு, நல்லன துய்ப்ப ஊட்டும் ஆறும் - இனிமையாய உணவுகளை உண்ணும்படி யவரையுண்பிக்கச் செய்யுஞ் சிராத்த விதியைச் சொல்லிய படியும், நவை அறு சிராத்தத்து உண்ண - குற்றமில்லாத சிராத்ததினத்துக் கூடிவிருந்து உண்ணுதற்கு, புல்லியோரை நீக்கி - அருகரல்லாதாரை இவரென்று நீக்கி, நல்லவர் புகன்ற ஆறும் - அருகராவா ரிவரென்று கூறியபடியும்.

அல்லவை-அல் என்னும் பண்படியாகத் தோன்றிய குறிப்பு வினையாலணையும் பெயர். நித்தியகருமம்-நாடோறுஞ் செய்யுங்கிரியை. ஆய்தல் - பொருளையாராய்தல். அஃதாவது பேய்த்தேரோ புனலோ கயிறோ அரவோ என்னும் பலதலையாயவுணர்விற் படாது திணை, பால், செய்யுள், நிலம், காலம்,வழக்கு,வழு, இடம் என்னும் எண்வகையானும் ஆராய்ந்து தெளிதலாம். தெற்குத் திசைக்கண் எட்டுக்கோடி யோசனை தூரத்துள்ள சனலோகத்து வசிக்கின்ற (அயனாற் படைக்கப்பட்ட) ஓர்சாதியார் என்பான் "தென் அம்புலத்தோர்,, என்றான். கற்றோணி யேறியோன் அதனுடன் ஆழ்தல்போலவும், நற்றோணி சென்றோனதனுட னயக்கரை சேர்தல்போலவும், சிவஞானவானுதி செவ்வியார்க்களிக்கின் நற்பலனுண்டாய் முத்தியும்,காமமுதலிய குற்றமுளார்க்குக் கொடுத்துண்ணின் தீயவிளைந்து அவரொடு நரகடைதலு முண்மையால் "சிராத்தத்துண்ணப்-புல்லியோர்தம்மை நீக்கி நல்லவர்ப் புகன்றவாறும்,, என்றான். அதனை "திலமத் தனையே சிவஞானிக் கீந்தாற்-பலமுத்தி சித்தி பரபோக முந்தரும் - நிலமத் தனைபொன்னை நிர்மூடர்க் கீந்தாற்-பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. ,, எனவும், "கோல வரட்டைக் குனித்து குளகிட்டுப் - பாலைக் கறந்து பருகுவதே யொக்குஞ்-சீலமு நோன்பு மிலாதவர்க் கீந்தது-காலங் கழிந்த பயிரதுவாமே. ,, எனவும், "மண்மலை யத்தனை மாதன மீயினு-மண்ண லிவனென் றஞ்சலி யத்தனு-யெண்ணி யிறைஞ்சா தார்க்கீந்த விருவரு-நண்ணுவ ரேழா நரகக் குழியிலே. ,, எனவுந் திருமூல நாயனார் திருமந்திரஞ் செப்புமாறறிக. (௨௪)

தென்புலத் தோர்கட் கூட்டு முறைநனி தெரித்த வாறு
மன்பெருஞ் சூத கத்தோ டியலுமா சௌச வுண்மை
நன்கினி லுரைத்த வாறு நவையிறீக் கருமம் யாவு
மன்பினில் லறத்தோர் தங்கள் பகுதியு மறைந்த வாறும்.

(இ-ள்.) தென்புலத்தோர்கள்கு ஊட்டும் முறை நனி தெரித்த ஆறும் - பிதிரர்களுக்குப் பலிசெலுத்துங் கிரமத்தை மிகவுந் தெளிவாக அறிவித்தபடியும், மன் பெரு சூதகம் ஓடு இயலும் - நிலையாய் நிற்கும் பெரிய சூதகத்துடனே கூடிய, ஆசௌசம் உண்மை நன்கின் உரைத்த ஆறும் - ஆசௌசவுண்மைகளையுஞ் செவ்வனே சொல்லிய படியும், நவை இல் தீ கருமம் யாவும் (அறைந்த ஆறும்) - குற்றமில்லாத அக்கினிகாரிய விதியெல்லாவற்றையுஞ் சொல்லிய படியும், அன்பின் இல்லறத்தோர்கள் பகுதியும் அறைந்த ஆறும் - அன்பினோடு கூடிவாழுகின்ற கிருகத்தாச்சிரமிகளுடைய பிரிவுகளைச் சொல்லியபடியும்.

தென்புலம்-தெற்காகிய புலம் எனப் பண்புத்தொகை. புலன் என்பது விடயமென்றும், புலம் என்பது இடம் எனவுங் கூறுபவாகலின், ஈண்டுப் புலமென்றதற்கு இடமெனப் பொருள் கொள்க. புலத்தார் என்றது ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்து விகுதிமேல் விகுதி பெற்று நின்றது. இல்லறத்தார் என்பது மஃதே. "அவைதாம், உறுதவ நனியென வரூஉ மூன்று—மிகுதி செய்யும் பொருள வென்ப. ,, என்னுந் **தொல்காப்பிய** விதியால், நனி என்பதற்கு மிகுதி என்றுரைத்தாம். என்றும் பிறப்புங் கேடும் பிறங்கி வருதலுலகத் தியற்கையாகலின் "மன்பெருஞ் சூதகம்,, என்றான். சூதகம் என்பது மாதர்கள் பிறத்தல் இறத்தலால் வருவனவும், ருது மைதுனம் மகப்பெறுதல் முதலியவற்றால்வருவனவுமாகிய அசுத்தம் எனவும், ஆசௌசம் ஆடவர் பிறத்தல், இறத்தலால் வருவனவும், ஞாதியர்களால் வரும் அசுத்த மெனவுங் கோடல் பெருவழக்கிற் றென்னலான் "சூதகத் தோடியலு மாசௌசம்,, என்று கூறப்பட்டது. சிலர், பிறப்பால் வருவது சூதகம் எனவும், இறப்பினால் வருவது ஆசௌசமெனவுங் கொள்ப.

ஆசௌசம்-சுத்தியில்லாமை. இன் தம்-சாரியைகள். அறைந்தவாறும் என்பது அத்தியாய முறைமையாற் பின்னருங் கூட்டப்பட்டது. தீக்கருமம் - அக்கினிகொண்டு செய்யுங் கருமம் என, மூன்றும் வேற்றுமை உருபும் பயனு முடன்றொக்க தொகை. யாவும்-முற்றும்மை. அன்பாவது—துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் அறிந்து கடைப்பிடித்தலும், சமையற்றொழில் வன்மையும், ஒப்புரவுசெய்தலுமாய நற்குண நற்செய்கைகள் வாய்ந்து, முதலையறிந்து அதற்கியைய வழிக்கும் மனைவிமேல் நாயகனும் அவன்மீது அவளும் ஒத்த அன்புடையராய் வாழுதல். "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை-பண்பும் பயனு மது,, எனச் **செந்நாப்போதார்** திருவாய் மலர்ந்தருளியாங்கு இல்லாட்குங் கணவற்கு மன மொன்றாகாவழி இல்லறம் நடவாதாகலின் அன்பின் பண்பு வேண்டப்படு மென்பான் "அன்பினில்லறத்தோர்,, எனவிதந்தான். அது நடவாமையை "மருவிய காதன் மனையாளுந் தானும்-இருவரும் பூண்டீர்ப்பி னல்லா - லொருவரா, லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடுஞ் - செல்லாது தெற்றிற்று நின்று,, என **அறநெறிச் சாரத்திற்** கூறுமாற்றானுமறிக. (௨௫)

எண்ணிரண் டாய தான முதலவா வியம்பு கின்ற
புண்ணிய தானம் யாவும் புகரறப் புகன்ற வாறு
நண்ணும்வா னப்பி ரத்தர் செய்தியை நவின்ற வாறு
மெண்ணரு ஞானம் வல்ல வெதியொழுக் கிசைத்த வாறும்.

(இ-ள்.) எண் இரண்டு ஆய தானம் முதல ஆக-பதினாறுதானம் முதலாக, இயம்புகின்ற புண்ணிய தானம் யாவும் புகர் அற புகன்றஆறும்-சொல்லப்படுகின்ற நல்வினையாகிய தானங்க ளெல்லாவற்றையுங் குற்றநீங்கச் சொல்லியபடியும், நண்ணும் வானப்பிரத்தர் செய்தியை நவின்ற ஆறும் - (ஞானப்பேற்றை) யடையும் வானப்பிரத்த ஆச்சிரமத்தாரது இலக்கணங்களைக் கூறியபடியும், எண் அரு ஞானம் வல்ல எதி ஒழுக்கு இசைத்த ஆறும்-நினைத்தற்கரிய ஞானத்தையுடைய சந்நியாச ஆச்சிரமத்தின் ஒழுக்கத்தைப் புகன்றபடியும்.

தானம் பதினாறுவன - துலாபுருட தானம், இரணிய கருப்ப தானம், பிரமாண்ட தானம், இரணியகற்பகதானம், அட்டோத்தரசகத்திரகோதானம், இரணியவிடபதானம், இரணியவசுவதானம், இரணியகன்னிகாதானம், திக்குப்பாலகதானம், சொர்னரததானம், பஞ்சலாங்கலதானம், சுவர்ணபூமிதானம், கற்பக லதாதானம், இரணியசத்தசாகரதானம், இரத்தினத்தேனுதானம், பொற்குப்பதானம் என்பனவாம். இவையன்றி, சொர்னகணபதி தானம், விட்டுணு விம்பதானம், திலபதுமதானம், திலடருவததானம், திலதேனுதானம், இலக்குமிதானம், அன்னதானம், சொர்னதானம், வித்தியாதானம், திலதானம், சிவிகை

மஞ்சம், குடை, பாதரட்சை, முதலிய தானங்களும் உளவாகலான் "எண்ணிரண்டாபதான் முதலவா வியம்புகின்ற-புண்ணிய தானம் யாவும், எனக் கூறப்பட்டது. "புண்ணியங்கள் மேனேக்கும்,, என்றபடி இத்தானங்கள் புண்ணியத்தின் பாற்பட்டஞானந்தைக் கொடுக்கும் என்க. அது "காசறு கருமத் தாலுயர் முத்தி யெய்திட லரிதியல் கரும - மேசலில் ஞானத் தோடமங் கியற்றி னெய்தலா முத்திரம் மிறைவைப்-பூசனை புரிந்து வணங்கியாங் கவன்றன் பொருவிலா வின்னரு டன்னுன்-மாசிலா வீரோன் டானநன் களிக்கின் மருவிடு மழிவிலா ஞானம். ,,என்னும் இலிங்கபுராணச் செய்யுளா னுணர்க. இவை நித்தியம், நைமித்திகம், காமிகம், நிர்மலம் என நால்வகைப்படும். விரிவுகளை யெல்லா மிதனில் தானமுரைத்தஅந்தியாயத்திற் காண்க. ஞானம்—நால்வகை மார்க்கத்து ளொன்றாய சன்மார்க்கம். அஃதாவது பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களை உள்ளவாறு அறிதலாம். இக் கருத்தானே, "அறைபதி பசுபா சத்தை யறிதலே ஞான மாகும் - முறையிலா றத்துவாவை முன்னுபு சுத்தி செய்தன் - மறுவறு கிரியை யாமால் வருணவாச் சிரம தன்மத்-துறைதலே சரியை நம்மை யுன்னலே யோக. மாமால். "என்றான் வாயு சங்கிதையினும்,, யந்திரம் என்னுஞ் சொல்லின் யகரம் "எந்திர வூர்தி யியற்றுமி னென்றான். ,, என எகரமாய்த் திரிந்தாற் போல, யதி என்பதும் எதி எனத்திரிந்தது. யகரங் கெட்டு அகரம் எகரமாயிற் றென்பாருமுளர். (௨௬)

துறந்தவர் தண்டச் செய்தி தொகுத்தினி துரைத்த வாறு
மறங்கெழும் பிரம கத்தி தண்டத்தை வகுத்த வாறு
நிறங்கிளர் கமலப் புத்தே ணெடுந்தலை யுகிரிற் கொய்து
பிறங்குசீர்க் காரி யையம் பெட்பொடு மேற்ற வாறும்.

(இ-ள்.) துறந்தவர் தண்டம் செய்தி தொகுத்து இனிது உரைத்த ஆறும் - சந்நியாசத்திற் பிரவேசித்திருப்பாரது பாவங்களுக்குப் பிராயச்சித்த விதியை தொகைப்படுத்தி நன்காகச் சொல்லிய படியும், மறம் கெழு பிரமகத்தி தண்டத்தை வகுத்த ஆறும்-கொலைப் பாவத்திற் சேர்ந்த பிரமகத்தி தோடத்துக்குப் பிராயச்சித்தத்தை வகைசெய்து உரைத்த படியும், பிறங்கு சீர் காரி-விளங்காநின்ற சிறப்பினையுடைய வைரவக்கடவுள், நிறம் கிளர் கமலம் புத்தேள் நெடு தலை உகிரின் கொய்து—நிறம் விளங்குந் தாமரைமலர் ஆசனனாகிய பிரமனது நீண்ட சிரமொன்றனைத் தமது விரனகத்தாற் கிள்ளி (அதனால்), ஐயம் பெட்புஒடும் ஏற்ற ஆறும்-உதிர பலியை மகிழ்வோடும் இரந்தபடியும்.

துறந்தவர்-ஒழுக்கத்து நீத்தாராய நான்காம் ஆச்சிரமத்தார். தமக்குரிய வொழுக்கத்தில் வழுவா தொழுகி, அறம் வளர்தலாற் பாவந் தேயப்பெற்று, அஞ்ஞானம் நீங்க நித்தியாநித்திய வஸ்து விவேக முண்டாய், இகமுத்திரார்த்த பலபோக விராகம் பிறந்து, மூமூட்சுத்துவம் பெற்றதனால், வீட்டுக்குக் காரணமாகிய யோகமுயன்று மெய்யுணர்வுறீஇ, யான் எனதென்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களைத் துறத்தலையுடையார் ஆகலின் காரணக்குறியாம். துறத்தல்-நீக்குதல். சந்நியாசிகளும் பாரமேட்டி, யோகசந்நியாசி, வேதசந்நியாசி, கருமசந்நியாசி, ஞானசந்நியாசி, முற்றத்துறந்த முனிவர் என வகையுடையாராகலின் தண்டங் கூறப்பட்டது. அவருள்ளும் முற்றத் துறவாதார் அவிச்சை வயத்தானே மறந்து, பொய்கூறல், அறியாதொன்றின் ஆவியைக் கொல்லுதல் முதலிய காம வெகுளி மயக்கங்களின் வாய்ப்படுத லொருதலை யாகலான் அது வேண்டிற்றென்க. பிரமகத்தியின் றண்டம் யாவர்க்கும் பொதுவாகச் சொல்லப்பட்டது. அறம்—ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனமூவகைப்படும். இவற்றை முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர் வடநூலார். ஒழுக்கத்தைக் கூறியவழி யதினின்று வழுவினார்க்கும், நில்லாமே விழுவினார்க்கும், அநுபவித்தற்குரிய தண்டவகைசாற்றி புணரவைத்தல் முறைமை யாதலின்,

தண்டமுங் கூறியதாம். தொகுத்துரைத்தல்—முதனூல் விரித்தவற்றைச் சுருக்கிச் சொல்லுதல். வகுத்தலாவது—அது தொகுத்துரைத்தவற்றை விரித்துக் கூறுதல். நெடுந்தலை என்றது, பிரமனது ஐந்தலைகளுளொன்றாய உச்சித்தலையைக் குறிப்பிக்க நின்றது. தருமவொழுக்கத்தை யாம்புரிந்து காட்டினாலன்றி யுலகர் புரியாராகலின், பிரமன் றலையைக் கிள்ளிய தோடம் பிடித்தது போலப் பன்னிருவருடம் உதிரபலி யேற்கவென்று தந்தையாகிய கருமிடற்றண்ணல் கழறினாக, காரிக்கடவுளும் அதுகொண்டு காட்டினான் என்க. அதனைப் பின்வரும் வைரவன்பலியிரந்த அத்தியாயத்தில் "தருமவொழுக்கம் யாம்புரிந்த வாறேயன்றித் தகுமுறையின்-விரியும் புவனத் துள்ளோர்கள் புரியார தனால் விரிதலையோட்-டரிதிற் பருவ மீராறு மைய மேற்றுப் பிரம கத்தி - விரைவி னொழித்தீண் டடைதி யெனத் தரும மோர்ந்து விளம்பினான்." என்று கூறப்பட்டதனானறிக. பிரமகத்தியாற் பிடிக்கப்பட்டோர் தமது தேசசு முதலிய சீரெல்லாங் குன்றப் பெருந்துன்ப முறுவாராக, வைரவக் கடவுளோ அவையொன்றுமின்றி நாடகமாத்திரையானே காட்டுமாறு தன்சீர் குன்றப் பெறாது மகிழ்வோடேற்றான் என்று, (பிரமகத்தியால் வருத்தமுற்றாயாசித்து அலைந்தான் என்று சைவர்கள் சிலர் கரையும் புன்மொழியை மறுத்துறுத்துவான்) "பிறங்குசீர்க் காரி யையம் பெட்பொடு மேற்றவாறும்." என்று கூறினான். (௨எ)

புகலுமா பாத கத்தின் றண்டங்கள் புகன்ற வாறு
நிகழுறு பாத கத்தின் றண்டத்தை நிறுத்த வாறு
மிகலுறு புரங்கண் மூன்று மெந்தைநக் கெரித்த வாறு
மகிழ்சிவ பூசை செய்யு மான்மிய முரைத்த வாறும்.

(இ-ள்.) புகலும் மாபாதகத்தின் தண்டங்கள் புகன்ற ஆறும்—நூல்களாற் சொல்லப்பட்ட மாபாதக பிராயச் சித்தங்களைச் சொல்லியபடியும், நிகழ் உறு பாதகத்தின் தண்டத்தை நிறுத்த ஆறும்-எவரிடத்தும் நிகழ்தலையுடைய (மற்றைய) பாதகங்களினது பிராயச்சித்தத்தை யளவுசெய் துரைத்தபடியும், எந்தை மூன்று புரங்களும் நக்கு எரித்த ஆறும்-எமதுதந்தையாராகிய சிவபிரான் திரிபுரங்களையுந் திருப்புன்முறுவல் கொண்டு எரித்தழித்தருளியபடியும், மகிழ் செய்யும் சிவபூசை மான்மியம் உரைத்த ஆறும்-உவகையைக் கொடுக்கின்ற சிவபூசையின் மகிமையைச் சொல்லிய படியும்.

ஆன்மாக்களாற் செய்யப்படும் பாதகங்கள் எல்லாம் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூவகைப்படும். அவற்றுள் தூலபாதகம் மானசிகம், வாசிகம், காயிகம் என மூவகைப்பட்டு, அவையொவ்வொன்றும் நந்நான்காம். பிறன்மனையாளை யிச்சித்தல், பிறர்பொருட்குக் கேடெண்ணுதல், பொருளையிச்சித்தல், உயிர்க்குத் தீங்குநினைத்தல் என்ற நான்கும் மானசிகமாம். பிறரேங்கும்படி யழுதல், கோள்சொல்லல், பொய்கூறல், புறஞ்சொல்லல் இவைநான்கும் வாசிகங்களாம். பரதாரபோகம், உயிரைக்கொல்லுதல், புலாலுண்ணல், அழுக்காறுகொள்ளுதல் இவைநான்குங் காயிகங்களாம். இவைகளும் ஒவ்வொன்று பலபல வகையாக விரியுமாயினும் அவையெல்லாம் அதிபாதகம், மாபாதகம், உபபாதகம் என்னு மூத்திறத்துள்ளும் அடங்கும். ஆகவே, "மாபாதகத்தின்றண்டம்" என்று மாபாதகத்தின் பிராயச் சித்தமும், "நிகழுறுபாதகத்தின்றண்டம்" என்று அதிபாதக உபபாதகங்களின் றண்டங்களுங் கூறப்பட்டன. மாபாதகம் இவையென்பதனை "ஐந்தெனப் படுமா பாதக மவைதா மருமறை யாய்ந்தவந் தணனைச்—சிந்துற வடர்த்த றேறல்வாய் மடுத்தல் செம்பொனைக் கரந்தனர் வெளவல்-கொந்தெழிற் குரவர் மனைவியைக் கலத்தல் கோடிமிவ் வினைஞரைக் கூட - விந்தவல் வினையின் மருங்கியல் வினையு மிவற்றினு ளடங்குவ மாதோ." என்று தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலத்திற் கூறுதல்காண்க. மற்றைய அதிபாதகம், உபபாதகம் இவற்றின் விரிவுகளை யெல்லாம் ௬௪ படலத்தும், சிவதருமோத்

தரத்தும் காண்க. எந்தந்தை - எந்தை எனமருஉவிற்று. "விளம்பிய பகுதிவே றாதலும் விதியே,, என்றவிதிப்படி நகுஎன்னும் பகுதி யிரட்டி நக்கு என நின்று வினையெச்சப் பொருள்பயந்தது. திரிபுரங்கள் இன்னதென்பதும், அவற்றை யெரித்ததன் உண்மை யிது வென்பதும் தெய்வப் புலமைத் திருமூலநாயனார் திருவாய்மலர்ந்தருளிய "அப்பணி செஞ் சடை யாதி புராதனன் - முப்புர மெய்தன னென்பர்கள் மூடர்கள் - முப்புர மாவது மும்மல காரிய - மப்புர மெய்தமை யாரறி வாரே.,, என்னுந் திருமந்திரச் செய்யுளா னறிக. (உஅ)

கறைமிடற் றெந்தை நாமங் கருதல னாகி வாளா
வறைதரு புளிஞன் பெற்ற பேற்றினை யறைந்த வாறு
மிறைவனோர் பால னுண்ணப் பாற்கட லீந்த வாறு
முறுசலந் தரனை வெய்ய நேமியா லொறுத்த வாறும்.

(இ-ள்.) கறை மிடறு எந்தை நாமம் கருதலன் ஆகி - நஞ்சார்ந்த திருக்கண்டத்தை யுடைய சிவபிரானது திருநாமம் என்று அறியாதவனாகி, வாளா அறைதரு புளிஞன்-அன் பின்றிச் சொன்ன ஓர்வேடன், பெற்ற பேறினை அறைந்த ஆறும்-அடைந்த செல்வத்தைச் சொற்றபடியும், ஓர் பாலன் உண்ண-ஒருகுழந்தையானது உண்ணும்படி, இறைவன் பாற் கடல் ஈந்த ஆறும்-தலைவராகிய சிவபெருமான் திருப்பாற்கடலை அழைத்துக் கொடுத்தரு ளியபடியும், உறு சலந்தரனை வெய்ய நேமியால் ஒறுத்த ஆறும் - (தம்முடன் போர்செய் தற்கு) வந்த சலந்தராசுரனை வெப்பமுள்ள சக்கராயுதத்தாற் கொன்றருளிய படியும்.

அறைதரு-இதில் தா துணைவினை. ரகர உகரம் விரித்தல். புளிஞன் என்பதில்,ஞ்-பெய ரிடைநிலை. இவ்விடத்துக் கூறப்பட்ட கோதாவரிக்கரையிற் பிறந்த வேடனே சிவநாமோச் சாரணபலத்தினாற் பாண்டியகுலத்தில் இந்திரத்துய்ம்மன் புதல்வனாகப்பிறந்து, சுத்துய்ம் மன் என்னும் பெயரோடு உலகத்தைப் பொதுவறப் புரந்தான் என்க. நாமத்தை அறைந்த தாவது - தன்றோழர்களோ டொருதினத்து "அரகரப் பிறகர,, வென்று கோபித்துச் சொன்ன மொழியாம். ஓர்பாலன் என்றது, வியாக்கிரபாத முனிவரது குமாரராகிய உப மன்னியு முனிவரை. "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்த பிரான்,, என்றார் திருப்பல்லாண்டினும். சலந்தரன்-சலம்-கோபம், தரன் - தரித்தவன், எனவே உருத்திரமூர்த்தியின் கோபத்தாற் பிறந்தவன். சலத்திற் பிறந்தவன் என்றும்பொருள். இதனைக் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலத்திற் காண்க. வெய்ய நேமி யென்றது, சிவபிரான் றமது திருவடிவிரலா னெழுதிய சக்கரத்தினையாம். (உகூ)

கண்மலர் பறித்துச் சாத்திக் கமழ்நறுந் துளவப் புத்தேள்
பெண்ணொரு பாகற் போற்றித் திகிரிமுன் பெற்ற வாறும்
வண்ணவிற் சுவேத னீசன் மலரடிக் கன்பு பூண்டு
நண்ணிய மறலி சீர்த்தி நாமற வென்ற வாறும்.

(இ-ள்.) முன்-முற்காலத்து, கமழ் நறு துளவம் புத்தேள்-மணக்கின்ற நறியவாசனை யைக் கொண்ட துழாய் மாலையை யுடைய விட்டுணுமூர்த்தி, கண் மலர் பறித்து சாத்தி-தமது கண்ணொன்றனை மலராகப் பிடுங்கி யணிந்து, பெண் ஒரு பாகன் போற்றி - உமா தேவியாரை யொருபாகமாக வுடைய பெருமானைத் துதித்துப் பூசித்து, திகிரி பெற்ற ஆறும்-சுதரிசனம் என்னுஞ் சக்கராயுதத்தைப் பெற்ற படியும், வண்ணம் வில் சுவேதன்-அழகிய வில்லினையுடைய சுவேதன் என்னும் அரசன், ஈசன் மலர் அடிக்கு அன்பு பூண்டு-சிவபெருமானது தாமரை மலர்போன்ற திருப்பாதங்களில் அன்புவைத்து, நண்ணிய மறலி

சீர்த்தி நாம் அற வென்ற ஆறும் - (உயிர்கொள்ளுதற்காக) வந்த யமனை அவனதுபுகழும் பயமும் இல்லாமற் போக வெற்றி கொண்ட படியும்.

கண்மலர் - கண்ணாகிய மலர் எனவுமாம். சலந்தரற் றடிந்த சக்கராயுதத்தையே கண் மலர் சாத்திப் பெற்றான் என்க. அந்தணாளருட் சிலாதமுனி புத்திரராய திருநந்தி தேவரும் மிருகண்டே விருடிகுமாரராய மார்க்கண்டேய முனிவரும் அரசருள், சுவேதராசனுங் கூற்றினைவென்றனர் என்க. மலர் அடி என்பதற்குப் பரந்த அடி என வினைத்தொகை யாக்கிப் பொருளுரைக்கினுமாம். புகழ்—யமனது புகழ். பயம் - அவனால்வரும் அச்சம். மறலி - கொலைத்தொழிலுடையவன். நாமம் அற எனக் கொண்டு சீர்த்தியின் பெயருமில்லாமற் போக என்றுரைத்தலு மொன்று. (ரு0)

உலகினிற் கடவுட் டீர்த்தம் யாவையு முரைத்த வாறு
மிலவிதழ் மாயை பொம்ம லிளமுலை வனப்பு நோக்கி
நிலவுநாற் றன்ன பித்தை நெடுந்தவர் மருள வையன்
பலியிரந் தன்னோர் மாதர் நாண்பலி கொண்ட வாறும்.

(இ-ள்.) உலகின் கடவுள் தீர்த்தம் யாவையும் உரைத்த ஆறும் - பூமிக்கண் உள்ள தெய்வத்தன்மை வாய்ந்த தீர்த்தங்களெவற்றையுஞ் சொல்லியபடியும், நிலவு நாற்ற அன்ன பித்தை நெடு தவர் - சந்திரிகைத் தொகுதியை நூல்போல நாற்றாற் போன்ற மயிரையுடைய மிக்க தவத்தினராகிய (தாருகவனத்து) இருடிகள், இலவு இதழ் மாயை - இலவமலரை யொத்த அதரத்தினையுடைய திருமாலாகிய மோகினியினது, பொம்மல் இளமுலை வனப்பு நோக்கி மருள - பொலிவாகிய இளமை பொருந்திய கொங்கைகளையும் மேனியின் அழகினையுங் குறிப்பாகப் பார்த்து மயக்கமடையவும், ஐயன் பலி இரந்து - சிவபிரானும் ஐய மேற்று, அன்னோர் மாதர் நாண் பலி கொண்ட ஆறும் - அவ் முனிவர்களின் தேவிமார்களது நாணத்தையே பிச்சையாகக் கொண்ட படியும்.

நாற்ற அன்ன - அகரந் தொகுத்தல். பித்தை - ஆண்மயிர். வெண்ணிறமுள்ள வுரோமங்களுஞ் சடையும் நீண்டிலங்கப் பெற்றமையால் "நிலவுநாற் றன்ன பித்தை,, என்றான். நாற்றல் - நெரித்துருட்டல். "இழைநெக்கி நூனெருடு மேழை யறிவேனோ - குழைநெக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து,, என்ப தேவர் ஆகலின். வெண்மையாகிய இலவம்பூ இதழுக்கு வாசனையால் ஒத்த தென்க. இங்ஙனமே ஆம்பன் மலரையுங் கூறுப. சிலப்பதிகாரம் "ஆம்பனாறுந் தேம்பொதி நறுவிரைத் - தாமரைச் செவ்வாய்,, எனறதனானறிக. முலை வனப்பு என்பவற்றை ஏழாவத னுருபும் பயனு முடன்றொக்க தொகையாக்கொண்டு, முலையின்கணுள்ள வனப்பு எனினுமாம். வனப்பாவது - வீற்றுத் தெய்வங் குடிகொளப் பெறுதல் என்பர் நச்சினார்க்கினியர். "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே.,, எனச் சிந்தாமணியிற் கூறப்பட்டது மிஃதே. மாதர் - காதல் - அது ஆகுபெயராய் அதனையுடைய மகளிரை யுணர்த்திற்று. "மாதர் காதல,, என்னுஞ் சூத்திரத்தானறிக. மகளிர்க்கு எல்லாவற்றினுஞ்சிறந்த உயிரினுஞ் சிறந்தது நாணமாம். அதனினுஞ் சிறந்தது கற்புடைமையாமாக இவையிரண்டனையும் பதிவிரதத்திற் கியாமே யென்றவிம் மகளிருமழியப் பெற்றார் என்றபடி. நாணுங் கற்புஞ் சிறந்த வென்பது "உயிரினு நாணுடைமை சிறந்தன்று நாணினுங் - கற்புச் சிறந்தன்று.,, எனப் பழமொழியினும், "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ் - செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத் - தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு,, எனத் தொல்காப்பியத்து முரைத்தமை காண்க. இறைவன் பிச்சாடன மூர்த்தியாய் இரந்ததன் உண்மையை, "பரந்துல கேழும் படைத்த பிரானை - யிரந்துணி யென்பர்களெற்றுக் கிரக்கு - நிரந்தர மாக நினையு மடியா - ரிரந்துண்டு தன்கழ லெட்டச் செய்தானே,, என்று திருமூலதேவர் கூறியருளினர்.

(ருக)

முனிவரர்க் கையன் வேத மொழிந்திட வுமையாங் கெய்தி
யினிதருள் புரிந்த வாறு மெழினரு மதையின் சீர்த்தி
வினைகெட வுரைத்த வாறு மெய்யுணர் நந்திக் கீசன்
றனதுபே ருருவும் யார்க்குந் தலைமையு மளித்த வாறும்.

(இ-ள்.) ஐயன் முனிவரர்க்கு வேதம் மொழிந்திட-சிவபிரான் தாருகவனத்தின்கணுள்ள முனிசிரேட்டர்களுக்கு வேதப்பொருளை யுபதேசித்தருள, உமை ஆங்கு எய்தி இனிது அருள் புரிந்த ஆறும் - உமையம்மையாரும் அவ்விடத்திற் கெழுந்தருளி (அவர்க்கும், பத்தினிமார்க்கும்) நன்காகத் திருவருளைச் செய்தபடியும், வினைகெட எழில் நருமதையின் சீர்த்தி உரைத்த ஆறும் - கேட்கின்றார்க்கு இருவினைகளும் நீங்கும்படி அழகிய நருமதை யாற்றின் சிறப்பினை யுரைத்த படியும், ஈசன் மெய் உணர் நந்திக்கு-சிவபிரான் உண்மைப் பொருளை யறிந்த திருநந்தி தேவருக்கு, தனது பெரு உருவும் - தமது பெருமை பொருந்திய வடிவத்தையும், யார்க்கும் தலைமையும் அளித்த ஆறும்-எவர்களுக்கும் முதன்மையா யிருக்குந் தன்மையினையுங் கொடுத்தவற்றைச் சொற்ற படியும்.

“முனிவரர் தெருள வையன் முதுமறை யுரைத்த வாறும் - பனிவரை யணங்காங் கெய்தி யவர்க்கருள் பயந்த வாறும் - வினையறு சிலாதன் மைந்தன் மெய்த்தவ நோக்கி யெந்தை-தனதுபே ருருவும் யார்க்குந் தலைமையு மளித்த வாறும்.” எனவும் பாடபேதமுண்டு. அது ஆசிரியனாற் செய்யப்பட்டதன்றென்க. என்னை? நருமதையின் சிறப்புரைத்த அத்தியாயத்தைப் பற்றிச் சொல்லாமையானும், ஒரே அத்தியாயத்தை இரு அத்தியாயமாகப் பிரித்தமையானும் அன்றென்க. முனிவர் - அகப்பற்று, புறப்பற்றுக்களை வெறுத்துவிட்டவர், இறைவனை மனனஞ் செய்பவர். வரர்-மேலானவர். ஆரியன் என்னும் வடமொழி ஆர்யன் எனநின்று, பின்னர் ஐயன் என மரூஉவிய தென்ப. ஐயன் - வணங்கப்படத் தக்கவன், பூசிக்கப்படத் தக்கவன், எல்லா அழகுகளையும் உடையவன். வேதம்-அறிவை விளக்குவது, அறிதற்குக் கருவியாயுள்ளது என்று பொருள்.

கடவுளில்லையென்றுங் கன்மமே முதலென்றுங் கொண்ட மீமாஞ்சியராய அம்முனிவர்க்குப் பலபொருள்பட நிற்கும் வேதத்தை யுபதேசிப்பினும் அவைபின்னரும் மயக்கித் தெளிவு வாராமற் செய்யு மாகலான், சித்தாந்தமும் வேண்டிற் றென்க. சிவபிரான் தக்கிணா மூர்த்தியாகி “கல்லாலின் புடையிருந்து நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி-வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலா-யெல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் - சொல்லாமற் சொன்ன” வேதப்பொருளை நேராயுணர்ந்த சனகாதி முனிவர்களும் அதனால் தெளிவு வாராது சித்தாந்தப் பொருளைத் தெளிந்ததனால் ஞான கைவல்லிய முற்றனர் என்று கந்தபுராணங் கழறுதல் காண்க. உமை-உமா என்பது “ஆவீறையும்” என்றதனால் திரிந்து நின்றது. உ=வேண்டாம், அமா= அம்மா, “அம்மையே! தவஞ்செய்ய வேண்டாம்” என்று மலையரையன் றடுத்தமையால் வந்தபெயர். அதனை “அன்னைகே ளெம்பி னீங்கி யருந்தவ மாற்றற் கொத்த - தின்னதோர் பருவமன்று லியாண்டுமோ ரைந்தே சென்ற-நின்னுடல் பொறுதா லீண்டிந் நிலைமையைத் தவிர்தி யென்னக்-கன்னிகை நகைத்துக் கேண்மோ விஃதெனக் கழற லுற்றாள்.” என்பதனா னறிக. சிவபிரானால் “ஒல்லை யித்தவம் விடுவதே கடனினி யுமைக்கென்றான்” என்று தடுக்கப்பட்டமையால் வந்த தென்பாரும், உ-ம்-அ—எனக்கொண்டு அகர உகர மகாரம் என்னும் வியட்டிப் பிரணவமாயும், சமட்டிப் பிரணவமாயு முள்ளவள் ஆகலின் வந்த தென்பாருமுளர். அங்கு என்னுமிடப்பொருள் உணர்த்து மிடைச்சொல் ஆங்கு என நீண்டு நின்றது. அது “இளந்தவல்ல” என்னும் இடைச்சொற் புறனடைச் சூத்திரத்தானமையும். இருவினையுங் கெட என்றது, பந்த முறுத்துதற்கண் இருப்பு விலங்கும் பொன் விலங்கும்

போல இருவினையு நீற்றலின் என்க. ஈண்டு நல்வினை சரியையாதி மார்க்கமன்று; வேள்வி முதலியனவாம். மெய்யுணர்வாவது-பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களா னன்றி உண்மையா னுணர்தல் என்பர் ஆசிரியர் பரிமேலழகரும். தனது பேருருவ மாவது சிவசாருப்பியத்தை. தலைமை-கணங்க ளெல்லாவற்றுக்கும் முதன்மையாந் தன்மை. அன்றி வேதாகம முதலிய வித்தைகளை உபதேசிக்குங் குரவத் தலைமையுமாம். ()

நால்வகை யொடுக்கத் துள்ள பகுதிக ணவின்ற வாறும்
பால்புரை நீற்று மேனிப் படர்சடைப் பவளக் குன்றை
மாலயன் முதலோ ரேத்துங் கருணைவா ரிதியைப் போற்றுஞ்
சீலமு முலகில் யாருந் தெருளுற வுரைக்க லுற்றும்.

(இ-ள்.) நால்வகை ஒடுக்கத்து உள்ள பகுதிகள் நவின்ற ஆறும்-நான்குவகைப்பட்ட உலகவொடுக்கங்க ளுள்ள பிரிவுகளையெல்லாஞ் சொல்லிய படியும், பால் புரை நீறு மேனி-பால் போன்ற வெள்ளிய விபூதியை யணிந்த திருமேனியையும், படர் சடை பவளக் குன்று ஆம்-பரந்த சடாமுடியையுமுடைய பவளமலையாகிய, மால் அயன் முதலோர் ஏத்தும் கருணை வாரிதியை-திருமால் பிரமனாதிய தேவர்களால் துதிக்கப் படுகின்ற அருட்கடல் ஆகிய சிவபெருமானையே, போற்றும் சீலமும்-பரம்பொருளென்று கொண்டு பேணும் முறைமை களையும், உலகில் யாரும் தெளிவுற உரைக்கல் உற்றும் – உலகின் கணுள்ளா ரெவருந் தெளிவாயறிந்து கொள்ளச் சொல்வான் றொடங்குவாம்-என்க.

நால்வகை யொடுக்கமாவன:—நித்தியப்பிரளயம், நைமித்திகப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், ஆத்தியந்தப்பிரளயம் என்பனவாம். "நீறணி பவளக் குன்றமே,, என்றது அருட்பா. பெருமானார் விபூதியைத் தந்திருமேனியிற் றரித்தமை யழிதலில்லாத கடவுள் தாமே என்பதையும், தம்மைப்போல் ஆன்மாக்கள் யாவருந் தரித்து முத்திப்பேற்றை யடையவேண்டும் என்பதையும் விளக்கற் கென்க. விபூதிதரிக்கின் மோக்கப் பேறுறும் என்பதைப் பின்வருமாற்றானறிக. பாரதம் சாந்திபருவம். "ஆயுஷ்காமோதவராஜக் பூதிகாமோதவாநர:, நித்யம்வைதாரயேத் பஸ்ம மோக்ஷ காமீசவைத்விஜ:. ஆயுள் விருத்தி, ஐசுவரியம், மோக்ஷம் என்னு மூன்றனையும் இச்சிக்கிறவன் நாடோறும் விபூதியை அணிய வேண்டும். ,, எனவும், சங்கரசங்கிதை "பூதிரோ வௌஷதம் பும்ஸாம் முக்திஸ்திரீ வச்ய கர்மணி. புருடர்களுக்கு முத்தியென்னும் பெண்ணை வசியப்படுத்தற்கு விபூதி யொன்றே பரம ஔடதம் எனவும், மனுஸ்மிருதி "த்ரிபுண்டர தாரணக்ருத்வா ஸந்தியாவந்தன மாசரேத்-த்ரிபுண்டரம் பரமம் புண்ணியம் ப்ரம்ம விஷ்ணு சிவாத்மகம். விபூதியை முக்குறி வடிவாகத் தரித்துக்கொண்டே சந்தியா வந்தனஞ்செய்க. மூன்றுகுறியாகத் தரித்த விபூதி, பிரம விஷ்ணு ருத்திரர் என்னும் மும்மூர்த்தி ரூபமாகலின் அதனாற் பரமபுண்ணியஞ் சித்திக்கும்,, எனவுங் கூறப்பட்டுள்ளன. சிகை ஞானமென்னும் அறிகுறிக் குரித்தென்று பந்தாந்திநுமுறை பகர்வதால், இறைவன் சிகை கொண்டமை ஞானமயமாயிருப்பவன் தானேயென்பதை அறிவித்த குறி யென்க. குன்று, வாரிதி என்பன ஆகுபெயர்கள். சீலமும் என்றதன் உம்மை எச்சப் பொருட்டு. வாரிதியை-என்றதன்கண் தேற்றப் பொருளில்வந்த ஏகாரந் தொக்கது. உரைக்கலுற்றும்-உளப்பாட்டுத் தன்மை வினைமுற்று. தெருளுற வென்பதற்குக் கடவுளும், மறுபிறப்பும், புண்ணிய பாவமும், இன்ப துன்பமும் உளவோ இலவோ வெனத் துணிவு பிறவாது நிற்றன் முதலிய சந்தேக விபரீத மயக்கங்களை நீக்கி, நல்லறிவினால் முற்கூறியவற்றோடு அறிவு வீடு என்பவற்றையும், அவற்றின் காரணங்களையும், காட்சியுங் கருத்துங் காட்டித் துணிவு பெற்றுத் தெளிவு கொண் டொழுகச் செய்தல் எனவுங் கொள்ளப்படும். (௩௩).

பதிகம்-முற்றிற்று.

காப்பு முதற் பதிகமீறாகவுள்ள திருவிருத்தம்-௪௪.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பூருவகாண்டம்.

முதலாவது

இந்திரத்துய்ம்மன் முத்திபெற்ற அத்தியாயம்.

அஃதாவது இந்திரத்துய்ம்மன் என்னும் அரசன் (இப்புராணத்தை யன்புடன்கேட்டமையால்) சிவசாயுச்சிய மென்னும் வீடுபேற்றை யடைந்த சரிதத்தைக் கூறும்பாகமாம். ஒருநூல் சொல்ல முன்னர் அதனுல் வரும்பயனை முற்படக் கிளத்தன் முறையா மாகலின், இது முற் கூறப்பட்டது. அந்தமிலின்பத் தழிவில் வீட்டை யடைந்தமை கூறவே, அதன் காரணவகையவாய அறம், பொருள், இன்பங்களும் பெறப்படும். என்னை? காரணமின்றிக் காரியம் அமையாதென்ப வாகலின். ஆகவே "அறம்பொரு ளின்பம் வீடடைத னூற்பயனே,, என்றபடி நூற்பயன் விளங்குமாறறிக. முக்தி என்னும் வடசொல் முத்தி எனத் திரிந்து நின்றது. அத்தியாயம்-நூற்கூறுபாடு. பொருத்த முகத்தானே கூட்டம் எனப் பொருள்படும் காண்டம் என்பது, நூலின் பெரும்பாகத்தையும், அத்தியாயம் என்பது அப் பெரும்பாகத்துட்பட்ட சிறிய பாகத்தையும் உணர்த்து மென்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவீற் றிருக்கு மணிமார்புந் திண்டோ ணான்கு முகையவிழ்ந்து
மருவீற் றிருக்குந் துழாய்முடியும் வயங்குங் கதிர்கா லைம்படையு
மருளூற் றிருக்குந் தடங்கமலக் கண்ணு மாகி மோட்டாமை
யுருவேற் றிருந்தோற் போற்றியவ னுரைத்த காதை யுரைசெய்வாம்.

(இ-ள்.) திரு வீற்றிருக்கும் மணி மார்பும்-சீதேவி வாழ்ந்திருக்கின்ற கௌத்துவ ரத்தினம் விளங்கும் மார்பினையும், திண் நான்கு தோளும்-வலிய நான்கு புயங்களையும்,முகை அவிழ்ந்து மரு ஈன்று இருக்கும் துழாய் முடியும் - அரும்பின் கட்டவிழப்பெற்று வாசனையை வெளிப்படுத்தாநிற்குந் துழாய் மலராலாகிய மாலையையணிந்த மகுடத்தையும், வயங்கும் கதிர் கால் ஐம் படையும்-விளங்குகின்ற ஒளியைக் கக்குகின்ற ஐந்து ஆயுதங்களையும், அருள் ஊற்று இருக்கும் தடம் கமலம் கண்ணும் ஆகி-அருளாகிய தேன்சுரப்புள்ள பெருமைவாய்ந்த தாமரைமலராகிய கண்களையுங் கொண்டு, மோடு ஆமை உரு ஏற்று இருந்தோன் போற்றி - உயர்வாகிய கூர்மவடிவெடுத் திருந்த திருமாலைத் துதித்து, அவன் உரைத்த காதை உரைசெய்வாம்-அம் மூர்த்தியாற் சொல்லப்பட்ட இப்புராணத்தை (யாம்) சொல்லுவாம் என்க.

பொன், பெருமை, உயர்ச்சி, அழகு, செல்வம் என்னும் பலபொருளைக் குறிக்கும் திரு என்னு மொருசொல் "அவற்றுள், வினைவேறு படூஉம் பலபொரு ளொரு சொல் - வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்-தேறத் தோன்றும் பொருடெரி நிலையே.,, என்ற தொல்காப்பிய விதிப்படி, வீற்றிருக்கும் என்ற வினையானே சீதேவியை உணர்த்திற்று. திரு - என்பதற்குக் கண்டோரால் விரும்பப்படுந் தன்மை என்பர் பாரத்துவாசி யாசிரியரும்,திரு-என்னுஞ்சொல் ஸ்ரீஎன்னும் வடசொல்லின் மரூஉவென்ப;தனியே ஒரு தமிழ்ப் பெயருமாம். வீற்றிருத்தல்=பெருமையோடுங் குடிகொண் டிருத்தல். "வேறுபட்ட திருவின்,

வீறுபெறக்காண,, என்றதனுனறிக. "திருவுடை மன்னரைக் காணிற் திருமாலைக் கண்டேனே யென்னும்,, எனத் திருநூற்றந்தாதியினும், "திருத் துயில்பெற்ற மார்பன் திருந்துதாருழக்க,, எனக் கேமசரியா ரிலம்பகத்தினும் கூறுமாற்றுனும்,மன்னவர் மார்பினு மாதர் முலைமாரினுந் திருவிருப்பள் என்று சாமுத்திரிகாலக்கணமுஞ் சாற்ற லானும், அவர் மார்பகத்து மருவினும் பிரிதலுண்மை யானும், பொலிதலின்மையானும், மாலின் மார்பி லென்றும் பிரியாது வீற்றிருத்தல்தோன்ற "திரு வீற்றிருக்கும்,, என்று கூறினன்.

அன்றியும் புண்ணிய மேலீட்டானே வைகுண்டஞ் சார்ந்து அவனுருவமுற்று நித்திய சூரியராய் வாழ்வாரும் மாலெனக் காணலால், அவர்க்கும் இவர்க்கும் உள்ள வேறுபாடு திருமார்ப மின்மையும் உண்மையுமாம் எனக்காட்டுவான் விதந்ததூஉ மென்க. "திரு மறு மார்பன்,, என்று கூறலால், துருவாசமுனிவர் கோபித்துத் தங்காலா லுதைத்ததனுல் உண்டாகிய ஸ்ரீவற்சம் என்னும் திருமறு விளங்கும் மார்பன் எனப் பொருள் கொள்ள லீண்டுச் சிறப்பன்று. மணி காரணப்பெயர். மண்-பகுதி, இ-வினைமுதற் பொருண்மை விகுதி. அலங்காரமுடையது என்று பொருள். அது பலபொருள் ஒருசொல்லாயினும் மார்பு என்னுஞ் சார்பானே அரதனம் என்றுபொருள். ஈன்று என்பது, "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையிற் றம்மின வன்றொடராகா மன்னே,, என்ற விதிப்படி ஈற்று எனநின்றது. முடி=முடிக்கப் படுவது எனக் காரணப்பெயர். ஐம்படையாவன - சக்கரம், சங்கு, தண்டு, வில், வாள் என்பனவாம். இவற்றை முறையே சுதரிசனம், பாஞ்சசன்னியம், கௌமோதகி, சார்ங்கம், நாந்தகம் என்ப. படை=படுத்தற்குக் கருவியாவது. படுத்தல்= அழித்தல், ஐ-கருவிப்பொருள்விகுதி. தடம் என்னும் உரிச்சொல் பெருமைப் பொருள் பயத்தலை "தடவுங் கயவு நளியும் பெருமை,, என்றதனுனறிக. கமலம்-பொருளாகுபெயர் முதலுக்கும் சினைக்கும் பொதுவென்பாருமுளர். கண்ணினைக் கமல மென்றதற் கேற்ப அருளைத் தேனென்னுமையின் இது ஏகதேச வுருவகவணி. மோடு=என்பதற்குப் புடைபட்ட வயிறு என்றார் சிந்தாமணி யுரையாசிரியர்.

பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைத் தேவர்க்கீந்தும், அசுரர்க் காய்ந்தும், திருவையும் மணியையுந் தரிப்பித்து விளக்க முறுத்தியதன்றி, கூடாதவற்றையுங் கூட்டும் வலியமைந்த புயங்கள் என்பான் "திண்டோள்,, என்றும், திருமால் அரசவம்ச முடையராகலின்,அவ்விலக்கணத்திற் குரிய தார்முடிகொண்டான் என்பான் "துழாய்முடி,, என்றும், மண்டமர்க் கடந்து வெற்றி பெற்று விளங்கும் ஐம்படையாகலின் "கதிர்கால் ஐம்படை,, என்றும், தாமரை மலர்க்குத் தேன் பொழிதல் இயற்கை போல அவர்கண்களும் அருள் பொழியு மியல்பினவாகலின் "அருளூற்றிருக்குந் தடங்கமலக் கண்ணும்,, என்றுங் கூறினன். கமலக்கண் என்றதைச் சிறப்புப் பெயராக் கொண்டு சிவபத்தி முதிர்ச்சியால் வரம் பெற்று உலகு புரக்கும் வண்மையான் என்னலுமாம். அதனை இதனில் மாயவனேமி பெற்ற அத்தியாயத்தில் "வையம் பொதிந்த செங்கனிவாய் மாயோ னன்புக்குன் மகிழ்வுற்-றையன் கையாற் புறநீவி யடியிற் புனைந்த மலர்க்கண்ணு-மெய்தலல்கிச் சுதரிசன மென்னுஞ் சுடரா ழியுமீந்து-செய்ய கமலக் கண்ணனெனும் பெயருஞ் சிறப்பி னுடுமளித்தான். ,, எனவும், திருவாசகத்தில் "சலமுடைய சலந்தரன்ற னுடறழிந்த நல்லாழி-நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ - நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ-ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ,, எனவும் விளக்கியமைகாண்க. புராணஞ் செய்ய வந்த ஆசிரியன், குரவருட் சிறந்தவரும் இப்புராணத்தை முற்காலத் திற் கூர்ம ரூபமெடுத்து உபதேசித்தவரு மாகிய திருமாலைத் துதித்தான் என்க. "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சங் - கடந்தானை நூற்றுவர்பா லுற்றிசையும் போற்றத்-தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது-நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே-நாராயணு வென்னு நாவென்ன நாவே,, என்றார் பிறரும்.

(௧)

சீற்றங் காம மயக்கமற வெறிந்து ஞானப் பொருடேர்ந்து
மாற்ற வரிய புலனைந்து மடக்கு மறைதேர் முனிவரர்கள்
போற்றும் பருவ மீராறு புரியு முயர்சத் திரயாக
மாற்று நைமி சாரணியத் தருள்கூர் சூத முனியடைந்தான்.

(இ-ள்.) காமம் சீற்றம் மயக்கம் அற எறிந்து—விழைவு வெறுப்பு அவிச்சை யென்னும் இக்குற்றங்கள் மூன்றனையும் நீங்கும்படி யொறுத்து, ஞானம் பொருள் தேர்ந்து-(உண்மையறிவானே வீட்டிற்கு நிமித்த காரணமாய்) தத்துவப் பொருளை யறிந்து,மாற்ற அரிய ஐந்து புலனும் அடக்கும்-நீக்குதற்கரியனவாய ஐம்புலன்களையும் அடக்கி நிற்கும், மறை தேர் முனிவரர்கள்-வேதப்பொருளை யறிந்த இருடிகளால்,போற்றும் ஈராறு பருவம் புரியும் உயர் சத்திர யாகம்-புகழப்படுகின்ற பன்னிருவருடமளவும் ஒழியாமற் செய்யப்படுஞ் சத்திர யாகத்தை, ஆற்றும் நைமிச ஆரணியத்து-செய்யாநின்ற நைமிசவனக்கண், அருள் கூர் சூதமுனி அடைந்தான்-கிருபை சிறந்துள்ள சூதமுனிவர் சேர்ந்தார்.

சீற்றம் காமம் எனக் கொள்ளாது காமம் சீற்றம் எனக் கொண்டுரைத்தமை-தொடர்ச்சொற் புணர்த்தலென்னு முத்தி. அங்ஙனே "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற-னாமங் கெடக்கெடு நோய்,, எனத் தெய்வப்புலவருஞ் செப்புதல்காண்க. அநாதியாயுள்ள அவித்தையும்,அவ்வவித்தை வயத்தானே யானென மதிக்கும் அகங்காரமும், அதனானே எனக்கு இப்பொருள் வேண்டும் என்னும் அவாவும், அதனால் அப்பொருட்கட் செல்லும் ஆசையும், அது பெறுதவழி அதன் மறுதலைக்க ணுண்டாகுஞ் சீற்றமும் என்று குற்றம் ஐந்தாகும். இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசமென்ப.இவற்றுள் அகங்காரம் அவித்தையினும், அவா காமத்தினும் அடங்கிக் குற்ற மூன்றாக நிகழலின் "சீற்றங் காம மயக்கம்,, என்றான். அவித்தை யெனப்படும் மயக்கமே ஏனையவற்றிற்குக் காரணமாத லுடைமையின் அதனை யிறுதியினும், காமநிகழ்ந்தவழிச் சீற்றம் நிகழலாற் பின்னும் வைத்தானென்றுங் கொள்ப. இவை பிறவித் துன்பத்திற்குக் காரணமாகலானும், உண்மையை யறியவொட்டாது தடையாய் நிற்பவாகலானும், அவைகள் கெட ஞானப்பொருளை யறிதலே மாண்பாகலின் "அற வெறிந்து ஞானப்பொருடேர்ந்து,, என்றான். நித்தியமாய், மகத்தாய், தன்னையொன்றுங் கலத்த லின்மையாற் பரிசுத்தமாய் வியாபித்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி யென்று மொருபடித்தாய் விளங்கலின் "ஞானப் பொருள்,, எனப்பட்டது. ஐம்புலனுவன:—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்பனவாம். வடநூலார் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பர். அவற்றை யடக்குதலாவது, தத்தம் புலன்வழிப் போகாமே தடுத்தல். மறை=மறைந்த பொருளுடையது என்றார் நச்சினார்க்கினியர். மறை-பகுதி, இ-வினைமுதற் பொருள்விகுதி புணர்ந்து கெட்டது.சிலர்,மறு-பகுதி,ஐ-செயப்படுபொருள் விகுதியாக்கொண்டு, சூத்திரரும் நான்குவருணத்துப் பெண்களும், ஓதல் கேட்டல் கூடாதென்று மறுக்கப்பட்டது என்றும் பொருள் செய்வர். மறை என்றமையானே தைத்திரியம், தலவகாரம், பௌடிகம் சாமம் என்னு நான்கு வேதங்களும், அவற்றின் அந்தங்களாய உபநிடதங்களும், அவற்றின் றெளிவாகிய சித்தாந்தங்களுங் கொள்ளப்படும்.என்னை? "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன்,, எனச் சிவப்பிரகாசத்தும், "ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த-வாரா வின்பத் தருங்கனி பிழிந்து-சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்-தேனமு தருந்தினர் சிலரே,, எனப் பண்டாரமும்மணிக்கோவையினும் கூறியதனால் என்க. சத்திர யாகமாவது - இம்மைப் பயனையாதல் மறுமைப் பயனையாதல் வேண்டிப் பன்னிரு வருடங்காறுந் தினந்தோறும் ஒழிவின்றிச் செய்யப்படும் யாகம். நைமிசம்=நேமிசம்பந்தம். பிரமதேவரால் விடப்பட்ட சக்கரம் ஓய்ந்த காடாதலின் அதற்கு நைமிசாரணியம் எனக் காரணக்குறி. நைமிசாரணியத்திற் சூதமுனிவர் சென்றார் என்க. (௨)

வந்த முனிவன் றனைப்போற்றி வயங்கு மணியா சனமளித்துப்
புந்தி மகிழ்ந்தாங் கருக்கியமே முதல பூசை புரிந்ததற்பி
னந்த லில்லா வியாதமுனி புராண நினக்கு நவில்போதிற்
சிந்தை மகிழ்ந்து மயிர்பொடிப்ப வதன்பேர் நினக்குச் சேர்த்தினனால்.

(இ-ள்.) ஆங்கு வந்த முனிவனை போற்றி-அவ்விடத்து வந்த சூதமுனிவனை யங்குள்ள விருடிகள் யாவருந் துதித்து, மணி வயங்கும் ஆசனம் அளித்து - அழகு விளங்காநின்ற வோர்பீடமிட் டிருத்தி, புந்தி மகிழ்ந்து அருக்கியம் ஏ முதல பூசை புரிந்து-மனக்களிப் புற்று அருக்கிய முதலாய உபசாரங்களோடு பூசையினையுஞ் செய்து, அதன்பின்-பூசைசெய் ததன் பின்னர், நந்தல் இல்லாத வியாத முனி - (அடிகளே) கெடுதலில்லாத வியாசமுனி வர், நினக்கு புராணம் நவில் போழ்தில்-தேவரீருக்குப் புராணங்களின் உண்மைப்பொருள் களை யுபதேசிக்குங் காலத்தில், சிந்தை மகிழ்ந்து மயிர் பொடிப்ப - (அவற்றைக் கேட்டு) மனமகிழ்ச்சியுற்று உரோமங்கள் சிலிர்த்தமையால், அதன்பேர் நினக்கு சேர்த்தினன்- அதன்பொருள்கொண்ட நாமத்தைச் சிறப்புப் பெயராகத் தேவரீருக்குச் சூட்டினார்.

ஆல்-தன் சாரியைகள். அங்கு என்னும் இடப்பொரு ளுணர நின்ற விடைச்சொல் ஆங்கு என நீண்டது. அருக்கியமே-இதன்கண் ஏகாரம் பிரிநிலைப் பொருட்டு. பின் என் னும் இடைச்சொல் காலப்பொருளை யுணர்த்திற்று. இல்லாத என்பது ஈறுகெட்டு நின்ற பெயரெச்சம். அது வியாதன் என்னும் பெயர்கொண்டு முடிந்தது. போழ்து - பொழுது என்பதன் மரூஉ; போது எனவும் வரும். புராணம்-சாதியொருமை, பதினெண்புராணங் களையுங் குறிக்கப்படுதலின். வியாசமுனிவர் வேதங்களைப் பயிலர், வைசம்பாயனர், சயிமினி, சுமந்து என்னும் முனிவர் நால்வர்க்கும், பதினெண்புராணங்களைச் சூதமுனிவர்க்கும் உப தேசித்தார் என்க. அதனை "மயலறு பயிலரோ வைசம் பாயனர்-சயிமினி சுமந்துவாந் தவத் தர் நால்வர்க்கும்-வியனிருக் காதியாம் வேத நான்கையு-முயர்வுற தவத்தினன் முறையி னோதினன். அன்னதோர் முனிவர னதற்குப் பின்னரோ - பன்னருந் தொகையினாற் பதி னெண் பான்மையாய்-முன்னுறு புராணநூன் முழுது முற்றிய - வின்னரு ணிலைமையா லெனக்கு நல்கினன்." என்னுங் கந்தபுராணத் திருவிருத்தங்களாற் றெளிக. அருக்கியமே முதல பூசை என்றதனால் எதிர்கொண்டு செல்லுதல் தெண்டன்செய்தல் பாதசுத்தி செய் தல் தவிசளித்தல் நீராட்டல் ஆடைசாத்தல் மலர்தரிப்பித்தல் தேய்வைசாத்துதல் அமு தருத்துதல் தூபங்கொடுத்தல் தீபங்காட்டல் மந்திரமலரா னருச்சித்தன் முதலியன கொள் ளப்படும்.

கரையின்றி விளங்கிய மறையென்னுந் தரங்கக் கடலை, அறிஞர் அதன்கணுள்ள பொருள்களைப் பெற்றுய்யுமாறு நாற்றுறை செய்தும், அவைகளினும் அளவுபடாதென்று பலவகைச் சூத்திரங்களாக்கியும், புராணங்களைப் புகன்றும், வேதங்களை யெல்லாம் சிவ பெருமானது திருவருளினால் ஓதாதுணர்ந்தும் விளங்கிய அறிவினை யுடையராய்ப் புக ழுடைப்பு நீதிஇய பெரியராகலின் "நந்த லில்லா வியாதமுனி," என்றான். சூதமுனிவர் புரா ணங்களைக் கேட்டபொழுது மகிழ்வினால் மயிர்சிலிர்த் திருந்தமை கண்டவியாதர் அக் காரணத்தினால் உரோமகடனர் என்று பெயர்சூட்டினார் என்க.

நைமிசாரணியமுனிவர்கள் அங்குவந்த சூதமுனிவனை யிருத்தி, பூசைசெய்து அதன் பின் அவனைநோக்கி அடிகளே! தேவரீர் புராணங்கேட்ட பொழுதில் உரோமஞ் சிலிர்க்க அதனைக்கண்ட வியாசமுனிவர் உரோமகர்டணர் (ரோமஹர்ஷணர்)எனக் காரணப்பெயர் சூட்டினார் என்று புகழ்ந்தார். இதுகருத்து.

(௩)

கமலப் பொகுட்டு வட்டவணைக் கடவுள் வேள்வி யியற்றுதலுந்
தமரத் திரைப்பாற் கடற்றுயிலு முகுந்தன் றானே நின்னுருவா
யமர்கும் றனனற் புராணமுற்று மறைய வேண்டி யாணவமாந்
திமிரக் கடற்குப் புணைநினது மொழியென் றெவருஞ் செப்புவார்.

(இ-ள்.) கமலம் பொகுட்டு வட்டம் அணை கடவுள்-தாமரைமலரினுள் நடுவிடமாகிய வட்டமுள்ள தவிசின்மேலிருக்கும் பிரமதேவனைக் குறித்து,வேள்வி இயற்றுதலும்-(வென் என்னும் அரசனானவன்) யாகமொன்றைச் செய்குதலும், நல் புராணம் முற்றும் அறைய வேண்டி-நன்மையைத் தருகின்ற புராணங்கள் பதினெட்டனையும் உபதேசிக்க விரும்பி, தமரம் திரை பால்கடல் துயிலும் முகுந்தன் ஏ-ஒலிக்கின்ற அலைகளையுடைய திருப்பாற் சமுத்திரத்தினிடத்து யோக நித்திரை செய்கின்ற திருமாலே, நின் உரு ஆய் அமர் உற்றனன் - தம்வடிவினைக் கொண்டு தோன்றி உபதேசித்தனர் ஆகலின், எவரும் நினது மொழி-உண்மையறிந்தார் யாவரும் நமது வாய்மைச்சொல்லே, ஆணவம் ஆம் திமிரம் கடல் கு புணை என்று செப்புவார்-மூலமலமாகிய இருள் செறிந்த சமுத்திரத்தை நீந்துதற்குத் தெப்பமாகும் என்று சொல்கின்றார்கள்.

வென் என்பவனது யாகசாலையிற் புராணங்களையெல்லாம் உபதேசிக்குமாறு திருமாலும் தேவரீரது வடிவினையே கொண்டு தோன்றி யுபதேசித்தனர் எனின்,நும்பெருமை யளவின்பாலதோ? ஆகலின் உலகர் யாவரும், ஆணவ விருட்கடலைக் கடப்பித்து முத்திக் கரைசேர்ப்பிக்குந் தெப்பமாயுள்ளது நுஞ்சொல்லே என்பர்.

வினைமுதல் வருவிக்கப்பட்டது. பொகுட்டு - தாமரைப் பூங்கொட்டை பிரமன் விட்டுணுவின் உந்திக்கமலப் பொகுட்டி னுறைதல் நோக்கி "கமலப் பொகுட்டு வட்டவணைக் கடவுள்,,என்றான். இயற்றுதலும்—இதன்கண்பிறவினைவிகுதி தொக்கு நின்றது,ஏதுகருத்தாப் பொருட்பயத்தலின். "வினைக் காலமு மயங்குதல் வரையார்,, என வினைப்பெயரோடு மூன்றுகாலமும் மயக்குதலை நீக்காது கொள்க வென்று ஒல்காப் பெரும்புகழ்த் **தொல்காப்பியனார்** விதித்தலின், மூன்றுவகைப்பட்ட நிலைமையினையுடைய காலத்தும் உளதாம் இயல்பையுடைய "செப்புகின்றார்,, என்பது செப்புவார் என எதிர்காலத்தொடு மயங்கக் கூறினான். வேள்விசெய்தது—அங்கன் என்னும் அரசகுமாரனாகிய வென் என்பவன் புத்திரப்பேற்றி னிமித்தஞ் செய்தான் என்க. அவ் யாகசாலையில் திருமாலானவர் சூதமுனிவரது வடிவுற்று வந்து புராணம் போதித்தனர். அதனை, இந்நூலில் **தக்கனைச்சபித்த அந்தியாயத்தில்**, "அன்னோன் வேள்விச் சாலை தன்னிற் காதை நவில்வா னழனேமி-முன்னோன் சூத முனியாகப் போந்தா னென்பர் முதுக்குறைந்தோர்,,என்றதனாற் றெளிக. யாகமுடிவிற் பிருது என்னும் புத்திரன் அவன்கையினின்றுந் தோன்றினன். அவனே பூமியைப் பசுவாக்கி, இந்திரன் சந்திரனாதியனைக் கன்றாக்கி யதன்பால் கொண்டு வளங்களையெல்லாம் விருத்திபண்ணி, தன்பெயரானே பூமியைப் பிருதிவியென்று வழங்கும்படியுஞ் செய்தான் என்க. "அதனை ஷை **அந்தியாயத்தில்** "அரசு விழுங்கி வாய்காய்ந்த வயில்வே லுழவன் வென்னென்போன்-கரைகொன் றிரங்கு கடல்வலய முழுது மகவான் கன்றாக-வுரியபொருள்க ளனைத்தினையும் பாலாய்க் கறந்தின் னுயிர்புரந்த-பிருது வென்னு மணிமௌலிப் பெரியோன் றன்னைப் பெற்றனனால். ,, என்றதனு லறிக. அதன் விரிவு களையெல்லாம் **விண்டுபுராணம்** முதலாம் அம்சத்திற் பதின்மூன்றாம் அத்தியாயத்திற் காண்க. சூதர் என்னும்பெயர் இம்முனிவருக்கன்றித் துதிசொல்வோர்க்கும்,தேர்ப்பாகர்க்கும் வழங்கப்படும். அவருள், வேள்வியிற் செய்யப்படுஞ் சுத்திமை என்னுஞ் சடங்கின் காலத்திற் பிறந்து, அரசர் முன்னிலையி னின்று, அவரா லளிக்கப்படுங் கவசமுதலியன பெற்று, அவர்க்கு வீரமும் வெற்றியும் விருத்தியாக முதுமொழி கொண்டு புகழ்வோரே துதிசொல்வோர் என்க. சூதர் மாகதர் என்றுங் கூறுப.

புராணம்=பழமை. பழைய வரலாற்றின் மேனிற்றலாற் பண்பாகுபெயரும், அவ்வரலாறு தன்னை யறிவித்தற்குக் காரணமாய நூல்மேனிற்றலாற் காரியவாகு பெயருமாகலின் இருமடியாகுபெயர். முகுந்தன்=பந்தனை மோசிப்பவன். அன்றி, இகபர வின்பங்களைத் தருபவன் என்றுங் கொள்வாரு முளர். அமர்கு-இதிற் கு-சாரியை. ஆணவம் என்பதற்கு, ஆன்மாவினை யணுரூப முடைத்தென்று கொள்ளும் பாஞ்சராத்திரர் அணுசம்பந்த முள்ளது எனப் பொருளுரைப்பர். ஆணவமலம் எனினும், மூலமலம் எனினும் ஒக்கும். அது ஏகமாய், சேதனமாய், அநந்த சாமர்த்திய முடைத்தாய், செம்பினிற் களிம்பு போல ஆன்மாவோடு அநாதியே உடன்கலந்து நிற்பதாய், அதோந்நியாமிகா சத்தியினும் போத்திருத்துவம் (அநுபவத்துவம்) என்னும் போக்கியாசத்தியைப் பண்ணி, ஆவாரகசத்தியினாலே அதனறிவுந் தொழிலுமாகிய சிவத்துவத்தை மறைத்து, அஞ்ஞான விருளாய் நின்று பிறவியினுழச் செய்தலின் "ஆணவமாந் திமிரக்கடல்,, என்று கூறியதாம். அதனை "ஒன்றதா யநேகசத்தி யுடையதா யுடனு யாதி-யன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலை யார்த்து - நின்றுபோத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களி பேய்க் தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மிசைந்து நின்றே" எனச் **சிவஞானசித்தியாரினும்**, "கன்னிய பாசத்தி னுள்ளன லாணவம்-பண்ணிய மாயையி லூட்டற் பரிக்தனன்" எனத் **திருமந்திரத்தும்** அருளப்பட்டமையா னறிக. அக்கடலை நீந்துதற்கு மெய்ம்மைச் சொல்லாகிய புணை வேண்டு மென்பான் "புணையினது மொழியென்பார்" என்றுரைத்தான். சூதமுனிவர் சிவஞான சாதனமாய புராணங்களி னுண்மைப்பொருளை யறிந்துரைக்குந் தன்மையராகலின் அவர்மொழி புணையெனப்பட்டது. புராணப்பொருள் ஞானசாதன மென்பதனை "அஞ்செழுத்தே யாகமமு மண்ணை லருமறையு - மஞ்செழுத்தே யாதி புராண மனைத்தும்" என **உண்மைவிளக்கத்தினும்**, "சன்மார்க்கஞ் சகலகலை புராணவேத சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து" எனவும், "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண நல்ல வாகமஞ் சொல்ல வல்லவா மென்னு - மூனத்தா ரென்கடவார்" எனவும், "சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்து சென்றாற் சைவத் திறத்தடைவர்." எனச் **சிவப்பிரகாசத்தும்**," இன்னமோர் மறையுள திதுவுங் கேண்மதி...என்பெய ரதற்கெனி லினிது தேர்ந்துளோர்-துன்பம தகற்றிடுந் தொல்புராணமாம், எனக் **கந்தபுராணத்தும்** பிறவற்றினுங் கூறப்பட் டவற்றானறிக. ௨)

கேட்டோர் மம்மர்க் கிழங்ககழுங் கூர்ம புராணங் கிளத்துகென
மோட்டா மையினல் லுருவெடுத்த முதல்வ னுலக முழுதளந்த
தாட்டா மரைத்தா ளினிதேத்தி வியாதன் பாதந் தலைக்கொண்டு
வேட்டோ ருள்ளங் கனிந்துருக வதனை விரித்து விளம்புவான்.

(இ-ள்.) கேட்டார் மம்மர் கிழங்கு அகழும்-(ஆகலால் முனிவரோ!) கேட்டவர்களது மயக்கமாகிய வேரினை யறுக்கவல்ல, கூர்மபுராணம் கிளத்துக என-கூர்மபுராணப் பொருளைச் சிறியேங்களுக்கு உபதேசித்தருள்க வென்று பிரார்த்திக்க, நல் மோடு ஆமையின் உரு எடுத்த முதல்வன் - (சூதமுனிவர்) நன்மையாகிய புடைபட்ட வயிற்றினையுடைய கூர்மரூபத்தைக் கொண்ட திருமாலினது, உலகம் முழுதும் அளந்த தாள் தாமரை தாள் இனிது ஏத்தி - உலகமுழுவதையும் அளந்தடக்கிய காளத்தையுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை அன்போடுக் துதித்து, வியாதன் பாதம் தலை கொண்டு—(தமது ஆசிரியராகிய) வாதராயண முனிவரது பாதங்களையுஞ் சிரமேல் வைத்துத் தியானித்து, வேட்டார் உள்ளம் கனிந்து உருக-கேட்டலை விரும்பிய நைமிசாரணிய முனிவர்களது மனமினகி யுருகும்வண்ணம், அதனைவிரித்து விளம்புவான்—அப்புராணத்தை விரிவுபடுத்தி மொழிவாராயினர்.

கேட்டார், வேட்டார் என்பன தெரிநிலை வினையாலணையும் பெயர். அவை "ஆவோ வாகும் பெயருமா ருளவே,, என்ற விதிப்படி கேட்டோர் வேட்டோர் எனத் திரிந்துநின்றன. மம்மர் என்றது அவாவிற்குக் காரணமா யுள்ள அவிச்சையினையாம். அது பிறவிக்கு வித்தாய் நிற்றலின் கிழங்கெனப் பட்டது. சிவபுராணப் பொருளைக் கேட்கும் மெய்யன்பரது செவிப்புலத்துள் சிவபெருமான் திருவருளிரங்கி யமர்வாராகலின், இச்சிவபுராணமாகிய கூர்மபுராணத்தின் பொருளையும் மெய்யன்புடன் கேட்டொழுகுவோர் மயக்கநீங்கிச் சிவஞானமுற்று முத்தியடைவார் என்றதாம். அதனை "ஓது நாவினுங் கேட்பவர் செவிப்புலத் துள்ளுந்—தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிரங்கி - மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துறையீ-ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்,, என உபதேசகாண்டத்தும், "சீர்கெழு கூர்ம புராணமுற் றுணர்ந்தோர் சிவனடி நீழலி னுறைவா - ரோர்பதங் கற்றோர் விண்டுவி னுலகி னுறைகுவ ரோரெழுத் துணர்ந்தோர்—பூர்முழு தாண்டு நன்மக வுயிர்த்துப் பரிவொடு மினிதுவீற் றிருந்தாங்—கேர்கெழு கமலப் பொகுட்டுவீற் றிருக்கு மிறையொடு முத்திவீட் டடைவார். ,, என இந்நூற்கணுங் கூறிய வாற்றானறிக. ஒளத்துக என்னும் வியங்கோள் வினைமுற்று ஈண்டு வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் வந்தது; அகரந் தொகுத்தல். என என்னும் இடைச்சொல் வினையெச்சப் பொருட்டு. ஒன்றனைச் சொல்லுங்கால் அதனைக் கேட்டவர் ஆமென்று ஒப்புமை கொண்டுருகச் சொல்லுதலே குற்றமில்லார்க்கு இலக்கணமாகலின் சூதமுனிவரும் "வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்-மாட்சியின் மாசற்றார் கோள். ,, என்றபடி முனிவருள்ளம் இளகி யுருகி வேட்குமாறு சொல்வான் றொடங்கினர் என்க. "ஈதவியல்பே யியம்புங் காலைக் - காலமு மிடனும் வாலிதி னோக்கிச் - சிறந்தழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி,, என்றபடி நூல் சொல்வோன் றெய்வம் வாழ்த்தல் முறையாகலின் உரோமகர்ஷணரும் இப்புராணத்தை முன்னர்க்கூறிய திருமாலினையும், பின்னர்ப் புகன்ற வியாசமுனிவனையுந் துதித்தார் எனக் கொள்க. (௫)

மறுமை யிலதென் றுரைத்திடுவோர்க் குரைப்போர் தவம்வா ணெடுங்கண்ணா
ரிறுமென் மருங்குல் போற்றேயு மிகழா வுண்மை யறிவினர்கட்
கறிய வுரைப்பி னவர் செய்யுந் தவங்கண் மேன்மே லளவின்றிப்
பிறைவெண் முத்தங் கிடந்தொளிரு முலைபோ னாளும் பெருக்குமால்.

(இ-ள்.) மறுமை இலது என்று உரைத்திடுவோர்க்கு = முனிவர்களே! மறுமைப் பொருள் இல்லையென்று சொல்லுகின்ற கீழோர்க்கு, உரைப்போர் தவம் = (புராணப் பொருளை) உபதேசிக் கின்றவரது தவங்கள், வாள் நெடு கண்ணார் இறு மெல் மருங்குல் போல் தேயும்=வாளாயுதத்தைப் போன்ற நீண்ட கண்களையுடைய பெண்களது ஒடிகின்ற இடையினைப்போலத் தேய்ந்தழியும், இகழாத உண்மை அறிவினர்க்கு = (மறுமைப் பொருளை) நிந்திக்காத உண்மையறிவினை யுடையவர்களுக்கு, அறிய உரைப்பின்=தெரியும்படி உபதேசிக்கின், அவர் செய்யும் தவங்கள்=உபதேசிக்கின்றவர் செய்யுந் தவங்கள் எல்லாம், பிறை வெள் முத்தம் கிடந்து ஒளிரும் முலை போல் = பிறைச்சந்திரனையொத்த வெள்ளிய முத்துமாலை தங்கி விளங்குந் தனங்களைப் போல, நாளும்=நாடோறும், மேல் மேல் அளவு இன்றி பெருக்கும் = பின்னும் பின்னும் அளவில்லாமல் வளரா நிற்கும்.

ஆல் - அசைநிலை. அறிவினர்கள்-இதில் கள், விகுதிமேல் விகுதி. வாள் உவமை வாட்டலானும், நீண்டவடிவானும் கண்ணினை யொத்தது. மேல்மேல் என்ற அடுக்குக் காலமிகுதியை யுணர்த்திற்று. மறுமைப் பொருள் என்றது - கடவுளும், ஆன்மாவும்,

புண்ணிய பாவங்களும், சுவர்க்க நரக முத்திகளும் மறுபிறப்புமாம். இவ்வ யில்லை யென்போர் நாத்திகர் எனப்படுவர். உரைட்டோர் எனப் பன்மையாற் கூறினமையால் கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறி, அகங்காரமுடையவன், காமி, திருடன், மாறுபாடுடையவன், கோபி, மிகத்தூங்குவோன், புத்திநுட்பமில்லாதவன், தமோறுமுளத்தான், தறுகணன், பொய்யன் முதலிய தீயொழுக்கமுடையாருஞ் சேர்த்தெண்ணப்படுவார். இக்கீழோர்க்கு எவ்வித வுண்மைப் பொருளை விளங்க வுரைப்பினுங் கோழிபோலத் தம்மனம் போனவாறு புரிந்து, குரங்கு போலக் கொண்டதுவிடாக் குணமுடையராய்ச் சொல்வார்க்குங் கேடுபுரிவா ராகலின், புராணப் பொருளை யுபதேசிக்கிற் றவங் கெடும் என்றதாம். அதனை "கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங் - குப்பை கிளைபோவாக் கோழிபோன் - மிக்க, கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்-மனம்புரிந்த வாறே மிகும். சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோ - ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ-லெக்காலு, முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை - யிந்திரனு வெண்ணி விடும்." என்று பதினெண்கீழ்க்கணக்கிற் பகர்ந்ததனால் அறிக. மறுமைப் பொருளை யுண்டென்போர் ஆத்திகர் எனப்படுவர். தவத் தேய்விற்கும் பெருக்கிற்கும் இடையையூம் முலையையும் எடுத்துக் காட்டினமையின் இஃது எடுத்துக்காட்டுவமையணி. (கூ)

தோற்ற முலக மீண்டொடுங்க றுகடீர் மங்வந் தரமுனிவ
ராற்ற லரசர் மரபவர்தஞ் சரித மென்னு மோரைந்துஞ்
சாற்று புராண விலக்கணமென் றறிஞ ருரைப்பர் தவறின்றிப்
போற்று புராணம் பதினெட்டின் பெயரு முறையும் புகலுதுமால்.

(இ-ள்.) அறிஞர்=கல்வி கேள்விகளா லறிவுடையோர், உலகம் தோற்றம் = உலகவுற்பத்தி, மீண்டு ஒடுங்கல்=அவ்வுலகந் தான்றோன்றியவாறே பின்னர் ஒடுக்கப்பெறுதல், துகள் தீர் மங்வந்தரம்=குற்றநீங்கிய மநுக்களின் காலவளவு, ஆற்றல் முனிவர் அரசர் மரபு=வலிமையை யுடைய இருடிகளதும் அரசர்களதும் வமிசமுறை, அவர் தம் சரிதம்=அவ்விருவகையாரது சரித்திரங்கள், என்னும் ஓர் ஐந்தும்=என்கின்ற ஐந்துபொருள்களையுமே, சாற்று புராணம் இலக்கணம் என்று உரைப்பர் = சொல்லப்படுகின்ற புராணத்தின் இலக்கணம் என்று சொல்வார்கள், (ஆதலால்) தவறு இன்றி போற்று புராணம் பதினெட்டு=அவ்விலக்கணங்களிற் சிறிதும் வழுவுதல் இல்லாமல் யாவரானுங் கொண்டாடப் படுகின்ற புராணங்கள் பதினெட்டுள்ளன, பெயரும் முறையும் புகலுதும்=அவற்றின் பெயர்களையும் முறையினையுஞ் சொல்லுவேம்.

புராணத்தைப் போல இதிகாசமும் பழையவரலாற்றை யுணர்த்து மாகலின், இவையிரண்டற்கும் வேறுபாடென்னை யெனில்? புராணம் உலகத்தோற்றம், ஒடுக்கம், மநுவந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர்கள் சரித்திரம் என்னும் ஐந்தனையுங் கூறு மிலக்கணமுடையது. இதிகாசம் அற்றன்று. உலகம் என்றது, சிவதத்துவ முதற் சுத்தவித்தியா தத்துவ மீறாகிய சுத்தாத்துவப் பொருள்களும், காலதத்துவ முதற் பிரகிருதி தத்துவமீறாகிய சுத்தாசுத்தாத்துவப் பொருள்களும், குணதத்துவமுதற் பிருதிவி தத்துவ மீறாகிய அசுத்தாத்துவப் பொருள்களு மாகிய ஒருவன் ஒருத்தி யொன்றென்று சுட்டி யுணரப்படுஞ் சேதன அசேதனப் பிரபஞ்சங்களையாம். மங்-அந்தரம் என்பது "விண்வத்துக் கொட்கும்," என்றாற் போலப் புள்ளியீற்றில் வகர வுடம்படு மெய்பெற்று மங்வந்தரம் என முடிந்தது. அதனை "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே - யுடம்படு மெய்யி னுருவு கொளல் வரையார்." என்ற தொல்காப்பிய விதியா னமைக்க. ஆற்றல் என்றதைத் தீவகமாகக் கொண்டு முனிவர்க்குத் தவவலியும், வேந்தர்க்கு ஆளும் வலியும் என்க.

தவறில்லாமை யாவது - வேதாகமப் பொருட்கு மாறுபடாமையும், இலக்கணங்களிற் குறைவு படாமையுமாம். சர்க்கம், பிரதிசர்க்கம், மநுவந்தரம், வமிசம், வமிசாநுசரிதம் என்னும் ஐந்தும் புராணத்தி னிலக்கணமெனவுங் கூறப்படும். மற்சபுராணம் நைமிசாரணியச்சிறப்பு. "நிலவிய சர்க்கம் பிரதிசர்க் கஞ்சீர் நீங்கிடா வங்கிச மன்றி-யலகிலா மந்வந் தரம்வங்கி சாநு சரிதமிவ் வைந்துமே புராணத்-திலகிலக் கணமாம்." என்று கூறியதனுனறிக. இவையன்றி சர்க்கம், விசர்க்கம், விருத்தி, ரட்சை, மநுவந்தரம், வமிசம், வமிசாநுசரிதம், சங்கிதை, ஏது, ஆசிரயம் என்னும் பத்து இலக்கணங்களை யுடையது மகாபுராணமென்றும், . ஐந்தும், அதிற் குறைந்த்வுமான இலக்கணங்களையுடையது உபபுராணமென்றுஞ் சிலர் கூறுப. இன்—சாரியை. முறையாவது-புராணங்களுள் இது முன்னும் இதுபின்னுமாகக் கொள்ளவேண்டும் என்னுமுறை. இது தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி. (எ)

எழுசீர்க் கழிநெழிலடி யாசிரியவிருத்தம்.

பிரமநற் பதுமம் வைணவஞ் சைவம் பேருல கேத்துபா கவத
மருடரு நார தீயமார்க் கண்ட மாக்கினே யம்பவி டியமே
கருதரும் பொருள்சேர் பிரமகை வர்த்த மிலிங்கம்வ ராகமெய்க் காந்த
மருவுவா மனஞ்சொற் கூர்மநீண் மற்சங் காருடஞ் சிறந்தவா யவியம்.

(இ-ள்.) நல் பிரமம் பதுமம் வைணவம்=நன்மையாகிய பிரமபுராணமும் பதுமபுராணமும் வைணவபுராணமும், பேர் உலகு ஏத்து சைவம் பாகவதம்=பெரிய உலகத்தவர்களாற் றுதிக்கப் படுகின்ற சைவபுராணமும் பாகவத புராணமும், அருள் தரும் நாரதீயம் மார்க்கண்டம் ஆக்கினேயம் பவிடியம்=கருணையை யளிக்கும் நாரதீயபுராணமும் மார்க்கண்டேய புராணமும் ஆக்கினேய புராணமும் பவிடியபுராணமும், கருத அரும் பொருள் சேர் பிரமகைவர்த்தம்=நினைத்தற்கரிய பொருள்களைக் கொண்டுள்ள பிரமகைவர்த்த புராணமும், இலிங்கம் வராகம்=இலிங்கபுராணமும் வராகபுராணமும்,மெய் காந்தம்=உண்மையறிவினைக் (கொடுக்கும்) காந்தபுராணமும், மருவு வாமனம்= (பெருமை) பொருந்திய வாமனபுராணமும், சொல் கூர்மம்=சொல்லப்படுகின்ற கூர்மபுராணமும், நீள் மற்சம் காருடம்=மேம்பட்ட மற்சபுராணமும் காருடபுராணமும், சிறந்த வாயவியம்=சிறப்புடைத்தாய வாயவிய புராணமும்.

ஏ - எண்ணுப்பொருளில்வந்தது. இது பின்வருஞ் செய்யுட்களுள்ள "என வீரொன்பான் புராணமுள" என்பவற்றைக் கொண்டு முடிதலின் குளகமெனப்படும். இச்செய்யுட்கண் புராணங்களின் பெயரும் முறையும் வந்தமை காண்க. பாகவதமானது - இதிகாசபாகவதம், புராணபாகவதம், சங்கிதா பாகவதம், உபசங்கிதா பாகவதம், விட்டுணு ரகசிய பாகவதம், விட்டுணு யாமள பாகவதம், கௌதம சங்கிதா பாகவதம், தேவிபாகவதம் என எண்பகுப்பினதா யிருத்தலானும், அவற்றுள் புராணபாகவதமே (சுகர்பாகவதம்) கொண்டாடப்படுஞ் சிறப்பிற்றாகலானும் அதனை வேறுபிரித்துக் காட்டுவான் "பேருலகேத்து பாகவதம்" என்று கூறப்பட்டது. சைவம், மார்க்கண்டேயம், பவிடியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், வாயவியம் இப்பத்துஞ் சத்துவகுண சிவபுராணங்களாம். வைணவம், பாகவதம், நாரதீயம், காருடம் இந்நான்குந் தாமதகுண விட்டுணுபுராணங்களாம். பிரமம், பதுமம் இரண்டும் இராசதகுண பிரமபுராணங்களாம். ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் இரண்டும் முறையே திரிகுணயுத்தமுள்ள அக்கினிபுராணமுஞ் சூரியபுராணமுமாம். இவற்றின்முறையும், பெயரும், கிரந்த அளவும், கூறப்படும் பொருளும் வருமாறு:—

முதலாவது பிரமபுராணம். பிராமியம் என்று சொல்லவும்படும். பதினுயிரங் கிரந்தங்களை யுடையது. பிரமதேவரால் மரீசி முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது. உலக சிருட்டி, மநுவந்தரம், கிருட்டிணமூர்த்தி வரைக்கு மிருந்த சூரிய சந்திரகுல வரசர் மரபு, சூரியாலயம், சிவாலயம், சகநாதர் ஆலயம், திருநந்தனவனம், சகநாதம் என்னுந் தலமான்மியம் முதலிய பிராமியகற்ப விருத்தாந்தங்களைக் கூறுநிற்கும். **மற்சபுராணம்** "அருந்தவத்தின் மரீசிதனக் கயனுரைத்த பிராமியத்தி னளவை கூறிற் - கிரந்தமயு தத்தளவை,, என்றதனு மறிக.

இரண்டாவது பதுமபுராணம். பாத்மம் எனவும் பெயர். ஐம்பத்தையாயிரங் கிரந்த முடையது. சிருட்டி காண்டம், பூமி காண்டம், சுவர்க்க காண்டம், பாதல காண்டம், உத்தர காண்டம் என்னும் ஐந்து காண்டங்களாற் புனையப்பட்டுளது. பிரமதேவர் சிருட்டி நிமித்தம் ஓர் பதுமத்திலே தோற்றிய சரித்திரங்கள், தீர்த்த ஆலயங்களின் விசேடங்கள், அண்டவளவு, இலக்குமி நாராயண மந்திரங்கள், திலீப ராசனுக்கும் வசிட்ட முனிவருக்கும் நடந்த சம்வாதங்கள் முதலிய பதுமகற்ப விருத்தாந்தங்களைப் பகருவதாம். "நேரிரண்டா யுறுபாத்ம மைம்பத்தை யாயிரமாம் பாத்ம கற்பத் துயர்ச்சி கூறும். ,, என்றதனும் அறிக.

மூன்றுவது வைணவபுராணம். விஷ்ணு புராணம், விண்டு புராணம் எனவும் பெயர். ஆறுயிரங் கிரந்தங்களை யுடையது. ஆறு அம்சங்களாற் புனையப்பட்டுளது, அண்டநிலைமை, வேத சாகைகளின் பிரிவு, தருமாதருமம், ஆச்சிரம முதலியவற்றேடு விஷ்ணுமூர்த்தியின் பிரபாவங்கள் முதலாய சுவேத்வராககற்ப விருத்தாந்தங்களைக் கூறுவதாம். இது நாராயண முனிவராற் பிரமதேவருக்கும், அவரால் தக்கர் முதலிய முனிவர்களுக்கும், அவர்களால் புருகுச்ச ராசனுக்கும், அவனுல் சாரசுவதமுனிவர்க்கும், அவரால் பராசர விருடிக்கும், அவரால் மைத்திரேய முனிவர்க்கும் உபதேசிக்கப்பட்டது. "மூன்றெனவே வைணவப்பேர் சார்பு ராண - மேனிவரும் வராககற்ப விருத்தாந்தம் பராசரர் முன் விளங்கக் கூறு-மூனமிலெண் ணுயிரமாங் கிரந்தம்,, என **மற்ச புராணத்தில்** எண்ணுயிரங் கிரந்த முடையதென்று கூறப்பட்டது.

நான்காவது சைவபுராணம். வாயுபுராணம் எனவும் பெயர்பெறும். இருபத்துநாலாயிரங் கிரந்தமுடையது. வித்தியேசுர சங்கிதை, உருத்திர சங்கிதை, விநாயக சங்கிதை, உமாசங்கிதை, மாதிரு சங்கிதை, ஏகாதசருத்திர சங்கிதை, கைலாய சங்கிதை, சதருத்திர சங்கிதை, கோடிருத்திர சங்கிதை, சகத்திர கோடிருத்திர சங்கிதை, வாயுசங்கிதை, தரும சங்கிதை எனப் பன்னிரண்டு சங்கிதைகளை யுடைத்து. இலக்கங் கிரந்த முடைய தெனவுங் கூறுப. மற்ச புராணத்திற் பன்னீராயிரங் கிரந்தமுடையது என்று பகரப்பட்டது. இது பிரமன், வாயுதேவன், உபமன்னியு முனிவர் என்பவர்களால் நாரதாதிய முனிவர்களுக்கும், கிருட்டிண மூர்த்திக்கும் உபதேசிக்கப்பட்டது. சிவலிங்கத்தினின்று யாவும் உற்பத்தியாதல், சிவலிங்க வழிபாடு, புண்ணிய காலம், புண்ணிய க்ஷேத்திர தீர்த்தங்கள், சரியை முதலிய பாதங்கள், உருத்திரர்களின் இலக்கணங்கள், விநாயகர், உமை, கந்தக்கடவுள் இவர்களின் மாகாத்மியம், விதிவிலக்கு முதலிய சுவேத கற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவதாம்.

ஐந்தாவது பாகவதபுராணம். சுகர் பாகவதம் எனவும் பெயர்பெறும் சிலர் தேவிபாகவதமே புராண பாகவதம் என்று கூறுவர். பதினெண்ணுயிரங் கிரந்த முடையது. பன்னிருகந்தங்களாலும், இருநூறு அத்தியாயங்களாலும், சுருதிகீதை முத

லிய பன்னிரு கிளைகளானும் புனையப்பட்டுளது. எழு தினங்களுக்குட் சர்ப்பந் தீண்டப் பெற்று இறக்குமாறு சாபம் பெற்ற விண்ரோதன் என்னும் பரிட்சித்து அரசன், அவ்வாதனையை யொழிக்குமாறு கங்காதீரத்திருந்த சுகமுனிவரை யடுத்து வேண்ட, அவரால் உபதேசிக்கப்பட்டதாம். விட்டுணுவின் நான்கு அவதாரங்களையும், நான்கு பத்தர்களின் சரிதங்களையும் விரிவாகவும், காயத்திரிமகிமை, தியானம், முனிவர்சரித முதலியன வற்றைத் தொகையாகவும் உணர்த்துஞ் சார்ச்சுவத கற்ப விருத்தாந்தங்களைக் கொண்டுள்ளது.

ஆறுவது நாரதியபுராணம். இருபத்தையாயிரங் கிரந்த முடையது. நாரத முனிவரால் உபதேசிக்கப் பட்டது. விட்டுணு தோத்திரங்கள், அவரைப் பூசித்தற்குரிய காலவிதிகள், துருவ பிரகலாத சரிதம், உருக்குமாங்கதன் புதல்வியாகிய மோகினியின் வரலாறு, நானுவித தருமங்கள் முதலிய பிரகற்பதிகற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவதாம்.

ஏழாவது மார்க்கண்டேயபுராணம். முப்பத்தீராயிரங்கிரந்தமுடையது. மார்க்கண்டேயர் பொருட்டுரைக்கப்பட்டது. பின்னர் வியாசமுனிவரின் சீடராகிய சைமினி முனியை, பிராமணகுலத்திற் பிறந்து பறவையாகும்படி சாபம் பெற்ற சகுனியென்னு மிருபறவைகளும் அடுத்து,முனிவர் பெருமானே ! விட்டுணுமூர்த்தி மானுட சீரம் எடுத்தற்கும், பாண்டவர் ஐவருக்குந் திரௌபதி யொருத்தியே மனைவியா யமைதற்கும்,பலராமர் மதவுண்டதற்கும்,அதன்மயக்கினுற் கொலைசெய்து பிரமகத்தி பிடித்து வருந்தியதற்கும், அதற்குப் பிராயச்சித்தஞ் செய்ததற்கும், கிருட்டிணர்ச்சுனர் இருவருக்கும் அகால மரணம் எய்தற்குக் காரணம் யாது என்று வினவிய வினக்களுக்கெல்லாம் உத்தரமாக வுரைத்த விரணங்கள் முதலிய சகுனிகற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவதாம். "ஏழெனு மார்க்கண்ட புராணத்தை யோதின். சகுனியெனும் பக்கிகளை யதிகரித்துத் தன்மமுட னதன்மந் தன்னை - வெகுவிதமா விரித்துரைக்கு மொன்பதினு யிரங்கிரந்தம்." என்ற **மற்சபுராணச்** செய்யுளின்படி ஒன்பதினுயிரங் கிரந்த முடைத்தாதலுங் காண்க.

எட்டாவது ஆக்கினேயபுராணம். எண்ணுயிரங் கிரந்த முடையது. அக்கினி பகவான் வசிட்ட முனிவருக்கு உபதேசித்தது. யாகம், அக்கினியின் பெருமை, விஷ்ணு அவதாரங்கள்,சிவபெருமானை நோக்கிச்செய்யும் ஞானபூசை,பிரபஞ்ச லக்கணம் அரசிறை முதலாய ஈசானகற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவாம்.

ஒன்பதாவது பவிடியபுராணம். பவிஷ்யத் என்றும் பெயர். முப்பத்தோராயிரங் கிரந்த முடையது. பிரம தேவர் மனுவரசனுக்கு உபதேசித்ததாம். சர்வபூத லக்கணம், உலகநீதி, ஆதித்திய மான்மியம், அகோர கற்பத்தில் உலகமுளதா முறை, சிருட்டிபேதம் முதலிய ஆதித்தகற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவதாம்.

பத்தாவது பிரமகைவர்த்தபுராணம். பன்னீராயிரங் கிரந்தமுடையது. சாவர்ணி மனுவென்பவர் நாரதமுனிவருக்கு உபதேசித்த கிருட்டிண சரிதம், பிரம வராகமான்மியம், ஆதித்தர்களின் வரலாறு, இதரசரித்திரங்கள் முதலிய பராதந்தரகற்ப விருத்தாந்தங்களை யறிவிப்பதாம். **மற்சபுராணம் ஐம்பத்துநாலாவது அத்தியாயம்.** "பத்தெனும் புராணமது பகர்பிரம கைவர்த்தம் பண்பி னெக்கு-மொத்தபரா தந்தரகற் பத்தியல்போ டிதரகதை யொளிருங் கண்ணன்-வித்தகமாஞ் சரித்தி ரஞ்சேர்ப் பிரமவரா

கக்கதையும் விளக்க முன்னுட் - புத்திபெறு நாரதர்க்குப் பொருவருஞ்சா வர்ணிமனுட் புகன்ற தாமால். புகலும்வட மொழிபதினென் ணுயிரமாம். ,, என்று கூறியதனுல் பதினெண்ணுயிரங் கிரந்த முடைத்தாதலுங் காண்க.

பதினென்ருவது இலிங்கபுராணம். பதினோராயிரங் கிரந்தமுடையது. சிவபெருமான் சிவலிங்கத்தினின்றுந் தோன்றி யான்மாக்களடையும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருடார்த்தங்களை யுரைத்தருளியதையும், சிவலிங்கமகிமை, துருவன் ஆதித்தர் முதலியவர்களின் நிலை, அரச பாரம்பரியம், விரத தியான நித்தியகர்ம சிராத்த விதிகள், திரிபதார்த்த உண்மை, தானங்களினிலக்கண மாதிய அக்கினிகற்ப விருத்தாந்தங்களை அறிவிப்பதாம்.

பன்னிரண்டாவது வராகபுராணம். இருபத்து நாலாயிரங் கிரந்த முடையது. வராக வுருவெடுத்த திருமாலினுற் பூமிதேவிக்கு உபதேசிக்கப்பட்டது. மானவகற்பத்தின் றன்மை நீதிகளும், திருமாலின் வாயிற் காவலாளராகிய சய விசயர் என்னு மிருவருஞ் சாபமேற்று, இரணியகசிபு இரணியாக்கனுய்த் திதி வயிற்றிற் றோன்றியதும், இரணியாக்கன் வராக மூர்த்தியால் வதைக்கப்பட்டதும், திதிக்கும் விட்டுணுவுக்கும் நிகழ்ந்த யுத்தமும், விட்டுணு வராக ரூபத்தைப் படிப்படியே நீக்கிக் கொண்ட தன்மையும் ஆகிய இவை முதலாய சுவேதவராககற்ப விருத்தாந்தங்களை விளக்குவதாம்.

பதின்மூன்ருவது கந்தபுராணம். ஓரிலக்கங் கிரந்த முடையது. ஐம்பது கண்டங்களாலும், சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை என்னும் ஆறு சங்கிதைகளானும் புனையப்பட்டுள்ளது. “புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக் கதையிலை யன்னது கணித மின்றரோ ,, என்றருளியதனுனும், எந்நூலினுங் காணப்படாத பொருள்களையெல்லாம் கந்தபுராணத்திற் காணலாம் என்னுங் கருத்துப்பட, இந்தப்பொருள் கந்தத்திலு மில்லை, என உலகர் வழங்கும் பழமொழியானும் இதன் பெருமை விளங்கும். இது தற்புருடகற்ப விருத்தாந்தங்களையெல்லாம் உணர்த்தும். “என்னுபதின் மூன்ருன புராணமதா மெழிற்காந்த மறைகளேத்தி-நண்ணியதற் புருடகற்ப வளமைசிவ தருமம்பொன் னுட்டை நாட்டும்-புண்ணியசண் முகக்கடவுள் புகரறவே யநுக்கிரகம் புரிந்த தாகும் - பண்ணமரும் வடமொழியோ ரிலக்கம் ,, என்றதனுல் எந்தையாகிய குமாரக்கடவுளாற் றிருவாய்மலர்ந்தருளப் பட்டதெனத் தெரியக்கிடத்த றெளிக.

பதினுன்காவது வாமனபுராணம். பதினுலாயிரங் கிரந்தமுடையது. வாமனனுகிய திருமாலினு லுபதேசிக்கப்பட்டு, பின்னர்ப் பிரம தேவராற் சொல்லப்பட்டது. தக்கன் யாகம், திருமாலின் வாமனவதாரம், திரிவிக்கிரமாவதாரம், திரிமூர்த்திகளின் மகிமை, அவர்களருளும்பலன், கேதாரேசுவர புரத்துள்ள சிவலிங்கப் பெருமானினதும் வதரிகாச்சிரமத்தினதும் பெருமைகளை விளக்கவந்த காம தகனம், சரோ மாகாத்மியம், உமாமகேசுர திருமணம், தானு கோதவரி தீர்த்தங்களின் சிறப்பு, முருகக்கடவுள் திருவவதாரம், சுவாரோசிஷமனுவந்தரத்திருந்த மாவலிச் சக்கிரவர்த்தியின் அரசியல், அவன் பேறு முதலிய சைவகற்ப விருத்தாந்தங்களை யுணர்த்துவதாம்.

பதினைந்தாவது கூர்மபுராணம். கௌர்மம் எனவும் பெயர். ஆறுயிரங்கிரந்தங்களை யுடையது. பூருவ காண்டம், உத்தர காண்டம் என்னும் இருகாண்டங்களாலும் ௯௭-அத்தியாயங்களாலும் புனையப்பட்டுளது. வேதாந்த சித்தாந்த சாரங்களை

யெல்லாம் உள்ளடக்கியது. திருமால் பாற்கடல் கடைந்த காலத்துக் கூர்மரூபமெடுத்து, மலைதாங்கி யமுத மளித்து அங்கிருந்த நாரதமுனிவர்க்கும், இந்திரனுக்கும், அவந்திதேசத் தரசனாகிய இந்திரத்துய்ம்மனுக்கு முன்னர் உபதேசித்தபடியே யிலக்குமி கற்பவிருத்தாந் தங்களையெல்லாம் உபதேசித்ததாம். இவற்றிற் கூறப்படும் பொருள்களையெல்லாம் பதி கத்திற் கண்டுகொள்க. மற்சபுராணம் " கோதில்பதி னைந்தாகுங் கூர்மபுரா ணந்திரு மால் கூர்ம மாகி-மேதினிவெந் புறத்தேந்தி யிலக்குமி கற்பத்தின்விருத் தாந்தம் யாவு-மோது மறம் பொருளின்பம் வீடிவைநான் கையுந்தெரிய வும்பர் கோன்மு - னேதமிலா விந்திரத்துய்ம் மனைவியா சீகரித்தங் கிருடிமார்க்கே ,, என்றதனாலும் அறிக.

பதினாறாவது மற்சபுராணம். மத்ஸயம் எனவும்படும். பதினாலாயிரங் கிரந்த முடையது. மச்சாவதாரமெடுத்த திருமாலினால் வைவச்சுவதமநுவுக்கு உபதேசிக் கப்பட்டது. மச்சாவதாரம், திருமால் மனுவரசனையும், பிறவுயிர்களையுஞ் சலப்பிரளயத் தில் அழியாவண்ணம் ஓர்பேழையினுள் வைத்திரட்சித்தமை, திரிபுர சங்காரம், சதுர்வேத தாற்பரியங்கள், நாரசிங்காவதாரம், பார்வதிதேவியார் திருமணம், தாரகாசுரனுக்குந் தேவர்களுக்கும் நடந்த யுத்தம் முதலிய ஏழுவகைக்கற்ப விருத்தாந்தங்களையு முணர்த் தும் என்க.

பதினேழாவது காருடபுராணம். ஆறாயிரங் கிரந்தமுடையது. விட் டுணுவினாற் கருடனுக்கு உபதேசிக்கப் பட்டது. உலக சிருட்டி, விரத விவரணம், சோதி டம், புண்ணிய க்ஷேத்திரம், அந்தியேட்டி, பிதிர் பூசை, சாமுத்திரிகா லக்கணம், ஔட தம், இரத்தின விலக்கணமுதலிய விசுஎன்பவன் ஆண்ட காலமாகிய கருடகற்ப விருத் தாந்தங்களை யறிவிப்பதாம்.

பதினெட்டாவது வாயவியபுராணம். பிராமம், பிரமாண்ட புரா ணம் என்றும்பெயர். பன்னீராயிரங் கிரந்தமுடைத்து. பிரமதேவராற் சொல்லப் பட்டது. பிரம அண்டங்களின் மகிமை, மேல்வருங் கற்பங்கடோறும் நிகழுஞ் சரிதங்கள், வராகவ தம், சிவபிரானது பஞ்சகிருத்திய முறைமை, சரப வடிவெடுத்து நாரசிங்கத்தின் வலி யடக்கினமை, பிரம காலவளவை, அவர்களின் றன்மை, பூகோள ககோளவியல்பு முதலிய பிரமாண்ட கற்ப விருத்தாந்தங்களை விளக்குவதாம். "பதினெட்டாம் பிரமாண்ட முது புராண - மக்கமலத் தயன்பிரமாண் டத்தினுறு, கதையொடெதி ரடுக்குங் கற்ப - மிக்க வட மொழிபன்னீ ராயி ரத்தோ டிருநூற்றின் விளங்கச் சொன்னான். ,, என்று மற்சபுரா ணத்திற் கூறியபடி பன்னீராயிரத்து இருநூறுதலுங் காண்க.

இவைகள் வேதாகமங்களின் சாரங்கள் இன்னவென்று நியாயப் பிரமாணங்களால் தேற்றி விளக்குதலால் உபாங்கம் எனவும், உபப்பிருங்கணம் எனவும், யாவராலுங்கொள் ளப்படுவதோடு முதல்வனால் அருளப்பட்டமை பற்றிச் சுத்தவித்தை எனவும், பழையவர லாறுகளை யுணர்த்தலாற் புராணம் எனவும் பெயர்பெறும். புராணம் பதினெட்டிற்கும் கிரந்தத்தொகை நாலிலக்கத் தெண்ணாயிரமாம். அற்றெனின், " இலக்குமிப் புராண கிரந் தத்தின் றொகைநா லிலக்கமாம் ,, எனச் சூதசங்கிதையினும், "அதனை நான்குநூ றாயிர மாக முன்வகுத்து ,, என இலிங்கபுராணத்தும் நாலிலக்கமெனக் கூறியது என்னை யெனிற் பெருந்தொகைபற்றி யென்க. இவையெல்லாம் ஆதியிற் சிவபெருமானால் திரு நந்திதேவருக்கும், அவரால் சனற்குமார முனிவருக்கும் உபதேசிக்கப்பட்டு இம்முறையே வழங்கப்பட்டு வருவனவென்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எனவீ ரொன்பான் புராணமுள பிரமாண் டப்பே ரியைந்தோய்க்கும்
பனிதோய் விசும்பு தனிபுரக்கும் புத்தேள் முதலோர் பயின்றோதுந்
தனியோர் புராண முளதிவற்றின் சார்பின் முனிவர் வகுத்தினிதிற்
புனையும் புராண மீரொன்பா னுளவா மவற்றின் பெயர்புகல்வாம்.

(இ-ள்.) என புராணம் ஈர் ஒன்பான் உள=என்று பெயர் முறைகளை யுடைத்தாய் புராணங்கள் பதினெட்டுள்ளன, பனி தோய் விசும்பு தனிபுரக்கும்=குளிர்ச்சிபொருந்திய விண்ணுலகத்தைப் பொது வில்லாமற் காக்கின்ற, புத்தேள் முதலோர் பயின்று ஓதும்= இந்திரன் முதலிய தேவர்களாலும் ஆராய்ந்து படிக்கப் படுகின்ற, பிரமாண்டம் பேர் இயைந்து ஒக்கும் ஓர் தனி புராணம் உளது=பிரமாண்ட புராணம் என்னும் பெயரைக் கொண்டு உயர்வாய் விளங்கும் ஒரு தனிமையாகிய புராணமும் உண்டு, இவற்றின் சார் பில்=இவ்விரு புராணங்களின் வழித்தாக, முனிவர் இனிதின் வகுத்து புனையும் புராணம் ஈர் ஒன்பான் உள = சனற் குமாரர் முதலிய இருடிகள் நன்மையாக வகைப்படுத்திச் செய்த புராணங்களும் உள்ளன, ஆம் அவற்றின் பெயர் புகல்வாம்=சிறப்பாகிய அவை களின் பெயர்களையுஞ் சொல்லுவாம்.

புத்தேள்=புதுமையை யுடையவன், அதாவது அமிர்த முண்டமையால் நரை, திரை, மூப்பு, பிணி, பசி, துயில் முதலியன வின்றி, இளமை அழகு முதலியன வாய்க்கப் பெற் றுப் புதுமையாக விளங்குபவன். அறிவுடையவன் எனலுமாம். பிரமம் முதலிய பதி னென் புராணங்களுள் ஒன்றாய வாயவியம் எனப் பேர்பெற்ற பிரமாண்ட புராணம் என்பதன்றி வேறொரு பிரமாண்ட புராணமு முளது. அது இந்திரன் முதலிய தேவர்க ளாலும் படனம் பண்ணப்படுவது. அம்முதற் புராணத்தையும், பதினென் புராணங்களை யும் ஆதாரவாகக் கொண்டு முனிவர்கள் தத்தம் பெயராலே யொவ்வோ ருபபுராணங் களைச் செய்தார்கள் என்பதாம்.

நூறுகோடி கிரந்த முடைத்தாய்ப் பிரமாண்ட புராணம் என்னும் பெயரோடு அதி பரமாப்த பதியாகிய சதாசிவ நாயனாராற் றிருவாய் மலர்ந்தருளப்பட்ட ஓர் புராணமே முன்னுளது. அதனை யுலகர் நன்குணர்தல் அரிதென்று கருதிக் கிருத யுகத்திலே பிரம தேவர் நூற்றுப் பதினொரு சங்கிதைகள் கொண்ட பதினென் கண்டங்க ளாகவும், ஒரு கோடி கிரந்த முடைய தாகவுஞ் சுருக்கிச் செய்தனர். அதுவும் அறிதல் மிக அருமையா மென்று துவாபர யுகத்திலே வியாச முனிவர் நாலிலக்கத் தெண்ணாயிரங் கிரந்தங்க ளுள் ளனவாகச் சுருக்கி, ஆக்கியானங்களும், உபாக்கியானங்களும், சுவேத வராக கற்பம், இலக்குமி கற்பம், பிரமாண்ட கற்ப முதலிய கற்ப நிண்ணய சரிதங்களும், சிருட்டி முத லிய பஞ்ச லக்கணங்களும், சரியையாதி நாற்பாதங்களும், தருமாதருமங்களும் விளங்கப் பதினென் புராணமாகப் பகுத்துத் தம் மாணாக்கரான உரோமகருடண முனிவருக்கு உபதேசித்தனர். அவர் தமது மாணாக்கர்களாகிய சுமதி, அக்கினிவருச்சன், மித்திராயு, சாம்சபாயனன், அகிருத விரணன், சாவர்ணி என்னும் அறுவருக்கும், மற்றை முனிவர் களுக்கும் உபதேசித்தனர். அவர்களுள் வசிட்டர், சாம்சபாயனர் முதலிய முனிவர்கள் அவ ற்றின் சாரங்களைத் திரட்டி, யொவ்வோ ருபபுராணங்களைச் செய்தனர். இவ்வாறு வைணவம், இலிங்கம், சைவம், பராசர முதலிய புராணங்களிற் கூறப்படுதல் காண்க. ()

நவையில்சனற் குமாரம்வளர் நாரசிங்கம் புகழ்நந்தி துருவா சஞ்சொற்
சிவ தரும மியனார தீயங்கா பிலந்திகழ்மா னவஞ்சீர் வாய்ந்த

வவுசனம்வா சிட்டலிங்கம் வாருணங்கா ளிகமுலகிற் கருள்சாம் பேசஞ்
சவுமியநற் சவுரமுயர் பராசரமா ரீசம்பார்க் கவமாஞ் சாற்றின்.

(இ-ள்.) சாற்றின் = (பெயர்களைச்) சொல்லுமிடத்து, நவை இல் சனற்குமாரம்= குற்றமற்ற சனற்குமார புராணமும், வளர் நாரசிங்கம்=பெருக்கமுடைய நாரசிங்க புராணமும், புகழ் நந்தி துருவாசம்=துதிக்கப் படுகின்ற நந்தி புராணமும் துருவாச புராணமும், சொல் சிவதருமம்=சொல்லுதற்குரிய சிவதரும புராணமும், இயல் நாரதீயம் காபிலம்=சிறப்பினையுடைய நாரதீய புராணமும் கபில புராணமும், திகழ் மானவம்=விளங்குகின்ற மானவ புராணமும், சீர் வாய்ந்த அவுசனம்=கீர்த்தி பொருந்திய அவுசன புராணமும், வாசிட்டலிங்கம் வாருணம் காளிகம்=வாசிட்டலிங்க புராணமும் வாருண புராணமும், காளிக புராணமும், உலகிற்கு அருள் சாம்பேசம் சவுமியம் = உலகத்தார்க்கு அருளைக்கொடுக்கின்ற சாம்பேச புராணமும் சௌமிய புராணமும், நல் சவுரம்=நன்மையாகிய சவுர புராணமும், உயர் பராசரம் மாரீசம் பார்க்கவம் ஆம்=உயர் வாகிய பராசர புராணமும் மாரீச புராணமும் பார்க்கவ புராணமும் ஆகும்.

உப புராணங்களுள்ளும் திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்ற சனற்குமார விருடியாற் செய்யப்பட்ட சனற்குமார புராணஞ் சிறந்த தாகலின் அதனை "நவையில் சனற் குமாரம் ,, என விதந்து முன் வைத்தார் என்க. இவை யொவ்வொன்றும் அகத்தியம், தொல்காப்பியம், என்றாற் போலக் கருத்தாவின் பெயரினையே வகிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நந்திபுராணம் நந்திகேச்சுரம் நந்தம் எனவும், சாம்பேச புராணம் சாம்பம் எனவும், சௌமிய புராணம் சோமம் எனவும், சவுர புராணம் ஆதித்தியம் எனவும், பராசர புராணம் பராசரீயம் எனவும், பார்க்கவ புராணம் விநாயக மான்மியம் எனவும் பெயர்பெறும் என்க. நாரசிங்கம் பதுமமகா புராணத்திற்கும், நந்தி காந்த மகா புராணத்திற்கும், சாம்பேசம் பவிடிய மகாபுராணத்திற்கும் மிக்க சார்பு உள்ளவைகளாம். இவ்வுப புராணங்கள் பதினெட்டிற்குங் கிரந்தத் தொகை ஓரிலக்கம். அதனை "இத்தகு புராண கிரந்தத்தின் றொகையோ ரிலக்கமாம். ,, என்னுஞ் சூதசங்கிதைச் செய்யுளானறிக. (௧0)

செஞ்சே றாட்டுஞ் சிற்றறுவை முனிவீர் கூர்மந் தெளிந்தோர்க
ளெஞ்சா துரைக்கின் மூவைந்தாம் புராண மென்பர் மற்றீது
நஞ்சார் மிடற்றுப் புத்தேளின் சீர்த்தி புகல்வ திதனளவின்
றஞ்சார் பலராங் கிதனளவை யாறா யிரமென் றுரைப்பாரால்.

(இ-ள்.) செம் சேறு ஊட்டும் சிறு அறுவை முனிவீர்=செந்நிறக் குழம்பு தோய்க்கப்பட்ட சிறிய உடையினையுடைய முனிவர்களே! , எஞ்சாது உரைக்கின் = (புராணமுறையை) குறைவின்றிச் சொல்லுங்கால், தெளிந்தோர்கள் கூர்மம் மூவைந்தாம் புராணம் என்பர்=தெளிந்த ஞானத்தை யுடையவர்கள் கூர்மபுராணத்தைப் பதினைந்தாவது புராணம் என்று சொல்வார்கள், ஈது=இக்கூர்மபுராணம், நஞ்சு ஆர் மிடறு புத்தேளின் சீர்த்தி நவில்வது=நஞ்சு பொருந்திய திருக்கண்டத்தினையுடைய சிவபெருமானது (மெய்ப்பொருள் சேர்ந்த) புகழை விளங்கக் கூறுவதாகும், இதன் அளவை ஆறாயிரம் என்று உரைப்பர்=இப்புராண கிரந்தத்தின் தொகை ஆறாயிரம் என்று கூறுவார்கள்.

மற்று ஆங்கு ஆல் என்பன அசைகள். முனிவீர் - அண்மைவிளி. செந்நிறக் குழம்பு ஊட்டப்பட்ட உடையாவது - காவிவஸ்திரம். சிற்றறுவை யெனவே சிவயோகியர்க்குரிய

விபூதி, உருத்திராக்கம், கபாலம், பிரம்பு, சங்கு, கப்பரை, பாதுகை முதலிய மற்றை யொன்பது வேடங்களும் பெறப்படும். மற்றீது - இதில் இது என்பது, ஈது எனநீண்டது. உஞ்சார் போலி. இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழைவிரித்துக் கூறுங் கூர்ம புராணத்தை யோதியுங் கேட்டும் உய்ந்தார் பலர் என்றார், அவரிடத்துப் பிறவிக்குக் காரண மாகிய இருவினையுஞ் சேரா வாகலின். அதனை "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன் - பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. ,, எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியதனானும் அறிக. ஒருகிரந்தமாவது வடமொழியின் மெய்யெழுத்துக்களை விடுத்து எண்ணப்படுகின்ற உயிரும் உயிர்மெய்யுமாகிய முப்பத்திரண் டெழுத்துக்களைக் கொண்ட ஓர்தொடராம். இதுமுதல் புராணவரலா றுரைத்தல். (௧௧)

களைகொன் றிரங்கு திரைக்கடல்வான் குழிசி யாகக் கறையனல்வா
யரவங் கயிறு மதிதறியா வமர ரமுதங் கடைந்தெடுப்ப
வரைமுன் னிடலுந் தாழாது மாயோன் வளர்கூன் புறத்தாமை
யுருவிற் றாங்கிக் கடன்மதித்து வானோர்க் கமுத முதவினான்.

(இ ள்.) முன்=முற்காலத்திலே, அமரர் அமுதம் கடைந்து எடுப்ப = தேவர்களும் அமிர்தத்தைக் கடைந்தெடுக்கும் பொருட்டு, களை கொன்று இரங்கு திரை கடல் வான் குழிசி ஆக=களையை யழித்து முழங்காநின்ற அலைகளையுடைய திருப்பாற் கடலைப் பாற் குடமாகவும், அனல் கறை வாய் அரவம் கயிறு ஆக = (வடவைத்) தீயைப்போன்ற நஞ்சு பொருந்திய வாயினையுடைய வாசுகியென்னுஞ் சர்ப்பத்தினைக் கயிறாகவும், மதி தறி ஆக= சந்திரனைக் கடைதறியாகவுங் கொண்டு, வரை இடலும்=மந்தரமலையை மத்தாக நாட்டுதலும், மாயோன்=திருமாலானவர், தாழாது வளர் கூன் புறத்து ஆமை உருவின் தாங்கி = அம்மலையைக் கீழே யாழ்ந்து போகா வண்ணம் உயர்ந்து வளைந்த முதுகினை யுடைய ஆமை வடிவுகொண்டு தாங்கி, கடல் மதித்து வானோர்க்கு அமுதம் உதவினான்= சமுத்திரத்தைக் கடைந்து தேவர்களுக்கே தோன்றிய அமிர்தத்தை யளித்தனர்.

களையைக் கொன்று அதனால் இரங்குகின்ற என்று குறிப்புப்பொருள் பயத்தலுங் காண்க. சாவாது அமிர்த முண்ணுதலை வேண்டிக் கடைந்தார்க்குச் சாகும்படி நஞ்சைக் கொடுத்தலின் "கறை யனல் வாயரவம்,, என்றதாம். அரவம்-இதில் அம் சாரியை. வாசுகி என்றது அட்டநாகங்களு ளொன்றாய்க் கீழ்த்திசைக்கணுள்ள கடவுட்பாம்பாம். அமரர் = மரித்த லில்லாதவர். அதன்கண் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. என்னை? அசுரர் களுங்கூடிக் கடைந்ததனாலென்க.

திருமால் கடல்கடைந்து அமிர்தமளித்த சரிதமாவது—துருவாச முனிவர் சிவலிங்கப் பெருமானது திருமுடியினின்றும் விழப்பெற்ற பரிமளத்தாமரை மலரொன்றை யிந்திரன் பவனி வரும்போது அவனுக்குக் கொடுக்க, அவன் அதனை யங்குசத்தால் வாங்கி யானை யின் மத்தகத்தில் வைத்தனன். யானை அம்மலரினைக் கீழேவிழுத்திக் காலாற் றேய்த்தது. முனிவர் சினந்து சுவர்க்க லோகத்தின்கணுள்ள தருக்கள், நிதிகள், தேனு முதலிய திருவெல்லாம் நீங்குமாறு சபிக்க, அவையெல்லாம் பாற்கடற்க ணொளித்தன. ஒளிக்கவே சுவர்க்க லோகமானது நீறில்லா நெற்றிபோலவும், சிவாலயங்களில்லாத திருவிதிபோலவும், உயிரிலாத வுடல்போலவும் வறிதாக இந்திராதி தேவர்கள் யாவரும் பெருந்துன் புற்று வாடுவாராயினர். அதுகண்டு அசுரர்கள் எதிர்க்க இருபாலார்க்கும் யுத்தந்தோன்றி யது. தேவர்களும் இந்திரனும் வலியிழந்து எதிர் நிற்கமாட்டாது ஓடிப் பிரமனோடு திருமால் இடஞ் சென்று முறையிட்டார்கள். அவர் பாற்கடற்க ணுள்ள அமிர்தத்தைக்

கடைந் தெடுத் துண்டால் சாவமாட்டீர் என்றுரைத்து அசுரரையுஞ் சாமோபாயத்தால் அழைப்பித்துச் சென்று, சந்திரனை அடைதுணைக்கி, மேருமலைக்குக் கீழ்த்திசைக்க ணுள்ள வெண்ணிற மந்தர மலையை மத்தாக நட்டு, காசிப முனிக்குக் கத்துரு வயிற்றிற் பிறந்த வாசுகிப் பாம்பினைக் கயிறாகச் சுற்றி, தேவர்களை யதன் வாலினும் அசுரர்களைத் தலையினும் பிடிப்பித்துக் கடைவித்தனர். மந்தரமலை தாங்குவோ ரின்மையால் சரிந்து ஆழ, நாரணக் கடவுள் பாற்கடலின் அகலத்திற்கும் ஆழத்திற்கும்,மந்தரமலையின் அகலம் நீளம் பாரங்களுக்குந் தக்கபடியே ஓர் கூர்ம (ஆமை) ரூபமெடுத்து அது ஆழ்ந்து போகாமல் தம்முதுகில் வைத்தும், மேற்போகாமலும் பக்கத்திற் சரியாமலும் ஆயிரங் கைகள் கொண்டு உச்சியிலுறுத்தியும், பக்கத்திற் பற்றியும், வாசுகியின் உடல் அருவண்ணஞ் சத்தியைக் கொடுத்தும், அதன் பெருமூச்சினாலுஞ் சுவாசத்தினாலும் இளைத்தயர்ந்த அசுரர் தேவர்கட்கு அவைகளை மாற்றியுங் கடைவித்தனர். பின்னருஞ் சோகமுறத் தாம்வேறு உருவெடுத்துக் கடைந்தனர். அங்ஙனமாக முதலில். முகடி (மூதேவி) தோன்றினள். அவளை வேதசிவாகம வொழுக்கமில்லாத பாஷண்டர்களிடத்தும் பாதகரிடத்தும் மற்றை யசுத்தமுள்ள விடங்களினும் அமர்வாயென அவள் கழுதையிலேறி, காகக்கொடிபிடித் துத் துடைப்பமாகியபடைதாங்கி,துப்பிரபன் என்னுங் கலிபுருடனைக் கணவனுக்கொண்டு சொல்லியவா றுற்றனள். உச்சைச்சிரவம் என்னுங் குதிரையும், சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் என்னும் பஞ்சதருக்களும், காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதிகளுந் தோன்றின. அவைகளைச் சுவர்க்கத்தில் வைக்குமாறு இந்திரற் குதவினர். பின்னர்க் கௌத்துவ ரத்தினந் தோன்றிற்று. அதனைத் தம்மார்பிற் பூண் டனர். அதன்பின்னர் அறுபதுகோடி யரம்பையர் பிறக்கச் சுவர்க்கத்தில் வசிக்குமாறு விடுத்தனர். வாருணி யென்னுஞ் சுராதோன்ற அதனை வருணற் குதவினர். அதன் பின் னர்ச் சந்திரன்றோன்ற அண்டத்தி லழகுற விருத்தினர். அதன்பின்னர்க் கண்டவர் யாவ ராலும் விரும்பப்படுந் தன்மையுடையளாய், அதிரூபசுந்தரியாய்த் தாமரைப் புட்பங்களைக் கையிற் றாங்கிக்கொண்டு செந்தாமரை யாசனியாய்த் திருவென்கின்ற சீதேவி வெளிப்பட் டாள். அவ்வம்மையாரைத் தம்மார்பினிடத்து இருத்திப் பொலிவுற வைத்தனர். அதன் பின்னர்ப் பலசஞ்சீவனிகளுங், கொடிகளுந் தோன்ற, நான்கு புயங்களையுடைய சிவதயாநிதி யாகிய தன்வந்திரிமுனிவர் கையின்கண் அமிர்தந் தாங்கி வெளிப்பட்டார். அவ்வமிர்தத்தை வாங்கித் திருமால் மோகினி ரூபங்கொண்டு அசுரரை யிறக்கும்படி செய்து தேவர்களுக் கீந்தனர் என்பதாம். (௧௨)

அன்னோன் மாயைப் படாம்புதைப்ப வண்ண லயிரா வதப்பாகன்
றன்னோ டமரர் நாரதனே முதல முனிவர் தாமரைக்கண்
முன்னோன் மருங்கி னினிதிருக்கு முளரித் திருவை யுணராம
லின்னோள் யாவ ளெனவுலக மயின்றோ னிதனை யியம்புவான்.

(இ-ள்.) அண்ணல் அயிராவதம் பாகன் ஓடு அமரர்=பெருமையிற் சிறந்த ஐராவத மென்னும் யானையி லேறுகின்ற இந்திரனுந் தேவர்களும், நாரதனே முதல முனிவர்= நாரதரை முதலாகவுள்ள இருடிகளும், அன்னோன் மாயை படாம் புதைப்ப=அத் திருமாலின் மாயா சத்தியாகிய திரையானது மறைக்க அதனால், தாமரை கண் முன்னோன் மருங்கின்=தாமரை மலராகிய விழியினையுடைய விட்டுணுவின் மார்பிலே, இனிது இருக்கும் முளரி திருவை உணராமல்=சிறப்புடன் வீற்றிருக்கின்ற செந்தாமரை யாசனியாகிய திருமகள் இவள் என்று அறியாதவர்களாய், இன்னோள் யாவள் என=ஐயனே! இத் தேவி யார்வள் என்று கேட்குதலும், உலகம் அயின்றோன் இதனை இயம்புவான் = உலகத்தை யுண்ட திருமால் பின்வருமாறு சொல்வா ராயினர்.

தன்—சாரியை. விட்டுணுமூர்த்தி மாயையினைப் புரியும் காரணத்தால் மாயன் எனப் பெயர் கொண்டமை காண்க. ஆன்மாவாகிய தன்னையும், பதியையும் அறியவொட்டாது தடுத்து மறைத்தற்கண் திரைச்சீலை போலுதலின் மாயையினைப் படாம் என்றான். அதனை "தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்—மாயப் படலங் கீறித் தூய ஞான நடனம் பெற்றனன்,, எனப் பதினோராந்திருமுறையினும், "குன்றுத மூவுருவா யருவாய் ஞானக் கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி— நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி நின்னை யாரறியவல்லார்,, எனத் தாயுமான சுவாமிகள் பாடலினுங் கூறப்பட்டமையாற் காண்க. நாரதன் — பிரம புத்திரர். பஞ்சபாரதீயம் என்னும் இசைத்தமிழ் நூலையியற்றினவர் இவரே. நாரம்=தத்துவ ஞானத்தை, தன்=உபதேசிப்பவன் எனப்பொருள் காண்க. ஏகாரம் பிரிநிலை. இந்திரன் தேவர்களுக்குத் தலைவனு யிருத்தலானும், முனிவர்களுள் நாரதர் தாம் அறிந்த ஒவ்வோர் விசேடங் களையும் உலகர்களுக்கு ஆங்காங்குச் சென்று அறிவித்தற் கண் வல்லவர் ஆதலானும், அளவில்லாத தேவ முனிவ கூட்டங்களுள் இந்திரனையும் நாரதனையும் எடுத்து விதந்ததென்க. வரும் அத்தியாயங்க டோறும் கூறப்பட்ட வற்றிற்கும் இதுவே கருத்தாம். (கரு)

சங்கொடு நேமி கிள்ளை தாதவிழ் கமலத் தண்போ
தங்கையோர் நான்கி னேந்தி யாயிரம் பசும்பொற் றோட்டுப்
பங்கய மலரின் வைகும் பைந்தொடி யிவளே பார்க்கி
னங்கண்மா ஞால மாதி யுலகெலா மடைவி னீன்றாள்.

(இ-ள்.) இவள்=இத்தேவியானவள், ஓர் நான்கு அங்கையின்=நான்காகிய கைகளின் கண்ணும், சங்கொடு நேமி கிள்ளை தாது அவிழ் தண் கமலம்போது ஏந்தி=சங்கு சக்கரம் கிளி மகரந்தம் பரவப்பெற்று விரிந்துள்ள குளிர்மையாகிய தாமரைப்பூ என்னு நான்கையுந் தாங்கி, பசு பொன் ஆயிரம் தோடு பங்கயம் மலரின்வைகும் = பசிய பொன் போன்ற ஆயிர மிதழ்களையுடைய செந்தாமரை மலர் ஆசனத்து இருக்கின்ற, பைந்தொடி=பசிய வளையலை யணிந்த இலக்குமி தேவியேயாம், பார்க்கின்=இன்னும் ஆராயுமிடத்து, அம் கண் மா ஞாலம் ஆதி உலகு எல்லாம்= இடமகன்ற பெரியபூமி முதலிய உலகங்க ளெல்லாவற்றையும், அடைவின் ஈன்றாள் இவளே=முறைமுறையாகத் தோற்றுவித்த சிவசத்தியின் கூறாய் நிற்பவளும் இவளேயாம்.

தேவர்களே! முனிவர்களே! இவள் நான்கு கைகளினுஞ் சங்கு முதலிய நான்கையுந் தாங்கி, சகத்திர விதழ்க் கமலாசனத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி தேவியேயாகும். இன்னும் ஆராய்ந் துணைக்கின் உலக மாதாவாகிய சிவசத்தியின் கூறாய் நிற்பவளுமாம்.

இலக்குமிதேவி சிவசத்தியின் கூறுளோன் றென்பதனை இப்புராணம் பார்வதி தோற்ற முரைத்த வந்தியாயத்தில் "பெண்ணொரு பாதியாப் பிரித்த கூற்றினை—யெண்ணறு சத்தியா வியற்றி னனவர்—கண்வழுக் குறமெழிற் கமலைபாதியா—மொண்ணுதன் மகளிரொன் றுணக்க லாயினர்,, என்று கூறப்பட்டதனால் பெண்பாதியை அநேக சத்திகளாகச் செய்தனர் எனவும், அவற்றுள் இலக்குமி தேவியும் ஒருசத்தி யென்றமையானும், பராசத்தி யொன்றே சுத்தசிவசோதி மத்திய நிஷ்கள நிருத்தசிவம் அதிக்கராந்த விந்துக அநதிக்கிராந்த விந்துக பரசிவமாய் நின்ற காலத்து, அதிக்கிராந்த அநதிக்கிராந்த விந்துக பராசத்திக ளாகியும், சதாசிவத்திற்கு மனோன்மனியாகியும், மகேசுரர்க்கு மகேசுவரியாகியும், உருத்திராய காலத்து உமையாகவும், திருமாலாய் நின்ற காலத்து மகா லக்குமியாகியும் நிற்குமென "சத்தியாய் விந்துச் சத்தியாய் மனோன்மனி தானாகி - யொத்துறு மகேசையாகி யுமைதிரு வாணி யாகி-வைத்துறுஞ் சிவா திக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி

யாகு-மெத்திற நின்று னீச னத்திற மவளு நிற்பள். ,, என்ற சிவஞான சித்தியார்ச் செய்யுளானுங் காண்க. ஈண்டுக் கூறிய இலக்குமி சத்தி சிவசத்தியின் காற்பனிக பேத தேகியாய சத்தியெனக் கூறுவாரு முளர். இவளுலக மீன்றதை நவபேத முறைமையாற் காண்க. (கச)

பொறிவரிச் சுரும்புண் டாடுந் தாமரைப் பொகுட்டின் மேய
விறைவனே முதல தேவ ரீங்கிவள் புணர்க்கு மாயைச்
சிறையிடைப் படுந ரல்லாற் றீர்குந ரில்லை யென்ன
வுறிதட வந்து வெண்ணெ யுண்டசெங் கமலம் விண்டான்.

(இ-ள்.) ஈங்கு இவள் புணர்க்கும் மாயை சிறை இடை=இவ்விடத்துள்ள இத்தேவியாற் செய்யப்படுகின்ற மாயையாகிய பந்தத்தினிடத்து,பொறி வரி சுரும்பு உண்டு ஆடும்=புள்ளிகளையுடைய இசைபாடும் வண்டுகள் தேனைப் பருகிக் களிப்பா லாடுகின்ற, தாமரைப் பொகுட்டில் மேய இறைவன் ஏ முதல தேவர்=தாமரைக் கொட்டையாகிய வீட்டின்கணிருக்கும் பிரமனை முதலாகவுள்ள தேவர்களும், படுநர் அல்லால் = அகப்பட்டுழலுவாரல்லாமல், தீர்குநர் இல்லை என்ன=அதினின்றும் விடுபட்டவர்கள் இல்லையென்று, உறி தடவந்து வெண்ணெய் உண்ட=இடைச்சியர்களின் உறியை யெட்டிப் பிடித்து நவநீதத்தை யள்ளியுண்ட, செம் கமலம் விண்டான்=சிவந்த தாமரை மலர்போலுந் திருவாய் மலர்ந்துரைத்தார்.

தேவரும் என்பதன்கண் உயர்வு சிறப்பும்மை தொக்கது. சுரும்பு = பொறிவண்டு. வண்டுகள், தேன் சுரும்பு வண்டு ஞிமிறு என நான்கு வகைப்படும். அவற்றுள், முன்னிரு சாதி நற்கந்தத்தினும், பின்னிரு சாதி நற்கந்தம் துர்க்கந்தம் என்னு மிரண்டினும் மொய்க்கும் என்பர் நச்சினார்க்கினியர். வண்டு நால்வகைப் படுதலை, நைடதம் - நாட்டுப்படலத்தில் "தூங்கிசை வண்டுந் தேனுஞ் சுரும்பொடு ஞிமிறும் பாடத்-தேங்கமழ் சோலை தோறுஞ் சிறைவிரித் தாடு மாதோ. ,, என்று இந்நூலாசிரியன் கூறினமையானும், அவற்றுள் சுரும்பு சிறந்தது என்பதனை, சீவகசிந்தாமணி காந்தருவதத்தையா ரிலம்பகத்தில் "மங்கை நல்லவர் கண்ணு மனமும்போன் - றெங்குமாடி யிடறுஞ் சுரும்புகாள் - வண்டு காண்மகிழ் தேனினங் காண்மது - வுண்டு தேக்கிடு மொண்ஞிமி றீட்டங்காள். ,, என்று திருத்தக்கதேவர் கூறலானுங் காண்க. செங்கமலம் என்பது பொருளாகுபெயராய் மலரை யுணர்த்த, அது வாயினை யுணர்த்தி நிற்றலின் இருமடி யாகுபெயர். படுநர் தீர்குநர் இவற்றின்கண், ந்-பெயரிடைநிலை. தீர்குநர் என்பது தீர் என்னுந் தன்வினை பிறவினைகட்குப் பொதுவாய் வந்த உரிச்சொல் லடியாகப் பிறந்த பெயர். தீர்தல்=விட்டுநீங்குதல், விடுவித்தலுமாம். "தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும். ,, என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். (கரு)

ஈங்கிவள் புணர்க்கு மாயைக் கடல்கடந் தேறி னோர்கள்
யாங்குள ரிசைத்தி யென்ன வின்னநற் காதை முன்னந்
தீங்கற வென்பாற் கேட்டோர் மறையவர் திலகன் யார்க்கு
நீங்கரு மாயை நீங்கிச் சிவனடி நீழல் சேர்ந்தான்.

(இ-ள்.) ஈங்கு இவள் புணர்க்கும் = (கூர்ம ரூபமாகிய அண்ணலே!) இவ்விடத்து விளங்கும் இத்தேவியாற் செய்யப் படுகின்ற, மாயை கடல் கடந்து ஏறினோர்கள் யாங்கு உளர்=மாயையாகிய சமுத்திரத்தை நீந்திக் கதியாகிய கரையேறினோர் எவ்விடத் தாயினு

யிருக்கின்றனரோ, இசைத்தி என்ன=அவரைக் கூறுவீராக என்று (இந்திரன் முதலி னோர்) பிரார்த்திக்க, ஓர் மறையவர் திலகன்=ஒரு வேதியர் குலதிலகனானவன், முன் னம் இன்ன நல் காதை=முன்னர்க்காலத்திலே இந்த நன்மையைக் கொடுக்கும் புராண கதையை, தீங்குஅற என்பால் கேட்டு=குற்ற மில்லாமல் என்னிடத்தி னின்றுங் கேட் டறிந்து, சிவன் அடி நீழல் சேர்ந்தான் = சிவபெருமானது திருவடி நீழலாகிய முத்திக் கரையை யடைந்தான்.

இத்தேவியின் மாயைக் கடலைக் கடந்து முத்திக்கரை சேர்ந்தா ருளரேற் கூற வேண்டு மென்று இந்திராதி தேவரும் முனிவர்களும் பிரார்த்திக்க, கூர்மமாய் நின்றருளிய திருமா லானவர் முற்காலத்தில் ஓர் பிராமணன் என்னிடத்து இக்கூர்ம புராணத்தைக் கேட்டு இவளது மாயைக் கடலைக் கடந்து சிவனடியாகிய முத்திக் கரைசேர்ந்தான் என்றார் என் பதாம். மாயை ஆயிரஞ் சத்திகளை யுடைத்தாதலால் கடல் எனப்பட்டது.

முன்னர்க் காலம் என்றது ஏழாவது மநுவாகிய வைவச்சுதமநுவின் அரசாட்சிக் காலத்தின் மத்தியில் என்க. புராணத்தினைத் தீங்கறக் கேட்டலாவது சந்தேக விபரீத மயக்க மின்றி யன்புடன் கேட்டல். அதனை உபதேச காண்டம் பிரமோத்தர காண்டங் களிற் காண்க. (௧௬)

ஆயநான் மறையோன் முன்னைப் பவத்தினி லாழி சூழ்ந்த
மாயிரு ஞாலங் காக்கும் வழுதியர் குலத்திற் றோன்றல்
பாயொளிப் பரிதி வைவே லிந்திரத் துய்ம்மன் பைந்தார்ச்
சேயனை னெனது தொண்டிற் சிமிழ்ப்புறு மனத்த னானன்.

(இ-ள்.) ஆய நால் மறையோன்=அவ்வாறுய நான்கு வேதங்களையும் உணர்ந்த அந் தணன் (யாவனெனில்), முன்னை பவத்தினில்=முற்பிறப்பில், ஆழி சூழ்ந்த மா இருஞாலம் காக்கும் = கடலாற் சூழப்பட்டுள்ள சிறப்பாகிய பெரிய நிலவுலகத்தைப் பரிபாலனஞ் செய்த, வழுதியர் குலத்தின் தோன்றல்=பாண்டியர் குலத் தோன்றலும், பை தார் சேய் அன்னன்=பசிய கடப்ப மலர்மாலையை யணிந்த குமாரக்கடவுளை யொத்தவனும் ஆகிய, பாய் ஒளி பரிதிவை வேல் இந்திரத் துய்ம்மன்=பரந்த கிரணங்களை யுடைய சூரியனைப் போன்ற கூர்மை கொண்ட வேலாயுதத்தைத் தாங்கிய இந்திரத் துய்ம்மன் என்னும் அர சனேயாம், எனது தொண்டில் சிமிழ்ப்பு உறும் மனத்தன் ஆனன்=(அவ்வரசன்) எனது பணிகளினாற் கட்டுப்பட்ட மனத்தை யுடையவனாயினான்.

முன்னை-ஐ, சாரியை. ஆழி=ஆழத்தை யுடையது. மாயிரு என்பது "வந்திருந்த வண் ணமே யண்ணல் கோயில் வண்ணமே,, என்றதில், கோயில் போல நின்றது. அங்ஙனம் ஆகார ஈறு யகர உடம்படுமெய் பெறுதலை "கிளந்த வல்ல செய்யுளுட் டிரிகவும்-வழங்கி யன் மருங்கின் மருவொடு திரிகவும் - விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின்- வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க-னன்மதி காட்டத் தென்மனர் புலவர். ,,என்ற தொல்காப்பியப் புறனடைவிதியாற் கொள்க. இந்திரத் துய்ம்மன் என்னும் பாண்டிய அரசன் பதுமகற்பத்து முதலாவது மநுவாகிய சுவாயம்புவின் எட்டாவது வழித்தோன்ற லென்றறிக. தோன்றல் = மனிதர்கள் யாவரினும் பெருமையாகத் தோன்றுதலை யுடை யவன். சேய்=செக்கிற முடையவன். அன்னன்-தொகுத்தல் விகாரம். கட்டுப்பட்ட மன மாவது விடயங்களி னுழலாது நன்னெறி யுற்ற வுள்ளம். இவ்வரசனை இந்திரத்திய்ம்நன் என்றுங் கூறுவர். (௧௭)

அத்தகை வழுதி யென்பா லடைவினிப் புராணங் கேட்டு
முத்தக முரிஞ்சு கொம்மை முகிழ்முலைக் கிடப்பா னல்குந்
தத்துவங் கடர்த ஞானத் தனிப்பொருள் பதத்திற் சேர்வான்
சித்தமா லுற்ற தென்னத் தெருளுற வணங்கிச் சொன்னான்.

(இ-ள்.) அ தகை வழுதி=அந்தத் தகுதியையுடைய இந்திரத்துய்ம்ம பாண்டியனான வன், இ புராணம் என் பால் அடைவின் கேட்டு=இக்கூர்ம புராணத்தை யென்னிடத்தில் முறையாகக் கேட்டறிந்தமையால், தெருள் உற = ஞானத் தெளிவுபொருந்த, முத்து உரிஞ்சு அகம் முகிழ் கொம்மை முலைக்கு = முத்து மாலையைப் பூணுதலால் உரோஞ்சப் பெற்ற உள்ளிடத்தைக் கொண்ட அரும்பு போன்ற இளமையாகிய தனங்களையுடைய உமா தேவிக்கு, இடம் பால் நல்கும் = இடப் பாகத்தைக் கொடுத்தருளிய, தத்துவம் கடந்த ஞானம் தனி பொருள் பதத்தில்=தத்துவங்களை யெல்லாங் கடந்த ஞான மயமாகிய ஒப் பற்ற சிவ பெருமானது திருவடிக்கண், சேர்வான் சித்தம் மால் உற்றது என்ன=அடை தற் குரிய னாகும்படி என்மனம் மோகிக்கின்றது என்று, வணங்கி சொன்னான்=பணிந்து சொன்னான்.

அடைவாவது – சிரவணம், மனனம், நிதித்தியாசனமாம். சிரவணமாவது கேட் டல். மனனமாவது கேட்டவற்றைச் சிந்தித்தல். நிதித்தியாசனமாவது சிந்தித்தவற்றைத் தெளிதலாம். முகிழ் முலை–உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை. மண்முதற் சிவமீறு வுள்ள தத்துவக் குழாங்க ளெல்லாம் ஞேயப் பொருளா யடங்க லானும், ஞேயஞ் சடமாகலானும் அவை யல்லவாகிக் கடந்த பொருள் என்பான் "தத்து வங் கடந்த,, என்றும், ஆன்மாவுஞ் சித்து ரூபியாயினுந் தன்னைத் தானறியாக் கட்புலன் போலத் தன்னைத் தானறியாமையானும், அறிவிக்க அறியுஞ் சித்தாகலானும், அப்பரம் பொருளே முற்றுணர் வுடையது என்பான் "ஞானம்,, என்றும், அதுவே யொப்புயர் வின்றி விளங்குவது என்பான் "தனிப்பொருள்,, என்றுங் கூறினான். (௧௮)

வருபிறப் பதனி லிம்மைப் பெயரொடு மம்மர் நீங்கித்
தெருளின்முற் பவங்க ளங்கை நெல்லியிற் றெளிந்து தோன்ற
விருபிறப் பாளனாகி யென்னுழைப் போந்தி யார்க்குங்
கருதரு ஞானம் யாவுந் துகளறக் கற்ற பின்னர்.

(இ-ள்.) இம்மை பெயரொடு மம்மர் நீக்கி=அரசனே இப்பிறப்பி லடைந்த நாம ரூபத்துடனே அஞ்ஞானமும் அகலப் பெற்று, வரு பிறப்பு அதனில்=அடுத்த பிறப்பிலே, இருபிறப்பாளன் ஆகி=பிராமணனாய்ப் பிறந்து, தெருளில்=ஞானத் தெளிவினால், முன் பவங்கள் அங்கை நெல்லியின் தெளிந்து தோன்ற=பூர்வ சனனங்களின் றன்மைகள் உள் ளங்கையி னெல்லிக் கனிபோலத் தெளிவாக விளங்க, என் உழை போந்து=என்னிடத் தில் வந்து, யார்க்கும் கருத அரு ஞானம்=எவர்களுக்கும் நினைத்தற்கும் அரிய ஞானப் பொரு ணூல்களை யெல்லாம், துகள் அற கற்ற பின்னர்=குற்ற நீங்கக் கற்றபின்பு.

இதுமுதல் இரு செய்யுள் குளகம். உம்மை என்பது கழிந்த பிறப்பிற்கும், அம்மை என்பது வருபிறப்பிற்கும் பெயராகலால், இம்மை என்பதற்கு இப்பிறப்பு என்று பொருள். பிராமணர்க்கு இருபிறப்பாவது உபநயனத்தின்முன் ஒருபிறப்பும் பின் ஒரு பிறப்புமாம். அங்கை என்பது அங்கையென விகாரப்பட்டு நின்றது. (௧௯)

கலிவிருத்தம்.

வைவச்சுத மந்வந்தர மகல்வுற்றுழி மன்னு
வெவ்வக்கட லிடுமாணவ மகலத்துவ ரிலவங்
கொவ்வைக்கனி நிகர்வாயுமை பங்கிற்றிகழ் குழகன்
றெய்வக்கம லச்சேவடி சென்றெய்துவை யன்றே.

(இ-ள்.) மன்னு=அரசனே, வைச்சுதமந் அந்தரம் அகல் உற்றுழி=வைவச்சுதமநு வரசனின் ஆயுட்காலம் நீங்கும் அப்பொழுதே, எவ்வம் கடல் இடும் ஆணவம் அகல=பிறவித் துன்பமாகிய சமுத்திரத்தில் விழுத்துகின்ற மூலமலத்தின் வலியானது நின்னை விட்டுக்கெட, துவர் இலவம் கொவ்வை கனி நிகர் வாய்=பவளத் துண்டினையும் இலவமலரையுங் கோவைப் பழத்தையும் போன்ற வாயினையுடைய, உமை பங்கின் திகழ் குழகன்=உமாதேவியை யொரு பாகமாகவுடைய சிவபெருமானது, தெய்வக் கமலம் சே அடி சென்று எய்துவை=தெய்வத் தன்மையுள்ள தாமரைமலர் போன்ற செவ்விய திருவடியிற் பொருந்தக் கடவாய்.

அரசனே! வைவ்ச்சுத மநுவந்தரம் முடிந்த பின்னர் நின்னை அநாதியே பந்தித்த ஆணவ மலத்தின் வலிமை கெட, சிவபெருமானது திருவடியின் கீழ் இனிது அமர்தலாகிய அத்துவித முத்தியை யடைவாய் என்பதாம்.

அன்று-ஏ-அசை நிலைகள். வைவச்சுதமநு என்பவன் கன்னிமாத ரவியெனப் படும் விவச்சுவான் என்னுஞ் சூரியனது குமாரனும். சிராத்ததேவன் எனவும் பெயர் பெறுவன். பதினன்கு மநுக்களுள் இவன் ஏழாவது மநு. ஒரு மநுவரசனின் அந்தரமாவது எழுபத்தொரு மகாயுகங் கொண்ட காலம். அஃதாவது தேவவருடம் எட்டிலக்கத்தைம்பத்தீராயிரமும், மானுட வருடம் முப்பது கோடியே யறுபத்தேழிலக்கத் திருபதினாயிரமுமாம். ஆணவ மலமென்பது ஒன்றே யாகலின் அதுவே மறைத்து நீங்கு மென்னின், ஒருவன் முத்தனுங் காலத்து எல்லோரும் முத்தராக வேண்டு மாதலால் அவரவரை மறைத்து முறைமையிற் பரிபக்கும்வர நீங்கிக் கெடுவது அம்மலத்தின் சத்திகளே யென்றுணர்க. முத்தியினும் மும்முதலு முண்டென்று கூறலான் ஆணவமலம் அக்காலத்து வறுத்த வித்துப் போலுளதாம் என்பது சித்தாந்தம். குழகன்=இளமையுடையவன், அழகுடையவன். பவளம் செந்நிறத்திற்கும், கோவைக் கனி அதனோடு மென்மைக்கும், இலவம்பூ வாயினின்று வரும் வாசனைக்கும் ஒத்த வென்க. (உ0)

அந்நாள்வரு காறுஞ்சுட ரவிர்வெண்மதி மரபிற்
றென்னுமணி முடிமன்னவர் திறைதந்தடி பரவப்
பைந்நாக மிசைத்தங்கிய பாரேழு மளிப்பா
யென்னுவுரை செய்யத்தொழு தெழின்மாநகர் புக்கான்.

(இ-ள்.) சுடர் அவிர் வெள் மதி மரபின் தென்னு=ஒளி விளங்கா நின்ற வெள்ளிய சந்திர குலத்துதித்த இந்திரத்துய்ம்ம பாண்டியனே, அ நாள் வருகாறும்=மேற் கூறிய நாள்முடிவு வரும் வரையும், மணி முடி மன்னவர்=இரத்தினங்கள் அழுத்திச் செய்யப்பட்ட கிரீடத்தையுடைய அரசர்கள், திறை தந்து அடி பரவ=இறை கொடுத்து நின்பாதங்களை வணங்கித்துதிக்க, பை நாகம் மிசை தங்கிய பார் ஏழும் = பணமுடியை யுடைய ஆதிசேடனிற் பொறுத்த பூமியேழினையும், அளிப்பாய் என்னு உரைசெய்ய=உய்யும்

படி காக்கக்கடவாய் என்று யான் கூற, தொழுது எழில் மா நகர் புக்கான்= (அவன் என்னை) வணங்கி அழகிய பெரிய தன்னகரத்தை யடைந்தான்.

பார்=பார்க்கப்படுவது, பருமையை யுடையது. பாரேழும் என்றது, சம்புத்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத் தீவு, கோமேதகத் தீவு, புட்கரத் தீவு, சான்மலித் தீவு என்பனவாம். மேலேழுலகம் கீழேழுலக மெனின் இவ்வரசற்கும், பார் என்ற பதப் பிரயோகத்திற்கும் பொருந்தாமை யறிக. "மன்னவர் திறை தந்து அடி பரவ,, என்றதனால், பகைஞர் பொருளுந் திறைப்பொருளுங் குற்றஞ் செய்தோரை யொறுக்கும் பொருளும் ஆகிய மறநிலைப் பொருளியலும், இதற்கினமாய அறநிலைப்பொருளியலும், நிரைமீட்டல் பகைவெல்ல லாதிய மறநிலை யறத்தினியலும், "அளிப்பாய்,, என்றதனால், நால்வகை வருணத்தாரும் ஆச்சிரமத்தாருந் தத்தம் ஒழுக்கங்களி னின்றுந் தவறாது நிலைபெறப் பாதுகாத்தலாய அறநிலை யறத்தி னியலுமாகிய நால் வகை யரசியலுங் கொள்க. (௨௧)

உலகம்பொது வறநூன்முறை யோராழி செலுத்தி
யலகில்லன பரிமாமக மறையின்வழி யாற்றி
நிலவும்புக ழுலகேழினொ டேழுஞ்செல நிறுவிக்
கலையின்கடல் கரைகண்டவன் வாழ்நாள்கரை கண்டான்.

(இ-ள்.) கலையின் கடல் கரை கண்டவன்=வித்தைகளாகிய சமுத்திரத்தின்கரையைக் கண்டவனாகிய இந்திரத்துய்ம்மன் என்பவன், உலகம் பொது அற=உலகத்தைப் பொதுவில்லாமல், நூல் முறை ஓர் ஆழி செலுத்தி=தருமநூலின்படி ஏக சக்கிராதிபதித்துவஞ் செய்து, அலகு இல்லன பரிமா மகம் = அளவில்லாதன வாகிய அசுவமேத யாகத்தை, மறையின் வழி ஆற்றி=வேதவிதிப்படி செய்து முடித்து, நிலவும் புகழ் ஏழினொடு ஏழு உலகும் செல நிறுவி=அழியாது விளங்குங் கீர்த்தியைப் பதினான்குலகமும் பரவும்படி நிறுத்தி, வாழ்நாள் கரை கண்டான்=தன் ஆயுளாகிய கரையையுங் கண்டான்.

இந்திரத்துய்ம்மன் உலகத்தைத் தனியாக ஆண்டு, யாகங்களையுஞ் செய்து, புகழ் நிறுவிப் பூதவுடம்பை விட்டனன் என்பதாம். அலகில்லன—வினைமுற்று வினையெச்சமாய் நின்றது. பதினான்குலக மாவது கீழ் ஏழுலகமும் மேல் ஏழுலகமுமாம். (௨௨)

தோலாவிறன் முடியோனுயிர் தொலைவுற்றபி னெறிநீர்ப்
பாலாழி யுடுத்தோங்கிய படர்தீவினி லெய்தி
மாலோனென வைகுண்ட நகர்ப்போக மகிழ்ந்தே
மேலாமரு மறையோர்குல மேம்பாடுற வுதித்தான்.

(இ-ள்.) தோலாத விறல் முடியோன் = தோல்வி யடையாத வீரத்தை யுடைய கிரீடாதிபதி யாகிய இந்திரத்துய்ம்மன் என்பவன், உயிர் தொலைவு உற்றபின்=உயிர் நீங்கிய பின்பு, எறி நீர் பால் ஆழி உடுத்து ஓங்கிய = திரைகளை வீசுகின்ற நீர்மிக்க பாற்கடலாற் சூழப்பட்டுயர்ந்த,படர் தீவினில் எய்தி=பரந்த சுவேதத் தீவினிடத்துச் சென்று,மாலோன் என=திருமாலைப் போல, வைகுண்டம் நகர் போகம் மகிழ்ந்து=வைகுண்ட நகரின்கண் அநுபவிக்கும் போகங்கள் போல எல்லாவற்றையும் அநுபவித்து, (அதன் பின்னர்) மேல் ஆம் அரு மறையோர் குலம் மேம்பாடு உற உதித்தான்=மேன்மை யாகிய அரிய வேதாகமங்களில் வல்ல பிராமணகுலமானது பெருமையுறும்படி பிறந்தான்.

இந்திரத்துய்ம்மன் இறந்தபின், சுவேதத் தீவின்கண் சென்று திருமாலி னுருவம் பெற்று அங்குள்ள போகங்களை யெல்லாம் அநுபவித்து முடிந்தவுடன், மீட்டும் உலகத்தில் வந்து பிராமணனாய்ப் பிறந்தான் என்பதாம்.

சுவேதத் தீவானது அசுவமேதம் இராசசூயம் விச்சுவதித்து பிரமமேதம் பிரணவ மேதம் பவுத்திர மேதம் பசுபந்த முதலிய யாகங்களும், திருமால் வழிபாடு, சிவ சம்பந்தத்தை யடைய வேண்டு மென்னும் இச்சை முதலியவும் ஆகிய புண்ணியங்களை யுள்ளவர்கள் இன்பத்தை யநுபவித்தற்கு இடமாயுள்ளது. அது சந்திரன் போன்ற வெண்ணிற மயமாய், ஆதியரிவஞ்சம் முதலிய போகபூமி யாதினும் சுவர்க்கலோகம் மனோவதி முதலிய பதவிகளினுஞ் சிறந்துள்ளது. போக்கியப் பொருள்கள் அளவின்றி நிறையப் பெற்று, சூரியனொளி மயமான பலதானங்களையு முடையது. இதன்கண் இருப்பார் யாருஞ் சந்திரன் போன்ற வெண்ணிறத்தராய், நோய், துன்பம், மூப்பு, துயில், நரை, திரைமுதலிய வின்றி, குற்ற நீங்கிய மனத்தராய், வேதாகம உபநிடதங்களை யாராய்ந்து சிவமே மெய்ப்பொருள் எனக்கொண்டு அவனை யகோராத்திரந் தியானிப்பவர்கள். அன்றியும் சிதரமூர்த்தி போலப் பஞ்சாயுதங்களைத் தாங்கி, கௌத்துவ ரத்தினம் பூண்டு,சிவற்சம் என்னும் மறுப்பொருந்திய மார்போடு அவர் உருவம் பெற்றுப் போகங்களை நுகர்வார் ஆகலின் இவனும் அவ்வாறு நுகர்ந்தான் என்க. வைகுண்ட நகர்ப் போகம் மகிழ்ந்து= சுவேதத் தீவின்கணுள்ள நாராயணபுரம் என்னும் நகரினுள்ள போகங்களை யெல்லாம் நுகர்ந்து, என்று பொருள் கொள்ளினுமாம். இவற்றின் விரிவுகளை இதனில், **பிலக்கமுதலிய தீவுகளினியற்கை யுரைத்த அத்தியாயத்திற் காண்க.** தத்துவ ஞானஞ் சாரும் ஓர்பிள்ளை பிறக்குமாயின் அக்குலத்துதிக்கும் இருபத்தொரு தலைமுறைச் சந்ததியாரும் முத்தி யடைவார் என்பது ஆன்றோர் வாக்காகலின், ஈண்டும் இந்திரத் துய்ம்மனும் சிவ ஞானமடைந்து சிவசாயுச்சிய முத்தியை யடைதற்குத் தவஞ்செய் சாதியாகிய பிராமண குலத்திற் பிறந்தானாகலின் அக்குலத்தார்க்கும் பெருமை வந்ததென்பான் "மேலாமரு மறையோர்குல மேம்பாடுற வுதித்தான்,, என்று கூறினான். அதனை "மூவேழ் சுற்றமுமுரணுறு நரகிடை-யாழா மேயரு ளரசே போற்றி. ,, என்று திருவாசகத்திற் திருவாய் மலர்ந்தருளி யதனா னறிக. (௨௫)

அருமாமக முறுநற்பலன் விழையாதினி தாற்றி
வருநாளிலென் னுருவாமொரு கலைவந்தெதிர் மன்ன
விருதாண்மலர் பணியாமகிழ் வெய்தா வடையாளந்
திருமாலது நீயாரைகொ லெனமாதுரை செய்வாள்.

(இ-ள்.) அரு மா மகம் = (அங்ஙனம் உற்பவித்த பிராமணன்) அருமையாகிய பெரிய யாகத்தை, உறு நல் பலன் விழையாது = அதனால் வருகின்ற நன்மையாகிய பலனைப் பெற விரும்பாது, இனிது ஆற்றி வரும் நாளில்= இனிமையாகச் செய்து வருகின்ற காலத்தில் ஒருநாள், என் உரு ஆம் ஒரு கலை=எனது வடிவாகிய சத்திகளுள் ஒரு சத்தியானது, எதிர்வந்து மன்ன=அவனுக்கு எதிரே போய்ப் பிரசன்னமாக, மகிழ்வு எய்தா= அவன் களிப் படைந்து, மலர் இருதாள் பணியா=செந்தாமரை மலர்போலும் பாதங்களை வணங்கி, அடையாளம் திருமாலது = (அன்னையே நினது அடையாளங்கள் யாவும்) விட்டுணு பகவானது அடையாளங்கள்போ லிருக்கின்றன, நீ யார் கொல் என=நீ யாவளோ எனக்கு உரைத்தருள்வாய் என்று கூற, மாது உரைசெய்வாள்-அச் சத்தியானவள் சொல்வாளாயினாள்.

கொல் ஐயப்பொருளில் வந்தது. யாரை-இதில், ஐ சாரியை. எய்தா என்பது ஆகார வீற்று உடன்பாட்டு வினையெச்சம். அந்தணர்க்கு யாகஞ் சிறந்ததாகலின் ஒழுக்கந் தவ

றுது செய்தான் என்றும், அவ் யாகத்தை யியற்றிய விடத்தும் அதற்குரிய பலனே விரும்பாது நிட்காமியமாகவியற்றினன் என்றுங் கொள்க. "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது - வேண்டாமை வேண்ட வரும். ,, என்று நாயனுர் அருளியதும் இக் கருத்தேயாம். (உச)

மன்றற்றுள வத்தார்புனே மாயன்றனி மாயை
யென்றற்புத மொடுநீயெனே நினேவாயிறை யடியிற்
சென்றுற்றவர் மருளும்படி செய்யே னுயர்ஞானத்
தொன்றிற்சிவ னருளாலவ னடிநீழலி லுறைவாய்.

(இ-ள்.) நீ என்னே = அந்தணனே நீ என்னே, மன்றல் துளவம் தார்புனே மாயன்= வாசனே பொருந்திய துழாய் மாலேயை யணிந்த திருமாலினது, தனி மாயை என்று=ஒப்பற்ற மாயா சத்தி யென்று, அற்புதம் ஒடு நினேவாய்=ஆச்சரியத் தோடும் எண்ணக் கடவாய், இறை அடியில் சென்று உற்றவர்=சிவபெருமானது திருவடிஞானத்திற் பொருந்தி நிலேத்துள்ளாரை, மருளும்படி செய்யேன்=மயக்கும்படி செய்யமாட்டேன், (ஆகலால்) சிவன் அருளால்=சிவபெருமானது திருவருளினுலே, உயர் ஞானத்து ஒன்றின் = மேலாகிய அச்சிவஞானத்தில் நீயும் பொருந்தி நிலேத்தால், அவன் அடி நீழலில் உறை வாய்=சிவபெருமானது திருவடி நிழலில் உற்று வாழ்வாய்.

திருவடி ஞானம் எனினும், சிவஞானம், அருண்ஞானம், பரஞானம், அத்துவித ஞானம், சன்மார்க்கம், மெய்ஞ்ஞானம் எனினும் ஒக்கும். பசுபாச ஞானங்களால் இறைவனே யறிதல் கூடாமையானும், மெய்ஞ் ஞானத்துள்ளும் அபர ஞானங்களாலும் சாயுச்சியஞ் சார்தல் கூடாமையாலும், உயர்ந்த ஞானமாகிய திருவடி ஞானத்தினுல் முத்தியடைவாயாக என்றதாம். அக்கினித்தம்பஞ் செய்ய வல்லானுக்கு அக்கினி சுடாமையும், ஔடத மந்திர முள்ளார்க்கு விடமேறுமையும் உண்மையயாமாறு போலத் திருவடிஞானம் அடைந்தார்க்குச் சஞ்சித ஆகாமிய வினேகளோடு, சுபத்தம் மந்தம் தீவிரம் என்னும் மூவகைத்தாய பிராரத்தவினேயும் வாதிக்க மாட்டாவாக, மாயையும் வாதியாது என்றுணர்க. (உரு)

எனலும்புவி புனறீவளி வெளியாயிவை யெய்தாத்
தனியோர்பொரு ளனேயானறி வகைசாற்றுதி யென்ன
நினேயும்படி யுலகுண்டரு ணெடுமால்சொலு மென்ன
வனேயோனுட றடவந்தலர் மயிலன்பி னகன்ருள்.

(இ-ள்.) எனலும்=என்று மாயாசத்தி கூறுதலும், புவி புனல் தீ வளி வெளி ஆய்= பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களாகியும்,இவை எய்தாத=இவையாகவும் பெருத, தனி ஓர் பொருள் தனே=ஒப்பற்ற ஏகமாயுள்ள பதிப்பொருளே, யான் அறிவகை சாற்றுதி என்ன=சிறியேனுகிய யான் தெரிந் தடையும் உபாயத்தை யுரைத்தருள வேண்டும் என்று அந்தணன் கேட்ப,அலர் மயில்=தாமரை மலரில் வாழும் மயில்போலுஞ் சாயலேயுடைய மாயாசத்தி யானவள், நினேயும் படி = (நீ யப்பொருளே யறிந்து) தியானிக்கின்ற வழியை, உலகு உண்டு அருள் நெடு மால்=உலகத்தினே விழுங்கி மீளவும் வெளிப்படுத்தி யருளும் நெடிய திருமால், சொல்லும் என்ன=உபதேசிக்கும் என்று கூறி, அன்பின் அனேயோன் உடல் தடவந்து=அன்பினுலே யம்மறையவனது சரீரத்தினேத் தழுவி, அகன்ருள்=மறைந்து சென்ருள்.

பிருதிவி முதலாய பூதங்களாகியும்,அவை யல்லவாகியும் இருக்கும் ஓர் தனிப்பொருள் என்றதனை "உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி,, என்ற சிவஞான சித்தியார்ச் செய்யுளால் அறிக. சாயலால் மயில் உவமான மாயிற்று. சாயல்=மென்மை. ()

புருவத்திடை யிருகண்கள் புகுத்திப்புல னைந்தும்
வெருவுற்றிடு விடயங்களி னெய்தாது விலக்கி
யருவத்துறு மான்மாவினை யான்மாவி னொடுக்கி
மருவுற்றிடு துளவோனடி மனனித்திடு போழ்தின்.

(இ-ள்.)இருகண்கள் புருவத்து இடை புகுத்தி=(இந்திரத்துய்ம்மனுகிய வேதியன்) தன் இருகண்களையும் புருவங்களின் நடுவே செலுத்தி, ஐந்து புலனும் = பஞ்ச புலன்களையும், வெருவு உற்றிடு விடயங்களின் எய்தாது விலக்கி = பயப்படத் தக்க விடயங்களிலே போகாமற் றடுத்து,ஆன்மாவினை=சீவான்மாவை,அருவத்து உறும் ஆன்மாவின் ஒடுக்கி= அந்தரியாமியாய் நிலவும் பரமான்மாவோடும் இரண்டற வொடுக்கி, மரு உற்றிடு துளவோன் அடி=வாசனைபொருந்திய துழாய் மாலையையுடைய நாரணக் கடவுளின் திருவடிகளை, மனனித்திடு போழ்தின்=தியானித்த அக்காலத்தே.

இதுமுதல் இருசெய்யுட்கள் குளகம். ஐம்புலன்களாவன—சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பன. இவற்றின் விடயங்களாவன-சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பனவாம். ஒற்றுமை நயத்தாற் பதிப்பொருளுக்கு ஆன்ம சத்தத்தினை வேதாகமாதிகளிற் சிலவிடத்துக் கூறப்படுதலால், ஈண்டும் பதியை ஆன்மா என்றதாம். ஏகான்மவாதிகள் ஆகிய மாயாவாதிகள் ஆன்மசத்தம் பிரமம் ஒன்றற்கே யுரிய தென்று கூறலின், அதனை மறுத்துச் சைவசித்தாந்தப்படி பசுவர்க்கத்திற்கும் உரிய தென்று காட்டியதாம் என்க. (உஎ)

செந்தாமரை மலர்மாதிரு முலையானை திளைக்கு
மந்தாரக லத்தோனுயர் மறையோனெதி ரணுகக்
கொந்தார்மலர் தூவாமொழி குழறாவிழி களியா
வெந்தாயென விருதாண்மலர் தொழவண்ண லிசைப்பான்.

(இ-ள்.) செம் தாமரை மலர் மாது=செந்தாமரைப் பூவின்கணிருக்குந் திருமகளினது, இரு முலை யானை திளைக்கும்=இரண்டு கொங்கைகளாகிய யானைகளும் உழக்கப் பெறுகின்ற, அம் தார் அகலத்தோன்=அழகிய மாலைபுனைந்த மார்பினையுடைய திருமால், உயர் மறையோன் எதிர் அணுக=மேன்மையை யுடைய வேதியனுக்கு முன்னேதோன்றி நிற்க, எந்தாய் என=எமது தந்தையை யொத்த கடவுளே எழுந்தருளினையோ என்று, மொழி குழறா=உரைகள் தடுமாறத் (துதித்து) விழி களியா=கண்களாற் கண்டு களிப்புற்று, மலர் இரு தாள் = தாமரை மலர்போன்ற இரு திருவடிகளினும், கொத்து ஆர் மலர் தூவா தொழ = கொத்துகளாக நிறைந்துள்ள புட்பங்களைச் சொரிந்து வணங்கிநிற்க, அண்ணல் இசைப்பான்=திருமால் உபதேசிப்பா ராயினர்.

இச்சரித்திரத்தை இந்திரன்முதலிய தேவர்களும், நாரதர் முதலிய முனிவர்களுங் கேட்பச் சொல்லுகின்ற திருமாலே, தம்மைப் பிறன்போலப் படர்க்கையாக வைத்துக் கூறியது என்னெனின் மூர்த்தி பேதத்தா லென்க. தூவா குழறா களியா என்பன தூவி, குழறி, களித்து எனப் பொருள்படுதலால் செய்யா என்னும் உடன்பாட்டு இறந்தகாலவினை யெச்சங்களாம். கொத்து-மெலித்தல் விகாரம். (உஅ)

கருதரு தத்துவம் விபூதி காரிய
மருவுகா ரணம்பிர விர்த்தி மற்றவை
தெருளினோர்ந் துயர்நெறி செல்ல வேண்டுந
ரரனடிப் பூசனை யாற்றல் வேண்டுமால்.

(இ-ள்.) உயர் நெறி செல்ல வேண்டுநர் = (அந்தணனே!) உயர்வாகிய முத்தி நெறியையடைய விரும்புவோர், கருத அரு தத்துவம்=நினைத்தற்கரிய பதிப்பொருளின் இலக்கணங்களையும், விபூதி=அதனது ஐசுவரியத்தையும், காரியம்=அதனாற் காரியப்படுகின்ற உலகத்தையும், மருவு காரணம்=அக்காரியத்திற்கு வேண்டிய காரணங்களையும், பிரவிர்த்தி=அக்காரணங்களால் தொழிற்பட்டு வரும் விதத்தினையும், மற்றவை = அறிய வேண்டிய மற்றவைகளையும், தெருளின் ஓர்ந்து = குருமுகத்திற் றெளிவாக அறிந்து, (அதன்பின்னரே) அரன் அடி பூசனை ஆற்றல் வேண்டும்=சிவபெருமானது திருவடிப் பூசையைச் செய்தல் வேண்டும்.

அந்தணனே! முமுட்சுத்துவ முள்ளோர் தத்துவம், விபூதி, காரியம், காரணம், பிரவிர்த்தி யென்னும் ஐந்தனையும் முக்கியமாக அறிந்து சிவபெருமானது திருவடிப் பூசையைச் செய்தல் வேண்டும் என்பதாம்.

கருத—அகரந் தொகுத்தல். தத்துவம்=உண்மைப் பொருள். பதிப்பொருளின் இலக்கணங்கள் ஆவன-சொரூபலக்கணம் தடத்தலக்கணம் என்பனவாம். மற்றவைகளாவன—வருணபேதம், ஆச்சிரம முறை, சமய நிர்ணயம், காலப்பிரமாணம், விதிவிலக்கு, பிரளயக் கூறுபாடு, நித்தியாநித்திய வஸ்து விவேகம், சமாதி சட்க சம்பத்து முதலியனவாம். (உக)

ஓதிய வருணநல் லொழுக்கம் பூண்டுறு
காதலில் வருசிமிழ்ப் பனைத்துங் கையொரீஇ
மாதர்கூர் சகத்தினை மாயை யென்றுயி
ராதியம் பரஞ்சுட ராகப் பாவிப்பாய்.

(இ-ள்.) ஓதிய வருணம் நல் ஒழுக்கம் பூண்டு = சொல்லப் படுகின்ற வருணத்திற்குரிய நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு, உறு காதலின் வரு சிமிழ்ப்பு அனைத்தும்= அவிச்சை வயத்தாற்பொருந்திய அவாவினாலேயுண்டாகின்ற பந்தங்கள் எல்லாவற்றையும், கை ஒருவி=கைவிட்டு, மாதர் கூர் சகத்தினை மாயை என்று = ஆசையை விளைவிக்கின்ற சகத்தினை மாயாசம்பந்தமுள்ளது என்றும், உயிர் ஆதி = ஆன்மாவுக்கு முதன்மையாயுள்ளது, அம் பரஞ்சுடர் ஆக பாவிப்பாய் = அழகிய பரஞ்சோதி வடிவாகிய பதிப்பொருளே என்றும் அறிந்து பாவனை செய்யக் கடவாய்.

ஒழுக்கம் விழுப்பந்தரு மாதலின் முற்கூறப்பட்டது. அவ்வொழுக்க மாவது "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,, என்ற தோல்காப்பிய விதிப்படி ஓதல் ஓதுவித்தல் முதலாய அறுவகைத் தொழில்களையாம். அவற்றை வரும் அத்தியாயத்திற் காண்க. அவாவினால் உண்டாகின்ற பந்தமாவது, மண் பெண் பொன் என்னு மூவாசை. மாயை என்றதற்கு மித்தை என்றும், உயிர் ஆதியம் பரஞ்சுடர் ஆகப்பாவிப்பாய் என்றதற்கு உன்னைப் பரப்பிரமமாகப் பாவனை செய்வாய் என்றும் பொருளுரைப்பார் ஓர் சாரார். ()

பாவனை தானுமுப் பகுதி யென்னுரு
வோவற வுணர்வதொன் றவ்வி யத்தமேற்
ருவற வுணர்வதொன் ருென்று தற்பர
மேவரும் பாவனை யென்பர் மேலையோர்.

(இ-ள்.) பாவனை தானும் முப்பகுதி=தியானமும் மூன்று வகைப்படும், ஓ அற என் உரு உணர்வது ஒன்று=நீங்குத லில்லாமல் எனது சொருபத்தை யுள்ளவாறு அறிந்து தியானிப்பது ஒன்ருகும், மேல் அவ்வியத்தம் தா அற உணர்வது ஒன்று = என்னை மேலான அருவமாகக் குற்றமின்றி யறிந்து தியானிப்பது ஒன்ருகும், மேவு அரு தற்பரம் பாவனை ஒன்று=இவை யிரண்டனையும் பொருந்துதல் இல்லாத தற்பரமாகக் கண்டு தியானிப்பது ஒன்ருகும் என்று, மேலையோர் என்பர்=பெரியோர் கூறுவர்.

தான் சாரியை-உம்மை-எச்ச வும்மை. ஓ-முதனிலைத் தொழிற்பெயர். உருவ தியானத்தை அக்கரபாவனை யெனவும், அருவ தியானத்தை மகைஸ்வரிய பாவனை யெனவும், தற்பர தியானத்தைப் பிராமி பாவனையெனவுங் கூறுவர். உருவமாவது—அர்த்த நாரீசுரர், சோமாஸ்கந்தர், சபாபதி, பிக்ஷாடனர் முதலிய இருபத்தைந்து கேவல வடிவங்களும், விநாயகர், உமை, சுப்பிரமணியர் முதலிய யோகபோக மூர்த்தங்களுமாம். அவ்வியத்தம்=வெளிப்படாதது, சூக்கும உரு. அது சிவம் சத்தி நாதம் விந்து என்னு நான்குமாம். தற்பரமாவது இத் தத்துவங்களை யெல்லாங் கடந்து ஒரு குணம் குறி செயன் முதலிய கற்பனைகளின்றி விளங்கும் பொருள். அதனை "பலகலை யாகம வேதம்,, என்னுஞ் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானும் அறிக. (௩௧)

முடிவினின் மொழிந்தருள் பிரம மாலயற்
கடிமுடி தேடுதற் கரிய தாகுமச்
சுடரினை நறுமலர் தூவிக் கைதொழி
னொடிவறு முத்திவீ டதனி லொன்றுவாய்.

(இ-ள்.) முடிவினில் மொழிந்திடு பிரமம்=இறுதியிற் கூறப்பட்ட தற்பரமாகிய பிரமப் பொருளானது, மால் அயன் கு அடி முடி தேடுதற்கு அரியது ஆகும்=திருமால் பிரமன் என்பவர்களுக்கும் அடியையும் முடியினையுந்தேடி யறிதற்கும் அருமையா யுள்ளது,அ சுடரினை=அந்த ஒளிவடிவாயுள்ள பரமசிவத்தை,நறு மலர் தூவி கை தொழின்=நல்ல புட்பங்களால் அருச்சித்துக் கைகூப்பி வணங்குவையாயின், ஒடிவு அறு முத்திவீடு அதனில் ஒன்றுவாய்=நீங்குதலில்லாத சிவசாயுச்சிய முத்தியிற் சேர்வாய்.

இதனுற் சிவோகம் பாவனை செய்யின் முத்தியுண்டாம் என்றதாம். ஆன்மாவானது வேத சாத்திரமுதல் நாத தத்துவ மீருவுள்ள பாசஞானங்களாற் சிவனைத் தேடிக் கிழோக நாடலால் அதனைத் திருமால் எனவும், பசுஞானத்தால் நானே பிரம மென்று மேற்கொண்டதனைப் பிரமன் எனவும் உருவகித்ததாகவும் உய்த்துணரப்படும். ஆகவே பசு பாச ஞானங்களான் அறிவருந்தகையது சிவமென்க. (௩௨)

எனத்தொழு திந்திரத் துய்ம்ம னேத்துருத்
தனிப்பர தத்துவம் விபூதி காரிய
நினைப்பில்கா ரணம்பிர விருத்தி நீயெவன்
மனக்குற வுரையென மகிழ்ந்து கூறுவான்.

(இ-ள்.) என=என்றிவ்வாறு திருமால் கூற, இந்திரத்துய்ம்மன் ஏத்து உரு=அந்தணனுயிருந்த இந்திரத்துய்யமன் என்பவன் துதித்து, தனி பரதத்துவம் எவன் = ஒப்பற்ற பரதத்துவ மாவது யாது, விபூதி காரியம் எவன்=விபூதியென்பதுங் காரிய மென்பதும் யாது, நினைப்பு இல் காரணம் எவன்=நினைத்தற்கரிய காரணம் என்பது யாது, பிரவிருத்தி எவன் = பிரவிருத்தி யென்பது யாது, நீ எவன்=நீ எத்தன்மையன் (என்னுமிவற்றை) மனக்கு உற உரை என=என்மனத்திற்குப் பதியும்படி உபதேசித்தருளவேண்டும் என்றுகேட்க, மகிழ்ந்து கூறுவான்=திருமால் மகிழ்ச்சி கூர்ந்து சொல்வா ராயினர்.

"எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்,, என்ற விதிப்படி, எவன் என்னும் வினாவினைக் குறிப்பு முற்று இருதிணைக்கும் பொதுவாய் வந்தது. அதனைத் திவகமாகக் கொள்க. மனம்-கு மனக்கு எனப் புணர்ந்தது. அ—சாரியை. (௫௩)

நித்தியா னந்தமாய் நிமல மாயருஞ்
சித்ததா யேகமாம் பிரமந் தேர்பர
தத்துவ மதனயிச் சுரியந் தாவில்சீர்
வித்தக முனிவர விபூதி யாகுமால்.

(இ-ள்.) வித்தகம் முனிவர = சதுரப் பாட்டினையுடைய வேதியர் சிரேட்டனே! தேர் பரதத்துவம்=நீ ஆராய்ந்த பரதத்துவ மாவது, நித்திய ஆனந்தம் ஆய் = என்றும் ஆனந்த மயமாகியும், நிமலமாய்=மலமில்லாததாய், அரு சித்தது ஆய் = அறிதற்கரிய ஞானமயமாகியும், ஏகம் ஆம் பிரமம்=ஒன்றாகியும் விளங்காநின்ற சிவமாகிய பிரமப் பொருளே யாகும், தா இல் சீர் விபூதி=குற்றமற்ற சிறப்பினையுடைய விபூதியாவது, அதன் அயிச்சுரியம்=அத் தற்பரசிவத்தினது ஐசுவரியங்களேயாம்.

ஆல்—அசை, வித்தகம் என்பதனை வித்=அறிவு, அகம் = மனம் எனக் கொள்ளினுமாம். பரதத்துவமாவது பிரமம், அதாவது சிவம். அதனை " ஆதியு நடுவு மற்றை யந்தமுமின்றி யொன்றாய்ச் - சோதியாம் பிரமந் தானே தமதிக் கண்ணி யெந்தை – வேதமுமவனை யின்னும் விளங்குற வறியா தென்றாற்–பேதைமை மனுட ரேயோ வவனிலை பேச வல்லார். ,, என்று இந்நூலில் முப்பத்திரண்டாவது அத்தியாயத்திற் கூறப்பட்ட செய்யுளா னுணர்க. விபூதி யிவையென்பதனை இதனில், விபூதி யுரைத்த அத்தியாயத்திற் காண்க. நித்தியானந்தம் - வடநூன் முடிபு. ஐஸ்வரியம் என்பது அயிச்சொரியம் என நின்றது. விபூதி=அழிவற்ற செல்வம். (௫௪)

காரியஞ் சகமதன் கார ணந்தனித்
தேருமவ் வியத்தமவ் விறைவன் செய்தொழி
னேர்பெறப் படைத்தவை யளித்து நீக்குத
லோரில் யானதற் குயிராகு மொண்சுடர்.

(இ-ள்.) ஓரில்=ஆராயுமிடத்து, காரியம் சகம்=காரியமாவது பிரபஞ்சமாம், காரணம் தேரும் தனி அவ்வியத்தம்=அதன் காரணமாவது ஆராயப்படுகின்ற ஒப்பற்ற அவ்வியத்தமாகும், அ இறைவன் செய் தொழில்=அப் பதிப்பொருளாகிய சிவபெருமானால் இயற்றப்படுகின்ற பிரவிர்த்தியாவது, நேர் பெற படைத்து=முறைமை பொருந்தச் சிருட்டித்து, அவை அளித்து நீக்குதல்=அவ்வாறு படைத்தவைகளை யெல்லாங் காத்தும் அழித்தும் வருதலாம், யான் அதற்கு உயிர் ஒண் சுடர் ஆகும்=நான் அப்பிரபஞ்சங்களுக்குப் பிராணமயமா யிருக்கின்ற அழகிய சோதிப்பொருளாம்.

அவ்வியத்தமாவது அசுத்தமாயையி னின்றுந் தோன்றிய மூலப்பிர கிருதியாய் மகேசுர மூர்த்தியின் சத்தியாம். அது சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குண சமத்துவமாக நின்ற விடத்துப் பிரதானம் எனவும், பிரகிருதி எனவும் பெயர் பெறும். இப்பிரகிருதி மாயையும் புருட தத்துவமுஞ் சேர்ந்த விடத்துச் சகமுற்பத்தியாகின்றது. ஆகவே பிரபஞ்சத்திற்கு முற்காரணம் மாயை, துணைக்காரணம் சிவசத்தி, நிமித்தகாரணம் சிவமாம். சிலர் முதற்காரண மென்னுது, அவாந்தர காரணமாயுள்ளது இம்மூலப் பிரகிருதி யென்றுங் கொள்வர். பிரவிர்த்தி=முயற்சி. பிரகிருதியி னின்றுந் தோன்றிய முக்குண தத்துவமுதற் பிருதிவி யீறுயுள்ள பிரபஞ்சங்கள் தோறும் விட்டுணுவின் சத்தி யுயிர்போல வியாபித்து நிற்றலின் "யானதற் குயிராகு மொண்சுடர்,, என்று கூறியதாம். (௬௫)

என்பவை யரிறப வினிதி னோர்ந்துயர்
வன்புல னடக்கிய யோக மாட்சியாற்
றென்புலக் கூற்றுயிர் குடித்த சேவடிக்
கன்புபூண் டிடுதியென் றறையக் கூறுவான்.

(இ-ள்.) என்பவை அரில் தப இனிதின் ஓர்ந்து=என்று சொல்லப்பட்டவைகளைக் குற்றமறச் செவ்வனே ஆராய்ந்தறிந்து, வன் புலன் அடக்கிய=வலிய ஐம்புலன்களையும் ஒடுக்கிச் செய்கின்ற, உயர் யோகம் மாட்சியால்=மேலான யோகசாதன மாண்பினல், தென் புலம் கூற்று உயிர் குடித்த=தென்றிசைக்கணுள்ள யமனது உயிரையுண்ட, சே அடிக்கு=சிவபெருமானது செவ்வையாகிய திருப்பாதங்களின் மீது, அன்பு பூண்டிடுதி என்று அறைய = இடையறாத அன்பினை வைக்கக்கடவாய் என்று திருமால் சொல்ல, கூறுவான்=(பிராமணனாகிய இந்திரத் துய்ம்மன்) சொல்லுவான்.

என்பவை-இதில் பவிகுதி தொக்கது. "அறங்கரை நாவி னான்மறை முற்றிய—வதங் கோட்டாசாற் கரிறபத் தெரிந்து,, எனப் பனம்பாரனார் பகர்ந்தாங்கு அரிறப என்றான். திருவடியில் இடையறா தன்பு பூண்டொழுகிய மார்க்கண்டேய முனிவருக்கு வந்த மரணத்தை நீக்கி அழியாப்பதவியில் வைத்தகடவுள் நின்னையும் வைப்பான் ஆகலின், அன்பு பூணுதி யென்றதாம். அன்பின் விசேடத்தை "அன்புஞ் சிவமுமிரண் டென்ப ரறிவிலா—ரன்பே சிவமாவ தாரு மறிகிலா—ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி—னன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.,, என்ற திருமந்திரத்தானும் அறிக. சேவடிக்கு—உருபு மயக்கம். (௬௬)

உத்தம வருணநல் லொழுக்கஞ் சார்ந்துவெம்
பைத்தலை யரவணி பவள வார்சடை
யத்தனைப் போற்றுகென் றருளிற்கூறினை
யுத்தம வருணம்யா தொழுக்கம் யாதரோ.

(இ-ள்.) உத்தம = புருடோத்தமனாகிய திருமாலே! , வருணம் நல் ஒழுக்கம் சார்ந்து=வருணங்களுக்கு உரிய நல்லொழுக்கத்தில் நின்று,வெம் பை தலை அரவு அணி=வெவ்விய படத்தைக் கொண்ட தலையை யுடைய சர்ப்பங்களை யாபரணமாகத் தரித்த, பவளம் வார் சடை அத்தனை=பவளத்தைப்போன்ற நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானை, போற்றுக என்று அருளில் கூறினை=துதித்துப் பூசிக்கக் கடவாய் என்று கிருபையோடும் உபதேசித்தருளினை, உத்தம வருணம் யாது = முதன்மை யாகிய குலம் யாது, ஒழுக்கம் யாது=அதற்குரிய நல்லொழுக்கம் யாது.

அரோ - அசைநிலை. புருடர்களுக்குட் சிறந்தவனாகலின் திருமாலுக்குப் புருடோத்தமன் என்று பெயர். ,பவளம் நிறத்தினாற் சடையினை யொத்தது. சடையின் பெயர் கபர்த்தமாம். திருமால் கூறினதாவது "ஓதிய வருணநல் லொழுக்கம் பூண்டு,, என்று முன்னர்க் கூறியதாம். மத்திம அதம வருணங்களும் இருத்தலின், உத்தம வருணம் யாது என்றதாம். "தத்தம வருணநல் லொழுக்கஞ் சார்ந்துவெம்,, எனவும் பாடம். (௫௭)

மூன்றுபா வனையுடைத் தெனமொ ழிந்ததோ
ரான்றமெய்ஞ் ஞானமே தளப்ப ருஞ்சகந்
தோன்றிய வாறெது தோற்ற மெத்துணை
யேன்றநன் மரபின தியல்பி யாவையால்.

(இ-ள்.) மூன்று பாவனை உடைத்து என=மூவகைப் பாவனை யுள்ளதென்று, மொழிந்து ஓர் ஆன்ற மெய் ஞானம் ஏது = சொல்லிய ஒப்பற்ற சிறந்த மெய்ஞ்ஞான மென்பது யாது, அளப்ப அரு சகம் தோன்றிய ஆறு எது=அளவை செய்ய இயலாத உலகங்கள் உண்டாய விதம் எப்படி, தோற்றம் எ துணை=சிருட்டிப்பின் வகையெத்தனை, ஏன்ற நல் மரபினது இயல்பு யாவை=பொருத்த முள்ள நல்ல வமிசங்களது பரம்பரை யெவை.

மொழிந்தது - முற்றெச்சமாய் நின்றது. சகந் தோன்றியவாறு என்றது பிரபஞ்சத் தோற்றத்தை. தோற்றம் என்றதனால் பிரகிருதித் தோற்றம்,பலவகைத் தோற்றம், தமோகுண சிருட்டி, பார்வதி தேவியார் தோற்றங்களுங் கொள்ளப்படும். நன்மரபு என்றதனாற் பிருகு முதலிய முனிவர்களதும், சுவாயம்பு முதலிய மநுவரசர்களதும், சூரிய சந்திர குல மன்னர்களதும் வமிச முறையினையுங் கொள்க. ஆல்-அசை. (௫௮)

அறையுமன் வந்தரத் தளவை யாதுகொல்
பெறலரும் விரதமா சாரம் யாவைபின்
னிறைபுனற் றீர்த்தமெத் துணைய நீள்சுட
ரெறிகதிர் முதலகோ ணிலைக ளென்கொலாம்.

(இ-ள்.) அறையும் மந்வந்தரத்து அளவை யாது = சொல்லப்பட்ட மநுவரசரது ஆயுளின் வரையறையாது, பெறல் அரும் விரதம் ஆசாரம் யாவை = அடைதற் கருமையாகிய விரதங்களும் ஆசாரங்களும் எவை, பின் நிறை புனல் தீர்த்தம் எ துணைய = இன்னும் நிறைந்த சலத்தினையுடைய தீர்த்தங்கள் எவ்வளவு, நீள் சுடர் எறி கதிர் முதல கோள் நிலைகள் என்=மிகுந்த ஒளியைப் பரப்புகின்ற சூரியன் முதலாகிய கிரகங்களின் மண்டலங்கள் எத்தன்மைய.

கொல் இரண்டும் ஆம் ஒன்றும் அசைகள். விரதம் என்றதனால் சிவபூசை, கிரிசரம், சாந்திராயணம்,அக்கினிகாரியம், சிராத்தம், யோகம், தானம் முதலியன கொள்ளப்படும். ஆசாரம் என்றதனால் நித்தியகர்மம், பொதுவிதி, நல்லொழுக்கம், அல்லவை யொழித்தல், சூதகாசௌசம், பிராயச்சித்தம், பிரமசரிய முதலிய ஆச்சிரமங்களும் பெறப்படும். தீர்த்தம் என்றதனால் பிரமம், குருக்கள், கோகன்னம், சித்தவாசம், கன்னி, கங்கை, சோமம், விசுவம், காவிரி, விரசை, நருமதை, மகாகாளம், வையை, வைதரணி சித்திரம், சுவாமி, சுழுமுனை, குபேரதுங்கம்,பஞ்சநதம், மானசம், பாவநாசம், தேசாச்சுவமேதம், மாதுங்க பத்திரா, கேதாரம்,கிட்டிணவேணி, யமுனை,சாளக்கிராமம் முதலிய தீர்த்தங்கள் பெறப்படும். கோள்=கொள்ளுதல், காலங்களை யளந்து கொள்வது எனக் கிரகங்களுக்குக் காரண

ணப்பெயர். அதனை முதனிலை திரிந்த தொழிலாகு பெயராக வாவது, வினைமுதற்பொருள் புணர்ந்து கெட்டு முதனீண்ட பெயரொன்றுவது கொள்க. (௩௯)

நீணிலப் பரப்பத னீள மெத்தனை
காண்வரு தீபமால் வரைத டங்கடல்
யாணர்வெண் டிரைநதி நதங்க ளெத்தனை
மாணுற வினிதினின் வழங்கென் றோதினன்.

(இ-ள்.) நீள் நிலம் பரப்பு = நிலைத்தலையுடைய பூமண்டலத்தின் அகலமும், நீளம் எ துணை=நீளமும் எவ்வளவு, காண்வரு தீபம் மால் வரை = காணப்படுகின்ற தீவுகளும் பெரிய மலைகளும், தடம் கடல் = விசாலமான சமுத்திரங்களும், யாணர் வெள் திரை நதி நதங்கள் எ தனை = புதுமையாகிய வெள்ளிய அலைகளையுடைய நதிகளும் நதங்களும் எவ்வளவு உள்ளன, மாண் உற இனிதின் வழங்கு என்று = மாட்சிமை பொருந்த நன்மையோடும் உபதேசித்தருள்வாயாக என்று, ஓதினன்=சொன்னான்.

பூமண்டலம் தீவு மலை கடல் நதி நதம் இவை யெவ்வளவு உள்ளனவென்றும், அவைகளின் அகலநீளங்கள் இவ்வள வென்றும் உணர்த்தி யருள்வீராக என்று இந்திரத்துய்ம்மனாகிய பிராமணன் கேட்டான் என்பதாம். நதியாவது மேற்றிசையினின்றுங் கீழ்த்திசை நோக்கிச் சென்று சமுத்திர சங்கமப்படும் ஆறு. நதமாவது கீழ்த்திசையி னின்றும் மேற்றிசை நோக்கிச் சென்று சமுத்திர சங்கமப் படும் ஆறாகும். இனிவருவன தொகுத்தும் வகுத்தும் முன்னர்க் காட்டியவற்றையெல்லாம் விரித்துக் கூறுவனவாம். (௪0)

கோட்டமில் குணத்தினன் குடந்தம் பட்டவன்
கேட்டவை முழுவதுங் கிளத்தி யன்பினால்
வேட்டிடு வரம்பல வீந்து விண்ணவர்
தாட்டுணை பரவவை குந்தஞ் சார்ந்தனன்.

(இ-ள்.) கோட்டம் இல் குணத்தினன் = கோணுதல் இல்லாத குணத்தை யுடைய திருமாலானவர், குடந்தம் பட்டவன் கேட்டவை முழுவதும்=மிக்க வணக்கமுடையனாய் நின்ற இந்திரத்துய்ம்மனாகிய பிராமணன் கேட்டபொருள்கள் எல்லாவற்றையும், அன்பினால் கிளத்தி = அன்புடனே இவை யிவையெனத் தெரித்து, வேட்டிடு பல வரம் ஈந்து= அவன் விரும்பிய பலவரங்களையுங் கொடுத்து, விண்ணவர் துணை தாள் பரவ=தேவர்கள் இருபாதங்களையும் வணங்கித் துதியாநிற்க, வைகுந்தம் சார்ந்தனன் = வைகுந்த பதவியை யடைந்தனர்.

திருமாலானவர், இந்திரத்துய்ம்மனாகிய வேதியன் கேட்டவைகளை யெல்லாந் தெரியக் கூறி வரங்களுங் கொடுத்துத் தேவர்கள் துதிக்க வைகுண்டஞ் சென்றார் என்பதாம்.

கோட்டம் = கோணல். அதனை "பொல்லா மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூலஃதேபோன் மாந்தர் – மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு,, என்றதனானும் அறிக. குடந்த மாவது இரண்டுகையுந் துவசம்போல மார்பினொன்றும்படி கூப்பி, களிப்பினால் மெய்யிற்கோட்டி வணங்கி நிற்கும் ஓர்வகைக் கூத்து. அதனை "குடந்த மெய்க்கோட்டிக் கைகுவித்த லென்ப. ,, என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தால் அறிக. "குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி,, என்றார் திருமுருகாற்றுப் படையினும். (௪௧)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆங்கவன் றானுந் துயிலுண வருந்த லரும்பெறற் குமரர்மே லாசை
கோங்கெழில் கவற்றிச் சுணங்குபூத் தலர்ந்த குவிமுலை மகளிரின் புறுத
லீங்கிவை முதல யாவையு நீத்திட் டியானென தென்பவை நீக்கி
யோங்குசீ வான்மா வினைப்பர மான்மாத் தன்னொடும் பிறிதற வொடுக்கி.

(இ-ள்.) ஆங்கு அவனும் = அப்பொழுது இந்திரத்துய்ம்மனாகிய பிராமணனும், துயில் உணவு அருந்தல்=நித்திரை செய்தல் ஆகாரங் கொள்ளுதல், பெறல் அரு குமரர் மேல் ஆசை = பெறுதற்கரிய புத்திரர் மீது வைக்கும் ஆசை, கோங்கு எழில் கவற்றி சுணங்கு பூத்து ஒளிரும்=கோங்கம் அரும்பினது அழகினையும் வருத்தித் தேமல்படர்ந்து விளங்காநின்ற, குவி முலை மகளிர் இன்பு உறுதல்=திரண்ட தனங்களை யுடைய பெண்களோடு போகஞ் செய்தல், இவை முதல யாவையும் நீத்திட்டு=இவைகள் முதலாய விடய நுகர்ச்சிகளை யெல்லாம் வெறுத்து, யான் எனது என்பவை நீக்கி = யான் எனது என்று சொல்லப்படுகின்ற அகங்கார மமகாரங்களையுந் தவிர்த்து, ஒங்கு சீவான்மாவினை=உயர்ந்த சீவான்மாவை, பரம ஆன்மா ஓடும் பிறிது அற ஒடுக்கி = பரமான்மாவோடும் பேதமில்லாமல் ஒடுங்கச்செய்து.

தான் - ஈங்கு-தன் என்பன சாரியை. இதுமுதன் மூன்றுங் குளகம். அந்தணன் தனவீடணை, தாரவீடணை, புத்திரவீடணை யென்னும் ஈஷணைத் திரயங்களையும் நீக்கித் தத்துவ சுத்திசெய்தான் என்பது போதரும்.

நன்மக்களைப் பெறுதல் அருமை யாகலால் "பெறலருங் குமரர்" என்றான். அதனை "விரிகட லமிழ்தமும் வேலை ஞாலமுஞ் - செருமுகத் தழலுமிழ் சிறுகண்யானையு மெரி மணிக் குப்பையு மெளிதி னெய்தலா-மருமகப் பெறுதன்மற் றரிய தென்பவே." என்று இந்நூலாசிரியன் கூறியதனா னுணர்க. (௪௨)

தன்னுள மதனிற் சகமெலா நோக்கித் தானதிற் புகுந்திடா தொழுகி
முன்னதின் முன்னா யுரையுணர் விறந்த முழுமுத லாகியொன் றாகிப்
பின்னமற் றின்றிக் குணங்குறி கடந்த பிரமபா வனையினி லடையா
வுன்னரு மியோகத் துறங்கிநற் சீவன் முத்தனா யொழுகிடு நாளில்.

(இ-ள்.) தன் உள்ளம் அதனின் சகம் எல்லாம் நோக்கி=தன்மனத்தின் இடத்தே உலகமெல்லாவற்றையும் பார்த்தும், தான் அதில் புகுந்திடாது ஒழுகி = அறிவுருவாகிய தான் சடப்பொருளாகிய அச்சகத்திற் கலக்காது சாட்சிமாத்திரமாக நின்றும்,முன்னதின் முன்னாய்=முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகியும், உரை உணர்வு இறந்த முழுமுதல் ஆகி=வாக்கு மனங்களுக் கெட்டாது நின்ற முழுமுதற் கடவுளாகியும், ஒன்று ஆகி=ஏகமாகியும், பின்னம் அற்று=பேதமில்லாமல், குணம் குறி இன்றி கடந்த பிரம பாவனையில்=குணமும் நாமரூப முதலிய குறிகளுமில்லாது அகோசரப்பட்டு விளங்கும் பிரமதியானத்தில்,அடையா=சேர்ந்து,உன்ன அரும் யோகத்து உறங்கி=நினைத்தற்கு அரிய பாவயோகத்தில் நிலைத்து, நல் சீவன் முத்தனாய் ஒழுகிடும் நாளில் = நல்ல சீவன் முத்தனாகி இருக்கின்ற காலத்தில்.

இந்திரத்துய்ம்மனாகிய பிராமணன் தன்னுள்ளே உலகங்களைக்கண்டு அதனோடு கலக்காது சொல்லுதற்கரிய பிரமதியானத்தைக் கைக்கொண்டு பாவயோகத்தில் நிலைத்திருக்குங் காலத்தில் என்பதாம்.

குருவி னுபதேசமின்றித் தியானமும், தியானமின்றி ஞானமும், ஞானம் இன்றி முத்தியுங் கைகூடாதாகலின் இவனுங் குருமொழிப்படி பிரமதியானஞ் செய்தான் என்க. பிரம தியான மாவது தியானிக்கப்படுகின்ற சிவமும், தியானிக்கின்ற தானும், தியானமும் வேறல்ல வாகக்கண்டு தெளிதலாம். "வீறுசே ரிறையுந் தானுந் தியானமும் வேறென்னுது-தேறுத லழிவிலாத பிரமநற் றியான மாகும்,, என்னும் இலிங்கபுராணச் செய்யுளால் அறிக. பாவ யோக மாவது உலக மெல்லாவற்றையும் புறத்துக் கண்டவாறே தன்னகத்துக் கண்டு அதனின் வேறாய் நிற்குநிலை. (௪௩)

பரிதியஞ் செல்வ னான்முகக் கடவுள் பதியினி லேகெனப் பணிப்ப
மருவிய யோக மாட்சியிற் பனிதோய் வானிடைப் படர்ந்துசெல் போதின்
விரிகதிர் விமான மெய்தலு மதன்மே லிவர்ந்துயர் விண்ணவர் முதலோ
ரிருபுடை நடப்ப மானசோத் தரமால் வரைமிசை யினிதுசென் றிறுத்தான்.

(இ-ள்.) பரிதி அம் செல்வன் = சுதரிசன சக்கரத்தையுடைய அழகிய விட்டுணுமூர்த்தி (பிரசன்னமாகி) நான்முகம் கடவுள் பதியினில் ஏகு என பணிப்ப=நான்குமுகங்களையுடைய சூரியமண்டலத்திற்குச் செல்லக்கடவாய் எனக் கட்டளையிட, மருவிய யோகம் மாட்சியின் = தான்கொண்ட யோகத்தின் பெருமையால், பனி தோய் வான் இடை படர்ந்து=குளிர்ச்சி பொருந்திய ஆகாய வழியாக விரைந்து, செல் போதின் = போகும் போது, விரி கதிர் விமானம் எய்தலும்=பரந்த ஒளியையுடைய தேவ விமானமொன்று வந்து எதிர்ப்படுதலும், அதன் மேல் இவர்ந்து=அவ்விமானத்தின்கண் ஏறி, உயர் விண்ணவர் முதலோர் இரு புடை நடப்ப=மேலாகிய தேவர்கள் முதலிய கணங்களா யுள்ளார் இருபக்கத்தும் (உபசாரஞ்செய்து) போகாநிற்க, இனிது சென்று=சிறப்புடன் சென்று, மால் மானசோத்தரம் வரை மிசை இறுத்தான்=பெரிய மானசோத்தர மலையின் கண் வந்து தங்கினான்.

நான்கு முகங்களையுடைய சூரியன்-சிவசூரியன். அதனைப் பின்னர்க் காண்க. சிவயோகியர் தாரணை பன்னிரண்டனையும், தியானம் பன்னிரண்டனையுஞ் செய்து முடிப்பாராயின், அவர்க்கு ஐம்பூத சித்திகளு முண்டாகும். அவற்றுள் இந்திரியங்களாற் பிறர் காணாமை யிருத்தல், நிழலின்றி நிற்றல், அருவாகி நிற்றல், வெளியிடத்துச் செல்லல், அந்தரத்தைக் கடத்தல் என்பன ஆகாயசித்திக ளாகலின் இவனும் வெளியிடத்துச் சென்றனன் என்க. மானசோத்தர மாவது புட்கரத் தீவின்க ணுள்ளதாய், தேர் உருளைபோல வட்ட வடிவுடைத்தாய் ஐம்பதினாயிரம் யோசனை அளவுடைத்தாய் நிற்கும் ஓர் மலையாம். சூரியதேவனே அம்மலைக்கும், அதனைக் கொண்ட தீவிற்குங் கடவுளா யிருத்தலால் அங்குச் சென்று தங்கினான் என்க. (௪௪)

ஆயிர கோடி வெங்கதிர்ச் செல்வ ரள்ளிருட் பிழம்பெடுத் தருந்தும்
பாயொளி மழுங்கப் புதுவெயி லெறிக்கும் பனிவரை முகட்டினுட் புகுந்து
தாயென வுலக முழுவதும் பூத்த தனிச்சுட ரதனைமுன் னுதலு
மேயபே ரொளியா யருவுரு வாகு மெய்ப்பொரு ளுருவினைத் தியதே.

(இ-ள்.) அள் இருள் பிழம்பு எடுத்து அருந்தும் = நெருங்கிய இருட்டொகுதியை யள்ளி விழுங்காநின்ற, வெம் கதிர் ஆயிரகோடி செல்வர்=வெப்பமாகிய கிரணங்களையுடைய ஆயிரகோடி சூரியர்களது, பாய் ஒளி மழுங்க புது வெயில் எறிக்கும்=பரந்த ஒளிகள் எல்லாங் குன்றுமாறு புதுமையாகிய கிரணங்களை வீசுகின்ற, பனிவரை முகட்டின்

உள் புகுந்து=பனி பொருந்திய மலையின் உச்சியினுள்ளே பிரவேசித்து, உலகம் முழுவதும் தாய் என பூத்த = உலகமெல்லாவற்றையுந் தாயினைப்போலப் பெற்ற, தனிசுடர் அதனை முன்னுதலும் = ஒப்பற்ற சிவபரஞ் சுடரைத் தியானித்தலும், மேய பேரொளி ஆய்= பொருந்திய பெரியசோதி வடிவமாய், அரு உருஆகும் மெய் பொருள் = அருவுருவுடைத்தாய் விளங்கும் உண்மைப் பொருளாகிய தற்பரசிவம், உருவின் எய்தியது = சகளரூபத்துடன் பிரசன்ன மாயிற்று.

இந்திரத்துய்ம்மனுகிய மறையவன் மானஸோத்தர மலையினுட் புகுந்து பரமசிவனைத் தியானித்தலும், அவர் சோதிவடிவாய்த் தோன்றினர் என்பதாம். மெய்ப்பொருள் என்னுஞ் சொல் சிவன் என்னும் உயர்திணைப் பொருளை யுணர்த்திற்றேனும் அது அஃறிணைவாசக மாதலின், அதற்கேற்ப எய்தியது என அஃறிணைமுடிபு பெற்று நின்றது. இதனைத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் "காலமுலகம்,, என்னுஞ் சூத்திரத்தால் அமைக்க. (சுரு)

எய்திய் வொளியிற் றோன்றிய வுருவை யிருகணும் களிப்புற நோக்கிக்
கையிணை முகிழ்ப்ப வுளங்கனிந் துருகக் களிப்பொடு மெய்ம்மயிர் பொடிப்ப
வையன தடியிற் பணிதலு மெழுகென் றன்பினிற் றழுவமா மறையோன்
மெய்யினின் றநந்த கோடிசூ ரியரின் விரிகதிர்ப் பிழம்பெழுந் ததுவே.

(இ-ள்.) எய்திய ஒளியில் தோன்றிய உருவை=அங்ஙனந் தோன்றிய சோதிவடிவாகிய பரசிவத்தை, இரு கண்ணும் களிப்பு உற நோக்கி=இரண்டு கண்களாலும் ஆனந்தம் பொங்கத் தரிசித்து, இணை கை முகிழ்ப்ப உள்ளம் கனிந்து உருக=இரண்டு கைகளும் அஞ்சலிப்பவும் மனம் இளகி யுருகாநிற்கவும், களிப்பு ஒடு மெய் மயிர் பொடிப்ப=உவகை மிகுதலால் உடலின்கணுள்ள வுரோமங்கள் சிலிர்ப்பவும், ஐயன் அது அடியில் பணிதலும்=அப்பரசிவத்தினது திருப்பாதங்களில் (வீழ்ந்து) வணங்குதலும், எழுக என்று அன்பின் தழுவ=(அன்பனே) எழுந்திருப்பாயாக என்று அன்பின் மிகுதியினால் அவனுடலத்தைத் தழுவுதலும், மறையோன் மெய்யில் நின்று=பிராமணனது சரீரத்தினின்றும், அநந்த கோடி சூரியரின்=அளவில்லாத கோடிசூரியர்கள் ஒருங்கு சேர்ந்தாற்போல, விரி கதிர் பிழம்பு எழுந்தது=பரந்து தோன்றுஞ் சோதிப் பிழம்பானது தோன்றிற்று.

கண்ணும்-உள்ளம்-எழுக என்பன விகாரப்பட்டு நின்றன. கை முகிழ்த்தலாவது கையினை யொன்றோ டொன்று பதாகைபோல விரல் நீண்டிருக்க மார்பினிடத்துப் பொருந்த வைத்தல். இதனை அஞ்சலிக் கை என்ப. "அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பி-னெஞ்ச லின்றி யிருகையும் பதாகையாய் - வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர் - ரந்தமில் காட்சி யறிந்திசி னோரே. ,, என்றார் நாடகநூலாரும். (சசு)

எழுந்தநற் சோதி யிரணிய கருப்ப னுறையுளா யாவரும் யாவுந்
தொழுந்தகு முத்தர் புகும்வழி யாகுஞ் சுடரவன் மண்டலத் தடைந்து
செழுங்கனற் பிழம்பா முக்கணெம் பெருமான் றிருவருள் பெற்றுவே றின்றி
யழுங்கலில் சிவமாந் தன்னுருத் தானு யமர்ந்துய ரின்பமுற் றதுவே.

(இ-ள்.) எழுந்த நல் சோதி=அவ்வாறு தோன்றிய ஒளிப் பிழம்பானது, இரணிய கருப்பன் உறையுள் ஆய்=இரணிய கருப்பன் என்னுஞ் சிவசூரியன் எழுந்தருளி யிருக்குந் தானமாகி, யாவரும் யாவும் தொழும் தகு முத்தர் புகும் வழி ஆகும்=யாவராலும் எவைகளாலும் வணங்கத்தகுந்த சிவன் முத்தர்கள் போகின்ற வழியாகியும் இருக்கின்ற, சுட-

ரவன் மண்டலத்து அடைந்து = சூரியமண்டலத்திற் பிரவேசித்து, செழு கனல் பிழம்பு ஆம் மூக்கண் எம்பெருமான் திரு அருள் பெற்று=கொழுமையாகிய அக்கினிப் பிழம்பா யுள்ள திரிநேத்திரங்களை யுடைய எமது தலைவராகிய சிவபெருமானது திருவருளே உருவாகி, வேறு இன்றி = இரண்டற்று, அழுங்கல் இல் சிவம் ஆம் தன் உரு = கெடுதலில்லாத அநாதி சிவரூபமாகிய தன்வடிவே, தான் ஆய் அமர்ந்து=தன்வடிவாகச் சிவத்தோடு அத்துவிதமாய் விளங்கி, உயர் இன்பம் உற்றது=மேலாய அந்தமிலின்பத்தையடைந்தது.

இந்திரத்துய்ம்மனுகிய சீவன் மூத்தனது மெய்யில் நின்றும் எழுந்த சோதிப் பிழம்பானது சூரியமண்டலத்திற் புகுந்து, சிவனது திருவரு ளுருவாய் விளங்கி, அதனோடும் அத்துவிதப்பட்டு இன்பமுற்றது என்பதாம்.

இரணிய கருப்பன் என்றது ஈண்டுச் சிவசூரியனை யென்க. டர்க்கன் என்று காயத்திரியிற் காணப்படும். இரணிய கருப்பன் = இச்சாஞானக் கிரியைகளை யுடையவன். சிவபெருமானுக்கு இத்திருநாம முண்மை "உறை விராட் டிரணிய கருப்ப னுற்றுற...குறைவிலா விச்சுவ னென்றுங் கூறுவார்." என்ற வாயுசங்கிதைச் செய்யுளால் அறிக. அண்ட ஆதித்தன், பிண்ட ஆதித்தன், மன ஆதித்தன், ஞான ஆதித்தன், சிவ ஆதித்தன் என ஆதித்தனை ஐவகைப்படுத்தித் தெய்வப்புலமைத் **திருமூல நாயனுர்** திருவாய் மலர்ந்தருளியபடி, இவன் உடலினின்று மெழுந்த சோதியை ஞானுதித்தன் எனவும், சுடரவன் மண்டலத்தை அண்ட ஆதித்தன் எனவும், அங்குத் தோன்றி யுள்ளதைச் சிவ ஆதித்தன் எனவுங் கொள்ளினு மமையும். சிவசூரிய பகவானுனவர் மேற்குநோக்கி வெண்ணிறமாய் விளக்குஞ் சத்தியோ சாதமுகமும், வடக்கு நோக்கிய செந்நிற வாமதேவ முகமும், கிழக்கிற் பொன்போன்ற தற்புருடமுகமும், தெற்கில் கருநிற அகோரமுகமும் ஆகிய நான்கு முகங்களும்,எட்டுப் புயங்களும், பன்னிருகண்ணும், சடாமுடியும், சிவப்பு வஸ்திரதாரணமும் உடையராய், நந்நான்கு முகங்களை யுடைய பாற்கரனும் பானுவும் ஆதித்தனும் முறையே வலப்பக்கம் பிற்பக்கம் இடப்பக்கங்களிலும், வித்தாரை, சுதாரை, போதினி, ஆப்பி யாயினி, தீத்தை, சூக்குமை, சேயை, விபூதி, விமலை, அமோகை, வித்துதை, சருவதோமுகி, பத்திரை என்னுஞ் சத்திகள் நாற்பாலினும் விளங்க, தைவிகமதியாகிய தேவியுடனே வீற்றிருப்பர் என்க.

சிவசூரிய மூர்த்தியின் பக்கத்திற் பிரமதேவர் இருத்தலானும், சிவசாலோகாதி முத்தியடைவோர் அவர்வழியே போகவேண்டு மாகலானும் இரணிய கருப்பன் என்றதற்குப் பிரமதேவர் எனப் பொருள் கொள்ளலு மொன்று. அது சிறப்பன் றென்க. யோகிகள் சகல கிலேசங்களும் விடுபட்டுப் போகுங் காலத்தில் தேவயானமாய் இருப்பவன் சூரியன் ஆகலானும்,அவர்கள் போகும்வழி, முறையே அக்கினி, பகல், பூர்வபக்ஷம், உத்தராயனம் வருடம், காற்று, சூரியன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், பிரமன் என்பவர்களின் எல்லை யாகலானும், இவ்விந்திரத் துய்ம்மனுஞ் சோதிப்பிழம்பாய் எழுந்து சூரியமண்டலம் புகுந்து அருள்பெறீஇ முத்தியுற்றுன் என்க. ஆன்மா அநாதி சிவரூபம் என்பதனை "அனுதி சிவரூப மாகிய வான்மாத்-தனுதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது—தனுதி மலமுந் தடையற்ற போதே-யனுதி சிவரூப மாகியவாறே" என்னுந் திருமந்திரத் திருச்செய்யுளாற் காண்க. (௪எ)

இன்னணங் குழந்தை மதிதவழ் குடுமி யீறைவனை யேத்துந ரல்லான்
மன்னுதற் கரிதா முத்திவீ டதனின் மருவுதற் கரிதென வழங்க
வன்னவற் குரைத்த காதையை யெமக்கு விரித்துரை யெனவரு மறையோன்
பொன்னகர்க்கிறைவன்கேட்டலுமுலகம் பொதிந்தசேவடியினேன்புகல்வான்.

(இ-ள்.) இன்னணம்=இங்ஙனங் கூறப்பட்ட விதமே, குழவித்தை மதி தவழ் குடுமி இறைவனை=இளம்பிறைச் சந்திரன் பயிலுகின்ற சடாமுடியை யுடைய சிவபெருமானை, ஏத்துநர் அல்லால் = துதித்து வழிபடுகின்றவர்களே யல்லாமல்,மன்னுதற்கு உரித்து ஆம் முத்திவீடு அதனில் = நிலைபெறுதற்கு உரித்தாயுள்ள சிவசாயுச்சிய முத்தியின்கண், மருவுதற்கு அரிது=(மற்றையோர்) அடைந்திருத்தல் இல்லையே யாகும்,என வழங்க=என்றிவ்வாறு (கூர்மமாய்நின்ற) திருமால் கூற, அரு மறையோன் = அரிய வேதங்களை யறிந்த நாரதமுனிவரும்,பொன் நகர்க்கு இறைவன்=சுவர்க்க லோக அதிபனாகிய இந்திரனும்,அன்னவன் கு உரைத்த காதையை=அவ்விந்திரத்துய்ம்மனுயிருந்த அந்தணனுக்குச் சொல்லியருளிய புராணசரிதத்தை, எமக்கு விரித்து உரை என கேட்டலும் = எங்களுக்கும் விரிவு படுத்திக் கூறியருள்வீராக என்று பிரார்த்தித்தலும், உலகம் பொதிந்த சே அடியினோன் புகல்வான் = மூவுலகங்களையும் அடக்கிய செவ்விய பாதங்களையுடைய திருமால் சொல்வாராயினர்.

இங்ஙனமே இக்கூர்மபுராணத்தைக் கேட்டுணர்ந்து சிவபிரானது திருவடிப் பூசனையைச் செய்து முத்தியடைந்த இந்திரத் துய்ம்மனைப் போல்வார்க்கு அல்லாமல், மற்றையோர்க்கு முத்தி கிடைத்தல் அருமையாம் என்று கூற, நாரதரும் இந்திரனும் மற்றையோர்களும் அப்புராண சரித்திரத்தை விரிவாகக் கூறும்படி கேட்டலும், கூர்மமாய் நின்ற திருமால் உரைக்கத் தொடங்கினர் என்பதாம். இன்ன வண்ணம் என்பது இன்னணம் என மருஉ மொழியாயிற்று. எமக்கும்—என்றதன்கண் இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. முத்திவீடு- இருபெயரொட்டுப் பண்புத்தொகை. விடுதல் என்றுபொருள். வீடு—முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். (சஅ)

என்றருந் தவத்துச் சூதமா முனிநன் முனிவரர்க் கினிதினி னிசைத்தான்
மன்றவிக் காதை கேட்டுளோர் பயின்றோர் மற்றதி னோரெழுத் துணர்ந்தோ
ரொன்றிய செல்வத் தமர்ந்துகிண் கிணிக்காற் சிறுவரை யினிதினி னுயிர்த்துக்
கொன்றைதேன் றுளிக்க மன்றுணின் றாடுங் கூத்தன தடிநிழ லுறைவார்.

(இ-ள்.) என்று=என்றிவ்வாறு, மா சூதமுனி=பெருமையையுடைய சூதமுனிவர், நல் முனிவரர்க்கு இனிதின் இசைத்தான்=நன்மையாகிய நைமிசாரணியத் திருந்த முனிசிரேட்டர்களுக்குத் தெளிவாகச் சொன்னார், மன்ற இ காதை கேட்டு உள்ளோர்=உறுதியாக இக்கூர்மபுராணத்தைக் கேட்டவர்களும், பயின்றோர் = பாராயணஞ் செய்பவர்களும், இதின் ஓர் எழுத்து உணர்ந்தோர் = இதன் கணுள்ள ஓர் எழுத்தின் பொருளை அறிந்தவர்களும், ஒன்றிய செல்வத்து அமர்ந்து=(இம்மையில்) தகுதியாகிய செல்வமுடையராய் இருந்து, நயம் பட கிண்கிணி கால் சிறுவரை உயிர்த்து = நன்மை யுண்டாகும்படி கிண்கிணி யென்னும் ஆபரணத்தை யணிந்த கால்களையுடைய சற்புத்திரர்களைப் பெற்று (வாழ்ந்து மறுமையில்) கொன்றை தேன் துளிப்ப=கொன்றைப் பூமாலையினின்றுந் தேன் றுளி சிந்தாநிற்க, மன்று உள் நின்று ஆடும் கூத்தன் அது=சபைகளின் இடங்கடோறும் நின்று திருநடனஞ் செய்தருளுகின்ற, சிவபெருமானது, அடி நிழல் உறைவார் = திருவடி நீழலின்கண் கூடியிருப்பார் என்க.

கூர்மரூபமாய் நின்ற திருமால் இந்திரன் முதலிய தேவர்களுக்கும், நாரதர் முதலிய முனிவர்களுக்கும் இவ்வாறு கூறினர் என்று சூதமுனிவர் சொல்லினர். அவ்வாறே இப்புராணத்தைக் கேட்பவர்களும், பாராயணம் பண்ணுவோரும் இதனில் ஓர் அக்கரத்தை யறிந்தவர்களும் ஆகிய இவர்கள், இம்மையிற் செல்வத்தோடு குறைவின்றி

வாழ்ந்து சிறந்தபேறாய புத்திரப்பேற்றையும் அடைந்து மாறுமையிற் சிவகதிசேர்வர் என்பதாம்.

மன்ற என்னுஞ் சொல் நிச்சயப் பொருளை யுணர்த்துவதாம். அதனை "மன்ற வென் கிளவி தேற்றஞ்செய்யும்., என்னும் இலக்கண விளக்கச் சூத்திரத்தால் அறிக. எழுத் துணர்வார் முத்தியடைவார் என்பதனை "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முத னூற் பொருளுணர்ந்து—கட்டறுத்து வீடுபெறும்,, என்றதனால் விளங்கும். புத்திரப்பேறு இம்மையிற் சிறந்தது என்று "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த-மக்கட் பேறல்ல பிற,, எனவும், "உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே-வந்து தாடொழு மரசியல் வளனெலாம் பெறினு—மிந்தி ராதியர் பெரும்பதத் திருக்கை பெற்றிடினு—மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.,, எனவும் பெரியோர் கூறினர். செல்வம் எனவே அது கொண்டு நடத்தப்படும் அறமும், அதன் பண்பாயுள்ள அன்பு பொறுமைகளும், அதனால் அநுபவிக்கப்படும் இன்பமும், அவற்றின் பயனாயுள்ள புகழ், மதிப்பு என்னும் எழு வகைப் பெற்றியுங்கொள்க. சிவபெருமான் திருநடனஞ் செய்யுஞ் சபைகளாவன் - திருவாலங்காட்டில் இரத்தினசபையும், சிதம்பரத்திற் கனகசபையும், மதுரையில் வெள்ளிச் சபையும், திருநெல்வேலியில் தாமிரசபையும், திருக்குற்றாலத்திற் சித்திரசபையும் ஆகிய ஐந்துமாம். (௨௧)

இந்திரத்துய்ம்மன் முத்தியடைந்த அத்தியாயம்.

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்—௯௩.

இரண்டாவது

வருணாச்சிரம தன்மமுரைத்த அத்தியாயம்.

அஃதாவது உயிர்கட்கு இன்றியமையா உறுதிப்பொருள், நான்கனுள் மேலாய வீட்டின்பத்திற்குக் காரணமாய அறத்தை நிறுத்த முறையானே கூறுவான்றொடங்கி, அவ்வறம் பலவகைப்பட்டு நிற்றலின் இல்லறம் துறவறம் என இருவகைப்படுத்தி, அவற்றுள் நால்வகைப்பட்ட வருணத்தினதும் ஆச்சிரமத்தினதுந் தருமங்களைக் கூறும் பாகமாம். நருமதை—நன்மதை, கருமம்—கன்மம் என்றாற்போல, தருமம் என்றது தன்மம் எனப் பட்டது. அத்தருமம் ஒழுக்கம் வழக்கு தண்டமென மூவகைப்படுதலின், ஈண்டுக் கூறப் படுவது ஒழுக்கமும், அதினின்றுந் தவறினார்க்குரிய தண்டமும் என்க. அத்தியாயம் எனினும், படலம்-சருக்கம்-இலம்பகம்—பரிச்சேதம் எனினும் ஒக்கும்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்னகர்க் கிறைவ னாதி யமரரும் புலன்க ளைந்துந்
தன்னுள்ளழ யடக்கும் வீணை முனிவனுந் தாழ்ந்து கேட்ப
மின்னகு நேமி சங்கம் வெங்கதை சிலைவா ளேந்தி
மன்னிய கூர்ம ரூப மான்முக மலர்ந்து சொல்வான்.

(இ-ள்.) பொன் நகர்க்கு இறைவன் ஆதி அமரரும் = பொன்மயமாகிய சுவர்க்க லோகத்திற்கு அரசனான இந்திரன் முதலாய தேவர்களும், ஐந்து புலன்களும் தன் உழை அடக்கும் வீணை முனிவனும் = பஞ்சேந்திரியங்களையுந் தன்வசப் படுத்துகின்ற யாழினை யுடைய நாரதமுனிவரும், தாழ்ந்து கேட்ப=வணங்கி நின்று கேட்க, மின் நகு நேமி சங்கம்=ஒளியைக் கானுகின்ற சக்கரம் சங்கு, வெம் கதைசிலை வாள் ஏந்தி=கொடுந் தொழிலை யுடைய தண்டம் வில் வாள் என்னும் பஞ்சாயுதங்களையுந் தாங்கி, மன்னிய கூர்ம ரூப மால்= வீற்றிருந்த கூர்ம ரூபமாகிய திருமாலானவர், முகம் மலர்ந்து சொல்வான்=முகமலர்ச்சி யுடன் சொல்லத் தொடங்கினர்.

நாரதரது மகதியென்னும் வீணையானது, தன்னிசையைக் கேட்டார் உணவு பரிசம் கந்தமுதலிய மற்றொன்றனையும் நாடாதும், அதனையே யன்றி வேறொன்றையுங் கேட்காதும் தன்வசமுற இனிமை கொடுத்து நிற்றலானும், விசுவாவசு வென்னுங் கந்தருவனது பிருகதியென்னும் வீணையினும், தும்புருவினது களாவதியென்னும் வீணையினும், சரசுவதியினது கச்சபி யென்னும் வீணையினுஞ் சிறந்து விளங்கலானும் "புலனைந்துந் தன்னுழை யடக்கும்வீணை,, என்று சிறப்பித்ததாம். (க)

நித்திய மாகி யொன்றாய் நிமலமா யெங்கு மாகித்
தத்துவங் கடந்து நின்ற மகேச்சுரன் றன்னு ணீங்காச்
சித்துரு வாகி யான்முற் றோன்றினேன் சிறந்த வென்பே
ருய்த்தினி துணரி னாரா யணனென வுரைப்பர் மேலோர்.

(இ-ள்.) இனிது உய்த்து உணரின்=(அன்பர்களே) நன்றாக யோசித் தறியுமிடத்து, யான் முன்=நான் முன்னர்க்காலத்தே, நித்தியம் ஆகி=அழிவில்லாத தாகியும், ஒன்று ஆய்=ஏகமாகியும், நிமலம் ஆய்=இயல்பாகவே பாசங்களி னின்றும் நீங்கியதாயும், எங்கும் ஆகி=எவ்விடத்தும் வியாபியாகியும், தத்துவம் கடந்து நின்ற மகேச்சுரன் தன்னுள்= தத்துவங்களையுங் கடந்து விளங்காநின்ற மகேசுர மூர்த்தியினிடத் திருந்து, நீங்காத சித்து உரு ஆகி தோற்றினேன் = பிரிதலில்லாத அறிவுருவமாக உற்பவித்தேன், சிறந்த என் பேர்=சிறப்பினையுடைய எனக்கு நாமம் யாதெனில், மேலோர் நாராயணன் என உரைப்பர்=பெரியோர்கள் நாராயணன் என்று சொல்வார்கள்.

சதாசிவ தத்துவத்திற் கிரியை யேறி ஞானங் குறைந்து இச்சாசத்தி ரூபியாயிருக்கின் அதனை மாகேசுர தத்துவம் என்ப. அது ஈசுரதத்துவம், அதிகாரதத்துவம், சகளதத்துவம், பிரவிர்த்தி தத்துவம் எனவும் பெயர்பெறும். இம்மகேசுர மூர்த்தியின் இடப்பக்கத்தில் நின்று விட்டுணுமூர்த்தி தோன்றினர் எனப் பின்னர்க் கூறப்பட்டுள்ளது. நாராயணன்—நார=நீர், அயன=இடம் எனவே, சலத்தினை யிடமாகக் கொண்டவன் எனப் பொருள். "நாரத்தி லமர்ந்த வாற்றா னாரணன்,, எனப் பின்னர்க் கூறுமாற் றானும் விளக்கும். தன் — சாரியை. (உ)

பாய்திரை சுருட்டுந் தெண்ணீர்ப் பனிக்கடன் முகட்டிற் செங்க
ணாயிரஞ் சூட்ட ராவி னறிதுயி லமர்ந்து பின்னர்க்
காய்கதிர் தோன்று மேல்வைக் கண்மதர் நீந்தி யாங்கு
மீய்ய ருலக மூன்றும் படைத்திட விழைவுற் றேனால்.

(இ-ள்.) பாய் திரை சுருட்டும் தெள் நீர் = பரந்த அலைகளை மடக்குகின்ற தெளிந்த நீரினையுடைய, பனி கடல் முகட்டின்=குளிர்ந்த பாற் கடலின் மீது, செம் கண் ஆயிரம் சூட்டு அராவின் = சிவந்த கண்களையும் ஆயிரந் தலையையு முடைய ஆதிசேடனாகிய சயனத்தின்மேல், அறி துயில் அமர்ந்து=யோகநித்திரை செய்து, பின்னர்=பின்பு, காய் கதிர் தோன்றும் எல்வை=எறிக்கின்ற கிரணங்களை யுடைய சூரியன் உதிக்கின்ற அவ்வளவினைக்கொண்ட காலத்திலே, கண் மதர் நீந்தி = கண்மயக்கந் தெளிந்து, ஆங்கு = அப்பொழுது,மீ உயர் மூன்று உலகமும் படைத்திட விழைவு உற்றேன்=மேலாக உயர்ந்த திரிலோகங்களையுஞ் சிருட்டிக்குமாறு விருப்பங் கொண்டேன்.

அறிதுயிலாவது தம்மையும் மற்றைய பொருள்களையும் அறிந்துகொண்டு தூங்குவதாம். அதனைத் தூங்காமற் றூங்குவது என்பர் ஆன்றோர்கள். "தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம். ,, என்றார் **தாயுமான சுவாமிகளும்**. நாராயணமூர்த்தி அறிதுயில் செய்யுங் காலமாவது-மானுட வருடம் முப்பது சென்றால் தேவர்களுக்கு ஒரு மாதமாகும். இப்படித் தேவவருடம் பத்துச் சென்றாற் சத்தவிருடிகளுக்கு ஒருவருட மாகும். அங்ஙனம் முனிவர் வருடம் பத்துக் கொண்டது துருவனுக்கு ஒருவருடம் ஆகும். இங்ஙனம் பன்னீராயிரந் தேவவருடங் கொண்டது ஓர் சதுர யுகமாம். இச்சதுர யுகம் எழுபத்தொன்று முடிந்தால் ஒருமனு வந்தரமாம். இம்மனுவந்தரம் பதினான்கு கழிந்தாற் பிரமதேவருக்கு ஒருபகலாகும். இங்ஙனம் நூறுவருடங்கழிந்தாற் பிரமாவுக்கு ஆயுள்முடியும். பிரமதேவரது பகலொன்றிலே சுவாயம்புமுதல் பௌதியன் ஈறாகவுள்ள பதினான்கு மநுக்களும், அரி முதற் சுசி யீறாவுள்ள பதினான்கு இந்திரர்களும் அரசாண்டு இறப்பார்கள். ஒரு மாதத்துள் நானூற்றிருபது இந்திரர் மரிப்பர். ஒருவருடத்துள் ஐயாயிரத்து நாற்பது இந்திரர் இறப்பார்கள். ஒரு பிரமதேவரது ஆயுளுள் ஐந்திலக்கத்து நாற்பதினாயிரம் இந்திரர் இறப்பர். இங்ஙனமுள்ள பிரமதேவர்க்கு ஆயுள் முடிந்து இறப்பாராயின் நாராயணமூர்த்திக்கு ஒரு பகல் கழியும். இவ்வாறுள்ள பகல் கழிந்தவுடன் விஷ்ணு ஆயிரங்கைகள், ஆயிரங் கால்கள், ஆயிரமுடியோடு அறிதுயில் செய்தருளுவர் என்பதாம். சூரியன் உதிக்குங்கால மாவது விடியமுன் ஐந்து நாழிகை யளவினதாய காலம். இதனைப் பிராமீ முகூர்த்தம் என்றுங் கூறுப. (௩)

ஆயிடை யெனது நெஞ்சத் தருளொடு மகிழ்ச்சி பூப்ப
மாயிரு ஞாலம் போர்த்து மல்கிருட் பிழம்பு சீக்கும்
பாயொளிப் பரிதி கோடி யெழுந்தெனப் பசுந்தேன் பில்குஞ்
சேயிதழ்க் கமலப் போதிற் செல்வன்முன் றோன்றக் கண்டேன்.

(இ-ள்.) ஆ இடை=அவ்வெல்லையிலே, எனது நெஞ்சத்து அருள் ஓடு மகிழ்ச்சி பூப்ப = என்னுள்ளத்திற் கருணையும் சந்தோஷமும் விளையும்படி, மா இரு ஞாலம் போர்த்து மல்கு=சிறந்த பெரிய உலகத்தை மூடி நிறைந்த,இருள் பிழம்பு சீக்கும்=இருட்கூட்டத்தை நீக்குகின்ற, பாய் ஒளி கோடி பரிதி=பரந்த ஒளியை யுடைய கோடி சூரியர்கள், எழுந்தது என = உதயஞ் செய்தாற்போல, பசு தேன் பில்கும் சே இதழ் கமலம் போதில்=பசுமையாகிய தேனைப் பொழிகின்ற சிவந்த இதழ்களையுடைய (எமது உந்தியாகிய) தாமரைப் பூவில், முன் செல்வன் தோன்ற கண்டேன்=முதலில் பிரமன் உதிக்கக் கண்டேன்.

ஆயிடை என்றது "வடவேங்கடந் தென்குமரி-யாயிடைத்தமிழ்,, என்று தொல்காப்பியப்பாயிரஞ் சொற்றாற் போல நின்றது. அ என்னும் முதல் நீண்டு எழுத்ததிகாரப்

புறனடையால் யகர வுடம்படுமெய் பெற்று முடிந்தது. சிருட்டிக்க நினைத்த அளவிலே எனக்கு அருளும் உவகையும் உண்டாகும்படி, என் நாபிக்கமலத்துக் கோடிசூரியர் உதயஞ்செய்தாற் போலப் பிரமன் முதலில் உதித்தா(ன்) என்பதாம். (௬)

அவ்வழி குழவித் திங்க ளடுசிலை வடிவேற் செங்கேழ்க்
கொவ்வையங் கனிவெண் முத்தங் குலவுமோர் கமலம் பூத்துத்
தெய்வமென் கொம்பி ரண்டு செவ்விள நீருந் தாங்கிப்
பௌவவா ரிதியிற் பொன்னம் பங்கயத் துதித்த தன்றே.

(இ-ள்.) அ வழி=அதன் பின்பு, பௌவம் வாரிதியில் = குமிழிகளையுடைய அந்தக் கடலில், பொன் அம் பங்கயத்து=பொன்போன்ற அழகிய (எனதுநாபிக்) கமலத்தினின்றும்,மென் தெய்வக் கொம்பு=மிருதுவாகிய தெய்வத் தன்மையினை யுடைய ஒரு பூங்கொம்பானது, குழவி திங்கள் = பிறைச் சந்திரனும், அடு சிலை = கொலைத் தொழிலைச் செய்கின்ற விற்களும்,வடி வேல்=கூர்மையாகிய வேற்படைகளும், செம் கேழ் அம் கொவ்வை கனி=சிவந்த நிறமுள்ள அழகாகிய கோவைப் பழமும், வெள் முத்தம்=வெள்ளிய முத்துக்களும் (ஆகிய இவைகள்) குலவும் ஓர் கமலம் பூத்து = விளக்குகின்ற ஓர் தாமரைப்பூ மலரப்பெற்று, இரண்டு செம் இளநீரும் தாங்கி=இரண்டு செவ்விளநீர்க் குரும்பைகளையுஞ் சுமந்துகொண்டு, உதித்தது=தோன்றியது.

அன்று-ஏ அசைகள். பாற்கடலி னிடத்துள்ள எனது நாபிக் கமலத்தினின்றும் ஒரு பூங் கொம்பானது பிறைச்சந்திரன், வில், வேலாயுதங்கள், கோவைப்பழம், முத்துக்கள் ஆகிய இவைகளைக் கொண்டுள்ள ஓர் தாமரைப்பூ மலரப் பெற்று, செவ்விளநீர்க் குரும்பைகள் இரண்டனையுஞ் சுமந்து தோன்றிற்று என்பதாம். இவை உருவகமாகும். ஒரு பூங்கொம்பு என்றது இலக்குமி தேவி யெனவும், பிறைச்சந்திரன் என்றது நெற்றி எனவும், வில் என்றது இருபுருவம் எனவும்,வேலாயுதங்கள் எ-து,இருகண்கள் எனவும், கோவைப் பழம் என்பது, உதடு எனவும், முத்துக்கள் என்றது பற்கள் எனவும், கமலம் என்றது, முகம் எனவுங் கொள்க. முகம் இவ்வுறுப்புக்களைக் கொண் டிருத்தலால் "குலவுமோர் கமலம் பூத்து" என்றதாம். செவ்விளநீர் என்றது தனங்களையாம். அதுபோலச் செந்நிற முடைத்தாய்த் திரண்டு அமுதத்தை உள்ளிற் கொண்டிருத்தலால் என்க. இது இலக்குமி தேவியின் அங்கம் பலவற்றையும் உருவகப் படுத்தினமையால் அநேகாங்கவுருவக வலங்காரமும்,அவளை மறைத்துக் கூறினமையால் உருவகவுயர்வு நவிற்சியணியுமாம். (௭)

மங்கலை யாகி யாவு மயக்குறு பொருளா யென்றுந்
தங்குமா மாயை யாகித் தனிப்பிர கிருதி யாகுஞ்
செங்கய னெடுங்கட் செவ்வாய்த் திருவினைக் கண்டு வேதன்
பொங்கிய வுவகை யோடு மெமக்கிவை புகல லுற்றான்.

(இ-ள்.) மங்கலை ஆகி=மங்கல ரூபமுடையவளாய், யாவும் மயக்கு உறு பொருள் ஆய்=எல்லாவற்றையுந் தன்னிடத்து மயக்கஞ்செய்யும் பொருளாகியும், என்றும் தங்கும் மா மாயை ஆகி=எவ்விடத்தும் இருக்கின்ற பெரிய மாயாசத்தி யாகியும், தனி பிரகிருதி ஆகும்=ஒப்பற்ற பிரகிருதி மாயையும் ஆகிய, செம் கயல் நெடுகண் செம் வாய்=செவ்விய கயல் மீன்போன்ற கண்களையுஞ் சிவந்த வாயினையுமுடைய, திருவினை வேதன் கண்டு= இலக்குமி தேவியைப் பிரமன் பார்த்து, பொங்கிய உவகை ஒடும்=நிறைந்த சந்தோஷத்

துடனே, எமக்கு இவை புகலல் உற்றுன் = எமக்கு இவ்வார்த்தையைச் சொல்லுவானுயினன். மங்கலை=சுகரூப முடையவள். பிரகிருதி=பகுதி.

பிரமன் இலக்குமி தேவியைக் கண்டு, எம்முடன் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினுன் என்றதாம். எமக்கு என்றது தனித் தன்மைப்பன்மை. (சு)

யான்படைப் பவைக ளெல்லா மலிதல்கா ரணமா வென்றும்
வான்படு பூதம் யாவு மருளுறு பந்த மெய்தத்
தேன்றெளித் தமிர்தினேடுங் குலவிய கனிவாய்த் தீஞ்சொற்
கான்படு நறுமென் கூந்தற் கமலையைப் பணித்தி யென்ருன்.

(இ-ள்.) யான் படைப்பவைகள் எல்லாம்=(எனது தந்தையே) என்னுற் படைக்கப் படுகின்ற சராசர தோற்றங்கள் யாவும்,மலிதல் காரணம் ஆ=பெருகுதல் காரணமாகவும், என்றும் வான் படு பூதம் யாவும் = எக்காலத்தும் ஆகாயமும் அதனிற் பொருந்திய நாற் பூதங்களும், மருள் உறு பந்தம் எய்த = ஒன்ருே டொன்று கலக்கப் பெறுதல் காரண மாகவும்(மாயையினைச் செய்யுமாறு) தேன் தெளித்து அமிர்தின் ஓடும் குலவிய=தேனைத் துளித்து அமுதத்தோடும் விளங்குகின்ற, கனி வாய் தீம் சொல்=கோவைப் பழத்தினை நிகர்த்த வாயினையுந் தித்திப்பாகிய சொற்களையும், கான் படு நறு மென் கூந்தல்=வாசனை பொருந்திய நல்ல மிருதுவாகிய அளகத்தினையும் உடைய, கமலையை பணித்தி என்ருன்= இவ்விலக்குமி தேவிக்குக் கட்டளையிடவேண்டும் என்று பிரார்த்தித்தான்.

வான் படு பூதம் என்றதற்கு ஆகாயமும், அதினின்றுந் தோற்றுகின்ற ஒவ்வோர் பூதங்களும் என்று கொள்வார் சிலர். அவர் ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும், அப்புவினின்று பிருதிவியுந் தோன்று மென்னும் மதமுடையராம். கமலை = தாமரையில் வசிப்பவள், தாமரையிற் பிறந்தவள். கமலை ஐ- உருபு மயக்கம். (எ)

என்றலுங் கமல வீட்டி ளிளங்கொடி வதன நோக்கி
நின்றபல் லுயிர்கள் யாவுஞ் சகத்தினி னீங்கா வாகி
வன்றிறற் குயவ னுளும் வனைகலத் திகிரி போலச்
சென்றியல் கருமத் தாம்பிற் றிரிதரப் புரிதி யன்றே.

(இ-ள்.) என்றலும்=என்று பிரமன் வேண்டுதலும், கமலம் வீட்டில் இளம் கொடி வதனம் நோக்கி=(யான்) தாமரை மலராகிய வீட்டின்கணுள்ள இளமை வாய்ந்த பூங் கொடி போன்ற இலக்குமி தேவியின் முகத்தைப் பார்த்து, நின்ற பல் உயிர்கள் யாவும்= தோன்றி நிற்கின்ற பலவகைப் பட்ட ஆன்மாக்க ளெல்லாம்,சகத்தினில் நீங்கா ஆகி=உலகத்தினின்றும் பிரிந்து ஒழியா தனவாய், வன் திறல் குயவன்=மிகுந்த வலிமையை யுடைய குயவனுனவன், நாளும் கலம் வனை திகிரி போல=நாடோறும் பாத்திரங்களை வனைதற்குக் கருவியாய தண்டசக்கரம்போல, சென்று இயல் கருமம் தாம்பின் = கழிந்து கழிந்து உண்டாகின்ற கன்மம் என்கின்ற கயிற்றுற் (கட்டி) திரிதர புரிதி=திரிந்து உழலும்படி செய்யக்கடவாய். அன்று ஏ – அசைகள்.

பல் உயிர்களாவன:—நால்வகைத் தோற்றமும், எழுவகைப் பிறப்பும் எண்பத்து நான்கு லக்கம் யோனிபேதங்களையு முடைய உயிர்களாம். சகத்தினில் நீங்காமை யாவது மீட்டும் மீட்டும் உடம்போடு காணப்பட்டு வருதல். அவை திகிரிபோற் சுழலுதலாவது

நரகம் சுவர்க்கம் பூதலம் என்னும் மூன்றிடத்துஞ் சென்று சென்றுறுதல். இவற்றிற்குக் கன்மமே காரண மாகலின் அதனைத் தாம்பு என்றதாம். (அ)

தத்தம வருணத் தோது மொழுக்கினிற் சார்ந்து நாளுஞ்
சித்தமா செறிந்து பொய்யிற் றீர்ந்துநான் மறையுந் தேர்ந்து
மைத்திரு மிடற்றுப் புத்தேண் மலரடி போற்றி னோர்பா
லுய்த்திடேன் மாயை யென்ன வந்நெறி யொழுகல் செய்தாள்.

(இ-ள்.) தம் தம வருணத்து=தங்கள் தங்களது வருணங்களிலும், ஓதும் ஒழுக்கினில்=சொல்லப்பட்ட ஒழுக்கங்களினும், நாளும் சார்ந்து=தினந்தோறும் நின்றொழுகி, சித்தம் மாசு எறிந்து=மனத்தின்க ணிகழுங் குற்றங்களை யெல்லாங் கடிந்து, பொய்யில் தீர்ந்து=பொய்மைப் பயன்றரு மவைகளை யெல்லாம் விடுத்து, நால் மறையும் தேர்ந்து=நான்கு வேதங்களையுங் கசடறத் தெளிந்து, மை திரு மிடறு புத்தேள் = மேகம்போன்ற அழகிய காளகண்டத்தை யுடைய சிவபெருமானது, மலர் அடி போற்றினோர் பால்=தாமரை மலர்போலுந் திருப்பாதங்களைத் துதித்து வழிபடுவோ ரிடத்து மாத்திரம், மாயை உய்த்திடேல் என்ன=நினது மாயாபாசத்தைச் செலுத்தா திருப்பாயாக என்று கூற, அ நெறி ஒழுகல் செய்தாள்=(அவளும்) அம்மொழிப்படியே செய்து வந்தாள்.

தத்தம–தம் தம் என்பன "மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்–வன்மைக் கினமாத் திரிபவு மாகும்" என்றதனால், வல்லெழுத்துக்கு இனமாகத் திரிந்து, வலித்தல் விகாரம் பெற்று முடிந்தன. அ–ஆறும் வேற்றுமையுருபு. ஒளி சிறிதுநீங்கிய விடத்தும் இருள் வந்து மூடுதல் போல ஒழுக்கஞ் சிலகணம் இல்லாவிடினும் மாயை வாதிக்கும் ஆகலின் நாடோறும் ஒழுக்கத்தில் நிற்கவேண்டும் என்பது பெற "ஒழுக்கினிற் சார்ந்து நாளும்" என்றதாம். சார்ந்து, எறிந்து, தீர்ந்து, தேர்ந்து என்னும் வினையெச்சங்கள் போற்றினோர் என்னும் வினையாலணையும் பெயரின் முதனிலை கொண்டுமுடிந்தன. (க)

ஆங்கதன் பின்ம ரீசி யங்கிராப் பிருகு தக்க
னோங்குமத் திரிவ சிட்டன் புலத்தியன் புலக னுற்ற
தீங்கெறி கிருது வென்னு மொன்பது திறத்தி னோரைப்
பாங்கினில் வேதன் யோக மாயையிற் படைத்தல் செய்தான்.

(இ-ள்.) அதன் பின்=அதன் பின்னர், வேதன்=பிரமனானவன், மரீசி அங்கிரா= மரீசி அங்கிரா, பிருகு தக்கன்=பிருகு தக்கன், ஓங்கும் அத்திரி வசிட்டன் புலத்தியன் புலகன்=உயர்வுள்ள அத்திரி வசிட்டன் புலத்தியன் புலகன், உற்ற தீங்கு எறி கிருது என்னும்=பொருந்திய தீமைகளை யொழித்த கிருது என்றுஞ் சொல்லப்படுகின்ற, ஒன்பது திறத்தினோரை = ஒன்பது வகைப்பட்ட முனிவர்களை, பாங்கினில் யோகம் மாயையில் படைத்தல் செய்தான்=தகுதியாகத் தனது யோகமாயையினாற் சிருட்டித்தான்.

இவ்வொன்பது முனிவர்களையும் பிரமன் யோகவலியினால் தன் மனத்தினின்றுஞ் சிருட்டித்தனன். அதனால் இவர் மானச புத்திரர் என்று சொல்லப்படுவர். இவர்கள் பிரமனைப்போலப் படைக்குந் தொழிலுள்ளாராகலின் நவப்பிரம ரென்றுங் கூறப்படுவர். தக்கனுக்குச் சிறுவிதி என்றும் பெயர். ஆங்கு–உரையசை யிடைச்சொல். (கo)

வேதியர் முகத்தில் வேந்தர் விறல்கெழு துணைத்தோள் வெற்பிற்
றீதறு வணிகர் செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர் செய்ய

பாதபங் கயத்தி லீன்றான் பதுமன்முன் படைத்த மூவ
ரோதிய மகங்கள் யாவு மாற்றுதற் குரிய ராவார்.

(இ-ள்) பதுமன்=தாமரை மலர் ஆசனனாகிய பிரமன், முகத்தில் வேதியர்=தனது முகத்திலிருந்து பிராமணர்களையும், வெற்பு விறல் கெழு துணை தோளின்=மலையைப் போன்ற வலிமை பொருந்திய இரு புயங்களினின்றும், வேந்தர்=அரசர்களையும், செம்பொன் குறங்கினில்=சிவந்த பொன்போன்ற தனது தொடைகளினின்றும், தீது அறு வணிகர்=குற்றமற்ற வைசியரையும், செய்ய பங்கயம் பாதத்தில் = சிவந்த தாமரைமலர் போன்ற பாதங்களினின்றும், சதுர்த்தர் = நான்காம் வருணத்தராகிய சூத்திரரையும், ஈன்றான்=சிருட்டித்தனன். (அவருள்) முன் படைத்த மூவர்=முதலிற் சிருட்டித்த மூவர்களும், ஓதிய மகங்கள் யாவும் ஆற்றுதற்கு உரியர் ஆவார்=சொல்லப்பட்ட யாகங்கள் எல்லாவற்றையுஞ் செய்தற்கு அருகராவர்.

பிரமதேவர் தமது முகத்தினின்றும் பிராமணரையும், தோளினின்றும் க்ஷத்திரியரையும், தொடையினின்றும் வைசியரையும், பாதங்களினின்றுஞ் சூத்திரரையுஞ் சிருட்டித்தனர். அவருள் முன் மூவரே யாகங்களைச் செய்தற்குஉரியராவர். இவர் முறையே நான்கு வருணத்தார் எனப்படுவர். "ஓதியமகங்கள்,, என்றதனால் சோதிட்டோமம்-அங்கிட்டோமம்-உத்தியம்-சோடசீ-வாசபேயம் - அத்திராத்திரம் - சோமயாகம் - சாதுர்மாசியம் - பௌத்திரமேதம்-சௌத்திராமணி-புண்டரீகம் - அங்கிசயன் - இராசசூயம் - அச்சுவமேதம் - விச்சுவதித்து-பிரமமேதம்-பிரணவமேதம்-பசுபந்தம் என்னும் பதினெண்யாகங்களும், தேவயாகம்-பிரமயாகம் - பூதயாகம் - மானுடயாகம் - பிதிர்யாகம் என்னும் ஐவகை யாகங்களும், ருதுசங்கமனம்—கருப்பாதானம் — பும்சவனம் — சீமந்தம் — விட்டுணு பலி - சாதகர்மம்-உத்தாபனம்-நாமகரணம்-அன்னப்பிராசனம்—உபநயனம்-உபக்கிரமணம் - காண்டமோசனம்-சமாவர்த்தனம்-விவாகம் முதலிய கிரியைகளுந் தகுதியாகக் கொள்ளப்படும். இவருள் பிராமணன் சர்மா எனவும், க்ஷத்திரியன் வர்மா எனவும், வைசியன் குப்தன் எனவும், சூத்திரன் தாசன் எனவும் அழைக்கப்படுவர். பலர்பால் விகுதி புணர்த்தியுரைத்தமையால் அவ்வவ் வருணத்து ஆடவர்களோடும் அவர் மணஞ்செய்தற் குரிய மகளிருந் தோன்றினர் எனக் கொள்க. அதனை "மதுமடை யுடைக்குஞ் செந்தா மரைமலர்ப் பீட மேலோன்-விதுமுகத் தினின்முன் றோற்ற விளங்கு வாசனையான் முன்னோர் - கதுமென மடவாரோடு முதித்தனர் கவின்செய் தோளின்-வதுவைசெய் மடவாரோடு மன்னவ ருதித்தா ரன்றே.ஊருவி னுய்கர் மாதருடனுதித் தனராற் பின்னோர்-சாருமா மடவாரோடுந் தாளிடை யுதித்தார்.,, என்னுஞ் சூதசங்கிதைச் செய்யுட்களா னுணர்க. (கக)

வேதமோர் நான்கு மாதி யந்தம்வே றிலவாய் முன்ன
ரோதிய வாக்க தாகு முரைத்தவிம் மறையிற் சார்ந்த
வேதமி னூல்கள் யாவும் விழுமிய விவற்றிற் றீர்ந்த
தீதுநா லவற்றி னின்றோர் செவ்விய ரல்ல ரன்றே.

(இ-ள்.) ஓர் நான்கு வேதமும்=ஒப்பற்ற நான்கு வேதங்களும், ஆதி அந்தம் வேறு இல்ல ஆய்=ஓர்காலத்துத் தோன்றுதலும் அழிதலும் ஆகிய வேறுபாடுகள் இல்லாதனவாய், முன்னர் ஓதிய வாக்கது ஆகும்=அநாதியே சிவபரம்பொருளாற் திருவாய் மலர்ந்தருளப்பட்ட பிரபல வாக்கியங்களே யாகும், உரைத்த இ மறையின் சார்ந்த = சொல்லப்பட்ட இவ்வேதங்களைச் சார்ந்தவைகளா யுள்ள, ஏதம் இல் நூல்கள் யாவும் = குற்ற மில்லாத நூல்கள் எல்லாம், விழுமிய=சிறந்தனவே யாகும், இவற்றின் தீர்ந்த நூல் தீது=

இவைகளி னின்றும் வேறுபட்ட நூல்கள் தியனவே யாகும், அவற்றில் நின்றோர் = அவ் வேறுபட்ட நூலின்வழியே யொழுகுவோர், செவ்வியர் அல்லர்=நன்மையினை யுடையர் அல்லர். அன்று—ஏ அசைகள்.

வேதங்கள் அநாதியே சிவபெருமானாற் றிருவாய் மலர்ந்தருளப் பட்டன. அவைகளைச் சார்ந்த நூல்களெல்லாஞ் சிறந்தன வாகும். சாராத நூலின்வழி நிற்பவர் தீயராவர் என்பதாம். சிலவிடத்து விசேட சுருதி ஆகமம் என்றுகூறப்பட்டது.

வேதங்கள் அநாதியே யுள்ளன என்பது தோன்றப் **பிரகதாரணி யோபநிடதம்** "இருக்காதி வேதங்கள் பிரமத்தினது சுவாசமாம்." என்று கூறிற்று. ஆயினும் அவை பஞ்சப் பிரம மந்திர சரீரியாய் உள்ள சதாசிவநாயனாராற் பிரதம மகாசிருட்டி யாரம்பத்திலே தற்புருடம் முதலிய நான்கு முகங்களினின்றுந் தோற்றுவிக்கப் படும். உண்மைப் பொருளைக் கேட்டற்குக் கருவியாதலாற் சுருதி யெனவும், ஆதிகுருவினின்றுந் தொடங்கிப் பாதம் பரியமாகப் பயிலப் படுதலினாலுங் கற்கப்படுதலானும் ஆம்நாயம் எனவும், முதலும் முடிவு மில்லாமையாற் சுயம்பு, ஆதிநூல், எழுதாக்கேள்வி எனவும் பெயர் பெறும். பிரளயங்க டோறுஞ் சிருட்டித் தொழிற் குரியராய் வரும் ஒவ்வோர் பிரமர்களாலும் உதாத்தம் அநுதாத்தம், சுவரிதம் என்னுஞ் சுரங்கள் பொருந்த அத்தியயனஞ் செய்து வெளிப்படுத்தப் படுதலின் பிரமனாலும் அருளப் பட்டனவெனச் சிலபுராணங்கள் பேசாநிற்கும். வேதங்கள் அநாதியில் நான்கு பாதங்களோடுங் கூடியதோ வேதமாயிருந்து பின்னர்த் துவாபரயுகத்திற் றோன்றிய வியாச முனிவரால் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்காகப் பகுக்கப்பட்டு, முதலாம் வேதத்தைப் பைலமுனிவர்க் குபதேசிக்க, அவர்வழியால் இந்திரப் பிரமிதி, பாஷ்களர், போத்தியர், அக்கினிமாடகர் முதலினோர்க்கு உபதேசிக்கப் பட்டமையால் இருபத்தொரு சாகைகளாகவும், இரண்டாம் வேதத்தை வைசம்பாயன முனிவர்க்கு உபதேசிக்க, அவர்வழியாக யாக்கியவற்கியர், வாசனேயர் முதலாயினோர்க்கு உபதேசிக்கப்பட்ட முறைமையினால் நூற்றொன்பது சாகைகளாகவும், மூன்றாம் வேதத்தைச் சைமினி முனிவர்க்கு உபதேசிக்க, அவர் வழியாகச் சுமந்து, சுத்துவா, சுகர்மா, இரணியநாபர், பவுஷ்பிஞ்சி, லோகாக்ஷி, கௌமுதி, லாங்கலி முனிவர் முதலாயினோர்க்குப் பலவகைப்பட மொழியப்பட்டமையால் ஆயிரஞ் சாகைகளாகவும், நான்காம் வேதத்ினைச் சுமந்து முனிவர்க்கு உபதேசிக்க, அவர் வழியாகக் கபந்தர், தேவதரிசர், பத்தியர், மேதன், பிரமபலி, சவுல்காயனி, பிப்பலாதன், சாபாலி, குமுதாதி, சௌனகர் முதலாயினோர்க்கு உபதேசிக்கப் பட்டமையால ஐம்பது சாகைகளாவும் பிரிக்கப் பட்டுப் பற்பல வாயின.

வேதங்களைச் சார்ந்த நூல்களாவன—இருக்கு வேதத்திற்கு உரிய ஐதரேயம் முதற் சௌபாக்கியம் ஈறாகவுள்ள பத்து உபநிடதங்களும், யசுர் வேதத்திற்கு உரிய கடவல்லி முதல் முத்திகம் ஈறாக வுள்ள ஐம்பத்தோ ருபநிடதங்களும், சாம வேதத்திற்கு உரிய கேனம் முதற் சாபாலம் ஈறாகவுள்ள பதினாறு உபநிடதங்களும், அதர்வண வேதத்திற்கு உரிய பிரச்சினம் முதல் காருடம் ஈறாகவுள்ள முப்பத்தோ ருபநிடதங்களும் ஆகிய நூற்றெட்டு **உபநிடதங்களும்**, சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என்னும் **ஆறு வேதாங்கங்களும்**, ஆயுவேதம், தனுவேதம், காந்தர்வவேதம், அருத்தவேதம் என்னும் நான்கு **உபவேதங்களும்**, காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்னும் இருபத் தெட்டுச் **சிவாகமங்களும்**, விசுவான்மகம் முதல்

நாரசிங்கம் இறுதியாகவுள்ள இருநூற்று நாற்பத்தேழு உபாகமங்களும், மநுஸ்மிருதி முதல் ஹாரீதஸ் மிருதி யீறாக வுள்ள பதினெண் மிருதிகளும், சொல்லப்பட்ட பிரமபுராணம் முதற் பிரமாண்டம் ஈறுவுள்ள பதினெண் மகாபுராணங்களும், சனற்குமாரம் முதற் பார்க்கவம் இறுதியாக வுள்ள பதினெட்டு உபபுராணங்களும்,பிரமமீமாஞ்சை, நியாயம் என்பவைகளுமாம். சாராத நூல்களாவன—சௌத்திராந்தகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், ஆசீவகன், நிகண்டவாதி, தார்க்கிகன் முதலிய சமயிகளது பிடகம், மதனசாத்திரம் முதலிய நூல்களேயாம். (கஉ.)

தோற்றுழி யுயிர்கள் யாவு மறிவின்றித் தோற்றுந் தத்த
மாற்றுநல் லொழுக்கந் தன்னு லறிவுறு மவைக்கு நாளு
மேற்றதோர் காலந் தன்னில் விருப்பொடு வெறுப்பாங் கெய்திப்
போற்றுறு தரும நீக்கித் தீவினை புகுது மன்றே.

(இ ள்.) உயிர்கள் யாவும் தோற்றுழி=ஆன்மாக்கள் எல்லாந் தோன்றுங் காலத்தில், அறிவு இன்றி தோற்றும் = நல்லறிவு இல்லாமல் தோன்றுவனவாகும், ஆற்றும் தம் தம் நல் ஒழுக்கத்தால்=செய்யப்படுகின்ற தமது தமது தருமச் செய்கைகளினாலே, அவைக்கு நாளும் அறிவு உறும்=அவ்வுயிர்களுக்கு நாடோறும் நல்லறிவு வளராநிற்கும், ஏற்றது ஓர் காலத்தில்=இயைந்த தாகிய ஒருகாலத்தில், விருப்பு ஒடு வெறுப்பு எய்தி=அவாவினையும் வெறுப்பையும் அடைந்து, போற்று உறு தருமம் நீக்கி = (எவர்களாலும்) கொண்டாடப் படுகின்ற நல்லொழுக்கத்தை விடுத்து, தீ வினை புகுதும் = பாவச் செய்கை களிற் பிரவேசிக்கும். தன் இரண்டும், அன்று ஏ என்பவும் அசைகள்.

உயிர்கள் பிறவி யெடுக்குங்கால் சந்திரனை விட்டு ஆகாயத்திற் சேர்ந்து,வாயுவோடும் பரந்து, புகை நிறத்தனவாய் மேக ரூபத்தோடு கலந்து, மழைத் தண்ணீராகக் கீழே விழுந்து,வித்து வேர் கொடிகளிற் பொருந்தியாவது,சலத்திற் சேர்ந்தாவது,தந்தையாய் விதிக்கப்பட்டு இருப்பவனது உடற்குள்ளே ஆகார வழியாய்ச் சென்று,இரத்தமாய் விந்துவின்கண் இருமாதந் தங்கிப் போக காலத்தில் மாதா வுதரத்தின் கருவிற் சென்று தங்கி,கருப்பாசயப்பை யுறுத்துதல், சலம்பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு முரித்துத் தள்ளுதல், யோனித் துவாரத்தால் நெருக்குண்ணுதல் ஆதிய பலவகைப் பெருந்துன்பங்களால் மொத்துண்டு வாடி, அதனால் அறிவுகெட்டுப் பிறத்தலின் "தோற்றுழி யுயிர்கள் யாவுமறிவின்றித் தோற்றும்" என்றதாம். பிறந்து தத்தமக்குரிய வருணாச்சிரம தருமங்களை வழுவறநடத்தலால் ஏனை யுயிர்களின் கண்ணும் இறைவ னிடத்தும் அன்பு தோன்றும்; அது தோன்றவே அருளும்,அவ்வருள் வந்தவழித் தவமாட்சியும்,அஃதுற்ற விடத்துச் சிவஞானமும் எய்தப்பெற்றுச் சிவகதி சேரும் ஆகலின் "தத்த மாற்று நல்லொழுக்கந் தன்னுலறிவுறும்" என்றும், இருவினைகளும் அவற்றிற்கியைய முக்குணங்களும் மாறி மாறித் தோன்றலின் தீவினையிலும் புகும் என்பான். "அவைக்குநாளும்...தீவினை புகுது மன்றே" எனவுங் கூறியதாம். அது "தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடு – மருளெனுங் குழவியு மணையு மாங்கவை – வருவழித் தவமெனு மாட்சி யெய்து மேற்–றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்" எனக் கந்தபுராணத்தும், நல்வினை திறம்பித் தீயவாய்த் தீய நல்லவாய் வருபவு முளவே-வல்வினை மெலிய வினைகளாய் மெலிய வலியவாய் வருபவு முளவே-நல்வினை செயும்போ ததன்பயன் போலத் தீயவு நணுகலு முளவே - புல்வினை செயும்போ ததன்பயன் போல நல்லவும் புணர்தலு முளவே." எனத் தணிகைப் புராணத்தும் கூறியருளிய வாற்றான் அறியப்படும்.

(கரு.)

(இ-ள்.) மருவற்கு அரிது ஆம் உயர் வீடு=பொருந்துதற்கு அருமையுடைத்தாய மேலான வீட்டின்பமும், சீர்த்தி பெரு மல்லல் செல்வம்=புகழும் மிக்க வளமுடைய ஐசுவரியமும், தருமத்து அளவின் வந்து அடைந்த ஆறுல்=செய்யப்பட்ட தருமம் எவ்வளவோ அவ்வளவின்படி வந்து சேருந் தன்மையால், தருமம் விடல் தீது=நல்லொழுக்கமாகிய வதனைச் செய்யாது விடுதல் கேடாகும், பெருகும் தருமம் பொருள் காமம் இவைகள்=வளர்கின்ற அறம் பொருள் இன்பம் என்னு மிம்மூன்றும், பேசின் = (வந்தடையும் விதத்தைக்) கூறுமிடத்து, கருதற்கு அரிய சாத்துவிகம் இராசதம் தாமதத்தின் = நினைத்தற்கரிய சாத்துவிகம் இராசதம் தாமத மென்னு முக்குணங்களின், வழியே கலந்திடும்= வழித்தாகவே யொருவரை வந்தடையும். ஆல் - அசை.

தரும மொன்றே மற்றைய பொருள் இன்பம் வீடுகட்குக் காரணமாய் நிற்றலின் அதனைச் செய்யாது விடுதல் தீது என்பான் "மருவற் கரிதாமுயர்...விடறீது" என்றான். அது "எளிதென விகழா வரிதென வரையாது - நமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை-நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளருந் - தொழிற்படிற் சினைவிடேஉப் பயக்கு முணர்த்தி-னிவணு மும்பருந் துணையே யதனாற் - றுறைதொறுந் துறைதொறு நோக்கி - யறமே நிறுத்துமி னறிந்திசி னோரே." என ஆசிரியமாலையிற் கூறுவதனால் அமையும். வழியென்றது தொழிலை. சத்துவ குணத்தொழில்களாவன — ஞானம், தவம், மேன்மை, அருள், மோனம், வாய்மை, பொறை, புலனடக்கல் என்னும் எட்டுமாம். இராசதகுணத் தொழில்களாவன—தானம், தவம், தருமம், பேணல், ஞானம், கல்வி, நலன், கேள்வி என்னும் எட்டுமாம். தாமதகுணத் தொழில்களாவன—பேருண்டி, நிதிகேடு, உறக்கம், மறதி, பொய், சோம்பு, ஒழுக்கம் வழுவுதல், கொலை, வஞ்சம் என்னு மொன்பதுமாம். "ஞானந் தவமேன்மை நல்லருண் மோனம்-வாய்மை பொறைபுல னடக்கல்சாத் துவிகம். தானந் தவமே தருமம் பேணல் - ஞானங் கல்வி நலனிவை தெரித - லீன மில்லா விராசத குணமே. நிறைபே ருண்டி நிதிகே டுறக்க-மறதி பொய்சோம் பொழுக்கம் வழுவுதல்-கொலையே வஞ்ச மிவைதா மதகுணம்." என்பது பிங்கலந்தைச் சூத்திரம். (௨௫)

ஆசின் றுயர்ந்த சாத்துவிகத் தமர்ந்தோர் மேலாங் கதியடைவர்
பேச வருரா சதகுணத்திற் பொருந்தி னோர்கள் பெட்பினொடு
தேசி னுறுமத் திமகதியிற் சேர்வர் வளர்தா மதகுணத்தோர்
மாசு பூத்த விழிகதியி னுலக மிகழ மன்னுவார்.

(இ-ள்.) ஆசு இன்று உயர்ந்த சாத்துவிகத்து அமர்ந்தோர்=குற்றமின்றி யுயர்ந்த சாத்துவிக குணத்தைக் கொண்டு நின்றவர், மேல் ஆம் கதி அடைவர்=மேலாகிய உத்தம கதியைச் சேர்வார், பேச அரு ராசத குணத்தின் பொருந்தினோர்கள் = சொல்லுதற்கரிய இராசத குணத்தி னின்றோர், பெட்பின் ஒடு தேசின் உறு மத்திம கதியில் சேர்வர்=விருப்பத்துடனே விளக்க மமைந்த மத்திம கதியிற் பொருந்தி வாழ்வார், வளர் தாமத குணத்தோர்=(பாவம்) வளர்தற் குரிய தாமத குணத்தி னின்றவர், மாசு பூத்த இழி கதியின்= குற்றம் மிகுந்த தாழ்வுள்ள அதம கதியின்கண், உலகம் இகழ மன்னுவார்=உலகத்தவர் நிந்திக்க நிலைத்திருப்பர்.

இன்றி என்னும் வினையெச்சம் இன்று எனத் திரிந்து நின்றது. "ராசமாபுரி, ரவிகுல திலகன், ரூபபேதம்" என்ற தொல்லாசிரியர் போல இவனும் ராசதகுணம் என்று வடமொழியிற் பிறந்தாங்கு உரைத்தனன். உலகம் - ஆகுபெயர். உத்தமகதியாவது—சிவசாலோகியம், சிவசாமீப்பியம், சிவசாரூப்பியம், சிவசாயுச்சியம் என்னு நான்குமாம். மத்திமகதி—விட்டுணு முதலினோரது தெய்வ பதங்களும், ஆதியரி வஞ்சம், நல்லரி வஞ்

13

சம், ஏமதவஞ்சம், இரணவஞ்சம், தேவகுருவம், உத்தாகுருவம் என்னும் அறுவகைப் போக பூமிகளுமாம். அதம கதியாவது—இருபத்தெட்டுக் கோடி நரகங்களாம். அவற்றை "வெவ்வினைப் பிலகா லேழு விளம்புமிவ் விருபத் தெட்டு-மொவ்வொரு கோடி யாக வுறுமுறு நாலே ழுள்ளுந் - தெவ்வினை முதன்மை யெய்தி யைவ்வைத்து செறிந்து நிற்கு-மிவ்வெலாம் பலகா லன்மி யினைபவா லொழிவு காறும்." என்று விரித்தது தணிகைப் புராணம். (உகூ)

அறந்திறம் பாது நாளு மரும்பொருள் காமந் துய்ப்போர்
சிறந்தவிவ் வுலகந் தன்னி லளப்பருஞ் செல்வ மெய்தி
மறங்கிளர் வடிவே லுண்கண் வானவர் மகளி ரோடு
முறங்கிடா தின்பந் துய்க்கு முலகினி லினிது வாழ்வார்.

(இ-ள்.) நாளும் அறம் திறம்பாது=நாடோறும் தருமவழியினின்றுந் தவறாது, அரு பொருள் காமம் துய்ப்போர் = அரிய பொருளைக் கொண்டு இன்பத்தை யநுபவிப்போர், சிறந்த இ உலகம் தன்னில் = பெருமையிற் சிறந்த இந்நில வுலகின்கண், அளப்ப அரு செல்வம் எய்தி=அளவு படுத்தற் கியலாத செல்வத்தை யடைந்து வாழ்ந்து (மறுமைக்கண்) மறம் கிளர் வடி வேல் உண் கண்=கொலைத் தொழின் மிக்க கூர்மையாகிய வேலாயுதத்தைப் போன்ற மையுண்ட விழிகளை யுடைய, வானவர் மகளிர் ஓடு = தேவப் பெண்களோடே, உறங்கிடாது இன்பம் துய்க்கும்=ஓயாமற் போகத்தை யநுபவிக்கின்ற, உலகில் இனிது வாழ்வார்=தெய்வ பதவியின்கண் இன்புற்று வாழ்வார்.

இம்மைக்கண் தருமவழியி னின்றும் பொருள் சம்பாதித்து இன்பத்தை யநுபவிப்போர் மறுமைக்கணும் போகபதவியிற் சென்று அநுபவிப்பர் என்பதாம். போக பூமியிற் சென்று போகம் நுகருமாற்றை "பதினாறாட்டைக் குமரனும் விதிவழிப் - பன்னீ ராட்டைக் குமரியு மாகி-யொத்த வன்பினு மொத்த நலத்தினுங் - கற்பக நன்மர நற்பய னுதவ-வாகிய செய்தவத் தளவு மவ்வழிப்-போக நுகர்வது போகபூமி." என்ற திவாகரச் சூத்திரத் தானறிக. ஓயாமற் போகத்தை யநுபவிக்கின்ற தேவபதங்களினும் இந்நிலவுலகு சிறப்புடைத் தென்பான் "சிறந்த விவ்வுலகந் தன்னில்" என்றான். அதனை "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பார்" என்று சிவஞானசித்தியாரினும், "விண்ணுறுத்து மேக்கி வர்ந்தார் வியன்றுறக்கத்ர் தவர்மகளீ - ரண்ணன்முலை முயக்கன்றி யறியாமை யெதிர்நோக்கிப் - பண்ணரிய தவந்தானப் பயப்பாட்டி னெடும்விளங்கு - மண்ணகலா ரறிஞரென வல்லையவ னுருதிழிவார்." என்று தணிகைப்புராணத்தினுங் கூறியவாற்றா னறிக. உம்-இன் சாரியை யிடைச்சொற்கள். (உஎ)

அறம்புரிந் தன்றி யோங்கு துறக்கத்தி னடைத லாகா
சிறந்தநற் பொருள்செய் தல்லாற் றிகழ்தரு மின்பஞ் சேரா
வறைந்தகா ரணத்தி னன்றிக் காரிய மாகா வோடு
கறங்குபோற் பிறவி ஞானத் தல்லது கடக்க லாகா.

(இ-ள்.) காரியம்=எக்காரியங்களும், அறைந்த காரணத்தின் அன்றி ஆகா = சொல்லப்பட்ட காரணங்களால் அல்லாமல் ஆகாவாம், (ஆதலால்) ஓங்கு துறக்கத்தின் அடைதல்=உயர்ந்த சுவர்க்க லோகத்தை யடைதல், அறம் புரிந்து அன்றி ஆகா = தருமத்தைச் செய்தாலன்றிக் கூடாதாம், திகழ் தரும் இன்பம் = விளங்கு மிவ்வுலக வின்பமானது, சிறந்த நல் பொருள் செய்து அல்லால் சேரா=சிறப்பாய நல்ல பொருளைச் சம்பாதித்தன்றிக் கூடாது, ஓடு கறங்கு போல் பிறவி=ஓடுகின்ற காற்றாடி போன்ற பிறவிக் (கடலையும்)

ஞானத்து அல்லது கடக்கல் ஆகா = சிவஞானமாகிய (புணையினால்) அன்றிக் கடத்த லியலாது.

காரண மின்றிக் காரியமும், தரும மின்றிச் சுவர்க்கமும், பொருளின்றி இன்பமும் ஆகாவாம். அங்ஙனமே சிவஞானத்தா னன்றிப் பிறவி யொழித லில்லையாம். அச்சிவஞான வேட்கை உத்தமம் மத்திமம் அதமம் என மூவகைப்படும் என்றும், அவற்றுள் அதம வேட்கையர் மூன்று சனனம் பிறந்து பின்னர்ப் பரமாசாரியரின் திருவருள் பெற்று முத்தியடைவார் என்றும், மத்திம வேட்கையர் இரண்டாவது பிறப்பிலே முத்தியடைவார் என்றும், உத்தம வேட்கையர் பிறிதோர் சனன மெடுத்து எடுத்த சரீரத்திலேயே நிர்மல ஞானவெளியினை யுணர்ந்து அவ்வுடலை விடுத்துத் தம்மை நீங்காது நிறைந்து நிற்கும் பரசிவநாதனது திருவடி கிலைப்பார் என்றும் சர்வோத்தராகமத்தின் மூன்றாவது உபபேதத்திற் கூறப்படுதலால் "பிறவி ஞானத் தல்லது கடக்கல் ஆகா" என்று கூறியதாம். (௨௮)

தாமரைப் பொகுட்டின் மேய சதுர்முகக் கிழவ னாதி
தேமலர்த் தருக்க ளீறாச் செறியுநல் லுலகம் யாவு
நாமநூற் றருமந் தாங்கி நின்றன நல்லோர் யாருங்
காமுறல் வேண்டு மென்றுங் களைகணாந் தரும மொன்றே.

(இ-ள்.) தாமரை பொகுட்டில் மேய=தாமரைக் கொட்டையாகிய ஆசனத்தின்கணிருக்கின்ற, சதுர்முகம் கிழவன் ஆதி = நான்கு முகங்களை யுடைய பிரமன் முதலாக, தேம் மலர் தருக்கள் ஈறு ஆக செறியும்=தேன் பொருந்திய புட்பங்களை யுடைய தாவரம் இறுதியாக வுள்ள, நல் உலகம் யாவும்=நன்மையாகிய உயிர்வர்க்கங்கள் எல்லாம், நாமம் நூல் தருமம் தாங்கி நின்றன=அச்சத்தை விளைக்கும் நூல்களிலே விதிக்கப்பட்ட ஒழுக்கத்தையே கைக்கொண் டுள்ளன (ஆகலால்) நல்லோர் யாரும் = நல்லவர் என்று சொல்லப்படுவோர் எவரும், களைகண் ஆம் தருமம் ஒன்றே = (தமக்குப்) பற்றுக் கோடாகிய அத்தருமம் ஒன்றனையே, என்றும் காமம் உறல் வேண்டும்=எக்காலும் விரும்பி யொழுகுதல் வேண்டும்.

கிழவன்=உரியவன்-மூத்தோன் எனலுமாம். உலகம் என்பது உயிர்களைக் குறித்து நிற்றலின் இடவாகுபெயர். விதித்தவைகளையே செய்யவேண்டும் எனவும், விலக்கியவைகளைச் செய்யின் நரக வாதனையை யடைதல் தப்பாதென்றும் பயமுறுத்தி நிற்றலின் "நாம நூல்" என்றான். "நாம நல்லார்க் கதிர்ப்பட வுமிழ்ந்த" என்றாற் போல நாம் என்னுஞ் சொல் நாமம் எனத் திரிந்தும் நிற்கும் என்பர் நச்சினார்க்கினியரும். நூல் - வேதசிவாகமங்களும் அவற்றின் சார்பு நூல்களுமாம். தருமமாவது – வருணாச்சிரம வொழுக்கமாம். பிரமன் முதற் றாவரமீறா வுள்ளவைகள் பசுக்கள் என்பதனை "மறையவன் முதலா நிற்ப தீறதா மெவையு மன்னி - யுறைதரு பசுக்க ளாகு முற்றிடு பசுக்கட் கெல்லா- நிறைதரு பதியா யென்று நிலவியே யுறைதலாலே-யிறைவனை வேத நான்கும் பசுபதி யென்று கூறும்." என்ற வாயுசங்கிதைச் செய்யுளாலும் அறிக. (௨௯)

வைதிகத் தருமம் வாய்ந்த பிரவிர்த்தி நிவிர்த்தி யென்னா
வெய்துமங் நிவிர்த்தி ஞானத் தொழுகன்மற் றையதென் றான்றுங்
கைதவத் தெவையு மாற்ற லாங்கது கடிந்து முன்னைச்
செய்தவ ஞானந் தம்மி னிற்பதே செவ்வி தாமால்.

(இ-ள்.) வைதிகம் தருமம்=வேதசம்பந்தமாகிய தருமங்கள், வாய்ந்த பிரவிர்த்தி நிவிர்த்தி என்ன எய்தும்=வாய்ப்பாகிய பிரவிர்த்தி என்றும் நிவிர்த்தி யென்றுமிருவகைப்

படும், அநிவிர்த்தி = (அவற்றுள்) அந்த நிவிர்த்தி தருமமாவது, ஞானத்து ஒழுகல்=சன் மார்க்கத்தி னிற்றலாம், மற்றை அது = மற்றையபிரவிர்த்தி தருமமாவது, எஞான்றும் கைதவத்து எவையும் ஆற்றல் = எக்காலும் பொய்யாயுள்ளவைக ளெவற்றையும் மெய் யெனக் கொண் டொழுகுதலாம், அது கடிந்து=அந்தப் பிரவிர்த்தியை விடுத்து, முன்னே செய் தவம் ஞானம் தம்மில் நிற்பதே=முன்னர்க் கூறிய யாவராலுஞ் செய்தற்குரிய தவ மார்க்கத்தும் நன்னெறியினும் நிற்றலே, செவ்விது ஆம் = நன்மையதாகும். ஆங்கு ஆல் அசைகள்.

வேத சிவாகமாதிகளிற் கூறப்பட்ட தருமங்கள் பிரவிர்த்தி தருமம், நிவிர்த்தி தருமம் என இருவகைப்படும். அவற்றுள், பிரவிர்த்தியாவது மீட்டும் பிறவி யெடுத்தற் கேது வாய நல்வினைகளாம். அவை அசுவமேதம் இராசசூயமுதலியன. அவற்றை விடுத்து அழியா வின்பத்தை யளிக்கும் தவஞான மார்க்கத்தி னிற்றலாய் நிவிர்த்தி தருமத்தி னிற் றலே நன்மையாகும். தவமாவது - சரியை கிரியை யோகங்களாம். ஞானமாவது சிவ ஞானம். (கூ0)

பொறைகொடை கருணை தானம் பொய்ம்மொழி யழுக்கா றின்மை
யுறையுமுட் கரணங் காத்தல் பயில்புறக் கரண மோம்பல்
குறளைசொல் லாமை நாளு முனிவின்மை யுயிர்கொல் லாமை
பிறர்மனை நயத்த லின்மை நன்மொழி பிறழா வாய்மை.

(இ-ள்.) பொறை கொடை கருணை தானம் = சாந்தம் ஈகை இரக்கம் தானம், பொய்ம்மொழி அழுக்காறு இன்மை=பொய்ச்சொல்லும் பொறாமையும் இல்லாதிருத்தல், உறையும் உள் கரணம் காத்தல்=பொருந்திய அகக் கரணங்களை யடக்கல், பயில் புறக்கர ணம் ஓம்பல் = விடயங்களிற் சேர்கின்ற புறக்கரணங்களை யடக்குதல், குறளை சொல் லாமை = கோட்சொல்லாமை, நாளும் முனிவு இன்மை = எக்காலத்துங் கோபங்கொள் ளாமை, உயிர் கொல்லாமை = சீவர்களைக் கொலை செய்யாதிருத்தல், பிறர்மனை நயத்தல் இன்மை=பரதாரங்களை விரும்பாமை, நல் மொழி = இனிய சொல், பிறழாத வாய்மை= தவறுபடாத உண்மைநிலை.

இதுமுத லிருசெய்யுள் குளகம். கொடையாவது ஒருபொருளைப் புகழ்விரும்பிக் கொடுப்பது. தானம் புண்ணியத்தை விரும்பியும், ஒன்றனை விரும்பாமலும் அளித்தல் என்ப. உட்கரணமாவன—மனம் புத்தி சித்தம் அகங்காரம். புறக்கரணமாவன—வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னுங் கருமேந்திரியங்களும், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஞானேந்திரியங்களுமாம். இவற்றைக் காத்தலாவது விடயவழிப் போகா மே தடுத்தல். பொய்ம்மொழி யின்மை யெனவே வாய்மையும் பெறப்படுவதாக, பின் னரும் பிறழா வாய்மை யென்றது "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த—நன்மை பயக்கு மெனின்" என்றபடி நன்மைப் பயன் கொடுக்குமெனிற் பொய்யும் மெய்யெனப் படுமாகலானும், "மெய்தருஞ் சொலும்பொய் நயம்பயக்கிலா விடத்து" என்றாங்கு தீமைப்பயன் கொடுக்கு மெனின் மெய்ச்சொல்லும் பொய்ம்மொழியாகும் ஆகலானும், இச்குற்றங்க ளில்லவாய வாய்மையென்று அறிவித்தற் கென்க. (கூக)

புண்ணிய நன்னீ ராடல் கடவுளர் பூசை யாற்ற
லுண்ணிறை மகிழ்ச்சி வேத பாரகர்க் கூட்ட நீய
கண்ணய வாமை கள்ளா தொழுகுதல் கடுஞ்சொ லின்மை
யெண்ணிய விவைக ளொன்கு குலத்திற்கு மியைந்த வாமால்.

(இ-ள்.) புண்ணியம் நல் நீர் ஆடல்=பாவங்களை விமோசனம் பண்ணும் நன்மையாகிய தீர்த்தங்களிலே மூழ்குதல், கடவுளர் பூசை ஆற்றல் = தேவபூசை செய்தல், உள் நிறை மகிழ்ச்சி = அகத்தில் நிறைந்த சந்தோஷ முடைமை, வேத பாரகர்க்கு ஊட்டல்= வேதாத்தியயனஞ் செய்யும் பிராமணர்க்கு அமுதளித்தல், தீய கள் நயவாமை=கொடிய மதுவினை யுண்ணாமை, கள்ளாது ஒழுகுதல் = களவு செய்யா திருத்தல், கடு சொல் இன்மை=கொடுஞ் சொற் சொல்லாமை, எண்ணிய இவைகள்=எண்ணப்பட்ட இவ்விருபத்தொன்றும், நான்கு குலத்திற்கும் இயைந்த ஆம்=நான்கு வருணத்தவர்க்கும் உரியனவாகும்.

"நான்கு குலத்திற்கும்" என்றதன்கண் உம்மையை யெச்சப்படுத்திச் சங்கர சாதியார்க்கும் இவை உரியன வெனக் கொள்க. சங்கர சாதியாராவார் "தப்பில் குல நூலாந் தாழ்ந்தவநு லோமமே-முப்பிரதி லோமமா ரும், ஆங்கவற்று லாமந்த ராளமிரண்டாறுமற்று-மீங்குரைவி ராத்தியமீ தின்று." என்றபடி யெழுவகைப்பட்ட அநுலோமரும், அறுவகைப்பட்ட பிரதிலோமரும், பன்னிருவகைப்பட்ட அந்தராளரும், ஐம்பத்தாறு வகைப்பட்ட விராத்தியருமாம். அவர்களின் பெயர்களாவன—குண்டகர், கோளகர், சவர்ணர், நக்ஷத்திர சேவகர், அம்பட்டர், கும்பகாரர், பாரசவர், நிடாதர், போசர், நாவிதர், சூதர், சூவிரர், மாகிட்டியர், விசன்மர், உக்கிரர், சூலிக்கியர், மணிகாரர், புளிந்தர், க்ஷத்தர், மிலேச்சர், மாகதர், அர்த்தர், தௌட்டியந்தர், கடகாரர், மாலாசிதர், உற்பலர், சண்டாளர், பாகுதாயர், வைதேகர், பலதர், அயோகவர், சத்திரியார், ஆவந்தியர், மல்லர், சுதன்வர், மைத்திரர், பலகண்டர், இரசகர், புட்பதர், தக்ககர், சுவபசர், குகபர், கரணர், சருமகாரர், பாரகர், வேணுகர், கனகர், அத்திகர், வர்த்தனசாலிகர், கருமகாரர், தண்டகபோலர், மார்க்கவர், சல்லர், வந்திகர், வாடதானர், கண்டகர், சற்பர், சவுண்டிகர், சாத்துவதர், தசியவர், பைரவர், ஆசிரயிகர், கரண்டர், சாமுத்திரர், மாலாகாரர், கைவர்த்தர், நீலகாரர், வருணகரர், பிங்களர், நர்த்தகர், மாதங்கர், நடர், திரமிளர், சர்மசீவியர், நீலாதி வர்ணவிக்கிரேதர், சுவபாகர், குக்குடர், வேணர், புல்கசர், ஆவிரதர், அபீரர், திக்குவணர், கசர், சைரந்திரியர், மைத்திரேயர், பார்க்கவர், காருவாரர், பாண்டு சோபாகர், ஆகிண்டிகர், சோபாகர், அந்தியாவசாயிகர் முதலினோராம். இப்பெயர்களெல்லாம் இக்காலத்து வெவ்வேறு பெயர்களாக வழங்கப்படுகின்றன. இவற்றின் விரிவுகளையெல்லாம் சுப்பிர பேதாகமம், பிரமபுராணம், வைகானசம், மாதவியம், சாதிவிளக்க முதலிய நூல்களிற் கண்டு தெளிக. இவையன்றி "பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்-கள்நொடை யாட்டியர் காழியர் கூவியர் - பைந்நிண விலைஞர் பாசவர் வாசவ-ரென்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ்-செம்பு செய்நருங் கஞ்ச காரரும் – பைம்பொன் செய்நரும் பொன்செய் கொல்லரு - மரங் கொறச்சரு மண்ணீட் டாளரும் - வரந்தரவெழுதிய வோவிய மாக்களுந்-தோலின் றுன்னருந் துன்ன வினைஞரு - மாலைக் காரருங் காலக் கணிதரும்" என மணிமேகலையினுங் கூறியவாற்றானறிக. (௩௨)

தம்மொழுக் கியன்ற பார்ப்பார் சார்குவர் பிரம லோகந்
தெம்முனைப் பட்ட வேந்தர் கற்பக நீழல் சேர்வார்
மெய்ம்மைய வணிகர் வாயு புவனத்தின் மேவு வார்க
ளிம்மையிற் றுறந்தோர் சேர்வ ரிரணிய கருப்ப லோகம்.

(இ-ள்.) இம்மையில் தம் ஒழுக்கு இயன்ற பார்ப்பார்=இப்பிறப்பில் தமது ஒழுக்கத்தில் வழுவாது ஒழுகிய அந்தணர், பிரம லோகம் சார்குவர் = பிரமலோகத்தை யடைவார்கள், தெவ் முனை பட்ட வேந்தர்=பகைமுனையை யடுத்து வெற்றி கொண்ட அரசர்கள், கற்பகம் நீழல் சேர்வர்=கற்பக தரு நிழற்கண் வீற்றிருக்கும் இந்திரபதத்தை யடைந்து

வாழ்வார்கள், மெய்மைய வணிகர்=உண்மையுள்ள வைசியர்கள், வாயு புவனத்தில் மேவுவார்கள்=வாயு லோகத்தை யடைந்து வாழ்வார்கள், துறந்தோர்=துறவொழுக்க வழிநின்ற விரத்தர்கள், இரணிய கருப்ப லோகம் சேர்வர்=இரணிய கருப்ப லோகத்தை யடைந்து வாழ்வார்கள்.

"தம்மொழுக்கியன்ற - இம்மை என்பவற்றை மற்றையோர்க்கும் ஒட்டுக. பார்ப்பார் = சிவத்தை யுள்ளபடி ஞானக் கண்ணினால் நோக்குவோர்; வேதாந்தத்தை மேற்கொண்டு பார்ப்பவர் என்றும் பொருள். "ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே. " என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையிற் கோடலால், தெவ் முனை என்பது தெம்முனையெனத் திரிந்து நின்றது. மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னுமுத்தியால், யோகியர் ஆனந்தம் ஐஸ்வரியம் வியோமம் காஷ்டை பரமாக்ஷரம் என்று சிறப்பிக்கப்பட்ட அமிர்தத் தானத்தையும், ஊர்த்துவ வீரியம் வாய்க்கப் பெற்றார் இரணியகருப்ப லோகத்தையும், தமக்குரிய ஒழுக்கத்தில் நின்ற சூத்திரர் மறுமையில் கந்தருவலோகத்தையு மடைந்து ஆங்குள்ள போகங்களை யநுபவித்து வாழ்வர் எனக் கொள்க. வாயுபுவனம்=வாயுமண்டலம். அஃதாவது கெந்தவதியென்னும் பட்டினம். அன்றி, ஆதித்த பதவிக்குக் கீழேயுள்ள விதன்னுவான், பிரசேதகன் அக்கினிப் பிரசேதகன், செசனி, அவுத்தன், வச்சிராங்கதன், வயுத்தியுதன், இரைவதன், சங்வர்த்தன், விசங்வர்த்தன் என்னும் தசவாயுக்களுள் இறுதியாய விசங் வர்த்தன் என்னும் வாயு புவனத்தைக் கொள்ளினு மிழுக்கா. இரணிய கருப்ப லோகமாவது பதுமபுரி, மனோவதி, சத்தியலோகம் என்னும் பிரமலோகம் மூன்றனுள் மேலாய சத்தியலோகமாம். (௫௫)

காழ்த்தவைம் புலனுஞ் செற்றுக் கரணங்க ளடக்கி நாளு
மூழ்த்தமென் சருகு மார்ந்தி யோகினி லுறங்கு கின்றோர்
சூழ்த்துநான் முகனும் விண்ணோர் தொகுதியுஞ் சுருதி நான்கும்
வாழ்த்துதற் குரிய முத்தி வீட்டின்ப மருவி வாழ்வார்.

(இ-ள்.) காழ்த்த ஐம்புலனும் செற்று=வைரமுள்ள ஐம்புலன்களையும் ஒழித்து, கரணங்கள் அடக்கி=அந்தக்கரணங்களை யொடுக்கி, ஊழ்த்த மென் சருகு மாந்தி = உதிர்ந்த மிருதுவாகிய சருகுகளை யுண்டு, நாளும் யோகினில் உறங்குகின்றோர் = நாடோறும் சிவஞானயோகத்தில் நிட்டை கூடினோர், நான்முகனும் விண்ணோர் தொகுதியும் நான்கு சுருதியும்=பிரமனும் தேவகணங்களும் நான்கு வேதங்களும், சூழ்த்து வாழ்த்துதற்கு உரிய=வலஞ்செய்து துதித்தற்கு உரிய, முத்தி வீட்டின்பம் மருவி வாழ்வார் = சிவசாயுச்சிய முத்தியாகிய பேரின்பத்தை யடைந்துவாழ்வார்.

அந்தக் கரணங்களாவன—மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னு நான்குமாம். மென் சருகு என்றதனால் உலர்ந்த இலை யென்பது பெறப்படும். பசிய இலைகளைப் பறித்துப் புசிப்பின் அவை வழியாகச் சீவன் றோற்றுதற்கு வழியின்றி நாசமுறலானும், இலைச் சாரத்தால் இரத்த மதிகரித்து விடயங்களி லழுத்து மாகலானும் விலக்கப்பட்டது. சூழ்ந்து வலித்தல் விகாரம். முத்தி வீடு என்பன "ஆடகச் செம்பொற் கிண்ணம்" என்புழிப் போல ஒருபொருட் கிருபெயர் பிரியாது நின்ற வழுவமைதி யென்க. அது "ஒரு பொருளிருசொற் பிரிவில வரையார். " என்ற தொல்காப்பிய விதியா லமைக்கப்படும். (௫௬)

என்னலு மகதி வீணை நாரதன் முதலோர் யாரு
மன்னுமாச் சிரம நான்கா வகுத்தினி துரைக்கு மேல்வைப்
பின்னுமோர் யோகி தன்மை பேசினை யைந்துண் டாங்கொல்
பன்னுமாச் சிரம மென்னப் பைந்துழாய் முகுந்தன் சொல்வான்.

(இ-ள்.) என்னலும் = என்றிவ்வாறு (சூர்மர்) சொல்லுதலும், மகதி வீணை நாரதன் முதலோர் யாரும்=மகதி யென்னும் யாழினையுடைய நாரதமுனிவர் முதலிய முனிவர்களுந் தேவர்களும் (சூர்மரைநோக்கி) மன்னும் ஆச்சிரமம் நான்கா வகுத்து = (ஐயனே) நிலைபெற்ற ஆச்சிரமங்களை நான்காகப் பிரித்து, இனிது உரைக்கும் எல்வை = தெளிவுபடச் சொல்லியருளும் பொழுது, பின்னும் ஓர் யோகி தன்மை பேசினை = வேறும் ஒரு யோகியினது தன்மையைக் கூறியருளினீர் (ஆகலால்) பன்னும் ஆச்சிரமம் = சொல்லப்பட்ட ஆச்சிரமமானது (நான்கேயன்றி) ஐந்து உண்டு கொல் என்ன=ஐந்தாவது ஆச்சிரமும் இருக்கின்றதோ வென்றுகேட்க, பை துழாய் முகுந்தன் சொல்வான்=பசிய துழாய் மாலையை யணிந்த திருமாலாகிய சூர்மர் கூறுவாராயினர். ஆம்=சாரியை. கொல்-ஐயப் பொருளின்கண் வந்தது. (௫௫)

உரைத்தவாச் சிரம நான்கே யொவ்வொன்றே யிரண்ட தாகும்
வரைத்தவை யுரைத்துங் கேண்மி னுவகுரு வாண னென்றுந்
திருத்தகு நெறிவ ழாத நைட்டிக னென்றுஞ் செவ்வன்
விரித்தநூற் பிரம சாரி யொழுக்கிரண் டாக மேவும்.

(இ-ள்.) கேண்மின்=(அன்பர்களே) கேளுங்கள், உரைத்த ஆச்சிரமம் நான்கே= சொல்லப்பட்ட ஆச்சிரமம் நான்கே யன்றி(ஐந்தில்லை)ஒவ்வொன்றே இரண்டது ஆகும்= அவை யொவ்வொன்றும் இவ்விரண்டு வகையாகும், அவை வரைத்து உரைத்தும்=அவைகளை அளவுசெய்து கூறுகின்றேம், நூல் செவ்வன் விரித்த பிரமசாரி ஒழுக்கு=வேதசிவாகம நூல்களால் நன்மையா விரித்துச் சொல்லப்பட்ட பிரமசாரிய ஒழுக்கமானது, உவகுருவாணன் என்றும்=உவகுருவாண னென்றும், திரு தகு நெறி வழாத நைட்டிகன் என்றும் = சுத்தமாகிய தகுந்த அவ்வாச்சிரமத்தி னின்றும் நீங்காத நைட்டிக னென்றும், இரண்டு ஆக மேவும்=இருவிதமாகப் பொருந்தாநிற்கும்.

அன்பர்களே! ஆச்சிரமம் நான்கே யன்றி ஐந்தில்லை. அந்நான்கும் ஒவ்வொன்று இவ்விரண்டாகி யெட்டு வகையாகும். அவற்றுள் பிரமசாரிகள் உவகுருவாணன் என்றும், நைட்டிகன் என்றும் இருவகைப் படுவர். நான்கே என்றதன்கண் ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. இரண்டது - அது, பகுதிப் பொருள் விகுதி. உவகுருவாணன் பௌதிகப் பிரமசாரி யெனவும் பெயர் பெறுவன். (௫௬)

உவகுரு வாண னென்போன் மறைமுழு துணர்ந்த பின்னர்
நவையறு மகளிர் தம்மை வேட்டுளோ னைட்டி கன்சீர்த்
தவலருங் கேள்வி முற்றித் தன்னுயி ருலக்குங் காறுந்
துவரிதழ் மடவா ரின்பந் துய்த்திடா தொழுகு வோனே.

(இ-ள்.) உவகுருவாணன் என்போன்=உவகுருவாணப் பிரமசாரி யென்று சொல்லப்படுவோன், மறை முழுது உணர்ந்த பின்னர் = வேதங்களி னுட்பொருண் முழுவதையுங் கற்றறிந்த பின்பு, நவை அறு மகளிர் தம்மை வேட்டு உள்ளோன் = குற்றமில்லாத இலக்கண முள்ள பெண்ணை விவாகஞ்செய்து இல்லறத்தி னிற்பவனும், நைட்டிகன்=மற்றைய நைட்டிகப் பிரமசாரி யென்பான், தவல் அரு சீர் கேள்வி முற்றி = நீங்குதலின்றிச் சிறப்பாகிய வேதாகமாதி நூல்களை யாராய்ந்து அறிவின் முதிர்ந்து, தன் உயிர் உலக்கும் காறும்=தனதுயிர் நீங்கும் அளவும், துவர் இதழ் மடவார் இன்பம் = பவளம்போன்ற அதரங்களையுடைய பெண்கள் போகத்தை, துய்த்திடாது ஒழுகுவோன்=அநுபவிக்காமல் நிட்டைகூடி யிருப்பவனுமாம்.

நைட்டிகப் பிரமசாரி விவாகஞ் செய்யுங் காலத்துக் குற்றமுள்ள மகளிரை நீக்கி நல்லிலக்கணம் வாய்ந்த பெண்களையே விவாகஞ் செய்யவேண்டும். குற்றமுள்ள மகளிராவார்- நற்குடியிற் பிறவாதவர், நோயுள்ள தாய் தந்தைக்குப் பிறந்தவர், சிவஞ் சத்தி, சுப்பிரமணியர் முதலிய தேவர் தேவிகளின் திருநாமங்களைத் தம்பெயராகக் கொள்ளாதவர், மனிதர் பேய் முதலிய இழிந்தவர் பெயர்களை வகித்தவர், இழிந்த சமயத்தவர், நோய், ஊமை, முடம்,செவிடு முதலிய குறைவுள்ளவர்,பிறர்மனை போவோர்,வேசிகள்போலப் பார்ப்பவர், பலமுறையுங் காளையர்களைப் பார்த்துப் பார்த்து முன்வாயிலில் நிற்பவர், தம்மை யழகுற அலங்கரிப்பவர், பெருண்டி, அதிதுயில், தம்மினு மூப்பு, ஒருமைபாய கோத்திரம், மரபு இவற்றை யுடையவர், நெடியவர், குறளுரு வுள்ளவர், மிகப்பருத்துஞ் சிறுத்து மிருக்கும் வடிவினர், கரியவர், பொன்னிறமுடையவர், கபிலநிறம், இரத்தநிறம், வெண்ணிற முள்ளவர், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு இல்லாதவர், ஆடவர் கூட்டத்திற் சென்று சென்று சிரித்து நிற்பவர்,மானமில்லாதவர்,வலிமையுள்ளவர், பிதா மாதாவின் ஆணை கடந்து நடப்பவர், கோபம், பகை, கொலை, அழுக்காறு, புலாலுண்ணல், கட்குடித்தல், களவு, பொய் முதலிய பாவங்களைச் செய்பவர், கூத்து முதலிய வேடிக்கைகளைப் பார்க்க விரும்புவோர், கடவுட் பத்தி யில்லாதவர், பெரியோரை நிந்திப்பவர், மதனதாப முள்ளவர், சீவகருணை குலவொழுக்கம் கற்பு மனக்காவல் என்பன இல்லாதவர், இரண்டாவது பூப்புற்றவர், விவாகஞ் செய்து கொடுத்தற்கு முன் வேறொருவரோடு புணர முயன்றவர், பெருமிதமுள்ளவர், கல்வி யறிவு இல்லாதவர், குருடு, மறுப்பொருந்தியகண், மாலைக்கண், சாய்நயனம், பூனைக்கண், செங்கண், நூறுசென்னி, நரை முதிர்ந்ததும், பெருத்ததும், விரித்ததும், பூமியில் இறங்கியதுமாய கூந்தலை யுடையவர், செம்மயிருள்ளவர், ஊறுபட்ட கூந்தலையுடையவர், இடிபோலப் பேசுகின்றவர், மிருகம் போன்ற குரலையுடையவர், சிறுகண், நீண்ட நாசி, சேர்ந்த புருவம், குறியகாது, உயர்ந்தபல், வளைந்த கழுத்து, மறுக்கலந்த முகம், விற்போன்ற வயிறு என்னு மிவற்றை யுடையவர், தனத்திலும் மார்பினுந் தேமலில்லாதவர், பெருத்த இடையினை யுடையவர், காயநூற்படி நிதம்பமில்லாதவர், வாய் உள்ளங்கை, நகம், உள்ளங்கால் இவை சிவப்பு நிறமில்லாதவர், அன்ன நடையில்லாதவர், விரல் பூமியிற் றோயாது நடப்பவர் என்னு மிவர்களாமென்று தொல்லோர் கூறினர். ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாக் கொடுத்தல் முதன் மணமென்பர் **நச்சினார்க்கினியரும்.** நைட்டிகப் பிரமசாரி சூத்திரனாயினுஞ் சகலவேதாகமங்களையும் மந்திரங்களையும் ஓதுதற்குக் கேட்டற்கும் அதிகாரியாவான் என்று புரோற்நேத்தும், அமிர்தத்துஞ் சொல்லப்பட்டமையால் "தவலருங்கேள்வி" என்றான் என்க. இதனாற் பிரமசரியம் இருவகைத்தென்று கூறப்பட்டது. (௩௭)

ஓதுமில் லறத்தி னின்றோ ருயருதா சீனன் மிக்க
சாதக னெனவி ரண்டாந் தன்மைய ரவரின் முன்னோ
னேதமில் கடன்கண் மூன்றுங் கழித்தபின் னில்லிற் றீர்ந்தோன்
றீதில்சா தகன்சாங் காறு மில்லொழுக் கதனிற் சேர்வோன்.

(இ-ள்) ஓதும் இல்லறத்தில் நின்றோர்=சொல்லப்பட்ட இருகத்தாச்சிரமத்தில் நிற்பவர், உயர் உதாசீனன் என=உயர்வுடைய உதாசீனன் என்றும், மிக்க சாதகன் என= மேலாய சாதகன் என்றும், இரண்டு ஆம் தன்மையர், இருவகைப்படுவோர், அவரின் முன்னோன்=அவர்களுள் முதலாயுள்ள உதாசீன இருகத்தன் என்பவன், ஏதம் இல் மூன்று கடன்களும் கழித்த பின்=குற்ற மில்லாத மூவகைக் கடன்களையுஞ் செய்து முடித்த பின்பு, இல்லில் தீர்ந்தோன்=இல்லறத்தை விடுத்துப் பரகதியில் விருப்பங் கொள்பவனும், தீத

இல் சாதகன்=தீமை இல்லாத சாதக கிருகத்தன் என்பவன், சாம் காறும் இல் ஒழுக்கு அதனில் சேர்வோன்=மரணாந்தம் வரையும் இல்லற வொழுக்கத்தில் நிற்பவனும்.

கடன்கள் மூன்றுவன - தேவர்கடன், முனிவர்கடன், பிதிரர் கடன் என்பவாம். தேவர் கடனை வேள்வியினாலும், முனிவர் கடனைக் கேள்வியினாலும், பிதிரர்கடனைச் சற்புத்திரப் பேற்றினாலுஞ் செய்து திருப்தி யுண்டாக்குதலாம். இதனால் இல்லறம் இருவகைத்தென்று கூறப்பட்டது. சாகும் என்பது சாம் எனத் தொகுத்தல். (௬அ)

வானப் பிரத்தர் சங்யாசி வளர்தா வசியென் றிருவகையாய்த்
தானத் துறுவ ரவ்விருவர் தம்மின் முன்னோன் மனைநீத்துக்
கானத் துறைவோன் மற்றையவன் கன்னிக் கற்பின் மனைவியொடு
மோனத் திருந்து தீக்கரும முறையி னாற்று முரவோனே.

(இ-ள்.) வானப்பிரத்தர்=வானப்பிரத்த ஆச்சிரமத்தி னிற்பவர், சங்யாசி வளர் தாவசி என்று=சந்நியாசவானப்பிரத்தன் என்றும் தாவசிவானப்பிரத்தன் என்றும், இருவகை ஆய் தானத்து உறுவர்=இருவகையாய எண்ணின் பாற்படுவேர், அ இருவர் தம்மின் முன்னோன் = அவர்களுட் சந்நியாச வானப்பிரத்தன் என்பான், மனை நீத்து கானத்து உறைவோன்=இல்லாளை விடுத்து வனத்தின்கட் சென்று தவஞ் செய்திருப்பவனாவன், மற்றையவன் கன்னி கற்பின் மனைவி ஒடு=மற்றைய தாவசிவானப்பிரத்தன் என்பான் அழியாத கற்பினை யுடைய மனைவியுடனே, மோனத்து இருந்து=(காட்டிற்சென்று) மௌன நிலைக்கணிருந்து, தீ கருமம் முறையின் ஆற்றும் உரவோன் = அக்கினி காரியத்தை வேத விதிப்படி செய்யும் அறிவாளனும்.

மனைவியை விடுத்துத் தான் றனியே வனத்திற்குச் சென்று தவஞ் செய்திருப்பவன் சந்நியாச வானப்பிரத்தனும். மனைவியுடனே சென்று மௌனமாயிருந்து அக்கினி காரியஞ் செய்யும் அறிவாளன் தாவசிவானத்தப் பிரத்தனுகும். இவர் தம் ஆயுளில் நாலாங் கூற்றிலே, உத்தராயணத்திற் பூர்வபக்க காலத்திற்றான் வனத்திற்குப் போகவேண்டும் என்ப'து விதி. அக்கினி காரியம் எனவே ஐவகை யாகங்களும் அமையும். அவையாவன— கன்மயாகம், தவயாகம், செபயாகம், தியானயாகம் ஞானயாகம் என்பனவாம். இவற்றின் விரிவுகளை யெல்லாஞ் சிவதருமோத்தரத்து ஐவகையாக வியலிற் கண்டு தெளிக. ()

பரவுஞ் சந்நி யாசியரிற் பார மேட்டி யோகியென
விருவ ருளர்மற் றவரின்முன்னோ னிகலும் புலன்க ளுள்ளடக்கி
மருவும் யோகத் திருந்துமுத்தி யடைய முயல்வோன் மற்றையவன்
கருது மெவையுந் தானாகிக் கைவல் லியத்திற் களிப்போனே.

(இ-ள்.) பரவும் சந்நியாசியரில் = புகழப் படுகின்ற சந்நியாச ஆச்சிரமத்தாருள், பாரமேட்டி என யோகி என இருவர் உளர் = பாரமேட்டி யென்றும் யோகி யென்றும் இருவகையார் இருக்கின்றனர், அவரின்=அவ்விருவகையாருள், முன்னோன்=முற்பட்டவனாகிய பாரமேட்டி சந்நியாசியானவன், இகலும் புலன்கள் உள் அடக்கி = பகைசெய்யும் ஐம்புலன்களையும் உள்ளடங்கச் செய்து, மருவும் யோகத்து இருந்து=தனக்குப் பொருந்திய யோகத்தைச் செய்து, முத்தி அடைய முயல்வோன்=வீட்டின்பத்தை யநுபவித்தற்கு விரும்புவோன், மற்றை அவன்=யோக சந்நியாசி யானவன், கருதும் எவையும் தான் ஆகி = எண்ணப்படுகின்ற எப்பொருள்களையுந் தானாகக் கண்டு, கைவல்லியத்தில் களிப்போன்=தனித்த சிவன் முத்த நிலையினின்று ஆனந்த மடைந்திருப்பவனே யாம்.

யோகசந்நியாசிக்கு நிர்ச்சல யோகியென்றும் பெயர். சர்வகருமங்களையும் விடுத்துச் சலன மில்லாத சமாதியை யுற்று எவன் நிர்ச்சலமா யிருக்கின்றானோ அவனே நிர்ச்சல யோகியென்று வடமொழிப் புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இச் சந்நியாச ஆச்சிரமத்தார் தவவேட முதலியவற்றானே ஆதுரகுடீசகர், பகூதகர், அம்சர், பரமஹம்சர், துரியாதீதர், அவதூதகர் என்று அறுவகைப் படுவரென்று நாரதபரிவிராசகோபநிடதங் கூறுகின்றது. "யோகீ சத்ரிவிதோ ஞேயோபௌதிகஃ சாங்க்ய ஏவச| த்ருதீ யோத்யா ச்ரமீ ப்ரோக்தோ யோக முத்தம மாச்ரிதஃ| ப்ரதமா பாவநா பூர்வே சாங்க்யே த்வக்ஷர பாவநா | த்ருதீயே சாந்திமா ப்ரோக்தா பாவநா பாரமேச்வரீ ||" என்று வடமொழிக் கூர்மபுராணத்திற் கூறப்பட்டபடி, யோகிகள் பௌதிக யோகி, சாங்கிய யோகி, அத்தியாசிரமயோகி, அல்லது பிராமியோகி என மூவகைப்படுவர். அவருள் பௌதிகயோக சந்நியாசி சகுணபாவனையாகிய பௌதிகபாவனையில் நிற்பவன். இதனையே இந்திரத்துய்ம்மன் முத்தியடைந்த அத்தியாயத்தில் "பாவனை தானுமுப் பகுதி யென்னுரு, வோவற வுணர்தலொன்று" என்று கூறியதாம். சாங்கிய யோக சந்நியாசி நிர்க்குண பாவனையாகிய சாங்கிய பாவனையில் நிற்பவன். இதனையே "அவ்வியத்தமேற் றவற வுணர்வதொன்று" என்று கூறியதாம். அத்தியாசிரம யோக சந்நியாசி பாரமேசுவரி பாவனையில் நிற்பவன். இப்பாவனையையே "ஒன்றுதற்பர மேவரும் பாவனை யென்பர்" என்றதாம். பாரமேட்டி சந்நியாசமும் கருமசந்நியாசம், வேதசந்நியாசம், ஞானசந்நியாசம் என மூவகைப்படும் என்பதனைப் பின்வரும் சந்நியாசமுரைத்த அத்தியாயத்திற் காண்க. (௪௰)

இனைய நான்காச் சிரமமொவ்வொன் றிரண்டா யியன்ற வாறன்றி
நினையி னஞ்சன் றாச்சிரம நிகழ்த்தாச் சிரமம் படைத்ததற்பின்
கனைவண் டிமிருந் தாமரைமேற் கடவு டக்கன் முதலோரைத்
துனைவி னோக்கி யனைத்துயிரும் படைத்தி ரென்னச் சொற்றனனால்.

(இ-ள்.) நினையின்=(யாம்) ஆராயுமிடத்து, இனைய நான்கு ஆச்சிரமம்=இவ்விதமாகிய நான்கு ஆச்சிரமங்களே, ஒவ்வொன்று இரண்டாய் இயன்ற ஆறு அன்றி = ஒவ்வொன்றும் இவ்விரண்டாகப் பிரிந்த வழியினால் (நிர்ச்சலயோகி என்னுஞ் சந்நியாச வகையொன்று) கூறினதே யல்லாமல், ஆச்சிரமம் அஞ்சு அன்று=ஆச்சிரமம் ஐந்தல்ல (அது நிற்க) கனை வண்டு இமிரும் தாமரை மேல் கடவுள்=ஒலிக்கின்ற வண்டுகள் மொய்க்கின்ற தாமரை மலரின் மீது இருக்கும் பிரமனானவன், நிகழ்த்து ஆச்சிரமம் படைத்து அதன் பின்=சொல்லப்பட்ட ஆச்சிரமங்கள் நான்கனையுஞ் சிருட்டித்து அதற்குப் பின்னர், தக்கன் முதலோரை துனைவின் நோக்கி=தனது யோகமாயையி னின்றுந் தோன்றிய தக்கன் முதலிய புத்திரனைப் பார்த்து, உயிர் அனைத்தும் படைத்திர் என்ன சொற்றனன் = மற்றைய உயிர்கள் எல்லாவற்றையுஞ் சிருட்டி செய்வீராக என்று கூறினன். ஆல் அசை - அஞ்சு-போலி. (௪௧)

புவன மனைத்து மாங்கவரும் படைத்தார் கமலப் பொகுட் டுறைவோ
னவையிற் சிருட்டி யிவ்வாறு புரியு நான்மற் றவையளிப்பேன்
கவர்முத் தலைவேற் படைக்கடவு ளவற்றைக் கருணை யொடுந்துடைக்குந்
தவலி லொருமூ வருமொன்றே யென்ன மறைகள் சாற்றுமால்.

(இ-ள்.) ஆங்கு அவரும்=அப்பொழுது தக்கன் முதலாய ஒன்பது புத்திரர்களும், புவனம் அனைத்தும் படைத்தார் = உலகங்களையும் உயிர்களெல்லாவற்றையுஞ் சிருட்டித்தனர், கமலம் பொகுட்டு உறைவோன் = தாமரைப்பொகுட்டாசனத்தி லிருக்கும் பிரமனானவன், இ ஆறு நவை இல் சிருட்டி புரியும்=இவ்வழியே குற்றமற்ற படைத்தற் றொழிலைச் செய்வான், நான் = யான், மற்றவை அளிப்பேன் = அவற்றை யெல்லாங் காத்திடு

வேன், கவர் முத்தலை வேல் படை கடவுள்=பிளப்பாகிய மூன்று தலைகளையுடைய சூலா யுதத்தைத் தாங்கிய ஸ்ரீகண்ட ருத்திரர், அவற்றை கருணை ஓடு துடைக்கும் = அவ்வகைகளை யெல்லாங் காருணிய மேலீட்டானே யொடுக்குவர் (ஆதலால்) தவல் இல் ஒரு மூவரும்= தவறுதலில்லாத மும்மூர்த்திகளும், ஒன்றே என்ன மறைகள் சாற்றும் = ஏக வஸ்துவே யென்று வேதாகமங்கள் சொற்றன.

சீகண்டருத்திரர் சங்காரத் தொழிலைச் செய்வது ஆன்மாக்களின் மலமாயா கன்மங்களைப் போக்கி வீடருளு நிமித்த மாகலின் கருணையின்பாற்றேயாம். இதனை "நிக்கிர கங்க டானுநேசத்தா லீசன் செய்வ-தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி-யிக்கிர மத்தி னாலே யீண்டற மியற்றி டென்ப-னெக்கிர மத்தி னாலு மிறைசெய லருளே யென்றும்." எனவருஞ் சிவஞானசித்தியார்ச் செய்யுளானு முணர்க. சிகண்டருத்திரர்க்குப் பிரகிருதி கிருத்தியம் ஐந்தும் நடக்கினுஞ் சங்கார கிருத்தியமே பிரதான மாகலானும், குணநிலய விட்டுணுவுக்கும், பிரமாண்ட நிலய விட்டுணுவுக்கும் பிரகிருதிக்குள் தூல சரீர போக்கியப் பொருள்களைக் காக்குந் தொழிலே பிரதான மாகலானும், குணநிலய பிரமற்கும், பிரமாண்டநிலய பிரமற்குந் தூலசரீர போக்கியப் பொருள்களைச் சிருட்டிக்குந் தொழிலே பிரதான மாகலானும், பிரமாண்ட நிலயப் பிரமர் முதல் அணுசதாசிவ ரீறுவுள்ளாரைத் தற்பரசிவமே தனது ஆரணி, சனனி, உரோதயித்திரி யென்னுஞ் சத்திகளை யதிட்டித்து நின்று கிருத்தியங்களைச் செய்வித்தலானும், முக்குண வுருவெனச் சொல்லப் படலானும் மூவரும் ஒன்றென மொழிந்ததென்க. (சஉ)

திங்கட் குழவி கிடந்துறங்குஞ் செம்பொற் சடையெம் பெருமாற்குத்
தங்கும் பிராமி மகேச்சுரிய முருவபா வனையாந் தனிமூன்று
துங்க முறுபா வனையுளவா மவற்றி லெனக்குச் சொல்லுங்கா
லெங்கும் விளங்கு முருவபா வனையொன் றென்றே யியம்புவார்.

(இ-ள்.) திங்கள் குழவி கிடந்து உறங்கும் செம்பொன் சடை எம்பெருமான் கு= பிறைச்சந்திரன் கிடந்து வளரப்பெற்ற சிவந்த பொன்போன்ற திருச்சடாமுடியை யுடைய எமது தலைவராகிய சிவபிரானுக்கு, தங்கும் பிராமி மகேச்சுரியம் உருவபாவனை ஆம்= நிலைபெறுய பிராமிபாவனை மகேச்சுரிய பாவனை உருபாவனை யென்று, தனி துங்கம் உறு மூன்று பாவனை உள = ஒப்பற்ற மேன்மை பொருந்திய மூன்று பாவனைகள் உள்ளன, அவற்றில்=அவைகளுள், எனக்கு சொல்லுங்கால்=எனக்கும் (உரிய பாவனையைக்) கூறுமிடத்து, எங்கும் விளங்கும் உருவபாவனை ஒன்றே = எவ்விடத்தும் விளங்கப்படுகின்ற உருவபாவனை யொன்றேயாம், என்று இயம்புவார்=என்றிவ்வாறு (மேலோர்) கூறுவர்.

சிவபெருமானைத் தியானித்தற்கு மூவகைப் பாவனை யுளவாம். எனது தியானத்திற்கு உருபாவனை யொன்றே யுரியவாம் என்பது கருத்து.

"த்ரிவிதாம் பாவநாம் ப்ரம்மக் ப்ரோச்யமாநாம் நிபோதமே|
ஏகாமத் விஷயா தத்ரத்விதீயா வ்யக்த சம்ச்ரயா|
அந்யாச பாவநா ப்ராம்மீ விஞ்ஞேயா சாகுணாதிகா||

பாவனை மூன்றாகும். ஒன்று என் விஷயம். இரண்டாவது அவ்வியத்தம் பற்றியது. மூன்றாவது பாவனை பிராமி பாவனையாம்." என்று வடமொழிக் கூர்மபுராணத்திற் கூறப்பட்டன. பிராமிபாவனையைத் தற்பரபாவனை, அத்தியாசிரமபாவனை, பாரமேசுவரிபாவனை எனவுங் கூறுப. பிராமிபாவனையாவது சிவபெருமானே ஆன்மாவுக்குப் பரமான்மாவாய் அக்கினியிற் சூடுபோலுள்ள பராசத்தி சமேதமாய் விளங்கும் பரசிவப் பிரமமென்று தியானித்து வழிபடுதலாம். மகேசுரிய பாவனையை நிர்க்குணபாவனை, நிர்ப்பீசு

பாவனை நிராகாரபாவனை, அக்ஷரபாவனை, அவ்வியத்தபாவனை சாங்கியபாவனை யெனவுங் கூறுப. இது சிவப்பொருளை அவ்வியத்த வஸ்துவாகத் தியானித்தலாம். உருவபாவனையைச் சகுணபாவனை, சபீசபாவனை, சாகாரபாவனை, பௌதிகபாவனை யெனவுங் கூறுப. இது துரியப் பொருளாகாத மூர்த்திகளைத் தியானித்து வழிபடுதலாம். அவராவார் உருத்திரர் விட்டுணு பிரமன் முதலியோராம், உருத்திரரையும் வழிபடுதற் காரணத்தால் "எம்பெருமாற்கு-மூன்று பாவனையுள." என்றும், தம்மையும் வழிபடுதற் காரணத்தால் "எனக்குச் சொல்லுங்கால்—எங்கும் விளங்கு முருவபா வனையொன் றென்றே யியம்புவார்" என்றும் கூர்மர் கூறினர் என்க. (௨௫)

கமலப் பொகுட்டுப புத்தேளுங் காயா மேனித் திருமாலு
மிமிழ்தெண் கடலின் விடநுகர்ந்த தேவு மொருவ ரீங்கிவரி
லமைவுற் றொருவர் தமைப்பூசை யன்பிற் புரியி னொருமூவர்
தமைமுற் றுணர்ந்து வழுத்துவோர் பெறுபே றதனிற் சார்குவார்.

(இ-ள்.) கமலம் பொகுட்டு புத்தேளும்=தாமரைப்பூம் பொகுட்டின்கணிருக்கும் பிரமனும், காயா மேனி திருமாலும்=காயாம்பூப் போன்ற கரிய மேனியை யுடைய திருமாலும், இமிழ் தெண் கடலின் விடம் நுகர்ந்த தேவும்=ஒலிக்கின்ற பாற்கடலிற் றோன்றிய நஞ்சை யுண்டருளிய உருத்திரமூர்த்தியும், ஒருவர் = ஒருவரேயாம், ஈங்கு இவரில் ஒருவர் தம்மை அமைவுற்று=இங்ஙனங் கூறப்பட்ட மும்மூர்த்திகளுள் ஒருவரை விகற்பமின்றி, அன்பின் பூசை புரியின்=மெய்யன்போடும் பூசை செய்தால், ஒரு மூவர் தம்மை முற்று உணர்ந்து வழுத்துவோர் = அந்த மும்மூர்த்திகளையும் அவரவரது சொரூபங்கள் முழுவதையும் உள்ளபடி யறிந்து தியானிக்கிறவர், பெறு பேறு அதனில் சார்குவார்= அடையும் பேற்றினை யடைவார்கள்.

மும்மூர்த்திகளும் ஒருவரே யாகலின், அவருள் ஒருவரை மெய்யன்புடன் வழிபடுவோர் மூவரையும் வழிபட்டவர் அடையும்பலனை யடைவார் என்பதாம். பேறதனில்—உருபு மயக்கம். மூவரும் ஒன்றென்பதனை "இருவரோ டொருவனாகி நின்றனை" எனவருந் திருவாக்குகளா னுய்த்துணர்க. (௨௬)

இனைய மூவர் தமைநாளு மலர்தூஉய்ப் பழிச்சி யிறைஞ்சுவோ
ரனைய கடவு ளடையாளந் தரிக்க நுதலி லயனடியார்
வனைக திலக மாலடியார் நீற்றாற் சாந்தாற் சூலம்போற்
புனைக திரிபுண் டரநீற்றாற் புராரி யடியார் வனைந்திடுக.

(இ-ள்.) இனைய மூவர் தம்மை=இவ்வாறாய மும்மூர்த்திகளையும், நாளும் மலர் தூய் பழிச்சி இறைஞ்சுவோர்=நாடோறும் புட்பங்களைத் தூவித் துதித்து வழிபடுவோர், அனைய கடவுள் அடையாளம் நுதலில் தரிக்க=அவ்வக் கடவுளரது அடையாளங்களைத் தத்தம் நெற்றியிற் றரிக்கக்கடவர், அயன் அடியார் திலகம் வனைக=பிரமனை வழிபடும் அடியார்கள் (திருநீற்றினாலேனுஞ் சந்தனத்தினாலேனும்) திலகமாகத் தரிக்கக்கடவர், மால் அடியார்=விட்டுணுவை வழிபடுகின்ற அடியவர்கள், நீற்றால் சாந்தால் சூலம் போல் புனைக= திருநீற்றினாலாயினுஞ் சந்தனத்தினாலாயினுஞ் சூலாயுதத்தைப் போலத் தரிக்கக்கடவர், புராரி அடியார்=சிவனடியார்கள், நீற்றால் திரிபுண்டரம் வனைந்திடுக=திருநீற்றினாலே திரிபுண்டரமாகத் தரிக்கக் கடவர்.

பிரமனை வழிபடுவோர் நெற்றியில் திருநீறு சந்தனம் என்பவற்றால் திலகம்போலவும், விட்டுணுமூர்த்தியை வழிபடும் அடியவர் சூலம் போலவும், சிவனடியார் திருநீற்றால்

திரிபுண்டரமாகவுங் குறியிடல் வேண்டும் என்பதாம். சூலம் போல் எனவே ஊர்த்துவ புண்டரம் என்பதும், திரிபுண்டரம் எனவே இடம் வலம் நோக்கித் தரித்தல் என்பதும் பெறப்படும். ஊர்த்துவம்=மேல் நோக்கிய, புண்டரம்=குறி. திரிபுண்டரம்=மூன்றுகுறி.

அருளி னோடு மவரவர்தஞ் சின்னம் புனையி னத்தேவைத்
தெருளிற் றரித்த வாறுகுந் திரிபுண் டரம்வா ணுதற்றீட்டிற்
கருத வரிய முத்தேவுந் தரித்த தாகுங் கலைமதிக்கீற்
றுருவச் சடையோற் றொழுமவரே முத்தி யடைவ ரெனவுரைத்தான்.

(இ-ள்.) அவர் அவர்தம் சின்னம்=அவ்வத் தேவர்களது குறிகளை, அருளின் ஓடு புனையின் = (அவ்வவ் வடியார்கள்) அன்போடுந் தரிப்பாரானால், அ தேவை தெருளின் தரித்த ஆறு ஆகும்=அவ்வத் தேவர்களை ஞானப் பிரகாசம் விளங்குந் தானத்தில் அமைவித்தபடியாகும்(அவைகளுள்ளும்) வாள் நுதல் திரிபுண்டரம் தீட்டின்=ஒளிபொருந்திய நெற்றியின்கண் திரிபுண்டரத்தைத் தரிப்பாராயின், கருத அரிய முத்தேவும் தரித்தது ஆகும்=நினைத்தற்கரிய மும்மூர்த்திகளையும் புனைந்த பாவனையாகும், கலை மதி கீறு உருவம் சடையோன் தொழும் அவரே=கலைகள் வளராநிற்கும் பிறைச்சந்திரனைத் தரித்த அழகிய சடாமுடியை யுடைய சிவபெருமானை (அவர்க்குரிய சின்னமிட்டு) வழிபடுகின்ற அடியவர்களே, முத்தி அடைவர் என உரைத்தான் = சிவசாயுச்சிய முத்தியை யடைவார்கள் என்று (கூர்மமூர்த்தி) கூறினர் என்க.

குறிகளுள் திரிபுண்டரமே விசேடித்ததென்றும், அதற்குரிய கடவுளாய சிவபெருமானே தேவதேவனென்றும்,மூன்று குறியும் முக்குணங்களால் மும்மூர்த்தியாகி, சிருட்டி முதலிய முத்தொழிலும் நடாத்தி,மேல் கீழ் மத்தியென்னும் மூவகை யுலகங்களினும் பிராரத்துவம் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் மூவினை வயத்தாற் பிறந்திறந்துழலும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை யான்மாக்களினது முக்குற்றங்களையும்,முக்குணங்களையும், அவற்றிற்குக் காரணமாயுள்ள மும்மலங்களையும் நீக்கித் திருவடி முத்தி பெறுதற்காக உயர்த்திய மூன்று கொடிபோல விளங்கலானும், மூவர்க்கும் முழுமுதலாய சிவபெருமானது திருவுருவாகத் தோன்றலானும்,"திரிபுண்டரம் வாணுதற் றீட்டிற்-கருத வரிய முத்தேவுந் தரித்ததாகும்" என்று கூறப்பட்டது. அதனை "உற்று நேரென வருந் திரி பதகை போலொளிர்-நெற்றி மேலவ ரிடுந்திரி புண்டர நீறு-குற்ற மூன்றையுங் குண மொரு மூன்றையுங் குலைத்து - வெற்றி யாகவே யுயர்த்தமுப் பதாகைபோல் விளங்கும்." என்றதனானும் அறிக. இக்கருத் தமையுமாறு ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் "நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்"எனத் திருவாய் மலர்ந்தருளியதனானும்"சோதி மகரக் குழை செறிசுந் தரத்தோ ளீரா றுடையானைச் - சுருதி யிரைக்குந் தண்டையந்தாட் டுணையென் முடியிற் பொறுத்தானை-மாது வளருஞ் சமரபுரி வாழ்வை வானோர் சிகாமணியை-வடிவேலரசை மயிலரசை வந்து புறங்காத் தளித்திடுமோ-லாதி பகவன் ஞானவடி வழலிற் பூத்து நித்தியமா-யணிந்தோர் தமக்கு வசிகரமா யருந்தினோர்கட் காரமுதாய் - நீதி யறியும் பசு மலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி - நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்ற புகழ்வெண் டிருநீறே" எனச் சந்நிதிமுறை கூறுவதனானு முணர்க. (சசு)

வருணச்சிரம தன்மமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கஙக.

மூன்றாவது

ஆச்சிரம முறையுரைத்த அத்தியாயம்.

அஃதாவது மேல் அத்தியாயத்தின்க ணுரைக்கப்பட்ட ஆச்சிரமங்களின் கிரமத்தைக் கூறும் பாகமாம். கூர்மமூர்த்தி வருணங்களின் முறையையும் அவற்றின் தருமங்களையும், ஆச்சிரமங்களின் றருமத்தையு முரைத்து ஆச்சிரம முறை கூறுமையால், நாரதேந்திராதியர் கேட்க அவற்றை விரித்துக் கூறினமையின் இது வேறாக வைக்கப்பட்டது.

கலிவிருத்தம்.

ஓதுவரு ணாச்சிரமம் யாவையு முரைத்தாய்
தீதிறவ வாற்றின்முறை செப்புகென நல்யாழ்
மாதவன் முதற்கடவுள் வானவ னுரைப்பத்
தாதவிழ் நறுந்துளவ மாலினிது சாற்றும்.

(இ-ள்.) நல் யாழ் மாதவன் கடவுள் முதல் வானவன்=நல்ல (மகதியென்னும்) யாழினை யுடைய நாரதருந் தேவர்க்கு முதல்வனாகிய இந்திரனும், தாது அவிழ் நறு துளவம் மால்=மகரந்தம் பரந்துள்ள நறிய துழாய் மாலையை யணிந்த மூர்த்தியே, ஓது வருண ஆச்சிரமம் யாவையும் உரைத்தாய் = வேதமுதலிய நூல்களாற் கூறப்பட்ட வருணங்களினதும் ஆச்சிரமங்களினதும் (தருமங்கள்) எல்லாவற்றையுங் கூறியருளினை, தீது இல் தவம் ஆற்றின் முறை=குற்ற மில்லாத தவவொழுக்கத்தின் பாற்பட்ட ஆச்சிரமங்களின் கிரமத்தை, செப்புக என உரைப்ப=சொல்ல வேண்டு மென்று கேட்க, இனிது சாற்றும்= (அக் கூர்மக்கடவுள்) உவகையோடுங் கூறும் என்க.

துளவமால் என்பது அண்மை விளியாகலின் இயல்பாயிற்று. அதனை "அண்மைச் சொல்லே யியற்கை யாகும்." என்னும் விளிமரபுச் சூத்திரத்தா றெளிக. இங்ஙன் விளி வேற்றுமை யென்பதன்றி முதல் வேற்றுமை யெனக் கொள்ளுதலு மாம். (க)

பிரமசரி யங்கருணை பெற்றுமனை வாழ்தல்
மருவரிய கானினிடை மாதவ மியற்ற
லொருவியெவை யுந்தினமு மொவ்வொரு நகர்க்கட்
டிரிதலென வோதுமுறை யேமுறை தெரிக்கின்.

(இ-ள்.) தெரிக்கின்=(அன்பர்களே அவ்வாச்சிரமங்களின் கிரமங்களை) அறியுமாறு சொல்லப் புகுந்தால், பிரமசரியம் = பிரமசரியமும், கருணை பெற்று மனை வாழ்தல்= (ஆசாரியனது) கிருபையைப் பெற்று (அவனுத்தரவின்படி) இல்லொழுக்கத்தி னூற்று வாழுதலும், மருவ அரிய கானின் இடை மா தவம் இயற்றல்=போதற்குங் கூடாத வனத்தின் கணிருந்து பெரிய தவத்தைச் செய்தலும், எவையும் ஒருவி = எவ்வகைப் பற்றுக்களையும் விடுத்து, தினமும் ஒவ்வொரு நகர்கண் திரிதல் = நாடோறும் ஒவ்வோர் நகரங்களிற் சென்று (பிட்சை முயன்று) வருதலும், என ஓதும் முறையே முறை=என்று சொல்லப் பட்ட கிரமமே அவற்றின் கிரமமாகும்.

எனவே முதலாம் ஆச்சிரமம் பிரமசரியம்; இரண்டாவது கிருகத்தம்; மூன்றாவது வானப்பிரத்தம்; நான்காவது சந்நியாசம் எனப்படும். கருணை பெற்று மனை வாழ்தலாவது ஆசாரியனை யடுத்து வேதமுதலிய நூல்களைக் கற்றுணர்ந்து, இல்லறவேட்கை யுளதேனும் அவனது அநுமதி யில்லாமல் அக்கிருகத்தாச்சிரமத்திற் பிரவேசித்தல் கூடாதாகலின்,

அநுமதியுடன் பிரவேசிக்க வேண்டு மென்பதாம். கானி னிடைமாதவம் இயற்றல் எனப் பொதுப்படக் கூறினுனேனும், அது வானப்பிரத்தர்க்குச் சிறப்புவகையாற் கொள்ளப் படும். என்னை? வானப்பிரத்தர் கோடைகாலத்தில் வெயிலிலும், பஞ்சாக்கினி மத்தியிலும், மாரிகாலத்தில் வெளியிலும், பனிக்காலத்தில் நீரிலும் நின்று தவஞ்செய்தல் வேண்டு மென்பது விதியாகலின். சந்நியாசி யோரிடத்தில் ஒருநாட்கு மேல் இருப்பானுயின் பற் றுண்டாகு மாகலின், தினமும் ஒவ்வோர் நகர்க்கண் திரிதல் கூறப்பட்டது. (உ)

ஈங்கிவைபி றழ்ந்துவரும் யாவையவை யென்னிற்
கோங்குமுலை மாதரொடு கூடுவதன் முன்ன
மோங்கியசந் யாசியென வுற்றிடலு மாகுந்
தீங்கெறிமெய்ஞ் ஞானநெறி சிந்தைநிலை பெற்றால்.

(இ-ள்.) ஈங்கு இவை பிறழ்ந்து வரும்=இங்ஙனங் கூறப்பட்ட ஆச்சிரம முறைகள் மாறுபட்டும் வரும், அவை யாவை என்னில்=அவை யெவை யென்று கேட்கின், கோங்கு முலை மாதர் ஒடு கூடுவதன் முன்னம்=கோங்கம் அரும்பொத்த தனங்களையுடைய பெண்க ளோடு சேர்தற்கு முன்னுள்ள பிரமசரியத்திலேயே, தீங்கு எறி மெய் ஞானம் நெறிசிந்தை நிலைபெற்றால் = தீமைக ளெவற்றையும் போக்குகின்ற தத்துவ ஞானமாகிய சன்மார்க்கம் இருதயத்து வரப்பெற்று நிலைக்குமானுல், ஓங்கிய சந்யாசி என=நான்காம் ஆச்சிரமமாக மேற்பட்ட சந்நியாசி யென்று, உற்றிடலும் ஆகும் = பொருந்தியிருத்தலும் விதியாகும்.

பிரமசரியத்தைக் கிரமமாக அநுட்டித்தவன், குருவின் ஆஞ்ஞை பெற்றுக் கிருகத் தாச்சிரமத்தையும், அதை யநுட்டித்து விரத்தி தோன்றியவழி வானப்பிரத்தாச்சிரமத்தை யும், அதினின்று சந்நியாச ஆச்சிரமத்தையும் அடைய வேண்டுமென்னும் முறைபிறழ்ந்து வருதலுமுண்டு. எங்ஙனெனில், பிரமசரியத்தில் நின்றவன் சந்நியாசத்திற்குரிய மெய்ஞ் ஞானம் நிலைத்தவழிச் சந்நியாசிஆவான் என்பதாம். (ங)

இல்லறமு யன்றுகடன் மூன்றுமினி தீந்தா
ரல்லலற மேவுமெதி யாகியமர் கிற்பார்
முல்லைநகை மாதர்கடி முற்றிய தினத்தி
னெல்லையெதி யாகியுணர் வுற்றிடலு மாமால்.

(இ-ள்.) இல்லறம் முயன்று = கிருகத்தாச்சிரமத்தின்கண் ஒழுகி, மூன்று கட னும் இனிது ஈந்தார்=தேவர் முனிவர் பிதிரர் என்னு மூவகையாரது கடன்களையுங் குறை வின்றித் தீர்த்துவிட்டோர், அல்லல் அற மேவும் எதி ஆகி அமர்கிற்பார்=பிறவித் துன்பங் கள் நீங்கும்படி விரும்புகின்ற சந்நியாசியாகி இருத்தற் குரியர், முல்லை நகை மாதர்=முல்லை யரும்பு போன்ற பற்களையுடைய பெண்களை, கடி முற்றிய தினத்தில் = விவாகஞ் செய்த அத்தினத்திற்றுனே, ஒல்லை எதி ஆகி=அதிதீவிர பக்குவ முள்ள சந்நியாசி டாகி, உணர்வு உற்றிடலும் ஆம்=சிவஞானம் வாய்க்கப் பெறுதலுமாம்.

பிறவித்துன்பம் மூவகைத் தென்பதனை "ஆதி தைவிக மாதி பௌதிக-மாதியத்தி யான்மிக மென்ன - வோதிய துக்கமூன் றிலத்தி யான்மிக - மெய்யின் மனத்தி லையமி லிரண்டே - வளியிற் பித்தில் விளையும் வீளையி - லூனுகு தொழுநோயி லுதிப்பிற் கொட் பில் - வெப்பிற் சூலையின் மக்களில் விலங்கி - லலகையிற் கள்வரிற் பறவையி னிருதரின்- மைந்தரின் மக்களிரின் மனத்திடைத் தணப்பிற் - பேரறம் வளர்ப்பிற் பெருந்திரு நுகர் விற்-சிரிய யாக்கை மாதுயர் மாசு-மனத்துறு துயர நினைப்பருஞ் சோக - மறிவுரு வாக்க மடைவனல் பொறுமை-மான மாக்கலம் பூணுது மறுத்தல்-இச்சைமை நினைத விருஞ்சின

மிகுத-லினையவை முதலா னினைவருந் திறந்த-வாதி பௌதிகஞ் சீத மாமழை - யுருப்பவிர் வேனி லுட்குவரு கடுங்கா-லிருள்கூ ழிடுமின் பெருவிற லசனி-மன்னுயிர்க் குறுகண் டுன்னிய வருந்த-லாதி யாய வீவருந் திறந்த - வாதி தைவிகம் பேதை யாள்வயின் - கருக்குழி யழுங்கல் பிறப்புறும் போது திரைவருந் தீமை வரைவில் பேதைமை — மடங்க லாருயிர் தொடங்கின வவ்வழி-யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து-வீழ்ந்தன வெழாஅ வான் கழி துன்ப-மினைய மாலைய'' என்னும் ஞானாமிர்தச் செய்யுளானறிக. அமர்கிற்பார்-இல் ஆற்ற லிடைநிலை. (சு)

ஈங்கிதினு யர்ந்தநிலை யெய்திடுவ தல்லா
லாங்கதினி ழிந்தநிலை யெய்திடுத லாகா
மூங்கைமுட வர்செவிடர் முற்றுநிதி யற்றோர்
வீங்கறிவி லாரெனினு மேவுமெதி யாவார்.

(இ-ள்.) ஈங்கு இதின் உயர்ந்த நிலை எய்திடுவது அல்லால்=ஈண்டுக் கூறப்பட்ட ஆச்சிரமங்களுள் (ஒவ்வோராச்சிரமத்தாருந் தத்தமக்கு) மேலாவுள்ள ஆச்சிரமங்களை யடைதலே யன்றி, ஆங்கு அதின் இழிந்த நிலை எய்திடுதல் ஆகா=தாம் நிற்கும் ஆச்சிரமத்தினின்றுங் கீழாகவுள்ள ஆச்சிரமங்களை யடைதல் முறையாகாவாம், மூங்கை = ஊமரும், முடவர் செவிடர்=முடவருஞ் செவிடரும், முற்றும் நிதிஅற்றோர்= (எக்காரியத்தையும்) முடித்தற்குக் கருவியாயுள்ள திரவியமில்லாதவர்களும், வீங்கு அறிவு இல்லார் எனினும்=பேரறிவில்லாதவராயினும், மேவும் எதி ஆவார்=மோக்ஷத்தை விரும்புகின்ற சந்நியாச ஆச்சிரமிகளாய் வருதலு முரியர்.

பிரமசாரி தனக்கு மேலான மூன்றாச்சிரமத்தையும், கிருகத்தன் தனக்கு மேலான இரண்டாச்சிரமத்தையும்,வானப்பிரத்தன் தனக்கு மேலாவுள்ள சந்நியாச ஆச்சிரமத்தையு மடைதலே முறை. மேலாய ஆச்சிரமத்தான் கீழாச்சிரமத்திற் பிரவேசித்தல் தகுதியன்று. முற்றும் நிதி என்பதனை "வறியா ரிருமை யறியார், முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும். '' எனத் திருக்கோவையாரினும், அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து-தீதின்றி வந்த பொருள்,, எனவும்,அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்—செல்வச் செவிலியா லுண்டு.,, எனவுந் திருவள்ளுவர்குறளினுங் கூறினமையானுங் காண்க.()

முதுக்குறைவின் ஞானநெறி முற்றியபி னல்லா
லெதித்திறம டைந்திடி னிழுக்குறு மிவற்றின்
மதித்தொருநல் லாச்சிரம மன்னிவிளி காறும்
விதித்தநெறி நிற்பினுயர் வீடடைவ ரன்றே.

(இ-ள்.) முதுக்குறைவின் ஞானம் நெறி முற்றிய பின் அல்லால்=பேரறிவுடனே தத்துவஞான மார்க்கமும் வந்து கைகூடப் பெற்ற பின்ன ரன்றி, எதி திறம் அடைந்திடின்=சந்நியாச வேடத்தைக் கைக்கொண்டால், இழுக்கு உறும் = (அஃது நிலை பெறுமையாற்) குற்றங்கள் வந்து சேரும் (ஆதலால்) இவற்றின் மதித்து=இவைகளையெல்லாம் ஆலோசித்து, நல் ஒரு ஆச்சிரமம் மன்னி= (தமக்குத்) தரமாயுள்ள ஒரு ஆச்சிரமத்தைக் கைக்கொண்டு, விளி காறும்=இறக்கும் வரையும், விதித்த நெறி நிற்பின் = (அவ்வாச்சிரமக்கண் அதற்கு) விதிக்கப்பட்ட ஒழுக்கவழியில் நிற்பின், உயர் வீடு அடைவர்=மேலாய முத்தி யின்பத்தைப் பெறுவர்.

அன்று, ஏ - அசைகள். முதுக்குறைவு = பேரறிவு. அஃதாவது கல்வி கேள்விகளானுய செயற்கை யறிவு. ஞானம்=இயற்கை யறிவு. இவை பொருந்தப் பெற்ற பின்னரே

துறவு மார்க்கத்தை (சந்நியாசத்தை) அடைக என்பதாம். "மாணறந் கிளப்பின் மனையற நிரப்பி-முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப் - பொருளு மின்பமு மொரீஇ யரு ளொடு-பொறையு மாற்றலு நிறையே யொழுக்கமும் - வாய்மையுந் தவமுந் தூய்மையுந் தழீஇ-யோரறி வுயிர்க்கு முறுதுய ரோம்பிக்-காலோய் நடைய னூக்கித் தோலுடுத் - தென்பெழு மியாக்கையன் றன்புறந் துளங்கா து-வரையுங் கானு மெய்திச் சருகொடு-கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து-மாநீ ரமுவத் தழுங்கி வேனிலி - னைவகை யழலின் மெய்வருந்த வருத்தி - யிவ்வகை யொழுகு மியல்பிற் றன்றே" எனச் சிதம்பரமும்மணிக் கோவையினும், இவை யில்லாத வழிக் கைக்கொண்ட துறவு பயனில்லாமையோடு குற்றமு முறுவிக்கும் என்பதனை, "நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை - கஞ்சுக மன்றிப் பிறிதொன்றே - கஞ்சுக, மெய்ப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற் - றிப்புலமுங் காவா திது." என நீதிநெறிவிளக்கத்துங் கூறுதலா லுணர்க. (௬)

கொடுப்பவர் கொடுத்தபொருள் கொள்பவர்கள் யாரு
மெடுத்துமறை சொல்பிரம மென்றுநனி யீவோ
ரடுத்தவிர தங்களினி தாற்றுபலன் யாவும்
விடுத்தவர்மெய்ஞ் ஞானநெறி வீடடைவ ரன்றே.

(இ-ள்.) கொடுப்பவர்=(சற்பாத்திரங் கருதித்) தானஞ் செய்வோரும், கொடுத்த பொருள் கொள்பவர்கள் = அவ்வாறு தானஞ் செய்த பொருளை யேற்பவர்களும், யாரும் மறை எடுத்து சொல் பிரமம் என்று=(எத்தன்மையராயினும் அவர்கள்)யாவரும் வேதங்களால் வியந்து கூறப் படுகின்ற பிரமமாகிய சிவவியாபக முடையவர் என்று (பாத்திர அபாத்திரங்கருதாது) நனி ஈவோர் = (திரவியங்களை) மிகுதியாகக் கொடுப்பவர்களும், அடுத்த விரதங்கள் இனிது ஆற்று = தமக்கு உரியவாய நோன்புகளை விதிப்படி யநுட்டித்து, பலன் யாவும் விடுத்தவர்=(அவற்றால் வரும்) பயன்களை யெல்லாஞ் (சிறிதாயினும்) விரும்பாது நின்றவர்களும், மெய் ஞானம் நெறி வீடு அடைவர் = சிவஞானம் வாய்க்கப் பெற்று அதன் வழித்தாய சிவசாயுச்சிய முத்தியையும் அடைவார்கள்.

இதனுள், கொடுப்பவர் என்பது சற்பாத்திரங் கருதிக் காமியதானஞ் செய்வாரை யும், ஈவோர் என்பது அங்ஙன மின்றி யெவர் வந்தபோதினும் அவர் பாத்திராபாத்திரங் கருதாதும், பலன் கருதாதும், அவர்களைச் சிவமெனக் கருதிக் கொடுக்கின்ற நிட்காமிய தானமுள்ளாரையுங் குறிக்கின்றன. இக்கருத்தமைய "ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்-பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின் - வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்-காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே." எனத் திருமந்திரத் துங் கூறியருளப்பட்டன. (௭)

போக்குவழி கண்டிடை புகாதுறு முலண்ட
மாக்கியிடு கூடதனை யாத்திடுதல் போல
நீக்குகரு மம்பல நினைந்துபுரி வோரை
வீக்கியிடு மக்கருமம் வேதனை யுறுத்தே.

(இ-ள்.) உலண்டம் ஆக்கியிடு கூடு = கோற் புழுவான்து தன்னாற் கட்டப்பட்ட கூட்டி னின்றும், போக்கு வழி கண்டு=வெளியே செல்கின்ற வழியைத் தெரிந்து, புகாது இடை உறும்=செல்ல முடியாமல் அக்கூட்டி னிடத்திலேயே கட்டுப்பட் டிறக்கும், (இன்னமே) உலண்டம் ஆக்கியிடு கூடு அதனை யாத்திடுதல் போல=கோற் புழுவாற் கட்டப்

பட்ட கூண்டே யதனைக் கட்டி நிற்றல் போல, நீக்கு கருமம் பல =(பிறவியை) யொழிக்கச் செய்கின்ற தருமங்கள் பலவற்றையும், நினைந்து புரிவோரை= (அவற்றிற் குரிய பலங்களை யநுபவிக்க) எண்ணிச் செய்கின்றவர்களை, அ கருமம் = அவர் செய்த கருமங்களே, வேதனை உறுத்து வீக்கி யிடும்=துன்பங்களைக் கொடுத்து (மேன்மேலும்)பந்த முறுத்தும்

"உலண்டம் ஆக்கியிடு கூடு" என்பது பொருண் முறையாற் பின்னருங் கூட்டப்பட்டது.கோற்புழுவானது தன் பாதுகாப்பினை யெண்ணிக் கட்டிய கூடே தன்னை வெளியில் வரவொட்டாமற் பந்தித்து வேதனை யுறுத்த அதன்கட் டங்கி யிறந்தாற்போல, இன்பம் அநுபவிப்பேம் என்னும் எண்ணத்தாற் றருமங்களைச் செய்வோர் அவற்றான் மீட்டும் மீட்டும் பிறவி யெடுத்து வருந்துவ ரன்றிக் கதிசேரார். இதனாற் பலன் விழைந்து அறஞ் செய்வார் பாடு கூறப்பட்டது. (அ)

ஆதலி னறம்பலன் விழைந்திடுத லின்றி
மேதக வியற்றுநர்கள் விஞ்சையில ரேனுஞ்
சாதல்பிற வித்துயர் தவிர்த்துவிட முண்டோன்
பாதநிழ லுற்றினிது வாழ்வர்திண மன்றே.

(இ-ள்.) ஆதலின் = (மேற்கூறிய) காரணத்தினால், அறம் = தருமங்களை, பலன் விழைந்திடுதல் இன்றி = பலனை விரும்பாமல், மே தக இயற்றுநர்கள் = மிகவுந் தகுதியாகச் செய்பவர்கள், விஞ்சை இலர் எனும்=வித்தை யறிவு இல்லாதவராயினும், சாதல் துயர் பிறவி துயர் தவிர்த்து = மரணத் துன்பம் பிறவித் துன்ப மிவற்றி னின்றும் நீங்கி, விடம் உண்டோன் பாதம் நிழல் உற்று=நஞ்சை யுண்டருளிய சிவபெருமானது திருவடி நீழலை யடைந்து, வாழ்வர்=வாழுவார், திண்ணம்= இது சத்தியமே. அன்றே-அசைகள்.

தருமங்களைப் பலன் விரும்பாது செய்வோர் முத்தி யடைவர். இது சத்தியமே என்றதாம். விஞ்சையாவது சுத்த வித்தையாம். அவ்வித்தை "அங்கமாறு மறைநான்கு மீமாங் கிசமென் றருள்கொழித்துந் - தங்கு நீதி நூலொன்று புராண மொன்று தவநெறித்து - பொங்கு தரும நூலொன்று புகன்ற வீரேழ் விஞ்சையினை" என்று பின் வருந் **திருக்கல்யாண அந்தியாயச்** செய்யுளிற் கூறியபடி பதினான்காகும்.

இப்பதினான்கனோடு ஆயுள் வேதம், அருத்த வேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம் என்னும் உபவேதம் நான்கனையுங் கூட்டி விஞ்சை பதினெட்டென்று **சைவபுராணங்** கூறிற்று. அது "பொன்னவிர் சடையோ னன்னவா கனனைப் படைத்துமுன் புரையற வகுத்த-மன்னிடு பதினெண் விஞ்சையு மறிய வழங்கினன" என்ற **வாயுசங்கிதைச்** செய்யுளானு மறிதற் பாலது. பிறவித் துன்பம் ஐந்தினும் மரணத் துன்பமே யஞ்சத் தக்கதும் பெரிது மாகலின் முற்கூறப்பட்டது. அதனை "வந்திடு மரணத் துன்ப மறித்துரை செய்யப் போமோ-வுந்திமே லையும் பித்து முணர்வொடு பொறிகலங்கி—கந்திடா விருளே மூடி காவுலர்க் தலமக் தென்னே - யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்மடங்கே" என்றதனானும், "யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்" எனத் **திருவாசகத்** தொருவாசகத்தானும் அறிக. வாழ்வர் பல கற்பம்—எனவும் பாடம். சிவபெருமானது திருவடி யழிவிலா முத்தி யாதலின் அப்பாடபேதத்தை நீக்கினும். ஏனை மூன்றடி போல ஈற்றடியும் மோனை பெற்று வாராமையிற செந்தொடை யென்க. (கூ)

பலன்விழை வுறுதுகரு மம்பல வியற்றி
னலகறு பவத்தினுள பாவமறு மற்று
னிலவிய மனம்புனித மாமது நிகழ்ந்தான்
மலைவிலுயர் ஞானம்வரும் வரினடைவர் வீடே.

(இ-ள்.) பலன் விழைவு உறாது = பிரயோசனத்தை விரும்பாமல், பல தருமம் இயற்றின்=பல தருமங்களையுஞ் செய்யின், அலகு அறு பவத்தின் உள்ள பாவம் அறும்= அளவில்லாத பிறவிகடோறும் ஈட்டப்பட்டுள்ள தீவினைக ளெல்லாம் ஒழியும், அற்றால்= அதனால், நிலவிய மனம் புனிதம் ஆம்=(ஆகாமிய வினைக்குக் காரணமாக) விளங்கும் மனஞ் சுத்தமாகும், அது நிகழ்ந்தால் = அவ்வகச் சுத்தி வருமாயின், மலைவு இல் உயர் ஞானம் வரும்=ஐயமில்லாத பரம ஞானமாகிய சிவஞானங் கைகூடும், வரின்=அது நிகழ்ந்தால், வீடு அடைவர்=சிவ சாயுச்சிய முத்தியை யடைவார்கள்.

ஒன்றனையும் விரும்பாது செய்யின் அகச்சுத்தி வரும். அது வரிற் சஞ்சிதமும் ஆகாமியமுங் கெடும். அவை கெடவே சிவஞானம் தோன்றப் பிராரத்தமுங் கெடுதலால் வீடு அடைவர் என்பதாம். "அகச் சுத்தி யுடையார்க ளறுத்திடுவர் பிறப்பினையும்' என்று **சிவதருமோத்தரம்** உரைத்தலானும், ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்-வான நணிய துடைத்து" எனத் **திருக்குறள்** உரைத்தலானும் இவை யுணரப்படும். (கo)

பிஞ்சுமதி யஞ்சடை மிலைந்தபெரு மானே
நெஞ்சுற நினைந்துபுல னைந்தையு நிறுத்தி
வஞ்சமுறு மாணவ மெறிந்தமதி வல்லோ
ருஞ்சிடுவ ரென்பதனை யாவருணர் கல்லார்.

(இ-ள்.) பிஞ்சு மதி அம் சடை மிலைந்த பெருமானே = இளஞ் சந்திரனை யழகிய திருச் சடாமுடியின் கண் தரித்தருளிய சிவபெருமானே, நெஞ்சு உற நினைந்து= மனத்தினிடத்து நிலைபெறத் தியானித்து; ஐந்து புலனையும் நிறுத்தி = ஐம்புலன்களையு மடக்கி, வஞ்சம் உறும் ஆணவம் = வஞ்சகமுள்ள ஆணவ மாகிய மூலமலத்தை, எறிந்த மதி வல்லோர் = அகழ்ந் தெறிந்த மெய்யறிவில் வல்லவர், உஞ்சிடுவர் என்பதனை = முத்தி யடைவார் என்று சொல்லப் படுவதனை, உணர்கல்லார் யாவர்=அறியாதவர் எவரிருக்கின்றனர், (ஒருவரு மில்லை யென்றபடி). உஞ்சிடுவார் - போலி. உணர்கல்லார்—கு—சாரியை, அல் - எதிர்மறை யிடை நிலை. பிஞ்சு-ஆகுபெயர். (கக)

நன்னெறியி னாச்சிரம நான்குமுரை செய்தே
னிந்நெறியி னின்றவர்க ளின்பமடை கிற்பா
ரந்நெறி திறம்பின ரழன்றுதழல் கக்கும்
வெந்நரகில் வீழ்வரென விண்டுவுரை செய்தான்.

(இ-ள்.) நல் நெறியின் ஆச்சிரமம் நான்கும்=நல்ல முறையோடும் ஆச்சிரமங்கள் நான்கையும், உரை செய்தேன்=விரித்துக் கூறினேன், இ நெறியில் நின்றவர்கள்=இந்த ஒழுக்க வழியில் நின்றவர்கள், இன்பம் அடைகிற்பார்=முத்தி யின்பத்தைப் பெறுவார், அ நெறி திறம்பினர்=அந்த மார்க்கத்தி னின்றும் வழுவினோர், அழன்று தழல் கக்கும்= உருப்ப மிகுந்து அக்கினியைக் கொப்புளிக்கின்ற, வெம் நரகில் வீழ்வர் என=கொடிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவர் என்று, விண்டு உரை செய்தான்=திருமாலாகிய கூர்மர் கூறினர்.

விண்டுவுரை செய்தான் என வரற் பாலது செய்யு ளோக்கிப் பொது விதியால் வகர வுடம்படு மெய் பெற்று முடிந்தது. விண்டு-விஷ்ணு என்னும் வடமொழித்திரிபு. வியாபக முடையவன் என்பது பொருள். தமக்குரிய தரும நெறியி னின்றும் வழுவினாரை யமதூதர்கள் ஆயுதங்களாற் குத்தியும், அக்கினியிற் காய்ச்சிய இருப்புச் சங்கிலியினாற் பிணித்தும், அதனை யேந்தச் செய்வித்தும், நூறு இருப்புக் குண்டுகளை யவர் காலிற் கட்டியுந் தூக்கி

வார்கள். அக்கினியைக் கக்குங் கசையினுற் றிசைபீற அடிப்பார்கள். இருப்புலகையாலே முதுகிற் குத்துவார்கள். புண்ணான அவர் தேகத்தில் உப்பு முதலிய காரசீரையும், அக்கினிக் குழம்பையும் வார்ப்பார்கள். இரத்த வெள்ளந் திறந்தோட வாள் கொண்டறுத்து உறுப்புக்களைச் சின்னஞ் சின்னமாக்கி வெந் நெய்க்குடத்தில் வேக வைப்பார்கள். மலகூபத்தும், ஊனுஞ் சீயும் நிறைந்த நரகங்களிலும் விழுத்தி வருத்துவர். எள்ளுப் போல அரைத்தும், கரும்புபோல நசுக்கியும், அக்கினி யென்றுஞ் சீர மென்றுந் தெரியாத வண்ணம் எரிக்கின்ற அக்கினிச் சுவாலை பொங்குங் கொடிய கும்பிபாக முதலிய நரகங்களில் வீழ்த்துவர். அவர் படுந் துன்ப முரைத்தற் கரிதரிதே யெனச் சர்வோத்தம் என்னு மாகமத்தின் மூன்றுவது உப பேதமா வுள்ள சிவதருமோத்தரஞ் செப்புகின்றது. (கஉ)

ஆச்சிரம முறையுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கஙக.

நான்காவது

பிரகிருதித் தோற்றமுரைத்த அத்தியாயம்.

அஃதாவது உலகத்திற்கு முதற்காரணமாயுள்ள மூவகை மாயைகளுள் ஓர்பகுதியாகிய அசுத்த மாயைக்கட் பிறந்த பிரகிருதிமாயையி னின்றுந் தோற்றவின் விவை யெனக் கூறும் பாகமாம். குணமுத்தற் பிருதிவி யீறுவுள்ள இருபத்து நான்கு தத்துவ குழாங்களுக்கும் முதலாதல் பற்றிப் பிரதானம் எனவும்,முக்குண சமமுடைமையின் பிரகிருதி யென்வும், பகுதி யெனவுங் கூறப்படும். இருபத்துநான்கு தத்துவங்கள் இவை யென்பவற்றை "மனம்புத்தி யாங்கார மருபஞ்ச பூதமிக – நினைக்திடுஞா னேந்தியம் பின் னிகழ்த்துகன் மேந்தியஞ்சீர் – புனைந்திடுஞா னேந்தியத்தின் விடயங்கள் புகலரிதா – முனம்புகலும் பிரகிருதி சம்பந்த மென்மொழிவார்" என்று பின்னர்க் கூறினமையானுந் தெளிக.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இன்னணம் வருணச் சிரமநல் லொழுக்கம் யாவையும் வழுவறக் கேட்டுக்
கன்னியம் படலைத் துழாய்துயல் வருதோட் கருமுகில் வண்ணனை நோக்கிப்
பொன்னவிர் திதலை முலைசுமந் தொல்கும் புலோமசை நகைவிருந் தயரு
மன்னவர் திலகன் மகதியாழ் முனிவன் மகிழ்சிறந் தீங்கிவை புகல்வார்.

(இ-ள்.) பொன் அவிர் திதலை முலை சுமந்து ஒல்கும்=பொன்போலப் பிரகாசிக்கின்ற தேமலை யுடைய தனபாரங்களைச் சுமந்து வருந்துகின்ற, புலோமசை நகை விருந்து அயரும்=இந்திராணியினது நகை முகமாகிய (அமிர்தத்தைப்) பருகி மதனலீலையைப் புரிகின்ற, மன்னவர் திலகன்=நிலைத்தலை யுடைய தேவர்களுக்குத் திலகம் போன்றவனாகிய இந்திரனும், மகதி யாழ் முனிவன்=மகதி யென்னும் வீணையினை யுடைய நாரத முனிவரும், இன்னணம்=இவ்விதமாக (உரைத்த) வருண ஆச்சிரமம் நல் ஒழுக்கம் யாவையும்=வருணச்சிரமங்களினது நல்ல தருமங்களையும் அவற்றின் முறைகளையும், வழு அற கேட்டு=குற்ற நீங்கக் கேட்டுணர்ந்து, மகிழ் சிறந்து = சந்தோஷப் பெருக்குடையராய், கன்னி அம் துழாய் படலை துயல்வரு தோள்=புதுமையும் அழகு முடைய துழாய்மாலை புனைந்து அசைகின்ற புயங்களை யுடைய, கரு முகில் வண்ணனை நோக்கி = கரிய மேக வண்ணராகிய கூர்ம மூர்த்தியைப் பார்த்து, இவை புகல்வார் = பின்வரு மிவற்றைச் சொல்வாராயினர் என்க.

முகைப் பதம் பார்க்கும் வண்டுபோலத் தலைவியரை நகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை காமத்திற்கு ஏதுவாகலின் "புலோமசை நகை விருந்தயரும்" என்று கூறப்பட்டது. "இகலில ரெஃகுண்டியார் தம்முட் குழீஇ-நகலி னினிதாயிற் காண்பாம்" என்றதனு னறிக. நகை மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்பவிளையாட்டினுட் டோன்றும் முப்பத்திரண்டு பொருட்கும் இவையென்னும் இயல்பில்லன வல்ல என்றதற்கு மெய்ப்பாட்டினுள் விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்துச் சிறப்பித்தார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். இதனை "நகையே யழுகை" என்னுஞ் சூத்திரத்தாற் காண்க. "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென் – றல்ல னீத்த வுவகை நான்கே" என்னு மெய்ப்பாட்டியற் சூத்திரப்படி, ஈண்டு இந்திரற்கும் நாரதர்க்குந் தோன்றிய மகிழ்ச்சி நால்வகை மகிழ்ச்சியுட் புலனின் பாற்படும். புலனென்பது கல்விப் பயனாகிய அறிவுடைமையாம். இன்னணம் - படலை யென்பவற்றிற்கு முன் உரைத்தாங்கு உரைக்க. தேவரை மன்னவர் என்றது, புண்ணிய மேலீட்டானே யமிர்த முண்டு ஆயுளதிகரித்து அமரர் எனக்கூறும் வழக்கினு னென்க. அன்றிப் பூவேந்தர் திலகன் என்னலுமாம். என்னை? சதவேள்வி முற்றிய விதனுகலின். (க)

அளக்கரும் புவன மொருங்களிப் பவன்யா ராங்கவை யாருழை யுதிக்குந்
துளக்கற யார்மாட் டொடுங்கு மெவ்வா றுநியமிக்கப் படுமவை தொகுத்து
விளக்குற முணர்வி னியமனஞ் செய்வா னெவனிவை விளம்புதி யென்னக்
களக்கனி யனைய திருமறு மார்பன் கருணைகூர்ந் தாங்கவை புகல்வான்.

(இ-ள்.) அளக்க அரு புவனம்=அளவு செய்தற்கரிய உலகங்களை, ஒருங்கு அளிப்பவன் யார்=ஒருசேரக் காக்குங் கடவுள் யாவன், ஆங்கவை யார் உழை உதிக்கும்=அவ்வுலகங்கள் எல்லாம் எவரிடத்தினின்றுந் தோன்றும், துளக்கு அற யார் மாடு ஒடுங்கும்=(அவை பின்னர்) அழிவில்லாமல் யாவரிடத்துச் சென்று அடங்கும், அவை எ ஆறு தொகுத்து நியமிக்கப்படும்=அவை யெவ்விதம் பிண்டப் பொருளாக்கித் தொழிற் படுத்தப் படும், விளக்கு உறழ் உணர்வின் = விளக்கைப் போன்று விளங்குஞ் சருவஞ்ஞத்துவத்தினுல், நியமனம் செய்வான் எவன் = இங்ஙனம் வகைப்படுத்துவோன் யாவன், இவை விளம்புதி என்ன=இவைகளை யுபதேசித்தருள வேண்டு மென்று கேட்க, களக்கனி அனைய திருமறு மார்பன்=களாப்பழத்தை யொத்த சிவற்சம் என்னும் மறுக்கொண்ட மார்பினராகிய திருமால், கருணை கூர்ந்து ஆங்கு அவை புகல்வான்=அருள் சிறந்து அப்பொழுது அவற்றை யெல்லாஞ் சொல்லத் தொடங்கினர்.

விளக்கு=விளக்கத்தை யுடையது, விளக்குவது. சூரியன் எப்பொருள்களையும் விளக்குதல் போல இறைவனும் உயிர்கடோறும் நின்று அறிவிக்கும் அறிவினனாகலின் "விளக்குற முணர்வின்" என்றதாம். அதனை "காண்பாரார் கண்ணுதனீ காட்டாக் காலே" என்ற திருவாக்கானுந் தெளிக. களா என்பது கள எனக் குறுக்கல் விகாரமாய் நின்றது. (உ)

சத்தமுன் னிளக்கும் விடயமோ ரைந்துந் தாழ்ந்திடும் விடயமோ ரைந்துஞ்
சித்தமீ ருய கரணமோர் நான்குஞ் சிறந்தனா னேந்திய மைந்து
மொய்த்திடு கரும விந்திய மைந்து மின்றியே முழுமுத லாகி
நித்தமா யொன்று யசலமா யொளியாய் நிருமல மாய்வெறு வெளியாய்.

(இ-ள்.) சத்தம் முன் இளக்கும் விடயம் ஓர் ஐந்தும்=சத்த முதலாகச் சொல்லப்படுகின்ற தன்மாத்திரைகள் ஐந்தும், தாழ்ந்திடும் விடயம் ஓர் ஐந்தும் = பணிவைக்

கொடுக்கும் வசனமுதலிய விடயங்கள் ஐந்தும், சித்தம் ஈறு ஆய கரணம் ஓர் நான்கும்= சித்தத்தினை யிறுதியாக வுள்ள அந்தக்கரணங்கணான்கும், சிறந்த ஞான இந்தியம் ஐந்தும் = சிறப்பினவாய ஞானேந்திரியங்க ளைந்தும், மொய்த்திடு கரும இந்தியம் ஐந்தும் இன்றி=பொருந்துகின்ற வாக்கு முதலிய கருமேந்திரியங்கள் ஐந்தும் இல்லாததாகி,முழு முதல் ஆகி=முதற் பொருளுக்கும் முதற் பொருளாகி, நித்தமாய் = அநாதி நித்தியமாகி, ஒன்று ஆய் அசலம் ஆய்=ஏகமாகியும் சலனமற்ற தாகியும், ஒளி ஆய் நிருமலம் ஆய் வெறு வெளிஆய்=சுயஞ்சோதி யாகியும் பரிசுத்தமாகியும் பரவெளியாகியும்.

இதுமுதல் நான்கு செய்யுட்கள் குளகம். சத்தமுன் கிளக்கும் விடயம் என்றது சோத்திரம் - துவக்கு-சட்சு - சிங்குவை - ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியங்களின் விடயங்களை. அவை முறையே சத்தம்-பரிசம்-ரூபம் - ரசம்-கந்தம் என்பவாம். இவற்றை முறையே ஓசை-ஊறு-ஒளி-சுவை-நாற்றம் எனவுங் கூறுப. மற்றைய விடயம் கன்மேந்திரிய விடயங்களாம். அவை வசனம் - கமனம் - தானம் - விசர்க்கம் - ஆனந்தம். இவை முறையே வாக்கு-பாதம்-பாணி - பாயுரு உபத்தம் என்னுங் கன்மேந்திரியங்களுக்கு விடயங்களாம். அந்தக் கரணங்கள் மனம்-புத்தி-அகங்காரம்-சித்தம் என்பவாம். பதிப்பொருளாகிய பிரமமானது முதற் காரணத்திற்கும் முதற் காரணமாய் நிற்றலின் முழுமுதல் எனவும், தோற்றக் கேடின்றி விளங்கலான் நித்தமாய் எனவும், தன்னைப் போன்ற வேறோர் பொருளின்றித் தானே தனக்கு நிகராய் நிற்றலின் ஒன்றாய் எனவும், வேறோர் பொருளானுஞ் சலிக்கப்படாது என்று மொருபடித்தாய்ச் சுவதந்திரங் கொண்டு நிற்றலின் அசலமாய் எனவும், அஞ்ஞானமின்றி வேறுபடாத ஞானமே திருமேனியாக வுடைமையின் ஒளியாய் எனவும்,இயற்கையாகவே பாசங்களி னின்றும் நீங்கித் தூயதாய் நிற்றலின் நிருமலமாய் எனவும், கற்பனைக ளொன்று மின்றிக் கடந்த பொருளாய் விளங்கலின் வெறு வெளி யெனவுங் கூறப்பட்டது. இவற்றை "ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்-பேரி லானொரு முன்னிலான் பின்னிலான பிறிதோர் - சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு - நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்." என்னுங் கந்தபுராணந் திருவிருத்தத்தாற் றெளிக. (ரு)

தன்னுழைத் தானே யுறைவதாய்த் தன்னைத் தான்பணி கொள்வதா யார்க்கு
முன்னைய தாகிப் பிரமமாய்ச் சிவமாய் முதலொடு மந்தமில் லதுவாய்
மன்னுமுக் குணமுக் காலமில் லதுவாய் வாக்கொடு மனந்தொடர் வரிதாய்த்
துன்னுதற் கரிதா யெங்கணு நிறைந்த சோதியாம் பிரமமென் பதுவும்.

(இ-ள்.) தன் உழை தானே உறைவதாய் = தன்னிடத்திற் றானே யிருக்கின்றதாகி, தன்னை தான் பணி கொள்வது ஆய்=தன்னைத் தானே தொழிற் படுத்துவது ஆகி, முன்னையது ஆகி=முதன் மூர்த்தியாகியும், பிரமமாய்=பிரம சொரூபமாகியும், சிவமாய்= சிவமயமாகியும், முதல் ஒடு அந்தம் இல்லது ஆய் = ஆதி யந்தமில்லதாகியும், மன்னும் முக்குணம் முக்காலம் இல்லதுவாய் = நிலையாய மூன்று குணங்களும் மூன்று காலங்களும் இல்லாத தாகியும், வாக்கு ஒடு மனம் தொடர்வு அரிதாய் = சொல்லுக்கும் மனத்திற்கும் அதீதப்பட்டதாகியும், துன்னுதற்கு அரிது ஆய்=ஒருபொருளோடுந் தாக்குதல் இல்லதாகி, எங்கணும் நிறைந்த சோதி ஆம்=எவ்விடத்தும் வியாபியாய் விளங்கும் பரஞ்சோதி மயமாகிய, பிரமம் எனபதுவும் = பதிப் பொருளாகிய சிவம் என்று சொல்லப் படுவதும்.

முக்குணம் - சத்துவாதி முக்குணங்கள். முக்காலம் – இறப்பு நிகழ்வு எதிர்வு. இவற்றை வடநூலார் முறையே பூத-பவிஷ்ய-வர்த்தமானம் என்பர். "அவனருளே கண்

ளுகக் காணி லல்லா-லிப்படிய லிச்சிறந்த லிவ்வண் ணத்த - லிவனிறைவ னென்றெழு திக் காட்டொ ணுதே. " என்ற அருள் வாக்கின்படி "வாக்கொடு மனத்தொடர் வரி தாய்" என்றதாம். ஆகாயம் மற்றை நாற்பூதங்களைப் பற்றியும் பற்றுமலும் இருத்தல் போல இறைவனும் பிரபஞ்சங்க டோறு நிறைந்து நின்றாலும் அவை யாகாமையாலும் அவைக்குரிய உபாதிகளை யுறாமை யானும் "துன்னிடுதற் கரிதாய்" என்று கூறப்பட்டது

பொருவிலவ் வியத்த மாயழி வின்றிப் புனிதமா யனந்தமா யார்க்குந்
தெரிவரி தாகி யெங்கணு முகமாய்ச் சிறப்புட னெவற்றினு நிறைந்த
கருதரும் பொருளா மகேச்சுரன் றானுங் காரண மாய்ச்சத சத்தாய்ப்
பெருகுமவ் வியத்த முயர்பிர கிருதி பிரதான மென்றியம் புவதும்.

(இ-ள்.) பொரு இல் அவ்வியத்தம் ஆய் = தனக்கு நிகரில்லாத சூக்குமமாகியும், அழிவு இன்றி புனிதம் ஆய்=நித்தியமாகியும் பரிசுத்த மாகியும், அநந்தமாய் யார்க்கும் தெரிவு அரிது ஆகி=முடிவில்லாததாகி யெவர்களுக்கும் அறிதற் கரியதாகியும், எங்கணும் முகம் ஆய்=சர்வதோ முகமாகியும், சிறப்பு உடன் எவற்றினும் நிறைந்து=சிறப்புடனே யெப்பொருள்களினும் நீக்கமற நின்று, கருத அரு பொருள் ஆம் மகேச்சுரனும்=நினைத்தற்கும் அரிய பொருளாகி விளங்கும் மகேசுர மூர்த்தியும், காரணம் ஆய் = பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகியும், சதசத்து ஆய்=சதசத்தாயும், பெருகும் அவ்வியத்தம்= பெருக்கத்தை யுடைய அவ்வியத்தம் எனவும், உயர் பிரகிருதி பிரதானம் என்று இயம்புவதும்=மேற்பட்ட பிரகிருதி யெனவும் பிரதானமெனவும் சொல்லப்படுகின்ற பகுதி மாயையும்.

சதசத்து - சத்தின் பாற்பட்டுச் சத்தெனவும், அசத்தின் பாற்பட்டு அசத்தெனவும் நிற்பதாம். சிலசாரார் இங்ஙனங் கூறாது பிரகிருதி மாயை அசத்தே யென்றுரைப்பர். இம்மாயை முக்குணங்களுஞ் சமமாய் நின்றவிடத்துப் பிரகிருதி யெனவும், பிரபஞ்ச உற்பத்திக்கு ஏதுவாய் நிற்கையால் பிரதானம் எனவும், காரணம் எனவும், தான் வளர்ந்தும் விரிந்தும் பூதங்களை வளர்த்தலாற் பிரமன் எனவும், பரமன் அதனுல் அறிதலால் மிருதி யெனவும் பெயர்பெறும். அதனை "முக்குணத்தின் சமத்துவத்தை மொழிந்த பிரதான மென்றுந் - தக்கபிர கிருதி யென்றுஞ் சாற்று வர்கண் மதிவல்லோர். " எனக் கூறியதனுனும், "தான்வளர்ந்தும் விரிந்து நின்று-மருவுறு பூதங்க டம்மை வளர்த்தலாற் பிரமனென்றும் வரம்பிலி யாவும் - பரம னதனு லறிதலா லதனை மிருதியென்றும் பகர்வர் மாதோ. " என்னும் இலிங்கபுராணச் செய்யுளானு மறிக. (௫)

புருடனு மாக நான்கும்வை குதலும் பிரகிரு திக்குமுன் புகன்ற
விரியுமுக் குணமுந் தூக்குபொற் றுலைநா வெனச்சம மேயன சிறப்பின்
வருபிரா கிருதப் பிரளய மாகு மற்றிஃது யர்மகேச் சுரற்கோ
ரிரவுநற் சிருட்டி பகலிவை மாற்ற மலதவற் கிராப்பக லிலையால்.

(இ-ள்.) புருடனும் ஆக நான்கும் = புருட தத்துவமும் ஆக நான்கும், வைகுதலும்=தத்தம் இயல்பின் படி வெவ்வேறாக அமைந் திருக்கையில், முன் புகன்ற பிரகிருதிக்கு=முற் சொல்லப்பட்ட பிரகிருதி மாயையி னிடத்து, விரியும் முக்குணமும் = விரிந்த சத்துவ முதலிய மூன்று குணங்களும், பொன் தூக்கு துலை நா என சமம் மேயன= பொன் னிறுக்குந் தராசு நாக்குப் போலச் சமப்பட்டு நின்றன, சிறப்பின் வரு பிராகிருதப் பிரளயம் ஆகும்=(அவ் வாறுய காலமே) அருமையாக வருகின்ற பிராகிருதப் பிரளயமாகும், இஃது உயர் மகேச்சுரன் கு ஓர் இரவு = இவ்வொடுக்க காலம் மேலாய மகே

சுர மூர்த்திக்கு ஓரிரவு ஆகும், நல் சிருட்டி பகல் = நன்மையாகச் சிருட்டி தொடங்குங் காலமே (அவர்க்குப்) பகலாகும், இவை மாற்றம் அல்லது = இங்ஙனம் இரவு பகலென்று சொல்லப்படு மிவை சொல் மாத்திரமே யல்லாமல், அவன் கு இரா பகல் இல்லை = அவ் விறைவனுக்கு இரவென்பதும் பகலென்பதும் இல்லையே யாகும்.

பிரமமும் மகேசுர மூர்த்தியும், பிரகிருதி மாயையும், புருடனுமாகிய நான்கும் இயல்பின்படி யிருக்க, பிரகிருதி மாயையி னிடத்தி னின்றும் விரிந்த சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னு முக்குணங்களுந் துலாவைப் போலச் சமப்பட நின்றன. அக் காலமே பிராகிருதப் பிரளயம். அதுவே மகேசுர மூர்த்திக்கு ஓர் இரவு. அதனைப் பின் சிருட்டிக்கத் தொடங்குங் காலமே பகல். இங்ஙனஞ் சொல்லப்பட் டிருப்பினும் இரவு பகல் என்பவற்றைக் கடந்து நின்ற அவர்க்கு உண்மையில் அவைக ளில்லை யென்பதாம்.

புருட தத்துவ மாவது காலம்-நியதி-கலை-வித்தை-இராகம் என்னும் பஞ்ச கஞ்சுகத்தினுள்ளே கூடி நின்று சத்தாதி விஷயங்களை நுகர்வதாம். மற்று-ஆல் அசைகள். பிரகிருதி மாயையி னிடத்து முக்குணங்களு ளொன்று முனைந்து நிற்கின் புத்தி தத்துவமும் அதன் வழித் தாக மற்றைய தத்துவங்களுந் தோன்றும். சமப்பட்டு நிற்கின் பிரளயமுண்டாகும் என்க. இப் பிரளய முண்டாகும் வகை யாவது—நீரானது நிலத்தின் குணமாகிய கந்தத்தைக் கிரகிக்க, நிலமானது ஒடுங்கத் தக்கதாகிக் கந்த தன்மாத்திரை யில்லாமையால் நீராகின்றது. அந்த நீர் வளர்ந்து அலைகளுள்ள பிரவாகத்துடன் அண்ட முகடு வரையில் உயர்ந்து நிற்கும். அதனது இரசதன்மாத்திரையைச் சூரியன் கிரகிக்கச் சுவறி நெருப்பாகிக் கொழுந்து விட்டுப் பரந்து நிற்கும். அவ்வக்கினியின் றன்மாத்திரை யாகிய ரூபத்தை வாயு கிரகிக்க, அவ்வக்கினி பிரசண்ட மாருத மாகி வீசா நிற்கும். இதனால் எவ்விடத்தும் ஒளியின்றிப் பேரிரைச்சலோடு வாயு மயமாய் நிற்க, அதன் குணமாகிய பரிசத்தை ஆகாயம் நசிக்கும். அதனால் வாயு நாசமாகி ஆகாசமொன்றே யாவரண மின்றி யிருக்கும். இங்ஙனம் அவயவ மில்லாத ஆகாயத்தின் குணமாகிய சத்தத்தைப் பூதாதி யகங்காரங் கிரகிக்கும். இந்தப் பூதாதி யகங்காரத்தைப் புத்தியாகிய மக தத்துவங் கிரகிக்கும். அந்த மகதத்துவத்தைப் பிரகிருதி மாயை கிரகிக்கும். அது முக்குணங்களுஞ் சமப்பட்டு நிற்கு மாறுபிரேரக ராகிய மகேசுர மூர்த்தி யானவர் புருட தத்துவத்தைக் கலக்க வொட்டாமல் வேறு பிரிப்பர். அதுவும் அவ்வியத்தத்துள் இலயித்தலால் இருள் சூழும். இதனையே பிராகிருதப் பிரளயம் என்றும், மகேசுர மூர்த்திக்கு இரவென்றும், இஃதொழியச் சிருட்டி தொடங்குங் காலத்தினையே பகல் எனவுஞ் சொல்லப்படும். (௯)

அன்னதோர் கங்குற் புலரியி லுலகுக் காதியா யநாதியா மகேசன்
கன்னியர் முலைமேற் புனிற்றிளந் தென்றற் கன்றுதை வருதலுங் காம
மன்னியுள் கலங்கு மாறுபோற் புருடன் வளர்பிர கிருதியைப் நோக்கத்
தங்நிலை கலங்கு மதனிடை யுதித்த தமர்மக தத்துவந் தானே.

(இ-ள்.) அன்னது ஓர் கங்குல் புலரியில் = அவ்வாறுய ஒரு இரவு விடியுங்காலை, உலகுக்கு ஆதி ஆய் அநாதி ஆம் மகேசன் = உலகிற்கு முதல்வராய் அநாதியாயுள்ள மகேசுர மூர்த்தி யானவர், புருடன் வளர் பிரகிருதியை நோக்க = புருடனையும் பிரகிருதி மாயை யினையும் நோக்கி யருள, புனிறு இளம் தென்றல் கன்று = புதிய இளமை யாகிய தென்றற் கன்றானது, கன்னியர் முலை மேல் தைவருதலும் = கன்னிப் பருவமுள்ள பெண்களது தனங்களின் மீது பரிசித்தலும், காமம் மன்னி உள் கலங்கும் ஆறு போல = புணர்ச்சி விருப்பந் தோன்றி மனங் கலங்குந் தன்மை போல, தம் நிலை கலங்கும் = தத்தம் நிலைகளினின்றுஞ் சலனப்படும், அதன் இடை மகதத்துவம் உதித்தது = (சலனப்பட்டமையால்

முக்குணங்களும் ஏற்றந் தாழ் வுள்ளனவாகி) அதனிடத்தினின்றும் மக தத்துவந் தோன்றிற்று. தான் - ஏ - அசைகள்.

புருட தத்துவத்தையும், பிரகிருதி தத்துவத்தையும் பிரேரிப்பவர் மகேசுராகிய அனந்தேசுர ராகையால், அவர் புலரிக் காலம் வந்தடுக்கப் புருட தத்துவத்தையும் பிரகிருதியையும் இணைத்தனர். அப்போது பிரகிருதி தன்னிலை கலங்க, அதனிடத்து மக தத்துவந் தோன்றிற்று என்பதாம். அன்னது-வினைமுற்று எச்சப் பொருட்டு. (எ)

அனையநன் மகதத் துவத்தினைப் புத்தி மகான்மதி பிரக்கினை யான்மா
வனைதருங் காதி மேதையீச் சுரனென் றுரைப்பர்மற் றிதனில்வை காரி
யினியதை சதம்பூ தாதியாங் காரந் தோன்றுமற் றிவற்றினைக் கருத்தாப்
புனையபி மானம் புற்கல னன்மாச் சீவன்மந் தாவெனப் புகல்வார்.

(இ-ள்.) அனைய நல் மக தத்துவத்தினை = அவ் வாறுய நல்ல மக தத்துவத்தை, புத்தி மகான் மதி பிரக்கினை ஆன்மா=புத்தி மகான் மதி பிரக்கினை ஆன்மா வெனவும், வனை தரும் காதி மேதை ஈச்சுரன் என்று உரைப்பர் = சிறப்புடைய காதி மேதை ஈச்சுரன் என்றுஞ் சொல்வார்கள், இதனில்=இம்மக தத்துவத்தி னின்றும், வைகாரி இனிய தைசதம் பூதாதி ஆங்காரம் தோன்றும் = வைகாரி காங்காரம் தைசதாங்காரம் பூதாதி யாங்காரம் என்பன தோன்றும், இவற்றினை=இம்மூவித அகங்காரங்களையும், கருத்தா= கருத்தா வெனவும், புனை அபிமானம் = அழகிய அபிமான மெனவும், புற்கலன் ஆன்மா சீவன் மந்தா என புகல்வார் = புற்கலன் ஆன்மா சீவன் மந்தா வெனவும் (அறிவுடையோர்) சொல்வார்கள்.

என்று-என என்பவற்றின்கண் எச்ச உம்மைகள் தொக்கு நின்றன. பிரகிருதிக்கண் இராசத குணதிக்கமாய்த் தோன்றுவது வைகாரிக அகங்காரம். தாமத குணதிக்கமாய்த் தோன்றுவது பூதாதி அகங்காரம். சத்துவ குணதிக்கமாய்த் தோன்றுவது தைசத அகங்காரம் ஆகலின் "இனிய தைசதம்" என அடைமொழி புணர்த்தி யோதப்பட்டது. (அ)

உரைத்தவாங் கார மூன்றினும் விளங்கு பஞ்சதன் மாத்திரை யோங்கி
நிரைத்திடும் பஞ்ச பூதமிந் தியங்க ணிகழ்த்துமிந் தியத்தினுக் கியைய [தாற்
வரைத்ததெய் வதங்க டோன்றுமவ் வியத்தந் தனின்மனந் தோன்றுமம் மனத்
திருத்தகு கருத்தா யானென தென்னும் விகாரத்திற் சேர்குவ னன்றே.

(இ-ள்.) உரைத்த ஆங்காரம் மூன்றினும் = சொல்லப்பட்ட மூவகை யாங்காரங் களி னின்றும், விளங்கு பஞ்ச தன் மாத்திரை = பிரகாசிக்கின்ற ஐந்து தன்மாத்திரைகளும், ஓங்கி நிரைத்திடும் பஞ்ச பூதம் இந்தியங்கள் = வளர்ந்து வரிசையாக விருக்கும் பஞ்ச பூதங்களும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், நிகழ்த்தும் இந்தியத்தினுக்கு இயைய வரைத்த தெய்வதங்கள் தோன்றும் = சொல்லப்பட்ட இந்திரியங்களுக்கு முரிய அதிட்டான தேவதைகளுந் தோன்று நிற்கும், அவ்வியத்தம் தனில் மனம் தோன்றும் = அவ்வியத்தத்தி னின்றும் மனம் தோன்றும், அ மனத்தால் யான் எனது என்னும் விகாரத்தில் = அந்த மன தத்துவத்தினாலே யானென்றும் எனது என்றும் அபிமானிக்கின்ற விகார நிலைமையுடன், திரு தகு கருத்தா சேர்குவன் = சிறப்பின் மிக்க ஆன்மா வெளிப்படுவன். அன்று-ஏ அசைகள்.

தாமத அகங்காரமாகிய பூதாதியிற் பஞ்ச தன்மாத்திரைகள் தோன்றும். சத்த குண மொன்றுடையது சத்த தன்மாத்திரை. சத்த பரிச குண மிரண்டு முடையது பரிச

தன்மாத்திரை. சத்த பரிச ரூபகுண மூன்றுமுடையது ரூப தன்மாத்திரை. சத்த பரிச ரூப ரச குண நான்கு முடையது இரசதன்மாத்திரை. இந்நான்கோடு கந்த குணமு மொன்று சேர்ந்து ஐந்து முடையது கந்த தன்மாத்திரை. சாத்துவிகாங்காரமாகிய தைசதத்தி னின்றுஞ் சோத்திர முதலிய ஞான இந்திரியங்கள் தோன்றும். இராசத அகங்காரமாகிய வைகாரியி னின்றும் வாக்கு முதலிய கன்மேந்திரியங்கள் தோன்றும். சத்த முதலிய பஞ்சதன்மாத்திரைகளி னின்றும் ஐம்பூதங்களுந் தோன்றும். அப்பூதங்கள் சூக்குமம் ஆந்தரம் வாகியமென்று மூவகைபவாம். சூக்குமமாவது சூக்கும தேகத்திருந்து இந்திரியங்களுக்கு ஆதாரமாக நிற்பதாம். ஆந்தரமாவது தூலதேகத்தி லிருந்து சரீரத்தை வளர்த்து உள்ளிடங் கொடுத்தல் முதலிய தொழிலை யியற்றுவதாம். வாகியமாவது அண்ட புவன போக்கியப் பொருள்களுக்கு ஆதாரமாகி நின்று, இடங் கொடுத்தன் முதலிய தொழிலை யியற்றுவதாம். பஞ்சபூதம், இந்திரியங்கள் முதலிய வற்றிற்கு அதிட்டான தேவதைகளாவன—புருடன் - சோத்திரம் - வாக்கு-சத்தம்- ஆகாயம் இவற்றிற்கு ஈசானப்பிரமம் எனப் படுஞ் சதாசிவ மூர்த்தியும், பிரகிருதி-துவக்கு-பாணி பரிசம்-வாயு இவற்றிற்கு தற்புருடப் பிரமம் எனப்படும் மகேசுர மூர்த்தியும், அகங்காரம்-சட்சு-பாதம்-ரூபம்-அக்கினி யென்பவற்றிற்கு அகோரப் பிரமம் எனப்படும் உருத்திரரும், புத்தி - சிங்குவை-பாயுரு - இரசம்-அப்புஎன்பவற்றிற்கு வாமதேவப் பிரமமாகிய விட்டுணுவும், மனம்-ஆக்கிராணம்-உபத்தம்-கந்தம்-பூமி யென்பவற்றிற்கு சத்தியோசாதப் பிரமமாகிய பிரமாவுமாம். இம் மூர்த்திகள் அணுபட்சத்தா ரன்றிச் சம்பு பட்சத்த ரல்லர். இவற்றின் விரிவுகளை யெல்லாம் சைவபுராணம் கைலாய சங்கிதையினும், வாயுசங்கிதையினுங் காண்க. இவற்றின் தொழில்களாவன—புத்தி நிச்சயிக்கும். அகங்காரம் யான் எனதென்னும் அபிமானங்களை விளைக்கும். சித்தம் பொருளை விசாரித்தறியும். மனம் சங்கற்பஞ் செய்யும். சோத்திரம் கேட்டறியும். துவக்கு பரிசித்து அறியும். சட்சு பார்த்தறியும். சிங்குவை சுவைத்து அறியும். ஆக்கிராணம் மோந்தறியும். வாக்கு வசனிக்கும். பாதம் கமனஞ் செய்யும். பாணி ஈதலு மேற்றலுஞ் செய்யும். பாயு மல சலங்களைக் கழிக்கும். உபத்தம் ஆனந்திக்கும். ஆகாயம் இடங்கொடுக்கும். வாயு எவற்றையுஞ் சலித்துத் திரட்டும். தேயு சுட்டு ஒன்றுவிக்கும். அப்பு குளிர்ந்து நின்று பதஞ் செய்யும். பிருதிவி கடினமாகித் தரித்து நிற்கும்()

சொன்னவாங் கார மூன்றின்வை காரி துலங்குமிரா சதவாங் கார
மன்னதில் வருமிந் தியவதிட் டான தெய்வதந் தைசத மதனின்
மன்னுமிந் தியங்க டோன்றிடு மனமு ஞானத்துங் கருமத்தும் வழங்குந்
துன்னுபூ தாதி தன்னில்வான் முதலாம் பூதந்தன் மாத்திரை தோன்றும்.

(இ-ள்.) சொன்ன ஆங்காரம் மூன்றின் = சொல்லப்பட்ட அகங்காரம் மூன்றனுள், துலங்கும் ராசத ஆங்காரம் வைகாரி=விளங்காநின்ற இராசத குண அகங்காரம் வைகாரியாகும், அன்னதில் இந்திய அதிட்டான தெய்வதம் வரும்=அந்த வைகாரி தத்துவத்தினின்றும் (முற்கூறிய) சோத்திரிய முதலியவற்றின் அதிட்டான தேவர்கள் தோன்றுவார்கள், தைசதம் அதனின் = (சத்துவ அகங்காரமாகிய) தைசதத்தில், மன்னும் இந்தியங்கள் தோன்றிடும்=நிலைக்கின்ற இந்திரியங்கள் தோன்றா நிற்கும், துன்னு பூதாதி தன்னில்=நெருங்கிய (தாமத அகங்காரமாகிய) பூதாதியி னின்றும், வான் முதல் ஆம் பூதம் தன்மாத்திரை தோன்றும் = ஆகாய முதலிய பூதங்களுந் தன்மாத்திரைகளுந் தோன்றா நிற்கும், மனமும் ஞானத்தும் கருமத்தும் வழங்கும் = மனோதத்துவமும் ஞானேந்திரியங்களோடும் கன்மேந்திரியங்களோடுஞ் சேர்ந்து நிற்கும். (௧௦)

கோச்சகக் கலிப்பா.

விளம்பரிய பூதாதி யாங்காரம் விகாரமுறிற்
றுளங்கலறுஞ் சத்ததன்மாத் திரைதோன்று மாங்கதனிற்

களங்கமறு மாகாயந் தோன்றுமதன் குணங்கருதி
னளந்தறிய வரிதாகுஞ் சத்ததன்மாத் திரையாமால்.

(இ-ள்.) விளம்ப அரிய பூதாதி ஆங்காரம்=சொல்லற்கு அரிய பூதாதி யகங்காரமானது, விகாரம் உறில்=விகார மடைந்தால், துளங்கல் அறும் சத்த தன்மாத்திரை தோன்றும் = (அதினின்றும்) அசைதல் இல்லாத சத்தம் என்னும் விடயம் உற்பத்தியாகும், அதனில்=அவ்விடயத்தினின்றும், களங்கம் அறும் ஆகாயம் தோன்றும்=மாசில்லாத ஆகாயம் என்னும் பூதந் தோன்றும், அதன் குணம் கருதின்=அதனது குணத்தையாராயு மிடத்து, அளந்து அறிய அரிது ஆகும் சத்த தன்மாத்திரை ஆம்=அளவை யிட்டு அறிதற் கியலாத சத்தகுண மொன்றேயாம். ஆங்கு-ஆல் அசைகள்.

ஆகாயம் சூக்கும குணமாக ஐந்தனையு முடையதாயினும் அதன் முக்கிய குணம் சத்தமாம். "வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி." என்றுந் திருவாசகத்தி லருளப்பட்டன. விளம்ப-என்பதன்கண் அகரந் தொகுத்தல் விகாரம். (கக)

பனிவிசும்பு விகாரமுறிற் பரிசதன்மாத் திரைதோன்று
மனிலமத னிடைத்தோன்று மதன்குணமு மூன்றாகுந்
துனைவின்வளி விகாரமுறி னுருவதன்மாத் திரைதோன்றுங்
கனலதனிற் றோன்றுமதன் குணங்கருதி னுருவமாம்.

(இ-ள்.) பனி விசும்பு விகாரம் உறின்=குளிர்மையாகிய ஆகாயம் விகாரப்பட்டால், பரிச தன் மாத்திரை தோன்றும் = பரிச விடயம் பிறக்கும், அதனிடை அனிலம் தோன்றும் = அவ்விடயத்தி னின்றும் வாயு வென்னும் பூதம் பிறக்கும், அதன் குணம் ஊறும் ஆகும்=அதனது குணங்கள் சத்தத்துடன் பரிசமுமாகும், துனைவின் வளி விகாரம் உறின்=விரைந் தெழுகின்ற வாயுபூதம் விகார மடைந்தால், உருவ தன்மாத்திரை தோன்றும்=உருவ விடய முண்டாகும், அதனில்=அவ்வுருவ விடயத்தில், கனல் தோன்றும்=தேயு (அக்கினி) என்னும் பூத முண்டாகும், அதன் குணம் கருதின் உருவம் ஆம்=அப்பூதத்தின் குணத்தை யாராயு மிடத்து (சத்த பரிசங்களோடு) உருவமுமாகும்.

வாயுவுக்குச் சத்தகுண மிருப்பினும் முக்கிய குணம் பரிசமாம். "வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி" என்றருளியதனுனு மறிக. அக்கினிக்கு உருவகுணம் முக்கியம். ஸ்பரிசம் - ரூபம் என்னும் வடமொழிகள் பரிசம் உருவ மென்றாயின. (கஉ)

எய்துமழல் விகாரமுறி னிரததன்மாத் திரைதோன்று
மையபுன லதிற்றோன்று மதன்குணமு மிரதமாம்
பெய்புனலின் விகாரத்தாற் கந்ததன்மாத் திரைபிறக்கும்
வையமதிற் றோன்றுமதன் குணந்தெரிக்கின் மணமாகும்.

(இ-ள்.) எய்தும் அழல் விகாரம் உறின்=தோன்றிய தேயு பூதம் விகாரப் படுமாயின், இரத தன்மாத்திரை தோன்றும் = இரசவிடய முண்டாகும், அதில் = அவ்விரச விடயத்தினின்றும், ஐய புனல் தோன்றும்=அழகிய அப்பு (சலம்) என்னும் பூதம் பிறக்கும், அதன் குணம் இரதமும் ஆம்=அதனது குணம் (சத்த பரிச ரூபங்களுடன்) இரச குணமுமாகும், பெய் புனலின் விகாரத்தால் = சொரியப்படுகின்ற நீரின் விகாரப்பாட்டால், கந்த தன்மாத்திரை பிறக்கும்=கந்த விடயந் தோன்றும், அதில்=அவ்விடயத்தினின்றும், வையம் தோன்றும் = பிருதிவி பிறக்கும், அதன் குணம் தெரிக்கின் மணம் ஆகும்=அதனது குணத்தைச் சொல்லுங்கால் (நான்கனோடு) கந்த குணமு மாகும்.

"தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி-நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி-பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி" என்றருளிய தனுனு மறிக. பூத உற்பத்திக் கிரமத்தை "சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னுத்- தோற்றும்வான் வளிதீ நீர் மண்டொடக்கியே யொன்றுக் கொன்றங் - கேற்றமா மோசை யாதி யிருங்குண மிசைந்து நிற்கு-மாற்றவே விடயம் பூத மங்காங்கிபாவத் தாமே." என்னுஞ் சிவஞானசித்தியார்த் திருவிருத்தத்தானறிக. (கங)

ஒலியுடைத்தா மாகாய மூறுடைத்தாம் வளியதனைச்
சுலவுதலாற் றோன்றும்வளி யிருகுணமா மிருகுணத்தி
னுலவையுரு வமைந்தவழல் பொதிந்ததனு லொழிவரிதா
நிலவுமொரு மூன்றுகுணம் வெய்தாய நெருப்பினுக்கே.

(இ-ள்.) ஆகாயம் ஒலி உடைத்து = ஆகாயஞ் சத்தகுண மொன்றனை யுடையது, ஊறு உடைத்து ஆம் வளி அதனை சுலவலால் = பரிசகுணத்தினை யுடைய வாயுவைச் சுழற்றி நிற்றலால், தோன்றும் வளி இரு குணம் ஆம்=உண்டாய வாயு இரு குணங்களை யுடையதாகும், இரு குணத்தின் உலவை = இரு குணங்களை யுடைய வாயுவானது, உரு அமைந்த அழல் பொதிந்ததனுல் = உருவ குணத்தினை யுடைய அக்கினியைச் சூழ்ந்து கொண் டிருத்தலால், வெய்து ஆய நெருப்பினுக்கு = வெப்பமுள்ள அக்கினிக்கு, ஒழிவு அரிதா நிலவும் ஒரு மூன்று குணம் = நீங்குதற் கரியதாய் விளங்கும் மூன்று குணங்கள் உளவாம். (கசு)

முக்குணமா மழலிரச குணப்புனலை மூடியதான்
மிக்கபுனற் கொருநான்கு குணமேவு நான்குகுணத்
தொக்கபுனன் மணமுடைத்தாம் புவியதனைச் சூழ்தரலாற்
புக்ககுண மோரைந்து முரியவாம் புவியினுக்கே.

(இ-ள்.) முக்குணம் ஆம் அழல் = மூன்று குணங்களை யுடைய அக்கினி யானது, இரச குணம் புனலை மூடியது ஆல்=இரசகுணத்தினையுடைய அப்புவென்னும் பூதத்தைச் சுற்றினமையால், மிக்க புனல் கு = பெருந் தன்மையுள்ள அந்த நீருக்கு, ஒரு நான்கு குணம் மேவும்=நான்கு குணங்கள் பொருந்தா நிற்கும், நான்கு குணம் தொக்க புனல்= நான்கு குணங்கள் கூடப்பெற்ற நீரானது, மணம் உடைத்து ஆம் புவியதனை சூழ் தரலால் = கந்த குணத்தினை யுடைத்தாய பிருதிவியைச் சுற்றி நிற்றலால், புக்க குணம் ஓர் ஐந்தும்=அதனுல் வந்த ஐந்து குணங்களும், புவியினுக்கு உரிய ஆம்=பிருதிவிக்கு உரியவாகும். ஏ-ஆம்-அசை.

பூதங்கள் பஞ்சீகிருத பூதம், அபஞ்சீகிருத பூதம் என இருவகைப் படுதலின், ஈண்டுரைக்கப்பட்ட பூதங்கள் பஞ்சீகிருத பூதங்களாம். இதனை "உரைத்திடு பூதங்களோ ரொன்று தன்னி லோர்பாதி நான்கதாகி - விரித்திடு பூதங்க ளொருநான்கி னுளு மேவுமதைமெய்மை வேதர் — தெரித்திடு மாமுனிவர் பஞ்சீ கிருதமென விரித்தறிவார் செப்புவாரான்-முருக்கிதழ்வா யுமைபங்கன் றோன்னூலு மிவ்வகையே மொழியு மன்றே." என்னும் இலிங்கபுராணச் செய்யுளா னறிக. (கரு)

கருதரிய வவ்வியத்தத் தருளானுங் காண்வருசீர்ப்
புருடனுனுற் றிடலானும் பொருவரிய மகத்தாதி
மருவியிடும் விசேடாந்த மேமூமே வான்புனலி
னுருவமுறு குமிழிபோற் பிரமாண்ட மாயுதிக்கும்.

(இ-ள்.) கருத அரிய அவ்வியத்தர்து அருளானும் = நினைத்தற் கரிய மகேசுர மூர்த்தியின் திருவருளினாலும், சீர் காண் வரு புருடன் உஞற்றிடலானும் = சிறப்புக் காணப்பட்ட புருடதத்துவம் முயற்சித்து விகாரித்தலானும், பொரு அரிய மகத்து ஆதி மருவியிடும் விசேட அந்தம் = (உற்பவித்த) நிகரில்லாத மகத்து முதலாகப் பொருந்தி யுள்ள விசேடபூத மிறுதியாக நின்ற, ஏழுமே=ஏழுவகைத் தத்துவங்களுமே (சேர்ந்து) வான் புனலின் உருவம் உறு குமிழி போல் = பெரிய பிரவாக நீரில் வடிவுற்றுத் தோன் றும் நீர்க் குமிழியைப் போல, பிரம அண்டம் ஆய் உதிக்கும் = பிரமாண்ட மாகித் தோன்று நிற்கும்.

மகேசுர மூர்த்தியின் அருளாலும் புருடனது செய்கையானும் உற்பவித்து நின்ற எழுவகைத் தத்துவங்களுஞ் சேர்ந்து வெள்ளத்திற் றோன்றுங் குமிழிபோலப் பிரமாண்ட மாகித் தோன்றும் என்பதாம். மற்றை யண்டங்களை அளவிடுதல் கூடா தென்பதாம். அவைகளையும் இப்பிரமாண்டத்தையும் நோக்கு மிடத்துப் பெரிய பிரவாகத்தில் ஓர் குமிழிபோன்ற அளவின தென்றதாம். அண்டங்கள் அளவில்லை யென்பதனை "என் ணரிய வாருயிர்க ளண்டமு மிப்படி தானே - யெண்ணரிய வெனுமமல னியலெனின்மற் றேரியலி - னெண்ணியவ னளவிடுத லென்னையெனில் வினைவி தத்தாற் - பண்ணிடுவ னண்ட விதஞ் சிருட்டிதொறு மிப்படியால்." என்றதனு னறிக. விசேடம் என்றது நால் பூதங்களையாம். எழுவகைத் தத்துவங்க ளாவன—மகதத்துவம் - ஆங்காரம் - ஆகாயம் - வாயு-தேயு-அப்பு-பிருதிவி என்பனவாம். (கசு)

வடமேரு வுயர்கொப்பூழ்க் கொடியாக மற்றதனை
யடைவாகும் வரையனைத்தும் பையாக வாழிநீர்
புடைமேவி வருகருப்ப சலமாகப் பொருவின்மறை
நடையாவும் வகுத்தருளு நளினத்தோ னுதித்தனனால்.

(இ-ள்.) வட மேரு உயர் கொப்பூழ் கொடி ஆக=வடதிசைக்கணுள்ள மேருமலை யானது உயர்ந்த நாபிக் கமலத்தின் கொடியாகவும், அதனை அடைவு ஆகும் வரை அனைத் தும்=அந்த மேருமலையைச் சூழ்ந்திருக்கின்ற மலைகள் யாவும், பை ஆக=கருப்பாசயப்பை யாகவும், ஆழி நீர் புடை மேவி வரு கருப்ப சலம் ஆக=சமுத்திர சலங்கள் அந்தப் பையி னைச் சுற்றியுள்ள கருப்பசலமாகவும், பொரு இல் மறை நடை யாவும் வகுத்து அருளும்= ஒப்பில்லாத வேத விதிப்படியே யெல்லாவற்றையுஞ் சிருட்டிசெய்கின்ற, நளினத்தோன் உதித்தனன்=தாமரை யாசனனாகிய பிரமன் தோன்றினன்.

தாமரை மலர்போன்ற பூமியின் மத்தியிற் பொகுட்டேபோல நிற்றலின் மேரு மலையினை நாபிக் கொடியாக உருவகஞ் செய்யப்பட்டது. "விண்ணுயர் சம்புத்தீவி னடு நின்ற மேருவரை செங்கமலப் பொகுட்டேப் போல—நண்ணியிடும்" என்றதனுலறிக. அத னைச் சூழ்ந்துள்ள மலைகளாவன—மந்தரம்-கந்தமாதனம்-நீலம்-சுபார்சுவம்-மாலியவான்- நிசதம்-ஏமகூடம்—இமயம் என்னும் எட்டுமலைகளாம். ஆழிகளாவன—உப்பு-பால் - தயிர்- நெய்-கருப்பஞ்சாறு-மது-சுத்தசலம் என்னுஞ் சத்த சமுத்திரங்களாம். நளினத்தோன் என்றமையால் திருமாலது நாபிக் கமலத்தினின்றுந் தோன்றினமை பெறப்படும். (கஎ)

முருகவிழுஞ் செழுங்கமலப் பொகுட்டுறையு முன்னவனே
யுருவுடையோர் யாவரினு முந்தியநல் லுருவுடையோன்
புருடனிர ணியகருப்பன் மறைக்கிழவன் புவனத்துக்
கொருமுதல்வன் கஞ்சனென வவனையே யுரைத்திடுவார்.

(இ-ள்.) முருகு அவிழும் செழு கமலம் பொகுட்டு உறையும் = வாசனை பரந்த செழுமையாகிய தாமரைப்பூம் பொகுட்டின்கண் இருக்கும், முன்னவனே = முதன்மையை யுடைய பிரமனே, உரு உடையோர் யாவரினும் = சரீர மெடுத்துப் பிறக்கின்ற சீவர்கள் யாவரினும், முந்திய நல் உரு உடையோன் = மேலாகிய நல்ல வடிவினை யுடையவனுவன், அவனையே = அப்பிரமனையே, புருடன் இரணியகருப்பன் = புருடனெனவும் இரணியகருப்பன் எனவும், மறைக்கிழவன் = வேத முதல்வனெனவும், புவனத்துக்கு ஒரு முதல்வன் = மன்பொதுத் தந்தை யெனவும், கஞ்சன் என = கஞ்சன்எனவும், உரைத்திடுவார் = மேலோர் கூறுவர்.

புருடர்களுக்கு மேலானவன் ஆகலிற் புருடன். பொன்மயமான கருப்பமுடையவன், கருப்பத்திற் பொன்மயமான பூமியை யுடையவன் ஆகலின் இரணிய கருப்பன். பூமி பொன்னிற மென்பதனை "வன்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமம் வன்னம்" என்று மெய்கண்டசாத்திரங் கூறியதனுற் றெளிக. மறை கிழவன் = வேதங்களுக்கு முதல்வன். உருத்திரமூர்த்தியானவர் பிரமனைப் படைத்துப் பதினெட்டு வித்தைகளையும் உபதேசித்தனர். பிரமன் தனக்கு உபதேசித்த முறையே கூறுதல் அரிதென்று விட்டுணுமூர்த்தியைச் சுருங்கச் சொல்லென் றுபதேசிக்க, அவர் வியாதனு யவதரித்து அங்ஙனஞ் சொல்லுவார் என்று புராணங்கள் கூறலால், வேதமுதல்வன் என்றதாம். தாமரையிற் பிறந்தவன் ஆகலிற் கஞ்சன். (கஅ)

தோற்றியிடு மண்டத்தின் பதின்மடங்கு புனல்சூழு
மேற்றபுனல் பதின்மடங்காங் கெரிசூழு மவ்வெரியைக்
காற்றதுவும் பதின்மடஙகு சூழ்ந்திடுமக் காற்றதனைப்
போற்றரிய தனிவிசும்பு சூழ்போகப் புதைத்திடுமால்.

(இ-ள்.) தோற்றி இடும் அண்டத்தின் = இங்ஙனந் தோன்றிய பிருதிவி யண்டத்தைச் சுற்றி, பதின்மடங்கு புனல் சூழும் = பத்து மடங்கு அளவினதாகச் சலம் நிற்கும், ஆங்கு = அதுபோல, ஏற்ற புனல் = மிகுந்த அப்புவைச் சுற்றி, பதின் மடங்கு எரி சூழும் = பத்துமடங்கு அதிகமாகத் தேயு மூடி நிற்கும், அ எரியை = அந்த அக்கினியை, பதின் மடங்கு காற்றதுவும் சூழ்ந்திடும் = அதனின்றும் பத்துமடங்கு அதிகமுள்ள வாயு சூழ்ந்து நிற்கும், அ காற்றதனை = அந்த வாயுவை, போற்ற அரிய பனி விசும்பு = சொல்லுதற் கியலாத குளிர்ச்சியினை யுடைய ஆகாய மானது, சூழ் போக புதைத்திடும் = சுற்றுப் பக்கங்களெவற்றினுஞ் சூழ்ந்து மூடி நிற்கும்.

பூமியை அதனி னின்றும் பதின்மடக்கு அளவுள்ள நீர்சுற்றி நிற்கும். அந்நீரை யதனினும் பதின்மடங்கு அளவுள்ள அக்கினியும், அதனைப் பத்துமடங்கு மேலாயுள்ள காற்றுஞ் சூழ்ந்து நிற்கும். அக்காற்றை யாகாயஞ் சூழ்ந்து நிற்கும் என்பதாம். மடக்கு = பங்கு. பத்து மடங்கு என்பன "நிறையு மளவும் வருஉங் காலையுங் - குறையா தாகு மின்னென் சாரியை." என்னுந் தொல்காப்பிய விதிப்படி பதின்மடங்கு எனப் புணர்ந்தது()

அகல்விசும்பு புதைக்குமுய ராங்கார மாங்கதனைப்
புகலுமக தத்துவமே புதைக்குமக தத்துவத்தைத்
துகளறுநல் லவ்வியத்தஞ் சூழ்போது மாங்கதனி
னிகலேனுடன் விருப்பெறிந்த சிவசித்த ரினிதுறைவார்.

(இ-ள்) அகல் விசும்பு = அகன்ற ஆகாயத்தை, உயர் ஆங்காரம் புதைக்கும் = மேலாய அகங்கார தத்துவங்கள் மூடாநிற்கும், ஆங்கு அதனை = அங்ஙனமுள்ள அகங்

காரத்தை, புகலும் மகதத்துவம் புதைக்கும்=சொல்லப்பட்ட மகதத்துவம் மூடி நிற்கும், மகதத்துவத்தை=அந்த மகதத்துவத்தினை, துகள் அறு நல் அவ்வியத்தம் சூழ்போதும்=குற்ற மற்ற நன்மை யாகிய பிரகிருதி மூடிநிற்கும், ஆங்கு அதனில்=அங்ஙனமுள்ள அப்பிரகிருதி தத்துவத்தின்கண், இகலின் உடன் விருப்பு எறிந்த சிவசித்தர் = விருப்போடு வெறுப்பையுங் கடிந்து நீக்கிய சிவஞான சாதன முள்ளவர்கள், இனிது உறைவார்=மகிழ்வோடும் வீற்றிருப்பர்கள். தத்துவமே • என்றதன் கண் ஏகாரம் பிரிநிலைப் பொருளின்கண் வந்தது. (உ0)

எவ்வுயிர்க்கும் வித்தாகு மீசனே மகேச்சுரனுஞ்
செவ்விதரு மவனிரண்டா முருவண்டஞ் செறிந்ததனிற்
றிவ்வியத்தின் முதலுதித்த தேவன்மூன் றாமுருவ
மவ்விறைநான் முகமுறுத லாங்கவனன் காமுருவம்.

(இ-ள்.) எ உயிர்க்கும் வித்து ஆகும் ஈசன் = சராசர தோற்றங்கள் எவற்றினுக்கும் முதல்வராய் நிற்குங் கடவுள், மகேச்சுரன் ஏ ஆம் = மகேசுர மூர்த்தியே யாகும், செவ்வி தரும் அவன் இரண்டாம் உருவம்=நன்மையைக் கொடுக்கின்ற அவரது இரண்டாவது உருவம், அண்டம்=பிரமஅண்டமாகும், மூன்று ஆம் உருவம்=மூன்றாவது வடிவம், அதனில் செறிந்து திவ்வியத்தின் முதல் உதித்த தேவன் = அவ்வண்டத்திற் கருப்பமுற்றுத் திவ்விய மகிமையோடும் (உயிர்களுள்) முதலாவதாகத் தோன்றிய பிரமனாகும், ஆங்கு அவன் நான்கு ஆம் உருவம்=அந்த மகேசுரரின் நான்காவது வடிவம், அ இறை நால் முகம் உறுதல்=அப்பிரமதேவன் நான்குமுக முடையவனாதலாம்.

மகேசுரமூர்த்தியே விசுவகாரணரும், விசுவநாதரும், விசுவசேவியருமாகும். அவரது இரண்டாவது வடிவம் பிரமாண்டம். மூன்றாவது வடிவம் பிரமன். நான்காவது வடிவம் பிரமன் நான்குமுகங் கொண்டமை என்பதாம்.

பிரமன் உதிக்கப்பெற்றமையால் இவ் வண்டம் பிரம அண்ட மெனப்படும். அண்டம்=தத்துவ வுருண்டை. அதாவது முட்டை போன்றுள்ளது. திவ்ய-என்பது தமிழில் திவ்விய என வரும். திவ்=சுவர்க்கத்தில், ய = பிறப்பது; அதனால், தெய்வத்தன்மையையுடையது எனப் பொருள் கொள்ப. "கூன்முகத் திங்க ணெற்றிக் கோதையர் குழுவுக் கெல்லாந்-தான்முத விறைவியாகத் தன்கையாற் சமைக்கப் பட்ட-மான்முக நோக்கி முன்னோர் மலரயன் மையலெய்தி - நான்முக மானு னென்ப நாமுண ராத தன்றே" என்பதனால் திலோத்தமை யென்னும் பெண்ணைப் படைத்து அவள் மீது மையல்கொண்ட காரணத்தானே ஓர் தலை யிழந்து நான்கு முகமானான் என்று கந்தபுராணங் கழறலானும், மேருவரைக்க ணிருந்த பிரமதேவரைச் சனகர் முதலிய முனிவர்கள் நோக்கி ஐயனே! உலகம் யாவுக்குந் தலைவர் யாரென்று வினவ, அவர் நாமே பிரமம் என்று பேசி முடிக்க விட்டுணு தோன்றி, என்வயிற் பிறந்த குழவி நீயே யாகப் பிரமமாதல் யாங்ஙன படுக்கும் என்று பேச, இருவர் மொழியையுங் கேட்ட இருக்கு முதலிய நான்கு வேதங் களும், குடிலையும் வந்து துரியப்பொருள் பரசிவமே எனச் சாட்சி கூறவும், அவைகளைக் கேளாதவனாகி மருண்டானாக,சிவபிரான் அநந்தகோடிசூரிய ரொருங்கு கூடினாற்போன்ற பிரகாசத்தினை யுடைய தமது திருவடியைக் காட்டியருளவும் பின்னரும் இகழ்ந்தானாகலின், வைரவக்கடவுள் இகழ்ந்த உச்சித் தலையைக் கிள்ளியதனால் நான்குமுக மானானென்று இப்புராணத்து வைரவன்பலியிரந்தஅந்தியாயத்திற் கூறலானும், இது முரணன்றோவெனின், அன்றென்க. என்னை? ஆண்டுக் கூறப்பட்ட பிரமர்கள் வேறுயுள்ளார் என்றுணரப்படும்."நூறுகோடி பிரமர்க ளொழிந்தன ராறுகோடிநா ராயணரங்ஙனே"என்

றருளிய திருவாக்கானும் "மாயோன் பகலி லோர்மறையோன் மாய்வான் மாயோன் மாய்ந்திடுவேன்" என்றமையானும் அறிக. நான்கு வேதமுதலிய பதினெண்வித்தைகளையும் வெளிப்படுத்து முகங்களின் பெருமைகுறித்து "நான்காமுருவம்" என்று கூறியது போலும். (உக)

இரசதத்தின் குணமெய்தி நான்முகனா யுலகீனும்
பரவுற்ற சாத்துவிகப் பண்பின்மா லாயளிக்கு
முரைபெற்ற தமோகுணத்தா லுருத்திரனாய்த் துடைத்தருளு
மருவுற்றும் விச்சையினின் மருவாமன் மகேச்சுரனே.

(இ-ள்.) மகேச்சுரனே = மகேசுர மூர்த்தியே, விச்சையினில் மருவுற்றும் = மாயைக்கட் பொருந்திநின்றும், மருவாமல் - பொருந்தாம னின்று, இரசதத்தின் குணம் எய்தி = இராசதகுணப் பிரதானராய், நான்முகன் ஆய் உலகு ஈனும் = நான்குமுகங்களையுடைய பிரமனாகிச் சராசரங்களைப் படைத்தருள்வார், பரவு உற்ற சாத்து விகம் பண்பின் மால் ஆய் அளிக்கும் = துதித்தலையுடைய சாத்துவிக குணங்கொண்டு விட்டுணுவாகிக் காத்தருளுவர், உரை பெற்ற தமோகுணத்தால் = சொல்லப்படுகின்ற தாமத குண முற்றதனால், உருத்திரன் ஆய் துடைத்து அருளும் = உருத்திர மூர்த்தியாகி அழித்தருளுவர்.

இராசதம் – இரசதம் எனக் குறுக்கல் விகாரம் பெற்று நின்றது. ஏகாரந் தேற்றப் பொருட்டு. சாத்துவிகத்தில் சாத்துவிகம் திருமால்; சாத்துவிகத்தில் இராசதம் பிரமன்; சாத்துவிகத்திற் றாமதம் உருத்திரன் எனக் கொள்க. (உஉ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதியி லுதித்த வாற்றா லாதியம் பரமன் மிக்க
மூதுணர் வுடைமை தன்னான் முதுக்குறை வினனெஞ் ஞான்றுஞ்
சாதலும் பிறப்புந் தோயாத் தன்மையா லயன்மற் றூர்க்கு
மேதகு விபுவா மாற்றால் விண்டுவென் றுரைப்பர் மாதோ.

(இ-ள்.) ஆதியில் உதித்த ஆறால் = (மகேசுரர்) உலகிற்கு முதன்மையாகத் தோன்றிய காரணத்தினால், அம் ஆதி பரமன் = அழகிய ஆதிபரமனெனப் பெயர்பெறுவர், மிக்க முது உணர்வு உடைமை தன்னால் - மேலாய பேரறி வுடையரா யிருத்தலினால், முதுக்குறை வினன் – சருவஞ்ஞராம், எ ஞான்றும் சாதலும் பிறப்பும் தோயாத தன்மையால் = எக்காலத்தும் பிறப்பு இறப்புகளிற் பொருந்தாத காரணத்தினால், அயன் – அயன் எனப்படுவர், யார்க்கும் மேதகு விபு ஆம் ஆறால் = எவ்வெவர்களுக்கும் மேற்பட்ட தகுதியாகிய வியாபக முடைமையால், விண்டு என்று உரைப்பார் = விண்டு என்றும் மேலோர் கூறுவர்.

மகேசுரர், ஆதிப்பரமன், முதுக்குறைவினன் (சருவஞ்ஞன்) அயன், விபு எனப் பெயர் பெறுவர் என்க. அயன் - அ = இன்மை, ஜம் = பிறத்தல், பிறத்த லில்லாதவன் என்றலால் இறப்பில்லாதவன் என்பதும் பெற்றாம். என்னை? "பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்." என்று **திருவெண்காட்டடிகள்** அருளியதனா னென்க. விபு என்றதற்குத் தனக்கு நிகரில்லாதிருக்கும் பிரபுத்துவமுடையவன் என வுரைத்தலு மொன்று. மாது ஓ - அசைகள். முது உணர்வு என்றது மூதுணர்வென நீண்டுநின்றது. (உங)

நாரத்தி லமர்ந்த வாற்றா னாரண னிமையோர் தம்மிற்
சிறுந்த மகத்தா மாற்றான் மகேச்சுரன் சேர்ந்தோர் மாயை
வேர்முற்று மரித்த வாற்றா னிவன்வினை யாட்ட தன்றோ
நீர்முற்று மண்ட மீன்று காத்தவை நீக்கும் பண்பே.

(இ-ள்.) நாரத்தில் அமர்ந்த ஆறால்=கற்பாந்த பிரளய சலத்தின் கண்ணே சயனித்திருக்குங் காரணத்தினால், நாரணன்=நாரணனும், இமையோர் தம்மில் சீர் உற்று=தேவர்கள் எல்லாரினுஞ் சிறப்பைக் கொண்டு, மகத்து ஆம் ஆறால்=மகதத்துவத்தை உண்டாக்குங் காரணத்தினால், மகேச்சுரன்=மகேச்சுரன் எனப்படுவோர், சேர்ந்தோர் மாயைவேர் முற்றும் அரித்த ஆறால்=தம்மை யடைந்தவர்களது மாயாபாச மூலத்தை முழுவதாக அரிக்கின்ற காரணத்தினால், அரன்=அரன் எனப் படுவோர், நீர் முற்றும் அண்டம்=சமுத்திரத்தாற் சூழப்பட்ட அண்டங்களை, ஈன்று காத்து அவை நீக்கும் பண்பு=சிருட்டித்துக் காத்து அவைகளைப் பின்னர்ச் சங்கரிக்குந் தன்மையாவும், இவன் விளையாட்டு அன்றோ=இம்மகேசுரக்கடவுளது திருவிளையாடல் அல்லவோ.

நரசப்த வாச்சியனான பரமான்மாவினிடத்தினின்றுஞ் சனித்த உதகங்கள் நாரங்கள் எனப்படுமென்றும், நாரம் என்றதனை உபலக்கண மாகக் கொண்டு மற்றைய சிருட்டிப் பொருள்களாய தத்துவங்களையும் இடமாக வுடையவன் என்றும் உரைத்தலுமொன்று. இமையோர் என்றது, நன்மை சிறிதுமில்லாரை நல்கூர்ந்தார் எனவும், வீட்டிலொன்று மில்லாரை இலம்பாட்டார் எனவும், மதி யீனரை முழுமதியார் எனவுங் கூறினாற்போல, இமைத்தல் செய்யாத தேவர்களை இமையோர் எனக் கூறியதாம். இதற்கு எதிர்மறை யிலக்கணத்தாற் பொருள்கொள்க. அரித்தல்=அழித்தல். முற்றுதல்=சூழ்தல்.

இன்னணம் பகுதித் தோற்றஞ் சுருக்கிமற் றியம்பல் செய்தேன்
மன்னிய புத்தி முன்னா மலரயன் வகுத்த யாவு
நன்னயத் துரைப்ப னென்னா நாகிள வண்டு பாடுங்
கன்னியந் துளவ மாலைக் கார்முகில் வண்ணன் சொல்வான்.

(இ-ள்.) இன்னணம் பகுதி தோற்றம்=இவ்வண்ணம் பிரகிருதித் தோற்றத்தை, சுருக்கி இயம்பல் செய்தேன்=தொகுத்துச் சொன்னேன், மன்னிய புத்தி முன்னா=நிலைபெற்ற புத்தி தத்துவத்தை முதலாகக் கொண்டு, மலர் அயன் வகுத்த யாவும்=செந்தாமரை மலரின்மே லிருக்கும் பிரமன் சிருட்டித்தவைக ளெல்லாவற்றையும், நல் நயத்து உரைப்பன் என்னா=(கேட்போர்க்கு) நல்ல விருப்ப முண்டாகும்படி சொல்வேன் என்று, நாகு இள வண்டு பாடும்=மிக இளமை பொருந்திய வண்டுகள் (தேனுண்டு) ஒலியைச் செய்கின்ற, கன்னி அம் துளவம் மாலை=புதுமையாகிய அழகிய துழாய்மாலையையணிந்த, கார் முகில் வண்ணன் சொல்வான் = கரிய மேகம்போன்ற திருமால் கூறுவாராயினர் என்க.

மற்று-அசைநிலை. உரைப்பன் என்பதைத் தன்மையிடத்திற் படர்க்கை வந்த வழுவமைதி யென்பர் தொன்னூலார். ஆசிரியர் **தொல்காப்பியனார்** "கடதறவென்னு - மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ - டென்னே னல்லென வரூஉ மேழுந்-தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே." எனத் தனித் தன்மைவினைமுற்றுக்கு அன் விகுதி கூறாமையானும், பிற்காலத்துள்ளார் "குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ – டல்லன் னென்னே னாகு மீற்ற - விருதிணை முக்கூற் றொருமைத் தன்மை." என அன் விகுதி கூறினமையானும், ஆசிரியன் "புதியன புகுதலும் - வழுவல கால வகையி னானே" என்றபடி கூறினன் என்க. நாகிள வண்டு என்பன, துறுகன் மீமிசை என்றாற் போல ஒருபொருள் குறித்த இருசொற்களாம். "நாகிள வரிவண் டுண்டு நறவுகொட் புளிக்குங் கைதாய்" என்றான் நைடதத்தும்.

பிரகிருதித் தோற்றமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—களடு.

ஐந்தாவது

பிரமாயு ளுரைத்த அத்தியாயம்.

அஃதாவது பிரமசிருட்டி கூற வந்த கூர்ம மூர்த்தியானவர் அப்பிரமனது வயசி னளவைக் கூறிய பாகமாம்.என்னை?அந்தப் பிரமனாற் சிருட்டிக்கப் படுகின்ற தேவர் முதற் றுவரமீறுவுள்ள எழுவகைப்பட்ட உயிர் வர்க்கங்களுக்கும் விதிக்கப்பட்ட ஆயுட்களினின் றும் அவற்கு மேலாக விருத்தல் வேண்டு மாகலின் அதனை முற்கூறினார் என்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தாதளவி மணிவண்டு விளையாடுந் தாமரைமென் றவிசின் மேலோற்
கோதுறுகா லங்கணிப்பி னளப்பினாள் கழிந்திடினு முரைக்க லாகா
தாதலினா லிங்கதனை மிகச்சுருக்கி யுரைப்பனவற் கறைந்த கால
மூதறிவி னோரெவரு மோரிரண்டு பரார்த்தமென மொழிவ ரன்றே.

(இ-ள்.) மணி வண்டு = அழகிய வண்டுகளானவை, தாது அளவி விளையாடும் தாமரை மென் தவிசின் மேலோன் கு=மகரந்தத்திற் றோய்ந்து விளையாடுகின்ற தாமரை மலராகிய மெல்லிய ஆசனத்தின்க ணிருக்கின்ற (உயிர்களுக்குள்) மேலோனாகிய பிர மற்கு, ஓது உறு காலம் கணிப்பின் = வயசாகச் சொல்லப்பட்ட காலத்தைக் கணிக்கு மிடத்து, அளப்பு இல் நாள் கழிந்திடினும் உரைக்கல் ஆகாது=எண்ணில்லாத தினங்கள் சென்றாலுஞ் சொல்லுதல் இயலாது, ஆதலினால்=அக்காரணத்தினால், இங்கு அதனை மிக சுருக்கி உரைப்பன்=இவ்விடத்து அதனை மிகவுஞ் சங்கிரகித்துச் சொல்லுவேன், அவன் கு அறைந்த காலம்=அப்பிரமனுக்கு ஆயுளாகச் சொல்லப்பட்ட காலமாவது, முது அறி வினோர் எவரும்=பேரறிவினை யுடையார் யாவரும், ஓர் இரண்டு பரார்த்தம் என மொழி வர்=இரண்டு பரார்த்தம் என்று சொல்வார்கள், என்க.

பிரமனது ஆயுளைக் கணித்துச் சொல்லப் புகின் முடியாது. ஆகலால், அதனை மிக வுஞ் சுருக்கி யுரைப்பேன் என்று கூர்மமூர்த்தி கூறினார் என்க. பிரமனது ஆயுளறிதற்கு முன்னர் அவனாற் சிருட்டிக்கப் படுகின்ற தேவர் முதற் றுவர மீறுவுள்ள உயிர்வர்க்கங் களின ஆயுட்களை யறிதன் முறையா மாகலின், ஈண்டுத் தேவர் ஆயுள் தெரிவிக்கப் பட் டமையால் அதனை விடுத்து,மொழியாதுவிட்ட மற்றவற்றினாயுட்களை மொழிந்தபொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் தொகுத்து, ஆகமம், மிருதி முதலிய நூல்களிற் கூறியாங்கு கூறுவாம். அவையாவன:—

சராயுச தோற்றங்களுக்கு வயது நூறும். அண்டசத்திற் பிறப்பவற்றிற்கு முப் பது. உற்பிச்சத்திற்கு ஐந்து மாதம். சுவேதச தோற்றங்களுக்கு ஒருமாதம். மனிதர்க்கு நூறு. சிங்கம், யாளி, யானை, காட்டுப்பன்றி, காட்டுப்பசு இவைகட்கும் நூறுவருடம். குரங்குகளுக்குங் கரடிகளுக்கும் முந்நூறு வருடம். புலிகளுக்கு அறுபத்து நான்கு வரு டம். நாய்களுக்கு முப்பது வருடம். ஓடகங்களுக்கு எழுபத்திரண்டு வருடம். பசு, நாட்டுப்பன்றி, நரி, பூனைகளுக்கு முப்பது வருடம். மான்களுக்கு இருபது வருடம். எரு மைகளுக்கு நாற்பது வருடம். குதிரைகளுக்கு முப்பத்திரண்டு வருடம். ஆடுகளுக்குப் பதினெட்டு. சவரி மிருகங்களுக்கு இருபத்து நான்கு வருடம். கழுதைகளுக்கு இருபத் தைந்து வருடம். முயல்களுக்குப் டன்னிரண்டு வருடம். சருடப் பறவைக்கு முப்பத்

திரண்டு வருடம். மயில்களுக்குப் பதினெட்டு வருடம். குயில்களுக்கு எட்டு வருடம். அன்னங்களுக்கு ஐந்நூறு வருடம். காக்கைகளுக்கு ஆயிரம் வருடம். கோட்டான்களுக்கு முந்நூறு வருடம். ஆந்தைகளுக்கும், அலகு நீண்டுள்ள நாரைகளுக்கும் பன்னிரண்டு வருடம். கிளிக்குப் பதினைந்து வருடம். நாகணவாய்க்கு எட்டு வருடம். கவுதாரிகளுக்குப் பத்து வருடம். செம்பகம் என்னும் பறவைக்கும், சுழலாரிற்கும் பருந்துகளுக்கும் எட்டுவருடம். கழுகுகளுக்கு மூவாயிரம் வருடம். சிலவிடத்தில் ஐந்நூறு வருடம் என்றுஞ் சொல்லப் பட்டிருக்கின்றது. வல்லூறுக்குப் பதினாறு வருடம். கோழிகளுக்குப் பன்னிரண்டு வருடம். புறாக்களுக்குப் பத்து வருடம். கொக்குகளுக்கு எட்டு வருடம். குருவிகளுக்கு ஐந்து வருடம். வண்டுகளுக்கு ஒன்று. திமிங்கில முதலிய பெரிய மீன்களுக்கு ஆயிரம். சிற்சில மீன்களுக்கு முந்நூறு. முதலைகளுக்கு எண்பது. ஆமைகளுக்குப் பத்து. கிரிகளுக்கு இருபது. அணிற்பிள்ளைக்கு இருபது. நீரில் வாழ்வனவாகிய சிலவற்றிற்கு முந்நூறு. உடும்புகளுக்கு நூறு. ஓந்திகளுககு ஆறு. எலிகளுக்கு ஐந்து. பல்லிகளுக்கு மூன்று. தேள்களுக்கு ஒன்று. எறும்புகளுக்கு ஒன்று. மோட்டுப் பூச்சிகளுக்கு ஆறு மாதம். கொசுகுகளுக்கு ஐந்து மாதம். ஈக்களுக்கு மூன்று வருடம். பேன்களுக்கு ஒரு மாதம். கிருமிகளுக்கு ஐந்து நாள். தேவதாரம் - சந்தனம் - குங்குமம்-வேங்கை-அகில்-தென்னை யென்னும் இம்மரங்களுக்கு நூற்றிருபது வருடம். அரசு - அத்தி-ஆல் - புளி-புன்னை - இத்தி-கருங்காலி-கடு-நாவல்-பனை-வாகை-இலந்தை-பாலை - தேக்கு இவைகட்கு நூறு வருடம். குருந்து-நெல்லி - கடம்பு - அசோகு - மருது-மா-இருப்பை-விளா இவைகட்கு எண்பது வருடம். வில்வம் - புன்கு - பலா - கோங்கு-மகிழ்-பாதிரி-ஆத்தி-கமுகு இருவாட்சி யிவைகளுக்கு எழுபத் தைந்து வருடம். அழிஞ்சில்-இலவம்-ஈஞ்சு என்பவற்றிற்கு நாற்பது வருடம். மாதுளை-நாரத்தை - கொய்யா - எலுமிச்சை யென்பவற்றிற்கு இருபது வருடம். பனிநீர்மரம்-கொன்றை-முருங்கை - மூங்கில் என்பவற்றிற்கு முப்பது வருடம். தாழை-சண்பகம்-வெட்சி-மந்தாரை இவற்றிற்கு இருபத்தைந்து வருடம். வாழைகளுக்கு மூன்று வருடம். கரும்புகளுக்கு ஒருவருடம். தும்பை முதலிய செடிகளுக்கு ஏழு வருடம். முல்லை முதலிய கொடிகளுக்கு ஐந்து வருடம். அறுகு முதலிய புற்களுக்கு மூன்று வருடம். நெரிஞ்சி முதலிய பூண்டுகளுக்கு ஒருவருடம். இங்ஙனம் நூல்களிலே பேசப்பட்டன வாயினும் காலத்தானும், இடத்தானும், மிர்த்தியுவினாலும் பேதப்படுமென்க. (க)

உரைத்தவிரு பரார்த்தமுமே மலரயனுக் காயுளள வுரைக்குங் காலம்
விரைக்கமலத் தவன்மானத் தாங்கவையும் விளம்பியவாண் டொருநூ றென்ப
வரைத்தபர மிகுதிதனி னொருபாதி பரார்த்தமென வகுப்ப ரீண்டு
நிரைத்துவரு காலங்கள் பிறழாம லுரைப்பனென நிகழ்த்த லுற்றான்.

(இ-ள்.) மலர் அயனுக்கு=தாமரை மலர் மேலிருக்கும் பிரமனுக்கு, உரைக்கும் ஆயுள் அளவு காலம்=வரையறுக்கப்பட்ட ஆயுளாக அளவுசெய்யுங் காலமாவது, உரைத்த இரு பரார்த்தமும் ஏ=முற்கூறிய இரண்டு பரார்த்த காலமேயாம், அவையும் = அவ்விரு பரார்த்தமும், விரை கமலத்து அவன் மானத்து=வாசனை பொருந்திய தாமரைமலராசனனாகிய அப்பிரமானது அளவையின்படி, விளம்பிய ஆண்டு ஒரு நூறு என்ப = கணிக்கப்பட்ட வருடம் நூறென்று கூறுவர், வரைத்த பரம் மிகுதி தன்னின் = அளவு செய்யப்பட்ட பரம் என்னும் பெருங்காலத்தில், ஒரு பாதி பரார்த்தம் என வகுப்பர்=ஒருபங்கினைப் பரார்த்த மென்று உரைப்பார்கள், ஈண்டு = இப்பொழுது, நிரைத்து வரும் காலங்கள் பிறழாமல் உரைப்பன் என=வரிசையாகி நிகழும் அக்காலப் பிரிவுகளை முறை தவறாமற் சொல்வே னென்று, நிகழ்த்தல் உற்றான்=சொல்லத் தொடங்கினர்.

பரார்த்தம்—பர அர்த்தம் எனப் பிரிக்க. பரம்=பிரமனது ஆயுண் முடிவுகாலத்தின்பெயர். அர்த்தம்=பாதி. பாதியாயுள்ள காலம் பரார்த்தம். இரண்டு பரார்த்த காலஞ் சேர்ந்தால் அவனுயுள் முடிவாகும். ஒரு பரார்த்த கால்மாவது ஐம்பது வயசு. (உ)

ஈரொன்பான்முறையிமைத்தலொருகாட்டைகாட்டைமுப்பானியைந்துசேர்த
லோர்கலையக் கலைமுப்பா னொன்றியதோர் முகுர்த்தமுயர் முகுர்த்த முப்பான்
சேர்தன்மா னுடர்க்கொருநா ளங்நாண்மூ வைந்துறுதல் சிறந்த பக்க
மார்வமொடு மிரண்டுபக்க மியைந்ததொரு திங்களென வறைவர் மாதோ.

(இ-ள்.) ஈர் ஒன்பான் முறை இமைத்தல் = பதினெட்டுத்தரங் கண்ணிமைக்குங் காலம், ஒரு காட்டை=ஒரு காட்டையாகும், காட்டை முப்பான் இயைந்து சேர்தல்=ஆக் காட்டை முப்பது முறைமையாகப் பொருந்துங் காலமே, ஓர் கலை=ஒரு கலை யெனப்படும், அ கலை முப்பான் ஒன்றியது=அந்தக் கலை முப்பது கொண்டது, ஓர் முகுர்த்தம் = ஒரு முகூர்த்த காலமாம், உயர் முகுர்த்தம் முப்பான் சேர்தல்=உயர்ந்த முகூர்த்தம் முப்பது சேர்ந்தால், மானுடர்க்கு ஒருநாள் = மனுடர்களுக்கு ஒரு தினமாகும், அ நாள் மூ ஐந்து உறுதல்=அந்த நாள் பதினைந்துங் கூடினுல், சிறந்த பக்கம்=சிறப்பினை யுடைய ஒரு பக்ஷமாகும், ஆர்வம் ஒடு இரண்டு பக்கம் இயைந்தது = மகிழ்வோடு அப்பக்க மிரண்டு சேர்ந்த காலம், ஒரு திங்கள் என அறைவர்=ஒருமாதம் என்று (மேலோர்கள்) கூறுவார்கள்.

மனிதர் இயல்பாக இமைத்தலை யொரு மாத்திரை யெனக் கூறுப. மாத்திரை, இமைப்பொழுது, நிமிஷம் என்பன ஒரு பொருட் சொற்கள். "உற்றிடு நிமிட மோர்பதினைந்து காட்டையென் றுரைத்திடப் படுமால்" என வாயுபுராணத்திற் கூறியது போல, சில நூல்களிற் பதினைந்து நிமிடஞ் சேர்ந்த காலத்தை ஒரு காட்டை யெனக் கூறப்பட்டிருக்கின்றது. முகூர்த்தம் எனற்பாலது முகுர்த்தம் எனக் குறுக்கல். முகூர்த்த மாவது இரண்டு நாழிகை கொண்ட காலம். அதுபகல் பதினைந்தாகவும், இராப் பதினைந்தாகவும் வகுக்கப்பட் டுள்ளது. அவையாவன—இரௌத்திரம் - சார்ப்பம் - மைத்திரம் - பைத்திரம்-வாசவம்-ஆப்பியம் - வைச்சவம்-பிராமம் - பிராசேசம்-ஐந்திரம் - ஐந்திராக்கினம்-நைருதம்-வாருணம்-ஆரியமம்-பகி யென்பனவாம். இப்பதினைந்தும் மும்மூன்றாகப் பிராதக்காலம், சங்கவகாலம், மத்தியான்னம், அபரான்னம், சாயான்னம் என ஐந்து காலங்களாகப் பிரிக்கப்படும். (ங)

திங்களோ ராறுகொண்ட தயனமுத்த ராயனமுஞ் சிறப்பி னோடு
தங்குதக்கி ணயனமு மெனவிரண்டா மிவையிரண்டுந் தழுவ லோர்யாண்
டிங்குரைத்த வுத்தரா யனம்பகலா மிருவிசும்பி னுறையுந் தேவர்
கங்குறக்கி ணயனமா மிவைகூட நாளொன்றாக் கணிப்பர் மாதோ.

(இ-ள்.) திங்கள் ஓர் ஆறு கொண்டது அயனம்=மாதம் ஆறுகொண்டது ஒரு அயனம், சிறப்பின் ஒடு தங்கு உத்தராயனமும்= (அவ்வயனம்) சிறப்புடனே யிருக்கின்ற உத்தராயன மெனவும், தக்கிணயனம் எனவும் இரண்டாம் = தக்கிணயனம் எனவு மிருவகைப்படும், அவை இரண்டும் தழுவல் ஓர் யாண்டு=அவை யிரண்டுஞ் சேர்ந்தால் ஒரு வருடமாகும், இரு விசும்பு உறையும் தேவர்=பெரிய விண்ணுலகத்தி லிருக்கின்ற தேவர்களுக்கு, இங்கு உரைத்த உத்தராயனம் பகல் ஆம் = இவ்விடத்துக் கூறப்பட்டவற்றுள் உத்தராயனம் பகலாகும், தக்கிணயனம் கங்குல் ஆம்=தக்கிணயனம் இரவாகும், இவை கூட ஒன்று நாள் ஆ கணிப்பர்=இந்த இரண்டயனமுஞ் சேர்ந்தால் (அத்தேவர்க்கு) ஒரு நாளாக அளவு படுத்துவார்கள்.

மாசம் சாந்திரமாசம், சௌரமாசம் என இருவகைப் படுமாகலின், ஈண்டுக் கூறியது சாந்திரமாச மாமென்பது தோன்ற "திங்கள்" எனக் கூறப்பட்டது. அயனம்= இடம். உத்தராயனம் = சூரியன் வடக்கு வீதியாகச் செல்லுங் காலம். தக்ஷிணயனம்= தெற்கு வீதியாகச் செல்லுங் காலம். வடக்கு வீதிகளாவன—மகரம் கும்பம் மீனம் மேடம் இடபம் மிதுனம் என்னும் ஆறு இராசிகளி னிடமாம். தெற்கு வீதிகளாவன—கர்க்கடக முதலிய மற்றை யாறுமாம். சுவேதமலைக்கு வடக்கின்க ணுள்ள சிருங்கவான் என்னும் மலையின் சிகர மூன்றனுள், தென்புறச் சிருங்கத்திற் சூரியன் சஞ்சரிப்பதனுல் தக்ஷிணயன மும், வடபுறச் சிருங்கத்திற் சஞ்சரிப்பதனுல் உத்தராயனமும் உண்டாகு மெனவுங் கூறப் பட்டன. சூரியனது வடக்கு வழியாகிய உத்தராயன மார்க்கத்தைத் தேவயான மென்றும், தக்ஷிணயன மார்க்கத்தைப் பிதுர்யான மென்றும், தேவயான வழியாகச் செல்லும் புண் ணிய முள்ளார் பிரமாவின் தினமுடிவு வரையும் மோட்சம் என உபசாரத்தான் மொழி யப்பட்ட அமிர்தத் தானத்தின்க ணிருந்து இன்புடன் வாழ்வார் ஆகலானும், மற்றை மார்க்கஞ் செல்வோர் நரகத் தாழ்வார் ஆகலானும் "சிறப்பினேடு தங்கு" என்னும் விசே டண மொழிகளை உத்தராயனத்திற்குக் கொண்டுரைத்தாம். மாதோ-வியப்பிடைச் சொல் எனவும் படும். (ச)

இன்னநா ளொருமுந்நூற் றறுபதுற திவ்வியவாண் டென்ப ரீது
பன்னீரா யிரம்புணர்தல் சதுரயுக மாதியுகத் தளவை பார்க்கி
னன்னநா லாயிரம்யாண் டடுத்தயுக மொருமூவா யிரம்யாண் டாகு
மன்னுதுவா பரமிரண்டா யிரம்வருடங் கலியாண்டா யிரமா மென்றே.

(இ-ள்.) இன்ன நாள் ஒரு முந்நூறு அறுபது உறல்=இத்தன்மையான நாளென் னுங் கால அளவு முந்நூற்றறுபது கொண்டதனை, திவ்வியம் ஆண்டு என்பர்=ஒரு தேவ வருடம் என்று கூறுவார்கள், ஈது பன்னீராயிரம் புணர்தல் சதுர யுகம் என்று=இத் தேவ வருடம் பன்னீராயிரங் கொண்டது ஒரு சதுர யுகமெனவும், ஆதி யுகத்து அளவை பார்க் கின் = முதலாவது யுகமாகிய கிருத யுகத்தின் கால அளவைக் கணிக்கு மிடத்து, அன்ன நால் ஆயிரம் யாண்டு என்று = அவ்வாருய நாலாயிரந் தேவ வருடம் எனவும், அடுத்த யுகம்=இரண்டாவதாய திரேதயுகத்திற்கு, ஒரு மூ ஆயிரம் யாண்டு ஆகும் என்று=மூவா யிரந் தேவ வருடமா மெனவும், மன்னு துவாபரம் இரண்டாயிரம்வருடம் என்று=மூன் ருவதாயுள்ள துவாபர யுகத்திற்கு இரண்டாயிரந் தேவ வருடங்களாகு மெனவும், கலி ஆயிரம் ஆண்டு ஆம் என்று என்பர் = கலியுகத்திற்கு ஆயிரந் தேவ வருடங்களாகுமென் றுங் கூறுவர் (மேலோர்).

என்று என்னும் எண்ணிடைச் சொல் தீவகம். என்பர் என்றது பின்னுங் கூட்டப்பட் டது. திவ்வியம்=தேவ சம்பந்தம். சதுர யுகமென்பது மகா யுகமெனவும் பெயர் பெறும். இங்ஙனம் தேவ வருடங்களால் அளவை செய்யப்பட்ட யுகங்களுக்கு மானுட வருடத்தைச் சொல்லுங்கால், கிருத யுகத்திற்குப் பதினேழ் இலக்கத்து நாற்பதினாயிரம் வருடமும், திரேத யுகத்திற்குப் பத்து லக்ஷத்து எண்பதினாயிரம் ஆண்டும், துவாபரயுகத்திற்கு எட் டிலக்கத்து இருபதினாயிரம் யாண்டும், கலியுகத்திற்கு நாலிலக்கத்து அறுபதினாயிரம் வருடமு மாம். இந்த நான்கு யுகங் கொண்ட காலமே ஒரு சதுரயுகம். (ரு)

ஆதியுகந் தனிற்சந்தி நானூ றுண் டுயர்சந்தி யஞ்ச நானூ
ரேழுதிரே தாயுகத்துச் சந்திமுந்நூ றுயர்சந்தி யஞ்ச முந்நூ
றேதிறுவா பரசந்தி யிருநூறே ரிருநூறு சந்தி யஞ்ச
மாதர்கலி யுகசந்தி நூறுசந்தி யஞ்சநூ றென்ப மாதோ.

(இ-ள்.) ஆதி யுகம் தனில் சந்தி நானூறு ஆண்டு = முதலாவதாய கிருத யுகத்தினது சந்தி நானூறு தேவ வருடமாம், சந்தி அஞ்சம் நானூறு = சந்தியம்சமும் நானூறு வருடமே யாம், ஓது திரேதா யுகத்து சந்தி முந்நூறு = (இரண்டாவதாகச்) சொல்லப்பட்ட திரேதா யுகத்தினது சந்தி முந்நூறு தேவ வருடமே யாம், சந்தி அஞ்சம் முந்நூறு=சந்திஅம்சமும் முந்நூறே யாம், ஏதம் இல் துவாபர சந்தி இருநூறு = குற்றமில்லாத துவாபர யுகத்தினது சந்தி இருநூறு வருடமாம், சந்திஅஞ்சம் ஓர் இருநூறு=சந்தி யம்சமும் இருநூறே யாகும், மாதர் கலியுக சந்தி நூறு = விரும்பப் படுகின்ற கலியுகத்தினது சந்தி நூறு வருடமாம், சந்தி அஞ்சம் நூறு என்ப = சந்தியம்சமும் நூறே யாமென்று (மேலோர்) கூறுவார். ஏதம்—கடைக்குறை. மாது ஓ அசைகள்.

சந்தி அம்சம் என்பது சந்தி யஞ்சம் எனத் திரிந்தது. சந்தியாவது யுகத்துக்கு முற்பட்ட காலம். சந்தியஞ்சமாவது யுகத்துக்குப் பிற்பட்டகாலம். யுகத்தின் கூறு சந்தியும், சந்தியின் கூறு சந்தியஞ்சமும் எனக் கொள்க. ஆகவே தேவமானப்படி கிருதயுகத்திற்கு நாலாயிரத்து எண்ணூறு; திரேதயுகத்திற்கு மூவாயிரத்து அறுநூறு; துவாபர யுகத்திற்கு ஈராயிரத்து நானூறு; கலியுகத்திற்கு ஆயிரத்து இருநூறு. கலியுகமானது பாவ யுகமெனப் பட்டுத் தருமதேவதையும் ஒற்றைப் பாதமூன்றி யுலாவப் பெறுவதாயினும், கூர்மர் கண்ணுவதார மெடுத்த காலத்து முனிவர் யாவருங் கண்ணனை யடுத்து ஐயனே! கலியுக மடுத்தது யாமென் செய்வேமென்று முறையிட,அவர் அம்முனிவர் யார்க்கும் இக்கலியுகத்தைப் பற்றிச் சிறப்பித்துக் கூறினர்,ஆகலின் ஈண்டும்“மாதர்கலி” எனக் கூறப்பட்டது. அதனை,

(இப்புராணம்) கண்ணன் வைகுந்த மடைந்த அத்தியாயம்.

“சீர்கெழு முகங்க டம்மிற் பல்பக றவஞ்செய் தாலுஞ் - சார்வரு முத்தி யெய்தார் கலியுக மதனிற் சூழ்ந்தோ-ரோர்கணந் தவஞ்செய் தாலு முத்தியி லுறுவ ரென்றும்-பாரினில் யுகங்கள் யாதே கலிக்கிணை பகர்வ தம்மா.—திங்களங் கண்ணிப் புத்தேள் சேவடிக் கமல முண்டு-கொங்கவிழ் மலரு முண்டு குளிர்தரு புனலு முண்டு - தங்குமஞ் செழுத்து முண்டு தவளவெண் ணீறு முண்டு - வெங்கலிக் குடைவ தென்னீர் வெளிற்றறி வுடையர் போல.—ஆணவ மலத்தை யாதி மலங்களென் செய்யு மன்றேற் - காணவா வீண்டு புக்க கலியுகம் புரிவதென்னே-மாணமர் கமலத் தேவை யென்னைமுன் வயிறு வாய்த்துத்-தானுவா யுலக மீன்றோன் றுளிலன் புளதேன் மன்னே. என்னுஞ் செய்யுட்களா லறிக. (கூ)

ஆகவுயர் திவ்வியயாண் டாறிரண்டா யிரஞ்சதுர யுகம தாகும்
பாகுபடு சதுரயுக மெழுபானென் றிறத்தன்மங் வந்தரமாம் பண்பிற்
சேகின்மநுப் பதினல்வ ரிறந்திடுகா லத்தளவை திருமா லுந்திப்
போகுயர்தா மரைப்பொகுட்டுப் புத்தேளின் பகலென்னப் புகல்வர் மாதோ.

(இ-ள்.) ஆக உயர் திவ்விய யாண்டு ஆறு இரண்டாயிரம்=இவ்வாறாகக் கூட்டினால் தேவ வருடம் பன்னீராயிரங் கொண்டது, சதுர யுகமது ஆகும் = ஒருசதுர யுகமாகும், பாகு படு சதுர யுகம் எழுபான் ஒன்று இறத்தல் = நான்கு யுகமாகப் பகுக்கப் படுகின்ற இந்தச் சதுரயுகம் எழுபத் தொன்று முடிந்தால்,மந் அந்தரம்ஆம்=ஒரு மநுவந்தரமாகும், சேகு பண்பு இல் மநு பதினல்வர் இறந்திடு காலத்து அளவை=பகைக் குணமில்லாத பதினன்கு மநுவந்தரமும் முடிந்தொழிந்த காலத்தின் அளவையை, திருமால் உந்தி உயர் போகு தாமரை பொகுட்டு = விட்டுணு மூர்த்தியினது நாபியாகிய உயர்ந்து வளர்ந்த தாமரைப்பூம் பொகுட்டின்கணுள்ள, புத்தேளின் பகல் என்ன புகல்வர்=பிரமனது ஒரு பகற் பொழு தென்று சொல்வார் (பெரியோர்.)

மநுவரசர்களது ஆயுட்காலமும் இந்திரர்களது ஆயுட்காலமும் ஒன்றேயாம். ஒரு மநுவந்தரமாவது தேவ மானத்தினுலே எட்டிலக்கத்து ஐம்பத் தீராயிரம்.மானுஷிய மானப்படி முப்பது கோடியே அறுபத் தேழிலக்கத்து இருபதி னுயிரமாம். பிரமாவின் ஒருபகலிலே பதினன்கு மநுக்களும், பதினன்கு இந்திரர்களும் அதிகாரம்பண்ணி இறப்பார்கள். பதினன்கு மநுக்களின் பெயர்களாவன:—சுவாயம்பு, சுவாரோசிஷன், உத்தமன், தாமசன், இரைவதன், சாக்குஷன், வைவச்சுதன், சூரியசாவர்ணி, தக்க சாவர்ணி, பிரம சாவர்ணி, தரும சாவர்ணி, உருத்திரசாவர்ணி, இரௌச்சியன், பௌ தியன் என்பனவாம். பதினன்கு இந்திரரின் பெயர்களாவன:—அரி,விபச்சித்து,சுசாந்தி சிவி, விபு, மனேசவன், புரந்தரன், மாவலி, அற்புதன், சாந்தி, விருடன், இருததாமன், திவற்பதி, சுசி யென்பவாம். விபுவை, வசு இரவி யெனவும், புரந்தரனே ஓசஸ்வி யெனவும் பாடமுண்டு. (எ)

பகலளவெத் துணைக்கால மத்துணைய கங்கு லுக்கும் பகர்ந்த காலம்
புகல்பிரமன் பகற்போதைக் கற்பமெனப் புகல்வரொரு கற்பந் தன்னே
வகைதருகா லத்தளவே கற்பமெவற் றினுக்குமொரு மநுவின் காலம்
நிகழ்வதெவ னவ்வளவே பதினன்கு மநுவினுக்கு நிகழ்த்துங் காலம்.

(இ-ள்.) கங்குலுக்கும்=இராப்பொழுதிற்கும், பகர்ந்த காலம்=சொல்லப்பட்ட காலங்கள் (எவ்வளவெனில்) பகல் அளவு எ துணை காலம்=பகற் காலத்திற்கு எவ்வளவு காலஞ் சொல்லப் பட்டதோ, அ துணைய = அவ்வளவு காலமேயாம், புகல் பிரமன் பகல் போதை=முற்கூறப்பட்ட பிரமனது பகற்காலத்தை, கற்பம் என புகல்வர்=ஒரு கற்பம் என்று சொல்வார்கள், ஒரு கற்பம் தன்னே வகை தரு காலத்து அளவே=ஒரு கற்பத்தை வகைப்படுத்திக் கூறிய காலத்தின் அளவே, கற்பம் எவற்றினுக்கும் = எல்லாக் கற்பங் களுக்கும், ஒரு மநுவின் காலம் நிகழ்வது எவன்=ஒரு மநுவரசனின் காலஞ் செல்வது எவ்வளவோ, அ அளவே பதினன்கு மநுவினுக்கும்=அவ்வளவு காலமே பதினன்கு மநு வந்தரங்களுக்கும், நிகழ்த்து காலம்=சொல்லப்படுகின்ற காலமாகும்.

பிரமனது பகற் பொழுதுக்கு எவ்வளவு காலம் வரையறுத்துக் கூறப்பட்டதோ அவ்வளவே இரவுக்குமாம். ஒரு கற்பத்துக்கு எவ்வளவோ அவ்வளவே மற்றைய கற்பங் களுக்கும்,ஒரு மநுவந்தரத்திற்கு எவ்வளவோ அவ்வளவே மற்றைய மநுவந்தரங்களுக்கு மாம். பிரமதேவரது பகல் முடிவிலே நைமித்திகப் பிரளயம் உண்டாகும். அதனுல் இரு பத்தெட்டுக் கோடி தேவர்கள் இறப்பார்கள். மநுக்களும் இந்திரர்களும் அதிகாரங்க ளொழிந்து மகலோகஞ் சேர்ந்து அங்குள்ளாரோடுங் கூடிச் சனலோகஞ் சேர்ந்து வாழ் வார்கள் என்று இலிங்கபுராணங் கூறுகின்றது. (அ)

கற்பமுந்நூற் றறுபதுசெல் காலமறைக் கடவுளுக்கோர் வருட மாகுஞ்
சொற்றவாண் டொருநூறு கழிதல்பரம் பரமவற்குத் தொகுத்த வாயுண்
மற்றிவ்வா றொருநூறு வருடமுநான் மறையோற்குச் சென்ற காலே
யுற்றசரா சரமனைத்தும் பிரகிருதி யதனிடைப்போ யொடுங்கு மன்றே.

(இ-ள்.) முந்நூற்று அறுபது கற்பம் செல் காலம்=முந்நூற்று அறுபது கற்பஞ் சென்ற காலமே, மறை கடவுளுக்கு ஓர் வருடம் ஆகும்=பிரமனுக்கு ஒரு வருடமாகும், சொற்ற ஆண்டு ஒரு நூறு கழிதல் பரம்=அங்ஙனஞ் சொல்லப்பட்ட வருடம் நூறு சென் றால் பரம் என்னுங் காலமாம், பரம் அவன் கு தொகுத்த ஆயுள் = அந்தப் பரம் என்னுங் காலமே பிரமனுக்குத் தொகுத்துச் சொல்லப்பட்ட ஆயுளாகும், நான்மறையோன் கு இ

ஆறு ஒரு நூறுவருடமும் சென்ற காலை = பிரமனுக்கு இவ்வண்ணமே நூறு வருடமுங் கழிந்த பொழுது, உற்ற சர அசரம் அனைத்தும்=தோன்றிய தாவர சங்கமப் பொருள்கள் யாவும், பிரகிருதி அதன் இடை போய் ஒடுங்கும்=பிரகிருதி மாயையி னிடத்துச் சென்று இலயிக்கும்.

இரண்டாயிரஞ் சதுரயுகங் கொண்ட காலத்தையே பிரமற்குப் பகல் எனவும், கற்பம் எனவும் பேசப்படும். முந்நூற்று அறுபது பகல் கழிந்தாற் பிரமற்கு ஒருவருடமாம். இங்ஙன மன்றி, ஆயிரங் கற்பங் கழிந்தால் ஒருவருடம். அந்த வருடம் எண்ணாயிரஞ் சென்றால் ஒரு யுகம். அந்த யுகம் ஆயிரஞ் சென்றால் ஒருசவன மாகும். அச்சவனம் ஒன்பதினாயிரங் கழிந்தால் ஒரு பரமாகும் என்றுங் கூறப்பட்டது. அதனை "அதுதா னோராயிரங்க டந்தா லன்னோன் றனக்கோர் வருடமா - மதியோ ரெண்ணா யிரம்யாண்டோர் யுகமா மென்ன வகுப்பரா-லுதவா யிரமோர் சவனமா மஃதொன் பதினாயிரங் கழிந்தா-லெதிரா நின்ற பரமாகும் யாமிக் கறிய வியம்பிடிலே." என்ற வாயுசங்கிதைச் செய்யுளானறிக. சரம்=சஞ்சரிக்கும் பொருள்கள். அசரம்=சஞ்சரித்த லில்லாத பொருள்கள். இவை முறையே இயங்கியற் பொருள், நிலையியற் பொருள், சங்கமம், தாவரம் எனவும் பெயர் பெறும். இதனால் தோன்றிய யாவும் இலயிக்கும் முறை கூறப்பட்டது. (கூ)

ஆதலினப் பிரளயத்தைப் பிராகிருதப் பிரளயமென் றறைவ ரந்தண்
போதுறைபுத் தேண்முதலா மெத்தேவு மிறந்துபிறந் துழலவர் போற்று
மேதகுகா லத்துருவாய்க் காலவரை கடந்துவெறு வெளியா யென்றுஞ்
சாதல்பிறப் பில்லாத தனிப்பிரம மகேச்சுரனென் றுரைப்பர் தக்கோர்.

(இ-ள்.) ஆதலின் = அக்காரணத்தினால், அ பிரளயத்தை பிராகிருதம் பிரளயம் என்று அறைவர் = அந்தப் பிரளயத்தைப் பிராகிருதப் பிரளயம் என்று சொல்வார்கள், அம் தண் போது உறை புத்தேள் முதல் ஆம் = அழகிய குளிர்ந்த (தாமரைப்) பூவின்கணிருக்கும் பிரமன் முதலிய, எ தேவும் இறந்து பிறந்து உழல்வர் = எந்தக் கடவுளருஞ் செத்தும் பிறந்தும் வருந்துவார்கள், போற்றும் மேதகு காலத்து உருவாய்=புகழத் தகுந்த கால சொரூப மாகியும், காலம் வரை கடந்து வெறு வெளி ஆய் = அக்கால வெல்லையினையுங் கடந்து பரவெளியு மாகி, என்றும் சாதல் பிறப்பு இல்லாத தனி பிரமம் = எக்காலத்துஞ் சாதலும் பிறத்தலும் இல்லாத ஒப்பற்ற பிரமப் பொருளானது, மகேச்சுரன் என்று தக்கோர் உரைப்பர்=மகேச்சுரரே யென்று அறிவுடையோர் கூறுவர்.

இத்தப் பிரமனது ஆயுட்காலம் (பரம்) முடிந்தால், திருமாலுக்கு ஓர் நாளாகின்றது. திருமாலே புராண ஆசிரியராய் நின்றமையால் எத்தேவும் என்று பொதுவாகக் கூறினர். கூறினரேனும் திருமாலின் ஓர் பகலின் ஓர் பிரமன் இறப்பன். உருத்திரரின் பகலின் ஒருமால் ஒழிவர். மகேசுரரின் பகலின் ஒரு உருத்திரர் இலயிப்பர் எனக் கொள்க. இவற்றின் விரிவுகளை யெல்லாம் மற்சபுராணம், சித்தாந்த சாராவளி யென்னு நூல்களிற் கண்டு தெளிக. (கo)

படைத்தருளு மெனவுரைத்த கடவுடனக் காயுளினோர் பரார்த்தம் போக
நடப்பதெவ னெனினிரண்டாம் பரார்த்தத்தின் முதற்கற்ப நவின்ற கற்பந்
தெடுத்தக லேழாங்கற்பம் பாற்மகற்ப மினிதினீண் டியலுங் கற்ப
மடுத்துலகைக் கூரெயிற்றிற் கீண்டெடுத்த வுயர்வெள்ளை வராக கற்பம்.

(இ-ள்.) படைத்து அருளும் என உரைத்த கடவுள் தனக்கு = (உலகங்களைச்) சிருட்டி செய்தருள்வர் என்று கூறிய பிரமனுக்கு, ஆயுளின் நடப்பது எவன் எனில்=

ஆயுட் காலத்தி னுள்ளே (இப்போது) நடக்கின்ற காலம் யாதென்று (நீவிர்) வினவில் ஓர் பரார்த்தம் போக=முதலாம் பரார்த்தங் கழிய, இரண்டு ஆம் பரார்த்தத்தின் முதல் கற்பம்=இரண்டாம் பரார்த்தத்தின் முதலாங் கற்பமாம், நவின்ற கற்பத்து எடுத்து அகல் ஏழாம் கற்பம்=சொல்லப்பட்ட கற்பத்தில் எடுத்துத் தீர்ந்த ஏழாவது கற்பம், பாற்ம கற்பம்=பதும கற்பமாம், இனிநின் ஈண்டு இயலும் கற்பம்=நன்மையுடன் இப்போது நடக்கின்ற கற்பமாவது, உலகை அடுத்து = பூமி யிருக்கு மிடத்தைச் சேர்ந்து, கூர் எயிற்றின் கீண்டு எடுத்த உயர் வெள்ளை வராக கற்பம் = கூரிய கொம்பினுற் கிழித்து எடுத்து வந்து (நிறுத்திய) உயர்வாய சுவேத வராக கற்பமாகும்.

கற்பம் என்றது பிரமனது பகலிற்கும், தினத்திற்கும், வருடத்திற்கும், பரார்த்திற்கும் பெயராய் நிற்றலின், இதன்கண் முதற் கற்பம் என்றது, இரண்டாம் பரார்த்தத்தின் முதலாம் வருடமென்றும், ஏழாம் கற்பம் என்றது அவ்வருடத்தின் ஏழாநாள் என்றும் பொருள் படும். ஏழாங்கற்பம் பதும கற்ப மென்றுணர்க. அது கழிந்து எட்டாவது. கற்பமாகிய சுவேத வராக கற்பம் நடக்கின்ற தென்க. எனவே, யிப்போதுள்ள பிரமாவுக்கு இரண்டாம் பரார்த்தத்திலே, முதலாம் வயசி னுள்ளே முதலாம் ஆண்டில்,எட்டாந் தினத்து, ஆருவது மநுவந்தரத்தில், இருபத்தெட்டாஞ் சதுர யுகத்திற் கலியுக முதற் பாதம் நடக்கின்ற தென்றுய்த்துணர்க. பாத்மம் - என்பது பாற்மம் என்ருயிற்று. (கக)

ஈங்கிதனைத் தெருளுறயான் விரித்துரைப்பன் கேட்டிரென விலவச் செவ்வா
கோங்கமுகை கவற்றுமுலை யயிராணி வரிநெடுங்கட் குவளை பூத்த [ய்க்
வீங்குதடந் தோட்கடவுள் வளிதடவந் திடின்வாளா மிழற்று பாணித்
தூங்கிசைய திவவியாழ் முனிகேட்ப மணிவண்ணன் சொல்ல லுற்றுன்.

(இ-ள்.) மணி வண்ணன் = நீலரத்தினம் போன்ற நிறத்தினை யுடைய திருமாலானவர், ஈங்கு=இவ்விடத்திலேயே, இதனை தெருளுற = இச்சுவேத வராக கற்பத்தின் றன்மையை (நீவிர்) தெளிந் துணருமாறு, யான் விரித்து உரைப்பன்=நான் விரிவு படுத்திக் கூறுவேன், கேட்டிர் என = (அதனைக்) கேட்பீராக வென்று, இலவம் செம் வாய்= இலவ மலரினை யொத்த செவ்விய வாயினையும், கோங்கு அம் முகை கவற்றும் முலை= கோங்கினது அழகிய அரும்பையும் வருத்துகின்ற தனங்களையும் உடைய, அயிராணி வரி நெடு கண் குவளை பூத்த = இந்திராணியினது செவ்வரி பரந்த நீண்ட கண்களாகிய குவளைப் புட்பங்கள் மலர்ந்த, வீங்கு தடம் தோள் கடவுள் = பெருத்து நீண்ட புயங்களாகிய (மலைகளை) யுடைய இந்திரனும், வளி தட வந்திடின் வாளா மிழற்று = காற்றுப் பரிசித்த மாத்திரத்துந் தானகவே யொலிக்கின்ற, பாணி தூங்கு இசைய திவவு யாழ் முனி கேட்ப=தேவபாணி யாகிய இனிய இசைகளைப் பாடுகின்ற கட்டினைக் கொண்ட மகதி யாழினை யுடைய நாரதமுனிவருங் கேட்கும்படி, சொல்லல் உற்றுன்=சொல்லத் தொடங்கினுர். என்க.

திருமாலானவர் இந்திரனும்,நாரத முனிவருங் கேட்பச் சுவேத வராக கற்பத்தின் றன்மையைக் கூறத் தொடங்கினர் என்பதாம். கட்குவளை யென்றதற் கேற்பத் தோளை மலையென்ரும். பாணி = பாட்டு. தேவபாணி யென்றது தேவர்ப் பராவுதலை யுடைத்து. என்னை? ;"ஏனை யொன்றே-தேவர்ப் பராவுதன் முன்னிலைக் கண்ணே." என்ருர் தொல் காப்பியனு ராகலின். அது முத்தமிழ்க்கும் பொதுவாகிப் பெருந்தேவபாணி, சிறுதேவ பாணி யென விருவகைத்து. அதனை"கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்-தேறிய விரண்டு தேவ பாணியும்"என்றதனு லறிக. அவை இசைத் தமிழின் வருங்கால் இசைப்பா எனவும் இசையள்வுபா எனவும் இருவகைத்து. அவற்றை,"செந்துறை வெண்டுறை தேவபா ணிய்

யிரண்டும் - வந்தன முத்தகமே வண்ணமே—கந்தருவத், தாற்றவரி கானல் விரிமுரன் மண்டிலமாத் - தோற்று மிசையிசைப்பார் சுட்டு." என இசைநுணுக்க நூலாசிரியர் இயம்பு வதனானும், "செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை - தப்பொன்று மில்லாச் சம பாத-மெய்ப்படியுஞ், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப-பைந்தொடியா யின்னிசையின் பா." எனப் பஞ்ச மரபுடைய அறிவனார் என்னு மாசிரியர் கூறினமை யானு மறிக. (கஉ)

பிரமாயு ளுரைத்த வத்தியாயம்-முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கஅஎ.

ஆறவது

சுவேத வராக கற்பமுரைத்த வத்தியாயம்.

அஃதாவது பிரமனது இரண்டாவது பரார்த்தத்து முதலாம் ஆண்டிலே நிகழும் முந்நூற்றறுபது தினகற்பங்களுள், இஃது எட்டாவதாய் இப்போது நடக்குங் கற்பமாம். ஏழாவதாய பதுமகற்பப் பிரளயத்தால் மூடப்பட்ட பூமியைத் திருமால் சுவேத வராக மாய்ச் சென்று எடுத்து நிறுத்தியதைக் கூறும் பாகமாகலின் இப்பெயர்த்து. சுவேதம்= வெள்ளை, வராகம்=பன்றி, கற்பம்=பிரமனுயுள் முடிவுளொன்று. கல்பம் என்னும் வட மொழி கற்ப மெனத் திரிந்து வருதலை "பொற்பமர் தெய்வ மொழிப்பாகு பாடும் பொது வெழுத்தாய்ப் - பற்பல வாகித் திரிவதுஞ் சாற்றினர் பண்டுணர்ந்தோர்." என்னும் பிர யோகவிவேகச் செய்யு ளுரையா னுணர்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மீயுயருங் கரைக்குறும்பு படவெறிந்து மூவுலகும் விழுங்கி மேல்போய்ப்
பாயசெழுந் திரைக்கரத்தா லுயிரனைத்து மெடுத்தருந்தும் பரவை நாப்ப
ணாயிரங்கை யாயிரங்கா லாயிரநீண் முடியினொடு மயன்மா லாகித்
தூயமலர்க் கண்முகிழ்த்துக் கடவுளா யிரம்பருவந் துயின்றா னன்றே.

(இ-ள்.) மீ உயரும் கரை குறும்பு பட எறிந்து = மேலோங்கிய கரை யென்னும் பகையானது அழியும்படி வீசி, மூ உலகும் விழுங்கி=மூன்று வகை யுலகங்களையுந் தன தகப்படுத்தி, மேல் போய்=மேலுயர்ந்து, பாய செழு திரை கரத்தால்=பரந்த செழுமை கொண்ட திரைகளாகிய கைகளினால், உயிர் அனைத்தும் எடுத்து அருந்தும் பரவை நாப் பண்=உயிர்களெல்லாவற்றையும் எடுத்து விழுங்கிய நைமித்திகப் பிரளயசலத்தின் நடுவே, அயன் = பிரமதேவரானவர், ஆயிரம் கை=இரண்டாயிரங் கைகளையும், ஆயிரம் கால்= இரண்டாயிரங் கால்களையும், ஆயிரம் நீள் முடியின் ஒடு=ஆயிரம் நீண்ட முடிகளோடும் (அறிதுயில் செய்கின்ற) மால் ஆகி=திருமாலினைப் போன்றவராய், தூய மலர் கண் முகி ழ்த்து=சுத்தமாகிய (தமது) மலர்போன்ற கண்களை மூடிக்கொண்டு, கடவுள் ஆயிரம் பரு வம் துயின்றான்=தேவமானப்படி யாயிரம் பருவம் அளவும் நித்திரை செய்தனர் என்க.

நைமித்திகப் பிரளய சலத்தின் மத்தியிலே பிரமதேவரானவர் திருமாலைப்போல ஆயிரம் பருவ காலம் வரையும் நித்திரை செய்தனர் என்பதாம். ஆயிரம் பருவம் எனக் கூறினு ளயினும், இரண்டாயிரஞ் சதுர்யுக காலம் என்று கொள்க. பரவை = பரத்தலை யுடையது; சமுத்திரம். ஆயிரங்கால் ஆயிரங்கை யெனக் கூறினும், ஆயிர நீண்முடியென் றதற் கேற்ப இரண்டாயிரங் கால் கையென்றுரைத்தாம். திருமால் ஆயிர நீண் முடியன் என்பதனை "இவனே முகனான் கினையுடைய பிரமனுபு மெழில்வாய்த்தக்-குவனே யோரா

யிர்ந்தலைக ளுள்ளு யோங்கு மாலாயும்" என்று சைவபுராணஞ் சாற்றலானு மறிக. "புரமா யிரந்திருக் கண்மல ராயிரம் புண்டரிகக் - கரமா யிரங்கழற் கான்மல ரரயிரங் கன்னிமுடிச் — சிரமா யிரந்திரு நாமமு மாயிரஞ் செய்யகையி - லரமா யிரங்கொண்ட தின்டிற லாழி யரங்கருக்கே." என்முர் பிறரும். (௧)

துயின்றபழ மறைக்கிழவ னவ்விருள்போய்த் தொலைந்துபடு புலரிக் காலைப்
பயின்றவுலகொருமூன்றும் படைப்பலென வுளத்தெண்ணிப்பார்க்குமேல்லை
யியன்றபுவி பாதலத்தி னிடைப்போகி யொளித்ததனுக் கிரங்கி வெண்ணெ
யயின்றமலர்ச் செங்கனிவா யாழியான் றனையுளத்தி னமைத்தல் செய்தான்.

(இ-ள்.) துயின்ற பழ மறை கிழவன்=இங்ஙனம் நித்திரை செய்த பழமையாகிய வேதங்களுக் குரிய பிரமதேவரானவர், அ இருள் போய் தொலைந்து=அந்த இரவானது சென்று தேய்ந்து, புலரி படு காலை = விடியற்கால முண்டாய பொழுது, பயின்ற ஒரு மூன்று உலகும் = (பிரளயத்துள்) மூழ்கிய மூன்று உலகங்களையும், படைப்பல் என உளத்து எண்ணி = சிருட்டிசெய்வே னென்று மனத்தி னினைத்து, பார்க்கும் எல்வை= பார்க்கும் போது, இயன்ற புவி பாதலத்தின் இடை போகி = முன்னிருந்த பூமியானது பாதலத்தி னிடத்துப் போகப்பட்டு, ஒளித்ததனுக்கு இரங்கி = மறைந்திருந் ததற்காக வருத்த முற்று, வெண்ணெய் அயின்ற மலர் செம் கனி வாய்=நவநீதத்தை யுண்ட தாமரை மலரையுஞ் சிவந்த பழத்தையு மொத்த வாயினை யுடைய, ஆழியான் தன்னை உளத்தின் அமைத்தல் செய்தான்=சக்கராயுதராகிய திருமாலை மனத்திற் பொருந்தத் தியானித்தனர்.

பிரமதேவர் விடியற்காலம் வந்தடுக்கத் துயினீங்கி உலகத்தைப் படைப்பே மென்று கண்திறந்து பார்க்கும் போது, பூமியானது சலத்தினுல் மறைப்புண்டு கீழ்ப்போனமை யால் திருமாலை மனத்திற் றியானித்தார் என்பதாம்.

சனலோகத் தமர்ந்த முனிவர்கள் யாவரும் பிரமனைத் துதித்து ஓலமிட்டெழுப்ப எழுந்திருப்ப னெனக் கொள்க. அதனை "உரவுத்தெண்ணீரிடை மலரோன் மாயோ னுகி யுறங்குவான் - பரவிச் சனலோகத் துறைவோர் பணிந்து பணிந்து துயிலெடுப்ப - விரை விற் றுயில்விட் டெழுந்துலகைக் காணுனுகி மிகப்புலம்பி - யரவச் சடையோன் றனை நினைந்தே யாழ்ந்த நிலமென் றறிந்தனனுல்." என்றதனு னறிக. (௨)

எண்ணிமல ரயன்பழிச்ச வுறிதடவந் தாய்ச்சியரில் லிடங்க டோறும்
வெண்ணெய் கவர்ந்தினிதருந்தி விசித்தவுர லொடுந்தவழ்ந்துமருதஞ்சாய்த்த
வண்ணலெறுழ் வலிக்குறுந்தாட் சுவேதவரா கத்துருவ மமைந்து கீழ்போய்
மண்ணுலக முழுவதுமோர் கூன்பிறைக்கோட் டினிதேந்தி வந்தா னன்றே.

(இ-ள்.) மலர் அயன் எண்ணி பழிச்ச = தாமரை மலராசனராகிய பிரமதேவர் தியானித்துத் துதிக்க, ஆய்ச்சியர் இல் இடங்கள் தோறும் = இடைச்சியர்களது வீட்டி னிடங்க டோறும், உறி தடவந்து வெண்ணெய் கவர்ந்து=உறிகளைத் தடவி நவநீதங்களைக் களவாக எடுத்து, இனிது அருந்தி = நன்மையாக உண்டு (அதனுல்) விசித்த உரல் ஒடு தவழ்ந்து = கட்டப்பட்ட உரலோடுந் தவழ்ந்து சென்று, மருதம் சாய்த்த அண்ணல்= மருத மரங்களை முரித்து வீழ்த்திய திருமாலானவர், எறுழ் வலி=மிக்க வலிமையினையும், குறு தாள்=குறிய கால்களையு முடைய, சுவேத வராகத்து உருவம் அமைந்து = வெள் ளைப் பன்றி யுருவங் கொண்டு, கீழ் போய்=கீழே சென்று, மண் உலகம் முழுவதும்= பூமி முழுவதனையும், கூன் பிறை ஓர் கோடு = வளைந்த பிறைச்சந்திரன் போன்ற ஒரு கொம்பினிடத்து, இனிது ஏந்தி வந்தான் = இத முண்டாக ஏந்திக் கொண்டு வெளிவந் தனர்.

அன்று ஏ - அசைகள். பிரமதேவர் விட்டுணுவைத் துதிக்க, அவர் சுவேத வராகமாய்ச்சென்று பூமியைத் தமது மருப்பொன்றி னேந்தி வந்தனர். திருமால் உரலோடு கட்டப்பட்டு மருதஞ் சாய்த்தமையைப் பின்வருங் கண்ண னவதரித்த அத்தியாயத்தில் எச-ம், எடு-ம் செய்யுட்களா னறிக. சில புராணங்களிற் பிரமதேவரோ சுவேத வராக வுருவெடுத்துப் பூமியை நிறுத்தினர் எனக் கூறப்பட்டிருக்கின்றது. மேருமலையுங் காற்சிலம்பின் பருக்கைக் கல்லளவா நிற்ப, அத்துணை யுயர்ந்து பருத்த வராக வுருக் கொண்டார் ஆகலின் கொம்பி னோர் நுனியிற் றுகள் போலக் கொடு வந்தனர் என்பான் "மண்ணுலக முழுவதுமோர் கூன்பிறைக்கோட் டினிதேந்தி வந்தான்" எனக்கூறினன். (ங)

சுறவமெறி கடல்வலய முழுவதுமோர் நுண்டுகளிற் றுலங்கு கோட்டி
னுறைவதனைத் தனிநோக்கிச் சனலோக முதலுலகத் துறைவோர் யாருங்
கறையடிய புகர்முகத்த கடக்களிற்றி னிடர்தவிர்த்த காயா மேனி
மறைமுதலே முதலேயென் றுளங்கனிய விழிபனிப்ப வாழ்த்தல் செய்தார்.

(இ-ள்.) சுறவம் எறி கடல் வலயம் முழுவதும்=மகர மீன்களை வீசுகின்ற சமுத்திரத்தாற் சூழப்பட்ட வட்டமாகிய நிலவுலக முழுவதும், ஓர் நுண் துகளின் துலங்கு கோட்டின் உறைவதனை=ஒரு நுட்பமாகிய அணுவைப்போல விளங்காநின்ற கொம்பரினிடத்து இருத்தலை, சனலோகம் முதல் உலகத்து உறைவோர் யாரும் = சனலோக முதலிய உலகங்களில் இருக்கின்றவர்கள் யாவரும், தனி நோக்கி=பராமுக மின்றிப் பார்த்து, கறை அடிய=உரல் போன்ற அடிகளையும், புகர் முகத்த=புள்ளி பொருந்திய முகத்தையும் உடைய,கடம் களிற்றின் இடர் தவிர்த்த=மதம் பொருந்திய கயேந்திரன் என்னும் யானையினது துன்பத்தை நீக்கிக் காத்த, காயா மேனி மறை முதலே முதலே = காயாமலரையொத்த திருமேனியை யுடைய வேத முதல்வரே முதல்வரே, என்று=என்றுகூறி, உளம் கனிய விழி பனிப்ப=மனம் நெகிழவும் கண்கள் (ஆனந்த) பாட்பஞ் சொரியவும், வாழ்த்தல் செய்தார்=துதித்தார்கள்.

இந்நில வுலக மானது சுவேத வராகத்தின் கொம்பரின் நுனியிலே ஓர் அணுப்போல இருத்தலைக் கண்ட சனலோக முதலிய லோகங்களி லுள்ளார் யாருந் துதித்தார் என்பதாம்.

பிரளயமானது பூலோகம், கணலோகம், குய்யகலோகம், வாயுலோகம், மேகமண்டிலம், சூரியன்-சந்திரன்-நட்சத்திரம்-புதன் - வெள்ளி-செவ்வாய் - வியாழம் - சனியென்னு மிவர்களின் லோகங்களையும், புவர்லோக சுவர்லோகங்களையுங் கடந்து மேனிற்றலின் "சனலோக முதலுலகத் துறைவோர்" எனக் கூறினர். சனலோக முதலிய லோகமாவன:—சனலோகம், தவலோகம், சத்தியலோக முதலியனவாம். கயேந்திரன் என்னும் யானையின் இடர் தீர்த்தமை யாவது:—திரிகூட மலைக்கணுள்ள வாவியின்கண் தேவல முனிவர் ஸ்நானஞ் செய்யும் போது மனைவியரோடு சலக்கிரீடை செய்திருந்த ஊகூ வென்னுங் கந்தருவன் விளையாட்டாக நீருண் மூழ்கிச் சென்று அவர்காலைப் பற்றி யிழுக்க, அவர் பெருஞ் சினமுற்று "இத்தொழில் செய்யும் முதலையாகக் கிடக்கக் கடவாய்." என சாபங் கொடுத்து நிவாரணமுஞ் சொல்லி யகல, அவ னங்ஙனே கிடந்தனன். இஃது நிற்க, உலகந் தனிபுரக்கும் இந்திரத்துய்ம்ம னென்னுஞ் சந்திர குலத்தரசன் உலக வெறுப்புற்றுக் காட்டிற் சென்று, குலபருவதத்தினை யடுத்துத் தவஞ் செய்திருக்க, அங்கு அகத்திய முனிவர் வரக்கண்டும் எழுந்து உபசரித்திலன். அதனால் அறிவர் பெருமாற்கு முனிவு தோன்றி, அரசனே! அகங் கரித்திருந்தமை யடுக்கா வாகலின், அக்குணமுடைய யானையாகத் திரியக் கட்வையெனச் சபித்துச் சென்றனர். அவனும் யானையாகிக் கயேந்திரன் என்னும் பெயரோடு காடெங்கணுந் திரிந்து, சாபநிவாரண சமயம் வந்ததனால், அவ்வாவிக் கரையை

யடைந்து பிடிகளோடுங் கன்றுகளோடு மளவளாவி நீர்குடித்து விளையாடுங்கால், மேற் கூறிய முதலை வந்து காலிற் பிடித்திழுத்தது. இழுக்கவும் யானையானது தன்னாலியன்ற பிரயத்தனங்கள் செய்தும் விலக முடியாமையால் இறுதியில் ஒன்றுஞ் செய்யாம னின்று முன்னர்த் தவப்பயன் வந்து சார "ஆதிமூலமே! ஆதிமூலமே!! காத்தருள்" எனக் கூவி முழங்க, சக்கரபாணி சார்ந்து அத்துயர் தீர்த்தருளினன் என்பதாம். அடிய-முகத்த என்பன எச்சப் பொருட்கண் வந்த பால்வழு வமைதி. சிவ சிவ, ராம ராம, ரக்ஷ ரக்ஷ, எனவும், அவரவரெச்சத்தாற் காணப்படும், யார்யார்வாய்க் கேட்பினும், ஓலமோலம் எனவும் வருவன போல, மறை முதலே முதலே யென்ற அடுக்குப் பூவிரட்டையும் இலை யிரட்டையும் போலாது, மக்களிரட்டை போல வேற்றுமை யின்றிக் காதல்பற்றி வந்த அடுக்கென்க. (௪)

கோவரணங்கட்டழித்துத்தொல்லிலங்கைக்குடுமிகொண்டுநிருதர்ச்செற்றோய்
மாவலிபாற் குறளுருவின் மூவடிமண் டருகென்ன வாங்கி நீர்சூழ்
பூவலய முழுவதுமோர் மலரடிசேர் நுண்டுகளிற் பொதிந்து விட்டுங்
காவல்புரிந் துண்டுநசை யடங்காம லோர்கோட்டிற் கவர்ந்த தெந்தாய்.

(இ-ள்.) கோ அரண் அம் கட்டு அழித்து=தலைமையாய அரணுவுள்ள கட்டுப்பாட்டினையும் நீக்கி, தொல் குடுமி இலங்கை கொண்டு = பழமை யாகிய சிகரங்களு ளொன்றினை யுடைய இலங்கையை யடைந்து, நிருதர் செற்றோய் = இராவணன் முதலிய அரக்கரை யழித்தவரே! எந்தாய்=எந்தந்தையே, மாவலி பால் குறள் உருவின் மூ அடி மண் தருக என்ன வாங்கி = மாவலிச் சக்கிரவர்த்தியி னிடத்தே வாமன ரூபத்தோடுஞ் சென்று மூன்றடி மண் கொடுப்பா யாக வென்று கேட்டு வாங்கி, நீர் சூழ் பூவலயம் முழுவதும்= கடலாற் சூழப்பட்ட பூமி வட்ட முழுவதனையும், ஓர் மலர் அடி சேர் நுண் துகளின் பொதிந்து விட்டும் = ஒரு தாமரை மலர் போன்ற திருவடியிற் பொருந்திய நுட்பமாகிய பரமாணுப் போல அடக்கியது மல்லாமல், காவல் புரிந்து = காவல் செய்தும், உண்டும்= (ஓர் காலத்து) அதனை விழுங்கியும், நசை அடங்காமல்=ஆசை யடங்காமையினாலோ (இப்போதும்) ஓர் கோடு இன் கவர்ந்தது = ஒற்றைக் கொம்பிற் பொருந்தும்படி எடுத்தருளியது.

சேதுபந்தன மிட்டு இலங்கையிற் சென்று, இராக்கதர்களைக் கொன்றருளிய எமது தந்தையே! இந்நிலவுலகை முன்னர்க் காலத்து மாவலிபால் வாங்கி ஓரடியிற் பரமாணுப் போல அடக்கினை; காக்கின்றனை; பின்னர் ஓர் காலத்து விழுங்கி யருளினை; இங்ஙனஞ் செய்தும் ஆசை யடங்காமை யாலோ இப்போதுங் கோட்டிற் கவர்ந்தனை எனத் துதித்தனர் என்க. குவடு=திரிகூடம் என்னு மலை. நிருதர்=நிருதியின் குலத்தவர்.

அரசர்க்குரிய நால்வகை யரண்களுள் முதன்மையாயது நீரரண் ஆகலின் "கோவரணம்" என்றதாம். சிகரமாவது வாயுதேவனுக்கும் ஆதிசேடற்கும் நிகழ்ந்த வீரயுத்தத்தில் வாயுவாற் பிடுங்கி யெறியப்பட்ட மேருமலையின் கொடுமுடிகள் மூன்றனுள் ஒன்று. அதனை "புகழ்ந்த வாயுவைக் கயிலையின் றென்புறம் போந்து-திகழ்ந்த வித்திரி கூடமாஞ் சிகரத்தை யேந்தி-மகிழ்ந்தி யாமதில் வருகுவந் தென்கடன் மருங்கே-நிகழ்ந்த வீழத்தின் வடகரை நிறுத்துநீ யென்றான்." எனனுந் தக்ஷிண கைலாச புராணச் செய்யுளானு மறிக. "குறளிருசீரடி சிந்துமுச் சீரடி" என்பதனாற் குறள் உருவென்பது இரண்டி யுயரமுடைத்தெனக் கொள்க. (௫)

நாரண னாகி யொன்றாய் நனந்தலை யுலகுக் கெல்லாங்
கார ணனாகி யந்தக் காரணங் கடந்து நின்ற

பூரண னாகிப் பூமே லுறைந்திடும் புனித னாகி
யாரண முடிவாய் நின்ற வமலனே போற்றி போற்றி.

(இ-ள்.) நாரணன் ஆகி = நாரணன் என்னுந் திருநாமத்தை யுடையவனாகி, ஒன்றாய்=ஏகமாகியும், நனந்தலை உலகுக்கு எல்லாம் காரணன் ஆகி = நடுவேனுள்ள உலகமெல்லாவற்றிற்குங் காரணனாகியும், அந்த காரணம் கடந்து நின்ற பூரணன் ஆகி = அந்தக் காரணத்தையும் பற்றாது விளங்கி நிற்கும் வியாபகனாகியும், பூ மேல் உறைந்திடும் புனிதன் ஆகி = தாமரைப் பூவின் மேலிருக்கின்ற பிரமதேவராகியும், ஆரணம் முடிவு ஆய் நின்ற=வேதத்தின் முடிந்த பொருளாயுமுள்ள, அமலனே போற்றி போற்றி=(உருத்திர சத்தி விளங்கலால்) உருத்திரனாகியு மிருக்கின்ற கடவுளே யபயம் அபயம். (கூ)

என்றுயர் முனிவ ரேத்த வின்னருள் பூத்துத் தேன்சோர்
மன்றலந் துளவோ னேந்தும் புவியைமுன் போல வைத்துப்
பன்றியி னுருவ நீத்தான் பங்கய னெரிவாய்ப் பெய்த
குன்றெலாம் படைத்து மீட்டும் படைப்பவை குணித்தா னென்றான்.

(இ-ள்.) உயர் முனிவர் என்று ஏத்த=உயர்ந்த முனிவர் முதலாயினோர் என்றிவ்வாறு துதிக்க, இன் அருள் பூத்து=இனிய திருவருள் சுரந்து, தேன் சோர் மன்றல் அம் துளவோன்=தேனொழுகுகின்ற வாசனையை யுடைய அழகிய துழாய் மாலையை யணிந்த திருமால் (சுவேதவராகர்) ஏந்தும் புவியை முன் போல வைத்து=தாங்கி வந்த பூமியை முன்னர்ப் போல நிறுத்தி, பன்றியின் உருவம் நீத்தான் = சுவேத வராக வுருவத்தை விடுத்து இருந்தார், பங்கயன்=பிரமதேவன்,எரி வாய் பெய்த குன்று எல்லாம் படைத்து= அக்கினி வாய்ப்பட்ட மலைகள் எல்லாவற்றையுஞ் சிருட்டித்து,மீட்டும் படைப்பவை குணித்தான்=பின்னருஞ் சிருட்டிக்க வேண்டுவனவற்றை (மனத்திற்) கருதினான், என்றான்= என்று (கூர்மமூர்த்தி) கூறினர் என்க.

சுவேதவராக கற்பமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கஉச.

ஏழாவது

பலவகைச் சிருட்டியுரைத்த அத்தியாயம்.

அஃதாவது பலவகைப்பட்ட படைப்புப் பொருள்களைக் கூறிய பாகமாம். அப்படைப்பு ஆதி சிருட்டி, பஞ்சபூத சிருட்டி, இந்திய சிருட்டி, தாவர சிருட்டி, விலங்கு சிருட்டி, தேவ சிருட்டி, மானுட சிருட்டி, பூத சிருட்டி, முனிவசிருட்டி யென ஒன்பது வகைப்படும். அவற்றையும் அவை வழியா வந்த பொருள்களையும் இஃதுணர்த்து மென்க.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆங்கவை யென்கொ லென்ன வளிமதக் கலுழி யாறு
தூங்குநாற் கோட்டு வெள்ளைச் சூழிமால் யானைப் பாகன்
தீங்கனி பிழிந்தா லன்ன திவவியாழ் முனிவன் கேட்ப
வாங்குவில் விழுங்கு திண்டோண் மணிநிற வண்ணன் சொல்வான்.

(இ-ள்.) அளி மதம் கலுழி ஆறு தூக்கும்=பெருகுதலை யுடைய மதமாகிய கான் யாறானது சொரியாநிற்கும், நால் கோட்டு சூழி மால் வெள்ளை யானை பாகன் = நான்கு கொம்புகளை யுடைய முகபடாத்தை யணிந்த பெரிய ஐராவத மென்னும் யானையை யூர்தி யாகச் செலுத்து மிந்திரனும், தீம் கனி பிழிந்தால் அன்ன திவவு யாழ் முனிவன்=மதுர மாகிய பழங்களைப் பிழிந்தாற் போன்ற (ஒலியைக் கொண்ட) கட்டமைந்த வீணையை யுடைய நாரதமுனிவரும், ஆங்கவை என் கொல் என்ன = சிருட்டித்தற்கு நினைத்தவை யென்னையோவென்று வினவ, வாங்கு வில் விழுங்கு திண் தோள்=வளைக்கின்ற வில்லினை மறைக்குந் திண்ணிய புயங்களை யுடைய, மணி நிறம் வண்ணன்=கருநிற வடிவின ராகிய திருமாலானவர், கேட்ப சொல்வான்=(அவர்கள்) கேட்கும்படி சொல்வாராயினர் என்க.

இதன்கண் ஐராவதத்தை மலையென உருவகப்படுத்தியதுங் காண்க. "நால் கோட்டு வெள்ளை சூழி மால்" என்றதை மலைக்குக் கொள்ளு மிடத்து, தூங்குகின்ற சிகரங்களையும் வெண்ணிறமாகிய உச்சியையும் பெருமையையும் (உடையமலை) என்க. வாங்குவில் விழுங்கு திண் தோள்-என்பதற்கு (சிவபெருமானால்) வளைக்கப்பட்ட வில்லாகிய (மேரு மலையினையும்) வென்ற திண்ணிய தோள் எனினுமாம். (க)

முன்னைய படைப்பின் வேதன் படைத்திட முயன்று னாகத்
துன்னிமுன் புத்தியாதி தமோமய சிருட்டி தோன்றிற்
றன்னதின் வகையோ ரைந்தாந் தமமோக மாமோ கஞ்சீர்
மன்னு தாமிச் சிரமந் ததாமிச் சிரமென வகுப்பார்.

(இ-ள்.) வேதன்=பிரமனானவன், முன்னைய படைப்பின்=முந்திய சிருட்டிகளைப் போல, படைத்திட முயன்றான் ஆக=சிருட்டி செய்யும்படி பிரயத்தனஞ் செய்ய, முன்= முதலில், துன்னி புத்தி ஆதி தமோமய சிருட்டி தோன்றிற்று = விரைவாக மக தத்துவ மாகிய ஆதி தமோமய சிருட்டி யுண்டாயது, அன்னதின் வகை ஓர் ஐந்து ஆம்=அவ்வாதி தமோமய சிருட்டியின் பகுதி ஐந்தாகும் (என்னெனில்?) தமம் மோகம் மாமோகம் என=தமம் மோகம் மாமோகம் எனவும், சீர் மன்னு தாமிச்சிரம் மந்த தாமிச்சிரம் என வகுப்பார் = சிறப்புள்ள தாமிச்சிரம் மந்த்தாமிச்சிரம் எனவும் பிரிவுபடுத்திக் கூறுவார் (மேலோர்).

ஆதிதமோய சிருட்டி முதலிற் றோன்றியது. அது தமம், மோகம், மாமோகம், தாமிச்சிரம், மந்ததாமிச்சிரம் என ஐவகைப் படு மென்று மேலோர் கூறுவர் என்பதாம். தமோமயம் என்றது அவிச்சையினை. வேதன்=வேதத்தைச் சொன்னவன், விதிப்பவன்()

மற்றவை தமஞ்சூழ் போது வாயிலி கும்பத் திட்ட
நற்பொருள் போலத் தோன்று தொழிந்தன முன்னர் நாட்டும்
வெற்பெலாஞ் சிறந்த வாற்றான் முக்கிய மென்று வேத
மற்பினிற் புகன்ற தென்ன வறைந்தன ரறிவின் மிக்கோர்.

(இ-ள்.) மற்றவை தமம் சூழ் போது = மேற் கூறிய வைந்தும் இருள் சூழ்ந்த காலத்தில், வாய் இலி கும்பத்து இட்ட நல் பொருள் போல=வாய் இல்லாத கரகத்தில் வைத்த நல்ல பொருளைப் போல, தோன்றாது ஒழிந்தன=காணப்படாமற் போயின, முன்னர் நாட்டும் வெற்பு எல்லாம் சிறந்த ஆறால் = முன்னர்ச் சிருட்டித்த மலைகள் எல்லாம் சிறந்த தன்மையினால், முக்கியம் என்று = அவை மேலாய தென்று, வேதம் அன்பினில் புகன்றது என்ன = வேதங்கள் அன்போடுஞ் சொல்லின வென்று, அறிவின் மிக்கோர் அறைந்தனர்=நல்லறிவினால் மேற்பட்டோர் கூறினர்.

இவி=இல்லாதது. அது எச்சப் பொருள் பட நின்றது. அன்பு-அற்பு என வலித்தல். தம முதலிய ஐந்தும் தோன்று தொழிந்ததற்கு "வாயிலிகும்பத்திட்ட நற்பொருளை" எடுத்துக் காட்டினமையின் இஃது எடுத்துக்காட்டுவமை யணியாம். (௩)

ஈங்கிவை படைப்பிற் கேது வல்லெனக் குறுக்கா நோக்க
வீங்குபல் விலங்கு தோன்ற வெறுத்துமே லாக நோக்க
வோங்கிய விண்ணோர் யாரு முதித்தன ரேது வன்றென்
றுங்கவன் கீழா நோக்க மானுட ருதித்தா ரன்றே.

(இ-ள்.) ஈங்கு இவை=இப்பொழுது தோன்றிய விவைகள், படைப்புக்கு ஏது அல் என=சிருட்டித் தொழிலுக்குக் காரணமானவை யல்ல வென்று, குறுக்கா நோக்க= குறுக்காகப் பார்க்க, வீங்கு பல் விலங்கு தோன்ற=பெருத்த மிருகங்கள் பிறக்க, வெறுத்து=அவற்றையும் விடுத்து, மேலாக நோக்க = மேலாகப் பார்க்க, ஓங்கிய விண்ணோர் யாரும்=உயர்ந்த தேவர்கள் யாவரும், உதித்தனர்=தோன்றினர்கள், ஆங்கு அவன்=அப்பொழுது பிரமதேவன், ஏது அன்று என்று = (இதுவும்) காரணமான தல்ல வென்று, கீழா நோக்க = அதோமுகமாகப் பார்க்க, மானுடர் உதித்தார் = மனிதர் பிறந்தார்கள். அன்று-ஏ அசைகள். (௪)

சத்துவ குணத்த ராகித் தணப்பிலா னந்த மேவிச்
சித்தமா செறிந்து மெய்யிற் றிகழொளி யுடையர் தேவர்
மொய்த்ததா மதத்தி னேனை யிராசத குணத்தின் மூழ்கி
மெய்த்தகு மொழியி னோடு மேவுவார் மனுடர் தாமே.

(இ-ள்.) தேவர்=தேவர்களாவார், சத்துவ குணத்தர் ஆகி=சாத்துவிக குணத்தை யுடையவர்களாய், தணப்பு இல் ஆனந்தம் மேவி = நீங்குத லில்லாத இன்பத்தைப் பொருந்தி, சித்தம் மாசு எறிந்து = மனத்தின்க ணிகழுங் குற்றங்களை யெல்லாம் நீக்கி, மெய்யின் திகழ் ஒளி உடையர் = தேகத்தில் விளங்காநின்ற பிரகாசத்தை யுடையவரே யாவர், மனுடர் = மனுடராவார், மொய்த்த தாமதத்தின் ஏனை இராசத குணத்தின் மூழ்கி = நெருங்கிய தாமத குணத்தினும் மற்றைய இராசத குணங்களினும் அழுந்தி, மெய் தகு மொழியின் ஓடு மேவுவார்=உண்மையாகிய தகுந்த சொற்களுடனே பொருந்தி யிருப்பார்கள்.

மெய்யில் ஒளியுடைமையால் தேவர் எனப் படுவர். தேவர்=பிரகாச முடையவர். திவ்=பிரகாசம். மனிதர் தாமதத்தினும் இராசதத்தினும் மூழ்குவர் எனவே, சத்துவகுண முஞ் சிறிது பொருந்துவார்கள் என்பது பெற்றும். (௫)

பின்னுமோர் சிருட்டிக் காகப் பிழிநுகர்ந் தறுகால் பாடும்
பொன்னவிர் கமலத் தோட்டுப் புங்கவ னெண்ணு மேல்வை
கன்னவி றிரடோட் செங்கட் கழிபுலால் கமழும் வெண்பற்
றுன்னிய குறுத்தாட் பூதம் பேயொடுந் தோன்றிற் றன்றே.

(இ-ள்.) அறு கால் = ஆறு கால்களையுடைய வண்டுகள், பிழி நுகர்ந்து பாடும்= தேனை யுண்டு ஒலிக்கின்ற, பொன் அவிர் தோடு கமலம் புங்கவன் எண்ணும் ஏல்வை= பொன் போல விளங்குகின்ற இதழ்களை யுடைய தாமரை மலரின் மேலிருக்கும் பிரமதேவன், பின்னும் ஓர் சிருட்டிக்கு ஆக எண்ணும் ஏல்வை = பின்னரும் ஒரு சிருட்டி

கதி என்னும் புதல்வியையும் பெற்றனள், சந்நதி என்பாளும் கிரதுவினை அணைந்து=சந்நதி யென்னும் புத்திரியும் கிரது வென்னு முனிவனைச் சேர்ந்து, அறுபதின் னாயிரம் வாலகில்லியரை பெற்றாள்=அறுபதினாயிரம் வால கில்லியரை யீன்றாள்.

புலந்திய முனிவர் பிரீதி யென்பாளைச் சேர்ந்து வேதவாகு கும்பயோனி யென்னு மிரு புத்திரரையும், சந்நதி யென்னு மொரு புதல்வியையும் பெற்றனர். அவருட் சந்நதி கிரது முனியைச் சேர்ந்து அறுபதினாயிரம் வாலகில்லியரைப் பெற்றனள் என்பதாம்.

கும்பயோனி கும்போனி யென மரூஉவிற்று. ஓர் யாக கும்பத்திற் றோன்றினாராகலின் முனிவரர்க் கிப்பெயர் மொழியப்படும். கும்போனி என்பதை "தெம்போனி, தேம்போணி" எனப் பாடங் கொள்வாரு முளர். அது முரணென விடுக்க. என்னை? "புலத்தியன் மனையாள் பிரீதியென் றுரைக்கும் பொற்கொடி பொருவறு சிறப்பார்-நலத்தகு தவத்தி னகத்தியன் றன்னை நவையற வளித்தனன்" என வாயு சங்கிதை கூறுவதனானும், "தத்தோத்திரி யென்னு மகத்தியனைப் பிரீதி பெற்றனள்." என விண்டு புராணம் விளம்பலானு மென்க. அற்றேல், "அகத்தியனாரும் தென்றிசைக்கட்போதுகின்றவர் கங்கையா ருழைச் சென்று காவிரியாரையும், யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரையும் வாங்கிக் கொண்டு, புலத்தியனாருழைச்சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையை யவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து" என உச்சிமேற் புலவர் கொளு மொல்காக் கதிரை நச்சினாய வேதமதுரை நச்சினார்க் கினிய ருரைத்தன மாறுமோ வெனின், பிரீதி வயின் தத்தோத்திரி யெனப் பிறந்த விவரே சுவாயம்பு மநுவந்தரத்தில் அகத்தியரா வவதரித்தனர் என வடமொழிப் புராணத் திடமிருத்தலா லன்றென்க. வாலகில்லிய ராவார் ஊர்த்துவ ரேதசராய், அங்குட்ட விரலிறைப் பிரமாண வடிவினராய், சூரியனைப்போன்ற பிரகாச முடையரா யிருக்கு மொருவகை யிருடி கூட்டத்தவர். (அ)

கற்புருவு கொண்டனைய வருந்ததிநல் வசிட்டனருள் கலந்து மேவிச்
சொற்சவனன் ரசனூர்த்த வாகுகாத் திரன்புகலுஞ் சுதபா வோடு
மற்புடைய சுக்கிரன்பின் னநகனென்னு மெழுமகவை யயில்வே லொண்கட்
பொற்புவழிந் தொழுகுமுகப் பூவையையிவ் வுலகுய்யப் பொலிவி னீன்றாள்.

(இ-ள்.) கற்பு உருவு கொண்டு அனைய அருந்ததி=கற்பே யொரு வடிவு கொண்டுற்றாற் போன்ற அருந்ததி யானவள், நல் வசிட்டன் அருள் கலந்து மேவி = நன்மை பொருந்திய வசிட்ட முனிவரை யன்புடனே தழுவிச் சேர்ந்து, சொல் சவனன் ரசன் ஊர்த்தவாகு காத்திரன்=புகழப்படுகின்ற சவனன் இரசன் ஊர்த்தவாகு காத்திரன், புகலும் சுதபா ஓடு=சொல்லப்பட்ட சுதபா வென்பவனோடு, அற்பு உடைய சுக்கிரன்=(யாவரிடத்தும்) அன்பினை யுடைய சுக்கிரன், பின் அநகன் எனும் = கனிட்டனாகிய அநகன் என்று சொல்லப்படுகின்ற, எழு மகவை=ஏழு புத்திரர்களையும், அயில் வேல் ஒண் கண்= கூர்மையாகிய வேலாயுதம் போலும் ஒள்ளிய விழிகளையும், பொற்பு வழிந்து ஒழுகும் முகம் பூவையை = அழகு நிறைந்து தேக்கும் முகத்தினையு முடைய பூவை யென்னும் பெயருள்ள புதல்வியையும், இ உலகு உய்ய பொலிவின் ஈன்றாள்=இந்த நிலவுலகம் பயனடையும்படி சிறப்போடு பெற்றனள்.

"சொற்றரசன் றிரனூர்த்த வாகுசவ னன்புகலுஞ் சுதபா வோடு" எனவும் பாடம். பூவை யென்பாளுக்குப் புண்டரீகை யெனவும் பெயர். அதனை "பழுதறு தவத்தான் மிக்குயர்ந் தனையும் வசிட்டமா முனிவரன் பன்னி-தொழுதகு கற்பி னார்ச்சை யென் றுரைக்குந் தண்மலர்க் கொம்பரன் னவடான்-மழைமதர் நெடுங்கட் புண்டரீ கையெனும் வாணு

தன் மடந்தைதன் னையுமால் - விழைவற வமரும் புதல்வரோ ரெழுவர் தம்மையு மேதக வளித்தாள்;" என்னும் வாயு சங்கிதைச் செய்யுளா னறிக. (௯)

வன்னியெனு மழற்கடவுள் சுவாகையெனு மனைவியிடத் தன்பு கூர்ந்து
பன்னுதிறற் பாவகனைப் பவமானன் றனைச்சுசியைப் பரிவி னீன்று
ளன்னவரி லரணிதனிற் பிறந்தவழல் பவமான னழன்று வீசு
மின்னிடத்திற் பிறந்தவழல் பாவகன்மென் சுசியெனுந்தீ வடவைத் தீயே.

(இ-ள்.) வன்னி எனும் அழல் கடவுள்=வன்னி யென்னும் பெயரை யுடைய அக்கினி தேவன், சுவாகை எனும் மனைவி இடத்து அன்பு கூர்ந்து = சுவாகை யென்கின்ற தனது தேவியிடத்து விருப்பு வைத்துப் புணர்ந்து, பன்னு திறல் பாவகனை = புகழத்தக்க வெற்றியை யுடைய பாவகனையும், பவமானனை சுசியை பரிவின் ஈன்றுன் = பவமானனையும் சுசியென்பவனையும் பெற்றனன், அன்னவரில் = அம்மூவர்களுள், பவமானன் = பவமானன் (யாரெனில்) அரணி இல் பிறந்த அழல் = தீக்கடைகோலி னின்றுந் தோன்றும் அக்கினியாம்; பாவகன்=பாவகனுவான், அழன்று வீசும் மின் இடத்தில் பிறந்த அழல்= வெப்பஞ்செய்து ஒளியைக் காலுகின்ற மின்னலி னின்றுந் தோன்று மக்கினியாம், மென் சுசி எனும் தீ=மிருதுவாய சுசி யென்னு மக்கினி, வடவை தீயே = வடவையி னின்றுந் தோன்றும் நெருப்பேயாம்.

வன்னி = ஓமிக்கப்பட்டதைத் தேவர்களை யடையச் செய்பவன். இவனைப் பிரம தேவனின் பிரதம புத்திரன் என்ப. "காருமிழ் மின்னி னனலிபா வகனு மரணியிற் கனல் பவ மானன்-சூரிய னிடத்தி னழலினைச் சுசியென் றுரைப்பராற் றுகளற வுணர்ந்தோர்." என்ற சைவபுராணக் கூற்றினுல், சுசி யென்னு மக்கினியைச் சூரியனிடத்திற் றோன்று மக்கினியாகவுங் கொள்ப. பாவகன்=சுத்தமாக்குகிறவன். சுசி = சுத்தமுடையவன்; துக்கிக்கச் செய்கின்றவன். தன் இரண்டுஞ் சாரியை. ஏ—தேற்றம். (௧0)

அன்னவழற் கடவுளரோர் மூவர்களு மொவ்வொருவ ரைம்மூன் றாக
மன்னியநாற் பானைந்து மகவீன்றார் மற்றவர்மு தாதை யோடுந்
துன்னுமழற் கடவுளர்தந் தொகையோதி னொன்றொழித்த வைம்பா னாகப்
பன்னிடுவ ரீங்கிவர்கள் சிவநெறியி லினிதொழுகும் பண்பி னோரே.

(இ-ள்.) அன்ன அழல் கடவுளர் ஓர் மூவர்களும்=அந்த வக்கினிதேவர் மூவரும், ஒவ்வொருவர் ஐ மூன்று ஆக=ஒவ்வொருவர் பதினைந்தாக, மன்னிய நாற்பான் ஐந்து மகவு ஈன்றார்=நிலைபெற்ற நாற்பத்தைந்து புத்திரர்களைப் பெற்றனர், அவர் = அம்மூவருடன், முதாதை ஓடும் துன்னும் அழல் கடவுளர் தம் தொகை ஓதின் = பிதா மகனுகிய அக்கினியையுங் கூட்டி வந்த அக்கினி தேவர்களின் தொகையைச் சொல்லு மிடத்து, ஒன்று ஒழித்த ஐம்பான் ஆக பன்னிடுவர்=நாற்பத் தொன்பதின்மராகச் சொல்வார்கள், ஈங்கிவர்கள் சிவ நெறியில் இனிது ஒழுகும் பண்பினோரே=இவர்கள் யாவருஞ் சைவ நன்னெறியிற் சிறந்து நடக்குந் தன்மையை யுடையவரே யாவர். மற்று அசை.

பாவகன், பவமானன், சுசியென்னும் அக்கினிதேவர் மூவரும் ஒவ்வொருவர் பதினைந்து புத்திரர்களாக நாற்பத்தைந்து குமாரரைப் பெற்றனர். ஆக அக்கினி தேவர்களது தொகை நாற்பத்தொன்பதாம்.

பாவகனுக்கு அவ்வியவாகனும், பவமானனுக்குக் கவ்வியவாகன் என்பவனும், சுசிக்கு சகர்க்கன் என்பவனும் பிறந்தனர் என்றும், இவர்களுள் அவ்வியவாகன் தேவர்க்

கும், கவ்விய வாகன் தென்புலத்தார்க்கும், சகரக்கன் அசுரர்க்கும் அக்கினியாக விருப்பர் என்றும், அவர் வழித்தாக மற்றைய அக்கினிதேவர் தோன்றினர் என்றுங் கூறுப். சிவ நெறியி லினி தொழுகும் பண்பாவது—யாவராயினும் வேள்வி கொண்டு அவிசொரியின், அதனை முழு முதற்கடவுளாய சிவபெருமானுக் காக்கிப் பயன்படச்செய்து, சொரிந்தவரின் பழவினைகளைப் போக்கி முத்திகூடச் செய்தலாம். அதனை "இயம்பி யிவர்தம் மரபுதித் திரண்டோ டிருபதிற் றிரட்டி செந்தழல்கள் - வயங்கியே யுறையு மவற்றினின் முறையே மாசற வவியினைச் சொரியிற்-புயங்கமென் டோளும் புனைந்துறை கின்ற புரிசடை யண்ண லுக் காகிப்-பயன்படு மதனுற் பழவினை முழுதும் பற்றுவிட் டகன்றிடு மன்றே" என்னும் வாயு சங்கிதைச் செய்யுளா னறிக. (௧௧)

மறைகிடந்து விளையாடுஞ் செந்நாவே தியனிடத்தின் மகிழ்வி னோடு
முறையின்மகம் புரிந்தாரும் புரியாரு மாய்ப்பிதிர்க்கண் மொய்ம்பி னோடு
மறைதருமக் கினிச்சுவத்தர் வருகிடத ரெனும்பெயரோ டமைந்தார் தேவர்
செறிதருமா னுடரிவர்தம் பிதிர்க்களென மற்றிவரைச் செப்பு வாரால்.

(இ-ள்.) மறை கிடந்து விளையாடும் செம் நா வேதியன் இடத்தில் = வேதங்கள் குடிகொண் டுலாவுஞ் செவ்விய நாவினை யுடைய பிரமனிடத்தி னின்றும், மகிழ்வின் ஓடு முறையின் மகம்புரிந்தாரும் புரியாரும் ஆய் = உவகையுடன் விதிப்படி யாகைத்தைச் செய் தவருஞ் செய்யாதவருமாகி, மொய்ம்பினோடும் அறைதரும் அக்கினிச் சுவத்தர் வருகிடதர் எனும் பெயர் ஓடு பிதிர்க்கள் அமைந்தார் = உறுதியுடன் மொழிகின்ற அக்கினிச் சுவத்தர் வருகிடதர் என்னு நாமத்துடன் பிதிரர்கள் தோன்றினர், இவரை = இவ் விருவகைப் பிதி ரர்களையும், செறி தரு தேவர் மானுடர் இவர் தம் பிதிர்க்கள் என செப்புவார் = நெருங்கி யுள்ள தேவர் மனிதர் என்னு மிவர்களது பிதிர்க்க ளென்று (மேலோர்) கூறுவர். மற்று ஆல் அசைகள்.

அக்கினிச் சுவத்தர் யாகஞ் செய்தவராய்த் தேவப்பிதிர்க்கள் எனவும், வருகிடதர் யாகஞ் செய்யாதவராய் மானுடப்பிதிர்க்க ளெனவுங் கூறப்படுவர். இவ் விருவகையருடன் சவுமியர் என்னும் ஒருவகைப் பிதிரரையுங் கூட்டிப் பிதிரர்கள் மூவகையராக விண்டு புராணத்தில் விளம்பப்பட்டது. அக்கிஷ் வாத்தர், பர்ஹிஷதர் என்னும் வடமொழிகள் அக்கினிச்சுவத்தர் வருகிடதர் எனத் தற்பவமாயிற்று. (௧௨)

உரைத்திடுமக் கினிச்சுவத்த ரெனுந்தேவர் பிதிர்க்களுநீ ளுலப்பில் சீர்த்தி
நிரைத்தவரு கிடதரெனு மானுடர்தம் பிதிர்க்களுநன் னெறிவ ழாது
முருக்கிதழ்மென் சுவதைதுணை முலைமுகடு புயந்திளைப்ப முயங்கிச் செய்ய
திருக்கிளர்மே னியைத்தூய வைதரணி தனையிதயஞ் சிறப்ப வீன்றார்.

(இ-ள்.) உரைத்திடும் அக்கினிச் சுவத்தர் எனும் தேவர் பிதிர்க்களும் = சொல்லப் பட்ட அக்கினிச்சுவத்தர் என்கிற தெய்வப் பிதிரரும், நீள் உலப்பு இல் சீர்த்தி நிரைத்த = மேம்பட்ட அழி வில்லாத புகழினை வரிசையாக் கொண்ட, வருகிடதர் எனும் மானுடர் தம் பிதிர்க்களும் = வருகிடதர் என்னும் மானுடப் பிதிரர்களும், நல் நெறி வழாது = நல்லொ முக்கத்தீற் றவறாமல், முருக்கு இதழ் மென் சுவதை = முருக்க மலர்போன்ற அதரங்களை யுடைய மிருதுவாய சுவதை யென்பவளது, துணை முலை முகடு புயம் திளைப்ப முயங்கி = இரு தனங்களி னுச்சியுந் (தமது) தோள்களிற் றோயும்படி சேர்ந்து, செய்ய திரு கிளர் மேனியை = செவ்விய அழகு விளக்கும் மேனியையென்பவளையும், தூய வைதரணி தனை = சுத்த முடைய வைதரணி யென்பாளையும், இதயம் சிறப்ப ஈன்றார் = மனங் களிக்கப் பெற் றனர். (௧௩)

மேனையெனு மணங்கரசி மலையரையன் புயந்தழுவி வியப்பினோடு
மூனமறு மைந்நாகம் பறவைப்பேர் வரைகங்கை யொளிகுலாய
பானிலவுக் கதிர்பரப்பி நள்ளிருண்மேய்ந் தழகொழுகும் பனிமென்கோட்டுக்
கூனன்மதி வடந்தாழ்ந்த கொம்மைமுலை யுமையிவரைக் குறிப்பி னீன்றாள்.

(இ - ள்.) மேனை எனும் அணங்கு அரசி = மேனை யென்னும் பெயரை யுடைய பெண்ணரசி யானவள், மலை அரையன் புயம் தழுவி = இமய மலையரசனது தோளைச் சேர்ந்து, ஊனம் அறு மைந்நாகம் பறவை பேர் வரை = குற்ற மற்ற மைந்நாகமுங் கிரவுஞ்சமலையும், கங்கை=கங்கையும், ஒளி குலாய பால் நிலவு கதிர் பரப்பி=ஒளி விளங்கும் வெள்ளிய சந்திரிகையை விரித்து, நள் இருள் மேய்ந்து அழகு ஒழுகும்=நடு நிசியையும் விழுங்கி யழகு பொங்குகின்ற, பனி மென் கோடு கூனல் மதி வடம் தாழ்ந்த = குளிர்ந்த மிருதுவாய சிகரத்திற் பொருந்திய வளைந்த பிறைச் சந்திரனைப்போல முத்து மாலை தங்கப் பெற்ற, கொம்மை முலை உமை இவரை குறிப்பின் வியப்பின் ஓடும் ஈன்றாள்=இளங் கொங்கைகளை யுடைய உமாதேவியாரும் ஆகிய இவர்களைப் பய னடையுமாறு மகிழ்வுடன் பெற்றாள்.

மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியா ததனையு முட்டின்றி முடித்தலால், வைதரணி யென்பவள் மேரு மலையைச் சேர்ந்து நியதி, ஆயதி, வேலை யென்னும் புதல்வியரையும், மந்தர மலை யென்னும் புத்திரனையும் பெற்றனள் எனக் கொள்க. நீருக்கும் நெருப்பிற்கும் இறையாயுள்ள தெய்வங்களை யப்பெயர்களாற் கூறல் போல, மலையை யிடமாக வுடைய தெய்வத்தை மலை யெனக் கூறலும் வழக்கு. (௧௪)

கொம்மைமுலை வேய்நெடுந்தோட் குழையலைக்கு மதர்நெடுங்கட் கொவ்
வைச் செவ்வா, யெம்மையா ளுடையவடன் கதைமுன்ன ரிசைத்தனபின் னி
யம்பு தக்கன், செம்மைசேர் புதல்வியர்தம் மக்கள்வருந் தோற்றமனந் தெளி
யச் சொற்றே, மம்மநீர் கேட்பனகள் யாவையுநன் கியம்புவமென் றறைத
லோடும்.

(இ-ள்.) கொம்மை முலை=இளந் தனங்களையும், வேய் நெடு தோள் = மூங்கில் போன்ற நீண்ட தோள்களையும், குழை அலைக்கும் மதர் நெடு கண்=குண்டலங்களைத் தாக்கும் மதர்ப்புள்ள நீண்ட விழிகளையும், கொவ்வை செம் வாய்=கோவைப் பழம்போன்ற சிவந்த வாயினையுமுடைய, எம்மை ஆள் உடையவள் தன்கதை = எம்மை யடிமையாக வுடைய பார்வதி தேவியின் சரிதத்தை, முன்னர் இசைத்தனம் = முன்னர்க் கூறினேம், பின்=பின்னர், இயம்பு தக்கன் செம்மை சேர் புதல்வியர் தம் மக்கள் வரும் தோற்றம்= சொல்லப்பட்ட தக்கனது அழகு பொருந்திய புதல்வியரின் சந்ததிகள் தோன்றிய வரலாற்றையும், மனம் தெளிய சொற்றேம்=மனந் தெளிவடையுமாறு கூறினேம், நீர் கேட்பனகள் யாவையும்=(இன்னும்) நீவிர் கேட்கின்ற வைக ளெல்லாவற்றையும், நன்கு இயம்புவம் என்று அறைதலும்=தெளிவாகச் சொல்லுவே மென்று (திருமால்) கூறுதலும்.

இதுமுத லிருசெய்யுள் குளகம். அம்ம ஓடு - அசைநிலைகள். (௧௫)

வாளமரி னறம்புரியு மன்னவர்தந் தோற்றநனி வழங்கு கென்னப்
பாளைகமழ் நறுங்கூந்தற் புலோமசைவெம் முலையானைப் பாகன் றாய
கேள்வியினற் றுறைபோய மகதியாழ் முனிவணங்கிக் கேட்ட லோடு
மாளரியா யிரணியன்ற னுரம்பிளந்த நெடுமாய னறைத லுற்றான்.

(இ-ள்.) பாளை கமழ் நறு கூந்தல் புலோமசை = (கமுகம்) பாளைபோல வாசனை மணக்கின்ற நல்ல அளகத்தினை யுடைய இந்திராணியினது, வெம் முலை யானை பாகன்=

விரும்பப்படுந் தனமாகிய யானையைக் கையாளு மிந்திரனும், தூய கேள்வியின் நல் துறை போய=பரிசுத்தமுடைய கேள்வியறிவாகிய நல்ல பகுதியிற் றேறுதலடைந்த, மகதி யாழ் முனி=மகதியென்னும் யாழினையுடைய நாரதமுனிவரும், வணங்கி=பணிந்து, வாள் அமரின் அறம் புரியும் மன்னவர் தம் தோற்றம் = வாட்போரினாலே (தமது) தருமத்தை நடாத்து மரசர்களது பிறப்பு வரலாற்றை, நனி வழங்குக என்ன கேட்டலும் = விரிவாகச் சொல்லியருள்க வென்று கேட்குதலும், ஆள் அரி ஆய்=வலிய நரசிங்க வடிவாகி, இரணியன் தன் உரம் பிளந்த=இரணியனது மார்பினைக் கிழித்துக்கொன்ற, நெடு மாயன் அறைதல் உற்றான்=நீண்ட வடிவினையுடைய திருமால் கூறுவாராயினர் என்க.

மகதி என்றது பேரியாழ் எனக் கொள்க. அருக்கலம், பெருங்கல மென்பவு மது. அஃதாவது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும், இப்பெற்றிக் கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று, ஆயிர நரம்பு தொடுத்து நடப்பது. அது? "ஆயிர நரம்பிற் றாதியா ழாகு - மேனை யுறுப்பு மொப்பன கொளலே-பத்தர தளவுங் கோட்டின தளவு-மொத்த வென்ப விருமூன் றிரட்டி-வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்" என்ற நாடகத்தமிழ்நூற் சூத்திரத்தாற் கண்டது. இசையிற் பெரியோன் நாரதமுனி யாகலானும், "தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்- புலமக ளாளர் புரிநரப் பாயிரம் - வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச் - செலவு முறை யெல்லாஞ் செல்கையிற் றெரிந்து-நாரத கீதக் கேள்வி நுனித்து" எனப் பெருங் கதை யென்னும் உதயணகாவியந் துரைத்துளா ராகலானும், பேரியாழ் முனிவரனார்க்கே பொருந்தியதா மென்க. (௧௬)

முனிவர் வமிசமுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௩௮௧.

பதினான்காவது

தக்கனைச் சபித்த அத்தியாயம்.

அஃதாவது தக்கனது சந்ததிகளின் வரலாற்றைக் கூறி, மநுவாச மரபு சொல்லவந்தார் தக்கன் சிவபெருமானாற் சபிக்கப்பட்டு மாநிலத்து மானுட வேந்தனாய்ப் பிறந்த சரிதத்தைக் கூறிய பாகம்.

அறுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அலங்கிலைவேற் சுவாயம்பு மநுவென்போன் சதரூபை யாக மேவி
யிலங்குபுகழ்ப் பிரியவிர தனைப்புகழுத் தானபா தனையாங் கீன்றான்
வலங்கெழுதோ ளுத்தான பாதனியற் றுருவனையுண் மகிழ வீன்றான்
றுலங்கியசம் புவைமணந்து தானியனைச் சிட்டனையத் துருவ னீன்றான்.

(இ-ள்.) அலங்கு இலை வேல் சுவாயம்பு மநு என்போன் = அசைகின்ற இலை போன்ற வேலாயுதத்தை யுடைய சுவாயம்பு மநு வென்பவன், சதரூபை ஆகம் மேவி= சதரூபை யென்பவளின் மார்பினைப் புல்லி, புகழ் இலங்கு பிரிய விரதனை=கீர்த்தி விளங்கும் பிரியவிரதனையும், புகழ் உத்தான பாதனை ஈன்றான்=கீர்த்தியை யுடைய உத்தான பாத னென்பவனையும் பெற்றனன், (அவருள்) வலம் கெழு தோள் உத்தானபாதன்= வெற்றி பொருந்திய புயங்களை யுடைய உத்தானபாத னென்பவன், இயல் துருவனை உள் மகிழ ஈன்றான்=அழகின் மிக்க துருவன் என்னும் புத்திரனை மனங்களிப்புறப் பெற்றான்,

ஆ துருவன்= அந்தத் துருவனென்பவன், துலங்கிய சம்புவை மணந்து = பிரகாசிக்குஞ் சம்பு வென்பவளை விவாகஞ் செய்து, தானியனை சிட்டனை ஈன்றான்=தானியனையுஞ் சிட்டனென்பவனையும் பெற்றனன் என்க.

உத்தான பாதனுக்குச் சுருசி, சுநீதி யென்று இருமனைவிய ரிருந்தனர். அவருள் சுருசி யிடத்திற் றான் உத்தான பாதன் அதிக பற்றுடையவன். சுருசிக்கு உத்தமன் என்பவனும், சுநீதிக்குத் துருவ னென்பவனும் பிறந்திருந்தனர். ஒருநாள் உத்தமன் றன் றந்தை தொடையி லிருக்கத் துருவனு மவன்றொடையி லேறி யிருந்தனன். அது கண்ட சுருசி யென்பவள் மனங் கொதித்துத் துருவனே! அவர் தொடையில் என் புத்திரனுடன் ஒப்பாக விருத்தற்கு நீதகுந்தவனல்லை. ஆதலின் இறங்கக்கடவை யென்று மொழிந்தது கேட்ட துருவன் தந்தையின் முகத்தைக் கண்ணீர் சொரிந்து பார்த்தான். தந்தை சுருசி மீது கொண்ட மோகத்தினாலே சிறிது மிரக்கமின்றி வாளா விருத்தனேக்கி யழுதழுது தாய்பாற் சார்ந்தான். அவட்கு நிகழ்ந்த வெல்லாங் கூறித் துக்கமும் நாணமும் மானமும் ஒருங்கு பிடித்து மனத்தை யலைப்பத் தன்னுளக் கருத்தை யன்னைக்குத் தெரிவித்து,கௌசிகமுனிவர்பாற் சென்று உபதேசம் பெற்றுத் தவஞ் செய்தான். தவநிலையில் வியாபக பரம்பொருள் அவனுளத்திற் குடிகொண்டிருந்த விசேடத்தால் இடக்காலைத் தூக்கி நின்ற போது பூமியின் வலப்பாகமும், வலக்காலைத் தூக்கி நின்ற போது பூமியினிடப்பாகமுந் தாழ்ந்தது. பாதத்தின் அங்குட்ட விரலை யூன்றும் போது தன்னிடத்துள்ள பொருள்களோடு பூமண்டல மெங்கும் நடுங்கிற்று. அதனை யறிந்த யாமதேவர்கள் இந்திரனுடன் சொல்ல அவன் தவத்திற் கிடையூறாக அநேக விக்கினங்களைச் செய்வித்தனன். அவைகளுக் கெல்லாங் கலங்காத மனத்தை யுடையவனாய்த் தவஞ்செய்தலைக் கண்ட இந்திராதி தேவர்கள் திருமாலிடம் முறையிட அவர்தோன்றி, மைந்த! நினக்கு வேண்டிய தென்னென வினவ, அவன் உன்னதபதவி வேண்டு மென்றனன். திருமால் குமார! மூவுலகங்களுக்கும் மேற்பட்டதாய் நட்சத்திர கிரகங்க ளெவற்றுக்கும் ஆதாரமாய், சூரிய சந்திராங்காரக புதகுரு சுக்கிர மந்த மண்டலங்களுக்கும் மேலதாய் விளங்குந் துருவபதத்தை யுனக் களித்தேம். நீடித்த ஆயுள் முதலிய பேறுகளைப் பெற்று நின் றாயுடனிருக்க வரந்தந்தேம் என்று மறைந்தனர். அவன் துருவ பதத்தைப் பெற்றமையால் துருவன் எனச் சிறப்புப் பெயர்கொண்டான். அவன் புத்திரர்களைச் சிஷ்டி, பவியன் எனவுங் கூறுப.(க)

எட்டானைத் தம்பத்தோ டிகல்புரிதன் சயத்தம்ப மினிதி னாட்டுஞ்
சிட்டனிலவிதழ்ச்சுமதி முலைதோய்ந்து ரிபுவிருக தேசன் விப்ரன்
மட்டவிழ்தாரிபுஞ்சயன்சொல் விருகலனென் பவர்ப்பயந்தான்ரிபுவும்வாய்ந்த
பெட்பினொடும் பிருகதிதன் முலைதோய்ந்து சக்குசனைப் பெற்றா னன்றே.

(இ-ள்.) எட்டு ஆனை தம்பத்தோடு=அட்டதிக்கு யானைகளை(கட்டப்பட்ட)தூண்களோடு, இகல் புரி தன் சயத்தம்பம் இனிதின் நாட்டும்=பகை கொள்கின்ற தனது வெற்றித்தம்பத்தை நிலைபெற நிறுத்திய, சிட்டன்=சிட்ட னென்பவன், இலவு இதழ் சுமதி முலை தோய்ந்து=இலவ மலர்போன்ற அதரங்களை யுடைய சுமதியின் றனங்களைப் புல்லி, ரிபு விருக தேசன் விப்ரன் = இரிபு விருகதேசன் விப்பிரன், மட்டு அவிழ் தார் ரிபுஞ்சயன்=தேன் சிந்துகின்ற மாலையை யணிந்த இரிபுஞ்சயன், சொல் விருகலன் என்பவர் பயந்தான்=சொல்லப்பட்ட விருகலன் என்னு மைந்து குமாரரைப் பெற்றான், ரிபுவும்=(அவருள்) இரிபு வென்பவன், வாய்ந்த பெட்பின் ஒடும் பிருகதி தன் முலை தோய்ந்து=பொருந்திய ஆசையோடும் பிருகதி யென்பவளது தனங்களைப் புல்லி, நன்று சக்குசனைப் பெற்றான்=நன்மையாகச் சக்குசன் என்பவனைப் பெற்றனன்.

சிட்டனென்பவன் சுமதியுடன்கூடி இரிபு, விருகதேசன், விப்பிரன், இரிபுஞ்சயன், விருகலன் என்னும் ஐவரைப் பெற்றான். அவருள் இரிபு வென்பவன் பிருகதி

யைச் சேர்ந்து சக்குசனைப் பெற்றான். சக்குசனோடு சர்வதேசன் என்பவனையும் பெற்றன னென்று சிலவிடத்துக் கூறப்பட்டிருக்கின்றது. (உ)

தீய்த்துமிழும் வெள்வேற்கைச் சக்குசனு மனமருட்டுஞ் சிறப்பு வாய்ந்த
வேய்த்தடந்தோட் புட்கரணி முலைதோய்ந்து சாக்குடனை விருப்பி னீன்று
னேத்துபுகழ்ச் சாக்குடனு மணுக்கிடந்து கதிரெறிக்கு மைதேந் தல்குல்
வாய்த்தபொலங் கொடியனைய நாட்டுவலை தனையினிதின் வதுவை செய்தான்.

(இ-ள்.) தீய்த்து உமிழும் வெள் வேல் கை ச்க்குசனும்=தீயச்செய்து பொறிகக்கும் வெள்ளிய வேலாயுதத்தைத் தாங்கிய கையினையுடைய சக்குசனென்பவனும், மனம் மருட்டும் சிறப்பு வாய்ந்த=மனத்தை மயக்கும் அழகினைக் கொண்ட, வேய் தடம் தோள் புட்கரணி முலை தோய்ந்து=மூங்கில் போன்ற பெருமை யமைந்த தோளை யுடைய புட்கரணி யென்பவளின் றனங்களைத் தழுவி, சாக்குடனை விருப்பின் ஈன்றான் = சாக்குடனென்பவனை யுவகையோடு பெற்றனன், ஏத்து புகழ் சாக்குடனும்=துதிக்கப் படுகின்ற கீர்த்தியினை யுடைய சாக்குடனென்பவனும், மணி கிடந்து கதிர் எறிக்கும் ஐது ஏந்து அல்குல் வாய்த்த—அரைப்பட்டிகை கிடந்து ஒளியை வீசுகின்ற அழகை வைத்திருக்கும் நிதம்பத்தைக் கொண்ட, பொலம் கொடி அனைய நாட்டுவலை தனை=பொற்கொடிபோன்ற நாட்டுவலையென்பவளை, இனிதின் வதுவை செய்தான்=சிறப்புடன் மணஞ் செய்தனன்.

புட்கரணி யாவாள் வருண சந்ததியிற் பிறந்த வீரணப் பிரசாபதியின் புதல்வி. சாக்குடன்-ஆறுவது மநுவந்தரத்திற் கதிபதி. நாட்டுவலையாவாள் வைராசன் என்னும் பிரசாபதியின் புத்திரி. பொன் என்னுஞ் சொல் பொலம் என்றாய், வருமொழிக் கிணமாத் திரிந்ததனை "பொன்னென் கிளவி யீறுகெட முறையின் - முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ் - செய்யுண் மருங்கிற் றொடரிய லான." என்னுந் தொல்காப்பிய விதியா னமைக்க. (ங)

ஐதெழிலார் நாட்டுவலை யன்பினொடு மலங்கலந்தா ரூரு வெய்தா
நெய்திகழ்வேற் சுசிபூரு வக்கினிசத் தியவான்சூழ் நிலனேழ் போற்றச்
செய்தவங்கூர் சுத்துய்ம்மன் சதத்துய்ம்ம னுடனதிராத் திரனே யோங்கு
மெய்தருஞ்சீ ரபிமன்யு தபசுவியிப் பதின்மரையு மினிதி னீன்றாள்.

(இ-ள்.) ஐது எழில் ஆர் நாட்டுவலை = மிக்க அழகினை யுடைய நாட்டுவலை யென்பாள், அன்பின் ஒடு=அன்புடனே, அலங்கல் அம் தார் ஊரு=விளங்குதல் கொண்ட அழகிய மாலையை யணிந்த ஊருவும், வெய்து ஆம் நெய் திகழ் வேல் சுசி பூரு அக்கினி சத்தியவான்=கொடிய நிணம் விளங்கும் வேலேந்திய சுசியும் பூருவும் அக்கினியுஞ் சத்தியவானும், சூழ் ஏழ் நிலன் போற்ற செய் தவம் கூர் சுத்துய்ம்மன் = (கடலாற்) சூழப்பட்ட ஏழுதீவி னுள்ளாரும் புகழும்படி செய்யப் படுகின்ற தவத்திற் சிறந்த சுத்தியும்நனும், சதத்துய்ம்மன் உடன் அதிராத்திரன்=சதத்தியும்நனும் அதிராத்திரனும், ஓங்கும் எய்த அரு சீர் அபிமன்யு=உயர்ந்த அடைதற்கரிய சிறப்பினை யுடைய அபிமன்யுவும், தபசுவி இ பதின்மரையும்=தபசுவியும் ஆகிய இந்தப் பத்துச் சந்ததிகளையும், இனிதின் ஈன்றாள்=நன்மையுடன் பெற்றாள்.

உம்-ஏ-அசைநிலைகள். அக்கினியை அக்கினிட்டோமன் எனவும் வழங்குவர். நாட்டுவலை யென்பாள் ஊரு, பூரு, அக்கினி, சத்தியவான், சுசி, சுத்தியும்நன், சதத்தியும்நன், அதிராத்திரன், அபிமன்யு தபசுவி யென்னும் பத்து மைந்தரைப் பெற்றாள் என்பதாம். ()

ஆங்கவரி லூருவென்போ னம்பலைக்குக் கருந்தடங்க ணாக்கி னேயி
லிங்குதட முலைபுணர்ந்திட் டங்கனைநற் சுமனசனை விளங்கு வேற்கை

யோங்குதிற லுக்கிரனைக் கிரீசனைச்சா ரனைக்கயனை யுவப்பினீன்று
னீங்கிவரி லங்கனென்போன் வேனனெனும் புகழ்வேந்தையினிதினீன்றான்.

(இ-ள்.) ஆங்கவரில்=அவர்களுள், ஊரு என்போன்=ஊரு வென்பவன், அம்பு அலைக்கும் கரு தடம் கண் ஆக்கினேயி = அம்பினையும் வென்ற கருமையுற் றகன்ற விழிகளை யுடைய ஆக்கினேயி யென்பவளது,வீங்கு தட முலை புணர்ந்திட்டு=பூரித்துப் பெருத்த தனங்களைத் தழுவி, அங்கனை நல் சுமனசனை=அங்கனையும் நல்ல சுமனசனையும், விளங்கு வேல் கை ஒங்கு திறல் உக்கிரனை = பிரகாசிக்கின்ற வேலாயுதத்தை யேந்திய கைகளை யுடைய மிக்க வலியமைந்த உக்கிரனையும், கிரீசனை சாரனை கயனை உவப்பின் ஈன்றான்= கிரீசனையுஞ் சாரனையுங் கயனையும் மகிழ்வுடன் பெற்றான், ஈங்கு இவரில்=இவ்விடத்திற் கூறப்பட்ட இவர்களுள், அங்கன் என்போன்=அங்கன் என்பவன், வேனன் எனும் புகழ் வேந்தை இனிதின் ஈன்றான்= வேனனென்னுங் கீர்த்தி யுள்ள வரசனைப் பயனுண்டாகப் பெற்றான்.

ஆக்கினேயி=அக்கினியின்மகள். அங்கன் மிருத்துவின் புத்திரியான சுநீதையைக் கூடி வேனனைப் பெற்றனன் என்டதாம். (ரு)

அரசு விழுங்கி வாய்காய்ந்த வயில்வே லுழவன் வேனென்போன்
கரைகொன் றிரங்கு கடல்வலய முழுது மகவான் கன்றாக
வுரிய பொருள்க ளனைத்தினையும் பாலாய்க் கறந்தின் னுயிர்புரந்த
பிருது வென்னு மணிமவுலிப் பெரியோன் றன்னைப் பெற்றனனால்.

(இ-ள்.) அரசு விழுங்கி வாய் காய்ந்த அயில் வேல் உழவன் = (பகை) அரசர்களை விழுங்கி (பின்னரும் அவர் கிடையாமையால்) வாய் வற்றிய கூரிய வேலாயுதத்தைத் தாங்கும் போருழவனாகிய, வேன் என்போன்=வேனன் என்னும் அரசனானவன், கரை கொன்று இரங்கு கடல் வலயம் முழுதும்=கரையை யழித்து இரங்காநிற்குஞ் சமுத்திர வட்டமாகிய பூமிதேவியைப் (பசுவாகவும்) , மகவான் கன்று ஆக=இந்திரனைக் கன்றாகவுங்கொண்டு, உரிய பொருள்கள் அனைத்தையும் பால் ஆ கறந்து = அநுபவித்தற் குரிய பொருள்களெல்லாவற்றையும் பாலாகக் கறந்து, இன் உயிர் புரந்த=இனிய வுயிர்களைப் பாதுகாத்த, பிருது என்னும் மணி மவுலி பெரியோனை = பிருது என்னும் பெயரையுடைய இரத்தின கிரீட மணிந்த பெருமையிற் சிறந்த நரேந்திரனை, பெற்றனன்=பெற்றனன்.

வேனனின் வலக்கையைக் கடைந்து பிருதுவை யுண்டாக்கிய சரிதமாவது—வேனனென்பவன் மாதாமகனான மிருத்துவின் ரூடத்தால் தானம் தவம் யாகமுதலிய புண்ணியச் செய்கைகளை யொருவருஞ் செய்யக் கூடாதென்று ஆஞ்ஞாபித்தனன். அதனைய றிந்த இருடிகள் பற்பல புத்திகளைச் சொல்லியுங் கேளாமையால் அவர்க்குக் கோபமூண்டு தருப்பையினா லடித்தனர். அதனால் அரச னுயிர் துறக்கச் சனங்க ளொருவரை யொருவர் வருத்திப் பொருளை யபகரிக்கத் தொடங்கினர். அதுகண்ட விருடிகள் அரசனில்லாமையா லன்றோ இத்தீங்குகள் நேர்ந்தன வென்று வருத்தமுற்று அரசு செய்ய ஓர் புத்திரனிமித்தம் வேனனின் தொடையைக் கடைந்தனர். அதிலிருந்து கருநிறமும், விகாரமுகமும், குறுத்த சரீரமுங் கொண்டு ஒரு மனுடன் தோன்றி, நான் என்னசெய்ய வேண்டுமென்று முனிவரை வினவ, அவர்கள் (நிஷீத) உட்காரு என்றனர். அதனால் அவன் நிஷாதன் என்னும் பெயர் பெற்றனன். அன்றுமுதல் நிடாதர் என்னு மொருவகைச் சாதி யுலகத்தி லுண்டாயிற்று. பின்னர் வேனனுடைய வலக்கையைக்க டைந்து அக்கினியை யுண்டாக்கிப் பிரமனைக் குறித்து யாகஞ் செய்ய வதினின்றும் பிருது தோன்றினன். அந்த எக்கியத்

தின் சுத்தியா காலத்திலே சூதனும் மாகதனும் பிறந்தனர். இங்ஙனமாகப் பிருதுமன்ன னரசாட்சியைக் கைக்கொண்ட போது பிரசைக ளெல்லாரும் வந்து, அரசனே! பூமி தேவி நுந்தந்தை யிறந்தமையால் ஒஷதிகளைத் தனக்குள்ளே யிழுத்துக் கொண்டனள். அதனால் ஆகாரமின்றி வருந்துகின்றோம் என்று முறையிட்டனர். அதனைக் கேட்ட பிருது ராசன் கோபங்கொண்டு அசனவ மென்னும் வில்லையுந் தேவ் பாணங்களையுங் கையி லெடுத்துப் பூமியின்மே லெதிர்த்தான். பூமிதேவியானவள் பயந்து பசுரூபத்தைத் தரித் தோடினள். இவனும் பின்றொடர்ந்து வருவதை யறிந்த பூமிதேவி என் பிராணனைக்கொல்லாமல் விடவேண்டு மென்று அபயமிட்டு, அரசனே! ஒரு கன்றை யுண்டாக்கிக் கொடுப்பையேல் ஒஷதிகளை யெல்லாம் பாலாக் கொடுப்பே னென்ன, அரச னதற்கிசைந்து இந்திரன் சந்திரன் முதலாயினோரைக் கன்றுகளாக்கி, ஒஷதிகளை யெல்லாம் பாலாக் கறந்து வேண்டிய வளங்களையு முண்டாக்கிப் பூமிதேவியையுங் கொல்லாமல் முன்போல வைத்துக் காத்தான். அதனாற் பூமிக்குப் பிருதிவி யென்ற நாம முண்டாயிற்று என்பதாம். பிருதுராசனுக்கு வைனியன் எனவும் பெயர், வேனனுடைய மகனாதலின். (௬)

அன்னோன் வேள்விச் சாலைதனிற் காதை நவில்வா னழனேமி
முன்னோன் சூத முனியாகப் போந்தா னென்பர் முதுக்குறைந்தோர்
பைந்நா கத்தின் கதிர்பொழியு நெற்றிக் கிடந்த பாரேழுந்
தன்னோ ராணை தனிசெலுத்தும் பிருது மாழ்கி யிவைசாற்றும்.

(இ-ள்.) அன்னோன் வேள்வி சாலை தனில்=அந்தப் பிருதுமன்னனது யாகசாலையினிடத்து, காதை நவில்வான் = புராண சரிதங்களைச் சொல்லும்படி, அழல் நேமி முன்னோன்=வெப்பஞ் செய்யுஞ் சக்கராயுதத்தை யுடைய திருமால், சூத முனி ஆக போந்தான் = சூதமுனி வடிவு கொண்டு தோன்றினர் என்று, முதுக்குறைந்தோர் என்பர்= அறிவுடையோர் கூறு கிற்பர், பை நாகத்தின் கதிர் பொழியும் நெற்றி கிடந்த ஏழு பாரும்=படங்களை யுடைய ஆதிசேடனது ஒளியைக் காலுகின்ற தலையிற் றங்கிய ஏழுலகங்களி னிடத்தும், தன் ஓர் ஆணை தனி செலுத்தும்=தனது ஒப்பற்ற செங்கோலைப் பொதுவின்றி நடாத்தும், பிருது மாழ்கி இவை சாற்றும் = பிருதுராசன் வருத்த முற்று இவற்றைச் சொல்வான். (௭)

மழலைத் தீஞ்சொற் கிண்கிணிக்கான் மைந்த ரில்லா வரசாட்சி
விழையே னென்னு வலங்குளைய சிங்கா தனம்விட் டிழிந்தேகி
மழைவீழ்ந் துறங்கு நெடுங்குடுமிக் கோவர்த் தனமால் வரையெய்திக்
கழையா லானின் கணங்குவித்த கண்ணற் பழிச்சித் தவம்புரிந்தான்.

(இ-ள்.) தீம் மழலை சொல் கிண்கிணி கால்=இனிமை யாகிய குதலைச் சொற்களையுஞ் சதங்கை புனைந்த காலையு முடைய, மைந்தர் இல்லா அரசு ஆட்சி=புத்திரரில்லாத அரசுரிமையை, விழையேன் என்னு = விரும்ப மாட்டே னென்று, அலங்கு உளைய சிங்காதனம் விட்டு இழிந்து = விளங்காநின்ற பிடர் மயிரினை யுடைய சிங்கத்தாற் றாங்கப்படுகின்ற ஆசனத்தி னின்று மிறங்கி, ஏகி= (நகரத்தை விட்டு) சென்று, மழை வீழ்ந்து உறங்கும் நெடுங்குடுமி = மேகம் படிந்து தங்கு கின்ற நீண்ட சிகரங்களைக் கொண்ட, மால் கோவர்த்தனம் வரை எய்தி=பெரிய கோவர்த்தன மென்னு மலையை யடைந்து, கழையால் ஆனின் கணம் குவித்த=வேய்ங்குழலாற் பசுக் கூட்டங்களைத் தொகுதி செய்த, கண்ணன் பழிச்சி தவம் புரிந்தான்=கண்ண மூர்த்தியை (நினைத்துத்) துதிசெய்து தவத்தைச் செய்தனன்.

குழலிசை யாழிசையினு மிக்க இனிமை பயப்பது மழலை யாகலின் "மழலைத் தீஞ்சொல்" என்றான். இங்ஙனமே "குழலினிது யாழினி தென்பதம் மக்கள் - மழலைச்சொற் கேளா தவர்" என மாதானுபங்கியும், "சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலு - மென்ன பயனுடைத்தா மின்முகத்து - முன்னங், குறுகுதலைக், கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச் - சிறுகுதலை கேளாச் செவி" என நளவெண்பாவாரும், ஒதியருளினர். மகப்பேற்றின் சிறப்பை "படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு-முடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்-குறுகுறு நடந்து சிறுகை நீட்டி - யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து-நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து-மயக்குறு மக்களை யில்லோர்-பயக்குறை யில்லைதாம் வாழு நாளே" எனப் புறநானூற்றினும், "உயர்குடி நனியிற் றோன்ற லூனமி லியாக்கை யாதன் - மயர்வறு கழிந்த கேள்வித் தன்மையால் வல்ல ராதல்-பெரிதுணர் வறிவே யாதல் பேரறக் கோட லென்றாங் - கரிதிவை பெறுதல் கூடா பெற்றவர் மக்க ளென்பார்." என வளையாபதியினும், உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே-வந்து தாடொழு மரசியல் வளனெலாம் பெறினு-மிந்தி ராதியர் பெரும் பதத் திருக்கைபெற் றிடினு-மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே." எனப் பிரமோத்தர காண்டத்தும், ஏனையவற்றும் இயம்பியவா றறிக. (அ)

இழுக்கு தேறற் செஞ்சேற்றிற் பெடைவண் டெய்திச் சேவன்முனம்
வழுக்கி வீழ்ந்து நாணெய்தும் வண்டா மரையாள் புணர்மார்ப
னொழுக்கந் தன்னி னிகரில்லா வரச னுஞற்றுந் தவநோக்கிப்
பழுத்த கனிவிண் டமுதுகுக்கும் பான்மை போல விவையுரைப்பான்.

(இ-ள்.) பெடை வண்டு = பெண் வண்டானது, இழுக்கு தேறல் செம் சேற்றின் = ஈர்க்குங் குணம் வாய்ந்த தேனுலாகிய செந்நிறச் சேற்றின்கண், சேவல் முனம் வழுக்கி வீழ்ந்து = ஆண் வண்டின் முன்னர் வழுவி விழுந்து, நாண் எய்தும் வண் தாமரையாள் புணர் மார்பன் = வெட்க மடைதற் கிடமாயுள்ள வளவிய செந்தாமரைப் பூவின்கணிருக்குந் திருமகள் நாயகனாகிய விட்டுணுமூர்த்தி, ஒழுக்கம் தன்னில் நிகர் இல்லா அரசன் உஞற்றும் தவம் நோக்கி = அறவொழுக்கத்தி லொப்பில்லாத பிருது மன்னன் செய்யுந் தவத்தை யறிந்து, எய்தி = (அவற்கு முன்) தோன்றி, பழுத்த கனி விண்டு = முதிர்ந்த பழம் வாய்விட்டு (வெடித்து) அமுது உகுக்கும் பான்மை போல = அமிர்தத்தைப் பொழியுந் தன்மை போல, இவை உரைப்பான் = இவற்றைக் கூறுவார். (௯)

பாற்றி னுடன்வெங் கழுதுதொடர் பரிதி வேலோய் பன்னெடுநா
ளாற்றுந் தவங்கண் டுளமகிழ்ந்தே மமுதுங் கனியுந் தனிகுலவி
யூற்று மழலை மொழிச்சிறுவ ரிருவர் தந்தே மெனவோதிக்
கோற்றேன் குதலைச் செழுங்கமலை கொழுநன் மறைந்து சென்றனனால்.

(இ-ள்.) பாறு உடன் வெம் கழுது தொடர் = பருந்துகளோடு வெவ்விய பேய்களுஞ் சூழ்ந்து திரிகின்ற, பரிதி வேலோய் = சூரியனைப் போன்ற வேலேந்திய மன்னனே, பல் நெடு நாள் ஆற்று தவம் கண்டு = பற்பல நாளாக நீ செய்யுந் தவத்தை யறிந்து, உளம் மகிழ்ந்தேம் = மன வுவகை யுற்றேம், அமுதும் கனியும் தனி குலவி ஊற்றும் = தேவாமிர்தமுங் (கற்பகக்) கனியு மொருங்கு சேர்ந்து துளித்தாற்போல, மழலை மொழி சிறுவர் இருவர் தந்தேம் = குதலைச் சொற்களை வசனிக்கின்ற புத்திர ரிருவரை யளித்தேம், என ஓதி = என்று சொல்லி, கோல் தேன் குதலை = கொம்புத்தேனை யொத்த (இனிய) மென்சொல்லை யுடைய, செழு கமலை கொழுநன் மறைந்து சென்றனன் = செழுமை யாகிய தாமரை மலரில் வீற்றிருக்குந் திருமகணாயகன் கரந்து போயினர். இன் னூல் சாரியைகள்.

மழையி னுதவுங் கொடைத்தடக்கைப் பிருது வென்னும் வாள்வேந்த
னழகு முலையுஞ் சுமக்கலா திடுகு மிடையந் தர்த்தாளைக்
கழைமென் பசுந்தோ ணலனுகர்ந்து தானன் சிகண்டி தமைக்கண்டா
னிழைவே யந்தர்த் தானனவிர்த் தான னெனுஞ்சேய் தனையீன்றான்.

(இ-ள்.) மழையின் உதவும் கொடை தட கை = மேகத்தைப் போற் கொடுக்குங் கொடை வாய்ந்த பெருமை யாகிய கையினிடத்து, வாள் பிருது என்னும் வேந்தன் = வாளேந்திய பிருது வென்னு மரசன், அழகு முலை சுமக்கலாது = அழகிய தனபாரத்தைத் தாங்கமாட்டாது, இடுகும் இடை அந்தர்த்தாளை = தேய்ந்த மருங்கிலை யுடைய அந்தர்த்தாள் என்பவளது, கழை மென் பசு தோள் நலன் நுகர்ந்து = மூங்கில்போன்ற மெல்லிய பசுமையாகிய தோளின்பத்தை யார்ந்து, தானன் சிகண்டி தமை கண்டான் = அந்தர்த்தானன் சிகண்டி யென்னும் புத்திரர்களைப் பெற்றான், (அவருள்) இழை வேய் அந்தர்த்தானன் = ஆபரணங்களை யணிந்த அந்தர்த்தானன் என்பவன், அவிர்த்தானன் எனும் சேய் தனை ஈன்றான் = அவிர்த்தானன் என்னும் புத்திரனைப் பெற்றனன்.

பிருது மன்னன் அந்தர்த்தானன், வாதியென்னு மிருபிள்ளைகளைப் பெற்றான் என்றும், அவருள் அந்தர்த்தானன் சிகண்டினி யென்னும் பெண்ணைச் சேர்ந்து அவிர்த்தானனைப் பெற்றா னென்றும், வேறோர் புராணம் விளம்பா நிற்கும். முலையும்-உம், சாரியை. என்பாளை—ஐ, உருபு மயக்கம். (கக)

ஒன்னார் மகளிர் கலன்கழிப்ப வொளிறும் வடிவா ளுறைகழிக்கும்
பொன்னார்தடந்தோட்சிகண்டியென்போன் பொருவில்சுசீலன்றனைப்பயந்தா
னன்னோ னிமய வரையடைந்து கங்கை யாற்றி னகன்கரையின்
மின்னு கதிரோன் மண்டலத்தின் விருப்பி லீசன் றாள்போற்ற.

(இ-ள்.) ஒன்னார் மகளிர் கலன் கழிப்ப = பகைவரது மனைவியர் (தத்தம்) மங்கிலியத்தை நீக்கும்படி, ஒளிறும் வடி வாள் உறை கழிக்கும் = பிரகாசிக்குங் கூரிய வாளாயுதத்தை யுறையினின்று மெடுத்துருவும், பொன் ஆர் தடம் தோள் சிகண்டி என்போன் = வீரலக்குமி குடிகொளப் பெற்ற பெரிய புயங்களை யுடைய சிகண்டி யென்பவன், பொரு இல் சுசீலனை பயந்தான் = ஒப்பில்லாத சுசீலன் என்பவனைப் பெற்றனன், அன்னோன் = அச்சுசீலன், மின்னு கதிரோன் மண்டலத்தின் விருப்பில் = ஒளிர்கின்ற சூரிய மண்டல பதவியை யடையும் இச்சையினால், இமயம் வரை அடைந்து = இமய மலையைச் சார்ந்து, கங்கை ஆற்றின் அகன் கரையின் = கங்கை நதியி னகன்ற தீரத்தின்க ணிருந்து, ஈசன் தாள் போற்ற = சிவபெருமானது திருவடிகளைத் துதிக்க.

ஒன்னார்=ஒன்றாதவர். மகளிர் அணிகளுட் சிறந்தது மங்கல வணியாதலின் கலன் என்பதற்கு மங்கிலியம் என்றாம். சுசீலன்=நல்லொழுக்கமுடையவன். இது முதலிரண்டு குளகம். எல்லா விடும்பையினுங் கலன்கழி யிடும்பை பெரிதாதலின் விதந்தனன். அதனை "மக்க ளிழந்த விடும்பையினு மனையா ளிழந்த விடும்பையினு - மிக்க விடும்பை யோவாத விதவை யிடும்பை யெனவினவித் - தக்க வதனா லென்கழுத்திற் றாலி நீதந் தருளென்று - தொக்க மணிநீண் முடியானைத் தொழுது பின்னு மிவை சொல்லும்." என்றார் பிறரும்.()

பால வெண்ணீற் றொளிபழுத்த சுவேதாச்சுவனும் பாசுபதன்
சால வருமா தவம்புரியு மரசன் முன்னர்த் தானணுகி
மாலோ னீசன் றாள்போற்றி வரம்பெற் றனனீண் டரம்பொருத
வேலோ யென்னத் துறப்பித்து விழுமா மறையு மொன்றுரைத்தான்.

(இ-ள்.) பாலம் வெள் நீறு ஒளி பழுத்த=நெற்றியின்கண் வெள்ளிய திருநீற்றின் விளக்க மிகுத்த, சுவேதாச்சுவன் ஆம் பாசுபதன் = சுவேதாச்சுவ னென்னும் பாசுபத சமய முனி யொருவர், சால அரு மா தவம் புரியும் அரசன் முன்னர் அணுகி=நெடுநாளாக அரிய பெரிய தவத்தைச் செய்கின்ற சுசிலன் முன்னர்ச் சென்று, அரம் பொருத வேலோய் = அரத்தால் அராவப்பட்ட வேலேந்திய அரசனே, ஈண்டு = இவ்விடத்தில், மாலோன் ஈசன் தாள் போற்றி=பெருமையை யுடையராய சிவபெருமானது திருவடிகளை (யானும் முன்னர்) வழிபட்டு, வரம் பெற்றனன் என்ன = (மேலாய) வரங்களைப் பெற்றனனென்று கூறி, துறப்பித்து=(உலகப் பற்றுக்களை)விடுவித்து, விழு மா ஒன்று மறையும் உரைத்தான்=சிறந்த பெருமை யுடைத்தாய ஒரு மந்திரத்தையு முபதேசித்தனர்.

பாசுபதம் - அகச்சமய மாறனு ளொன்று. அத னிலக்கணத்தைப் பின்னர் வரும் உத்தரகாண்டக்கண் செவ்வனே விளக்குதும். மாலோனீசன்-என்பதனைத் தவந்துவனுக் கொள்ளலுமாம். மறை = இரகசியப் பொருளுடையது, மந்திரம். "நிறைமொழி மாந்த் ராணையிற் கிளந்த - மறைமொழி தானே மந்திர மென்ப." என்றார் ஆசிரியர் தொல் காப்பியனாரும். துறப்பித்தலாவது அகப்புறப் பற்றுக்களை வெறுப்பித்தல். (கங)

அருமா மறையா லுளந்தெருளுற் றன்னோ னாங்குத் தவம்புரிந்தான்
மருடீர் கேள்வி யவிர்த்தான னென்போ னுலக மகிழ்தூங்கப்
பெரியோ ரேத்தும் பிராசீனப் பருகிச் சென்போன் றனைப்பயந்தான்
றெருளா லவனுங் கடலுயிர்த்த தெரிவை முலையிற் றிளைத்தனனால்.

(இ-ள்.) அன்னோன்=சுசீலன், அரு மா மறையால்=அரிய பெருமையை யுடைய மந்திரோபதேசத்தினால், உளம் தெருள் உற்று = மனத் தெளிவடைந்து, ஆங்கு தவம் புரிந்தான் = அவ்விடத்திலே யிருந்து தவத்தைச் செய்தனன், மருள் தீர் கேள்வி அவிர்த்தானன் என்போன் = மயக்க நீங்கிய கேள்வி யறிவுள்ள அவிர்த்தான னென்பவன், உலகம் மகிழ் தூங்க = உலகத்தார்க்குக் களிபெருக, பெரியோர் ஏத்தும் பிராசீன பருகிச்சு என்போன் தனை பயந்தான்=உயர்ந்தாராற் புகழ்ப்படும் பிராசீன பருகிச்சு என்பவனைப் பெற்றனன், அவனும்=அப்பிராசீன பருகிச் சென்பவனும், தெருளால் = தெளிவுடனே, கடல் உயிர்த்த தெரிவை முலையில் திளைத்தனன்=சமுத்திரனாற் பெறப்பட்ட பெண்ணின் றனங்களிற் றோய்ந்தான்.

அவிர்த்தானன் அக்கினியின் குமரியான திஷணை யென்பாளைச் சேர்ந்து பிராசீன பருகிச்சைப் பெற்றன னென்க. முதல் சிறப்பி னிமித்தம் பிராசீனபருகிச்சைக் கூறினனேனும், அவனுக்குத் துணைவராகச் சுக்கிரன், கயன், கிருட்டிணன், விரசன், அசினன் என்னு மைவரையும் பெற்று னென் றய்த்து உணர்க. பிராசீனக்கிரங்களான தருப்பைகளைப் பூமி யெங்கணும் பரப்பி எக்கியங்களைச் செய்தமையாற் பிராசீன பருகிச்சு என்ப. அவன் சமுத்திரன் பெற்ற மகளாகிய சாவன்னி யென்பவளை மணஞ் செய்தான். அது "தெண்டிரைக் கடலைப் புணர்ந்து சாவன்னி யெனுமக டனைச்சிறந் தளித்தாள்-விண்டவள் புகழ்சேர் தருபிரா சீன பருகிச்சின் விரைப்புய மணந்து" என்னுஞ் சைவ புராணக் கூற்று னறிக. சுவர்ணை யென்று மிவட்குப் பெயருண்டு. திளைத்தனன் என்னும் வினைமுற்றினை யெச்ச மாக்கி வருஞ் செய்யுளோடு முடித்தலுமாம். (கச)

இமையோர் பரவும் புகழ்ப்பிரசே தசராம் பெயரி னொருபதின்மர்
தமையாங் களித்தா னம்மைந்தர் பதின்மர் தாமுந் தவலருஞ்சீ
ரமையார் தடந்தோண் மாரிடையை யன்பின் வதுவை யாற்றிநறுங்
குமுதச் செவ்வாய்ப் புத்தமுதங் கூட்டுண் டமர ரெனக்களித்தார்.

(இ-ள்.) இமையோர் பரவும் புகழ் பிரசேதசர் ஆம் பெயரின் = தேவரானுந் துதிக்கப் படுகின்ற கீர்த்தியைக் கொண்ட பிரசேதசர் என்னும் பெயருடன், ஒரு பதின்மர் தமை ஆங்கு அளித்தான் = பத்து மைந்தர்களை யப்பொழுது பெற்றான், அ மைந்தர் பதின்மர் தாமும் = அந்தப் புத்திரர்கள் பதின்மரும், தவல் அரு சீர் அமை ஆர் தடம் தோள் மாரிடையை=கெடுத லில்லாத சிறப்பினை யுடைய மூங்கில் போலும் பெரிய தோளினைக் கொண்ட மாரிடை என்பவளை, அன்பின் வதுவை ஆற்றி = அன்புடன் விவாகஞ் செய்து, நறு குமுதம் செம் வாய் புது அமுதம் = நறிய வாம்பற் பூப்போன்ற சிவந்த வாயினின் றூறும் புதிய அமிர்தத்தை, கூட்டு உண்டு = சேர்த்துப் பருகி, அமரர் என களித்தார்=தேவர் போலப் போக வின்பங் கொண்டனர்.

பிராசீன பருகிச் சென்பான் சாவன்னி யென்னும் பெண்ணைச் சேர்ந்து பிராசேதசர் என்னும் பத்துப் புத்திரர்களைப் பெற்றான். பின்னர் அவர்களைப் பார்த்து மைந்தர்காள்! சிவபெருமானை நினைத்துத் தவஞ்செய்து பிரசைகளை விருத்தி செய்யுங்க ளென்று கூறப், பிதாவின் சொற்படி யவர்களும் பதினாயிரம் வருடஞ் சமுத்திர சலத்துண் மூழ்கி யருந்தவங் கிடந்து, சிவபெருமான் திருவருளைப் பெற்று வர, பிதா நாரத முனிவரின் உபதேசத்தால் அரசு துறந்து சிவஞான நிட்டையி லமர்ந்திருந்தான். அப்போது அரசனின் மையால் மழை குறைந்து குடிகள் பயிர்த் தொழில் செய்யா ராயினர். அதனால் மரங்க ளெல்லாம் விண்ணள வுயர்ந்து கிளைத்துப் பூமியை மூடியிருந்ததைக் கண்ட பிரசேதசர்கள் கோபங் கொண்டு தங்கள் முகத்தி னின்றும் வாயுவையும் அக்கினியையு முண்டாக்கி அவைகளை யெல்லாம் முரிப்பித்து எரிப்பிரிக்க, அக்கினிச் சுவாலையால் நட்சத்திர கணங்கள் நலிவதை நோக்கிய சந்திரன் அவர்களைத் தடுத்து,விருக்ஷங்களுக்கு முங்கட்குஞ் சந்தி செய்கின்றே னென்று தான் வளர்த்து வந்த மாரிஷை (மாரிடை) என்னுங் கன்னியை மனைவியாக் கொடுத்தா னென்க.

மாரிடையின் சரித மாவது - கண்டு வென்னும் முனிவர் கோமதி நதிக்கரையிற் றவஞ் செய்ய, அதற் கிடையூறாக விந்திரன் பிரமிலோசை யென்னுந் தேவமகளை யனுப்பினன். அரம்பை யங்ஙனே சென்று முனிவனை மயக்கி, தொள்ளாயிரத் தேழியாண்டும் ஆறுமதியும் மூன்று தினமும் அவனுடன் போகம் புரிந்து கருப்ப முற்றனள். இவள் சூதறிந்த விருடியனுர் வெகுண்டு தூரத்தினாகத் தேவலோக நோக்கி யோடுகின்றாள் கருப்பங் கலங்கி மயிர்க்கா ற்றூறும் வியர்வையா யொழுக வவற்றை மரங்க டரித்தன. அவை வாயுவாற் சேர்க்கப்பட்டுச் சந்திரனால் வளர்க்கப்பட்டு மகவாய்த் தோன்றின. அம்மகவே மாரிடை யெனப்படுவள். இவளை விருக்கங்களைச் சந்தி செய்யும் பொருட்டுச் சந்திரன் கொடுப்ப மன்றல் செய்து கொண்டனர் என்று புராணங் கூறிற்று. (கரு)

களிக்கும் வேந்த ரொருபதின்மர்க் கலந்து கடவு ளருங்கற்பிற்
றுளிக்குந் தேன்றூர் நறுங்கூந்தற் றுவர்வாய்த் தீஞ்சொன் மாரிடையாங்
களித்தா டக்கன் றனைமகவா யெனலு மவனீண் டுதித்ததெவன்
றெளித்தீண் டுரைத்தி யெனலோடுந் திருமா லதனை யுரைசெய்வான்.

(இ-ள்.) கடவுள் அரு கற்பின் = தெய்வத் தன்மை பொருந்திய அரிய கற்போடு, தேன் துளிக்கும் தார் நறு கூந்தல் = தேன் சிந்தும் பூமாலை யணிந்த வாசனை யமைந்த அளகத்தையும், துவர் வாய்=பவளம் போன்ற வாயினையும், தீம் சொல் மாரிடை=இனிய சொற்களையு முடைய மாரிடை யென்பவள், களிக்கும் வேந்தர் ஒரு பதின்மர் கலந்து= தருக்க முற்ற பிரசேதசர் என்னும் அரசர் பதின்மரையுஞ் சேர்ந்து, தக்கன் தனை மகவாய் அளித்தாள் எனலும் = தக்க னென்பவனைப் புத்திரனாகப் பெற்றாள் என்று சொல்லுதலும், அவன் ஈண்டு உதித்தது எவன் = (பிரமர் வகையிற் சேர்ந்துள்ள) தக்கன் இவ்

விடத்துப் பிறந்தது எப்படி, ஈண்டு தெளித்து உரைத்தி எனலும் = இப்பொழுதே தெளிவு படுத்திச்சொல்லி யருள வேண்டு மென்று (இந்திரனுதியர்) வேண்டுதலும், திருமால் அதனை உரை செய்வான்=கூர்ம மூர்த்தி கூறுவா ராயினர்.

பத்துப் புருடரைக் கலந்தாளைக் கடவுளருங் கற்பின ளெனக் கழறினமை சிறந்தன்றோ வெனிற், சிறந்த தென்க. என்னை ? விவாக காலத்து அக்கினி முதலிய சாட்சிகளால் அப்பதின்மரும் ஒரு மணவாளன் போன்று நியமிக்கப்பட, அவளும் ஆட்னடக்கொருவராச் சேர்ந்து, அவ்வவரிடத்தும் ஒரு படித்தாய் நீங்காத அன்பு வைத்து இல்லொழுக் கியன்ரு ளாகலின். இங்ஙனமே ஐம்புலன்கள் போல வைவரையுங் கொண்ட திரௌபதியையும் அருந்ததி நிகர்த்த பெருங் கற்பாள் என்று மாபாரதத்தும் பேசப்பட்ட தறிக. தம்மிச்சை வயத்தாற் சேறலின்றி யுரிமையிற் கூடலொப்பாகும். (கசு)

கடவுட் பொன்னங் குடுமிநெடுங் கயிலை வரையி னமரர்தொழ
வுடலக் கண்ண னொடுந்தக்க னுவப்பி னெய்தி முக்கணனை
முடியின் வணங்க வவர்க் கியன்ற முகம னோடு மருள்புரிய
விடைகொண் டேகித் தத்தமது பதியின் விரைவிற் சென்றடைந்தார்.

(இ-ள்.) தக்கன்=தக்கனென்பவன், உடலம் கண்ணன் ஒடு=சரீரத்திற் கண்களை யுடைய இந்திரனுடன், அமரர் தொழ = தேவர்கள் வணங்கி வர, கடவுள் பொன் அம் குடுமி நெடு கயிலை வரையின் = தெய்வத் தன்மை பொருந்திய பொன்மயமான அழகிய சிகரங்களை யுடைய நீண்ட வெள்ளி மலையி னிடத்து, உவப்பின் எய்தி = மகிழ்வுடன் சென்று, முக்கணனை முடியின் வணங்க = திரிநேத்திர ராகிய சிவபெருமானைத் தந்தலை தாழ்த்திப் பணிய, அவர்க்கு இயன்ற முகமன் ஒடு அருள் உம் புரிய = (பெருமான்) அவ்வவர்க்குத் தகுந்த உபசார மொழிகளுடன் திருவருளையுஞ் செய்ய, விடை கொண்டு ஏகி= (அவரிடத்தி னின்று) அநுமதி பெற்று நீங்கி, தம் தமது பதியின் விரைவின் சென்று அடைந்தார்=தங்கள் தங்களது நகரத்தில் வேகத்துடன் போய்ச் சேர்ந்தனர்.

இந்திரற்கு உடலத்தில் ஆயிரங் கண்கள் வந்தமை கௌதம விருடியின் மனைவியாகிய அகலிகை மாதின் கற்பழித்த காரணத்தால் என்க. அதனை “நின்றவாசவன் முகத்தினை நெடுந்தவ னேக்கி - யின்று சாம்பல்செய் திடுகுவ னிந்திர னென - யொன்று வேட்டுவெங் தாய்க்குடன் முழுவதும் யோனி-நன்று மேவுக வெனப்பெருஞ் சாபநாட் டினனால். திருத்தகு மந்திரஞ் செவியி னேறலும் - வருத்திய சாபமுன் மருவி னுலெனப்-பொருத்திய பயனதாய்ப் புரையி னெல்லைதீர்ந் - திருத்தகும் யோனிக ளொளிர்கண் ணுயினன்.” என்னும் பார்க்கவ புராணச் செய்யுள்களா லறிக. (கஎ)

காம னுடலம் வெந்தொழிய நுதற்கண் விழித்த காபாலி
மாம னெனவு மதித்திலனென் றுள்ள மாழ்கு மமையத்திற்
றேமென் கூந்த லுலகீன்ற செல்வி தாதை மனையெய்தத்
தூமம் பிறக்கத் தனிநோக்கிச் சொல்லாச் சுடுசொற் பலசொன்னுன்.

(இ-ள்.) காமன் அம் உடல் வெந்து ஒழிய = மன்மதனது அழகிய சரீரம் நீறாய் வெந்து அழிய, நுதல் கண் விழித்த காபாலி=நெற்றிக் கண்ணைத் திறந்த சிவன், மாமன் எனவும் மதித்திலன் என்று = (தனது) மாமன் என்றேனும் (என்னை)உபசரித்தா னல்லனென்று, உள்ளம் மாழ்கும் அமையத்தில்=(தக்கன்) மன வருத்தமுற் றிருக்கும்போது, தேம் மென் கூந்தல் உலகு ஈன்ற செல்வி=தேனமைந்த மெல்லிய அளகத்தினை யுடைய வுலகங்களைப்பெற்ற உமை யம்மையார், தாதை மனை எய்த=தந்தையாகிய தக்கனது இல்

லிற்கு வர, தூம்ம் பிறக்க தனி நோக்கி = (வாய் கண்ணென்னு மிவைகளிற்) கோபப் புகை யுண்டாகத் தேவியை யெதிராகப் பார்த்து, சொல்லா சுடு சொல் பல சொன்னான்= சொல்லத்தகாத கடுஞ்சொற்கள் பலவற்றைச் சொன்னான்.

காபாலி=பிச்சா பாத்திரமாகக் கபாலத்தைக் கொண்டவன். சுடுசொல் - வினைத் தொகை. தக்கன் மகளாகப் பிறந்து தாக்ஷாயிணி, சதி எனப் பெயர் பெற்ற அம்மையை மணம் புணர்ந்தமை நோக்கி மாமன் என்றதாம். தக்கன் கயிலைக்குச் சென்ற போது சிவ பெருமான் சாலவு மதியாமையால் மனவருத்தங் கொண்டு, அவரை யிகழ்ந்து ஓர் யாகஞ் செய்யத் தொடங்கினன். அதனை நாரதரா லறிந்த தேவியார் பெருமானிடம் விடை பெற்று விருப்புடன் போகத் தக்கன் இகழ்ந்தான் எனக் கொள்க. (கஅ)

திங்கட் கண்ணி முழுமுதலை யிகழ்ந்த மாற்றஞ் செவிப்படலு
மங்க ணீங்கி யுலகீன்ற வன்னை யிமவான் மகளாகிக்
கொங்கு விரிக்கும் பசுங்கொன்றை நறவூற் றிருப்பக் குளிர்தூங்குங்
கங்கை வேணி யனின்மருங்கின் மகிழ்வி னோடுங் கலந்தனளால்.

(இ-ள்.) கண்ணி திங்கள் முழு முதலை=இளம் பிறைச் சந்திரனைத் தரித்த முழு முதற் பொருளாகிய சிவபெருமானை, இகழ்ந்த மாற்றம் செவி படலும்=நிந்தித்த வார்த்தைகள் (தமது) செவிகளிற் பொருந்துதலும், உலகு ஈன்ற அன்னை = உலகங்களைப் பெற்ற தாயாகிய உமாதேவியார், அங்கண் நீங்கி=அவ்விடத்தி னின்று மகன்று, இமவான் மகள் ஆகி=இமய மலையரசன் புத்திரியாகி, கொங்கு விரிக்கும் பசு கொன்றை = வாசனையைப் பரப்பும் பசிய கொன்றை மாலையின், நறவு ஊற்று இருப்ப=தேனூற்றுனது நிலை பெற, குளிர் தூங்கும் கங்கை வேணியனின் மருங்கின் = குளிர்மை கொண்ட கங்கை நதியைத் தரித்த சடாமுடியை யுடைய சிவபெருமானது இடப்பாகத்தில், மகிழ்வின் ஓடு கலந்தனள்=உவகையுடன்சேர்ந்திருந்தனர். ஆல்—அசைநிலை. (கக)

உலக மீன்ற பொலங்கொடியைத் தக்கன் முனிந்த வுரைகேளா
வலகில் சோதி யெம்பெருமான் சீற்ற மெய்தி யவனிதனி
லிலகு மவுலி மானுடவேந் தாகிப் பிறக்க வெனச்சபித்தான்
புலவு வேற்கண் மாரிடைபா லதனாற் புதல்வ னாயினான்.

(இ-ள்.) அல்கு இல் சோதி எம் பெருமான் = அளவிடப்படாத ஒளிவடிவுள்ள எமது கடவுளாகிய இறைவன், உலகம் ஈன்ற பொலம் கொடியை=புவனங்களைப் பெற்ற பொற்கொடி போன்ற தேவியை, தக்கன் முனிந்த உரை கேளா = தக்கன் கோபித்துச் சொல்லியவற்றைக் கேட்டு, சீற்றம் எய்தி=கோபமுற்று, அவனி தனில்=பூமியின்கண், மவுலி இலகு மானுட வேந்து ஆகி பிறக்க=கிரீடம் விளங்கும் மானுட வரசனாகிப் பிறக்கக் கடவன், என சபித்தான்=என்று சாபஞ் சொற்றனர், அதனால் = அக்காரணத்தால், புலவு வேல் கண் மாரிடை பால்=நிணம் வாய்ந்த வேலாயுதத்தை யொத்த விழிகளையுடைய மாரிடையினிடத்து, புதல்வன் ஆயினான்=புத்திரனாகத் தோன்றினன்.

சிவபெருமான் தக்கன் றமதுதேவியை யிகழ்ந்தமையைக் கேட்டு, மானுடவேந்த னாய்ப் பிறக்கும்படி சாபஞ் சொற்றமையால் மாரிடைவயிற்றில் மகனாகிப் பிறந்தனன் என்பதாம். "அலகில் சோதிய னம்பலத்தாடுவான்." என்றார் பெரியபுராணத்தும். ()

ஈரைந் தரசிற் கொருத்திவயிற் றுதித்த தக்க னிழைத்தவைகள்
பாரின் விளங்க வுரைத்தியெனப் பகரு மயிரா வதப்பாகன்

நேரு முதுநான் மறைவடித்த தெய்வ முனிவன் கேட்டிடலுங்
காரிற் கரிய திருமேனிக் கருணைக் கடலாண் டுரைசெய்வான்.

(இ-ள்.) பகரும் அயிராவதம் பாகன்=சொல்லப்பட்ட ஐராவத யானையை வாகனமாகச் செலுத்து மிந்திரனும், தேரும் முது நான் மறை வடித்த தெய்வம் முனிவன்= ஆராயப்படுகின்ற பழைய நான்கு வேதங்களையுந் தெளிவாக வறிந்த தெய்வத்தன்மையையுடைய நாரத விருடியும், ஈர் ஐந்து அரசின் கு ஒருத்தி வயிறு உதித்த தக்கன் = பத்து அரசர்களுக்கு (மனைவியான) மாரிடை யென்னு மொருத்தியி னுதரத்தி னின்றுந் தோன்றிய தக்கன், இழைத்தவைகள் = செய்தவைக ளெல்லாவற்றையும், பாரின் விளங்க உரைத்தி என = பூமியின்க ணுள்ளாரும் அறியுமாறு புகலவேண்டு மென்று, கேட்டிடலும்=கேட்குதலும், காரின் கரிய திரு மேனி = மேகத்தினுங் கரிய அழகிய தேகத்தையுடைய, கருணை கடல் ஆண்டு உரை செய்வான்=கிருபைச் சமுத்திரமாகிய திருமால் அங்போது கூறுவார் என்க.

இழைத்தவைகள் என்பதிற் கள் விகுதி பலவற்றையு மறிதற்கு உரிமைபட நின்றது, "கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே-கொள்வழி யுடைய பலவறி சொற்கே" என்ற சொல்லதிகாரச் சூத்திரத்தா னமையும். ஒருத்தி யென்பது ஒருமை யென்னு மெண்ணினை யுணர்த்தும் ஒருவரென்னும் பொதுமையி னின்றும் நீங்கிய பெண்பாலுணர்த்துஞ் சொல். "ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல் – லொருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது." எனவும், "பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு - மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே." எனவுந், தோல்காப்பியனாரும் ஏனைநூலாரும், விதித்தமையானும், மகடூஉப் பெயர்கள் டகர தகரங்க ளிரட்டியும், இச்சுப் பெற்றும், இடைநிலை பெற்றும் இயலும் என உரையாசிரியர் உரைத்து நிறுத்தமையானும், பெறப்படும். பார்-கடல் என்பன ஆகுபெயர்கள். செய்-துணைவினை. (உக)

தக்கனைச் சபித்த அத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—சப௨.

பதினைந்தாவது

தக்கன் வேள்வியழித்த அத்தியாயம்.

அஃதாவது சிவபெருமானை யிகழ்ந்து தக்கனாற் செய்யப்பட்ட யாகத்தை வீரபத்திரக் கடவுள் தோன்றி யழித்த சரிதத்தைக் கூறிய பகுதி யென்க. தக்கன்-தக்ஷன் என்னும் வடமொழித் திரிபு.

அறுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கரைபொரு கடலந் தானைக் காவலன் றக்க னென்போ
னுரவுநீ ருலக மேழுந் தனதடிப் படுத்தி யொன்னார்
தருதிறை யளப்ப விண்ணோர் தனித்தனி யேவல் கேட்ப
வரியணைப் புறத்து வைகி யாழியொன் றுருட்டு நாளில்.

(இ-ள்.) கரை பொரு கடல் அம் தானை காவலன் = கரையோடு மோதுகின்ற சமுத்திரம் போன்ற அழகிய சேனைகளை யுடைய அரசனாகிய, தக்கன் என்போன் = தக்

கன் என்று சொல்லப்படுவோன், உரவு நீர் ஏழு உலகமும் = ஒலிக்கின்ற நீர்க் கடலாற் சூழப்பட்ட சத்த லோகங்களையும், தனது அடி படுத்தி=தனது ஆட்சிக் குட்படுத்தி, ஒன்னார் தரு திறை அளப்ப = பகையரசர்கள் கொடுத்தற்குரிய பகுதிப் பொருளை யளந்து கொடுக்கவும், விண்ணோர் தனி தனி ஏவல் கேட்ப=தேவர்கள் வெவ்வேறுயுள்ள பணிகளைக் கேட்டுச் செய்யவும், அரி அணை புறத்தின் வைகி = சிங்காசனத்தி னிடத்து வீற்றிருந்து, ஒன்று ஆழி உருட்டும் நாளில் = ஏகச் சக்கிராதிபதித்துவஞ் செய்துவருங் காலத்தில்.

நாளில் என்பது வருஞ் செய்யுட்கணுள்ள தொடங்கினன் என்னுஞ் சொல்லின் முதனிலை கொண்டு முடியும். நீர் என்பது ஆகுபெயராய்க் கடலை யுணர்த்திற்று. (க)

முன்னைய பவத்தி லீசன் வைதமை யுளத்தின் முன்னி
யென்னையா ளுடைய முக்கட் கடவுளை யின்றி யோங்கும்
பின்னல்வெண் டிரைதாழ் கங்காத் துவாரத்திற் பெட்பி னெய்தித்
துன்னரும் வேள்வி மற்றொன் றாற்றுவான் றொடங்கி னானே.

(இ-ள்.) ஈசன் = சிவபெருமான், முன்னைய பவத்தில் = முன்னர்ப் பிறவியில், வைதமை உளத்தில் முன்னி = நிந்தித்தமையைத் தன்மனத்தி னினைத்து, என்னை ஆள் உடைய முக்கண் கடவுளை இன்றி=என்னை யடிமையாக வுடைய திரிநேத்திர ராகிய சிவபெருமானை வெறுத்து, ஓங்கும் பின்னல் வெண் திரை தாழ் = உயர்ந்த வரிசையாகிய வெள்ளிய அலைகள் மறிகின்ற, பெட்பின் கங்கா துவாரத்தின் எய்தி = விருப்புடனே கங்கை நதியின் முகத்துவாரத்தைச் சார்ந்து, துன்ன அரு வேள்வி ஒன்று=செய்தற்கரிய யாகமொன்றை, ஆற்றுவான் தொடங்கினன்=செய்யும்படி யாரம்பித்தான்.

கங்காத் துவார மென்பது அரித்துவாரம். அதன் வரலாற்றைப் பின்வரு மாவலி மூவடி மண்ணளித்த அத்தியாயத்தில் உஎ-ம் செய்யுளிற் காண்க. அரித்துவாரத்தின்கணுள்ள கனகல மென்னு மிடத்தில் ஆயிரம் யோசனை யகலமும் நீளமு முள்ள சாலை யொன்றியற்றிப் பரிமேத வேள்வி செய்தனன் என்க. "அரிய மாதவ ரமர்ந்தகங் காத்துவா ரத்திற் - றரையின் மிக்குயர் கனகல மெனுந்தல மதனிற் - புரவி மேத நன் கியற்றுவா னெண்ணினன் புகுந்தான்." என வாயுசங்கிதையிற் கூறப்பட்டது. மற்று - ஏ அசைகள். (உ)

குறுமுய லரத்த மேய்க்குங் கோசிகந் தாழ்ந்த வல்கு
லிறுமருங் குமையாள் பாக னின்றியா னாற்றும் வேள்விக்
கறிதுயி லமர்ந்த மாயோன் முதலிய வமரர் யாரு
முறுகென முடங்கல் போக்க யாவரு மொல்லை யுற்றார்.

(இ-ள்.) குறு முயல் அரத்தம் ஏய்க்கும்=சிறிய முயலினது இரத்தத்தை நிகர்த்த, கோசிகம் தாழ்ந்த அல்குல் = செம்பட்டாடை கிடக்கும் நிதம்பத்தையும், இறு மருங்கு உமையாள்=தேய்ந்த இடையினையு முடைய உமையவளை, பாகன் இன்றி = ஒரு பாகத்திலுடைய சிவனை யில்லாமல், யான் ஆற்றும் வேள்விக்கு = நான் செய்யும் யாகத்திற்கு, அறிதுயில் அமர்ந்த மாயோன் முதலிய அமரர் யாரும் = யோகநித்திரையை விரும்பிய திருமாலை முதலாக நின்ற தேவர்கள் எல்லாரும், உறுக என = வரக்கடவர்களென்று, முடங்கல் போக்க=ஓலை யனுப்ப, யாவரும் ஒல்லை உற்றார்=எல்லாரும் விரைவாக வந்து சேர்ந்தனர்.

ஏய்க்கும் என்பது ஒட்ட, ஒடுங்க, நிகர்ப்ப என்றாற் போல உவமையும் பொருளு மொன்றென வுணர்வு தோன்ற நின்ற மெய்யுவம வுருபிடைச்சொல். முடங்கல்-ஓலை(திருமுகம்) என்னும் பொருள் படுதலை "எற்பயந் தோர்க்கிம் மண்ணுடை முடங்கல் - பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது" என்றவற்றில் அடியார்க்கு நல்லார் உரைத்ததனுனு மோர்க. முயவிரத்த மற்றையவற்றினுஞ் சாலச்சிவப்பாகலின் உவமை கூறினர்.

தாக்கணங் கமர்ந்த மார்பிற் றண்டுழாய் முகுந்தன் வெள்ளைக்
கோக்களி றூரும் விண்ணோர் கோன்முத லமரர் நாளுந்
தீக்குணு வருத்தி யுண்ணு முனிவர ரியக்கர் சித்த
ரேக்கற வெய்த வீங்கு மிளமுலை யமரர் மாதர்.

(இ-ள்.) தாக்கணங்கு அமர்ந்த மார்பின் = (வந்தார் யாவரெனின்) இலக்குமி வீற்றிருக்கும் மார்பினை யுடைய, தண் துழாய் முகுந்தன் = குளிர்ந்த துழாய் மாலையை யணிந்த விட்டுணுவும், வெள்ளை கோ களிறு ஊரும்=வெண்ணிறமுடைய ஐராவத மென்னும் அரச யானையை வாகனமா நடாத்தும், விண்ணோர் கோன் முதல் அமரர்=தேவேந்திரன்முதலிய தேவர்களும்,நாளும் தீக்கு உணு அருத்தி உண்ணும் முனிவரர்=நாடோறும் அக்கினிக்குப் பலியூட்டிப் புசிக்கின்ற விருடி சிரேட்டர்களும், இயக்கர் சித்தர் = இயக்கர்களுஞ் சித்தர்களும், ஏக்கறவு எய்த வீங்கும் இள முலை அமரர் மாதர்= (கண்டார்) மிக்க ஏக்க முண்டாகும்படி பெருத்த விளமை தங்கிய தனங்களை யுடைய தேவ மகளிரும். (௪)

குவளைநாண் மலரை வென்று குழைபொரு தலைக்கு மொண்கட்
டுவரிதழ்க் கமலை வாணி பழமறை யினிது தொக்க
வவையினிற் பால்வெண் ணீறு கண்டிகை யணிந்து மிக்க
தவமொரு வடிவுற் றன்ன ததீசிமா முனிவன் வந்தான்.

(இ-ள்.) குவளை நாள் மலரை வென்று = நீலோற்பலத்தின் அன்றலர்ந்த புதிய புட்பத்தையும் வெற்றி கொண்டு, குழை பொருது அலைக்கும் ஒண் கண் = குண்டலங்களோடு மோதி வருத்தா நிற்கு மழகிய விழிகளையும், துவர் இதழ் கமலை வாணி=பவளம் போலும் அதரங்களையு முடைய இலக்குமியுஞ் சரசுவதியும், பழ மறை=பழமை யாகிய வேதங்களும், இனிது தொக்க அவையினில் = உவகையோடுங் கூடி யிருக்குஞ் சபையினிடத்து, பால் வெண் நீறு கண்டிகை அணிந்து=பால்போலும் வெண்ணிறமுடைய திருநீற்றினையும் உருத்திராக்க மாலையினையுந் தரித்து, மிக்க தவம் ஒரு வடிவு உற்று அன்ன= மேலாய தவமே யொரு உருக்கொண்டு வந்தாற்போல, மா ததீசி முனிவன் வந்தான் = பெருமை பொருந்திய ததீசி முனிவர் வந்தனர்.

திருமான் முதல் வேத மீறாகக் கூடியிருந்த தக்கன் சபைக்கண் சிவசின்ன மணிந்து தவமொரு வடிவு கொண்டு வந்தாற் போலத் ததீசி முனிவர் வந்தனர் என்பதாம். பதிவிரதைக்கு நீங்காக் கலன்போலச் சிவனடியார்க்கு மிவை நீங்காக் கலன்க ளென்க. அது "பரமசிவ னமலன் பத்தர்க்குச் சின்ன - முருவுடலிற் கண்டியு நீறும்" என்னுஞ் சைவ சமயநெறித் திருச் செய்யுளாற் போதரும். (௫)

தொள்ளைபூத் தலர்ந்த நெஞ்சிற் றக்கனீ கேட்டி தூய
வள்ளிலைக் கமல வீட்டி லந்தண னாதி யாரு
மெள்ளருந் தருக்க ளீறு விளையந்திடு முயிர்கட் கெல்லா
முள்ளுறை சோதி தன்னை யிகழ்ந்ததென் னுரைத்தி யென்னா.

(இ-ள்.) தொள்ளை பூத்து அலர்ந்த நெஞ்சின் = வெளிற்றறிவே விரிந்து பரந்த மனத்தை யுடைய, தக்கன் நீ கேட்டி=தக்கனே நீ கேட்பாயாக, தூய அள் இலை கமலம் வீட்டில் அந்தணன் ஆதி = சுத்தமாகிய நெருங்கிய இலைகளை யுடைய தாமரைப் பொகுட்டாகிய வீட்டின்க ணிருக்கும் பிரமன் முதலாக, யாரும் எள் அரு தருக்கள் ஈறு = எவ்ராலு மிகழ்தற்கரிய தாவரங்க ளிறுதியாக, இயைந்திடும் உயிர்கட்கு எல்லாம்=பொருந்தியுள்ள ஆன்ம வர்க்கங்களுக் கெல்லாம், உள் உறை சோதி தன்னை இகழ்ந்தது என்=அந்தரி யாமியாய் வியாபித் திருக்கின்ற பரஞ்சோதி யாகிய சிவபெருமானை நிந்தித்தது என்னை, உரைத்தி என்று=சொல்வாயாக வென்று.

தொள்ளை என்னுந் திசைச்சொல் வெறுமைப் பொருள் பட நின்றது. தொள்ளைக் காது என்னும் வழக்கானு முணர்க. நெஞ்சிற்கு வெறுமை யாவது அறிய வேண்டுவனவற்றை யறியாமை. இது முத லிரண்டு குளகம். "சோதி தன்னை யிகழ்ந்ததென்" எனத் ததீசி முனிவர் வினவியமை அறிவுறுத்தற் பயனோக்கிய வினா வாதலால் அவ னறிவு தான் கண்டு மெய்யவற்குக் காட்டலி னடங்கும். அதனை "செப்பும் வினாவும் வழாஅலோம்பல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. (௬)

தவத்துறை படிந்த நெஞ்சிற் றதீசிமா முனிவன் சாற்ற
வுவப்புடன் மறைகள் யாவு முருத்திர பாகந் தன்னை
நிவப்புட னுரைத்த தில்லை நீயவை கேட்டி யென்று
வவத்துறை போய நெஞ்சத் தக்கனுங் கரைந்திட் டானே.

(இ-ள்.) தவம் துறை படிந்த நெஞ்சின் = தவவழியி னிலைபெற்ற மனத்தை யுடைய, மா ததீசி முனிவன் சாற்ற=பெருமையையுடைய ததீசிமுனிவர் சேப்ப, ஆங்கு= அப்போது, அவம் துறை போய நெஞ்சம் தக்கன்=தீயவழியிற் புக்க மனத்தினை யுடைய தக்கனென்பான், மறைகள் யாவும் = (முனிவரே) வேதங்களெல்லாம், உருத்திர பாகம் தன்னை = உருத்திரனுக்கு அவிப்பாக முண்டென்பதனை, உவப்பு உடன் நிவப்பு உற உரைத்தது இல்லை=விருப்புடனே யுயர்வு பொருந்தச் சொல்ல வில்லை, நீ அவை கேட்டி என்று=நீவிரே அவ் வேதங்களைக் கேட்பீராக வென்று, அறைந்திட்டான்=சொன்னான்.

பழுதுணர் தக்க னுங்குப் பகர்தலு நடுக்க மெய்தி
யிழுதைநீ மடமை நெஞ்சத் தியைந்தவா றிசைத்தி கொல்லோ
மழவிடை யூர்தி யின்றி மகம்புரிந் திடற்றீ தென்னத்
தொழுதகு மறைகள் யாவுஞ் சொல்லியாண் டகன்ற மாதோ.

(இ-ள்.) பழுது உணர் தக்கன் ஆங்கு பகர்தலும் = பொருளல்லாதவற்றைப் பொருளென்றறிந்த தக்கன் அவ்வாறு கூறுதலும், தொழு தகு மறைகள் யாவும்=வணங்கத்தகுந்த வேதங்களெல்லாம், நடுக்கம் எய்தி=நடுக்க முற்று, இழுதை நீ=அறிவிலியாய தக்கனே நீ, மடமை நெஞ்சத்து இயைந்த ஆறு இசைத்தி கொல்லோ = அறியாமை கொண்ட மனத்திற் றோன்றியபடி சொல்கின்றாயோ, மழ விடை ஊர்தி இன்றி=இளமை பொருந்திய இடபவாகனராகிய சிவபெருமானை யில்லாமல், மகம் புரிந்திடல் தீது என்ன= வேள்வி செய்தல் கொடுமை யாகும் என்று, சொல்லி = இடித்துச் சொல்லி, ஆண்டு அகன்ற=அவ்விடத்தை விட்டுப் போயின.

மாதோ வியப்பிடைச்சொல். வேதங்கள் சிவதூடணத்தைச் சகிக்காமையால் நடுங்கி யென்க. இங்ஙனமே பிரமதேவன் அகங்கரித்த போதும் இருக்கு முதலிய நான்கு வேதங்களும், குடிலையும் வெளிப்பட்டுச் சிவபெருமானே பரமபதி யென்று சாட்சி கூறின. அவை வருமாறு:—

இருக்குவேதம் உரைத்தது.

இருவர் மொழியுங் கேட்டிகழா விருக்கு வேத மாங்கெய்திப்
பருவ முகில்போ னிறத்தோயும் பங்கே ருகமே லுறைவோயும்
விரியும் புவன மனைத்தினுக்குங் கடவு ளல்லீர் விரிகடலிற்
கருகும் விடமுண் டுமையளித்த கருணைக் கடலே முதலாவான்.

யசுர் வேதம் இயம்பியது.

என்னு விருக்கு மறைபகர விரண்டாம் வேத மாங்கெய்தி
யொன்னார் புரமூன் றெருங்கெரிய முறுவல் கோட்டு மொருமுதலே
முன்னோன் முன்னோ னெனமேற்கோள் காட்டி முதிர்ந்த முதுக்குறைவாற்
றன்னுத் தழும்ப முறையிட்டுக் கனம்போ லதிர்ந்து சாற்றியதே.

சாமவேதஞ் சாற்றியது.

இறந்தும் பிறந்து மெவ்வுயிரு மொழியா தலவி யெஞ்ஞான்றுங்
கறங்கு போலத் திரியவெவ னியற்றுங் கருணைக் கடல்யாவன்
சிறந்த வந்தச் சங்கரனே தேவ தேவ னென்பதல்லான்
மறந்தும் பிறரை யெண்ணற்க வென்று சாமம் வழங்கியதே.

அதர்வணவேதம் அறைந்தது.

ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா யுலக மனைத்துந் தானுகி
நின்றுங் கவற்றிற் பொருந்தாத நீறு பூத்த செழும்பவளக்
குன்று யன்ப ரிதயமலர்க் கோயி லூறு மினிதமரும்
பொன்றாழ் சடையோன் முதல்வனென நான்காம் வேதம் புகன்றதுவே.

குடிலை கூறியது.

என்று கமலத் திறைகூறக் குடிலை யெழுந்து நகைகோட்டி - நன்று சொன்னு யெனவெள்ளி நாதன் டரையோ டியைந்திடுதே - றன்று மாபோ லிருப்பதல்லாற் றேயுந் துங் தோயான் பரைகன்னி-குன்ற வில்லி யெஞ்ஞான்றும் பிரம சாரியெனக்குறிப்பார்.—இமிலே றிவர்ந்தா னெனவுரைத்தா யென்றுந் தரும மாதலினு-லமலனதனி னினிதுறைந் தா னன்றிச் சுடலை யாடியெனக் - கமல யோனி யிகழ்ந் துரைத்தாய் புவன முழுதுங் கனற்றிய நாள் - விமல னுறையப் புறங்காடே யன்றி வேறோ ரிடனுண்டோ. (அ)

மன்பெருஞ் சிறப்பு வாய்ந்த மலரயன் முதலி னோர்த
மென்பணிந் தீமத் தாடி யேறிவர்ந் தைய மேற்குங்
கொன்படு சூல வேற்கைக் கூத்தனுங் கருத்தன் கொல்லோ
பொன்புனை யறுவை யார்த்த பூவைமே னியனை யல்லால்.

(இ-ள்.) பொன் புனை அறுவை ஆர்த்த=பொன்னாற் செய்த உடையை யணிந்த, பூவை மேனியனை அல்லால்=காயாம்பூப் போன்ற வடிவினராகிய திருமாலை யன்றி, மன் பெரு சிறப்பு வாய்ந்த = நிலைபெற்ற பெரிய சிறப்பினைக் கொண்ட, மலர் அயன் முதலினோர் தம் என்பு அணிந்து = தாமரை மலராசனனுகிய பிரமன் முதலிய தேவர்களது எலும்புகளைத் தரித்து, ஈமத்து ஆடி = சுடுகாட்டிற் கூத்து ஆடி, ஏறு இவர்ந்து=இடபத்தி லேறி,ஐயம் ஏற்கும்=பிச்சை யெடுத்துண்ணும், கொன் படு சூலம் வேல் கை கூத்தனும்=அச்சத்தை விளைக்கும் சூலாயுதத்தைத் தாங்கிய கையினை யுடைய உருத்திரனும், கருத்தன் கொல்லோ=கடவுளாவானே.

இங்ஙனங் கூறியவற்றிற் கெல்லாந் ததீசி முனிவரிரங்கி யுறுதி பொருந்த வுரைத்த வுத்தரங்களைக் கந்தபுராணத்திலே ததீசி யுத்தரப் படலம், கயமுக னுற்பத்திப்படல முதலியவற்றிற் கண்டு தெளிக. (கூ)

என்னவெங் தக்கன் கூற விருந்தவ முனிவர் தாமு
மன்னுயி ரனைத்துங் காக்கு மணிநிற வண்ணன் யார்க்கு
முன்னையோ னென்ன நெஞ்சின் முதுக்குறை வனைத்து நீங்கித்
துன்னிய மாயை யுள்ள மறைப்பமா ழாந்து சொன்னர்.

(இ-ள்.) என்ன வெம் தக்கன் கூற = என்றிவ்வாறு கொடிய தக்கன் சொல்லுதலும், இரு தவம் முனிவர் தாமும்=அங்ஙன மிருந்த பெரிய தவத்தை யுடைய இருடியர்களும், நெஞ்சின் முதுக்குறைவு அனைத்தும் நீங்கி=மனத்தின்கணுள்ள பேரறிவெல்லா மிழந்து, துன்னிய மாயை உள்ளம் மறைப்ப = நெருங்கிய மாயையானது மனவுணர்ச்சியை மறைக்க, மாழாந்து = அதனல் மயக்க முற்று, மன் உயிர் அனைத்தும் காக்கும் மணி நிறம் வண்ணன்=நிலை பெற்ற வுயிர்களெல்லாவற்றையுங் காத்தருளும் நீலரத்தினம் போன்ற நிறவடிவினராகிய விட்டுணு மூர்த்தியே, யார்க்கும் முன்னையோன் என்ன=எவர்க்கும் முதன்மையாய பதிப்பொருளாவானென்று, சொன்னர்=கூறினர். ()

என்றலுங் ததீசி நெஞ்ச மெரியெழக் கனன்று சீறிக்
குன்றவிற் கடவு டன்னை யிகழ்ந்திடுங் குற்றந் தன்னுற்
பொன்றிவெங் நரகந் தன்னிற் புகுந்துநெஞ் சழிதி ரென்னுத்
துன்றிய முனிவ ருள்ளஞ் சோர்வுற முனிந்து வைதான்.

(இ-ள்.) என்றலும்=என்றிவ்வாறு (முனிவர்களும்) கூறுதலும், ததீசி = ததீசி முனிவர், நெஞ்சம் எரி எழ கனன்று சீறி=மனத்தினின்றும் அக்கினி யெழும்பக் கோபித்துப் புழுங்கி, குன்றம் வில் கடவுள் தன்னை = மேருமலை யாகிய வில்லை யுடைய பரம்பொருளை, இகழ்ந்திடும் குற்றம் தன்னுல் = நிந்தித்த அதிபாதகத்தினுல், பொன்றி= (நீவிர் யாவரும்)அழிந்து, வெம் நரகம் தன்னில் புகுந்து=கொடிய நரகங்களில் விழுந்து, நெஞ்சு அழிதிர் என்னு=மனவருத்தமுறக் கடவீரென்று, துன்றிய முனிவர் உள்ளம்= வந்திருந்த முனிவர்களது மனங்கள், சோர்வு உற முனிந்து வைதான் = வாட்டமடையுமாறு கோபித்துச் சபித்தனர்.

ததீசி முனிவர் கோபித்துத் தக்கனுக்கும் முனிவர் தேவர் முதலாயினோர்க்குங் கொடுத்த சாபங்களின் விரிவாவது:—

அக்கணமே முனிவரன்றன் பெருஞ்சீற்றந் தனைநோக்கி யந்தோ வென்னு
லெக்குவடு மெக்கிரியு மெக்கடலு மெவ்வுலகும் யாவும் யாருந்
தக்க னொருவன் பொருட்டாற் றளர்ந்திடுமோ வெனமுனிவு தணிந்து தற்கு
ழொக்கலொடு மவணெழுந்து சிறுவிதியின் முகநோக்கி யொன்று சொல்வான்.

சங்கரனை விலக்கி யின்று புரிகின்ற மகஞ்சிதைக தக்க நின்னோ
டிக்குறையு மமரரெலா மழிவுறவின் னேயென்னு விசைத்துப் பின்ன
ரங்கணுறு மறையோர்தம் முகநோக்கி யந்தணரி லழிந்துவானீ
ருங்கள்குலத் தலைமைதனை யிழந்திட்டீர் கேண்மினென வுரைக்க லுற்றான்.

பேசரிய மறைக ளெலாம் பராபரனீ யெனவணங்கிப் பெரிது போற்று
மீசனையு மன்பரையு நீற்றெருகேண் டிகையினையு மிகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவரா யெக்காளும் பிறந்திறந்து கதியு றுது
பாசமத னிடைப்பட்டு மறையுரையா நெறியதனிற் படுதி ரென்றான்.

என்று கந்தபுராணத்தி லருளப் பட்டனவாம். (கக)

மெல்லிய வணுவைச் செம்பொன் மேருவோ டிணைத்து நோக்கும்
புல்லறி வாளர் போலப் பூவைபோன் மேனி யானை
யெல்லையில் குணக்குன் றாய வீசனுக் கிணையென் றோதுங்
கல்வியின் மடமை நெஞ்சக் கடவுளர் தம்மைச் சீறி.

(இ-ள்.) மெல்லிய அணுவை செம் பொன் மேரு ஓடு இணைத்து = (அஃதறிந்த பிரமன்,தேவர்காள்) நுட்பமாகிய அணுவொன்றைச் சிவந்த பொன்மயமாகிய மேருமலையுடன் ஒப்பிட்டு, நோக்கும் புல்லறிவாளர் போல = அறிகின்ற சிற்றறிவினரைப் போல, பூவை போல் மேனி யானை = காயாம்பூப் போலும் வடிவுடைய மாயவனை, எல்லை இல் குணம் குன்று ஆய ஈசனுக்கு=அளவைக் கடங்காத குணமலையாகிய சிவபெருமானுக்கு, இணை என்று ஓதும் = ஒப்பென்று மொழிந்த, கல்வி இல் மடமை நெஞ்சம் கடவுளர் தம்மை சீறி=கல்வியறிவில்லாத மூட மதியுடைய தேவர்களைக் கடிந்து. (௧௨)

விழுமிய ரல்லார் கேண்மை வெந்துயர்ப் படுத்து மென்னு
வழிமதுக் கமழுஞ் செய்ய மரைமலர்ப் பொகுட்டில் வாழும்
பழமறைக் கிழவ னீங்கப் பனியிரு விசும்பி னீங்கி
யுழையுறை தேவர் யாருந் தனித்தனி யுள்ளஞ் சோர்ந்தார்.

(இ-ள்.) வழி மது கமழும் = தேங்குகின்ற தேன் கொண்டு வாசனை வீசும், செய்ய மரை மலர் பொகுட்டில் வாழும்=செந்தாமரைப் பூம்பொகுட்டின்க ணிருக்கும், பழ மறை கிழவன்=பழமை யாகிய வேதங்களை யறிந்த பிரமதேவன், விழுமியர் அல்லார் கேண்மை=கீழோர் நட்பு, வெம் துயர் படுத்தும் என்னு=வெவ்விய துன்பத்துள் மூழ்கச் செய்யும் என்று, நீங்க = (அவ்விடத்தை விட்டு) போக, பனி இரு விசும்பின் நீங்கி= குளிர்ந்த பெரிய சுவர்க்க லோகத்தி லிருந்து வந்து, உழை உறை தேவர் யாரும் = (தக்கன்)அருகிருந்த தேவர்க ளெல்லாரும்,தனி தனி உள்ளம் சோர்ந்தார்=தாந்தாமே (ஆலோசித்து) மனத்தளர்ச்சி யுற்றனர். (௧௩)

வருவன வெண்ணி வேதன் போயது மனக்கொண் டுள்ளம்
வெருவர லின்றித் தக்கன் வேள்வியை யியற்ற னோக்கி
யருமறை வடித்த செஞ்சொற் றதீசிமா முனிவ னாங்கட்
கருமிடற் றெந்தை செம்பொற் கழலிணை நினையு மெல்லை.

(இ-ள்.) வேதன்=பிரமன், வருவன எண்ணி போயது மனம் கொண்டு = பின் சம்பவிப்பனவற்றை நினைத்துச் சென்றதை யறிந்தும்,தக்கன் உள்ளம்வெருவரல் இன்றி= தக்கனுனவன் மனத்துப் பயப்பா டில்லாமல், வேள்வி இயற்றல் = யாகஞ் செய்வதை, அரு மறை வடித்த செம் சொல்=அரிய வேதங்களி னின்றுந் தெளிவாக்கி யெடுத்த செவ்விய சொற்களையுடைய, மா ததீசி முனிவன்=பெருமை வாய்ந்த ததீசி முனிவர், நோக்கி= பார்த்து, ஆங்கண் = அவ்விடத்து நின்று, கரு மிடறு எந்தை=கரிய திருக்கண்டத்தினை யுடைய எம்பிதாவாகிய சிவபிரானது, செம் பொன் கழல் இணை நினைக்கும் எல்லை = சிவந்த பொன்னாற் செய்யப்பட்ட வீரக் கழலை யணிந்த இரு திருவடிகளையுந் தியானிக்குங் காலத்தில். (௧௪)

முன்னைய பவத்தி லென்னை யிகழநீ முனிந்த தக்கன்
மன்னுமிப் பவத்து நின்னை யிகழ்ந்தரு மகஞ்செய் கின்றா
னன்னவ னூற்று மெச்ச மழித்திட வேண்டு மென்ன
வென்னையா ளன்னை கூற விறைவனு மதனை நேர்ந்தான்.

(இ-ள்.) என்னை ஆள் அன்னை = என்னை யடிமையாக் கொண்ட மாதா வாகிய உமை யம்மையார் (எழுந்து இறைவரே!) என்னை முன்னைய பவத்தில் இகழ=என்னை முற்பிறப்பிலே நிந்திக்க, (அதனால்) நீ=நீவிர், முனிந்த தக்கன் = சாபங் கொடுத்த தக்க னென்பவன், மன்னும் இ பவத்தும் நின்னை இகழ்ந்து=தோன்றிய இந்தப் பிறவியினும் நும்மை நிந்தித்து, அரு மகம் செய்கின்றான் = அரிய யாகத்தை யியற்று கின்றான், அன் னவன் ஆற்றும் எச்சம்=அவன் செய்யும் யாகத்தை, அழித்திட வேண்டும் என்ன கூற= அழிக்க வேண்டு மென்று பிரார்த்திக்க, இறைவனும் அதனை நேர்ந்தான் = தலைவ ராகிய சிவபெருமானும் அதனை ஒப்புக்கொண்டனர். (௧௫)

ஆயிர மௌலி யண்ட முகட்டினை யளப்பச் செய்யி
ராயிரங் கமலப் பொற்றா ளகனில மளந்து செல்ல
வாயிரந் தடந்தோ ளெட்டுத் திக்கையு மளப்ப மூவொ
ராயிரங் கண்க ளூழி யழற்சிகை பரப்பி மண்ட.

(இ-ள்.) ஆயிரம் மௌலி அண்டம் முகட்டினை அளப்ப = ஆயிரங் கிரீடங்களும் அண்டத்தி னுச்சியைத் தொட்டு நிற்பவும், செய் கமலம் பொன் இர் ஆயிரம் தாள்=செந் தாமரை மலர் போன்ற அழகிய வீராயிரந் திருவடிகளும், அகன் நிலம் அளந்து செல்ல= பெரிய பூமியைத் தாண்டி யப்பாற் போகவும், தடம் ஆயிரம் தோள் = பெருத்த இரண் டாயிரம் புயங்களும், எட்டு திக்கையும் அளப்ப = அட்ட திசைகளையுங் கடந்து தோன்ற வும், மூ ஓர் ஆயிரம் கண்கள்=மூவாயிரம் விழிகள், ஊழி அழல் சிகை பரப்பி மண்ட= உகமுடிவிற் றோன்றும் அக்கினிக் கொழுந்தை விரித்து நிறைக்கவும்.

இது முதன் மூன்று குளகம். வீரபத்திரக் கடவுட்கு ஆயிரந் திரு முக மெனவே ஈராயிரந்தோள் எனல் அமையு மாகலின் "ஆயிரந் தடந்தோள்" என்றும், அவர்க்கு முக மொன்றிற்கு மூன்று கண்க ளுளவாகலின் "மூவொராயிரங் கண்கள்" என்றுங் கூறப்பட் டது. இஃது "இராயிரங் கொள் புயமெண் டிசை யெலாஞ் செறியவே" எனவும், "மூன்று கண்கண்முக மாயிரமு மேவி" எனவும் கந்தபுராணத்திலும் பேசப்பட்டது. (௧௬)

பொழிகதிர் நேமி சங்கங் கப்பணம் புகையு மொள்வா
ளெழுவழல் கவிழ்க்குஞ் சூலந் தோமர மெறியும் வைவேன்
மழுமுதற் படைகள் யாவுங் கரந்தொறும் வயங்கித் தோன்ற
முழுமதி வகிர்ந்தா லன்ன முள்ளெயிற் றொளிவில் வீச.

(இ-ள்.) கரம் தொறும் = கைகடோறும், கதிர் பொழி நேமி சங்கு கப்பணம்= ஒளியைக் காலுகின்ற சக்கரமுஞ் சங்குங் கைவேலும், புகையும் ஒள் வாள் = புகைக் கின்ற ஒளி கொண்ட வாளும், எழு=பரிகாயுதமும், அழல் கவிழ்க்கும் சூலம் = அக்கினி யைக் காலுகின்ற சூலமும், தோமரம்=பெருஞ்சவளமும், எறியும் வை வேல்=வீசுகின்ற கூரிய வேலாயுதமும், மழு முதல் படைகள் யாவும்=கோடரி முதலிய ஆயுதங்க ளெல்லாம், வயங்கி தோன்ற=பிரகாச முற்றுக் காணப்படவும், முழு மதி வகிர்ந்தால் அன்ன=பூரண சந்திரனைப் பிளந்து வைத்தாற் போன்ற, முள் எயிறு ஒளி வில் வீச = மயி லிறகி னடி முருத்தை நிகர்த்த தந்தங்களி னொளியானது வில்லைப் போல விட்டெறிக்கவும். (௧௭)

புவன கோடிகளுந் தீய்க்கும் புராரிவெஞ் சீற்றத் தீயிற்
கவைபடு சூல வைவேற் காய்சின வீரன் றோன்றித்
துவரிதழ்க் கனிவாய்த் தீஞ்சொற் றோகையோர் பங்கன் றாளி
னுவகையின் வணங்கிச் சூழ்போந் தினையன வுரைக்க லுற்றான்.

(இ-ள்.) புவனம் கோடிகளும் தீய்க்கும் புராரி வெம் சீற்றம் தீயில் = உலகங்களெல்லாவற்றையுந் தகிக்கின்ற சிவபெருமானது வெவ்விய கோபாக்கினிக்கணின்றும், கவை படு வை சூலம் வேல் காய் சினம் வீரன் தோன்றி=கிளைபட்ட கூரிய சூலாயுதத்தால் (எதிர்த்தாரை) கொல்லுங் கோபத்தை யுடைய வீரபத்திரக் கடவுள் அவதரித்து, துவர் இதழ் = பவளம் போன்ற வுதடுகளையும், வாய் கனி தீம் சொல்=வாயி னின்று வருங் கனிந்த தித்திப்பாகிய சொற்களையு முடைய, தோகை ஓர் பங்கன் தாளில்=மயில்போன்ற உமா தேவியை யோர் பாகத்துடைய சிவபெருமானது திருவடிகளில், உவகையின் வணங்கி = மகிழ்வுடன் பணிந்து, சூழ் போந்து = வலம் வந்து, இனையன உரைக்க லுற்ருன்=இவற்றைச் சொல்லுவா ராயினர். (கஅ)

கலிநிலைத்துறை.

அண்ட கோடிகண் மிதக்குமலை யாழி யொருகைக்
கொண்டு மற்றவை பொதிந்தகனல் கொட்பு றல்செயு
மண்டு காலதனை முற்றும்வெளி முற்று மடைவே
யுண்டு மீள்வு மளித்திடுவ னெந்தை யுரையாய்.

(இ-ள்.) எந்தை=எம்பிதாவே! கோடி அண்டங்கள்=அளவில்லாத அண்டங்களையும், மிதக்கும் அலை ஆழி = பொங்குகின்ற திரைகள் செறிந்த சமுத்திரங்களையும், ஒரு கை கொண்டு=ஒரு கையினு ளடக்கி, மற்றவை பொதிந்த கனல் = அவற்றைத் தன்னுளடக்கி யுள்ள அக்கினியையும், கொட்புறல் செயும் மண்டு கால் = சுழலுதலைச் செய்யும் நெருங்கிய காற்றினையும், அதனை முற்றும் வெளி = அக்காற்றினைச் சூழ்ந்திருக்கும் ஆகாயத்தையும், மற்றும்=ஏனையவற்றையும், அடைவே உண்டு = ஒருசேர வாய்ப் பெய்து, மீளவும் அளித்திடுவேன் = பின்னரும் (அவற்றை) வெளிப் படுத்துவேன், உரையாய்= பணித்தருள்வாய்.

எமது தந்தையே! அண்டங்கள், சமுத்திரங்கள், அக்கினி, வாயு, ஆகாய முதலிய எல்லாவற்றையும் விழுங்குவேன்; அவற்றைப் பின்னரும் வெளிப் படுத்துவேன். இவையிற்றுள் யான் செய்வதைப் பணித்தருள வேண்டும் என்று வீரபத்திரக் கடவுள் வேண்டினர் என்பதாம்.

இக்கருத்தமைய "மால யன்றனைப் பற்றிமுன் றந்திடோ மறவெங்-கால னுயிரை முடித்திடோ வசுரரைக் களைகோ-மேலை வானவர் தம்மையுந் தடிந்திடோ வேலை-ஞாலம் யாவையும் விழுங்குகோ வுலகெலா நடக்கோ. மன்னு யிர்த்தொகை துடைத்திடோ வரம்பில வாகித்-துன்னு மண்டங்க டகர்த்திடோ நுமதுறு மலர்த்தாள்-சென்னி யிற்கொடே யாவதொன் றென்னினுஞ் செய்வ-னென்னை யிங்குநீர் நல்கிய தெப்பணிக் கென்ருன்." எனக் கந்தபுராணத்துஞ் சொல்லப்பட்டது. (கக)

என்று கூறலு நகைத்துலகம் யாவு மழியேல்
வென்றி வீரவுயர் தக்கனழல் வேள்வி விரைவிற்
கொன்று போதுக வெனுவிடை கொடுப்ப வவனு
நன்று வீரமென நாவெணுடு நடந்த னனரோ.

(இ-ள்.) என்று கூறலும்=என்றிவ்வாறு (வீரபத்திரக் கடவுள்) வேண்டுதலும், நகைத்து = (சிவபெருமான்) புன்முறுவல் பூத்து, வென்றி வீர=வெற்றியைக் கொண்ட வீரனே! உலகம் யாவும் அழியேல் = உலகங்களெவற்றையும் அழியற்க, உயர் தக்கன் அழல் வேள்வி=அகங்கரித்த தக்கன் அக்கினி கொண்டு செய்யும் யாகத்தை, விரைவின்

கொன்று போதுக என = கணப்பொழுதில் அழித்து வரக்கடவா யென்று, விடை கொடுப்ப = அநுமதி செய்ய, அவனும் = வீரபத்திரக் கடவுளும், வீரம் நன்று என= (எனது) ஆண்மை நன்று நன்றென்று, நாண் ஒடு நடந்தனன் = வெட்கத்துடன் சென் றனர்.

அரோ—அசை. தக்கனது யாகத்தை யழித்தல் தம் வீரத்திற் கிலக்கல்லாமையால் வீரத்தை யிழித்து வெட்கமுற்றார் என்றபடி. அழல் வேள்வி-மூன்றுவதனுருபும் பயனும் உடன் றொக்க தொகை. (உ0)

மாலை வெள்ளருவி தாழிமய வல்லி கடிதிற்
கால னுஞ்சமரி னஞ்சவரு காளி யையுயிர்த்
தால முண்டெரி கவிழ்த்துமுடை நாறு மழல்வாய்ச்
சூல நல்கவிடை கொண்டுதொழு தேகி னளரோ.

(இ - ள்.) மாலை வெள் அருவி தாழ் இமயம் வல்லி = ஒழுங்கு பட்ட வெள்ளிய அருவி நீர் தூங்கு மிமயமலைக் கொடியாகிய பார்வதி தேவியார், கடிதில் = விரைவில், சமரின் காலனும் அஞ்ச வரு காளியை உயிர்த்து=யுத்தத்தில் யமனும் பயமுறத் தக்க காளி தேவியைத் தோற்றுவித்து, ஆலம் உண்டு எரி கவிழ்த்து= நஞ்சினைப் பருகி யக்கினியைக் கக்கி, முடை நாறும் அழல் வாய் சூலம் நல்க=புலால் கமழும் வெவ்விய வாயினையுடைய சூலாயுதத்தை யளிக்க, தொழுது விடை கொண்டு ஏகினள்=வணங்கி யநுமதி பெற்றுச் சென்றனள்.

அரோ அசை. காளியைத் துணையாக விடுத்த தெற்றிற்கு? சிறுவிதி மகஞ் சிதைக்க வீரனு லியலாதோவெனின், அற்றன்று. ஆண்டுத் தேவர் முனிவராது தேவிமாரு முற் றுள்ளா ராகலானும், அவரியாரையும் வீரனுந் தானையும் வெகுள வியல்பன் றாகலானும் அவரை யடர்க்க வடுத்து விடுத்தார் என்க. (உக)

எரிக விழ்க்குமயில் கப்பண முசுண்டி யெறிவேல்
குருதி கக்குகதை கொண்டுகண நாதர் தொடர
நரைவி டைக்கண்வரு காளியொடு மேறி நகைகால்
பரிதி வேலுழவன் விண்ணவர்கள் பால ணுகினன்.

(இ-ள்.) நகை கால் பரிதி வேல் உழவன்=ஒளி கக்குஞ் சூரியனைப் போன்ற சூலா யுதத்தை யேந்திய போரில் வல்ல வீரபத்திரக் கடவுள், எரி கவிழ்க்கும் அயில் = அக்கினி யைக் காலும் வேலாயுதமும், கப்பணம் முசுண்டி = இருப்புமுள்ளும் வளைதடியும், எறி வேல் = எறிகின்ற வேலாயுதமும், குருதி கக்கு கதை கொண்டு = இரத்தத்தைக் கொப் புளிக்கின்ற தண்டாயுதங்களையுந் தரித்து, கணம் நாதர் தொடர=உருத்திர கணத்தலைவர் கள் சூழ்ந்துவர, வரு காளி ஒடு=வந்த காளி தேவி யுடன், நரை விடை கண் ஏறி=வெள் ளிய இடப வாகனத்தி லிவர்ந்து, விண்ணவர்கள் பால் அணுகினன் = தேவர்களிருக்கும் இடத்திற்குச் செல்வா ராயினர். (உஉ)

சேட்டி ளம்பரிதி கோடிகதிர் சிந்தி யெனலா
மோட்டு மாமணி யணிந்திடு முகுந்தன் முதலோர்
கூட்ட மெய்துமுயர் சாலையிடை சென்று குறுகி
வாட்டி றற்குரிசி றக்கனுள மாழ்க நவில்வான்.

(இ-ள்.) வாள் திறல் குரிசில்=வாட் போரில் வல்ல வீரபத்திரக் கடவுள், சேடு இளம் பரிதி கோடி கதிர் சிந்தி எனல் ஆம்=உயர்வாயுள்ள இளஞ்சூரியன் கோடிகிரணங் களைக் கான்றதென்று சொல்வதற் கிலக்காகிய, மோடு மா மணி அணிந்திடும் முகுந்தன் முதலோர்=பெருமையாகிய சிறந்த கௌத்துவ ரத்தினத்தைத் தரித்த திருமால் முதலாயி னோர், கூட்டம் எய்தும் உயர் சாலை இடை சென்று குறுகி = கூட்டமாகச் சேர்ந்திருந்த யாகசாலையி னிடத்துப் போய் (அவர்களைச்) சமீபித்து, தக்கன் உளம் மாழ்க நவில்வான் = தக்கனது மனம் வருந்தச் சொல்வார். (௨௩)

எந்தை பூசனை யிகழ்ந்துனது வெள்ளை யறிவி
னந்து மாமக நடத்துதிகொ லென்ன நகையா
வந்தின் மந்திர மறைந்ததிலை யென்று மறையோ
ருய்ந்தி டாதவழி தக்கனுரை யாடு பொழுதின்.

(இ-ள்.) உனது வெள்ளை அறிவின் = (தக்கனே) நினது வெளிற்றுணர்வினால், எந்தை பூசனை இகழ்ந்து=எமது பிதாவாகிய சிவபெருமானுக்குரிய பூசையை(செய்யாது) நிந்தித்து, நந்து மா மகம் நடத்துதி கொல் என்ன = பெரிய பரிமேத யாகத்தைச் செய் கின்றனையோ வென்று கூற, தக்கன்=தக்கனானவன், ஓர் மறை அந்தில் மந்திரம் அறைந் தது இலை என்று=வேதங்களின் இடத்துள்ள மந்திரஞ் சொல்ல வில்லை யென்று, உய்ந் திடாத வழி உரையாடு பொழுதின் = பிழைக்கா வண்ணம் வார்த்தைகளைச் சொல்லும் போது.

அந்தில் என்பது "வருமே சேயிழை யந்தில்" என்றாற் போல இடப் பொருளில் வந்தது, "அந்திலாங்க வசைநிலைக் கிளவியென்-றாயிரண் டாகு மியற்கைத் தென்ப,, என் னுந் தொல்காப்பிய விதியாற் கொள்க. மறையோர் உய்ந்திடாதவழி எனப் பிரித்து, (அங்குள்ள) வேத வொழுக்கத்தவராய தேவர் முனிவர்கள் உய்யாத வண்ணம் என்றுங் கொள்ப. (௨௪)

அடைவின் வேதமுதன் மந்திர மனைத்து முதவுங்
குடிலை தக்கனை வெகுண்டரிமுன் வந்து குறுகி
விடைவ லானொழிய நீகடவு ளோவி டைவலா
னிடம ருங்குறைய மங்கையுனை யன்றி யெவரே.

(இ-ள்.) அடைவின் வேதம் முதல் மந்திரம் அனைத்தும் உதவும் = முறையாக வேத முதலிய மந்திரங்க ளெவற்றையுந் தோற்றுவிக்கும், குடிலை தக்கனை வெகுண்டு= பிரணவ மானது தக்கனை முனிந்து பேசி, அரி முன் வந்து குறுகி=விட்டுணு மூர்த்திக்கு முன்னர்ச் சென்று சமீபித்து, (விண்டுவே) விடை வலான் ஒழிய நீ கடவுளோ = இடப வாகனத்தை யுடைய சிவபிரானை யன்றி நீ பதிப்பொரு ளாவையோ, விடை வலான்=சிவ பெருமானது, இடம் மருங்கு உறையும் மங்கை = இடப்பாகத்தின்க ணிருக்குஞ் சத்தி, உனை அன்றி எவர்=நின்னை யல்லாமல் வேறியாவர்.

தக்கன் சிவபெருமானுக்கே அவிப்பாக முரித்தென்று வேத முதலியற்றிற் கூறப் பட வில்லை யென்று சொல்ல, பிரணவந் தோன்றித் தக்கனை வெகுண்டு, அவனாற் கடவு ளாகக் கொள்ளப்பட்ட திருமால் முன்னரடுத்து, விண்டுவே! நீ கடவு ளல்லையே. பதிப் பொருளாய சிவபெருமான் சத்திகளுள் நீயு மொன்றன்றோ வென்றது. விட்டுணு சிவசத் திகளுள் ஒன்றென்பதனை முன்னர்க் காட்டினும். (௨௫)

என்று கூறுதலும் விண்ணவர்கள் யாரு மிகழா
நன்று நன்றென விலாவிற நகைப்ப மிடல்கூர்

வென்றி வீரனும் விழிக்கடை சிவப்ப முனியா
வன்று சாலையழ லுண்டிட வளித்த னனரோ.

(இ-ள்.) என்று கூறுதலும்=என்றிங்ஙனங் கூறுதலும், விண்ணவர்கள் யாரும் இகழா=தேவர்க ளெல்லாரு மிகழ்ந்து, நன்று நன்று என விலா இற நகைப்ப= நல்லது நல்லது என்று விலாவெலும்பு ஒடியுமாறு சிரிக்க, மிடல் கூர் வென்றி வீரனும்=வலிமை மிகுத்த வெற்றிப்பாடுடைய வீரபத்திரக்கடவுளும், விழி கடை சிவப்ப முனியா = கண்ணின்கடை சிவப்புறக் கோபித்து, அன்று=அப்பொழுதே, சாலை அழல் உண்டிட அளித்தான்=யாகசாலையை யக்கினி யெரிக்கும்படி செய்தனர். (உசு)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இரும்பு குதட்டி விலாழியுமி ழிவுளி வீக்கு மணியூபங்
கருந்தா தென்னக் காய்ப்பிருந்த கரத்தான் முரித்தோர் குறும்பூதம்
பொருந்து மவிகள் பெய்குழிசி புடைத்தாங் குடைத்து முத்தழற்கும்
பருந்திற் படுத்த சயனமிசைப் பருஉத்தா ளதனாற் புடைத்ததே.

(இ-ள்.) ஓர் குறு பூதம்=ஒரு குறிய பூதம், இரும்பு குதட்டி விலாழி உமிழ் இவுளி வீக்கும்=இருப்புக் கடிவாளத்தைக் கறித்து வாய்நுரையைக் கக்குங் குதிரை கட்டப்பட்ட, மணி யூபம்=அழகிய தம்பத்தை,கருந்தாது என்ன காய்ப்பு இருந்த கரத்தால் முரித்து=இரும்பென்று சொல்லும்படி தழும் பேறிய கையினால் ஒடித்து, பொருந்தும் அவிகள் பெய் குழிசி புடைத்து உடைத்து=சேர்க்கப்பட்ட அவிகள் பெய்த குடங்களை யடித்துடைத்து, மு தழற்கும் பருந்தின் படுத்த சயனம் மிசை = மூவகை யக்கினிகளுக்கும் (அவியூட்டுமாறு) பருந்துப் பறவை போலச் செய்யப்பட்ட பாயலின்மீது, பருஉ தாள் அதனால் புடைத்தது=பருத்த காலா லுதைத்தது. (உஎ)

உரறு சீற்றத் தெரிகுஞ்சிக் குறுத்தாட் பூத முமிழ்கனற்கட்
டிருகு சினத்த பேய்க்கணங்கள் செருவேற் றெதிர்ந்து திசையளக்கு
மிருதோள் கொட்டி மகமாற்று முனிவர்ப் பற்றி யெறிதிரைய
விரிநீர்க் கங்கை யிடையமிழ்த்தி விளையாட் டயர்ந்து துள்ளுமால்.

(இ-ள்.) உரறு சீற்றத்து=மிக்க கோபத்தையும், எரி குஞ்சி=அக்கினி போன்ற குடுமியினையும், குறு தாள் பூதம்=குறிய கால்களையு முடைய பூதங்களும், கனல் உமிழ் கண் திருகு சினத்த பேய் கணங்கள்=அக்கினியைக் காலுகின்ற கண்களையும் மாறுபட்ட கோபத்தையு முடைய பேய்க்கணங்களும்,செரு ஏற்று எதிர்ந்து=யுத்தஞ் செய் தெதிர்த்து, திசை அளக்கும் இரு தோள் கொட்டி=திக்குகளை யெட்டுகின்ற (நீத்தமது) இருபுயங்களையுந் தட்டி, மகம் ஆற்றும் முனிவர் பற்றி = யாகத்தைச் செய்யும் இருடிகளைப் பிடித்து, எறி திரைய விரி நீர் கங்கை இடை அமிழ்த்தி=மோதுகின்ற அலைகளை யுடைய பரந்த நீர்கொண்ட கங்கையாற்றி னிடத்து ஆழ்த்தி, விளையாட்டு அயர்ந்து துள்ளும் = விளையாடலைச் செய்து துள்ளா நிற்கும்.

ஆல்-அசை. எம்க்கெமக் கென்று முந்துவதிற் பூதங்களுக்கும் பேய்கட்கும் யுத்தம் விளைந்ததெனக் கொள்க. குறுந்தாள்-வலிந்து நின்றது. (உஅ)

கடவுட் சாலை தனிலமரர் களிப்பக் குனிக்கு மரமகளி
ருடலுங் கூற்றுங் கண்புதைப்ப வொறுக்குங் கணங்கள் வரவெருவி

வடிவே னெடுங்கண் புதைப்பவவை குடங்கைக் கடங்கா வாற்றினுற்
படர்கூர்ந் துள்ள நடுங்கவயி றதுக்கி மயிலிற் பதைபதைப்பார்.

(இ-ள்.) கடவுள் சாலை தனில்=தெய்வத்தன்மை பொருந்திய யாகசாலையினிடத்து, அமரர் களிப்ப குனிக்கும் அரமகளிர் = தேவர்கள் மகிழ்வடைய நடனஞ் செய்யுந் தேவப் பெண்கள், உடலும் கூற்றும் கண் புதைப்ப ஒறுக்கும்=வருத்துகின்ற யமனும் (பயந்து) கண்களை மூடும்படி தண்டஞ் செய்யும், கணங்கள் வர வெருவி = கணங்கள் வருதலைக் (கண்டு) பயந்து, வடி வேல் நெடு கண் புதைப்ப = கூரிய வேலாயுதத்தைப் போன்ற (தமது) நெடிய விழிகளை மூட, அவை குடங்கைக்கு அடங்கா ஆற்றினுல்=அவைகள் உள்ளங்கைகளுக்கு அடங்காத தன்மையினுல், உள்ளம் படர் கூர்ந்து நடுங்க=மனத்திற் றுன்பமதிகரித்து நடுக்கங் கொள்ள, வயிறு அதுக்கி = வயிற்றைப் பிசைந்து, மயிலிற் பதை பதைப்பார்=மயிலைப்போலத் துடிதுடித்து வருந்துவார்கள். (உகூ)

அஞ்சி லோதி சுவல்பிறழ வம்மென் சிலம்பு கிடந்தலற
வஞ்சி மருங்குல் போயொளிப்ப வளர்மென் முலைமே லுத்தரியம்
பஞ்சி யூட்டு பதம்பிணிப்பப் படர்தற் கரிதென் றிடைவீழ்ந்து
நஞ்சு மமிழ்துங் கலந்தன்ன நகுவே னெடுங்கண் பனித்தயர்வார்.

(இ-ள்.) அம் சில் ஓதி சுவல் பிறழ=அழகிய சில் வட்ட மொத்த கூந்தல் பிடரிற் றாக்கவும், அம் மென் சிலம்பு கிடந்து அலற = சிறந்த மிருதுவாகிய சிலம்புகள் கின்றொலிக்கவும், வஞ்சி மருங்குல் போய் ஒளிப்ப=கொடிபோன்ற இடை யில்லாது மறையவும், வளர் மெல் முலை மேல் உத்தரியம் = வளர்ந்த மிருதுவாய தனங்களின் மீதணியப்பட்ட உத்தரியமானது, பஞ்சி ஊட்டு பதம் பிணிப்ப=செம்பஞ் சூட்டிய கால்களைக் கட்டவும், படர்தற்கு அரிது என்று இடை வீழ்ந்து=போதற் கியலாதென்று அவ்விடத்திலேயே விழுந்து, நஞ்சும் அமிழ்தும் கலந்து அன்ன=விடத்தையு மமிர்தத்தையுங் கலந்தாற்போல, நகு வேல் நெடு கண் பனித்து அயர்வார்=ஒளிர்கின்ற வேலாயுதத்தைப் போன்ற நீண்ட கண்களி னின்றும் நீர் சொரிந்து சோர்வார்.

கண்களுக்கு நஞ்சு மமிர்தமுங் கலந்த குணமாவது - நோக்கினுரை விடம்போல மயக்கி வருத்தலும், அமிர்தம் போலப் போகம் விளைத்தற் குறியா லவை நீர்த்தலுமாம். அதனை "அணியு மமிழ்துமென் னுவியு மாயவன் றில்லைச் சிந்தா - மணியும் பராபரி யாமறை யோனடி வாழ்த்தலரிற்-பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்-பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே." என்னுந் திருக் கோவையாரிக் குறிப்பறிதற் றுறையிற் கூறி யருளப் பட்டதனுற் கொண் டுணர்க. (கூ0)

பாழி நெடுந்தோட் காளியெதிர் படர வெருவிக் கடைகாண்பா
னூழி யூழி யளந்திடினு முலவாத் தடக்கட் புலோமசையு
மாழை பொருங்கட் டிருமகளும் வயவாள் வயிரப் படையோனை
யாழித் தடக்கைத் துளவோனை யலமந் தோடித் தழீஇக்கொண்டார்.

(இ-ள்.) பாழி நெடு தோள் காளி = பருத்த நீண்ட புயங்களை யுடைய காளிதேவி, எதிர் படர=எதிர்த்து வர, கடை காண்பான்=எல்லையைக் காணும்படி, ஊழி ஊழி அளந்திடினும் உலவா தடம் கண் புலோமசையும்=பல ஊழிக் காலங்கடோறு மளவை செய்யினும் அறியப்படாத கடிதடப் பரப்பினை யுடைய இந்திராணியும், மாழை பொரு கண் திருமகளும் = மாம்பிஞ்சின் வடுப் பொருகின்ற விழிகளை யுடைய இலக்குமியும், வெருவி=

(கண்டு) பயந்து, வயம் வாள் வைரம் படையோனை=வெற்றி பொருந்திய வாளாயுதத்தையுங் குலிசாயுதத்தையு மேந்திய இந்திரனையும்,ஆழி தடம் கை துளவோனை=சக்கரந் தாங்கியபெரிய கையினை யுடைய விண்டுவையும், அலமந்து ஓடி தழீஇ கொண்டார் = சுழன்றோடிச் சென்று சேர்த்துப் பிடித்தனர்.

காளி யெதிரில் வந்ததைக் கண்ட இந்திராணியும் இலக்குமியும் பயந்து ஓடிச் சென்று, தங்கடங்கள் நாயகரைச் சேர்த்துப் பிடித்தார் என்பதாம். "அல்குறேள் கண்ணென மூவழிப் பெருகி" என்று ராகலின், தடக்கண் என்பதற்குக் கடிதடப் பரப்பென்றும். விழி யெனக் கோடல் அத்துணைச் சிறப்பன்று. இங்ஙனமே ஆசிரியன் "செங்கரம் வருந்த மலரயன் வகுத்த திகிரியோ செய்ய பொற்றட்டோ - வங்கர வல்கு லதனள வுரைக்கி னுடவ ரவாவின தளவே." என்று நைடதத்தும் நவின்றுளன். (௯௧)

தண்ணங் கமலத் திருவுமலர்த் தடங்கட் செவ்வாய்ப் புலோமசையு
நண்ணுந் துயரந் தனைநோக்கி நகையாச் சினவி யிதழதுக்கிக்
கண்ணின் வடவைக் கனலொழுகக் கனன்று கடைவாய்ப் புகைதவழ
வண்ண லிரா வதப்பாக னமரர் தொடர வமரேற்றான்.

(இ-ள்.) தண் அம் கமலம் திருவும் = குளிர்ந்த அழகிய செந்தாமரைப் பூவின்கணிருக்கும் இலக்குமியும், மலர் தடம் கண் செம் வாய் புலோமசையும் = (குவளை) மலர்போலும் நீண்ட விழிகளையுஞ் சிவந்த வாயினையு முடைய இந்திராணியும், நண்ணும் துயரம் தனை நோக்கி=அடையுந் துன்பங்களைப் பார்த்து, நகையா சினவி இதழ் அதுக்கி=சிரித்துக் கோபித்து உதடுகளைக் கடித்து, கண்ணின் வடவை கனல் ஒழுக கனன்று=விழிகளினின்று வடவா முகாக்கினி சிந்த வுக்கிரங் கொண்டு, கடை வாய் புகை தவழ=கடைவாயினின்றும் புகை தோன்ற, அண்ணல் ஐராவதம் பாகன் = பெருமையிற் சிறந்த ஐராவதயானை வாகனனாகிய இந்திரன், அமரர் தொடர அமர் ஏற்றான் = தேவர்கள் சூழ்ந்து வர யுத்தத்திற் கெதிர்த்தான். (௯௨)

செருவேட் டுறங்காப் பகடுகைக்குந் தறுகண் மறலி தீக்கடவுள்
வெருவாத் தானைத் திறல்வருண னுலவை வேந்த னீசான
னிருதி யுயர்புட் பகநடவு நிதிக்கோன் முதல புத்தேளிர்
குருதி கவிழ்க்கு முத்தலைவேற் கூற்றின் கூற்றத் தெதிர்சென்றார்.

(இ-ள்.) செரு வேட்டு உறங்கா= யுத்தத்திற்கு அவாவிக் கண்படை கொள்ளாத, பகடு உகைக்கும் தறுகண் மறலி=எருமைக் கடாவை வாகனமாச் செலுத்தும் அஞ்சாமையுள்ள யமனும், தீகடவுள்=அக்கினி தேவனும், வெருவா தானை திறல் வருணன் = பயப்படாத சேனைகளை யுடைய வலிய வருணனும், உலவை வேந்தன் = வாயுதேவனும், ஈசானன்=ஈசான ருத்திரனும், நிருதி=நிருதியும், உயர் புட்பகம் நடவும் நிதி கோன்=மேன்மையாகிய புட்பக விமானத்தை யூருங் குபேரனும், முதல புத்தேளிர் = முதலாய தேவர்களும்,குருதி கவிழ்க்கும் முத் தலை வேல்=இரத்தத்தைக் கக்கும் மூன்று தலைகள் வாய்ந்த சூலாயுதத்தை யேந்திய, கூற்றின் கூற்றத்து எதிர் சென்றார் = யமனுக்கு மியமனான வீரபத்திர மூர்த்தியை எதிர்த்து வந்தனர். (௯௩)

கலிநிலைத்துறை.

மண்டு வெஞ்சம ருடற்றவெதிர் வந்த னிர்கொலோ
கொண்ட லூர்திமுதல் விண்ணவர்க ளென்று குறுகி
பண்ட கோளகை வெடிப்பவய லண்ட முழுதும்
விண்டு மோழைபட வீரனகை யாடி வெகுளா.

(இ-ள்.) வீரன்=வீரபத்திரக்கடவுள் (அவர்களை நோக்கி) கொண்டல் ஊர்தி முதல் விண்ணவர்கள்=மேகவாகன னாகிய இந்திரன் முதலிய தேவர்களே, மண்டு வெம் சமர் உடற்ற = நெருங்கும் கொடிய போரினைச் செய்ய, எதிர் வந்தனிர் ஓ = எதிர்த்து வந்தீர்களோ, என்று குறுகி = என்று (அவர்க்கு) சமீபித்துப் போய், அண்டம் கோளகை வெடிப்ப=அண்டச் சுவரானது பிளக்கவும், அயல் அண்டம் முழுதும்=(அதற்கு) அப்பாலுள்ள அண்டங்க ளனைத்தும், விண்டு மோழை பட=பிளவு பட்டு வெடிப்புறவும், நகை ஆடி வெகுளா=வீர நகை செய்து கோப முற்று.

விண்ணவர்கள் - அண்மை விளி. கொல் - அசை நிலை. எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்னு நால் வகைப்பட்ட நகையுள் ஈண்டு வீரபத்திரக் கடவுட்குத் தோன்றியது, "நகுதக் கனரே நாடுமிகக் கூறுநர்" என்றாற் போல வந்த வீரத் தெழுந்த வெகுளி நகையாகிய எள்ள னகையாம். (௩௪)

கள்ளு லாநறிய கற்பக நகர்க்கி றைவனை
யள்ளி மண்ணிடை களிற்றொடு மரைத்த தொருகை
பிள்ளை வெண்பிறை யெயிற்ற பிலவாய் மறலியை
யுள்ள மென்புதசை நைந்திட நெரித்த தொருகை.

(இ-ள்.) ஒரு கை = (வீரபத்திரக்கடவுளின்) ஒரு திருக்கரமானது, கள் உலாம் நறிய கற்பகம் நகர்க்கு இறைவனை = தேன் விளங்கும் வாசனை பொருந்திய கற்பக தருவுள்ள சுவர்க்காதிபனாகிய இந்திரனை, அள்ளி=வாரி யெடுத்து, மண் இடை களிறு ஒடும் அரைத்தது=பூமியி னிடத்து ஐராவத யானையோடுந் தேய்த்தது, ஒரு கை=ஒரு திருக்கரமானது, வெண் பிள்ளை பிறை எயிற்ற = வெள்ளிய இளம் பிறைச் சந்திரனைப் போன்ற பற்களையும், பிலம் வாய் மறலியை=குழிந்த வாயினையு முடைய யமனை, உள்ளம் என்பு தசை நைந்திட=நெஞ்சும் எலும்புகளுந் தசையும் நசியும்படி; நெரித்தது = நெரித்தலைச் செய்யா நின்றது.

மண்ணிடைக் களிறு என்பது சந்தநோக்கி யியல்பு. கையரைத்தது எனக் கூறியது, வாள் எறியும் என்றாற் போலக் கருவியைத் தானே செய்வதாக் கூறிய கருவிக் கருத்தாவாம். மற்றவைக்கு மிலக்கண மிதுவே. (௩௫)

ஆர ழற்கடவு ளுக்களை யகழ்ந்த தொருகை
கார்நி றத்தநிரு திக்கடவுள் கைகள் விழிதோ
ளீருண் மூளைகுடர் சிந்திட வெறிந்த தொருகை
வாரி திக்கிறையை வாரியின் மடுத்த தொருகை.

(இ-ள்.) ஒரு கை=(வீரபத்திரக்கடவுளின்) ஒரு திருக்கரம், ஆர் அழல் கடவுள்=அரிய வக்கினி தேவனது, நாக்களை அகழ்ந்தது = நாக்களைப் பிடுங்கிற்று, ஒரு கை = ஒரு திருக்கரம், கார் நிறத்த நிருதி கடவுள்=கருமையாகிய நிறத்தினை யுடைய நிருதியினது, கைகள் விழி தோள்=கைகளுங் கண்களும் புயங்களும், ஈருள் மூளை குடர் சிந்திட எறிந்தது=ஈரலும் மூளையுங் குடலுஞ் சிதறும்படி வீசிற்று, ஒரு கை=ஒருதிருக்கரம், வாரிதிக்கு இறையை=சமுத்திராசனாகிய வருணனை, வாரியில் மடுத்தது=சமுத்திரத்தில் எறிந்தது.

வீரபத்திரக் கடவுளது ஒரு திருக்கரம் அக்கினியின் நாக்களைப் பிடுங்கிற்று; ஒன்று நிருதியின் கை முதலிய உறுப்புக்கள் சிதறும்படி யெறிந்தது. ஒன்று வருணனைச் சமுத்திரத்தி லெறிந்தது என்பதாம். குடல் என்பது குடர் எனப் போலியாயிற்று.

அக்கினி தேவனுக்கு நா ஏழாகலின் "அழற்கடவு ளுக்களை" என்று கூறப்பட்டது. அவையாவன:—காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சுதூம்பர வருணை, புலிக்கினி, விசுவரூபி யென்பனவாம். அவியைத் தன்கட் பெய்யின் அவற்றை யெல்லாஞ் சிவத்துக்கு ஆக்குதல் அக்கினிக்கு நியதமாகவும், அதனைச் செய்யாது அவற்றை விரும்பித் தன்னுவாற் றானே சுவைத்துண்ட பாதகத்திற்காக நாக்கள் சேதிக்கப்பட்டன.

அதனை "கறுத்திடு மிடறுடைக் கடவுட் டேவனை - மறுத்தவ னல்கிய வரம்பி லுண்டியும் - வெறுத்திலை யுண்டியா லென்று வீரனு - மறுத்தன னெழுதிறத் தழலி னுக்களே." என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தா னறிக. (௩௬)

மண்ட மர்க்கலை யுகைத்தெதிர் வளிக்கி றைவனை
யண்ட கோளகை முகட்டினி லடித்த தொருகை
கண்டெ றித்துயிர் சிதைந்திட நிதிக்க டவுளைச்
செண்ட டித்தன வெறிந்தெதிர் திரித்த தொருகை.

(இ-ள்.) ஒரு கை=ஒரு திருக்கர மானது, மண்டு அமர் கலை உகைத்து=நெருங்கும் போர்த் தொழிலில் வல்ல கலைமானை வாகனமாச் செலுத்தி, எதிர் வளிக்கு இறைவனை = எதிர்த்துவந்த வாயுராசனை, அண்டம் கோளகை முகட்டினில் = அண்டச்சுவரினுச்சியில், அடித்தது=எடுத்தடித்தது, ஒரு கை=ஒரு திருக்கரமானது, கண் தெறித்து உயிர் சிதைந்திட=விழிகள் பிதுங்கிப் பிராணன் அழியும்படி, நிதி கடவுளை=இருநிதிக்குத் தலைவனாகிய குபேரனை, செண்டு அடித்து அன எறிந்து = செண்டடித்து விளையாடுவது போலத் தூக்கி யெறிந்து, எதிர் திரித்தது=எதிராகச் சுழற்று நின்றது.

கலை யென்னும் விலங்கி னுண்பாற்பெயர், முசுவிற்கு வருதல் சிறு வரவிற்றாகலானும், "கலையென் காட்சி யுழைக்கு முரித்தே" என ஆசிரியர் தொல்காப்பியனார் விதந் தாங்கு மானேற்றுக்கு வருதல் பெரு வரவின வாகலானும், வாயுதேவற்கு வாகனமது வாகல் நூற் றுணி பாகலானும் மானே றென்றும். இரு நிதி-சங்கநிதி, பதுமநிதி.()

பாயொ ளிப்பகன் விழித்துணை பறித்த தொருகை
யாய்க திர்த்தொகை பரப்பரிய மாவி னிருதோள்
சேய வெங்குருதி சிந்திட வொடித்த தொருகை
காய்க திர்க்கடவுள் பற்றொகை கடிந்த தொருகை.

(இ-ள்.) ஒரு கை=ஒரு திருக்கரம், பாய் ஒளி பகன் துணை விழி=பரந்த ஒளியை யுடைய பகன் என்னுஞ் சூரியனது இரு கண்களையும், பறித்தது= பிடுங்கிற்று, ஒரு கை= ஒரு திருக்கரம், ஆய் கதிர் தொகை பரப்பு அரியமாவின்= நுண்ணிய கிரணத் தொகுதி யை விரிக்கும் அரியமா வென்னுஞ் சூரியனது, இரு தோள் = இரு புயங்களையும், சேய வெம் குருதி சிந்திட ஒடித்தது=செந்நிறமாகிய வெவ்விய இரத்தங் கக்குமாறு முரித்தது, ஒரு கை=ஒரு திருக்கரம், காய் கதிர் கடவுள் பல் தொகை கடிந்தது=சுடுகின்ற கிரணங் களை யுடைய பூடா வென்னுஞ் சூரியனது பற் றொகுதிகளை யுடைத்தது.

பகன் என்னுஞ் சூரியன் பதினோராயிரங் கிரணங்களை யுடையவன். அரியமா வென்பவன் பதினாயிரங் கிரணங்களை யுடையவன். பூடா ஆறாயிரங் கிரணங்களை யுடையவன். பகன் பூடா என்னும் ஆதித்தியர்க்கு முறையே விழிகளையும், பற்களையும் கடிந்தார் என்பதனை "உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே - கண்ணைப் பறித்தவா றுந்தீ பற - கருக்கெட நாமெலா முந்தீபற" எனவும், "சூரியனார் தொண்டை வாயினிற் பற்

கலை-வாரி சொரித்தவா றுந்தீபற - மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற'' எனவுந் திருவா சகத்திற் திருவாய் மலர்ந்தருளப் பட்டதனுனறிக. (௩அ)

மருத்து வத்தலைவர் வாய்குருதி கக்கி மறிய
வுருத்து மென்கனியி னுருயிர் பிழிந்த தொருகை
செருக்க ளத்தெழு வசுக்களிரு நால்வர் சிதைய
நெருப்பெ ழும்படி பிசைந்துட னெரித்த தொருகை.

(இ-ள்.) ஒரு கை=ஒரு திருக்கரமானது, மருத்துவ தலைவர் வாய் குருதி கக்கி மறிய = பரிமருத்துவர்களது வாயினின்று மிரத்தஞ் சொரிந்து ஓடும்படி, உருத்து= கோபித்து,மென் கனியின் ஆர் உயிர் பிழிந்தது=மிருதுவாய பழத்தைப்போல அரிய உயிரைப் பிழிந்தது, செரு களத்து எழு வசுக்கள் இருநால்வர் = யுத்தகளத்தி லெதிர்த்த வசுக்க ளெண்மரும், சிதைய=அழியுமாறு,நெருப்பு எழும்படி பிசைந்து=அக்கினி தோன்றப் பிசைந்து, உடல் நெரித்தது=சரீரத்தை நெரித்தது.

பரிமருத்துவர் இருவராவார் தத்திரன், நாதத்தியன் என்பவராம். வசுக்களை முன்னுரைத்தாம். எழு வசுக்கள்-வினைத்தொகை. (௩௯)

இன்ன வாறுதிறல் வீரனுயர் கைக ளெவையு
மன்னும் வானவ ரியக்கர்முனி வோர்கண் மறிய
முன்னி யோரிமை யொடுங்குமுன் முடித்தி டுதலுங்
கன்னி யந்துளவ மாயனது கண்டு வெகுளா.

(இ-ள்.) இன்ன ஆறு திறல் வீரன் = இவ்விதமாக வலிமையை யுடைய வீரபத்திரக் கடவுளது, உயர் கைகள் எவையும்=நீண்ட திருக்கரங்கள் யாவும், மன்னும் வானவர் இயக்கர்=நிலைத்திருந்த தேவர்களும் இயக்கர்களும், முனிவோர்கள் மறிய=இருடியர்களும் வீழ்ந்திறக்கும்படி, முன்னி = முற்பட்டு, ஓர் இமை ஒடுங்கும் முன் முடித்திடுதலும் = ஒரு இமைப்பொழுது முடியு முன்னர் அழித்தலும், கன்னி அம் துளவம் மாயன் = வாடாத அழகிய துழாய் மாலையை யணிந்த திருமால், அது கண்டு வெகுளா= அதனைப் பார்த்துக் கோபித்து.

வெகுளா என்னு முடன் பாட்டு வினை யெச்சம் வருஞ் செய்யுட்கணுள்ள எதிர்ந்து என்பதன் முதனிலையையும், அது உடற்றினன் என்பதன் முதனிலையையுங் கொண்டு முடியும். இங்ஙன மிவர்க்குச் செய்த தன்றி, சந்திரனைத் தமது திருவடி யொன்று லுதைத்து வீழ்த்தி யுடலைத் தேய்த்தும், அக்கினியின் பாரியான சுவாகையை வலப் பக்கத்து நாசியைக் கிள்ளியும், உருத்திர கணங்களை யோட்டியும், ஈசான ருத்திரரை வைது விடுத்தும், சோணித புரத்து வேந்தனது தலையைக் கொய்தும், யாகதேவன் (எச்சன்) பயந்து மான் போல வுருவங் கொண்டு போதலும் ஒரு கணையால் அவன் சிரமற விழுத்தியும், பின்னர்த் திருமா லெதிர்க்க வவற் பொருவா ராயினர். பத்திரகாளி தக்கன் மனைவி மகளிராய வேதவல்லி முதலிய பெண்களது தலைகால் கர முதலியவற்றைக் களைந்தும், தேவர் முனிவர்களின் மனைவியரைக் கொன்றும் உயிர் போக்கினள். இவர்களுடன் வந்த பேய் பூதம் காளி யென்னு மிக்கணங்கள் செய்தவற்றைக் கூறுதல் விரியும் என்று விடுத்தாம். அவற்றைக் கந்தபுராணம் யாக சங்காரப் படலத்திற் காண்க. (௪0)

மறிதி ரைக்கடல்க ளொன்றின்மிசை யொன்று மறியச்
சிறைய டித்தொரு கணத்தினிடை யெண்டி சைசெலு

மெறுழ்வ லிக்கலுழன் மேலினி திவர்ந்து முனியா
வுறுச மத்திடை யெதிர்ந்தம ருடற்றி னனரோ.

(இ-ள்.) திரை மறி கடல்கள்=அலைகள் மோதுகின்ற சமுத்திரங்கள், ஒன்றின் மிசை ஒன்று மறிய=ஒரு கடலின் மீது ஒருகடல் சென்று பாயும்படி, சிறை அடித்து= சிறகுகளை வீசி, எண் திசை ஒரு கணத்து இடையின் செலும்=அட்டதிக்குகளினும் ஒரு மாத்திரைப் பொழுதினுட் பறக்கின்ற, எறுழ் வலி கலுழன் மேல் = மிக்க வலிமையை யுடைய கருடப் பறவையாகிய வாகனத்தின் மீது, இனிது இவர்ந்து=விரைவாக வேறி, முனியா=பெரிதுங் கோபித்து, உறு சமத்திடை எதிர்ந்து = பொருந்திய யுத்தகளத்தி னிடத்து வந்து எதிர்த்து, அமர் உடற்றினன்=போர் செய்தனர், அரோ அசை.

திருமால் கருடவாகனத்திலேறி யுத்தகளஞ் சேர்ந்து வீரபத்திரக் கடவுளோடு போர் செய்யத் தொடங்கினர் என்பதாம்.

"எறுழ் வலி யாகும்" என்ற உரிச்சொல்லியற் சூத்திரப்படி, எறுழ் என்னும் உரிச் சொல் வலியாகிய குறிப்புணர்த்தலின், எறுழ்வலி என்பதற்கு மிக்கவலி யென்றும்.

மாயி ரும்புவி யருந்துமணி வண்ணன் வடிவேற்
சேயின் மிக்கதிறல் வீரனெதிர் சென்று சினவா
வாயி ரங்கதி ரொருங்கெழுவ தென்ன வழல்கால்
பாயொ ளிப்பரிதி வெம்படை பணித்த னனரோ.

(இ-ள்.) மா இரு புவி அருந்தும் மணி வண்ணன் = கருமையாகிய பெரிய மண்ணையுண்ட நீல ரத்தினம் போன்ற நிறத்தின ராகிய திருமால், வடி வேல் சேய் இன்= கூரிய வேலாயுதத்தை யேந்திய குமாரக் கடவுளைப் போன்ற, மிக்க திறல் வீரன் எதிர் சென்று=மேற்பட்ட வலிமையை யுடைய வீரபத்திரக் கடவுளுக் கெதிர் வந்து, சினவா= கோபங் கொண்டு, ஆயிரம் கதிர் ஒருங்கு எழுவது என்ன = ஆயிரஞ் சூரியர்கள் ஒன்று சேர்ந்து உதித்தாற் போல, அழல் கால் = அக்கினியைக் கக்கும், பாய் ஒளி வெம் பரிதி படை=பரந்த ஒளியை யுடைய வெவ்விய சக்கரா யுதத்தை, பணித்தனன்=ஏவினர்.

எந்தை யாகிய கந்த நாத னேந்தி யருளும் வேலாயுதத்தின் பெருமையை:—

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று
மேரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பெளவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே.

அணிமுகங்க ளோராறு மீராறு கையு
மிணையின்றித் தானுடையா னேந்தியவே லன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ண
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே லன்றே
வருதிகிரி யோனவுணன் மார்பம் பிளந்து
குருகுப் பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே. (சவ)

எனச் சிலப்பதிகாரத்துஞ் செப்பப்பட்டமை காண்க.

ஊழி வெங்கனலு மாலமு முயிர்ப்ப துடலும்
பாழி வாய்மற லியைக்கொலை பயிற்று வதுவெஞ்
சூழ்சு டர்ப்பரிதி யன்னதொரு சூல மதனு
லாழி யம்படை செருக்கற வகற்றி னனரோ.

(இ-ள்.) ஊழி வெம் கனலும் ஆலமும் உயிர்ப்பது=உக முடிவின்கட் டோற்றும் வெவ்விய தீயையும் நஞ்சினையு முண்டாக்குவதும், உடலும் பாழி வாய் மறலியை கொலை பயிற்றுவது = வருத்துகின்ற பருத்த வாயினை யுடைய யமனுக்குக் கொலைத் தொழிலைப் பழக்குவதும், வெம் சூழ் சுடர் பரிதி அன்னது = வெப்ப முள்ள சுற்றிய கிரணங்களைக் கொண்ட சூரியனை யொத்ததும் (ஆகிய), ஒரு சூலம் அதனுல்=ஒரு சூலப் படையினுல், ஆழி படை செருக்கு அற அகற்றினன்=சக்கராயுதத்தின் வலிமை நீங்க வழித்தனர்.

அம் என்பதனைச் சாரியை யாக்காது அழகெனக் கோடலுமாம். வீரபத்திரக்கடவுள் ஆழிப்படைச் செருக்கை யகற்றினர் என்க. (௪௩)

நேமி வெம்படை யகற்றிநிக ரற்ற விறலோன்
றாம ரைக்கடவு ளோடுலகு தந்த முகிலைக்
காமர் மென்சிறை யினிற்பொரு திறற்க லுழனைத்
தூம வெங்கணை துரந்துட றுளைத்த னனரோ.

(இ-ள்.) நிகர் அற்ற விறலோன்=ஒப்பில்லாத வீரபத்திரக் கடவுள், வெம் நேமி படை அகற்றி=வெவ்விய சக்கராயுதத்தைச் சிதைத்து, தாமரை கடவுள் ஓடு=தாமரைப் பூம்பொகுட்டின்க ணிருக்கும் பிரமனுடன்,உலகு தந்த முகிலை=பிரபஞ்சங்களையுந் தோற்றுவித்த மேகமாகிய திருமாலினையும், காமர் மென் சிறையினில் பொரு = அழகிய மிருதுவாய சிறகராற் போர் புரியும், திறல் கலுழனை=வலிய கருடனையும், தூமம் வெம் கணை துரந்து = புகை காலும் வெவ்விய பாணங்களைச் செலுத்தி, உடல் துளைத்தனன்= சரீரங்களைத் துவாரப் படுத்தினர்.

ஈண்டு உலக மென்றது, பிரகிருதி தத்துவத்திற் குட்பட்ட தத்துவ தாத்துவிக மாய சகங்களை யென் றுணர்க. திருமாலை முகில் என்றது உருவக மன்றி யுண்மை யானுமாம். என்னை? அவன், கயிலையி லமலர்ந் தருளுங் கண்ணுதற் பரனுகிய சிவபெருமானை மேகமாய் நின்று ஆயிரந் தேவ வருடம் வரையுஞ் சுமந்து திரிந்தான் என்றும், அதனாற் பெருமான் கிருபை கூர்ந்து பிரமனையும் உலகங்களையும் பெறுஞ் சத்தியைக் கொடுத்தார் என்றும், அந்தக் கற்பம் மேக வாகன கற்பம் எனப் பெயர் பெறு மென்றுஞ் சரிதமிருத்தலா லென்க. இதனை "உரைசெயு மேக வாகன கற்பத் தொளிகிள ராழியங் தடக்கைக்-கருமுகில் வண்ணன் விரிதிரை பருகு கருவிமா முகிலுருத் தாங்கி-யருவியஞ் சாரற் கயிலையம் பொருப்பி லமர்ந்துறை கடவுளை யமரர்-பருவமீ ரைஞ்ஞூ றளக்குழைந் தருஇப் பழுத்தபே ரன்பினிற் சுமந்தான்." எனவரும் இலிங்க புராணத் திருவிருத்தத்தானறிக.

வினதை புத்திரனுய கருடன் அமிர்த மெடுப்பான் சென்று தேவர்களை யலைத்துக் கவர்ந்து வரும் வழி, அவர்க்காக வெதிர்த்த விண்டுவையும் பொருது வென்ற விறலான் என்பது தோன்ற "திறற் கலுழன்" என்றான். (௪௪)

வரைபெ யர்ந்துகலு முன்சிறை வழங்கு வளியாற்
சருகி னிற்றிரிய வோடியெதிர் சென்று தளராச்

செருவி ளைத்தகண நாதரை யுடன்று சினவிக்
குருதி கக்கும்வளை வாய்கொடெதிர் குத்தி யிடலும்.

(இ-ள்.) கலுழன் = (அப்போது) கருடன், சிறை வழங்கு வளியால்=சிறகுகளா லுண்டாகுங் காற்றினால், வரை பெயர்ந்து=மலைகள் யாவு மெடுபட்டு, சருகின் திரிய ஓடி எதிர் சென்று = சருகைப் போலச் சுழலும்படி யோடி யெதிர் வந்து, சினவி தளரா = கோபித்துச் சோர் வுறாமல், செரு விளைத்த கணநாதரை உடன்று = போர் செய்த கணத் தலைவரை வருந்தச் செய்து, குருதி கக்கும் வளை வாய் கொடு=இரத்தம் பொழியா நின்ற வளைந்த (தனது) வாயினால், எதிர் குத்தி யிடலும்=தாக்கிக் கொத்துதலும். (சரு)

கலுழன் வெஞ்சம ருடற்றுவது கண்டு வெகுளா
வலகில் வீரனுயர் புள்ளரசொ ராயி ரம்வகுத்
துலகம் யாவையுமு னுண்டவன லூர்தி யுடனே
மலைக வென்னவவை சென்றமர் மலைந்த பொழுதின்.

(இ-ள்.) அலகு இல் வீரன் = அளவிடப்படாத வீரபத்திரக் கடவுள், கலுழன்= கருடன், வெம் சமர் உடற்றுவது கண்டு வெகுளா = கொடிய யுத்தத்தைச் செய்வதை யறிந்து கோப முற்று, உயர் ஓர் ஆயிரம் புள் அரசு வகுத்து=உயர்வாய ஆயிரங் கருடப் பறவைகளை யுண்டாக்கி, முன் = முன்னர்க் காலத்தில், உலகம் யாவையும் உண்டவன்= உலகங்க ளெவற்றையு முண்ட திருமாலினது, நல் ஊர்தி உடனே=சிறந்த வாகனமாகிய கருடப் பறவை யுடன், மலைக என்ன = போர் செய்க வென்று கூற, அவை சென்று = அப் பறவைகள் போய், அமர் மலைந்த பொழுதின்=யுத்தத்தைச் செய்த காலத்தில்.

அரசு என்னுஞ் சொல் "அரசுவா வீழ்ந்த களத்து" என்றாற் போல அஃறிணைப் பொருளை யுணர்த்திற்று. அங்ஙனமாதலை "குடிமை யாண்மை" என்னுங் கிளவியாக்கச் சூத்திரத்திலும் உரைத்துள்ளார் நச்சினார்க்கினியர். இது முத லிரு செய்யுள் குளகம். ()

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருகு சீற்ற வெந்துப்பின் வீரன் விடுத்த திறற்புள்ளேற்
றரசி யாவு மணிவண்ண னிவரும் புள்ளேற் றினையடர்ப்ப
வெருவுந் தமரி னாற்றாது மேக வண்ணன் றனைவீழ்த்தி
யிரியல் போக வதுநோக்கி யிகழ்ந்து வீர னிவைசெய்வான்.

(இ-ள்.) வீரன்=வீரபத்திரக் கடவுள், திருகு சீற்றம் வெம் துப்பின் = மாறு பட்ட கோபத்தினை யுடைய வெவ்விய பகையினால், விடுத்த=ஏவிய, திறல் ஏறு புள் அரசு யாவும்=வலிமை மிக்க கருடப் பறவைகள் எல்லாம், மணி வண்ணன் இவரும்=நீலநிறத் தின ராகிய விண்டு ஏறி யிருந்த, புள் ஏறினை அடர்ப்ப = கருடனைச் சாட, வெரு வந்து= (அது) பயமுற்று, அமரின் ஆற்றாது=போர் செய்தற் கியலாததாய், மேக வண்ணன் தனை வீழ்த்தி = மேகம் போன்ற வடிவினராய திருமாலைக் கீழே விழுத்தி, இரியல் போக= பறந்து செல்ல, வீரன் அது நோக்கி=வீரபத்திரக் கடவுள் அதனைப் பார்த்து, இகழ்ந்து இவை செய்வான்=நகை செய்து இவை யிற்றைச் செய்வா ராயினர். (சஎ)

அண்ண லேற்றுப் புள்ளரசு வீழ்த்த வாவி தீர்ந்தான்போற்
றண்ணந் துளவோன் கிடந்திடலுந் தக்க னெதிர்போய்ச் சிவனின்றி
நண்ணும் வேள்வி யாற்றியது நன்று நன்றென் றிகழ்ந்துரையாத்
துண்ணென் றுடலம் வெருக்கொள்ளச் சுரிமென் குஞ்சி பற்றினான்.

(இ-ள்.) தண் அம் துளவோன் = குளிர்மை யாகிய அழகிய துழாய் மாலையை யணிந்த விட்டுணுமூர்த்தி, அண்ணல் ஏறு புள் அரசு வீழ்த்த = பெருமை யாகிய ஆண் டன்மை வாய்ந்த கருடனாகிய பறவை வேந்து விழுத்த, ஆவி தீர்ந்தான் போல் கிடந்திடலும்=உயிர் நீங்கினர் போலக் கிடத்தலும், தக்கன் எதிர் போய் = தக்கனுக்கு எதிரே சென்று, சிவன் இன்றி நண்ணும் வேள்வி ஆற்றியது நன்று நன்று என்று = சிவபரம் பொருளை யில்லாமல் பொருந்திய யாகத்தைச் செய்யத் தொடங்கியது வியப்பு வியப்பா யிருக்கிற தென்று, இகழ்ந்து உரையா = இழித்துக் கூறி, உடலம் துண் என்று வெரு கொள்ள = (அவனது) சரீரந் திடீரென்று பயமுற, சுரி மென் குஞ்சி பற்றினன் = சுருண்ட மிருதுவாய குடுமியைப் பிடித்தனர்.

துண் என்பது விரைவுப் பொருட்டு மோர் குறிப்பிடைச் சொல். (சஅ)

சுரிமென் குஞ்சி யொருகையாற் பற்றி யவன்றன் றலைதுமிப்பான்
பருமவடிவா ளுறைகழிப்பப் பனிமென் கமலப் பொகுட்டுறையு
மருமா மறையோன் வந்தெய்தி வீரற் போற்றி யளியேற்காக்
கருணை கூர்ந்திங் கிவனாவி கடியே லென்னு மேல்வைதனில்.

(இ-ள்.) சுரி மென் குஞ்சி = சுருண்ட மெல்லிய குடுமியை, ஒரு கையால் பற்றி= ஒரு திரு கரத்தாற் பிடித்து, அவன் தலை துமிப்பான்=அத்தக்கனது சிரத்தை வெட்டும் படி, பருமம் வடி வாள் உறை கழிப்ப= ஒப்பனை யமைந்த கூரிய வாளாயுதத்தை யுறையி னின்று மெடுப்ப, பனி மென் கமலம் பொகுட்டு உறையும் = குளிர்மை யாகிய மெல்லிய தாமரைப்பூம் பொகுட்டின்க ணிருக்கும், அரு மா மறையோன் வந்து எய்தி = அரிய சிறந்த வேதங்களில் வல்ல பிரமன் அங்கண் வந்தடைந்து, வீரன் போற்றி=வீரபத்திரக் கடவுளைத் துதித்து, அளியேன் கு ஆ கருணை கூர்ந்து = (ஐயனே) எளியவனாகிய என் பொருட்டாகத் தயை சிறந்து, இங்கு இவன் ஆவி = இப்போது இவனது உயிரை, கடியேல் என்னும் ஏல்வையினில்=நீக்கா தருளவேண்டும் என்று பிரார்த்திக்குஞ் சமயத்தில்.

வீரபத்திரக் கடவுள், தக்கன் குடுமியை யொரு திருக் கரத்தாற் பிடித்து அவன் றலையை வெட்ட வாளை யெடுக்கும்போது, பிரமன் வந்து பணிந்து, அடிகளே! அடியேன் பொருட்டாக விவன் உயிரை நீக்காது காத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தான்.

உலகர்க்கு மக்க ளாசை பெரிதாதலிற் பிரமனும் தன் மகனாய தக்கனைத் தடிதற் குளஞ் சகிக்காது வேண்டினன் எனவும், வேண்டுழியும் வீரபத்திரக் கடவுள் கொண்ட வெகுளி தணியும் பொருட்டு, சிவனை யின்றிய இந்த யாகத்தை யா னொப்பாது அகன்று, தேவரீருக்கு அடியவனா யிருக்கின்றே னாகலின், அடியவனாய என்பொருட் டாலாயினும் கொல்லாது காத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அதனாற் சிறிது தாழ்த்தினர் எனவுங் கொள்க. (சகூ)

எண்டோண் முக்க ணெம்பெருமா னிமய முயிர்த்த வல்லியொடுந்
தொண்டார் குழுவி னொடுமெய்தித் தக்கன் சென்னி துமித்திடேல்
விண்டு முதலாந் தேவர்களும் விளியா தளித்தி யெனவுரைப்பத்
திண்டோள் வீர னுயர்தக்கன் பங்கி விடுத்துச் செருவொழித்தான்.

(இ-ள்.) எண் தோள் முக்கண் எம் பெருமான் = எட்டுப் புயங்களையுந் திரிநேத் திரங்களையு முடைய எமது சிவபெருமான், இமயம் உயிர்த்த வல்லி ஒடும் = இமய மலை யரசன் பெற்ற கொடி போன்ற உமா தேவியாரோடும், தொண்டு ஆர் குழுவின் ஒடும்= ஏவல் செய்யுங் கணத்தவர்க ளோடும், எய்தி=அங்குத் தோன்றி, தக்கன் சென்னி துமித்

திடேல் = (வீரனே!) தக்கன் றலையை யரியற்க, விண்டு முதல் ஆம் தேவர்களும்=திருமால் முதலாகிய தேவர்களும், விளியாது அளித்தி = இறவாமற் காப்பாயாக, "என உரைப்ப = என்று திருவாய் மலர்ந்தருள, திண் தோள் வீரன் = திண்ணிய புயத்தினராகிய வீரபத்திரக் கடவுள், உயர் தக்கன் பங்கி விடுத்து = உயர்வுடைய தக்கனது குடுமியை விட்டு, செரு ஒழித்தான்=யுத்தத் தொழிலையும் நிறுத்தினர்.

வீரபத்திரக் கடவுள் தக்கன் றலையை வெட்டி, அங்கு அலமந்திருந்த அக்கினியை விளித்து இதனைத் தின்றி யென்று கொடுக்க,அவன் ஓர் கணத்தி லெரித்தா னென்றும்,பின்னர்ச் சிவபெருமானது ஆஞ்ஞைப்படி யிறந்தவர்களை யெல்லாம் எழுப்பிய காலத்துத் தக்கன் றலை யெரிந்தமையால் ஆட்டுத் தலையை வைத்தெழுப்பினர் என்றும், தேவாரம்,திருவாசகம், கந்த புராணம், இலிங்க புராணம் முதலியவற்றில் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளக்கி யிருப்பவும் ஈண்டுக் கூறிய வென்னெனில், புராணங்கள் முற்பட்ட கற்ப விருத்தாந்தங்களைச் சுருக்கியும், பிறப்பட்ட கற்ப விருத்தாந்தங்களை விரித்தும் பேதாபேதங்க டோன்ற விளக்குவன வாகலானும், இப்புராணம் திருமால் முன் இந்திரத்தியும்நனுக்கு உரைத்த இலக்குமி கற்ப விருத்தாந்தங்களையே பிற்பட்ட பதும கற்பத்திலே கூர்ம ரூபமாய் நின்று நாரதேந்திராதியர்க்கு நவின்ற தாகலானும், அதனையே பின்னர்ச் சுவேத வராக கற்பத்திற் சூதமுனிவர் நைமிச வனத்துள்ள முனிவர்கட்கு உபதேசித்தனராகலானுங் கற்ப வேறுபா டென்க. அதனை "முன்னுட் கற்பங் களில்வகுத்த படியே முளரி நான்முகத்தோன் - மன்னு நின்ற கற்பங்க டனிலு முறையே வகுத்திடுவா - னிந்நாளெய்தும் பருவம்பே ரெய்தும் பருவ மெவைகளினும் - துன்னு நிற்கும் பலவு முன் போற் றோன்ற வெடுத்திங் குரைத்திடினே." என்னும் வாயு சங்கிதைச் செய்யுளானு முணர்க. ஆகவே முந்திய கற்பத்தில் அவன் றலையை யரியாது விட்டதும், பிந்திய கற்பத்தில் அரிந்து ஆட்டுத்தலை கொடுத்ததும் எல்லா முடைய பெருமானுர் திருவிளையாட்டாக, "அருவு மாகுவ னுருவமு மாகுவ னருவு-முருவு மில்லதோர் தன்மையு மாகுவனூழின் - கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய் - பரம னுடலை யாவரே பகர்ந்திடற் பாலார்." என்று திருவாக் கிருத்தலின் அதனை யாரறிவாரென்று விடுக்க. (௬௰)

வெயிலேற் றெழுந்த முத்தலைவேல் வீர னமர ருயிரளிப்பத்
துயிலேற் றவர்போன் முகில்வண்ணன் முதலாந் தேவர் துனைவினெழுந்
தயிலேற் றாலத் தொடுசினவி யமிர்திற் பழகு மரிநெடுங்கண்
மயிலேற் றிருந்த விடைப்பாகன் பாத முறையின் வணங்கினர்.

(இ-ள்.) வெயில் ஏற்று எழுந்த மு தலை வேல் வீரன் = சூரிய கிரணத்தோடும் எதிர்த்து ஒளிசெய்யும் மூன்று தலைகளையுடைய சூலாயுதத்தைத் தரித்த வீரபத்திரக் கடவுள், அமரர் உயிர் அளிப்ப = (சிவபெருமானது ஆஞ்ஞைபின்படி) தேவர்கள் யாவர்க்கும் உயிர் கொடுப்ப, முகில் வண்ணன் முதல் ஆம் தேவர் = மேகநிறத் திருமால் முதலாகிய தேவர்கள், துயில் ஏற்றவர் போல் துனைவின் எழுந்து = நித்திரைவிட் டெழுவாரைப் போல விரைவாக வெழுந்து, அயில் ஏற்று=வேலாயுதத்தை யெதிர்த்து,ஆலத்து ஒடு சினவி=நஞ்சுடன் பகைத்து, அமிர்தின் பழகும் அரி நெடு கண்=அமிர்தத்துடனுறவு கொள்ளும் அரிபரந்த நீண்ட விழிகளை யுடைய, மயில் ஏற்று இருந்த விடை பாகன்=மயில்போன்ற உமா தேவியை (வாமபாகத்திற்) கொண்டு விளங்கிய இடபாரூடராகிய சிவபெருமானது, பாதம் முறையின் வணங்கினர்=திருவடிகளை விதிப்படி பணிந்தார். ()

சூடந்தம் பட்டுச் சூழ்போந்து குழைந்து வழுத்தி நின்பாத
மடைந்த தேவ ரிழைத்தபிழை பொறுத்தி யென்ன வழுதொழுகும்

கடைந்த மணிச்செப் பெனவிங்குங் கதிர்மென் கொம்மை முலைக்கனிவாய்
மடந்தை வேண்ட மதிக்கண்ணி மறையோ னிதனை வழங்குவான்.

(இ-ள்.) அழகு ஒழுகும்=சுந்தரந் துலங்கப் பெற்ற, கடைந்த மணி செப்பு என வீங்கும்—ஒப்பனை செய்யப்பட்ட இரத்தினச் செப்பு என்று (கண்டார்)சொல்லப் பூரித்த, கதிர் மென் கொம்மை முலை = ஒளிவாய்ந்த மிருதுவாய இளமுலைகளையும், கனி வாய் மடந்தை = (கோவைப்) பழம் போலும் வாயினையு முடைய உமையம்மையார் (இறைவனை நோக்கி) குடந்தம் பட்டு=வணக்கம் பட்டு, சூழ் போந்து=வலம் வந்து, குழைந்து வழுத்தி=உருகித் துதித்து, நின் பாதம் அடைந்த தேவர்=நுமது திருவடியை (சரணாக) புகுந்த தேவர்கள், இழைத்த பிழை பொறுத்தி என்ன = செய்த குற்றங்களைப் பொறுத் தருள்வீராக வென்று, வேண்ட = குறையிரக்க, மதி கண்ணி மறையோன் = பிறைக் கொழுந்தைத் தரித்த வேத முதல்வராகிய சிவபெருமான், இதனை வழங்குவான்=இதனைக் கூறி யருள்வாராயினர்.

குடந்தம் பட்டு என்பதில்,குட என்பது தட வென்றாற் போல வளைவை யுணர்த்துவதோ ருரிச்சொல் லாகலின், அதனடியாகப் பிறந்த பெயருமா மென்றும், அதற்கு வழிபட்டு, வணக்கம் பட்டு எனவுரை கொள்ப வென்றும்,பத்துப் பாட்டில், ஆற்றுப்படைத் தொடர்க்கண் ஆசிரியர் நச்சினார்க்கினிய ருரைத்தனு ளுணர்க. (௫௨)

அவுணர்ச் செகுத்த சுடர்நேமி யண்ணன் முதலோ ரிழைத்தபிழை
துவர்வாய்ப் பேதை நின்னருளாற் பொறுத்தே மென்னாத் தொழுதிறைஞ்சு
முவணப் புள்ளேற் றுயர்பறவை யுயர்த்தோன் முதல தேவர்களு
நவையற் றிடவின் னருள்பூத்து நாத னினிதின் விடையளித்தான்.

(இ-ள்.) துவர் வாய் பேதை=பவளம் போலும் வாயினையுடைய நங்கையே, அவுணர் செகுத்த சுடர் நேமி=அசுரர்களை மாய்த்த ஒளிபொருந்திய சக்கரத்தை யேந்திய, அண்ணல் முதலோர் இழைத்த பிழை = பெருமையை யுடைய விண்டு முதலாயினோர் புரிந்த குற்றங்களை, நின் அருளால் பொறுத்தேம்=உனது இரக்கத்தினாற் பொறுத்தனம், என்னா=என்று, நாதன்=சிவபெருமான், தொழுது இறைஞ்சும்=கைகூப்பி வணங்கும், உயர் புள் ஏறு உவணம் பறவை உயர்த்தோன் முதல=உயர்ந்து செல்லும் பறவைகளுக்கு அரசனாகிய கருடப் பட்சியைக் கொடியாகத் தூக்கிய திருமால் முதலாகிய, தேவர்களும் நவை அற்றிட=தேவர்களுங் குற்ற மில்லாதவராக, இன் அருள் பூத்து=மேலாய திருவருளைச் செய்து, இனிதின் விடை அளித்தான்=மகிழ்வுடன் விடை கொடுத்தனர்.

அண்ணன் முதலோர் என்பதற்கு (நினக்கு) மூத்தோனாகிய திருமால் முதலாயினோர் எனப் பொருளுரைத்தலுமாம். திருமால் மூத்தோன் என்பதனை "நின்மலை தனக்கு மூத்த நீலமா மலைக்கும் வேதப் - பொன்மலை தனக்கு நாப்பட் புரைதவிர் பதும ராக-மன்மலை நின்ற தென்ன மாறுகொண் டவர்தம் மிற்றுஞ் - சொன்மலை வுருத வண்ணந் தோன்றிய சுடரைக் கண்டார்." என்னுஞ் சிவராத்திரிபுராணத் திருவிருத்தத்தினறிக.

எரிகொப் புளிக்கு மணிமவுலித் தக்கன் முகம்பார்த் தெம்பெருமா
னரிகொப் புளிக்கு மதர்நெடுங்க ணணங்கின் னருளா லெமதுகணத்
தொருவ னாகிக் கற்பாந்தத் துறைதி யென்ன வரநல்கி
மருவும் வீரன் முதற்கணங்க ளோடு மறைந்து போயினனால்.

(இ-ள்.) எம் பெருமான்=எமது கடவுளாகிய சிவபெருமான், எரி கொப்புளிக்கும் மணி மவுலி தக்கன் முகம் பார்த்து = ஒளியைக் காலுகின்ற இரத்தினங்க ளிழைத்துச்

செய்யப்பட்ட கிரீடத்தை யணிந்த தக்கனுடைய முகத்தை நோக்கி, அரி கொப்புளிக்கும் மதர் நெடு கண் அணங்கு இன் அருளால் = செவ்வரி பரந்த மதர்த்த நீண்ட விழிகளையுடைய சத்தியின் இனிய கிருபையால், கற்ப அந்தத்து=கற்ப முடிவில், எமது கணத்து ஒருவன் ஆகி = நமது கணங்களுள் ஒருவனாகி, உறைதி என்ன வரம் நல்கி = வாழ்வாயென்று வரங் கொடுத்து, மருவும் வீரன் முதல் கணங்கள் ஒடு=சூழ்ந்து நின்ற வீரபத்திரக் கடவுள் முதலிய கணங்களுடன், மறைந்து போயினன்=மறைந்து சென்றனர்.

ஆல்-அசை. கற்பாந்தம் – வடநூன் முடிபு. அஃதாவது பிரகிருதி மாயைக்குள் அண்டமொடுங்குங் காலம். அதனைப் பிராகிருதப் பிரளயம் என்ப. (ருச)

வள்ளக் கமல வட்டவணைக் கடவு டக்கன் முகநோக்கி
யெள்ள லீசன் றனைமறந்து நெடுமா லீச னெனுமவர்க
ளுள்ளி லொருவர் திருநெடுமா லுமைபோ லீச னுயர்சத்தி
வெள்ளை யறிவின் மாயோனை யிகழி லீசன் வெகுண்டிடுமால்.

(இ-ள்.) வள்ளம் வட்டம் கமலம் அணை கடவுள் - கிண்ணம் போல வட்டமாகிய தாமரை மலராசனனாகிய பிரமன், தக்கன் முகம் நோக்கி = தக்கனது வதனத்தைப் பார்த்து, ஈசன் தனை மறந்தும் எள்ளல்= (புத்திரனே!) சிவபெருமானை மறந்தேனு மிகழற்க, உள்ளில்=நினைக்கு மிடத்து, நெடு மால் ஈசன் எனும் அவர்கள் ஒருவர் = நீண்ட வடிவினராகிய விண்டு சிவபெருமா னென்னு மவரிருவரும் ஒருவரே யாவர், திரு நெடு மால் = (அன்றியும்) அழகிய நெடுமால், உமை போல் ஈசன் உயர் சத்தி = உமா தேவியாரைப் போலச் சிவபெருமானது (ஆண்மைச்) சத்தியே யாகும், (ஆகலால்) வெள்ளை அறிவில்=அறிவின்மையால், மாயோனை இகழில் = விட்டுணுவை (யாவரேனும்) நிந்தித்தால், ஈசன் வெகுண்டிடும்=சிவபெருமான் கோபமுறுவர். ஆல் அசை.

சிவபெருமானை நிந்திப்பது அதிபாதகம் என்பதற்கும், அது செய்தார் கொடிய நரகத்திற் கிடந்து வருந்துவர் என்பதற்கும் பிரமாணம்.

சிவதருமோத்தரம்.

தாரகன் றன்னைச் சாதத் தடங்கடற் றளர்வார் தம்மைப்
பாரகன் றனையும் பாரும் படைத்தவன் றனையும் பாங்காற்
காரகன் றன்னை வாங்குங் கடவுளைக் கயந்த நெஞ்சர்
நாரகர் மீளு நாளும் பிறிதிய னவிற்று வாமே.

சிவபெருமானும் விட்டுணுமூர்த்தியும் ஒருவரே யென்பதற்குப் பிரமாணம்.

கந்தபுராணம்.

அன்னதோர் பரிசா லீச னரும்பெருஞ் சத்தி யென்னிற்
பின்னமன் றவற்கி யானும் பெரிதுமன் புடையேன் முக்கண்.

பா ர த ம்.

ஒலிடு புராரியு முராரியு முணர்ந்தோர்க்
கேலுற வொரேபொரு ளெனும்படி தெளிந்தான்.

சிவபெருமானுக் குரிய அழித்தற் சத்தி துர்க்கை, சீற்றச் சத்தி காளி, இன்ப சத்தி உமையம்மை, ஆண்மைச் சத்தி விட்டுணு வெனக் கொள்க. அது பின்வருவனவற்றாற் றெளியப்படும்.

கந்தபுராணம் - யாகசங்காரப்படலம்.

இறுதிசெய் திடலே சீற்ற மின்பமே யாண்மை யென்னு
வறைதரு சத்தி நான்கா மரன்றனக் கையை காளி
முறைதரு கவுரி யின்னோர் மும்மையும் பெற்று ரேனைப்
பெறலருஞ் சத்தி யாளிப் பெற்றியு மறைகள் பேசும்.

தேவாரம்—நான்காந்திருமுறை.

எரியலா லுருவ மில்லை யேறலா லேற லில்லைக்
கரியலாற் போர்வை யில்லைக் காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே.

சத்தியுஞ் சத்தனும், மரமும் வைரமும் போலக் குணகுணி பாவமா நிலைத்தலானும், ஒளியின்றிச் சூரியனும், சூடின்றி அக்கினியும் விளங்காவாறு போலச் சத்தியையின்றிச் சத்தன் விளங்காத் தன்மையானும் பேதமன் றென்க.

சிவஞான சித்தியார்.

வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பு
மிருமையும் போல மன்னிச் சிவத்தினோ டியைந்து நிற்கும்.

வாயு சங்கிதை.

விரிந்திடு மொளியை நீக்கியே மதியு ஞாயிறும் விளங்கிட மாட்டா - திருந்திய வொளியு மன்னவை தம்மை நீக்கியே சேர்ந்திடா ததுபோ - லிருந்தகம் மிறையு மிறைவியு மொன்று புறைகுவ ரிறைவியா லிறைவன் - பொருந்திடப் போக முத்திரன் குதவிப் பொற்புறு சத்திமா னுவன். (ருரு)

தன்னை யிகழ்தல் பொறுத்திடினுந் தனதிற் கிழத்தி தனையிகழின்
மன்னுஞ் சீற்றமிகு மெவர்க்கு மற்றுங் கதுபோன் மாயோனை
யுன்னிச் சிறிதே யிகழ்ந்திடினு மொறுக்கு மீச னாதலாற்
கன்னித் துளவோ னிறைவனெனப் பிரித்தோ திடுதல் கடனன்றே.

(இ-ள்.) தன்னை இகழ்தல் பொறுத்திடினும் = தன்னை நிந்திப்பதைச் சகித்துக் கொண்டாலும், தனது இல் கிழத்தி தனை இகழின் = தனது மனையாளை (ஒருவர்) நிந்திப்பாராயின், எவர்க்கும் மன்னும் சீற்றம் மிகும் = யாவர்க்கும் நிலைபெற்ற கோபமதிகரிக்கும், ஆங்கதுபோல் = அதைப் போல, மாயோனை உன்னி சிறிது இகழ்ந்திடினும் = திருமாலை நினைத்து (யாவாராயினும்) சற்று நிந்திக்கினும், ஈசன் ஒறுக்கும் = சிவபிரான் றண்டனை செய்விக்கும், ஆதலால் = அக்காரணத்தினால், கன்னி துளவோன் இறைவன் என பிரித்து ஒதிடுதல் = புதுமையாகிய துழாய் மாலையை யணிந்த திருமாலென்றுஞ் சிவபெருமா னென்றும் வேறுபடுத்திச் சொல்வது, கடன் அன்று = முறை யல்லவாம்.

மற்று-அசைநிலை. ஏ யிரண்டனுள் முன்னையது இசைநிறையும், பின்னையது ஈற்றசையுமாம். ஒறுக்கும் என்பதிற் பிறவினை விகுதி தொக்கது. கிழத்தி யென்னுஞ் சொல் கிழவன் என்னும் ஆண்பாற் குரிய பெண்பாற் பெயர். இல் கிழத்தி = மனைக்குரியவள், மனைக்குத் தலைவியுமாம்.

யாவரேனுந் தம்மை யிகழ்தலைச் சகித்தாலும், தம் மனையாளை யிகழ்வதைச் சகிக்காது வைரங் கொள்வர். அதுபோலச் சிவபெருமான் றமது சத்தியாகிய திருமாலை நிந்தித்தாரைத் தண்டிப்பிப்பர் என்பதாம். இது எடுத்துக்காட்டுவமையணி.

"ஆற்றல்வடி வாட்டடங்கை யவுணராலு மகல்விசும்பு தனிபுரக்கு மமரராலு-மாற்றரிதா யெவ்வுயிர்க்கு மயக்கஞ் செய்யு மாயைசினக் களித்தனமெம் மிடப்பா னீயே - யூற்றிருந்து றவொழுகுந் துளவத் தாரோ யுனையிகழ்ந்தோ ரெமையிகழ்ந்தோ ரென்ன வோதி - யேற்றையிருங் கொடியுயர்த்த கங்கைவேணி யிறைவனுயர் தடங்கயிலை யெய்தி னனே." என்னுங் காசிகாண்டத் திருவிருத்தப்படி திருமாலை யிகழ்ந்தோர் சிவபெருமானை யிகழ்ந்த பாவத்திற் கிலக்காவா ரென்க. இங்ஙன் கூறப்பட்ட விட்டுணு பிரமாண்டக்கணுள்ள விட்டுணு வாகாது, குண தத்துவத்துக்கு மேற்பட்ட மாகேச மூர்த்தியின் சத்தியாய் எண்ணப்பட்ட விட்டுணுவாம். (ருசு)

என்று கூறிச் செழுங்கமலப் புத்தே ளகல வீற்றுளைந்து
சென்ற வண்டு பொறையுயிர்த்துச் செழுந்தோட் டகட்டி னடைகிடக்கு
மன்றல் கமழுந் துணர்க்கொன்றைத் தொடையோன் செய்ய மலரடியி
னொன்று முள்ளத் தொடுந்தக்கன் பன்னாள் வழிபட் டுறைந்தனனால்.

(இ-ள்.) செழு கமலம் புத்தேள்=வளப்ப முடைய தாமரையாசனனாகிய பிரமன், என்று கூறி=என் றிவ்வாறு சொல்லி, அகல=போக, தக்கன்=தக்கனென்பவன், சென்ற வண்டு = மொய்த்த வண்டுகள், ஈற்று உளைந்து = கருப்ப வேதனைப்பட்டு, பொறை உயிர்த்து=ஈன்று, செழு தோடு அகட்டின் அடை கிடக்கும்=செழுமை யாகிய இதழ்களினிடத்து அடை கிடக்கின்ற,மன்றல் கமழும் கொன்றை துணர் தொடையோன்=வாசனை வீசுங் கொன்றைப் பூங்கொத்துக ளானய மாலையை யணிந்த சிவபெருமானது, செய்ய மலர் அடியின் ஒன்றும் உள்ளத்தொடும் = செந்தாமரை மலர் போன்ற திருவடிக்கணொருப்பட்ட மனத்துடன், பல் நாள் வழிபட்டு உறைந்தனன் = பலநாளாக உபாசித்து இருந்தனன்.

தக்கன் பிரம னுபதேசத்தால் நல்லறிவுற்றுக் காசியம் பதிக்க ணுள்ள மணிகன்றிகை யென்னு மாலயத்தி னோர் பக்கத்திற் கங்கைக் கரையில் ஆலயமொன்று செய்வித்துச் சிவபூசை செய்து தன் பாதகங்க ணீங்கி யருள் பெற்றனன். இதனை "சென்றனன் காசியிற் சிறந்த தொன்மணி-கன்றிகை யொருபுடை கங்கை வேலையிற்-பொன்றிகழ் செஞ்சடைப் புனிதற் காலய - மொன்றுமுன் விதித்தன னுணர்வு சேர்ந்துளான்" என வருங் கந்தபுராணத் திருவிருத்தத்தா னறிக. (ருஎ)

கொண்ட சீற்றத் தொடுமுனிந்து ததீசி வைத குலமுனிவர்
மண்டு கலியி னல்குரவின் மறையோ ராகி யுடனீத்துப்
புண்டோய் நரகத் தழுந்திமலர்ப் புத்தே ளருளா லுளந்தெருண்டு
பண்டு போல முனிவரராய்ப் பரமன் பாதம் பழிச்சினர்.

(இ-ள்.) ததீசி=ததீசி முனிவர், கொண்ட சீற்றத்து ஒடு முனிந்து=வந்த கோபத்தினொடு கடிந்து பேசி, வைத குலம் முனிவர்=சபித்த கூட்டமாகிய விருடிகள், மண்டு கலியின்=நெருங்கிய கலியுகத்தில், நல்குரவின் மறையோர் ஆகி=வறுமை பிடித்த பிராமணராய்ப் பிறந்து, உடல் நீத்து = உடலைத் துறந்து, புண் தோய் நரகத்து அழுந்தி = புண்பட்ட நரகத்தின் மூழ்கி, மலர் புத்தேள் அருளால் = (பின்னர்)தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனது கிருபையினால், உளம் தெருண்டு=மனந் தெளிவுற்று, பண்டு போல முனிவரராய்=பழமை போல முனி சிரேட்டர்களாய், பரமன் பாதம் பழிச்சினர் = சிவபெருமானது, திருவடிகளைத் துதித்து வழிபடுவா ராயினர். (ருஅ)

தக்கன் வேள்வி யிவ்வாறு புகன்றேந் தக்கன் முனமீன்ற
மக்கண் மரபீண் டுரைத்துமென மகதி வீணை முனிவோற்கு
நக்க வைரப் படைக்கடவுண் முதலா நாகத் திமையோர்க்கு
மைக்கார் நிறத்த மணிவண்ணன் மகிழ்வி னோடு மிவையுரைப்பான்.

(இ-ள்.) இவ்வாறு தக்கன் வேள்வி புகன்றேம் = இங்ஙனமே தக்கன் யாகத்தை யழித்த சரிதத்தைக் கூறினேம், தக்கன் முனம் ஈன்ற மக்கள் மரபு=தக்கன் முற்பிறப்பிற் பெற்ற சந்ததிகளின் வரலாற்று முறையை, ஈண்டு உரைத்தும் என = இப்பொழுது கூறுவேமென்று, மகதி வீணை முனிவோன் கு உம்=மகதி யாழினை யுடைய நாரதமுனிவருக்கும், நக்க வைரம் படை கடவுள் முதல் ஆம்=பிரகாசிக்கின்ற குலிசாயுதத்தை யேந்திய இந்திரன் முதலாக நின்ற, நாகத்து இமையோர்க்கும் = சுவர்க்கலோகத்து வசிக்குந் தேவர்கட்கும், மை கார் மணி நிறத்த வண்ணன்=கருமேகம் போன்ற அழகிய நிறத்தினை யுடைய திருமால், மகிழ்வின் ஓடும் இவை உரைப்பான்=உவகையோடு மிவற்றைக் கூறுவா ராயினர் என்க. (௫௧)

தக்கன் வேள்வி யழித்த அத்தியாய முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்—௪௬௧.

பதினாறுவது
(தக்கன் வமிசமுரைத்த) அத்தியாயம்.

அஃதாவது பிரமனிடத்துத் தோன்றிய தக்கனது வமிச வரலாற்றைக் கூறிய பாகமாம். ஈண்டையது பிரசேதசருக்கும் மாரிடைக்கும் மகவாய்த் தோன்றி வைவச்சுதன் என்னும் பெயர் பெற்ற தக்கனது சந்ததிக் கிரம மன்று.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தாளதா மரையி னரசுவீற் றிருக்கு மந்தணன் றக்கனை நோக்கி
மீளவு முயிர்க ளளித்தியென் றுரைப்ப விதித்தவை மல்கிடா வதனு
லாள்வழக் கறநீண் டம்பலைத் தொழுகு மரிமதர் வடிக்கணு ரமைமென்
றோளிணை தழுவிப் பெறுமக வல்லான் மல்கிடா தெனவுளந் துணிந்தான்.

(இ-ள்.) தாள தாமரையின் அரசு வீற்றிருக்கும் அந்தணன்=நாளத்தினை யுடைய தாமரைப் பூவின்கண் தலைமையுடன் வீற்றிருக்கின்ற பிரமன், தக்கனை நோக்கி = தக்கனைப் பார்த்து, மீளவும் உயிர்கள் அளித்தி என்று உரைப்ப = பின்னரும் உயிர்களைப் படைப்பா யென்று சொல்லவும், விதித்தவை மல்கிடா அதனுல்=சிருட்டித்தவைகள் பெருகாத காரணத்தினுல், ஆள் வழக்கு அற நீண்டு = ஆளும் வழக்கில்லாமல் நீண்டு, அம்பு அலைத்து = கணையை வருத்தி, அரி ஒழுகும் மதர் வடி கணுர் = செவ்வரி பரந்த மதர்த்த மாவடுப் போலுங் கண்களை யுடைய மகளிரது, அமை மென் இணை தோள் தழுவி பெறு மகவு அல்லால் = மூங்கிலொத்த மிருதுவாய இரு புயங்களையுஞ் சேர்ந்து ஈனுகின்ற சந்ததியே (பெருகுவது) அல்லாமல், மல்கிடாது என உளம் துணிந்தான்=மற்றைய படைப்புயிர் வர்க்கம் விருத்தி யாகாதென்று மனத்தில் நிச்சயித்தான் என்க. (௧)

மாரனை யழகு மறலியை விறலுங் கவர்ந்திடு மலையுறழ் தடந்தோள்
வீரணப் பிரம னிரிதினிற் பயந்த வேய்ப்பசுந் தோளசிக் கினிதன்

னேர்குடி யிருந்து சுணங்குபூத் தலர்ந்த விளமுலை யின்னலம் பருகிப்
போர்கெழு திறல்வேற்றக்கன் மென்குதலைப் புதல்வரா யிரவரைப்பயந்தான்.

(இ-ள்.) போர் கெழு திறல் வேல் தக்கன் = போர்த்தொழிலைக் கொண்ட வலிய வேலாயுதத்தைத் தரித்த தக்க னென்பவன், மாரனை அழகும்= மன்மதனை அழகினுலும், மறலியை விறலும் கவர்ந்திடு=யமனை வலிமையினுலும் வென்ற, மலை உறழ் தடம் தோள் வீரணப் பிரமன்=மலையை நிகர்த்த பெரிய புயங்களை யுடைய வீரணப் பிரசாபதி,அரிதின் பயந்த=அருமையாகப் பெற்ற, வேய் பசு தோள் அசிக்கினி தன்=மூங்கில் போலும் பசிய தோள்களை யுடைய அசிக்கினி யென்பவளது, ஏர் குடி இருந்து = அழகு தங்கி யிருக்கப் பெற்று, சுணங்கு பூத்து அலர்ந்த=தேமல் செறிந்து பரந்த, இள முலை இன் நலம் பருகி= இளமை வாய்ந்த தனங்களான் வருமினிய வின்பத்தைக் கொண்டு, மென் குதலை ஆயிரம் புதல்வரை பயந்தான்=மிருதுவாய மழலைச் சொற்களை வசனிக்கின்ற ஆயிரம் புத்திரரைப் பெற்றான்.

தக்கன் வீரணப் பிரசாபதியின் மகளாகிய அசிக்கினியைச் சேர்ந்து ஆயிரம் புத்திரரைப் பெற்றான் என்பதாம். (௨)

ஆயிர மகவு நாரத னுணர்வி னகன்றுமெய் யுணர்வுறீஇச் சேர
வேய்மருள் பசுந்தோ ளசிக்கினி யென்னும் வேற்றடங் கண்ணியோ டாடி
மாயிரு ஞால முழுவதும் பல்க மீட்டுநான் மறைபயி றக்கன்
காயெரி கவிழ்க்கும் பூண்சுமந் தொல்கு மறுபது கன்னியர்ப் பயந்தான்.

(இ-ள்.) ஆயிரம் மகவும்=ஆயிரம் பிள்ளைகளும், நாரதன் உணர்வின் அகன்று= நாரத முனிவரது உபதேசத்தினுல் (தக்கன் சொல்லைக்) கடந்து, மெய் உணர்வு உறீஇ சேர = சிவஞானத்தைப் பெற்று (முத்தி) யடைய, நால் மறை பயில் தக்கன்=நான்கு வேதங்களையு மாராய்ந் தறிந்த தக்கன், மீட்டும் = பின்னரும், வேய் மருள் பசு தோள் அசிக்கினி என்னும் = மூங்கிலும் மருளுகின்ற பசிய தோள்களை யுடைய அசிக்கினி யென் னும் பெயர் கொண்ட, வேல் தடம் கண்ணியோடு ஆடி = வேற்படை போன்ற நீண்ட விழியளுடன் சேர்ந்து, மா இரு ஞாலம் முழுவதும் பல்க = சிறந்த பெரிய உலகத்துயிர் வருக்கங்கள் விருத்தியாகும்படி, காய் எரி கவிழ்க்கும் பூண் சுமந்து ஒல்கும்= சுடுகின்ற அக்கினியி னொளியையுங் கீழ்ப் படுத்து மாபரணங்களைத் தாங்கி மெலிகின்ற, அறுபது கன்னியர் பயந்தான்=அறுபது பெண்களைப் பெற்றான்.

முன்னர்ப் பெற்ற ஆயிரம் பிள்ளைகளும் நாரத முனிவரி னுபதேசத்தாற் சிருட்டித் தொழிலை விரும்பாது சிவஞானத்தான் முத்தி யடைய, பின்னருந் தக்கன் அறுபது பெண்களைப் பெற்று னென்க.

தக்கன் மைந்தரைப் பெற்று, அவரை நோக்கி நீவிர் தவஞ் செய்து சிருட்டிக்கும் வலிமையைப் பெற்று வருவீ ரென்ன, அவரும் மானத தடாகக் கரைசென்று நோற்றழி, நாரத முனிவர் ஆண்டுத் தோன்றி, மைந்தர்காள்! ஆணவம், மாயை, கன்மம் என்னு மும்மலத் தடைகளு மறத் தவஞ் செய்து சிவஞானப் பேற்றுற் பேரானந்தப் பெருவாழ்வு புகாமற் குற்றமிக்க படைப்புத் தொழிற் காசை வைத்தீர். அதனுல் நுமக்கு மீட்டும் வீட்டும் பிறப்புந் துன்பமும் இறப்பும் உண்டாகும். அது வன்றி நும்போலத் தவஞ் செய்து படைப்புத் தொழில் பண்ணும் பிரமதேவர் தந்தலையைச் சிவபெருமான் கிள்ளு விக்க,அதனைப் படைக்கும் வல்லமை யில்லா ராயினர். ஆகலின் பெருமானது திருவடிக்கீ ழிருத்த லாய வாழ்வே பேரின்ப மெனப்படும். அதனை யடைந்தவரே மேலோர். என் றின்னவா றுறுதி கூற, அவர் கருதி யவ்வா றுற்றனர் என்று பதின் மூன்றும் புராணங் கூறிற்று. பின்னரும் ஆயிரம் புத்திரரை யளித்து விடுத்தா னென்றும், அவர்களை

மவ்வாறே யிருடியனுர் உணர் வளித்து வீடுறு வித்தா ரென்றும், அதனை யறிந்த தக்கன் கோபுங் கொண்டு நாரதன் உலகந்தோறு முழன்று திரியக் கடவ னென்று சபித்து, இனிப் புத்திரரை வேண்டே னென்று புதல்வியரைப் பயந்தான் என்றுஞ் சரிதம். (ரு)

ஆங்கவர் தம்மிற் பதின்மரைத் தரும தேவதைக் களித்தன னருளா
னீங்கரு முவப்பிற் காசிபற் கொருபான் மூவரை நெறிவழா தீந்தா
னீர்ங்கதிர்த் திங்கட் கடவுளுக் கிருபா னெழுவரைச் சிறப்பொடு வளித்தான்
கோங்கிளமுலையார் நால்வரையரிட்ட நேமிகைக் கொள்கெனக் கொடுத்தான்.

(இ-ள்.) ஆங்கவர் தம்மில் பதின்மரை = அவ்வறுபதின்மருட் பத்துப் பெண்களை, தரும தேவதைக்கு அளித்தனன் = தரும தேவதைக்கு (மனைவிய ராகக்) கொடுத்தான், அருளால் நீங்கு அரு உவப்பின் காசிபன் கு = கிருபையுடன் பிரித லில்லாத மகிழ்வினை யுடைய காசிப முனிவருக்கு, ஒருபான் மூவரை நெறி வழாது ஈந்தான் = பதின்மூவரை வேதவிதி தவறாமல் விவாகஞ் செய்வித்தான், ஈர் கதிர் திங்கள் கடவுளுக்கு= குளிர்மை யாகிய கிரணங்களை யுடைய சந்திரனுக்கு, இருபான் எழுவரை சிறப்பு ஒடு அளித்தான்=இருபத்தேழு பெண்களைச் சிறப்புடனே கொடுத்தனன், கோங்கு இள முலையார் நால்வரை=கோங்க முகை போலும் இளமை யாகிய தனங்களை யுடையராய நான்கு பெண்களை, அரிட்ட நேமி கை கொள்க என கொடுத்தான் = அரிட்ட நேமி யென்பவன் கையில் ஏற்றுக் கொள்க வென்று (தத்தஞ்) செய்து அளித்தனன்.

பதின்மர்-மர், பலர் பாற் பெயர் விகுதி. நான்க னுருபுகள் கொடைப் பொருட்கண் வந்தன. சிறப்பொடு அளித்தான் என்பது, "இறுதியு முதலு முயிர்நிலை வரினே-யுறுமென மொழிப வுடம்படு மெய்யே" எனவும், "உடம்படு மெய்யெ யகார வகார-முயிர் முதன் மொழிவருஉங் காலை யான." எனவும் அகத்தியத்திற் கூறி யருளியபடி உடம்படு மெய் பெற்று முடிந்தது. (சு)

வருமுலை சுமந்து தேம்புநுண் மருங்குள் மதியுமழ் நித்தில முறுவ
லிருவரை வெகுபுத் திரற்கினி தளித்தா னிருவரைப் பிருச்சுவற் கீந்தா
னரிமதர் நெடுங்கண் ணிருவரை மகிழ்பூத் தங்கிரா வினுக்குவந் தளித்தான்
பொருவரு மிவர்தம் பெயருமற் றவர்தம் புதல்வர்நா மமுமினிப் புகல்வாம்.

(இ-ள்.) வரு முலை சுமந்து தேம்பும் நுண் மருங்குல்=வளராநின்ற தனங்களைச் சுமந்து வருந்துகின்ற நுண்ணிய இடையையும்,மதி நித்திலம் உறழ் முறுவல் இருவரை= சந்திரனையும் முத்தினையு மொத்த பற்களையுடைய இருபெண்களை, வெகுபுத்திரன் கு இனிது அளித்தான்=வெகுபுத்திரன் என்பவனுக்கு மகிழ்வுடன் கொடுத்தான், இருவரை பிருச்சுவன் கு ஈந்தான்=இரு புதல்வியரைப் பிருச்சுவனுக்குக் கொடுத்தான், அரி மதர் நெடு கண் இருவரை=செவ்வரி பரந்து மதர்த்த நீண்ட விழிகளையுடைய இருபெண்களை, மகிழ் பூத்த அங்கிராவினுக்கு=ஆனந்த முற்ற அங்கிரா முனிவருக்கு, உவந்து அளித்தான்=மகிழ்ந்து கொடுத்தான், பொரு அரு இவர் தம் பெயரும்=ஒப்பில்லாத இவர்களது பெயர்களையும், மற்றவர் தம் புதல்வர் நாமமும்=அவர்களது புத்திரர்களின் பெயரையும், இனி புகல்வாம்=இனிமேற் கூறுதும். (எ)

அருந்ததி யிலங்கை சியாமிசங் கற்பை யருண்மருத் துவதிநல் விசுவை
முருந்திள முறுவற் சாத்தியை பானு முகுர்த்தையம் வசுவெனத் தருமன்
பொருந்திய மடவார் பெயரினி துரைப்பார் புணர்முலை விசுவைதன் புதல்வர்
திருந்தெழில் விசுவ தேவர்சாத் தியைதன் சிறுவர்சாத் தியரெனத்தெரிப்பார்.

(இ-ள்.) தருமன் பொருந்திய மடவார் பெயர் = தருமன் சேர்ந்த பெண்களின் பெயர்கள், அருந்ததி இலங்கை சியாமி சங்கற்பை=அருந்ததி இலங்கை சியாமி சங்கற்பை, அருள் மருத்துவதி = காருணிய முடைய மருத்துவதி, நல் விசுவை = நல்ல விசுவை, முருந்து இள முறுவல் சாத்தியை பானு முகுர்த்தை = மயிலிறகி னடிபோன்ற இளம் பற்களையுடைய சாத்தியை பானு முகூர்த்தை, அம் வசு என இனிது உரைப்பார்=அழகிய வசுவென்று (மேலோர்) தெளிவாகச் சொல்வார், புணர்முலை விசுவை புதல்வர்=நெருங்கிய கொங்கைகளையுடைய விசுவையின் புத்திரர், திருந்து எழில் விசுவதேவர் = திருத்தமாகிய அழகிய விசுவதேவர்களாம், சாத்தியை தன் சிறுவர்=சாத்தியை யென்பவளின் புத்திரர், சாத்தியர் என தெரிப்பார்=சாத்தியர் என்று கூறுவார். (௬)

அருந்ததி மைந்த ரருந்ததர் வசுவின் மைந்தரெண் வசுக்களென் றறைவார்
பொருந்திய பானு மைந்தர்பா னுக்கண் முகுர்த்தைபுத் திரர்முகூர்த் தர்க
டிருந்தெழிலிலங்கைபுதல்வனேசுகோடன்சியாமிதன்மைந்தர்பேர்தெரிக்கின்
மருந்தினுமினிய நாகவீ தியரென் றுரைப்பர்நான் மறைமுழுதுணர்ந்தோர்.

(இ-ள்.) அருந்ததி மைந்தர் அருந்ததர் = அருந்ததியின் புத்திரர்கள் அருந்ததர் எனவும், வசுவின் மைந்தர்=வசு என்னும் பெயருடையவளின் புத்திரர், எண் வசுக்கள் என்று அறைவார்=அட்டவசுக்களெனவுங் கூறுவார், பொருந்திய பானு மைந்தர் பானுக்கள்=அழகமைந்த பானுவென்பவளின் புதல்வர்கள் பானுக்களாம், முகுர்த்தை புத்திரர் முகூர்த்தர்கள்=முகூர்த்தையின் சிறுர்கள் முகூர்த்தர்களாம், திருந்து எழில் இலங்கை புதல்வன்=திருத்தமாகிய அழகுவாய்ந்த இலங்கை யென்பவளின் புத்திரர்கள், சுகோடன் ஏ=சுகோடன் என்டவனேயாம், சியாமி தன் மைந்தர் பேர் தெரிக்கின் = சியாமியினது புதல்வரின் நாமங்களைச் சொல்லுங்கால், மருந்தினும் இனிய நாகவீதியர் என்று= அருமருந்தினுஞ் சிறந்த நாகவீதியர் என்று, நான் மறை முழுது உணர்ந்தோர் உரைப்பர்=நான்கு வேதங்கள் முழுவது மாராய்ந்தறிந்த பெரியோர் கூறுவர்.

ஈண்டு அருந்ததி யென்பது வசிட்டரது மனைவியாய ஊர்ச்சை யன்று. இவளிடத்தில் பூமியைச் சேர்ந்த பொருள்க டோன்றினவென்றுஞ் சிலநூல் கூறும். முகுர்த்தை-குறுக்கல் விகாரம். சுகோடன், சுகோஷன் என்பதன்றிரிபு. சியாமிக்கு ஜாமியெனவும் பெயர். நாகவீதியர் = சுவர்க்கலோகத்திற்குச் செல்லும் மார்க்கக்களுள்ள ஒருவகைத் தேவ சாதியாரெனத் தெளிக. நாகம்=சுவர்க்க லோகம். (௭)

குலிகமென் செப்பு முலைமருத் துவதி குமரர்கோ டிகண்மருத் துவத
ரிலகுசங் கற்பை மைந்தர்சங் கற்ப ரென்னநற் றருமதெய் வத்தி
னலகுறு புதல்வர் பெயரினி துரைத்தே மாங்கவர் தம்மினெண் வசுக்கண்
மலைவறு நாமம் யாவரு முணர மகிழ்வுட னினிதெடுத் துரைப்பாம்.

(இ-ள்.) குலிகம் செப்பின் மென் முலை=சாதிலிங்கச் செப்பினை யொத்த மிருதுவாய தனங்களை யுடைய, மருத்துவதி குமரர் கோடிகள் = மருத்துவதியின் பிள்ளைகள் கோடிகள் என்பவரும், மருத்துவதர் = மருத்துவதர் என்பவருமாம், இலகு சங்கற்பை மைந்தர்=விளங்காநின்ற சங்கற்பை யென்பவளின் புதல்வர், சங்கற்பர் = சங்கற்பராம், என்ன=என்றிவ்வாறாக, நல் தரும தெய்வத்தின்=நன்மையுள்ள தருமதேவனின், அலகு உறுபுதல்வர் பெயர்=அளவுற்ற புத்திரரின் அபிதானத்தை, இனிது உரைத்தேம்=தெளிவாகச் சொற்றனம், ஆங்கவர் தம்மின்=அவர்களுள், எண் வசுக்கள் மலைவு அறு நாமம்= அட்டவசுக்களது சந்தேக மற்ற பெயர்களை, யாவரும் உணர=எவரு மறியுமாறு, மகிழ்வுடன் எடுத்து இனிது உரைப்பாம்=உவகை யுடன் விரித்துத்தெளிவுறச் சொல்லுதும்.

ஈன்டைய மருத்துவதி, முனிவர் வமிசமுரைத்த அத்தியாயத்திற் கூறப்பட்டவ ளல்லள். மருத்துவதர் என்பார் தேவர்க்கு வியாதியைப் பரிகரிப்பவர் என வுரைத்தல் சாலுமென்க. "தக்கனுஞ் சுரத்தினை யுடலிற் றுங்கினன் - றெக்கிடத் தலைவலி யரியுந் துக்கிதன் - மிக்குறச் சலோதரம் வருணன் வீறில-னுக்குடற் பழுதுள னுதய பானுவும்." என்னுஞ் சிவதருமோத்தரத் திருவிருத்தத்தானும், "குருடன் புகரா மார்த்தாண்டன் குட்டரோகி யாமெஞ்ஞு - புருடன் றலைநோய் புரந்தரற்குப் புயத்தில் வாதந் தக்கனுக்குச்-சுரநோ யுண்டு கயரோகஞ் சோமனுக்கு நீரிழிவு-வருணற் கிவ்வா றமரர்க்கு நோயுள் டேண்டே மருத்துவரும்." என்னும் விருத்தத்தானும், "வலாரிதோள் வாத நோயன் வண்மதி கயநோ யாளன்-சுலாவுறு வெப்பு நோயிற் றெடக்குண்டான் றக்க னென்பா-னுலாவுறு காலி லாத முடவனே யுரங்கொண் மந்தன் - சலோதர நோய்க்கோட் பட்டான் றண்புனற் கரையன் மாதோ." என்னுந் தணிகைப் புராணந் திருவிருத்தத்தானும் தேவர்கட்கு நோயுண்டென்பதும், பரிகரிக்க மருத்துவதர் உண்டென்பதும் பெறப்பட்டது. (அ)

குங்கும மெழுகுங் குலவரைத் தடந்தோ ளாபன்வேற் றுருவனற் சோமன்
றிங்களங் கவிகைத் தரனுய ரனில னனலன்மெய் தெளிபிரத் யூடன்
றுங்கவேற் பிரபா சன்னென வுரைப்பர் சொல்லுமாங் கவரிலா பன்றன்
பங்கமில் புதல்வர் சிராந்தன் வைதத்தன் சிரமனற் றுனியெனப் பகர்வார்.

(இ-ள்.) குங்குமம் மெழுகும் குலம் வரை தடம் தோள் ஆபன் = செஞ்சாந்து பூசப்பட்ட குலமலை போன்ற பெரிய புயங்களை யுடைய ஆபனும், வேல் துருவன்=வேலாயுதத்தை யேந்திய துருவனும், நல் சோமன் = நன்மை மிக்க சோமனும், அம் திங்கள் கவிகை தரன் = அழகிய சந்திரவட்டக் குடையை யுடைய தரனும், உயர் அனிலன் அனலன்=மேலாய அனிலனும் அனலனும், மெய் தெளி பிரத்யூடன்=உண்மைப் பொருளைத் தேர்ந்த பிரத்தியூடனும், துங்கம் வேல் பிரபாசன் என = பெருமை பொருந்திய வேலாயுதத்தை யேந்திய பிரபாசனும் என்று, உரைப்பர் = (அறிவுடையோர்) கூறுவர், சொல்லும் ஆங்கவரில் = சொல்லப்பட்ட அவர்களுள், ஆபன் தன் பங்கம் இல் புதல்வர்=ஆபனது குற்றமில்லாத புத்திரர்கள், சிராந்தன் வைதத்தன் சிரமன் நல் துனி என பகர்வார்= சிராந்தன் வைதத்தன் சிரமன் நன்மையுள்ள துனி யென்று கூறுவர்.

வசுக்களாவார் புவலோகத்தின்கணுள்ள விசம் வர்த்த னென்னும் வாயுபதக்கண் வீற்றிருக்கும் முப்பான் முக்கோடி தேவர்களுள் ஒருவகையர் என்க. (கு)

துருவன்மெய்ப்புதல்வன் பொருவில்சீர்க்காலன் சோமனற் சேயருள்வர்ச்சன்
றரனியன் மைந்தன் றிரவிண னனிலன் றன்மகன் புரோசவ னோடு
வருள்விக்கி யாத கதியன லன்சேய் தேவசே னுபதி யாகும்
வருபிரத் தியூடன் குழவிதே வலன்ப்ர பாசன்சேய் விச்சுவ கர்மன்.

(இ-ள்.) துருவன் மெய் புதல்வன்=துருவனது உண்மைமிக்க மைந்தன், பொரு இல் சீர் காலன் = ஒப்பில்லாத சிறப்பினையுடைய காலனும், சோமன் நல் சேய் அருள் வர்ச்சன்=சோமனது நல்ல புத்திரன் கருணைசெறிந்த வருச்சனும், தரன் இயல் மைந்தன் = தரனுடைய அழகமைந்த புதல்வன், திரவிணன் = திரவிணனும், அனிலன் தன் மகன்=அனிலனது குமாரன், புரோசவன் ஒடு அருள் விக்கியாத கதி=புரோசவனுடன் கிருபைமிக்க விக்கியாத கதியுமாம், அனலன் சேய் தேவ சேனுபதி ஆகும் = அனலனது குமாரன் தேவசேனுபதி யாகும், வரு பிரத்தியூடன் குழவி = பொருந்திய பிரத்தியூடனது மைந்தன், தேவலன்=தேவல முனிவனும், ப்ரபாசன் சேய் விச்சுவகர்மன் = பிரபாசனது குமாரன் விசுவகர்மனும்,

காலன் என்பவன் யமனுக்கு மந்திரியா யுயிர்களி னிறுதியதியுந் தொழிலை யுடையவன். வருச்சன் என்பவன் சகல சனங்களுக்கும் வர்ச்சஸ் என்னு மோர்வகைப் பிரகாசமுண்டாக்குவோன். தரன் என்பான் மனோகரை யென்னும் பெண்ணைச் சேர்ந்து திரவிணனோடு சிசிரன், இரமணன், பிராணன், உதவகன் என்னும் புத்திரர்களைப் பெற்றனனென்றுங் கூறுமோர்புராணம். அனிலன் சிவை என்பாளைச்சேர்ந்து இருவர்ப்பயந்தனன் என்க.அனலன் என்றால் அக்கினி.தேவசேனுபதி=குமாரக்கடவுள். அனலன் சிவபெருமானிடத்தி னின்றுந் தோன்றிய பொறிகளைச் சுமந்து சென்று சரவணவாவியிற் றங்க விட்டமையால் தேவசேனுபதியைப் புத்திரனென்றதாம். அஃது உமாதேவியாரை மலைமகள், தக்கன்மகள்,மலயத்துவசன் புதல்வி யென்பன போலவும் முருகவேளைக் கார்த்திகேயன், கங்கைமைந்தன் என்பன போலவும் உபசாரமன்றி யுண்மையன்று. பிரத்தி யூடனுக்குத் தேவல விருடி தோன்றினர். அவ் விருடிக்கே பிரகற்பதியாகிய தேவகுருவும், ஒரு புத்திரியும் பிறந்தனர். அவளையே பிரபாசன் மணம்புணர்ந்தான் எனக் கொள்க. (க0)

அதிதிவேற் றடங்கட் டிதிதனு சிறந்த வலர்முலைக் கத்துரு வரிட்டை
மதர்விழிச் சுரசை சுரபிவார் கூந்தல் வினதைதாம் பிரைவனப் பொழுகுங்
கதிர்முலைக்குரோத வசைமுனி யிளைபொற் கமலைசேர்கிரீடையென் றுரைக்கு
மெதிரறு மிவர்க ளொருபதின் மூவர் காசிபன் மனைவிய ரென்பார்.

(இ-ள்.) அதிதி=அதிதியும், வேல் தடம் கண் திதி = தனுவேற் டடை போன்ற நீண்ட விழிகளை யுடைய திதியுந் தனுவும், சிறந்த அலர் முலை கத்துரு அரிட்டை = சிறப்புற்ற பரந்த தனங்களை யுடைய கத்துருவும் அரிட்டையும், மதர் விழி சுரசை சுரபி= மதர்த்த கண்களை யுடைய சுரசையுஞ் சுரபியும், வார் கூந்தல் வினதை தாம்பிரை=நீண்ட ளகத்தினை யுடைய வினதையும் தாம்பிரையும், வனப்பு ஒழுகும் கதிர் முலை குரோத வசை முனி இளை=அழகு விளக்குங் காந்தியாகிய தனங்களை யுடைய குரோத வசையும் முனியும் இளையும், பொன் கமலை சேர் கிரீடை=அழகிய இலக்குமியையொத்த கிரீடையும், என்று உரைக்கும் = என்று சொல்லப்பட்ட, எதிர் அறும் இவர்கள் ஒருபதின் மூவர் = நிகரற்ற விவர்கள் பதின் மூவரும், காசிபன் மனைவியர் என்பார்=காசிபமுனிவரின் இல்லக் கிழத்தியர் என்று சொல்லப் படுவார்கள். (கக)

அள்ளிருள் பருகு மங்கிசன் றாதா வலர்கதிர்ப் பகனுயர் துவட்டா
வொள்ளொளி விரிக்கு மித்திரன் வருண னரியமா விவச்சுவா னுலகந்
தெள்ளருஞ் சவிதா விசைகெழு பூடா விந்திரன் விட்டுணு வென்னத்
தெள்ளியீண் டுரைத்த பன்னிரு வரையு மதிதிதன் சிறுவரென் றுரைப்பார்.

(இ-ள்.) அள் இருள் பருகும் அங்கிசன் தாதா = செறிந்த இருளைக் குடிக்கும் அங்கிசனுந் தாதாவும், அலர் கதிர் பகன் = பரந்த கிரணங்களை யுடைய பகனும், உயர் துவட்டா=மேலாய துவட்டாவும், ஒள் ஒளி விரிக்கும் மித்திரன்=அழகிய சுடரைப் பரப்பும் மித்திரனும், வருணன் அரியமா விவச்சுவான் = வருணனும் அரியமாவும் விவச்சுவானும், உலகத்து எள் அரு சவிதா=உலகத்தின்கண் நிந்தித்த லில்லாத சவிதாவும், இசை கெழு பூடா=கீர்த்தி மருவிய பூடாவும், இந்திரன் விட்டுணு என்ன = இந்திரனும் விட்டுணுவு மென்று, ஈண்டு தெள்ளி உரைத்த பன்னிருவரையும் = இவ்விடத்துத் தெளிவாகச் சொற்ற பன்னிருவரையும், அதிதி தன் சிறுவர் என்று உரைப்பார்=அதிதி யென்பவளது புத்திரர்களென்று கூறுவார். (கஉ)

சாக்குட மங்வந் தரத்தினிற் றுடிதப் பெயரொடுஞ் சார்ந்தன ரிவர்கள்
வீங்கிய கழற்கால் விறல்கெழு வடிவேல் விராங்குவை வச்சுத மநுவின்

காக்குநா ளதிதி புதல்வரா தலின் னாதித்தியப் பெயரொடுங் களிப்பிற்
போக்கருஞ் செல்வத் தொடுமிரு விசும்பிற் புங்கவ ரேத்தவாழ் கின்றூர்.

(இ-ள்.) இவர்கள்=இப்பன்னிருவரும், சாக்குட மநு வந்தரத்தில்=சாக்குட மநு வந்தரத்திலே, துடிதப் பெயர் ஒடு சார்ந்தனர்=துடிதர் என்னும் பெயருடன் இருந்தனர், கழல் வீக்கிய கால் விறல் கெழு வடி வேல் விளங்கிய = வீரக்கழலைப் பூட்டிய பாதங்களை யுடைய வலிமை கொண்ட கூரிய வேலாயுதந் துலங்கும், வைவச்சுத மநுவின் காக்கும் நாள்=வைவச்சுத மநுவின் அரசாட்சிக் காலத்தில், அதிதி புதல்வர் ஆதலின்= அதிதிக்குப் புத்திரரா யுதித்த காரணத்தினுல்,ஆதித்தியப் பெயர் ஒடும்=ஆதித்தியர் என்னும் நாமத்தோடும், களிப்பின் போக்க அரு செல்வத்து ஒடும் = மகிழ்வுடனே நீக்குதற்கரிய செல்வத் தோடும், இரு விசும்பின்=பெரிய ஆகாயத்தின்கண், புங்கவர் ஏத்த வாழ்கின்றூர்=தேவர்கள் யாவருந் துதிக்க வசிக்கின்றனர்.

சாக்ஷுஷ மநு, துஷிதர் என்னும் வடமொழிகள் சாக்குடமநு, துடிதர் எனத் திரிந்தன. அதிதியின் புத்திரரானமையால் ஆதித்தியர் எனப்பெயர். அவர்கட்குரிய செல்வத்தையும் தேவர் முதலாயினோர் ஏத்துதலையும் பின்வரும் ஆதவர்ச் சிறப்புரைத்தஅத்தியாயத்திற் காண்க. இதனுல் அதிதியின் புத்திரர் இனையர் என்பதும் அவர்களது பெயரின் காரணமுங் கூறப்பட்டது. (கங)

கருங்கடல் போழ்ந்து வல்லவர் குளித்த கதிர்மணி நித்திலந் தாங்கி
மருங்குறேய்த் தகல்வான் போக்கற வீங்கும் வருமுலைத் திதியெனு மடந்தை
யருந்தவம் புரியுங் காசிப னருளா லாடல்வே லிரணியன் றனையும்
பருந்துவீழ் நெடுவே லிரணியாக்கனையும் விண்ணவர் வெருவுறப் பயந்தாள்.

(இ-ள்.)கரு கடல் போழ்ந்து=கரிய சமுத்திரத்தைக் குடைந்து, வல்லவர் குளித்த கதிர் மணி நித்திலம் தாங்கி=மூழ்க வல்லாரால் முழுகி யெடுக்கப்பட்ட ஒளிபொருந்திய அழகிய முத்துக்களைச் சுமந்து, மருங்கு தேய்த்து=இடையினையுங் குறைத்து, அகல் வான் போகு அற வீங்கும் வரு முலை = அகன்ற ஆகாயத்தில் இடையில்லை யென்னப் பூரித்த வளர்ந்த தனங்களை யுடைய, திதி எனும் மடந்தை=திதி யென்னும் பெண்ணனவள், அரு தவம் புரியும் காசிபன் அருளால் = அரிய தவத்தைச் செய்யுங் காசிபமுனிவரின் கிருபையினுல், ஆடல் வேல் இரணியன் தனையும் = வெற்றியைக் கொண்ட வேலாயுதத்தை யேந்திய இரணியன் என்பானையும், பருந்து வீழ் நெடு வேல் இரணியாக்கனையும்=பருந்துகள் மொய்க்கின்ற நெடிய வேலாயுதத்தை யுடைய இரணியாக்க னென்பவனையும், விண்ணவர் வெருவுற பயந்தாள்=தேவர்கள் பயமடையுமாறு பெற்றுள்.

இரணியனை இரணியகசிபு என்றுங் கூறுப. இதனுல் திதியென்பவளின் புத்திரர் இனையரென்பது கூறப்பட்டது. குளித்தல்=கடலுண்மூழ்கி யிப்பி யெடுத்தல். (கச)

ஆங்கவர் தம்மின் மறங்கனிந் தொழுகு மாடல்வே லிரணிய னென்போன்
வீங்கொளி விரிக்கும் வெள்ளிநல் லருளால் விரிசிகை யைந்தழ னுப்பட்
டேங்கமழ் கமலப் பொகுட்டில்வீற் றிருக்குந் தேவனைத் தனதுளத் திருத்தி
நீங்குமைம் புலனு மொருவழிப் படுத்தி நினைவரு மருந்தவம் புரிந்தான்.

(இ-ள்.) ஆங்கவர் தம்மின்=அவ்விருவருள், மறம் கனிந்து ஒழுகும் ஆடல் வேல் இரணியன் என்போன்=வீரமுதிர்ந்து தேங்கும் போர்த் தொழிற் குரிய வேலாயுதத்தை யேந்திய இரணியன் என்று சொல்லப் படுவோன், வீங்கு ஒளி விரிக்கும் வெள்ளி நல்

அருளால்=மிகுந்த பிரகாசத்தைச் செய்யுஞ் சுக்கிரனது உபதேசத்தினுல், விரி சிகை ஐந் தழல் நாப்பண்=பரந்த கொழுந்துகளை யுடைய பஞ்சாக்கினியி னடுவினின்று, தேம் கமழ் கமலம் பொகுட்டு வீற்றிருக்கும் தேவனை = வாசனை வீசுந் தாமரைப்பூம் பொகுட்டின் கண் பெருமையோ டிருக்கும் பிரமனை, தனது உளத்து இருத்தி = தன் மனத்திற் றியானித்து, நீங்கும் ஐம்புலனும் ஒரு வழி படுத்தி = பிரிந்து செல்லும் பஞ்சப் புலன்களையும் ஒருவழியில் நிறுத்தி, நினைவு அரு அரு தவம் புரிந்தான் = நினைத்தற் கரிய சிறந்த தவத்தைச் செய்தான்.

பஞ்சாக்கினி என்பது நான்கு திக்குகளினு மூட்டப்பட்ட அக்கினியுடன் மேலுள்ள சூரியாக்கினியுமாம். ஐம்புலன்களையு மொருவழிப் படுத்த லாவது கட்புலனி லடக்குதல். அதனை "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணன்குஞ் சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக" என்னும் பெரிய புராணத் திருவிருத்தத்தா னறிக. (கரு)

மழகதிர்ப் பரிதி திங்களஞ் செல்வன் வானவர் யாவரும் விசும்பி
னுழிதர லின்றிப் புகைப்படாம் போர்ப்ப வுஞற்றருந் தவத்தினை நோக்கிப்
பழமறைக் கிழவ னுவப்பின்வந் தெய்திப் பரிவுட னவுணர்கோ னுளத்தின்
விழைவன யாவும் வெறுப்பவாங் களித்து வியப்பொடுங் கரந்துபோ யினனுல்.

(இ-ள்.) அவுணர் கோன் = அசுரர்க் கிறைவனுய இரணியன், பரிவுடன்=அன்போடு, மழ கதிர் பரிதி=இளங் கிரணமுடைய சூரியனும், அம் திங்கள் செல்வன்=அழகிய மதிக்கடவுளும், வானவர் யாவரும் = தேவர்க ளெல்லாரும், விசும்பின் உழி தரல் இன்றி=ஆகாயத்திற் சஞ்சரித்தற்கு இடமில்லாமல், புகை படாம் போர்ப்ப=புகைப் படலங்களால் மூடப்பட, உஞற்று அரு தவத்தினை = செய்த அரிய தவத்தை, பழ மறை கிழவன் = பழமையாகிய வேதங்களுக்கு அதிகாரியாய பிரமன், நோக்கி = பார்த்து, ஆங்கு உவப்பின் வந்து எய்தி=அவ்விடத்தில் மகிழ்வுடன் வந்து தோன்றி, உளத்தின் விழைவன யாவும் = (அவன்) மனத்தி லிச்சித்த வரங்க ளெவற்றையும், வெறுப்ப வியப்பு ஓடும் அளித்து = (வேறொன்றும்) வேண்டுவதில்லை யென்னும்படி உவகையுடன் கொடுத்து, கரந்து போயினன்=மறைந்து சென்றனன். ஆல்-அசை. (கசு)

ஆயிரந் தோட்டுக் கமலவீட் டுறையு மந்தண னேகிய பின்னர்ப்
பாய்புலிப் போத்தி னுருகெழு சீற்றத் திரணியன் பண்ணவ ரியக்கர்
மாயிரு ஞாலம் புரந்திடு மரசர் வழுத்தநீண் மணிமுடி புனைந்து
காயும்வா ளமரி னொன்னலர்ப் பெறுது களிப்புட னினிதுவீற் றிருந்தான்.

(இ-ள்.) ஆயிரம் தோடு கமலம் வீடு உறையும் அந்தணன் = ஆயிர மிதழ்களையுடைய தாமரை மலராகிய வீட்டின்கண் வீற்றிருக்கும் பிரமன், ஏகிய பின்னர்=மறைந்த பின்பு, பாய் போத்து புலியின் உரு கெழு சீற்றத்து இரணியன்=தாவுகின்ற ஆண்புலி போன்ற அச்சஞ் செய்யுங் கோபத்தை யுடைய இரணியன், பண்ணவர் இயக்கர்=தேவர்களும் இயக்கர்களும், மா இரு ஞாலம் புரந்திடும் அரசர்=சிறந்த பெரிய பூமியைக் காக்கும் வேந்தரும், வழுத்த=போற்றும்படி, மணி நீள் முடி புனைந்து=இரத்தினங்க ளிழைத்துச் செய்த நீண்ட மகுடத்தைப் பூண்டு, காயும் வாள் அமரின் = கொல்லுந் தொழில் வாய்ந்த வாட்போரில், ஒன்னலர் பெறுது = (தன்னொ டெதிர்க்கும்) பகையரச ரின்றி, களிப்பு உடன் இனிது வீற்றிருந்தான்=தருக்கோடு சிறப்பாக அரசிருந்தான்.

புலிப்போத்து - இருபெயரொட்டுப் பண்புத் தொகை. போத் தென்பது இளமைப் பெயரா மாயினும் ஆண்பாற்குச் சிறந்து வருமாறு போலச் சிறவா ததற்கென நச்சினார்க் கினியர் உரைத்துள ராகலின், ஆண்பாற் பெயரெனக் கொண்டாம். அதனை, "ஏறு மேற் றையு மொருத்தலுங் களிறுஞ்-சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு-மொத்தையுந் தகரு முதளு மப்பரும் - போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும் - யாத்த வாண்பாற் பெயரென மொழிப." என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தா னறிக. (௧௭)

கலைமகள் கொம்மை முலைபொரு திணிதோட் கடவுடன் படைப்பினை மாற்றி
மலர்தலை யுலக முழுவதுந் தானே வருந்தற வெளிதினிற் படைக்குஞ்
சிலைவிழுங் குயர்தோண் மாயனை யகற்றிச் சிறப்புட னுலகெலா மளிக்கு
மலைமகள் பாகன் சிறிதுகை யாற வாருயிர் துடைப்பினுந் துடைக்கும்.

(இ-ள்.) கலைமகள் கொம்மை முலை பொரு திணி தோள்=சரசுவதியின் இளமை யாகிய தனங்களைத் தழுவும் வலிய புயங்களை யுடைய, கடவுள் தன் படைப்பினை மாற்றி= பிரமனது சிருட்டித் தொழிலை விலக்கி, மலர் தலை உலகம் முழுவதும்=பரந்த இடமாகிய உலகங்களை யெல்லாம், தானே வருந்து அற எளிதினில் படைக்கும்=தானே (யாதோர்) வருத்தமு மில்லாமல் இலகுவிற் சிருட்டிப்பான், சிலை விழுங்கு உயர் தோள் மாயனை= மலையையும் வென்றுயர்ந்த புயங்களை யுடைய திருமாலினை, அகற்றி=நீக்கி, சிறப்பு உடன் உலகு எலாம் அளிக்கும் = மகிழ்வுடன் உலக மெல்லாவற்றையுங் காப்பான், மலைமகள் பாகன் சிறிது கைஆற=உமாதேவி பாகராகிய சிவபெருமான் சிறிதுகாலங் கையிளைப்பாற, அரு உயிர் துடைப்பினும் துடைக்கும்=அரிய உயிர்களைச் சங்கரிக்க வேண்டு மெனினுஞ் சங்கரிப்பான்.

சிலை விழுங்கு தோள் என்பதற்கு வில்லைத் தனக்கு ளடக்கிய புயம் எனவும் பொருள். படைக்கும், அளிக்கும், துடைக்கும் என்பன செய்யு மென்னும் வினைமுற்று. இரணியன் என்னும் எழுவா யெஞ்சிநின்றது. உருத்திரக்கடவுளி னுயர்வும், அவர் தொழிலை மற்றையோர் கொண்டு நடாத்தல் அருமை யென்பதுந் தோன்ற "துடைப்பினுந் துடைக்கும்" என்று கூறப்பட்டது. (௧௮)

நனந்தலைச் சுடிகை வாளராப் போத்தின் சுமைகெட நளிகடற் போர்வை
புனைந்தவா ருலக மொருகையி னேந்திப் பொறையில திதுவெனப் புகலுங்
கனம்படிந் துண்ணும் பெரும்புறக் கடலைக் குளப்படி நீரெனக் கருது [கும்.
மினங்கொளேழ்வரையும்பொற்கழங்கென்ன விண்ணிடையெறிந்தெதிர்பிடிக்

(இ-ள்.) நளி கடல் போர்வை புனைந்தவார் உலகம்=பெரிய சமுத்திரமாகிய ஆடை யையுடுத்த நீண்ட உலகத்தினை, வாள் அரா போத்தின்=ஒளிபொருந்திய ஆதிசேடனது, சுடிகை நனந்தலை சுமை கெட = தலை நடுவில் வைக்கப்பட்ட பாரம் நீங்க, ஒரு கையின் ஏந்தி=ஒருகரத்தால் எடுத்துத் தாங்கி, இது பொறை இலது என புகலும்=இதுவும் பார முடைத் தல்ல வென்று கூறுவான், கனம் படிந்து உண்ணும் பெரு புறம் கடலை=மேகங் கள் சேர்ந்து பருகும் பெரிய புறவாழியையும், குளம் படி நீர் என கருதும்=தடாகத்தின்க ணுள்ள குளிக்குஞ் சலமளவாக நினைப்பான், இனம் கொள் ஏழ் வரையும்=கூட்டமாகிய சத்த பருவதங்களையும், பொன் கழங்கு என்ன = அழகிய கழற்சிக்காய் போல, விண் இடை எதிர் எறிந்து பிடிக்கும்=ஆகாயத்தி னிடத்தில் எதிரே வீசிப் பிடிப்பான்.

நளி என்னு முரிச்சொல் "நளிமலை நாட னளியவ னெனவே" என்றுற் போலப் பெருமைப் பொருட்டில் வந்தது. அதனை "நடவுங் கயவு நளியும் பெருமை." என்னுச்

தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. பெரும்புறக் கடலாவது ஏழு சமுத்திரங்களாற் சூழப்பட்ட ஏழு தீவுக்கும், பொன்மயமான பூமிக்கும், உலோகாலோக்கிய மென்னுஞ் சக்கிரவாள கிரிக்கும், இருட் பூமிக்கும் அப்பாற் சூழ்ந்துள்ள தோர் கடல். போத்து என்பது ஆதிசேடனது ஆண்டகைமையை விளக்கி நின்றது. படிநீர் வினைத்தொகை. ஏழ் மலைக ளாவன:—இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன வாம். இனங்கொளேழ் வரை என்பதற்கு, சாக முதலிய தீவுகளிலுள்ள குல வரைகள் முப்பத்தேழும் எனக் கொள்ளலுமாம். அதனை "சாற்றியிடுஞ் சாகமுத லெந்தினுக்குந் தட வரையு-மூற்ற மிகு மெவ்வே ழுண்டு." என்று சிவதருமோத்தரங் கூறி யதனு லறிக. ()

மங்குல்வான் புதைத்த நள்ளிருள் விழுங்கும் வானவன் புரிதொழின் மாற்றி
யங்கண்மா ஞாலத் தொற்றையஃ ழியந்தே ராதவ னெனவெயில் விரிக்கும்
கங்குல்வாய்க் கமல நறுமலர் குவியக் கடிமல ராம்பல்வாய் நெகிழத்
திங்களிற் பசும்பொன் மானமீ திவர்ந்து தெண்ணிலாக் கதிர்விரித் துலவும்.

(இ-ள்.) மங்குல் வான் புதைத்த நள் இருள் விழுங்கும் = மேகந் தங்கும் ஆகாயத்தை மூடிய செறிந்த இருள் வலி யடக்கும், வானவன் புரி தொழில் மாற்றி=சூரியன் செய்யும் ஒளித் தொழிலை நீக்கி, அம் கண் மா ஞாலத்து=இட மகன்ற பெரிய பூமியின்கணுள்ள, ஒற்றை ஆழி அம் தேர் ஆதவன் என வெயில் விரிக்கும் = ஒற்றைச் சக்கரங் கொண்ட அழகிய தேர்க்கண் வரும் ஆதித்தனைப்போல வெயி லெறிக்கச் செய்வான், கங்குல் வாய்=இராக் காலத்து, நறு கமலம் மலர் குவிய=நல்ல தாமரைப் புட்பங்கள் கூம்பவும், ஆம்பல் கடி மலர் வாய் நெகிழ=குவளையினது வாசனை பொருந்திய பூக்களின் வாய் விரியவும், பசு பொன் மானம் மீது இவர்ந்து=பசிய பொன்னாற் செய்யப்பட்ட விமானத்தின் மேல் ஏறி, திங்களின்=சந்திரனைப்போல, தெள் நிலா கதிர் விரித்து உலவும்=தெளிவாகிய சந்திரிகை யொளியைப் பரப்பி யுலாவுவான்.

"சார்வி மானத்திற் சந்திரன் றனிப்பதஞ் சரிக்குந்-தேரின்மே னின்று மிரவிதன் பெரும்பதஞ் செலுத்தும்" என்றார் இராமாயணத்தும். (உ0)

உலகமோர் மூன்றுந் தனதடிப் படுத்தி யுயர்விசும் பொருதனி புரக்கு
மிலகொளி வைர வாட்படை யுழவன் முதலிய வெண்டிசைப் பாலர்
மலர்தடஞ் சினைய கற்பகத் தருவுந் தேனுவு மணியுநீ ணிதியு
மலகில கொணர்ந்து தொழவிடம் பெறும லகன்மணி முன்றிலிற் றுயிலவார்.

(இ-ள்.) ஓர் மூன்று உலகமும் தனது அடி படுத்தி=மூவுலகங்களையுந் தன்னுணையின் கீழடக்கி, உயர் விசும்பு தனி புரக்கும் = மேலாய வானுலகைப் பொதுவின்றிக் காக்கும், ஒளி இலகு வைரம் வாள் படை ஒரு உழவன் முதலிய எண் திசை பாலர் = ஒளி விளங்கா நின்ற குலிசமும் வாளு மாகிய ஆயுதங்களில் வல்லவனுகிய ஒப்பற்ற இந்திரன் முதலிய அட்ட திக்குப் பாலகர், மலர் தடம் சினைய கற்பகம் தருவும் = பூக்கின்ற நீண்ட கொம்பர்களை யுடைய கற்பக தருவையும், தேனுவும்=காமதேனுவையும், மணியும் = இரத்தினங்களையும், நீள் நிதியும்=மிகுந்த திரவியங்களையும், அலகு இல கொணர்ந்து = அளவில்லாதன வாகக் கொண்டுவந்து, தொழ இடம் பெறுமல்=(இரணியனைக்கண்டு) வணங்குதற்குச் சமையம் வாய்க்காமையால்,அகல் மணி முன்றிலின் துயில்வார்=அகன்ற இரத்தினங்க ளிழைத்துச் செய்யப்பட்ட முன் வாயிலினிருந்து தூங்கா நிற்பர். (உக)

விண்ணக டுருவும் போகுயர் குடுமி மேருமால் வரைமுதற் கிரியுங்
கண்ணகன் ஞால முடுத்ததெண் டிரைய கருங்கடன் முதலவேழ் கடலு

மண்ணலஞ் சேடன் முதலிய செஞ்சூட் டரவமு நதிகளும் பிறவும்
பண்ணவ ருருவின் விரைவின்வந் தெய்தி யவுணர்கோன் பணித்தன புரியும்.

(இ-ள்.) விண் அகடு உருவும் போகு உயர் குடுமி = ஆகாயத்தின் வயிற்றைக் கிழித்து நீண் டுயர்ந்த சிகரங்களை யுடைய, மால் மேரு வரை முதல் கிரியும்=பெரிய மேரு மலை முதலாகிய மலைகளும், கண் அகன் ஞாலம் உடுத்த தெள் திரைய=இடமகன்ற பூமி யைச் சுற்றிய தெள்ளிய அலைகளை யுடைய, கரு கடல் முதல ஏழ் கடலும் = கரிய உவர்க் கடல் முதலாகிய சத்த சமுத்திரங்களும், அண்ணல் அம் சேடன் முதலிய செம் சூட்டு அரவமும்=பெருமையாகிய அழகிய அனந்தன் முதலாய சிவந்த உச்சியை யுடைய நாகர் களும், நதிகளும் பிறவும்=யாறுகளும் ஏனையவும், பண்ணவர் உருவின் விரைவின் வந்து எய்தி=தேவ வடிவத்துடன் விரைந்துவந் தடைந்து, அவுணர் கோன் பணித்தன புரியும்= அசுரர்க் கிறைவனுய இரணியன் கட்டளை யிட்ட வேவல்களைச் செய்யா நிற்கும்.

கருங்கடல் முதல வேழ் கடலாவன – உப்புச் சமுத்திர முதலிய எழுவகைக்கடல். சேடன் முதலிய அரவமாவன – அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பன. நதிகளாவன–கங்கை, நருமதை, யமுனை, சரசுவதி, காவிரி, குமரி, கோதாவரி என்பன. (உஉ)

இன்னண முலக முழுவதும் வெருவ வெரிகதிர்த் திகிரியொன் றுருட்டி
மின்னகு பரிதி வாட்படை யுழவன் வியனுல களிக்குநா ளதனிற்
பொன்னவிர் திதலை பூத்தழ குறங்கும் புணர்முலைப் புலோமசை கொழுநன்
றன்னுளந் துயர விண்ணவ ரோடு மலரயன் சார்வுழி யடைந்தான்.

(இ-ள்.) மின் நகு பரிதி வாள் படை உழவன்=ஒளியைக் காலுகின்ற சூரியனைப் போன்ற வாளாயுதத்தை யேந்திய இரணியன், இன்னணம் = இவ்வாறு, உலகம் முழு வதும் வெருவ = உலகத்தி லுள்ள வுயிர்கள் யாவும் பயமுற, எரி கதிர் ஒன்று திகிரி உருட்டி=பிரகாசிக்கும் ஒளி யுடைய ஒப்பற்ற ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்தி, வியன் உலகு அளிக்கும் நாளதனில் = பெரிய உலகத்தைக் காக்குங் காலத்தில், பொன் அவிர் திதலை பூத்து=பொன் போன்று விளங்குந் தேமல் பரந்து, அழகு உறங்கும் புணர் முலை புலோமசை கொழுநன் = அழகு குடிகொண் டிருக்கும் நெருங்கிய தனங்களை யுடைய இந் திராணி நாயக னுகிய இந்திரன், தன் உளம் துயர=தன் மனந் துன்பப் பட, விண்ண வர் ஓடு மலர் அயன் சார் உழி அடைந்தான் = தேவர்க ளோடுந் தாமரை மலர் ஆசன னுகிய பிரம னிருக்கு மிடத்தைச் சேர்ந்தான். (உங)

அரசவேற் றெகினப் பாகனைப் பழிச்சி யடற்கரும் புலிப்பக டனைய
விரணிய னிழைக்குங் கொடுந்தொழிற் காற்று தெய்தினமளித்தரு ளெனலும்
விரைவளங் கொழிக்குங் கமலமென் பொகுட்டு வேதிய னவரொடும் போந்து
திரைபொரு கடலி னறிதுயில் கூருஞ் செங்கண்மா லுறையுழிச் சேர்ந்தான்.

(இ-ள்.) அரச ஏறு எகினம் பாகனை பழிச்சி = தலைமையை யுடைய ஆண் அன் னத்தை நடாத்தும் பிரமனைத் துதித்து, அடல் கு அரு பகடு புலி அனைய இரணியன்= வெற்றி கொள்ளுதற் கரிய ஆண்புலியை நிகர்த்த இரணியாசுரன், இழைக்கும் கொடு தொழில் கு ஆற்றுது எய்தினம் = செய்யுங் கொடிய செய்கைகளுக்குச் சகிக்காமல் (நின் னைச் சரணுக)அடைந்தேம்,அளித்து அருள் எனலும்=காத்தருள்வாய் என்று கூறுதலும், விரைவளம் கொழிக்கும் கமலம் மென் பொகுட்டு வேதியன்=வாசனை வளப்பத்தை வீசு கின்ற தாமரையினது மென்மை யாகிய பூங்கொட்டையின்க ணிருக்கும் பிரமதேவன்,

அவர் ஓடும் போந்து=அவர்க ளோடுஞ் சென்று,திரை பொரு கடலின் அறிதுயில் கூரும்=அலைகள் மோதுங் கடலி னிடத்து யோக நித்திரை செய்யும், செம் கண் மால் உறை உழி சேர்ந்தான்=சிவந்த விழிகளை யுடைய திருமால் இருக்கு மிடத்தை யடைந்தனன். (உச)

கதிர்மணிச் சுடிகை நிரைவிளக் கெடுப்ப நாகணை மீதுகண் டுயிலுந்
ததைமலர்க் கண்ணிப் பசுந்துழாய் முகிலைத் தாழ்சிறை வண்டுபாட் டயர
மதுமழை பிலிற்று மலரயன் முதலோர் வழுத்தலு மலர்விழி யலர்ந்து
புதியதெள்ளமுதுஞ் சுவையறப்புளிப்பப் பவள்வாய் மலர்ந்திவை புகல்வான்.

(இ-ள்.) கதிர் மணி சுடிகை நிரை விளக்கு எடுப்ப=ஒளி கொண்ட இரத்தினங்கள் பொருந்திய தலைகள் வரிசையான தீபவொளியைச் செய்யாநிற்ப, நாகம் அணை மீது கண் துயிலும்=சர்ப்ப சயனக்கண் அறிதுயில் செய்யும், ததை மலர் பசு துழாய் கண்ணி முகிலை = நெருங்கிய புட்பங்களாலாய துழாய் மாலையை யணிந்த மேகம்போன்ற மாயவனை, தாழ் சிறை வண்டு பாட்டு அயர=நீண்ட சிறகுகளை யுடைய வண்டுகள் இசைகளைப் பாட, மது மழை பிலிற்றும் மலர் அயன் முதலோர் வழுத்தலும் = தேன்மாரி பெய்யுந் தாமரைப் பூவின்க ணிருக்கும் பிரமன் முதலினோர் துதித்தலும், மலர் விழி அலர்ந்து = தாமரைக் கண்களை விழித்து, புதிய தெள் அமுதும் சுவை அற புளிப்ப = புதுமையாகிய தெள்ளிய அமிர்தமுஞ் சுவையின்றிப் புளிப்படைய, பவளம் வாய் மலர்ந்து = பவளம் போன்றவாயைத் திறந்து, இவை புகல்வான்=இவற்றைச் சொல்வானாயினன்,

அறிதுயில் புரிந்துவிட்டுணு மூர்த்தியைப் பிரமன் முதலினோர் துதிக்க,அவன் கண் விழித்து எழுந்து இவை யிற்றைச் சொல்வான் என்பதாம்.

நாகம்-கடைக்குறை. முகில் உவமவாகு பெயர். திருமால் கூறும் மொழிகள் அமிழ்தினு மினிய மொழிக ளென்பான் "புதியதெள் ளமுதுஞ் சுவையறப் புளிப்ப" என்றான். அற-வினை யெச்சத் திரிபு. அதனை "சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை" என்ற சூத்திரத்தா னமைக்க. வண்டுகள் இசை பாட வதற்குப் பரிசாகத் தேனைப் பொழியுந் தாமரை யென்க. (உரு)

எரிவிடங் கடைவாய் மடையுடைத் தொழுகு மெரிமணிச் சூட்டரா நெற்றி
மருவுநீர் வலய முதலிய வுலக மனைத்தையும் வகுத்திடு மலரோய்
முருகுகொப் புளிக்குங் கற்பக நீழற் புரந்தரன் முதலினோ ரோடும்[னோதும்.
விரைவினீண் டடைந்த தென்கொலென் றுரைப்ப விரைமலர்ப் பண்ணவ

(இ-ள்.) கடை வாய் எரி விடம் மடை உடைத்து ஒழுகும்=வாயின் கடையினின்றும் அக்கினி போன்ற நஞ்சு மடை யுடைந்தாற்போலப் பொழியும், எரி மணி சூட்டு அரா நெற்றி மருவும் = பிரகாசிக்கின்ற இரத்தினம் பொருந்திய உச்சியை யுடைய ஆதிசேடனது நெற்றியிற் பொறுத்த, நீர் வலயம் முதலிய உலகம் அனைத்தையும் = நீரால் சூழப்பட்ட வட்டமாகிய பூமி முதலாய வுலகங்க ளெல்லா வற்றையும், வகுத்திடும் மலரோய்= சிருட்டித்த பிரமனே, முருகு கொப்புளிக்கும் கற்பகம் நீழல் = வாசனை கமழுங் கற்பக தரு நிழலில் இருக்கும், புரந்தரன் முதலினோர் ஓடும் = இந்திரன் முதலாய தேவர்களோடும், ஈண்டு விரைவின் அடைந்தது என் கொல் = இவ்விடத்து விரைவாக வந்தது யாது காரணம், என்று உரைப்ப=என்று (திருமால்) கேட்ப, விரை மலர் பண்ணவன் ஓதும்= வாசனை பொருந்திய தாமரைப்பூ வாசனாகிய பிரமன் கூறுவான்.

கடைவாய்-இலக்கணப்போலி. கடைவாயாகிய வரம்பை யுடைத்து என்னலுமாம். நீர்வலயம்-ஆகு பெயர். புரந்தரன் = பகைவரது நகரங்களை யழிப்பவன், பகைவருடலை யழிப்பவன். உலக மனைத்து மென்றது பிரமாண்டக்கணுள்ள உலக வகைகளையாம்(உசு)

இளவெயில்விரிக்குந் தமனியப்போர்வை யெழில்பெறவணியுநீல் வரைபோற்
றுளையெயிற் றகல்வாய்ப் பாம்பணைப் புறத்தி னறிதுயி லமர்ந்திடுந் தோன்றா
றளர்வொடு மெலிந்தே மிரணியற் காற்றா தடைந்தனந் தஞ்சநீ யல்லாற்
களைகண்மற்றெவரே வானவர்க்கென்னக் கண்பனி யுகுப்பநின் றுரைப்பான்.

(இ-ள்.) இள வெயில் விரிக்கும் தமனியம் போர்வை=இளங் கிரணத்தைப் பரப்பும் பொன்னுடையை, எழில் பெற அணியும் நீல் வரை போல் = அழகுண்டாகத் தரித்த நீலமலை போல, துளை எயிறு அகல் வாய் பாம்பு அணை புறத்தின்=துவாரங்கொண்ட பற்களையும் அகன்ற வாயினையு முடைய சர்ப்ப சயனத்தின்மேல், அறிதுயில் அமர்ந்திடும் தோன்றால் = யோகநித்திரை கொண் டிருக்கும் பெரியோய், இரணியன் கு தளர்வு ஒடு மெலிந்தேம் = இரணியனால் வருத்த முற்றதோடு வலிமையுங் குன்றி, ஆற்றாது அடைந்தனம் = (அவற்றை யினிமேல்) சகிக்கக் கூடாமையால் (நின்னிடத்து) வந்தேம், நீ தஞ்சம் அல்லால்=நீயே துணையன்றி, வானவர்க்கு மற்று எவர் களைகண் = தேவர்களாகிய எங்கட்கு வேறியாவர் பற்றுக்கோடாக வுள்ளார், என்ன = என்று (பிரமன்) முறையிட, கண் பனி உகுப்ப நின்று உரைப்பான் = (திருமால்) கண்ணி னின்றும் நீர்சொரியா நிற்கச் சொல்வா னாயினன்.

போர்வை=போர்க்கப் படுவது. நீலம் நீல் எனக் குறைந்து நின்றது. பாம்பு-வலித்தல். அறிதுயில் என்பதைப் பொய்யுறக்கம் என்பர் பாரதம்பாடிய பெருந்தேவனார். அது "பொய்யுறக்கங் கொண்டபிரான் போர்விசயன் றன்னுடைய - செய்ய திருவடிகள் சேர்தலுமே" என்றதனாற் கண்டது. இரணியற்கு - உருபுமயக்கம். மெலிந்தேம் வினைமுற்று எச்சப் பொருள்பட்டு நின்றது. நின்று எச்சத்திரிபு. தஞ்சம்-எளிமை; இது தாற்பரியத்தால் துணை எனப் பொருள் பட்டது. "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே." என்பது தொல்காப்பியம். (௨௭)

வெஞ்சினத் தறுகட் கடாக்களி றனைய விறல்கெழு மிரணியற் காற்றா
தஞ்சினீர் போலும் வெருவலீ ரென்னா வாய்பிழித் துளவணிந் தோங்கு
மஞ்சுறழ் மேனித் திருமறு மார்பன் மலர்க்கர மமைத்துவா னவர்க
ளுஞ்சிடும் வண்ண முளத்திடை நினையா வொல்லையி னுங்கிவை புரிவான்.

(இ-ள்.) பிழி வாய் துளவு அணிந்து = தேன் பொருந்திய துழாய் மாலையைத் தரித்து, ஓங்கும் மஞ்சு உறழ் மேனி திருமறு மார்பன் = உயர்வாய மேகம்போன்ற வடிவினராய திருமால், வெம் சினம்=கொடுங் கோபத்தையும், தறுகண் = அஞ்சாமையினையும், கடாம் களிறு அனைய விறல் கெழும் இரணியன் கு = மதத்தையு முடைய யானை போன்ற வலிமையைக் கொண்ட இரணியாசுரனுக்கு, ஆற்றாது அஞ்சினீர் போலும்= எதிர் நிற்க மாட்டாது பயமுற்றனிரோ, வெருவலீர் என்னா மலர் கரம் அமைத்து= (இனிப்) பயப்படாதீ ரென்று தாமரைப் பூவொத்த (தனது) கரத்தினால் அபயங் கொடுத்து, வானவர்கள் உஞ்சிடும் வண்ணம் உளத்து இடை நினையா=தேவர்கள் உய்யும்படி தம்மனத்தி னினைத்து, ஆங்கு ஒல்லையின் இவை புரிவான்=அவ்விடத்து விரைவாக இவற்றைச் செய்வா னாயினன்.

போலும் என்னும் ஒப்பில் போலி யீண்டுக் கட்டுரைக்கண் வந்தது. அங்கு ஆங்கு என நீட்டல். உய்ந்திடும் என்பது உஞ்சிடும் என மரூஉவிற்று. (௨௮)

படைக்கட றுடைக்குஞ் சுடர்ப்படைத் திகிரி பான்மதி பொருவுவெண் சங்க
மடற்கருங் கதைவாள் கொடுமரந் தாங்கும் போகுய ரஞ்சனக் குன்றம்

கடுப்பவோர் புருடன் றனையினிதமைத்துக்கலுழன்மீதிவர்ந்துவிண்ணவர்க்கு
முடற்றருஞ் செருவி லிரணிய னுவி யுண்டிவண் வருகென வுரைத்தான்.

(இ-ள்.) படை கடல் துடைக்கும் சுடர் திகிரி படை = சேனைகளாய சமுத்திரத்தைச் சுவறச் செய்யும் ஒளியுடைய சக்கரா யுதத்தையும், பால் மதி பொருவும் வெள் சங்கு = துண்டப்பிறையை நிகர்த்த வெள்ளிய சங்கையும், அடல் கு அரு கதை வாள் கொடுமரம் தாங்கும் = அழித்தற் கரிய தண்டு வாள் வில் என்னு மாயுதங்களையுந் தரித்த, போகு உயர் அஞ்சனம் குன்றம் கடுப்ப=நீண்டுயர்ந்த நீலமலையை நிகர்க்குமாறு, ஓர் புருடனை இனிது அமைத்து = ஒருவீரனை நன்மை பொருந்தச் சிருட்டித்து, கலுழன் மீது இவர்ந்து = (வீரனே) கருடவாகனத்தின் மீதேறி, விண்ணவர்க்கும் உடற்ற அரு செருவில்=தேவர்க்குஞ் செய்தற் கியலாத யுத்த முனையில், இரணியன் ஆவி உண்டு=இரணியனுயிரைக் குடித்து, இவண் வருக என உரைத்தான் = இவ்விடத்து (விரைவில்) வரக்கடவாய் என்று கூறினன்.

திருமால், பஞ்சாயுதங்களையுந் தரித்து நீண்டுயர்ந்த நீலமலை போன்ற ஓர் புருடனையுண்டாக்கி யிரணியனைக் கொன்று வருகவென் றுரைத்தான் என்பதாம்.

துண்டப் பிறைபோலச் சங்கிற்கு முள்ளில் வெள்ளிடமு முண்மையாற் பால்மதி என்பதற்குத் துண்டப்பிறை யென்றுரைத்தாம். பால்=பகுதி. சங்கம் - அம், சாரியை. உடற்ற, வருக என்பன அகரந் தொக நின்றன. வியங்கோள் வினைமுற்று விதித்தற் பொருளில் வந்தது. படைக்கட லுடைக்கும் எனவும் பாடம். (உகூ)

குருந்தொசித் தாயர் கோநிரை மேய்த்த கொண்டல்கூ றலுங்கரங் குவித்துக்
கருந்தலை யுகுத்த மூளைவெண் சோறுந் தடிபடு கருனையுங் குழைத்து
விருந்தயர் காலம் வந்ததென் றுன்னி வெள்ளெயிற் றலகையாட் டயரப்
பருந்தினந் தொடரப் பகட்டெழின் மார்ப னிரணியன் பதிமருங் கிறுத்தான்.

(இ-ள்.) குருந்து ஒசித்து=குருந்த மரத்தை முரித்து, ஆயர் கோ நிரை மேய்த்த கொண்டல்=இடையர்களது பசுக்கூட்டங்களை மேய்த்த மேகம்போன்ற திருமால், கூறலும் = (அவ்வாறு) சொல்லுதலும், பகடு எழில் மார்பன் = பெரிய அழகிய மார்பினையுடைய புருடன், கரம் குவித்து=தன்கைகளைக் கூப்பி யஞ்சலி செய்து, கரு தலை உகுத்த மூளை வெண் சோறும் = பெரிய தலை சொரித்த மூளையாகிய வெள்ளிய சோறும், தடிபடு கருனையும் குழைத்து = தசைகொண்டு செய்த பொரிக்கறியுஞ் சேர்த்து, விருந்து அயர் காலம் வந்தது என்று உன்னி = விருந்திடுகின்ற சமையம் வந்ததென்று நினைந்து, வெள் எயிறு அலகை ஆட்டு அயர=வெண்மையாகிய பற்களை யுடைய பேய்கள் கூத்தாடவும், பருந்து இனம் தொடர = பருந்துக் கூட்டங்கள் சூழ்ந்துவரவும், இரணியன் பதி மருங்கு இறுத்தான்=இரணியனது நகர்ப்புறத்தைச் சார்ந்தான்.

குருந்தொசித்து நிரைமேய்த்தமை "கோவா மலையாரங் கோத்த கடலாரம்-தேவர் கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே-தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந் துவரைக் - கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்" என்று சிலப்பதிகாரத்தும் விதந்கப் பட்டது. ஆயர்=பசுக்களைக் காப்பவர். கொண்டல்-ஆகுபெயர். விருந்து= புதுமை. இது பண்பாகு பெயராய்ப் புதிதாய்க் கொடுக்கு முணவுக்காயிற்று. (கூ0)

திறைகொணர்ந் தொன்னுர் புகுவதை யன்றித் தெவ்வொடு வெஞ்சமமுருக்க, வுறைகுநர் பெறுத மணிமதில் வாயிற் புறத்தினி லும்பர்சூழ் போதம், பறவைவேந் திவர்ந்தோர் முகிலுறழ் மேனிப் பண்ணவன் புகுந்தன

னென்ன,வறைகழ லவுணர்க் கிறையுட னொற்று மவுணன்வாய் புதைத்திவை யறைந்தான்.

(இ-ள்.) ஒன்னார் திறை கொணர்ந்து புகுவதை அன்றி = பகையரசர் திறைப் பொருள் கொடுவந்து நுழைவதே யல்லாமல், தெவ் ஓடு வெம் சமம் முருக்க=பகையுடன் கொடிய யுத்தத்தில் வெல்ல நினைந்து, உறைகுநர் பெறுத மணி மதில் வாயில் புறத்தினில்=வந்திருப்பாரைக் காணப் பெறுத அழகிய மதிலின் வாயிலுக்கு வெளியிடத்தில், உம்பர் சூழ் போத = தேவர்கள் (தன்னைச்) சுற்றிவர, முகில் உறழ் மேனி ஓர் பண்ணவன்=மேகம் போன்ற வடிவினை யுடைய ஒருவிண்ணவன், பறவை வேந்து இவர்ந்து= கருடவாகனத்தி லேறி, புகுந்தனன் என்ன = பிரவேசித்தான் என்று, ஒற்று ஆம் அவுணன்=தூதுவனாய அசுரன், வாய் புதைத்து = வாயை மூடி, அறை கழல் அவுணர்க்கு இறை உடன்=சத்திக்கின்ற வீரக்கழலைத் தரித்த அசுரர்க்குத் தலைவனாய இரணியனுக்கு, இவை அறைந்தான்=இவைகளைச் சொன்னான். இறையுடன்-உருபுமயக்கம். (ருக)

கேட்டலும் வடவைத் தழல்விழி பொழியக் களக்கரும் புவனமோ ரேழு
மூட்டரக் குண்ட குலிகமென் செப்பி னொள்ளழல் பரந்தன சிவப்பத்
தோட்டுணை பணைத்துத் தமனியத் திழைத்த வண்டவன் சுவர்த்தலை சொறிய
வாட்டலை புகைய வாளெயி றதுக்கி மைந்தரை நோக்கியீ துரைப்பான்.

(இ-ள்.) கேட்டலும் = (இரணியன் அவற்றைக்) கேட்குதலும், விழி=கண்களினின்றும், வடவை தழல் பொழிய=வடவாமுகாக்கினி சொரிதலால், அரக்கு உண்ட குலிகம் மென் செப்பின் = சிவப்பேற்றிய சாதிலிங்கம் பொருந்திய மிருதுவாய செப்பைப் போல, களக்க அரு ஓர் ஏழு புவனமும்=சொல்லுதற்கரிய ஒப்பற்ற சத்த லோகங்களும், மூட்டு ஒள் அழல் பரந்தன சிவப்ப = சுவாலிப்பிக்கின்ற ஒள்ளிய அக்கினி பரந்து சிவப்பேறவும், துணைதோள் பணைத்து = இரு புயங்களும் வீங்கி, தமனியத்து இழைத்த அண்டம் வல் சுவர் தலைசொறிய = பொன்னாற் செய்த அண்டத்தினது வலிய சுவரிடத்தைத் தேய்க்கவும், வாள் தலை புகைய=ஒளியுடைய சிரம் புகைத்தலைச் செய்யவும், வாள் எயிறு அதுக்கி=வாள்போன்ற பற்களைக் கடித்து, மைந்தரை நோக்கி = (தனது) புத்திரர்களைப் பார்த்து, ஈது உரைப்பான்=இதனைக் கூறுவான்.

பரந்தன-முற்றெச்சம். களக்க - அகரந் தொகுத்தல். சிவப்பேறிய சாதிலிங்கச் செப்பைப் போல இரணியன் கண்ணழலு மெங்கும் பரந்தன வென்க. மணிமுடி கொண்டமையானுஞ் செங்குஞ்சியானும் வாட்டலை யெனப்பட்டது. மைந்தராவார் பிரகலாதன், அநுகிலாதன், சங்கிலாதன், கிலாதன் என்பவராம். (ருஉ)

விரிந்தசெங் கதிரும் போக்கற நிவந்த வெயிற்புறத் திறுத்தவிண் ணவனைக், கரும்புகைச் செந்தீச் சுடர்விரி பகுவாய்க் கட்செவி நெற்றியிற் கிடந்த, விரும்புவி யதனி னுயர்பனி விசும்பிற் பாதலத் தொளிப்பினு மெய்தி, வருந்தநீ டடங்தோள் பாசத்திற் பிணித்து வல்லையிற் கொணர்மினென் றுரைத்தான்.

(இ-ள்.) விரிந்த செங்கதிரும் போக்கு அற நிவந்த=(மைந்தர்களே) பரந்த சிவந்த கிரணங்களை யுடைய சூரியனுஞ் செல்ல வொட்டா துயர்ந்த, எயில் புறத்து இறுத்த விண்ணவனை = மதிலின் பக்கத்தில் வந்திருக்குந் தேவனை, கரு புகை செம் தீ சுடர் விரி பகுவாய் = கரிய புகையைக் கொண்ட சிவந்த அக்கினிக் கொழுந்து காலும் பிளந்த வாயினை யுடைய, கட்செவி நெற்றியில் கிடந்த இரு புவி அதனின்=ஆதிசேடனது நெற்றியிற் றங்கிய

பெரியபூமியினும், உயர் பனி விசும்பின்=மேலாய குளிர்ந்த ஆகாயத்தினும், பாதலத்து ஒளிப்பினும்=பாதாள லோகத்தினும் ஒளித்தாலும், எய்தி=(நீவிரும் ஆங்குச்) சென்று, வருந்த = (அவன்) வருந்தும்படி, நீள் தடம் தோள் பாசத்தின் பிணித்து=நீண்ட பெரிய புயங்களைக் கயிற்றினாற் கட்டி, வல்லையில் கொணர்மின் என்று உரைத்தான் = விரைவிற் கொண்டு வருவீராக வென்று கட்டளை யிட்டான். (௫௩)

கடியவெங் கூற்றுங் கண்புதைத் தேங்கக் காவலன் விடைகொடு சிறுவர்
குடவளைச் சங்கங் குமுறிநின் றார்ப்பக் கோள்வி நூற்றினைச் செகுத்த
வடுசினத் திமிலேற் றுரிபுனை முரசங் குணில்பொரு மார்ப்பொலி கறங்கக்
கிடுகொடு சுழலும் வயவர்சூழ் போதக் கிளர்சமம் வேட்டெதி ரெழுந்தார்.

(இ-ள்.) சிறுவர்=புத்திரர்கள், கடிய வெம் கூற்றும் கண் புதைத்து ஏங்க=வேகமுடைய வெவ்விய யமனுங் கண்களை மூடி யேக்க மடையவும், காவலன் விடை கொடு= இரணியனது அநுமதியை மேற்கொண்டு, குடம் வளை சங்கு குமுறி நின்று ஆர்ப்ப= குடம் போலும் வளைந்த சங்குகள் முழங்கி யெழுந் தொலிக்கவும், கோள் நூறு திவியினை செகுத்த=வலிய நூறு புலிகளைக் கொன்ற,அடு சினத்து இமில் ஏறு உரி புனை=கொல்லுந் தொழிலையுங் கோபத்தையும் முரிப்பினையு முடைய இடபத்தின் றோலாற் கட்டப்பட்ட, முரசம்=முரச வாத்தியத்தில், குணில் பொரும் ஆர்ப்பு ஒலி கறங்க=குறுந்தடி மோதித் தொனிக்குஞ் சத்த முழங்கவும், கிடுகு ஒடு சுழலும் வயவர் சூழ் போத = கேடகத்துடன் சுற்றித் திரியும் போர் வீரர்கள் சூழ்ந்து வரவும், கிளர் சமம் வேட்டு எதிர் எழுந்தார்= மிகுந்த யுத்தத்தை விரும்பி யெதிர்த்துப் புறப்பட்டனர்.

சிறுவர் எழுந்தார் என்க. கூற்றும் - உம்மை யெச்சப்பொருட்டு. இமிலேற்றுரி புனையு மிம்முரச வாத்தியத்தை மயிர்க்கண் முரசு என்ப. அஃதாவது அவ்வக் காலத்து வந் தெதிர்த்த நூறு புலிகளைக் கொன்று நின்று தொனிசெய்து கொம்பின் மண் கொண்ட இடபம் இறந்தக்கால் அதன் றோலை மயிர் சீவாமற் போர்த்த முரசாம். இதனை "புணை மருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற - கனைகுர லுருமுச் சீற்றக் கதழ் விடை யுரிவை போர்த்த-துனைகுரன் முரசம்" எனச் சீவக சிந்தாமணியினுஞ் செப்பப் பட்டது. "கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த - மயிர்க்கண் முரச மோவல விரங்க" என்றூர் பிறரும். இதனால் "கோளரி நூற்றினைச் செகுத்த" என்ற பாடம் பொருந்தா தென்க. தீவி என்பது திவி எனக் குறுக்கல். (௫௪)

கனைகடாஞ் செருக்கிக் கண்படை பெறாது படர்முறச் செவியெறி காற்றிற்
பனையென நீண்ட திரடடக் கையிற் பாவடி நான்கினீள் வாலிற்
புனைமணி பொதிந்த வெண்பிறைக் கோட்டிற் பொருநரை நூழிலாட் டயருந்
தினவுநீள் வரைப்போத் தெண்ணரைக் கச்சம் புவிமுது குளுக்கமுன் செல்ல.

(இ-ள்.) கனை கடாம் செருக்கி கண்படை பெறாது படர்=ஒலிக்கின்ற மதமுடைமையால் அகங்கரித்து உறக்கங் கொள்ளாமற் சஞ்சரிப்பதாய், முறம் செவி எறி காற்றின்=சுழகு போன்ற காதுகளினால் வீசுங் காற்றுடன், பனை என நீண்ட திரள் தடம் கையின் = பனையைப் போல நீண்ட திரட்சியாகிய பெரிய துதிக்கையையும், பா அடி நான்கின்=பரந்த நான்கு கால்களையும், நீள் வாலின் = நீண்ட வாலினையும், மணி புனை பொதிந்த வெண் பிறை கோடு இன்=இரத்தினங்களால் அலங்கரித்து மூடப்பட்ட வெள்ளிய பிறைச்சந்திரன் போன்ற கொம்பர்களையு முடைய, பொருநரை நூழிலாட்டு அயரும் தினவு நீள் வரை போத்து=போர் வீரருடன் நூழில் விளையாட்டைச் செய்யுந் தினவு

கொண்ட நீண்ட மலைபோன்ற களிற்றி யானைகள், எண் அரை கச்சம்=எட்டரை யிலக்க வளவு உள்ளனவாய், புவி முதுகு உளுக்க = பூமியின் முதுகு சுளுக்கிக் கொள்ளும்படி, முன் செல்ல=முன்னே போகவும்.

இதுமுத லைந்துசெய்யுட்கள் குளகம். அரச யானைகளுக்குக் காலுங் கையுங் கோசமும் வாலும் நிலத்திற் றோய நீண்டிருத்த லுரிமை யாகலின் அவை விதக்கப் பட்டன. அதனை "காலோர் நான்குந் தனிக்கையுங் கோசமும்-வாலுறப் போடேழு மாநிலந் தோய் வதும்" எனவரும் பிங்கலந்தைச் சூத்திரத்தா னறிக. தூழிலாட்டாவது மாற்றாரால் விடப்பட்டுத் தன்மெய்க்கட் புதைந்த படையைப் பறித்து, மீட்டும் அவர்மே லடுக்க வோச்சல். கொன்று குவித்தல் என்பர் நச்சினார்க்கினியர். காலாள் போலக் களிறும் மதத்தாற் கதஞ்சிறந்து போர்புரி வன்மைய தாகலின் தூழிலாட்டுடன் முற்கூறப்பட்டது. "ஒள்வாள் வீசிய தூழிலு முளப்பட" எனத் தோல்காப்பியனார் சொற்றங்கு இஃது தும்பைத் திணைத் துறையி னொன்று. பொருளுரை உருபு-மயக்கம். (௫௫)

இலகொளிப் பரிதி நடவுபைம் புரவி யேழுநீள் வரையினை யோர்கால்
வலம்வரு மூன்ன நேமியங் கிரியை யாயிரங் கால்வலம் வருவ
நிலவுநூற் றன்ன கவரிதாழ்ந் துலவு நெற்றிய விசும்பினிற் பறப்ப
வலைகடற் பிறந்த கலினவாம் புரவி யாயிரங் கச்சமுன் னடப்ப.

(இ-ள்.) இலகு ஒளி பரிதி நடவு பை ஏழு புரவியும்=விளங்காநின்ற கிரணத்தை யுடைய சூரியனாற் செலுத்தப்படும் பச்சைக் குதிரைகள் ஏழும், நீள் வரையினை ஓர் கால் வலம் வரு முன்னம்=நீண்ட மேருகிரியை ஒருதரஞ் சுற்றி வருவதன் முன்னர், அம் நேமி கிரியை ஆயிரம் கால் வலம் வருவ=அழகிய சக்கிரவாள மலையை யாயிரந் தரஞ் சுற்றி வருவனவும், நிலவு நூற்று அன்ன கவரி தாழ்ந்து உலவும் நெற்றிய=சந்திரிகையை நூலாக்கினாற் போன்ற சாமரங்கள் தூங்கித் தோன்றுகின்ற நெற்றியை யுடையவும், விசும்பினில் பறப்ப=ஆகாய வழியாய்ச் செல்வனவும், அலை கடல் பிறந்த=திரை பொருந்திய சமுத்திரத்திற் பிறந்தனவுமாகிய, ஆயிரம் கச்சம் கலினம் வாம் புரவி=ஆயிரலக்ஷ மென்னும் அளவுள்ள கடிவாளம் பூட்டப்பட்டுத் தாவிச் செல்கின்ற குதிரைகள், முன் நடப்ப=முன்னர்ச் செல்லவும்.

பத்துக்கோடி புரவிகள் எனக் கொள்க. ஏழு புரவி யென்பதற்குச் சப்தாசுவம் என்னும் வடநூற் கூற்றானே ஏழ் என்னும் பெயருடைய தென்று கொள்வாரு முளர். இந்நூலாசிரியனும் ஏனையோரும் ஆங்காங்கு ஏழாகிய தொகை கொண்ட குதிரைகள் எனத் துணிவுற நிறுத்தமையாற் குதிரைகள் ஏழும் என உரைத்தாம். பிரமாணம் வருமாறு:—

பின்வரும், மண்டலவளவை யுரைத்த அத்தியாயம்.

வேதச் சந்தசோ ரேழுமத் தேரினில் விசித்த
தீதில் வாம்பரி யீரறு பரிதியஞ் செல்வர்.

இலிங்கபுராணம்-சூரியன்றேர்ச்சிறப்புரைத்த அத்தியாயம்.

உயர மொன்பா னாயிரமி யோசனைத்தா மூரைத்திடுகி னத்துணையே
யியலு மகல மதனிரட்டி யிலங்க வணிந்த பார்நீள
மயலா மாழித் துளைமூன்று கப்பை யைந்தா மருமறையின்
மயறீர் சந்தம் பிணித்தபசும் புரவி யேழும் வகுத்துரைக்கின்.

பாகவதபுராணம்-சூரியமண்டல முரைத்த அத்தியாயம்.

தணிவிலோ ராழி வேதச் சந்தசோ ரேழு மேழும்
பணிசெயப் பூண்ட பச்சைப் பரிதின கரன்றேர்க் கன்றே.

விஷ்டுபுராணம் - எட்டா மத்தியாயம்.

சூரியனுடைய இரதத்திற்குக் காயத்திரி, பிருகதி, உஷ்ணிக், ஜகதீ, திருஷ்டுப்பு, அநுஷ்டுப்பு, பங்தி என்கிற வேதசந்தங்கள் ஏழுமே குதிரைகளா யிருக்கின்றன.

சீவகசிந்தாமணி - காந்தருவ தத்தையாரிலம்பகம்.

உருளி மாமதி யோட்டொழித் தோங்கிய
வெருளி மாடங்கண் மேற்றுயி லெய்தலின்
மருளின் மாண்பிணை நோக்கினல் லார்முகத்
தருளி னுலழ லாற்றுவ போன்றவே.

இதற்கு நச்சினார்க்கினியநுரை.

மதியைச் செலவைத் தவிர்த்து, மேலே யோங்கிய வெருட்சியை யுடைய மாடங் களின் ஞாயிற்றின் றேர்ப்பூண்ட மாக்கள் மேலே துயிலைப் பெறுதலாலே, அவை நல் லார் முகத்தி னருளால் தம்வெம்மையை யாற்றுவன போன்ற வென்க.

இராமாயணம்—ஊர்தேடு படலம்.

ஆழி யண்டத்தி னருக்கன்ற னலங்குதேர்ப் புரவி
யேழு மல்லன வீண்டுள குதிரையு மெல்லாம்.

ஷை கிட்கிந்தாகாண்டம்-மராமரப்படலம்.

ஏழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
யேழு மங்கைய ரெழுவரு நடுங்கின வென்ப.

திருவிளையாடற்புராணம்-திருநகரப்படலம்.

இரவி யாழியொன் றுடையதே ரீர்த்தெழு மிமையாப்
புரவி நாவிமிர்த் தயில்வன பொங்கர்வாய்த் தளிர்கள்.

நைடதம்-நகரப்படலம்.

கான றும்புன னிறைதலுங் கதிரவன் றடந்தேர்
மானி னங்குடித் தயர்வுயிர்த் தும்பரின் வாவும்.

மேருமலை இப்பூமி மத்தியில் தேரினச்சாணிபோல நிற்பது. சக்கிரவாளகிரி ஏழு தீவுகளுக்கும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஏழுகடல்களுக்கும் அப்பாற்பட்டு அவற்றை யெல் லாந் தனதகத் தடக்கிச் சூழ்ந்து நிற்பது. பிரமன் விழிப் புனல் முதலிய எழுவகை யிடத் துத் தோன்றிய குதிரைகளுள் இவை சமுத்திரத்தி னிடத்துப் பிறந்தன வென்பான் "அலை கடற் பிறந்த கலினவாம் புரவி" என்றான். அங்ஙனந் தோன்றுவதை,

மிக்கசெழு மறைநாவிற் கமல நாதன் விழிப்புனலில் விண்ணோர்க ளெண்மர் தம்பான்
மைக்கடன்மே லமிர்தத்தி லங்கி மீதின் மல்குகருப் பையிலுாக வண்டந் தன்னிற்
றெக்கவெழு பேதமெனு மிவற்றிற்றோன்றுந் தொன்மையவா யீரிரண்டு துணைத்தாணெற்றி
யொக்கவெளுக் கும்பரிக ளுளவாய் வானி லொண்புனலிற் செல்லுநெறி யுளவு மாகி.

என்னுந் திருவாதவூரடிகள் புராணத் திருவிருத்தத்தானறிக. மதஞ் சிறவாமை யிற் கதஞ் சிறவாதன வாகலின் குதிரைச் சேனையைக் களிற்றின்பிற் கூறினன். இதனை "யானை குதிரை யென்ற - நோனா ருட்கு மூவகை நிலையும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தா னறிக. (ருசு)

கொடிமரம் விசைத்த கணையிலக் குறுமு னெல்லையிற் குரோசமுஞ் செல்லுங்
கடுநடைப் புரவி யாயிரம் பூண்ட கதிருமிழ் கிடுகுசூழ் கிடந்த

விடுசுடர்ப் பரிதி தழும்புற நிவந்த கூம்பின விண்ணிடைப் படர
வடுதிறல் வலவர் தூண்டுபொற் றடந்தே ராறரைக் கச்சமுன் னேக.

(இ-ள்.) கொடுமரம் விசைத்த கணை இலக்கு உறு முன் = வில்லி னின்றும் வேகமாக விடப்பட்ட பாணமானது குறிப்பொருளை யடையு முன்னரே, ஒல்லையில் குரோசம் முன் செல்லும் = விரைவில் ஒரு குரோச தூரத்தை முற்பட்டுத் தாண்டுகின்ற, கடுநடை ஆயிரம் புரவி பூண்ட = வேகமுற்ற நடை கொண்ட ஆயிரங் குதிரைகள் கட்டப்பட்டனவும், கதிர் உமிழ் கிடுகு சூழ் கிடந்த = ஒளியைக் காலுகின்ற மரச்சுற்றுகளாற் சூழப்பட்டனவும், சுடர் விடு பரிதி தழும்பு உற நிவந்த கூம்பின = கிரணங்களை வீசுஞ் சூரியனுந் தழும்பு படும்படி யுயர்ந்த கூவிரத்தை யுடையனவும் ஆகிய, அடு திறல் வலவர் விண் இடை படர தூண்டு=மிக்க வலிமை யுடைய சாரதிகளால் ஆகாயத்தி னிடத்துச் செல்லுமாறு செலுத்தப் படுகின்ற, ஆறு அரை கச்சம் பொன் தடம் தேர் = ஆறரை யிலக்கம் அளவுடைய அழகிய பெரிய இரதங்கள், முன் ஏக=முற்பட்டுச் செல்லவும்.

பாணவேகத்தினும் மிக்க வேகமுடைய குதிரைகள் என்றபடி. குரோசம் - கூப்பிடு தூரம். கடி என்னு முரிச்சொல் கடு எனத் திரிந்தது. குதிரை யானன்றித் தேர் தானே செல்லாமையால் இரதத்தைக் குதிரையின் பின் வைத்துக் கூறினன். (௩௭)

ஆயிரங் களத்தி னிந்திரற் புறங்கண் டணிவிலா விறநகை புரிந்தோர்
பாய்புலிப் போத்தின் பாழிவாய் கிழித்துப் பற்பறித் தணிந்தவெந் திறலோர்
மாயிரு ஞாலம் வலம்வரும் புகழோர் வாளினர் வேலினர் வில்லர்
காயெரி குளிரக் கனலுமிழ் கண்ணர் கச்சமெண் ணுயிரந் தொடர.

(இ-ள்.) ஆயிரம் களத்தின்=அநேக போர்க்களத்திலே, இந்திரன் புறம் கண்டு=(தம்மோ டெதிர்த்த) தேவேந்திரன் (ஆற்றுமல்) முதுகு காட்டி யோடியதைப் பார்த்து, அணி விலா இற நகை புரிந்தோர் = கோவையாயுள்ள (தமது) பக்க வெலும்புகள் முரியுமாறு சிரித்தவரும், பாய் போத்து புலியின் பாழி வாய் கிழித்து=தாவுகின்ற ஆண் வேங்கையின் பருத்த வாயைப் பிளவு படுத்தி, பல் பறித்து அணிந்த வெம் திறலோர்=(அதன்) பற்களைப் பிடுங்கித் தரித்த கொடிய வலிமையை யுடையவரும், மா இரு ஞாலம் வலம் வரு புகழோர் = சிறந்த பெரிய உலகத்தைச் சுற்றி வரத்தக்க கீர்த்தியை யுடையவரும், வாளினர்=வாளாயுதந் தாங்கியவரும், வேலினர்=வேலேந்தினவரும், வில்லர் = விற் பிடித்தவரும், காய் எரி குளிர கனல் உமிழ் கண்ணர் = சுடுகின்ற அக்கினியுங் குளிர்ந்தது என்று சொல்ல (அதனினுஞ் சூடுள்ள) அக்கினியைக் கக்குங் கண்களை யுடையவரு மாகிய சுத்த வீரர்கள், எண் ஆயிரம் கச்சம் தொடர = எண்ணுயிர விலக்க வளவினராகத் தொடர்ந்து வரவும். ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் பன்மைப் பொருளில் வந்தது. (௩௮)

ஆள்வழக் கறுத்துக் கூற்றினைச் சினவி யம்பலைத் தொழுகும்வாட் டடங்க
ணீளிருங் கூந்தற் கூத்திய ரல்குற் றட்டெடன வகன்றுநீண் டுயர்ந்த
கோளரிப் போத்தோ ராயிரம் பிணித்த குருமணிக் கொடிஞ்சியந் தடந்தேர்
வாளெயிற் றகல்வாய் மறலிகண் புதைப்ப மைந்தர்நால் வருங்கடி தியர்ந்தார்.

(இ-ள்.) மைந்தர் நால்வரும் = (இரணியனது) நான்கு புத்திரர்களும், ஆள் வழக்கு அறுத்து=காத்தாளும் வழக்கத்தை நீக்கி, கூற்றினை சினவி=யமனையுங் கோபித்து, அம்பு அலைத்து ஒழுகும் வாள் தடம் கண்=பாணங்களையும் வருத்திப் பிறழுகின்ற வாளாயுதம் போன்ற அகன்ற கண்களையும், நீள் இரு கூந்தல் கூத்தியர் அல்குல் தட்டு என=

நீண்ட பெரிய அளகத்தையு முடைய பரத்தையரது கடிதடத் தட்டைப் போல, அகன்று நீண்டு உயர்ந்த=விசாலமுற்று மேலுயர்ந்து சிறந்தவும், கோள் ஓர் ஆயிரம் போத்து அரி பிணித்த=வலிய ஆயிரம் ஆண் சிங்கங்கள் கட்டப்பட்டவுமாகிய, குரு மணி கொடிஞ்சி அம் தடம் தேர்=நிறம் பொருந்திய இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட கூவிரங்களைக் கொண்ட அழகிய பெரிய (நான்கு) இரதங்களில், வாள் எயிறு அகல் வாய் மறலி கண் புதைப்ப=வாள் போலும் பற்களை யுடைய யமனனவன் (பயந்து தனது) விழிகளை மூடிக் கொள்ள, கடிது இவர்ந்தார்=விரைந் தேறினர்.

மைந்தர் நால்வரும் கூத்தியர் அல்குல் தட்டினைப் போன்றுள்ள தடந் தேர்களில் மறலிகண் புதைப்ப இவர்ந்தார் எனக் கூட்டுக. ஆள் வழக்கு-வினைத்தொகை. (௩௯)

மழைமதக் களிறு வழங்கலி னிடந்த மண்ணினுன் மழகதிர் மருட்டு
மொழுகொளி மணிச்சூட் டுரகர்வீற் றிருக்கு முலகுகொன் மண்ணுல காய
தெழுதருஞ் சேனு பராகம்விண் படர்ந்தாங் கிமையவர் மேயபொன் னுலக
முழுதுமண் ணுலகமாகவேற்றடக்கைமொய்ம்பினர் வெகுண்டெழுந் தனரால்.

(இ-ள்.) மழை மதம் களிறு வழங்கலின் இடந்த மண்ணினுல் = மழைபோன்ற மதத்தைச் சொரிகின்ற யானைச் சேனைகள் நடத்தலிற் றகர்ந்தெழுந்த பூதூளியால், மழ கதிர் மருட்டும்=இளங் கிரணத்தை யுடைய சூரியனையும் மயக்கச் செய்யும், ஒளி ஒழுகு மணி சூட்டு உரகர் வீற்றிருக்கும் உலகு=ஒளிசிந்தும் இரத்தினச் சுடிகையைக் கொண்ட சர்ப்பர்கள் வாழும் நாக லோகமும், மண் உலகு ஆயது = நிலவுலகம்போ லாயிற்று, ஆங்கு எழு தரு சேனு பராகம் விண் படர்ந்து = அங்ஙனம் போர்க்கெழுந்த மற்றைய சேனைகளா லுண்டாய புழுதியானது ஆகாயத்திற் செறிந்து, இமையவர் மேய பொன் னுலகம் முழுதும்=தேவர்கள் வாழுஞ் சுவர்க்க லோக மெங்கணும், மண் உலகம் ஆக = நிலவுலகம் போலாக, வேல் தடம் கை மொய்ம்பினர் = வேலேந்திய நீண்ட கரங்களை யுடைய வீரர்கள், வெகுண்டு எழுந்தனர் = கோபித்துப் புறப்பட்டனர். ஆல் அசைநிலை. சேனுபராகம் வடநூன் முடிபு. (௪௦)

கூந்தன்மான்றடந்தேர் கடாம்பொழிகளிறு கொய்யுளைப் புரவிபண் ணுறுத்தி
யாய்ந்தநூல் வழியிற் றானையங் கடலைச் சக்கர வியூகமா வமைத்துப்
பாந்தண்மேற் கிடந்த புவிமுது குளுக்க வவுணர்கோன் பயந்தவேற் புதல்வர்
காய்ந்தெரி யுமிழும் படையுடை யமரர் கடற்படை வெருவுற நடந்தார்.

(இ-ள்.) அவுணர் கோன் பயந்த வேல் புதல்வர்= அசுரர்க்குத் தலைவனாய இரணியன் பெற்ற வேலாயுதத்தை யேந்திய புத்திரர்கள் நால்வரும், கூந்தல் மான் தடம் தேர்= கழுத்தடி மயிரினை யுடைய குதிரைகள் கட்டப்பட்ட பெரிய இரதங்களையும், கடாம் பொழி களிறு=மதத்தைப் பொழிகின்ற யானைகளையும், கொய் உளை புரவி பண் உறுத்தி= கத்திரிக்கப்பட்ட மயிரினை யுடைய குதிரைகளையும் அலங்கரித்து, அம் தானை கடலை = அழகிய சேனுசமுத்திரத்தை, ஆய்ந்த நூல் வழியில்=ஆராய்ந்த யுத்த சாத்திரமுறைமைப் படி, சக்கரம் வியூகம் ஆ அமைத்து=சக்கராயுதம்போலச் சுற்றி வளைந்த படை வகுப்பாகச் செய்து, பாந்தள் மேல் கிடந்த புவி முதுகு உளுக்க = ஆதிசேடனாகிய சர்ப்பத்தின் கட்டங்கிய பூமியின் முதுகு சுளுக்குறும்படி, காய்ந்து எரி உமிழும் படை உடை = சுவாலித்து அக்கினிப் பொறிகளைக் கக்கும் ஆயுதங்களைக் கையிலுடைய, அமரர் கடல் படை வெருவு உற நடந்தார் = தேவர்களது சமுத்திரம் என்னும் அளவு கொண்ட சேனைகள் பயமுறும்படி சென்றனர்.

கோன், மான் என்பவற்றின்கண் னகர மெய்கள் சாரியை. சமுத்திர அளவு அக்குரோணி வகையி லொன்றும், வெள்ள வகையி லொன்று மாக இருவகைப்படும். ஈண்டையது பின்னையது. அநாவது அக்குரோணி எட்டுப் பங்கு கொண்டது ஏகம்; அது எட்டுக்கொண்டது கோடி; அது எட்டுக்கொண்டது சங்கம்; அது எட்டுக் கொண்டது விந்தம்; அது எட்டுக்கொண்டது குமுதம்; அது எட்டுக்கொண்டது பதுமம்; அது எட்டுக் கொண்டது நாடு; அது எட்டுக் கொண்டது சமுத்திரமாம். (௬௧)

கூற்றென வுரறி யவுணர்கோன் சேனை வருதலுங் குருதிநீர் வெள்ள
மூற்றிருந் தொழுகு நேமியந் தடக்கை விண்ணவ னும்பர்சே னையைப்போர்
மாற்றரு மகர யூகமா வகுத்து வாய்மடித் தெயிறுதின் றமரி
னேற்றன னவுணர் வயிறெரி தவழ வீருளு மிதயமுங் கருக.

(இ ள்.) அவுணர் கோன் சேனை=இரணியனுடைய சேனைகள், கூற்று என உரறி வருதலும் = யமனைப் போலப் பெருங் கோப மூற்று வருதலும், குருதி நீர் வெள்ளம் ஊற்று இருந்து ஒழுகும்=இரத்த மானது சலப் பிரவாகம் போலச் சுரந்துநின் றொழுகாநிற்கும், நேமி அம் தடம் கை விண்ணவன்=சக்கராயுதத்தைத் தரித்த அழகிய நீண்ட கைகளை யுடைய திருமா லுருவமாய் நின்ற தேவன், உம்பர் சேனையை= (தனது) தேவசேனைகளை, போர் மாற்று அரு மகர யூகம் ஆ வகுத்து=யுத்தத்தில் உடைத்தற் கரிய மகர யூகமாக அணி செய்து, வாய் மடித்து = உதடுகளைக் கடித்து, எயிறு தின்று = பற்களைக் கறித்து, அவுணர் வயிறு எரி தவழ = அசுரர்களது வயிற்றின் கண் அக்கினி மூளவும், ஈருளும் இதயமும் கருக=ஈரலும் நெஞ்சும் தீயவும், அமரின் ஏற்றனன் = போர் செய்தற்கு எதிர்ப்பா னுயினுன். (௬௨)

நறவு கொப்புளிக்கும் பசுந்துழாய் முகுந்தன் றானவர் சேனையி னடவு
முறுவலிக் கலுழ னிமைசுடுங் கடைக்கண் ணுமிழ்புகை வடவையஞ் செந்தீ
யெறிபடை யவுணர் தானையங் கடலை யொருங்குவாய் மடுத்துநின் றெரிப்பச்
சிறைபுடைத் தெறியும் வல்விசை வளியிற் களிற்றினந் திசைதிசை கவிழ.

(இ·ள்.) நறவு கொப்புளிக்கும் பசு துழாய் முகுந்தன் = தேனைப் பிலிற்றுகின்ற பசிய துழாய் மாலையை யணிந்த (தேவவீரனுகிய) விஷ்ணுரூபன், தானவர் சேனையில் நடவும்=அசுரசேனைக்குட் செலுத்திய, உறு வலி கலுழன் = மிகுந்த வலிமையை யுடைய கருடனது, இமை சுடும் கடைக்கண் உமிழ் = இமைகளையுந் தீய்க்கின்ற கடைக்கண்ணினின்றும் பொழிந்த, புகை வடவை செம் தீ=புகையொடு தோன்றும் வடவா முகாக்கினியைப் போன்ற சிவந்த அனல், எறி படை அவுணர் தானை கடலை=வீசுகின்ற ஆயுதங்களைத் தரித்த அசுர சேனைகளாகிய சமுத்திரத்தை, ஒருங்கு வாய் மடுத்து நின்று எரிப்ப = ஒருசேரப் பற்றிநின் றெரிக்கவும், சிறை புடைத்து எறியும் வல் விசை வளியின் = சிறகுகளாலடித்து வீசிய வலிய வேகமாகிய காற்றினுலே, களிறு இனம் திசை திசை கவிழ= யானைக் கூட்டங்கள் திக்குகடோறும் விழுந்துருளவும்.

இதுமுத லிருசெய்யுட்கள் குளகம். முகுந்தனு லனுப்பப்பட்ட வீரன் அவன் போன்ற உருவு மூர்த்தியும் வலியும் படைத்து நின்றதனுல் முகுந்தன் என்றுன். வடவையம், தானையம்-என்பவற்று அம் இரண்டுஞ் சாரியைகள். கருடனது கடைக்க ணின்றுந் தோன்றும் அக்கினி யவுண சேனைகளை யெரிப்பவும், சிறகினு லுண்டாகுங் காற்றினுல் யானைகள் எடுபட்டுத் திக்குக டோறும் விழவும் என்க. (௬௩)

சீர்துதி வைரத் தோட்டியின் வாய்ந்த துண்டவெம் படையினுற் குத்தி
மாரிவீழ் கடாத்த தறுகண்மால் யானை மத்தகம் போழ்ந்துயிர் குடித்துத்

தார்வயப் புரவி யொன்றரைக் கச்சம் வள்ளுகிர்த் தாளினு லள்ளி
யீருளுங் குடரு மென்புநெக் கொழுக வொல்லையி னிருவிசும் பகலும்.

(இ-ள்.) கூர் நுதி வைரம் தோட்டியின் வாய்ந்த=கூரிய வாயையுடைய வைரித்த அங்குசத்தைப் போலுள்ள, துண்டம் வெம் படையினுல் குத்தி = அலகாகிய வெவ்விய ஆயுதத்தினுற் குத்தி, மாரி வீழ் கடாத்த தறுகண் மால் யானை = மழையைப்போல விழுகின்ற மதத்தை யுடையனவும் அஞ்சாமை பெருமை யென்னு மிவைகளை யுடையனவுமாகிய யானைகளினது, மத்தகம் போழ்ந்து உயிர் குடித்து = கும்பத்தைப் பிளந்து உயிரைப் பருகி, தார் வயம் ஒன்றரை கச்சம் புரவி=ஒழுங்காகிய வெற்றி மிகுத்த ஒன்றரையிலக்கங் குதிரைகளை,வள் உகிர் தாளினுல் அள்ளி=கூரிய நகங்களை யுடைய கால்களினுற் சேர்த்து வாரி, ஈருளும் குடரும் என்பும் நெக்கு ஒழுக = ஈரலும் குடலும் எலும்பும் நசிந்து சிந்த, ஒல்லையின் இரு விசும்பு அகலும் = விரைவாகப் பெரிய ஆகாயத்தின்மேற் செல்லும்.

கருடன் குத்தி, குடித்து, அள்ளி, அகலுமெனக் கூட்டுக. குடர் போலி. (௪௪)

மாலையுங் குடரும் பிணங்குவெள் ளிலைவே லவுணர்தம் படைக்கடன் மறியக்
காலவெஞ் சிலையிற் குடுமிநாண் கொளுவிக் கல்செய்திண் டோளுற வாங்கி
யாலமும் வடவை யழலும்வா யுமிழுங் கொடுங்கணை யளப்பில சொரிந்தான்
ஞாலமோ ரேழு மளந்தவன் விடுத்த நாகிளம் பரிதிவா ளுழவன்.

(இ-ள்.) ஓர் ஏழு ஞாலமும் அளந்தவன் விடுத்த=சத்த லோகங்களையும் அளந்து கொண்ட திருமாலினுல் அனுப்பப்பட்ட,நாகு இளம் பரிதி வேல் உழவன்=மிக்க இளமையாகிய சூரியனைப் போன்ற சக்கிராயுதத்தை யேந்திய போரில் வல்ல விஷ்ணு ரூபன், மாலையும் குடரும் பிணங்கு=வெற்றி மாலையும் (பகைவரது) குடல்களும் பின்னலுற்ற, வெள் இலை வேல் அவுணர் தம் படை கடல் மறிய = வெள்ளிய இலைத்தொழின் முற்றிய வேலாயுதத்தை யேந்திய அசுர சேனைகளாகிய சமுத்திரம் உடைபட,காலன் வெம் சிலை= யமனைப் போன்ற (தனது) வில்லை, கல் செய் திண் தோள் உற வாங்கி=மலையை யொத்த வலிய புயத்திற் பொருந்த வளைத்து, குடுமி நாண் கொளுவி = நுனியின்கண் நாணைப் பூட்டி, வாய்=வாயினின்றும் ஆலமும் வடவை அழலும் உமிழும்=விடத்தையும் வடவாமுகாக்கினியையுங் கொப்புளிக்கின்ற, அளப்பு இல கொடு கணை சொரிந்தான் = எண்ணிறந்த கொடிய பாணங்களைப் பிரயோகித்தனன். (௪௫)

இரணியன் சேனைத் தலைவர்பைந் துளவோ னெறுழ்வலி நோக்கினர் வெகுளா, வரணியி னெழுந்த தீப்பொறி யென்னக் கட்கடை யழற்பொறி சிதற, முரணுடைக் களிறு கலினமான் றடந்தேர் கூந்தன்மா மொய்ம்புறச் செலுத்திக், குருதிதோய் வெய்ய பகழியோ ரொருவர் கோடியின் மேற்பொழிந் தார்த்தார்.

(இ-ள்.) இரணியன் சேனைத் தலைவர் = இரணியாசுரனது சேனைத் தலைவர்கள், பைதுளவோன் எறுழ் வலி நோக்கினர் வெகுளா = பசிய துழாய் மாலையை யணிந்த விஷ்ணு ரூபனுடைய மிக்க வலிமையைப் பார்த்துக் கோபித்து, அரணியின் எழுந்த தீ பொறி என்ன=தீக்கடை கோலி னின்றுந் தோன்றிய அக்கினிப் பொறிகளைப் போல, கண் கடை அழல் பொறி சிதற = கடைக் கண்ணினின்றும் தீப்பொறிகள் சிந்தா நிற்ப, முரண் உடை களிறு=வலிமையை யுடைய யானைகளையும், கலினம் மான் தடம் தேர்= கடிவாளம் பூண்ட குதிரைகள் கட்டப்பட்ட நீண்ட இரதங்களையும், கூந்தல் மா=பிடர்

மயிரினை யுடைய குதிரைகளையும், மொய்ம்பு உற செலுத்தி=வெற்றி யுண்டாகக் கடாவி, ஓர் ஒருவர்=ஒவ்வொரு வீரர்களும், குருதி தோய் வெய்ய பகழி = இரத்தந் தோய்ந்த கொடிய பாணங்கள், கோடியின் மேல் பொழிந்து ஆர்த்தார்=கோடி எண்ணிற்கு அதிகமாகச் சொரிந்து ஆரவாரித்தனர் நோக்கினர் - முற்றெச்சம். (௪௬)

நிழலொடு கறுவி யெண்டிசைக் களிற்றி னீண்மதச் சுவடுதேர்ந் தோடி
யிழுமெனப் பாயுங் கவிழ்தலை யருவி வரையினை வேழமென் றேற்று
முழைபுகு சீய மிரிதரப் பாய்ந்து முழங்குவெங் கடாமலை தூண்டி
யழலுமிழ் திகிரி கலுழன்மே லத்தம் படுகதி ரெனவெறிந் தார்த்தார்.

(இ-ள்.) நிழல் ஒடு கறுவி=தன்னிழலோடு கோபித்து, எண் திசை களிற்றின்= அட்ட திக்கு யானைகளின்மேற் பாயும்படி, நீள் மதம் சுவடு தேர்ந்து ஓடி=நீண்ட மதசலமொழுகிய அடையாளத்தை யறிந்து (அதன்வழி) ஓடிச்சென்று, இழும் என கவிழ் பாயும் தலை அருவி வரையினை = இழுமென்னு மொலிக் குறிப்புடன் கீழ் வீழ்ந்து பாய்ந்தோடும் அருவிகளை யுடைய மலைகளை (எதிரே கண்டு), வேழம் என்று ஏற்று = அவ் யானைகள் என்று அவற்றுட னெதிர்த்து, முழை புகு சீயம் இரிதர பாய்ந்து=குகையினுள்ளே புகுந்திருக்கின்ற சிங்கம் பயந்தோடு மாறு தாவி, முழங்கு வெம் கடாம் மலை தூண்டி=முழங்குகின்ற வெவ்விய மதமலை யாகிய யானைகளைச் செலுத்தி, கலுழன் மேல் = கருடன் மீது, அத்தம் படு கதிர் என = மறைதலைக் கொண்ட சூரியனைப் போலச் சிவந்துள்ள, அழல் உமிழ் திகிரி எறிந்து ஆர்த்தார்=அக்கினியைக் காலுகின்ற சக்கராயுதத்தை வீசி யாரவாரித்தார்கள்.

கறுவி, ஓடி, ஏற்று, பாய்ந்து முழங்கும் யானை யென்க. அட்டதிக்கு யானைகளிற் பாயும்படி மதச் சுவடுவழியே யோடும்போது அருவி யொழுகும் மலைக ளெதிர்ப்பட, அவற்றை யவ் யானைகளென்று எதிர்த்து,அவற்று ளிருக்குஞ் சிங்கங்களும் பயமுற்றோடப் பாய்ந்து முழங்குகின்ற யானைகளை யசுரர்கள் செலுத்திக் கருடன்முன் வந்து சக்கரங்களை யெறிந்தார் என்பதாம். கவிழ்-என்பது வரிப்புனை பந்து என்றாற் போல வந்தது.

அட்டதிக்கு யானைகளாவன:—கிழக்கில் ஐராவதம், தென்கிழக்கில் புண்டரீகம், தெற்கில் வாமனம், தென் மேற்கில் குமுதம், மேற்கில் அஞ்சனம், வடமேற்கில் புட்பதந்தம், வடக்கில் சாருவபூமம், வடகிழக்கில் சுப்பிரதீபம் எனக் கொள்க. (௪௭)

கண்ணழற் சிற்றத் தவுணரோர் மூவ ருலகின துயிர்கவர்ந் துண்ண
விண்ணிடைப் பறந்து திரியுமுப் புரத்தின் விரைசெலற் கலினமான் றடந்தே
ரெண்ணில தூண்டி நூற்றுவர்க் கொல்லி யெழுமரங் கப்பண முசுண்டி
யண்ணலம் புள்ளேற் றரசின்மேற் றூவியகல்வரைத்தோள்புடைத்தழன்றார்.

(இ-ள்.) கண் அழல் சிற்றத்து ஓர் மூவர் அவுணரும்=விழிகளினின்றும் அக்கினிப் பொறி சிந்தக் கோபித்தலை யுடைய மூன்றசுரர்களும்,உலகினது உயிர் கவர்ந்து உண்ண= உலகத்தின்க ணுள்ள வுயிர்களை யெல்லாம் வாரிக் குடிக்க, விண் இடை பறந்து திரியும் முப்புரத்தின்=ஆகாயத்தி னிடத்துப் பறந்து சஞ்சரிக்குந் திரிபுரங்களைப் போல, விரை செலல் கலினம் மான் தடம் தேர்=விரைந்து போதலை யுடைய கடிவாளம் பூண்ட குதிரைகள் கட்டப்பட்ட நீண்ட இரதங்களை, எண் இல தூண்டி = அளவில்லாதன வாகச் செலுத்தி,நூற்றுவர் கொல்லி எழும் மரம் கப்பணம் முசுண்டி=நூறுவீரர்களைக் கொலை செய்து திரும்பும் வளைதடி கைவேல் சிறுவாள் என்னு மாயுதங்களை, அண்ணல் ஏறு புள் அரசின் மேல் தூவி=பெருமையிற் சிறந்த ஆண்டன்மையை யுடைய பறவை வேந்தாகிய

கருடன்மீது பிரயோகித்து, அகல் வரை தோள் புடைத்து அழன்றுர் = அகன்ற மலை போன்ற புயங்களிற் கொட்டி (போர்க்கு) மூண்டெழுந்தனர்.

அவுணரோர் மூவராவார்—தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி யென்பவ ராம். இவர்கள் முறையே பொன்மதில், வெள்ளிமதில், இருப்புமதில் என்பவற்றில் வசித்தவர். இதன் விரிவெல்லாம் பின்வருக் திரிபுர தகனமுரைத்த அத்தியாயத்திற் காண்க. கிருச்சமத முனிவரின் கோபாக்கினியிற் ருேன்றிய பலியென்பவன் விநாயகப் பெருமா னருளினாலே சுகிலம், சுபிலம், சுவிர்த்தி யென்னும் பொன், வெள்ளி, இரும்பு என்பவற் ருலாய கோட்டைகளைப் பெற்று னென்றும், அவற்றுள், சுகிலத்தை வச்சிர தமிட்டிர னென்னுங் குமாரனுக்கும், சுபிலத்தை வீமகாயன் என்னும் புத்திரனுக்கும், சுவிர்த்தியைக் காளகூடன் என்னுங் குமாரனுக்குங் கொடுத்துத் திரிலோகங்களிலும் முறையே வசிக்க வைத்தா னென்றும், அவர்கள் அம்மதில்க ளோடும் எழுந்து திரிந்து பகைவரை யழித்து வந்தனர் என்றும் பார்க்கவ புராணத்தி லோர் சரிதமும் பகரப் பட்டுள்ளது. (௪௮)

தாழ்கடற் கிடங்குந் திடர்படத் தாக்கித் தரைபிதிர்த் தெறிகவி குளம்பிற்
காழ்படு கலின மென்றுமிழ் விலாழிக் கடுவிசைக் கூந்தன்மா னடவிப்
பாழியந் தடந்தோள் வெஞ்சின வவுணர் கலுழன்மே லமர்க்கெதிர் படர்ந்த
சூழ்கதிர் மணிச்செஞ் சூட்டரா வென்னத் தீமுகப் பகழிதூ யினரால்.

(இ-ள்.) பாழி அம் தடம் தோள் வெம் சினம் அவுணர் = பருத்த அழகிய நீண்ட புயங்களையுங் கொடிய கோபத்தையு முடைய அசுர வீரர்கள், தாழ் கடல் கிடங்கும் திடர்பட தாக்கி = ஆழ்ந்த சமுத்திர மாகிய பள்ளமும் மேடாகும்படி மோதி, தரை பிதிர்த்து=பூமியைப் பிளந்து, எறி கவி குளம்பின் = எறிகின்ற சூழ்ந்துள்ள குளம்பினை யும், காழ் படு கலினம் மென்று உமிழ் விலாழி=வைரங் கொண்ட கடிவாளத்தைக் குதட் டிக் கக்குகின்ற வாய் நீரையும், கடு விசை = மிகுந்த வேகத்தையும், கூந்தல் மா நடவி= பிடர் மயிரினையு முடைய குதிரைகளைச் செலுத்தி, கலுழன் மேல் எதிர் அமர்க்கு படர்ந்த= கருடப் பறவையின் மீது கோபங் கொண் டெதிர்த்து யுத்தஞ் செய்தற்குப் புறப்பட்ட, கதிர் சூழ் மணி செம் சூட்டு அரா என்ன=ஒளி குவிந்த இரத்தின முண்மையாற் சிவந்த உச்சித் தலையை யுடைய சர்ப்பத்தைப் போல (எதிர்த்து நின்று) தீ முகம் பகழி தூயி னர்=அக்கினி காலும் வாயினை யுடைய அம்புகளைப் பொழிந்தனர்.

ஆல் அசை. கருடனோடு எதிர்த்து யுத்தஞ் செய்யப் புறப்பட்ட சர்ப்பமாவது காளி யன் என்னுஞ் சர்ப்பம். கருடன் றன்னினங்களை யெல்லாம் வதைத்தலை யறிந்து சினமுற் றுப் பொருதது. அதன் விரிவை முன்னுரைத்தாம். அங்ஙன மின்றி யியற்கையாய்ப் பகை கொண்ட கருடனோ டெதிர்க்கும் பாம்புபோ லென்னலு மொன்று. (௪௯)

கடங்கவி ழயிரா வதத்தினாற் கோடுங் கவந்தமாட் டயர்தரு களத்திற்
பிடுங்கிநின் றூடுந் திறலினர் பகைவர்ப் பெருமையாற் றினவுறு தடந்தோண்
மடங்கலே றனைய சீற்றவெந் துப்பின் வடவைகொப் புளித்திடு கண்ணர்
கொடுஞ்சிலை வீர ருருமிடித் தென்னக் குரவையிட் டடுகணை பொழிந்தார்.

(இ-ள்.) கவந்தம் ஆட்டு அயர்தரு களத்தில்=உடற் குறைகள் கூத்தாடலைச் செய் கின்ற போர்க்களத்தில், கடம் கவிழ் அயிராவதத்தின் நால் கோடும் பிடுங்கி நின்று=மதம் பொழியும் ஐராவத யானையினது நான்கு கொம்பர்களையும் பறித்து நின்று, ஆடும் திற

வினர்=விளைபாடும் வலிமையை யுடையவர்களும், பகைவர் பெருமையால் தினவு உறு தடம்தோள்=(போர் செய்தற்குப்) பகை யரசர் கிடைக் காமையால் பசபசப்புக் கொள்ளும் பெரிய புயங்களையும், ஏறு மடங்கல் அனைய சீற்றம் வெம் துப்பின்=ஆண் சிங்கத்தை நிகர்த்த கோபத்தையும் வலிமையையும், வடவை கொப்புளித்திடு கண்ணர்=வடவாமுகாக் கினியைக் காலுகின்ற விழிகளை யுடைய வரும் ஆகிய, கொடு சிலை வீரர்=வளைந்த விற் றொழிலில் வல்ல அசுரவீரர்கள், உரும் இடித்து என்ன=இடி யிடித்தாற்போல, குரவை இட்டு அடு கணை பொழிந்தார்=கூக்குரலிட்டுக் கொல்லும் பாணங்களைச் சொரிந்தார்கள்.

ஈண்டுக் குரவை யென்றது வீரத்தானும் வெகுளியானும் அறை கூவுதற்கட் செய்யும் ஒருவகைச் சத்தம். "குரவை யென்பது கூறுங் காலைச்-செய்தோர் செய்த காமமும் விறலு-மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப." என்றபடி வருங் கூத்தன்று. (௫௦)

வாளம ரழுவத் தவுணர்கோன் சேனை மனத்திறும் பூதுற வுடற்றுந்
தோள்வலி நோக்கிப் பசுந்துழா யலங்க றுயல்வரு முழவுறழ் தோளா
னீளிருந் தடக்கை வரிவினாண் புடைப்ப வெழுந்தநீ டொலியினி னண்ட
கோளகை வெடித்த திடியுறு மரவிற் றானவ ராருயிர் குறைந்தார்.

(இ-ள்.) அவுணர் கோன் சேனை = இரணியனது சேனைகள், வாள் அமர் அழுவத்து=வாட்போர் செய்யும் யுத்த களத்தில், மனத்து இறும்பூது உற உடற்றும் தோள் வலி=மனத்தின்கண் (கண்டார்க்கு) அதிசய முண்டாகுமாறு செய்யும் புயபராக்கிரமங்களை, பசு துழாய் அலங்கல் துயல் வரும் = பசிய துழாய்மாலை யசைதற் கிடமாயுள்ள, முழவு உறழ் தோளான்=மத்தளம் போன்ற புயங்களை யுடைய விஷ்ணு ரூபன், நோக்கி= பார்த்து, நீள் இரு தடம் கை வரி வில் நாண் புடைப்ப=நீண்ட மிகப் பெரிய கரத்திற் றாங்கிய வரியப்பட்ட வில்லினது நாணை யொலி செய்ய, எழுந்த நீடு ஒலியின் = தோன்றிய பேரொலியினால், அண்டம் கோளகை வெடித்தது = அண்டச் சுவரும் பிளவு பட்டது, தானவர் = அசுரர்களும், இடி உறும் அரவின் = இடிகேட்ட சர்ப்பத்தைப் போல, அரு உயிர் குறைந்தார்=அரிய பிராணன் உண்டோ வில்லையோ வென்னும்படி யொடுக்க முற்றனர். இன்-சாரியை. (௫௧)

புற்றுறை யரவி னுவமுற் றுறைந்து வெஞ்சமம் பெறுதுடல் புழுங்கும்
கொற்றவெம் பகழி விடுத்தலு மதமாக் கொய்யுளைக் கலினவாம் புரவி
விற்றிற லவுணர் புள்ளியன் மான்றேர் வெள்ளமோ ராயிரங் களத்தி
னற்றநுண் பொடியிற் சிதர்த்தன வலகை யாவலங் கொட்டியாட் டயர.

(இ-ள்.) புற்று உறை அரவின்=புற்றின் கணிருக்குஞ் சர்ப்பங்களைப் போல, வெம் சமம் பெறுது=கொடிய யுத்தங்கள் நேரிடாமல், ஆவம் உற்று உறைந்து=அம்புக் கூட்டினிலைத்திருந்து, உடல் புழுங்கும் கொற்றம் வெம் பகழி விடுத்தலும் = உடம்பு வருந்தப் பெற்ற வெற்றிகொண்ட வெவ்விய அம்புகளைப் பிரயோகித்தலும், அலகை ஆவலம் கொட்டி ஆட்டு அயர = பேய்கள் ஆவலங் கொட்டிக் கூத்தாட, மதம் மா = மதத்திற் சிறந்த யானைகளும், கொய் உளை கலினம் வாம் புரவி=கத்திரிக்கப்பட்ட மயிரினையுங் கடிவாளத்தையு முடைய தாவிப் பாயுங் குதிரைகளும், வில் திறல் அவுணர் = விற்போரில் வல்ல அசுரர்களும், புள் இயல் மான் தேர்=பறவைபோலப் பறக்கின்ற குதிரைகள் கட்டப்பட்ட இரதங்களுஞ் (சேர்ந்து) ஓர் ஆயிரம் வெள்ளம் = ஆயிர வெள்ளஞ் சேனைகள், களத்தின்=போர்க்களத்தில், அற்ற நுண் பொடியின் சிதர்த்தன = நிலையில்லாத நுண்ணிய புழுதிபோலக் கலக்கி யோட்டின.

மான்-ன்சாரியை. ஒரு வெள்ளத்தின் அளவாவது-பதின்மூன்று கோடியே நாற்பத்திரண் டிலக்கத்துப் பதினேழாயிரத்து எழுநூற் றிருபத்தெட்டு அக்குரோணி சேனை கொண்டது. ஒரு அக்குரோணி யாவது ஐயாயிரத்து எழுநூற் றைம்பத்தொரு யானையும், அவ்வளவு தேரும், பதினேழாயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று குதிரையும், இரண்டிலக்கத்துப் பதினுலாயிரத்து நூற்றெண்பத் தைந்து காலாளும் கொண்டது. ()

தம்முடைக் கடலந் தானைவெங் கொடுத்தல் காண்டலுங்,தழல்விழி யிறைப்பத்
தெம்முனை கடந்து பொருநரைப் பெறாது தினவுகண் படுக்குநீள் புயத்த
ரம்மவோ நமது வலியழ குடைத்தென் றண்டமும் வெடிபட நகைத்து
வம்மெனவறைகூய்ப் பசுந் துழாய்முகிலை மைந்தர்நால் வருஞ்சமர் மலைந்தார்.

(இ-ள்.) தெவ் முனை கடந்து=பகைத்துறைகளை யெல்லாங் கடந்து, பொருநரை பெறாது=போர் செய்வாரைக் கிடைக்கப் பெறாமல், தினவு கண்படுக்கும் நீள் புயத்தர்= வீரச்சொறி தங்கப் பெற்ற நீண்ட தோள்களை யுடையராய, மைந்தர் நால்வரும் = (இரணியனது) நான்கு புத்திரர்களும், தம் உடை தானை கடல் = தங்களது சேனு வெள்ளங்கள், வெங் கொடுத்தல் காண்டலும்=முதுகுகாட்டி யோடுவதைப் பார்த்தலும்,விழி தழல் இறைப்ப=கண்களி னின்றும் அக்கினிப் பொறி கக்க, அம்மவோ = ஐயகோ,நமது வலி அழகு உடைத்து என்று=நங்களுடைய வீரம் அழகாயிருந்தது என்று, அண்டமும் வெடிபட நகைத்து = அண்டங்களும் பிளவுறும்படி சிரித்து, வம் என அறை கூய் = (நமது வீரர்களே) வாருங்கள் என்று போர்செய்ப வழைத்து, பசு துழாய் முகிலை=பசிய துழாய் மாலையை யணிந்த மேகநிறத் திருமால் வடிவுடைய வீரனோடு, சமர் மலைந்தார் = (அரிய) யுத்தத்தைச் செய்தனர்.

அம்மவோ என்னு மிடைச்சொல் அதிசயக் குறிப்புணர்த்திற்று. பசுந் துழாய் முகிலை அறை கூவி மலைந்தார் என்பதுமாம். முகிலை உருபு மயக்கம். (௩௫)

குருதி வாயலகை வெய்ய சூர்மக டுணங்கை யிட்டெதிர் குனிப்பநீள்
விரித லைப்புவன முழுது மஞ்சுவர விண்ணு ளோர்விழி புதைப்பவெம்
பரிதி யாயிர மெழுந்த தென்னவொளி படர நான்முகன் வடிக்கணை
பிரக லாதன்வரி விற்கு னித்தவுணர் பெட்பு றும்படி விடுத்தனன்.

(இ-ள்.) பிரகலாதன் = பிரகலாதன் என்பான், குருதி வாய் அலகை = இரத்த மருந்த வாயையுடைய பசாசுகளும், வெய்ய சூர்மகள் = கொடிய இடாகினியும், எதிர் துணங்கை இட்டு குனிப்ப=எதிர்த்துத் துணங்கைக் கூத்தை யாடவும், நீள் விரி தலை புவனம் முழுதும் அஞ்சுவர=நீண்டு பரந்த இடத்தை யுடைய நிலவுலகி லுள்ளார் யாரும் பயமுறவும், விண் உளோர் விழி புதைப்ப = மேலுலகிலுள்ள தேவர்கள் கண்களை மூடவும், வெம் ஆயிரம் பரிதி எழுந்தது என்ன ஒளி படர=வெவ்விய ஆயிரஞ் சூரியர் ஒருங்குதித்தாற் போலப் பிரகாசம் (எவ்விடத்தும்) பரவவும், வரி வில் குனித்து=வரியப்பட்ட வில்லை வளைத்து, வடி நான்முகன் கணை=கூர்மையாகிய பிரமபாணத்தை,அவுணர் பெட்பு உறும்படி விடுத்தனன்=அசுரர்கள் உவகை கொள்ளுமாறு செலுத்தினன்.

சூர் மகள்=அச்சத்தை விளைக்கும் பெண்டு. துணங்கைக் கூத்தென்பது இருகரங்களையு மாதி முடக்கி விலாப் பக்கங்களில் அடித்துக் குனிந்தாடுங்கூத்து. என்னை? "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் - துடக்கிய நடையது துணங்கை யாகும்" என்றார் திவாகரனுரா நலின். இதனைச் சிங்கி யென்பாரு முளர். இதனுல் இரணியனது குமாரருள் மூத்தோனுப பிரகலாதன் பாணப் பிரயோகஞ் செய்தமை கூறப்பட்டது. (௩௬)

கனைகருங்கடல் குடிப்ப ,தண்டருயிர் கவர்வ தேழ்கிரியின் முதுகுற
முனைப டும்பொழுதி னுருவி யோடுவது முடைக மழ்ந்துதிர முமிழுமோர்
புனைது ழாய்முகி லளித்த வெங்கணை யெடுத்து வாள்விழி புகைந்திட
வனுகி லாதனுயர் கொற்ற வெஞ்சிலை குனித்த ழன்றெதிர் விடுத்தனன்.

(இ-ள்.) அனுகிலாதன்=அநுகிலாத னென்பான், வாள் விழி புகைந்திட= வாளாயுதம் போன்ற கண்கள் புகையைக் கக்க, அழன்று = கோபித்து, உயர் கொற்றம் வெம் சிலை குனித்து=உயர்வாய வெற்றி யளிக்கும் வெவ்விய வில்லை வளைத்து, கனை கரு கடல் குடிப்பது=ஒலிக்கின்ற பெரிய சமுத்திர நீரையும் பருகுவதும், அண்டர் உயிர் கவர்வது= தேவர்களுயிரையுங் கிரகிப்பதும், ஏழ் கிரியின் முதுகு உற=சத்த பருவதங்களின் முதுகி லுற்று, முனை படும் பொழுதின் உருவி ஓடுவது = நுதி பட்ட மாத்திரையே உருவி யப்பாற் செல்வதும் ஆகிய, முடை கமழ்ந்து உதிரம் உமிழும் = புலானாற்றத்தைப் பரப்பி யிரத்தத்தைக் கொப்புளிக்கும், ஓர் துழாய் புனை முகில் அளித்த=ஒப்பற்ற துழாய் மாலையை யணிந்த திருமால் (முன்னர்க்) கொடுத்த, வெம் கணை எடுத்து=கொடிய வோ ரத்திரத்தை யெடுத்துச் சந்தித்து, எதிர் விடுத்தனன்=எதிர் செல்ல விட்டான்.

இதனால் இரண்டாங் குமாரனாய அநுகிலாதன் பாணப் பிரயோகஞ் செய்தமை பகரப்பட்டது. உற-எச்சத்திரிபு. வாள்விழி-ஒளி யுடைய விழியுமாம். (௫௫)

மங்கு றாழ்குடுமி வரைநி கர்த்ததொரு மணிகொ டேர்கடவி யெதிர்செலாச்
சிங்க வேறென வுருத்து வாளெயிறு தின்று தீயுக விழித்துநீ
ளங்கண் மாநில நடுங்க வெஞ்சிலை குழைத்து நின்றசனி யேறெனச்
சங்கி லாதனடன் முருகன் வெங்கணை விடுத்து நின்றெதிர் தழங்கினான்.

(இ-ள்.) சங்கிலாதன்=சங்கிலாத னென்பான், மங்குல் தாழ் குடுமி வரை நிகர்த்தது=மேகங்கள் படிகின்ற சிகரத்தை யுடைய மலையை யொத்த தாகிய, மணி கொள் ஒரு தேர் கடவி=மணிகள் கட்டப்பட்ட ஒரு இரதத்தைச் செலுத்தி, எதிர் செலா=முன்னர்ச் சென்று, ஏறு சிங்கம் என உருத்து=ஆண் சிங்கத்தைப் போலக் கோபித்து, வாள் எயிறு தின்று=வாளாயுதம்போன்ற தந்தங்களைக் கடித்து, தீ உக விழித்து=அக்கினிப் பொறி சிந்தும்படி பார்த்து, நீள் அம் கண் மா நிலம் நடுங்க=நீண்ட இட மகன்ற சிறந்த பூமியின்கணுள்ளார் நடுங்குமாறு, வெம் சிலை குழைத்து நின்று=கொடிய வில்லை வளைத்து, அசனி ஏறு என=இடியேற்றைப் போல, அடல் முருகன் வெம் கணை தொடுத்து = வலிமையிற் சிறந்த குமாரக் கடவுளது வெப்ப முள்ள அத்திரங்களைத் தூண்டி, எதிர் நின்று தழங்கினான்=எதிரில் நின்று முழங்கினான்.

இதனால் மூன்றாம் புத்திரனாய சங்கிலாதன் பாணப் பிரயோகஞ் செய்தமை கூறப்பட்டது. நிலம்-இடவாகு பெயர். சிலை=ஒலி செய்வது. (௫௬)

அலாயு தங்கொடுமுன் மேருமால் வரையை யைந்து விற்கிடை யிழுத்திடுங்
கிலாதன் வானவரு மஞ்சு றாமலமர் கிட்டினார் கொலென முனிவொடும்
விலாவி றும்படி நகைத்து வெற்பனைய விற்கு னித்துநிண மூழ்கிவெம்
புலால்க மழ்ந்தெரியு மங்கி வெங்கணை விடுத்து நின்றெதிர் புழுங்கினான்.

(இ-ள்.) முன்=முற்காலத்தில், அல ஆயுதம் கொடு=கலப்பைப் படையினால்,மால் மேரு வரையை=பெரிய மேரு மலையை, ஐந்து விற்கிடை இழுத்திடும் = ஐந்து விற்கிடை தூரம் வரைக்கும் இழுத்து விட்ட, கிலாதன்=கிலாத னென்பான், வானவரும் அஞ்சுறு

மல் அமர் கிட்டினர் என = தேவர்களும் பயப்படாமல் (எம்மோடு) போர் செய்தற்கு நெருங்கினர்களே யென்று, முனிவு ஓடும் விலா இறும்படி நகைத்து=கோபத்துடன் (வயிற்றின்) புறவெலும்புகள் ஒடியுமாறு சிரித்து, வெற்பு அனைய வில் குனித்து=மலையை யொத்த வில்லை வளைத்து, நிணம் மூழ்கி வெம் புலால் கமழ்ந்து எரியும்= தசையிற் றோய்ந்து வெவ்வியபுலால் நாற்றம் நாறி யெரிகின்ற, வெம் அங்கி கணை விடுத்து=வெப்ப முடைய அக்கினியம்பைச் செலுத்தி, எதிர் நின்று புழுங்கினன்=எதிரில் நின்று கொதித்தான்.

இதனால் கனிட்ட குமாரனாய கிலாதன் அத்திர முய்த்தமை யறையப் பட்டது. ஒரு விற்கிடை தூரமாவது நான்கு முழங் கொண்டது. இது "அங்குல மறுநான் கெய்தி னதுகரங் கரமோர் நான்கு-தங்குத றனுவென் றாகும்." என வருங் கந்தபுராணத் திருவிருத்தத்தாற் பெறப்படும். கொல்-அசைநிலை. (௫௭)

அவுணர் கோனுதவு புதல்வர் நால்வரு மழன்று விட்டகணை யாவையு
முவண வூர்தியை வலஞ்செய் தேகமிக வுள்ள மாழ்கியயர் வெய்தலும்
புவன கோடிகளு முந்தி தந்தமுகி றந்த பூவைநிற வண்ணனுங்
கவன வெம்பரிகொ டேர்க ணான்குமொரு கையி னள்ளியெதிர் விசினன்.

(இ-ள்.) அவுணர் கோன் உதவு புதல்வர் நால்வரும்=இரணியன் பெற்ற புத்திரர்கள் நால்வரும், அழன்று விட்ட கணை யாவையும்=கோபித்துச் செலுத்திய அம்புக ளெல்லாம், உவணம் ஊர்தியை வலம் செய்து ஏக=கருட வாகனனாகிய திருமால் வடிவுடைய வீரனைப் பிரதக்கிணஞ் செய்து போக, உள்ளம் மிக மாழ்கி=மன மிகவும் வருத்த முற்று, அயர்வு எய்தலும் = சோக முறுதலும், புவனம் கோடிகளும் உந்தி தந்த முகில் தந்த= எல்லா வுலகங்களையும் நாபிக் கமலத்தி னின்றுந் தோற்றுவித்த சேதனாற் சிருட்டிக்கப் பட்ட, பூவை நிறம் வண்ணனும் = காயா மலரை யொத்த நிறத்தினை யுடைய தேவ வீரனும், கவனம் வெம் பரி கொள் = வேகத்தை யுடைய வெவ்விய குதிரைகள் கட்டப்பட்டுள்ள, நான்கு தேர்களும் ஒரு கையின் அள்ளி=நான்கு இரதங்களையுந் தனது ஒரு கரத்தினால் வாரி, எதிர் வீசினன்=எதிர்த்து எறிந்தனன்.

இரணிய குமாரர் விடுத்த பாணங்க ளெல்லாம் தேவவீரனை வலம் வந்தேக, அவன் பிரகலாதன் முதலிய நால்வரது தேர்களையு மெடுத் தெறிந்தனன் என்பதாம். புவனங்களைப் படைத்த பிரமனைச் சிருட்டித்த முகிலாகலால் திருமாலினை, "புவன கோடிகளு முந்தி தந்த முகில்" என்றான். (௫௮)

ஓர்கு டங்கையினி லிரணியன் புதல்வர் நால்வர் தம்மையு மொருங்கெடுத்
தார வீசிடுதல் கண்டு வானவர்க ளலர்சொ ரிந்தடி பராவினர்
போர்பு ரிந்திடுத லஞ்சி நீளிடை புறங்கொ டுத்திரியு மவுணர்போ
யாரு மஞ்சுவர வமரு டற்றுமசு ரேச னுக்கிவை யியம்பினர்.

(இ-ள்.) இரணியன் புதல்வர் நால்வர் தம்மையும்=இரணியனது குமாரர்கள் நால்வரையும், ஓர் குடங்கையினில் ஒருங்கு எடுத்து=ஒரு உள்ளங்கையினால் ஒருசேரப் பற்றி, ஆர வீசிடுதல் = (பூமியிற்) பொருந்த எறிந்ததனை, வானவர்கள் கண்டு = தேவர்கள் அறிந்து, அலர் சொரிந்து அடி பராவினர் = புட்பங்களைப் பொழிந்து (விஷ்ணுரூபனது) பாதங்களைத் துதித்தனர், போர் புரிந்திடுதல் அஞ்சி = யுத்தஞ் செய்தற்குப் பயந்து, நீள் இடை புறம் கொடுத்து இரியும் அவுணர் போய் = நெடுந்தூரத்திற்கு முதுகு காட்டி யோடிய அசுரர்கள் சென்று, யாரும் அஞ்சுவர=எவரும் அஞ்சும்படி, அமர் உடற்றும் அசுரேசனுக்கு=போரைச் செய்கின்ற இரணியனுக்கு, இவை இயம்பினர் = இவற்றை யெல்லாஞ் சொல்லினர். (௫௯)

சொற்ற தீமொழிகள் செவிமு தற்றடவு முன்னர் வாயிதழ் துடித்திட
நெற்றி மீதுற வெழுந்தி ழிந்துமிக நெரிகொ டும்புருவ நட்மிடக்
கொற்றவாளினெடு மெஃகம் வெவ்வழல் கொளுத்தி நின்றெரிய நகைசெயாப்
பற்றலார் மவுலி யிடறு சேவடிகள் பார்கு ழிப்பவெதிர் போயினன்.

(இ-ள்.) சொற்ற தீ மொழிகள்= சொல்லிய கொடுமையான சொற்கள், செவி முதல் தடவும் முன்னர்=காது முனையிற் பொருந்து முன்னரே, வாய் இதழ் துடித்திட= வாயினுதடுகள் துடிக்கவும், கொடு புருவம் = வளைந்த புருவங்கள், நெற்றி மீது உற எழுந்து இழிந்து மிக நெரி நடம் இட = நெற்றியின் மேற் பொருந்த வுயர்ந்துந் தாழ்ந்தும் மிகவும் நெரிபட்டுக் கூத்தாடவும், கொற்றம் வாளின் ஓடும் எஃகம் = வெற்றி பொருந்திய வாளாயுதத்துடன் வேற்படையும், வெம் அழல் கொளுத்தி நின்று எரிய= வெப்பமுடைய அக்கினியை மூட்டி யெரிசெய்யவும், நகை செயா = குறுநகை புரிந்து, பற்றலார் மவுலி இடறு சே அடிகள் = பகைவரது கிரீடங்களைத் தகர்த்தலாற் சிவந்த (தனது) பாதங்கள், பார் குழிப்ப எதிர் போயினன்=பூமியைக் குழிசெய்யுமாறு எதிர்ப்படச் சென்றான். (சுo)

எங்கு ளன்கொலவ னெங்கு ளன்கொலென வசனி யேறெண வுரப்பிநீ
டுங்க மால்வரைகள் கால்வி சைக்குளெழு சூறை யோடய றொடர்ந்திட
மங்கு றாழ்குடுமி வரைந டந்ததென வந்து வெங்கலுழ னோடுமேச்
சிங்கவே றனைய குரிசில் யோசனையின் விழவு தைத்துநனி சீறினன்.

(இ ள்.) அவன்=அந்தப் பகைவன், எங்கு உளன் = எவ்விடத்து இருக்கின்றான், எங்கு உளன் என=எவ்விடத்து இருக்கின்றானென்று, அசனி ஏறு என உரப்பி = இடியேற்றைப் போல முழங்கி, நீள் துங்கம் மால் வரைகள் = நீண்டு உயர்ந்த பெரிய மலைகள், கால் விசைக்குள் எழு சூறை ஓடு அயல் தொடர்ந்திட = கால்களின் விசையிடத்தினின்றுந் தோன்றுஞ் சுழல்காற்றுடன் பின்றொடர்ந்து பெயரவும், மங்குல் தாழ் குடுமி வரை நடந்தது என வந்து=மேகங்கள் தங்குஞ் சிகரத்தினை யுடைய மலைநடந்து வந்தாற்போல வந்து, கலுழன் ஓடும்=கருடனுடனே, அ ஏறு சிங்கம் அனைய குரிசில்=அந்த ஆண் சிங்கத்தை யொத்த தேவவீரன், யோசனையின் விழ உதைத்து = யோசனை தூரத்தில் விழும்படி (காலினால்) உதைத்து, நனி சீறினன்=மிகவுங் கோபித்தான்.

இரணியன் மலை நடந்தாற்போல வந்து, கருடனும் வீரனும் யோசனை தூரத்தில் வீழ்ந்திறக்கும்படி யுதைத்தனன் என்பதாம். ஒருயோசனை தூரமாவது நான்கு குரோசங் கொண்டது. ஒரு குரோசமாவது பதினாயிரம் முழங்கொண்டது. (சுக)

கருடன் வீழவும் விழாம லூர்திகள் பயிற்று கல்விதரு மாட்சியாற்
புருட னக்கலுழ னுடனெ ழுந்துபுவி யுண்ட மாலுமையி னெய்துறு
விரணி யன்றனது செய்தி கூறுதலு மிறைவ னெல்லையி னெழுந்துபோய்
முரணின் வெய்யநர சிங்க மாகிவெளி முகடு டைந்திட முழங்கினன்.

(இ-ள்.) புருடன்=(திருமாலினாற் சிருட்டிக்கப்பட்ட) வீரன், கருடன் வீழவும்= (இரணிய னுதையினால்) கருடப் பறவை விழுந்திடவும், விழாமல் = (தான்) கீழ் வீழாமல், ஊர்திகள் பயிற்று கல்வி தரும் மாட்சியால் = வாகனங்களைச் செலுத்துகின்ற வித்தையை யறிந்த வல்லமையினால், அ கலுழன் உடன் எழுந்து = அந்தக் கருடப் பறவையுடன் மேற்கிளம்பி, புவி உண்ட மால் உமையின் எய்துறு = மண்ணை யுண்ட மாயவ

னிருக்கு மிடத்தை யடைந்து, இரணியன் அது செய்தி கூறலும் = (அவர்க்கு) இரணியனது செய்கைகளை யெல்லாஞ் சொல்லுதலும், இறைவன்=திருமால், மூரணின் வெய்ய நரசிங்கம் ஆகி = வலியுடைய கொடிய நரசிங்க வுருவங் கொண்டு, ஒல்லையின் எழுந்து போய் = விரைவி னெழுந்து (போர்க்களத்திற்குச்) சென்று, வெளி முகடு உடைந்திட முழக்கினன்=ஆகாயத்தி னுச்சியும் இடியும்படி கர்ச்சித்தனர்.

இதனால் திருமால் நாரசிங்க வுருவெடுத்துச் சென்றமை நவிலப் பட்டது. நரசிங்கம்=நரசம்பந்த முடைய சிங்கம். மானுட மடங்கல் என்பர் வண்டமிழ் தெரிந்தார். விலங்கு, மனிதர், தேவர் முதலாயினோரால் அழியாத வரத்தை யடைந்தன னாகலின் திருமால் விலங்குருவும் மானுடவடிவமுஞ் சேர்ந்த நாரசிங்க வுருவைக் கொண்டனன் என்க. ஒல்லை=காலவிரைவு. தன்-சாரியை. (௬௨)

அண்ட கோளகையின் மவுலி சென்றறைய வாட கக்கிரி நிகர்த்தோ
ளெண்டி சாமுக மளப்ப வெண்ணில விலங்கு வாளெயிறு பொழிதர
மண்டு வெஞ்சிகை விரித்த ழன்றுதெறு வடவை கட்கடை வழங்கிட
விண்டு பார்முது குளுக்க மானுட மடங்கல் வெங்கள மடைந்ததே.

(இ-ள்.) மானுட மடங்கல் = (திருமாலாகிய) நரசிங்கமானது, மவுலி அண்டப் கோளகையில் சென்று அறைய=(தனது) முடி அண்டப் பித்திகையிற் போய் முட்டவும், ஆடகம் கிரி நிகர்த்த தோள்=பொன்மய மாகிய மேரு மலையை யொத்த புயங்கள், எண் திசா முகம் அளப்ப = அட்ட திக்குகளி னிடங்களைக் கடந்து செல்லவும், இலங்கு வாள் எயிறு=பிரகாசிக்கும் ஒளியுடைய பற்கள், வெள் நிலவு பொழிதர=வெள்ளிய சந்திரிகையை வீசவும், கண்கடை=விழிகளின் கடையிடங்கள், மண்டு வெம் சிகை விரித்து அழன்று தெறு = நெருங்கிய வெப்ப முடைய கொழுந்துகளைப் பரப்பிச் சினந்து (சேர்ந்தாரைக்) கொல்லுகின்ற, வடவை வழங்கிட=வடவை போன்ற தீயைக் கக்கவும்,பார் முதுகு விண்டு உளுக்க = பூமியின் முதுகு (பாரத்தினால்) வெடிபட்டுச் சுளுக்கடையவும், வெங்களம் அடைந்தது=யுத்த களத்தைச் சார்ந்தது.

"வடவை கட்கடை வழங்கிட" என்பது பற்றி, "கார்கொண்ட கவுண்மதக் கடை வெள்ள முங்கட் கடைக்கடைக் கனலு மெல்லை கடவாது" என **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழாரும்** விளம்பியதறிக. திசாமுகம்-வடநூன் முடிபு. (௬௩)

அடைந்த மானுட மடங்க றன்னையெதி ரற்ற வெற்றிபுனை யவுணர்கோன்
றொடர்ந்து பற்றியிவண் வருக வென்றுதிற லிரணி யாக்கனொடு சொற்றலும்
படங்கொள் வாளரவின் முடியின் வைகுமுயர் பார்நெ ளிந்திட நடந்துபோய்
மடங்க லேறுடல் புதைப்ப வெய்யதிறல் வாளி பற்பல வழங்கினான்.

(இ-ள்.) எதிர் அற்ற வெற்றி புனை அவுணர் கோன் = நிகரில்லாத வெற்றியைத் தரித்த இரணியன், அடைந்த மானுட மடங்கல் தன்னை = அங்ஙனம் வந்த நரசிங்கத்தை, தொடர்ந்து பற்றி இவண் வருக என்று = பின் றொடர்ந்து சென்று பிடித்து இவ்விடம் கொண்டுவரக் கடவா யென்று, திறல் இரணியாக்கன் ஒடு சொற்றலும் = வலியஇரணியாக்கன் ,என்னுந் தன் றுணைவனுடன் சொல்லுதலும், படம் கொள் வாள் அரவின் முடியின் வைகும் = படங்களை யுடைய ஒளி கொண்ட ஆதிசேடனது தலையிற் றங்கப்பெற்ற, உயர்பார் நெளிந்திட நடந்து போய் = உயர்வாய பூமியும் நெளியு மாறு வழிக்கொண்டு சென்று, ஏறு மடங்கல் உடல் புதைப்ப = பெருமை யாகிய நரசிங்கத்தின் றேக மூடப்பட, வெய்யதிறல் பல்பல வாளி வழங்கினன்=மிக்க வலியுடைய பற்பல அம்புகளைத் தூவினன்.

அங்கி யின்பகழி வருணன் வாளியொளி ரலர்க திர்ப்பரிதி வெஞ்சரந்
திங்கள் சூடிகணை முதல வாகவெதிர் சிந்து கின்றகணை யாவையு
மங்கு லூழ்வரையின் மீதெ றிந்தபசு மட்க லத்தின்முனை மடிதலும்
வெங்கண் வாளவுண னெஞ்ச மஞ்சுற வெரிங்கொடுத் திரியல் போயினான்.

(இ-ள்.) அங்கியின் பகழி வருணன் வாளி=அக்கினியாற் கொடுக்கப்பட்ட பாணங்களும் வருணாத்திரங்களும், ஒளிர் அலர் கதிர் பரிதி வெம் சரம் = பிரகாசிக்கின்ற பரந்த சூரியனாற் றரப்பட்ட வெவ்விய அம்புகளும், திங்கள் சூடி கணை=பிறை தரித்த பெருமான் அருளிய படைக்கலங்களும், முதல ஆக எதிர் சிந்துகின்ற கணை யாவையும் = முதலாக முற்படச் செலுத்தும் படைகள் எல்லாம், மங்குல் தாழ் வரையின் மீது எறிந்த = முகில்கள் படியும் மலையின் மேல் எறியப்பட்ட, பசு மட்கலத்தின் முனை மடிதலும்=பசிய மண் பாத்திரங்களைப் போல நுனி மழுங்கி வீழ்தலும், வெம் கண் வாள் அவுணன் = வெவ்விய விழிகளை யுடைய வாளேந்திய இரணியாக்க னென்பான், நெஞ்சம் அஞ்சுற = மனம் பயமுற, வெரிங் கொடுத்து இரியல் போயினான்=முதுகு காட்டி ஓடினான். (௬௫)

இரணி யாக்கனம ரிற்றொ லைந்துதனி யிரிதல் கண்டுதிற லவுணர்கோன்,
பிரக லாதனை விளித்து வெஞ்சம ருடற்று கென்னவுயர் பெட்பொடும், வரை
கொன் மார்பிடை யணைத்து ரைத்தலும் வணங்கி யங்கையினில் வாய்புதை
த், தரச வென்னுரை மறுத்தி டேலென விரைந்து நன்கினுரை யாடினான்.

(இ-ள்.) திறல் அவுணர் கோன் = வலிய இரணியன், இரணியாக்கன் அமரின் தொலைந்து=இரணியாக்கன் யுத்தத்திற் காற்றாது, தனி இரிதல் கண்டு = தனித் தோடுவதைப் பார்த்து, பிரகலாதனை விளித்து=(மூத்த குமாரனாகிய) பிரகலாதனை யழைத்து, உயர் பெட்பு ஓடும்=பேராசையுடன், வரை கொல் மார்பு இடை அணைத்து=மலையையும் வென்ற மார்பினிடத்திற் சேர்த்து, வெம் சமர் உடற்றுக என்ன உரைத்தலும்=கொடிய போரினைச் செய்க வென்று சொல்லுதலும், வணங்கி = (பிரகலாதன்) பணிந்து, அங்கையினில் வாய் புதைத்து=உள்ளங் கையினால் வாயை மூடி, அரச = மன்னனே, என் உரை மறுத்திடேல் என=என் சொல்லைத் தட்டற்க வென்று, நன்கின் விரைந்து உரை ஆடினான்=நன்மையோடும் விரைந்து சொல்வானாயினான். (௬௬)

தாம ரைத்தவிசி னரசி ருக்குமுயர் சதுர்மு கக்கடவு ணேமியா
னீம முற்றுபொடி யாடி யென்னுமொருமூவ ருந்தவ மிழைத்துளோர்
காமு றற்குரிய தாம னத்தினிடை காணு தற்கரிய பிரமமுந்
தீமு கத்தவரி யேறு வெய்யசமர் செய்தி டேலென விலக்கினான்.

(இ-ள்.) தாமரை தவிசின் அரசு இருக்கும்=தாமரைப்பூ வாசனத்தின்கண் வீற்றிருக்கும், உயர் சதுர்முகக் கடவுள்=பெருமை கொண்ட பிரமதேவனும், நேமியான்=திருமாலும், ஈமம் முற்று பொடி ஆடி என்னும் ஒரு மூவரும்=சுடுகாட்டில் வெந்த சாம்பரை யணிந்த உருத்திரக் கடவுளு மென்று சொல்லப்படும் மும்மூர்த்திகளும், தவம் இழைத்து உளோர் காமம் உறற்கு உரியது ஆம் = தவமார்க்கங்களை யநுட்டிக்கும் பெரியோர்களால் விரும்பப் படுவது மாகிய, மனத்தின் இடை கண்ணுதற்கு அரிய பிரமமும்=மனத்தி னிடத்து நினைத்தற் கரிய சிவப்பிரமப் பொருளுஞ், (சேர்ந்த ரூபம் போன்றது) தீ முகத்த அரி ஏறு=அக்கினி காலும் முகத்தை யுடைய சிங்கேறுகும், (ஆதலால்) வெய்ய சமர் செய்திடேல் என விலக்கினான்=கொடிய யுத்தத்தை (அதனுடன்) செய்யற்க வென்று தடுத்தனன்.

பிரகலாதன் இரணியனை நோக்கித் தந்தையே! மும்மூர்த்தி வடிவும் பரப்பிரம வடிவும் ஒன்று சேர்ந்தாற் போன்ற நாரசிங்கத்துடன் யுத்தஞ் செய்வற்க வென்று தடுத்தனன் என்பதாம். (௬எ)

விலக்கி நின்றுரைசெய் பிரக லாதனை வெகுண்டு நீயெழ விழித்துமே
லலக்க ணுற்றிடர் படுத்த வுஞ்சிறுவ னருளி னோடவை விளம்பலுங்
குலத்தி னுக்கிசை கலாத வெய்யமொழி கூற னீயென முனிந்துபோய்க்
கலக்க ணீரமர ரழுதி ரங்கவெழு காரு நாணுற முழங்கினன்.

(இ-ள்.) விலக்கி நின்று உரைசெய் பிரகலாதனை வெகுண்டு=(இரணியனவன்) தடுத்து நின்று புத்திகளைப் போதித்த பிரகலாதனைக் கோபித்து, தீ எழ விழித்து=நெருப்புப் பொறி பறக்கப் பார்த்து, அலக்கண் உற்று இடர் படுத்தவும்=துன்பங்கொண்டு வருந்தங்களைச் செய்விக்கவும், மேல் சிறுவன் அருளினோடு அவை விளம்பலும் = பின்னரும் பிரகலாதன் கிருபையினாற் சொன்னவற்றையே சொல்லுதலும்; நீ = (மைந்தனே) நீ, குலத்தினுக்கு இசைகலாத வெய்ய மொழி கூறல் = (நங்கள்) குலத்திற்குப் பொருந்தாத கொடிய வார்த்தைகளைச் சொல்லற்க, என முனிந்து = என்று சொல்லிக் கோபித்து, போய் = (நரசிங்கத்திற் கெதிர்) சென்று, அமரர் கலம் கண்ணீர் அழுது இரங்க=தேவர்கள் கலமளவு கண்ணீரோடும்படி யரற்றிப் புலம்பவும், எழு காரும் நாண் உற = ஏழு மேகங்களும் நடுங்கும்படி, முழங்கினன்=தொனி செய்தான்.

பிரகலாதனுக்கு இரணியன் செய்த துன்பங்க ளாவன:—விடமருந்துவித்தல், தீக்குண்டத் திடுவித்தல், வீரர்களாற் றண்டிப்பித்தல், மலையி னின்று முருட்டுவித்தல், நாக பாசத்தாற் கட்டுவித்தன் முதலாயின. ஏழுமேகங்களாவன:—சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பனவாம். இவை முறையே மண், நீர், பொன், பூ, மண், கல், தீ என்பவைகளைப் பொழிவனவாம். (௬அ)

காணி லானொருவர் கண்ணு மென்றவிறை கருதி லெங்குமுள னாயினித்
தூணி னேடுமுள னோசொ லென்றுசுடு சொல்லினோ டதனின் மோதுறூ
வாணி னேறரி யெழுந்து தூணினிடை யவுணன் வெஞ்சின மடக்கவோர்
தாணு வாமென முனின்று வெஞ்சமர் தொடர்ந்த தத்தருண மாமரோ.

(இ-ள்.) ஒருவர் கண்ணும் என்ற இறை=ஒப்பற்ற சிவயோகிகளாற் றியானிக்கப்படுமென்ற கடவுள், கருதில்=யோசிக்குமிடத்து, காணிலான்=மற்றை (உலகத்தார்க்குக்) காணப்படான், எங்கும் உளன்=எவ்விடத்து முள்ளான், ஆயின் = (என்பன சத்தியம்) ஆனால், இ தூணிலும் உளனோ சொல் என்று = இத்தூணின் கண்ணு மிருக்கின்றானோ சொல்வாயாக வென்று, சுடு சொல்லினோடு அதனின் மோதுறூ=கடுகடுத்த மொழிகளுடன் அத் தூணின்கண் அறைதலும், ஆணின் ஏறு அரி தூணின் இடை எழுந்து=ஆண்டன்மையின் மிக்க நரசிங்க மானது தூணி னின்றுந் தோன்றி, அவுணன் வெம் சினம் அடக்க= இரணியாசுரனுடைய கொடுங்கோபத்தை யடக்கும்படி, ஓர் தாணு ஆம் என = (முன்னர்த்தோன்றிய சிவபெருமானாகிய) ஒப்பற்ற சோதித் தம்பத்தைப்போல, முன் நின்று = எதிரில் நின்று, வெம் சமர் தொடர்ந்தது=கொடிய போர் செய்யத் தொடங்கிற்று, அ தருணம்=அச்சமையத்தில்.

உளனோ-ஓ, வினாப்பொருள். ஓடும் - அசைச்சொல். உருபு மயக்கமென் றுரைத்தலு மொன்று. ஒருவர் - ஒருமை யென்னும் பன்மையாகப் பிறந்த பெயர். இது சங்கேதத்தாற் சிவயோகியரைக் குறித்து நின்றது. பிரமற்குந் திருமாலுக்கும் போர் நேரிட்டுழி யவ்

ரகங்காரத்தை யழிக்கப் பின்னைப் புதுப்பொருட்கும் பின்னைப் புதுப்பொருளாய சிவபெருமான் சோதித் தம்பமாகத் தோன்றி நடுவினின்றாற்போல, இரணிய பிரகலாதர்க்கு நேரிட்ட விவாதத்தை நீக்கத் திருமால் நாரசிங்கமாய்த் தோன்றி நின்றானாதலின் "ஓர் தாணு வரமென முனின்று" என்று கூறப்பட்டது. இதுமுதல் இரண்டு குளகம். யுத்தகளத்திலுற்ற மடங்கலை தூணிலு முற்றுத் தோன்றுமாகலின் முரணன்றாம். (௬௯)

நிரையு ளைப்பொரு சினத்த மானுட மடங்க றோளினை நெருக்கிநீள்
வரைபி திர்ந்துவிழ வான மீதுறை யுடுக்கள் சிந்திட வலையுலாங்
குரைக டற்புன லுடைத்தெ ழுந்துகரை கொன்று செல்லவிசை போயபோ
ரிரணி யப்பெயரி னவுணன் வெற்பின்விழு மிடிநி கர்ப்பவெதிர் குத்தினான்.

(இ-ள்.) நீள் வரை பிதிர்ந்து விழ=நீண்ட மலைகள் பொடிபட்டு விழவும், வானம் மீது உறை உடுக்கள் சிந்திட = ஆகாயத்தின்கணுள்ள நட்சத்திரங்கள் உதிரவும், அலை உலாம் குரை கடல் புனல்=திரை யுலவா நிற்கும் ஒலியுடைய சமுத்திர நீரானது, கரை கொன்று உடைத்து எழுந்து செல்ல = கரையை யுடைத்தழித்துப் பொங்கிச் செல்லவும், விசை போய போர் இரணியப் பெயரின் அவுணன் = வேகமாகச் சென்ற போர்த்தொழிலில் வல்ல இரணியன் என்னும் பெயரை யுடைய அசுரன், நிரை உளை பொரு சினத்த மானுட மடங்கல்= வரிசையாகிய பிடர் மயிரையும் போர் செய்யுங் கோபத்தையு முடைய நரசிங்கத்தினது, இணை தோள் நெருக்கி=இரு புயங்களையும் நெருக்கி, வெற்பின் விழும் இடி நிகர்ப்ப = மலையின்கண் வீழும் இடியைப்போல, எதிர் குத்தினான்=எதிர்த்துக் குத்தினான்.

வரை பொடிய, உடுக்கள் சிந்த, கடற்புனல் உடைத்துச் செல்ல, விரைந்து போன இரணியன் நரசிங்கத்தின் றோள்களை நெருக்கிக் குத்தினான் என்க. (௭0)

அத்த வெற்புறழ் பணைப்பு யத்திடை யழன்று வெய்யதிற லவுணர்கோன்
குத்த வான்மிசை முறுக்கி மண்பக வடித்து வாளரி கொதித்தெழா
மைத்த கார்தவழு மேரு வோடிகலு மருமம் விண்டுதிரம் வழியவோர்
கைத்த லத்தினை யெடுத்து ரப்பியெரி கனல்பு கைந்தெழ வடித்ததே.

(இ-ள்.) வெய்ய திறல் அவுணர் கோன் = கொடிய வலிமையை யுடைய இரணியன், அத்தம் வெற்பு உறழ் பணை புயத்து இடை=அத்த மலையை நிகர்த்த பருத்த தோளினிடத்து, அழன்று குத்த = கோபித்துக் குத்த, வாள் அரி = வெண்மை யாகிய நரசிங்கமானது, வால் மிசை முறுக்கி=வாலினை மேலாகத் தூக்கிச் சுழற்றி, மண் பக அடித்து= பூமி பிளக்கும்படி யடித்து, கொதித்து எழா = பொங்கி யெழுந்து, மைத்த கார் தவழும் மேரு ஓடு=கருமையுற்ற மேகங்கள் படியும் மேரு மலையுடன், இகலும் மருமம் விண்டு= பகை கொள்ளும் (இரணியனது) மார்பு பிளந்து, உதிரம் வழிய = இரத்தங் கக்கும்படி, ஓர் கைத்தலத்தினை எடுத்து=ஒரு கரத்தை நீட்டி, உரப்பி=உங்காரஞ் செய்து, எரி கனல் புகைந்து எழ அடித்தது=மூளுகின்ற அக்கினி புகைபட்டுத் தோன்ற அடித்தது.

அத்தமலை= சூரியன் அத்தமித்தற் கிடமாய மலை. மேரு மலை யெனக் கொள்வது பொருந்தா தென்க. என்னை? வருஞ் செய்யுளிற் பொன் மலையை யிரணியற்கும், வெள்ளி வரையை நரசிங்கத்திற்கும் உவமித்தலான். (௭௧)

பற்க றித்தித ழதுக்கி வெவ்வுரை பகர்ந்த ழன்றுவிற லவுணர்கோன்
வெற்பி ரண்டனைய தோள்பு டைத்தற வெகுண்டு மெய்யினொடு மெய்யுறப்
பொற்கு வட்டுவரை வெள்ளி யங்கிரி பொருந்தி வெஞ்சமம் விளைத்தெனு
மம்பி டித்தனன் மடங்க லோடெதிர் வரைப்பு யங்களி னெருக்கியே.

(இ - ள்.) விறல் அவுணர் கோன் = வலிய இரணியன், பல் கறித்து = பல்லைக் கடித்து, இதழ் அதுக்கி=உதடுகளை நெரித்து, வெம் உரை பகர்ந்து=கொடுஞ் சொற்களைக் கூறி, அழன்று=வெம்பி, இரண்டு வெற்பு அனைய தோள் புடைத்து = இரண்டு மலைகளை யொத்த தன்னிரு புயங்களினுங் கொட்டி, அற வெகுண்டு = மிகக் கோபித்து, மெய்யின் ஒடு மெய் உற=உடலோடு உடல் பொருந்த, குவடு பொன் வரை அம் வெள்ளி கிரி பொருந்தி = சிகரங்களை யுடைய பொன் மலையும் அழகிய வெள்ளி மலையும் ஒன்றோ டொன்று சேர்ந்து, வெம் சமம் விளைத்து என=வெவ்விய போரைச் செய்தாற்போல, எதிர் மடங்கலோடு=எதிர்த்த நரசிங்கத்துடன், வரை புயங்களின் நெருக்கி = மலைபோன்ற தோள்களால் நெருக்கிப் பிடித்து, மல் பிடித்தனன்=மற்போர் புரிந்தனன். (௭௨)

தோளொ டுந்தனது தோணெ ருக்கியடர் சுடுசி னத்ததிற லவுணனைத்
தாளொ டுந்தனது தாள்பி ணித்துவரை தரைவி ழுந்ததென வீழ்த்திமே
னீள்கு றங்கிடை கிடத்தி வன்பிட ரிறுக்கி வெற்புறழு நெஞ்சகம்
வாளு கிர்த்தலை மடுத்த கழ்ந்துகுடர் மாலை யிட்டுடல் பிசைந்ததே.

(இ-ள்.) அடர் சுடு சினத்த திறல் அவுணனை = (நரசிங்கமானது) நெருங்கிய சுடுகின்ற கோபாக்கினியையும் வலியையு முடைய இரணியனை, தோள் ஒடும் தனது தோள் நெருக்கி = (அவனது) புயங்களுடன் தனது புயங்களையும் நெருக்கச் சேர்த்தும், தாள் ஒடும் தனது தாள் பிணித்து = (அவன்) காலுடன் றனது காலைப் பொருத்தியும், வரை தரை விழுந்தது என வீழ்த்தி = மலையானது பூமியில் விழுந்த தென்று சொல்லும்படி விழச்செய்து, மேல் = (விழுந்த) பின்பு, நீள் குறங்கு இடை கிடத்தி=நீண்ட தொடையினிடத்துப் படுக்க வைத்து, வல் பிடர் இறுக்கி=வலிய பிடரினை யிறுகப் பிடித்து, வெற்பு உறழும் நெஞ்சு அகம் = மலையை யொத்த மார்பி னிடத்தை, வாள் உகிர் தலை மடுத்து அகழ்ந்து=வாள் போன்ற நகங்களி னுதியாற் கீறிப் பிளந்து, குடர் மாலை இட்டு=குடலை மாலையாகத் தரித்து, உடல் பிசைந்தது=சரீரத்தைப் பிசைந்து கொன்றது. (௭௩)

விண்ணு ளோர்மலர் பொழிந்து நெஞ்சகம் வியந்து நின்றடி பணிந்திட
வண்ண லேறனைய வவுணர் கோனுயி ரருந்தி யாளரியி னுருவொழித்
தெண்ண ரும்புவனம் யாவு நான்முகனொ டினித ளிக்குமல ருந்தியந்
தண்ண றுந்துளவ மாயன் வெண்டிரை தயங்கு நாகணையின் மேவினான்.

(இ-ள்.) எண் அரு புவனம் யாவும் = அளவிடற்கரிய உலகங்கள் எல்லாவற்றையும், நான்முகன் ஒடு இனிது அளிக்கும்=பிரமனுடன் நன்மை யுண்டாகத் தோற்றுவித்த, அம் உந்தி மலர் தண் நறு துளவம் மாயன்=அழகிய நாபிக் கமலத்தை யுடைய தண்ணிய நல்ல துழாய்மாலையை யணிந்த திருமால், விண் உளோர்=தேவர்கள், மலர் பொழிந்து=புட்பங்களைத்தூவி, நெஞ்சு அகம் வியந்து நின்று=மனத்தி னிடத்துப் புகழ்ந்து நின்று, அடி பணிந்திட=பாதங்களை வணங்கவும், அண்ணல் ஏறு அனைய அவுணர் கோன் உயிர் அருந்தி=பெருமையிற் சிறந்த சிங்க வேறு போன்ற இரணிய னுயிரைக்குடித்து, ஆள் அரியின் உரு ஒழித்து=வலிய நரசிங்கத்தின் வடிவை நீக்கி, வெள் திரை தயங்கு நாகம் அணையின் மேவினான்=வெள்ளிய அலைகள் செறிந்த கடலகத்து விளங்கும் பாம்புப் பாயலிற் பொருந்தி யிருந்தனர் என்க. (௭௪)

தக்கன் வமிசமுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௫௱௫.

பதினேழாவது

அந்தகாசுரன் சாரூபமடைந்த அத்தியாயம்.

அஃதாவது பிரகலாத னிருவுள்ள தக்கனது வமிசத்தைக் கூறிப் பிரகலாதன் மகனாகிய அந்தகாசுரன் சிவசாரூப்பியத்தைப் பெற்ற சரிதத்தை யுரைத்த பாகமாம். இதனை யெம்பெருமானாரது அட்டவீரத்து ளொன்றென்ப வறிந்திசினோர். இஃது திருக்கோவலூரில் நிகழ்ந்த தென்பது "பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல்" என்ற செய்யுளா னறியக்கிடக்கின்றது. அந்தகன்=அழித்தலைச் செய்பவன்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வாளம ரழுவந் தன்னி லிரணியன் மறிந்த பின்னர்
நீளிருந் தடக்கைப் பேழ்வாய் நிகரறு மிரணி யாக்கற்
காளரி யேறு போலு மடல்கெழு பிரக லாதன்
கோளொடு நன்னா டோர்ந்து குருமணி மவுலி வைத்தான்.

(இ-ள்.) ஆள் அரி ஏறு போலும் அடல் கெழு பிரகலாதன் = நரசிங்கத்தைப் போன்ற வலிமை பொருந்திய பிரகலாதன், வாள் அமர் அழுவம் தன்னில் = ஆயுதங் கொண்டு செய்யும் போர்க் களத்தில், இரணியன் மறிந்த பின்னர் = (தன்றந்தையாகிய) இரணியன் இறந்த பின்பு, நீள் இரு தடம் கை பேழ் வாய் = நீண்ட மிகப் பெரிய கரங்களையும் பிளவுபட்ட வாயினையு முடைய, நிகர் அறும் இரணியாக்கன் கு=ஒப்பற்ற இரணியாக்கனுக்கு, கோள் ஒடு நல் நாள் தேர்ந்து=கிரககிலையுடன் நல்ல சுபதினத்தையு மறிந்து நிச்சயித்து, குரு மணி மவுலி வைத்தான் = அழகிய இரத்தினங்க ளிழைத்துச் செய்யப் பட்ட முடியைச் சூட்டுவித்தான் என்க. (க)

குடங்கையி னெடிய வாட்கட் புலோமசை கொழுநன் றெண்ணீர்த்
தடங்கடற் சுறவ மூர்வோன் முதலிய தலைவர் யாரு
மடைந்துகுற் றேவல் கேட்ப வறந்தலை மயங்கி மாழ்க
விடங்கெழு சீற்றத் துப்பின் வீரனே ழுலகுங் காத்தான்.

(இ-ள்.) விடம் கெழு சீற்றம் துப்பின் வீரன்=நஞ்சின் குணத்தைக் கொண்ட கோபத்தையும் வலிமையையு முடைய இரணியாக்க னென்பான், குடங்கையின் நெடிய வாள் கண் புலோமசை கொழுநன் = உள்ளங்கைக்கு மடங்காமல் நீண்ட வாளாயுதம் போலும் விழிகளையுடைய இந்திராணி நாயகனும், தெள் நீர் தடம் கடல் சுறவம் ஊர்வோன்=தெளிந்த நீர் செறிந்த பெரிய சமுத்திரத்தின்க ணுள்ள மகரமீனை வாகனமா நடத்தும் வருணனும், முதலிய தலைவர் யாரும்=இவர்களை முதலாகநின்ற அரசர்க ளெல்லாரும், அடைந்து குறு ஏவல் கேட்ப=வந்து தானேவுஞ் சிறிய வேவல்களைக் கேட்டுச் செய்யவும், அறம் தலை மயங்கி மாழ்க = தருமநெறி யிருக்கு மிடந் தெரியப் படாமல் மறைந்து பிறழவும், ஏழ் உலகும் காத்தான்=ஏழுலகங்களையு மாண்டிருந்தான். (உ)

இன்னண மொழுகு நாளி லவுணர்கோன் மகப்பே றின்றிப்
பொன்னவிர் கடுக்கை வேய்ந்த புராரியைக் கங்குற் போது
மன்னுநன் பகலு மன்பின் வரன்முறை வழாது போற்றி
யன்னவ னருளால் வெய்ய வந்தகா சுரனை யீன்றான்.

(இ-ள்.) அவுணர் கோன்=இரணியாக்கன், இன்னணம் ஒழுகும் நாளில்=இவ்வாறு அரசாண்டு வருங் காலத்தில், மகப்பேறு இன்றி=புத்திரப் பேறில்லாமல், பொன்

அவிர் கடுக்கை வேய்ந்த புராரியை = பொன்போல விளங்குங் கொன்றை மாலையைத் தரித்த சிவபெருமானை, கங்குல் போதும்=இரவினும்,மன்னும் நன் பகலும்=நிலை பெற்ற நன்மை வாய்ந்த பகலினும், அன்பின் வரன் முறை வழாது போற்றி= அன்புடன் வேதாகம விதிதவறுமற் பூசித்து, அன்னவன் அருளால் = அப் பரமசிவத்தின் திருவருளால், வெய்ய அந்தக அசுரனை ஈன்றான்=கொடிய அந்தகன் என்னும் அசுரனைப் பெற்றான். (௩)

18 இலகுபொற் கண்ணன் றேவ ரியக்கர்விஞ் சையர்மற் றுள்ள
வலகின்மன் பதைகள் யாரு மலக்கணுற் றாவி சோர
மலர்தலை யுலகம் யாவுங் கவர்ந்துவண் டிரைகு லாய
வொலிகட லகட்டி னுள்புக் கொளித்தன னொளித்த லோடும்.

(இ-ள்.) இலகு பொன் கண்ணன்=விளங்காகின்ற இரணியாக்கன், தேவர் இயக்கர் விஞ்சையர் = தேவர்களும் இயக்கர்களும் வித்தியா தரர்களும், மற்று உள்ள அலகு இல் மன் பதைகள் யாரும் = எஞ்சிநின்ற அளவில்லாத சீவர்கள் எல்லாரும், அலக்கண் உற்று ஆவி சோர=துன்பங் கொண்டு உயிர் தளர்வுற,மலர் தலை உலகம் யாவும் கவர்ந்து= பரந்த இடத்தை யுடைய பூமி முழுவதையும் (பாயாகச் சுருட்டிக்) கொண்டு, வன் திரை குலாய = வளங் கொழிக்கு மலைகள் செறிந்த, ஒலி கடல் அகட்டின் உள் புக்கு = சத்திக்கின்ற சமுத்திரத்தின் நடுவிடத்துட் புகுந்து,ஒளித்தனன்=ஒளித்தான், ஒளித்தல் ஓடும்= மறைதலும். இது முத லிரு செய்யுள் குளகம். (௪)

19 அலர்தலை யுலகம் பூத்த வந்தணன் முதல தேவர்
கொலைபழுத் தொழுகு நேமிப் பண்ணவற் குறுகி யேத்திப்
பொலநிறக் கண்ணன் செய்தி புகறலுஞ் செங்கண் மாய
னிலகொளி யெயிற்று வெள்ளை யெறுழ்வலி யேன மானான்.

(இ-ள்.) அலர் தலை உலகம் பூத்த = பரந்த விடத்தை யுடைய உலகங்களைப் படைத்த, அந்தணன் முதல தேவர்=பிரமன் முதலாய தேவர்கள், கொலை பழுத்து ஒழுகும் நேமி பண்ணவன் குறுகி = கொலைத் தொழில் முதிர்ந்து விளங்கும் சக்கரக் கடவுளாய விண்டுவை யடைந்து, ஏத்தி=துதிசெய்து, பொலம் நிறம் கண்ணன் செய்தி புகறலும்=இரணி யாக்கனது செய்கைகளைச் சொல்லுதலும், செம் கண் மாயன் = சிவந்த கண்களை யுடைய திருமால், ஒளி இலகு எயிற்று = ஒளிவிளங்குந் தந்தத்தைக் கொண்ட, எறுழ் வலி வெள்ளை ஏனம் ஆனான் = மிக்க வலிமையை யுடைய சுவேதவராக வுருவத்தைக் கொண்டனன். (௫)

40 துறுமயிர்க் குறுத்தாட் செங்கட் டூயவெண் பன்றி முந்நீர்
மறிகடன் முழங்கப் புக்கு வன்றிற லவுணன் மார்பம்
பிறைமருப் பதனு லூன்றிப் பிளந்திரு கூறு செய்து
நிறையிரும் புவியை முன்போ னிலைபெற நிறுவிற் றன்றே.

(இ-ள்.) துறு மயிர்=நெருங்கிய உரோமங்களையும், குறு தாள் = குறுத்த கால்களையும், செம் கண் தூய வெண் பன்றி=சிவந்த விழிகளையு முடைய சுத்தமாகிய சுவேதவராக மானது, முந்நீர் மறி கடல் முழங்க புக்கு = மூன்று குணங்களை யுடைய (அலை) மறியுஞ் சமுத்திரம் இரங்கி யொலிக்குமாறு கீழ்ச் சென்று, பிறை மருப்பு அதனுல்= பிறை போன்ற கொம்பினுல், வன் திறல் அவுணன் மார்பம் = மிக்கவலிமையை யுடைய இரணி யாக்கனது நெஞ்சினை, ஊன்றி பிளந்து இரு கூறு செய்து = குத்திக் கிழித்து இரு பங்களாகப் பிரித்துக் கொன்று, நிறை இரு புவியை = (உயிர்கள்) நிறைந்துள்ள

பெரிய பூமியை, முன் போல்=முன்னர்ப் போல, நிலை பெற நிறுவிற்று = நிலைபெறும் படி வைத்தது. குறுந்தாள் வலித்தல். பன்றி நிறுவிற் றென்பதாம். 'அன்று ஏ-அசைகள்()

வண்டுவீழ்ந் தரற்ற வாடாப் புதுமலர் மாரி சிந்தி
யண்டரார்ப் பெடுத்து வாழ்த்த வரும்பிள முறுவற் செய்ய
தொண்டைவாய்க் கமலை கேள்வன் றுறுமயிர்ப் பன்றி யாகக்
கொண்டபே ருருவ நீங்கிக் குரைகடற் பள்ளி சேர்ந்தான்.

(இ-ள்.) அண்டர்=தேவர்கள், வண்டு வீழ்ந்து அரற்ற = வண்டுகள் மொய்த்து இரங்க, வாடா புது மலர் மாரி சிந்தி = வாடாத புதிய புட்பமழை பொழிந்து, ஆர்ப்பு எடுத்து வாழ்த்த=ஆரவாரிப்புச் செய்து துதிக்கவும், அரும்பு இள முறுவல் = முல்லை யரும்பு போன்ற இளமை தங்கிய பற்களையும்,செய்ய தொண்டை வாய் கமலை கேள்வன்= சிவந்த கோவைப் பழம்போன்ற வாயினையு முடைய இலக்குமி நாயகனாகிய திருமால், துறு மயிர் பன்றி ஆக கொண்ட பெரு உருவம் நீங்கி = நெருங்கிய உரோமங்களை யுடைய வராக மாவெடுத்த பெரிய வடிவத்தை விடுத்து, குரை கடல் பள்ளி சேர்ந்தான் = ஒலிக் கின்ற திருப்பாற் கடற்கண் அறிதுயில் கொண்டிருந்தனர். (எ)

முரண்மிகு மிரணி யாக்கன் சமர்த்தலை முடிந்த பின்னர்க்
கரைபொரு கடலந் தானை கைதொழப் பிரக லாத
னிரைமணி மோலி சூடி நேரலர் வணங்கி யேத்த
வரியணைப் புறத்து வைகி யவுணர்கோ னாயி னானே.

(இ-ள்.) முரண் மிகும் இரணி யாக்கன் = வலிமை மிக்க இரணியாக்க னென் பான், சமர் தலை முடிந்த பின்னர் = போரினிடத்தில் இறந்த பின்பு, பிரகலாதன்=பிரக லாத னென்பவன் கரை பொரு கடல் அம் தானை கை தொழ = கரையை மோதுகின்ற சமுத்திரம் போன்ற அழகிய சேனைகள் கைகூப்பி வணங்கவும், நேரலர் வணங்கி ஏத்த= பகையரசர் பணிந்து துதிக்கவும், நிரை மணி மோலி சூடி = வரிசையாக விரத்தினங்க ளிழைத்த கிரீடத்தைத் தரித்து, அரி அணை புறத்து வைகி = சிங்காசனத்தின்கண் வீற் றிருந்து, அவுணர் கோன் ஆயினன்=அசுரர்கட்குத் தலைவனா யிருந்தான். (அ)

மணிநிற வண்ணன் செய்ய மலரடிக் கன்பு பூண்டு
துணிகதிர்க் குளிர்வெண் டிங்கட் சுடர்மணிக் கவிகை நீழற்
பணிமுடிக் கிடந்த வோரே ழுலகமும் பரிக்கு நாளிற்
றணிவருங் கேள்வி யானோர் மறையவன் வந்து சார்ந்தான்.

(இ-ள்.) மணி நிறம் வண்ணன் செய்ய மலர் அடிக்கு = நீலரத்தினம் போன்ற திருமா லுடைய சிவந்த் தாமரை மலர் போன்ற பாதங்களுக்கு, அன்பு பூண்டு = அன்பு வைத்து,துணி கதிர் குளிர் வெண் சுடர் மணி திங்கள் கவிகை நீழல்=துணிபட்ட கிரணங் களைக் கொண்ட தண்ணிய வெண்ணிற வொளி வீசு முத்துக்களா லலங்கரிக்கப்பட்ட சந் திரவட்டக் குடையி னிழலின்கணிருந்து, பணி முடி கிடந்த ஓர் ஏழு உலகமும் = ஆதி சேடனது தலைக்கண் தங்கிய சத்த லோகங் களையும், பரிக்கும் நாளில் = காவல் செய்து வருங் காலத்தில், தணிவு அரு கேள்வியான் = குறைவில்லாத நல்ல கேள்வி யறிவுடைய னுய, ஓர் மறையவன் வந்து சார்ந்தான்=ஒரு வேதியன் வந்தடைந்தனன். (சு)

வந்தநான் மறையோன் றன்னை மதிக்கல னாகி மிக்க
வெந்திறற் பிரக லாத னிகழ்தலும் வெகுட்சி யெய்திப்

பைந்துழாய்ப் படலை மாலைப் பண்ணவற் பழிச்சு மாற்றா
னிந்திரத் திருவிற் செம்மாந் திருந்தன னிவனென் றெண்ணி.

(இ-ள்.) மிக்க வெம் திறல் பிரகலாதன்=மிகுந்த வெவ்விய வலிமையை யுடைய பிரகலாத னென்பான், வந்த நால்மறையோன் தன்னை = வந்த வேதங்களில் வல்ல அந்தணனை, மதிக்கலன் ஆகி இகழ்தலும் = மதியாதவனாய் நிந்தித் திருத்தலும், வெகுட்சி எய்தி = (அந்தணன்) கோப மடைந்து, இவன் = இப்பிரகலாதன், பை துழாய் படலை மாலை பண்ணவன்=பசிய துழாய் மாலையை யணிந்த திருமாலினை, பழிச்சும் ஆற்றால் = வழிபடுந் தன்மையால், இந்திரன் திருவின் செம்மாந்து இருந்தனன்=இந்திர சம்பத்துப் போன்ற செல்வத்தினால் அகங்கரித் திருந்தனன், என்று எண்ணி=என்று நினைத்து. (௧௦)

45 மழகதிர்ப் பரிதி யன்ன கவுத்துவங் கிடந்த மார்பி
னழலவிர் நேமிப் புத்தேட் கன்பில னாக வென்ன
முழைபுகு சீயமன்ன மொய்ம்புடைப் பிரகலாதன்
பிழைபட வைது வேத முனிவரன் பெயர்ந்து போனான்.

(இ-ள்.) வேதம் முனிவரன் = வேதங்களில் வல்ல அந்தணர் பிரான், மழ கதிர் பரிதி அன்ன கவுத்துவம் கிடந்த மார்பின் = இளங் கிரணத்தைக் கொண்ட சூரியனை யொத்த கவுத்துவ ரத்தினந் தங்கப் பெற்ற மார்பினை யுடைய, அழல் அவிர் நேமி புத்தேள்கு = அக்கினி விளங்குஞ் சுதரிசன சக்கரத்தை யேந்தும் மாயவனுக்கு, அன்பு இலன் ஆக என்ன = அன்பு இல்லாதவனாகக் கடவ னென்று, முழை புகு சீயம் அன்ன மொய்ம்பு உடை பிரகலாதன் = குகையினுட் புக்க சிங்கத்தை யொத்த வலிமையை யுடைய பிரகலாதன், பிழைபட வைது = சிறுமை யுறுமாறு சாபஞ்சொல்லி, பெயர்ந்து போனான் = அவ்விடத்தை விட்டுச் சென்றான். முனிவரன் பிரகலாதன் பிழைபட வைது போனான் என்க.

46 மறைவிளை யாடுஞ் செந்நா முனிவரன் வைத வாற்றாற்
செறுகருந் துளவோற் கன்பு செய்கல னாகி மேனா
ளுறுசினத் தவுணர்க் கொன்ற பழம்பகை யுள்ளத் தோர்ந்து
கறுவொடும் பிரக லாதன் கதழ்சினந் தலைக்கொண் டானே.

(இ-ள்.) மறை விளையாடும் செம் நா முனிவரன் வைத ஆற்றால்=வேதங்கள் குடிகொண் டுலாவுஞ் செவ்விய நாவினை யுடைய அந்தணன் சபித்த தன்மையினால், பிரகலாதன்=பிரகலாத னென்பவன், செறு கரு துளவோன் கு அன்பு செய்கலன் ஆகி = கொல்லுந் தொழிலை யுடைய கரிய திருமாலுக்கு அன்பு செய்யாதவனாய், மேல் நாள் = முன்னை நாளில், உறு சினத்து அவுணர் கொன்ற பழமை பகை உள்ளத்து ஓர்ந்து=மிக்க கோபத்தை யுடைய அசுரரை யழித்த பழமையாகிய பகைத் தன்மையைத் தன் மனத்தி லறிந்து, கறுவு ஓடும்=அகங்காரத்துடன், கதழ் சினம் தலை கொண்டான் = நெருங்கிய கோபமும் அதிகரிக்கப் பெற்றான். (௧௨)

47 வேற்கடற் றானை யோடும் வெகுண்டன னெழுந்து பொங்கிப்
பாற்கடற் புறத்தி னெய்திப் பைந்துழாய்க் கரிய மாலை
யேற்றமர் புரிந்தா னோர்யாண் டிமையவர் பருவந் தன்னிற்
கூற்றுயிர் விழுங்கும் வைவேற் கொலைத்தொழிற் பிரக லாதன்.

(இ-ள்.) கூற்று உயிர் விழுங்கும் வை வேல் = யமனுயிரையு முண்ணுங் கூரிய வேலாயுதத்தையும், கொலை தொழில் பிரகலாதன்=கொலைத் தொழிலையு முடைய பிரகலா

தன், வெகுண்டனன பொங்கி எழுந்து = கோபித்தெழுந்து வேல் தானை கடல் ஓடும் = வேலேந்துஞ் சேனை சமுத்திரத்துடன், பால் கடல் புறத்தின் எய்தி = திருப்பாற் சமுத்திரத்தி னிடத்துச் சென்று, பை துழாய் கரிய மாலே = பசிய துழாய் மாலையை யணிந்த மாயவனை, ஏற்று=எதிர்த்து, இமையவர் பருவம் தன்னில் ஓர் யாண்டு=தேவமானப்படி யொரு வருட மளவும், அமர் புரிந்தான்=போர் புரிந்தான். (கங)

வாளம ரழுவத் தாற்ரு துடைந்தன ணுகி மாயோன்
ருளிணைக் கன்பு பூண்டு தணப்பருந் திருவி னெய்தி
னீளிரு மாயை சேரு மெனவவை நீத்து வெய்ய
கோளுடைப் புலன்கள் செற்றுக் குறிக்கருந் தவத்த ஞனன்.

(இ-ள்.) வாள் அமர் அழுவத்து ஆற்ருது உடைந்தனன் ஆகி=(பிரகலாதன்)படைகளைச் செலுத்தும் யுத்தகளத்தில் எதிர் நிற்கமாட்டாமல், மாயோன் இணை தாள் கு அன்பு பூண்டு = திருமாலினது இரு திருவடிகளிலும் அன்பு வைத்து, தணப்பு அரு திருவின் எய்தில் = ஒழித்தற்கரிய செல்வத்தைக் கொள்ளின், நீள் இருள் மாயை சேரும் என = மிகுந்த இருள் போன்ற மாயாமலம் நிலேத்து நிற்குமென்று, அவை நீத்து=அப்போகங்களை வெறுத்து, வெய்ய கோள் உடை புலன்கள் செற்று = கொடிய விடயங்களைக் கொள்ளுதலுடைய ஐம்புலன்களையு மடக்கி, குறிக்க அரு தவத்தன் ஆனன் = நினைத்தற்கு மரிய தவத்தைச் செய்வானுயினுன். தாளிணைக்கு-உருபு மயக்கம். கோள்-வலியுமாம். (கச)

மறத்துறை நீத்து வெய்ய மைந்துடைப் பிரக லாத
னறத்துறை போய பின்ன ரடுதிற னவுணர் யாரும்
பெறற்கருஞ் செல்வ மெய்த வந்தகா சுரற்குப் பேராச்
சிறப்பொடு மிருள்கூட் டுண்ணுங் கதிர்மணி மவுலி சேர்த்தார்.

(இ-ள்.) வெய்ய மைந்து உடை பிரகலாதன் = மிக்க வலிமையை யுடைய பிரகலாத னென்பான், மறம் துறை நீத்து=பாவ வழிகளை விலக்கி, அறம் துறை போய பின்னர்=புண்ணிய வழியை விரும்பிச் சென்ற பின்பு, அடு திறன் அவுணர் யாரும் = கொல்லுந் தன்மையை யுடைய அசுரர்கள் எல்லாரும் (சேர்ந்து)பெறற்கு அரு செல்வம் எய்த= பெறுதற்கரிய வளப்பங்கள் (தமக்கு) உண்டாக, அந்தகாசுரன் கு = அந்தகன் என்னும் அசுரனுக்கு, பேரா சிறப்பு ஒடும் = நீங்காத சிறப்புகளுடன், இருள் கூட்டு உண்ணும் கதிர் மணி மவுலி சேர்த்தார் = இருளைச் சேர்த்து விழுங்கும் ஒளியை யுடைய விரத்தினங்களாலாய கிரீடத்தை யணிந்தனர். (கரு)

பழிபடு மவுணன் காக்கு நாளினோர் பன்னீ ராண்டு
மழைவளங் குன்ற வேத முனிவர ருள்ள மாழாந்
தழிபசி வருத்தி நீட வகலிகை கொழுநன் வைகுந்
தழைபுனை குறுங்காற் சாலே விழைவொடுஞ் சென்று சார்ந்தார்.

(இ-ள்.) பழி படும் அவுணன் காக்கும் நாளின்=பாதகங்களை விளைக்கும் அந்தகாசுரன் அரசாண்டு வருங்காலத்தில், ஓர் பன்னிரு ஆண்டு மழை வளம் குன்ற = பன்னிரண்டு வருடம் மாரி வளங் குறைய, வேதம் முனிவரர் உள்ளம் மாழாந்து = வேதங்களில் வல்ல இருடி சிரேட்டர்கள் மனம் வருந்தி, அழி பசி வருத்தி நீட = கொல்லும் பசி நோய் வருத்தி நிலேத்து நிற்க, அகலிகை கொழுநன் வைகும் = அகலிகையின் நாயகனுய கௌதமமுனி வசிக்கும், தழை புனை குறு கால் சாலே = குழைகளால் வேயப்பட்ட சிறிய கால்களை யுடைய யாக சாலேயை, விழைவு ஒடும் சென்று சார்ந்தார்=விருப்போடும் போய்ச் சேர்ந்தனர்.

இதனால் அந்தகாசுரன் அரும்பய னீயுஞ் செங்கோலை விடுத்துப் பெரும் பய மீயுங் கொடுங்கோல் கொண்டான் என்பது பெறப்பட்டது. அரசன், அறநூற்படி செங்கோ னடாத்தின் எல்லாப்பயனு முண்டாம். அதற்குப் பிரமாணம்:—

பார்க்கவ புராணம் - அரசியற் படலம்.

மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் விளையு மாறும்
விழையறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறுந்
தழைபொரு ளீட்டு மாறுஞ் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறும் பிறழ்தராக் கோலி னாகும்.

புறநானூறு-செவியறிவுறூஉத் துறை.

கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினு
மியற்கை யல்லது செயற்கையிற் றோன்றினுங்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.

அரசுகோல் பிறழிற் கிரகநிலை திரியும்; அது திரிய மழைவளம் பொய்க்கும்; அது பொய்ப்பின் விளைவு குறைந்து, பசி நீடி, கற்பழிந்து அறங்கள் ஒழியும். பிரமாணம்:—

திருவள்ளுவர் குறள்.

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ - னாடொறு நாடு கெடும்.
கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச் - சூழாது செய்யு மரசு.

சிந்தாமணி-நாமக ளிலம்பகம்.

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
யாணையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்.

மணிமேகலை-துயிலெழுப்பிய காதை.

கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும். (௯௰)

91 சந்தனப் பொதும்பர் சூழுந் தாருகா வனத்தி னின்றும்
வந்தமா முனிவர் யார்க்குங் கவுதமன் மனைவி யோடு
மந்தமில் பூசை யாற்றி யழிபசி யகன்று நாளுஞ்
சிந்தனை மகிழ நல்லூண் சிறப்பொடு நல்கி னானால்.

(இ-ள்.) கவுதமன்=கௌதம முனிவர், சந்தனம் பொதும்பர் சூழும் தாருகா வனத்தில் நின்றும்=சந்தனச் சோலை சூழ்ந்த தாருக வனத்திலிருந்து; வந்த மா முனிவர் யார்க்கும் = வந்த சிறந்த விருடிய ரெவர்க்கும், மனைவி ஓடும் அந்தம் இல் பூசை ஆற்றி = (தமது) தேவியுடன் குறைவில்லாத பூசையைச் செய்து, அழி பசி அகன்று = வருத்து கின்ற பசி நீக்கி, சிந்தனை மகிழ=(அவர்கள்) மனத்தி லுவகை பெருக, நாளும் நல் ஊண் சிறப்பு ஓடும் நல்கினன்=நாடோறும் சிறந்த உணவுகளை யன்பொடு மளித்தனர்.

ஆல் - அசை. மாரி பொய்த்த காலத்துங் கௌதமமுனிவர்க்கு வள முண்மையின் விரிவுகளை யெல்லாஞ் சைவ புராணத்திற் கண்டு தெளிக. (௧௭)

அகிறவழ்ந் துறங்குங் கூந்த லகலிகை கணவ னில்லி
னகைபடு மமுத மென்னு நாடொறு மடிசின் மாந்தித்
தகவொடு முனிவர் யாருஞ் சார்ந்திடு நாளிற் றூய
முகில்வளஞ் சுரந்து மின்னி மொய்ம்மழை பொழிந்த தன்றே.

(இ-ள்.) முனிவர் யாரும்=இருடிக ளெவரும், அகில் தவழ்ந்து உறங்கும் கூந்தல் அகலிகை கணவன் இல்லில்=அகிற்புகை தங்கி வசிக்கு மளகத்தினை யுடைய அகலிகைக்கு நாயகராகிய கௌதம முனிவரது பன்ன சாலையில், நாள் தொறும்=தினந்தோறும், நகை படும் அமுதம் என்னு = தெளிவு பொருந்திய தேவாமிர்த மென்று சொல்லி, அடிசில் மாந்தி=உணவுகளைப் புசித்து, தகவு ஒடு சார்ந்திடும் நாளில் = பெருமையோடு மிருக்குங் காலத்தில், தூய முகில் வளம் சுரந்து மின்னி = சுத்தமாகிய மேகங்களின் வளங்க ணிறைந்து தடித்து, மொய் மழை பொழிந்தது=நெருங்கிய மழை பெய்தது.

வளங் கொண்ட முகிலைக் "கருவிமாமழை" யென்றான் நைடதத்தும். முகிலுக்கு வளமாவது நீர்கொள்ளல், மின்னல், இடித்தல், முழங்கன் முதலாயின. "நல்லா ரொருவ ருளரே யவர்பொருட் - டெல்லார்க்கும் பெய்யு மழை." என் றுரைக்கப்பட்டபடி, கோல் கோடிய அக்காலத்தும் மழைச் சோனை வந்த தென்க. அன்று-ஏ-அசைகள். (௧௮)

பன்னிரு பருவத் துள்ள பசிப்பிணி வெருவி யோட
மின்னிவான் பொழிந்தெஞ் ஞான்று மிகுவளஞ் சுரத்த லோடு
மன்னிய முனிவர் தத்த மனைமருங் கெய்த வெண்ணிப்
பொன்னிறக் கபிலை மாயைப் புணர்ப்பினு லமைத்து விட்டார்.

(இ-ள்.) பன்னிரு பருவத்து உள்ள பசி பிணி வெருவி ஓட = பன்னிரு வருடம் வரையுஞ் சம்பவித்திருந்த பசி நோய் அச்சமுற் றோடவும், வான் = மேகங்கள், மின்னி பொழிந்து = மின்னல் செய்து மழையைச் சொரிந்து, எஞ்ஞான்றும் மிகு வளம் சுரத்த லோடும்=எந்நாளினு மிக்க வளப்பங்கள் பெருகுதலும், மன்னிய முனிவர் = அங்கிருந்த விருடியர்கள், தம் தம் மனை மருங்கு எய்த எண்ணி=தங்கள் தங்களது இருப்பிடங்களுக் குச் செல்ல நினைந்து, பொன் நிறம் கபிலை = பொன்னிறம் வாய்ந்த கபிலைப் பசுவொன் றனை, மாயை புணர்ப்பினல் அமைத்து விட்டார் = மாயைச் சூழ்ச்சியினல் உண்டாக்கிச் செலுத்தினர்கள்.

தூமகேது உலகத்திற் குற்பாத மாமாறு போல மழை பின்பெய்தலை முன் காட் டுங் குறியாயுள்ளது மின்ன லாகலான் அதனை விதந்தான். இங்ஙனமே "மின்னுக் கெல் லாம் பின்னுக்கு மழை" என்றார் தெய்வப்புலமை ஔவையாரும். கபிலை யென்றது கரு மை கலந்த பொன்னிற முடைய பசுவை. விருந்தினராய் வந்த முனிவரை விடக் கௌதம னார்க்கு விருப்பின்மையான் அவ்வாறு சூழ்ந்து விடுத்தார் எனக் கொள்க. கோவினின்றுந் தோன்றின கௌதமனர்க்கு அதைக் கண்டவுடன் தயை சிறக்குமாதலின் கபிலையை விடுத் தார் போலும். கோ=பசு. பருவம் என்றது வருடத்தைக் குறித்தது. (௧௯)

ஊதினும் பறக்கு மென்ன வுயர்நரம் பெழுந்து தோன்றப்
போதரு தொறுவை நோக்கிக் கோதமன் புரிவி னேடுந்
தீதுரு தளித்து மென்னச் சென்றுமெய் தொடலு மாழ்கி
வேதனை யுழந்து பாரின் வீழ்ந்துயிர் மறிந்த தன்றே.

(இ-ள்.) ஊதினும் பறக்கும் என்ன = (வாயினால்) ஊதினாலும் (சருகுபோலப்) பறக்கும் என்று சொல்லும்படி, உயர் நரம்பு எழுந்து தோன்ற=மேற்பட்ட நரம்புகளும் மிதந்து காணப்பட, போதரு தொறுவை கோதமன் நோக்கி = வந்த பசுவைக் கௌதம முனிவர் பார்த்து, தீது உறாது அளித்தும் என்ன = கேடு வாராமற் காப்பேமென்று (நினைத்து) புரிவின் ஓடும்=ஆசையுடன், சென்று மெய் தொடலும் = போய் அப் பசுவினது மேனியைப் பரிசித்த மாத்திரையே, மாழ்கி வேதனை உழந்து = (அது) இரங்கி வருத்தமுற்று, பாரின் வீழ்ந்து = பூமியின் மேல்விழுந்து, அன்றே உயிர் மறிந்தது=அப் பொழுதே பிராணன் நீங்க இறந்தது.

பசுவிற்கு நேர்ந்த துன்பங்களை நீக்கிக் காத்தல் மேலான சிவதருமமாய் முத்தியிற் கூட்டு மாகலானும், காவாது விடுவராயின் கொடிய நரகத்திற் கிரையாவா ராகலானும் கௌதம முனிவருங் காக்கப் போனார் என்பதாம். இவற்றை "வலஞ்செய் தாக்களை வாழ்த்தி வணங்கியே-நலஞ்செய் தார்புல்லு காவிற் கொடுத்துடல்-விலங்கை விட்டும் விமலன் புரத்துளே-யிலங்கிச் சுற்றத் தொடுமிருப் பார்களே.—காக்கி லாரையுங் காக்கு மவ்வரையு - நோக்கு காடொறு நோக்கில னாகிலுங் - காக்கி லாரைக் கடிகில னாகினுந் - தீக்குக் காட்ட மெனக்கனல் சேர்வனே." என உபாகமத்து ளொன்றாய சிவதருமோத்தரத்திற் கோபுரவியலிற் கூறப்பட்டவற்றா னறிக. அன்று-ஏ-அசைகள். (௨௦)

95 ஆனுயி ரிறத்த லோடுங் கௌதம னழுங்கி மாழ்க
நான்மறை முனிவர் யாரு மாவுயிர் கடிந்தோ ரில்லிற்
றானினி தருந்திற் றீது தலைப்படு மென்ன வோதித்
தேனலர்ப் பொதும்பர் சூழுந் தாருகா வனத்திற் சேர்ந்தார்.

(இ-ள்.) ஆன் உயிர் இறத்தலோடும்=பசுவினுயிர் நீங்குதலும்,கௌதமன் அழுங்கி மாழ்க=கௌதம முனிவர் வருந்தி மயங்க, நான் மறை முனிவர் யாரும்=நான்கு வேதங்களையு முணர்ந்த இருடிகள் யாவரும், ஆ உயிர் கடிந்தோர் இல்லில் = பசுவினுயிரைக் கொன்றவரது கிருகத்தில், தான்=உணவை, இனிது அருந்தில்=விருப்புடன் உண்டால், தீது தலைப் படும் என்ன ஓதி = பாவஞ் சேருமென்று இரங்கிச் சொல்லி, தேன் அலர் பொதும்பர் சூழும்=தேன் பரந்த புட்பங்கள் செறிந்துள்ள சோலை சூழ்ந்த, தாருகாவனத்தில் சேர்ந்தார்=தாருகா வனத்தை யடைந்தனர்.

புலையர் வீட்டிலுண்போன் புலையனா மாறுபோலக் கொலைஞர் வீட்டில் உண்பவனும் அவர் செய்த பாவத்தை யடைவானாகலின் "ஆவுயிர் கடிந்தோ ரில்லிற்-றானினி தருந்திற் றீது தலைப்படும்" என்று கூறப்பட்டது. அதனை "கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்=கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடம தாகும்-புலையர்த மனையி லுண்போன் புலையனா மாறு போலக் - கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே." என்னும் பதிபசுபாசவிளக்கச் செய்யுளா னுணர்க. (௨௧)

96 கோதமன் ஞானக் கண்ணாற் குறித்தினி துணர்ந்து நோக்கி
மாதவ ரிழைத்த தீதென் றறிந்துநான் மறைவல் லோர்கள்
வேதநூ லொழுக்க மாறி விடையவ னன்பிற் றீர்ந்து
தீதுறு நரகின் வீழ்க வென்றுவெஞ் சினத்தின் வைதான்.

(இ-ள்.) கோதமன் ஞானம் கண்ணால் குறித்து இனிது உணர்ந்து நோக்கி=கௌதம முனிவர்(அதனை)ஞானக்கண்ணால் உய்த் துணர்ந்து நன்காராய்ந்து,மாதவர் இழைத்த தீது என்று அறிந்து=முனிவர்கள் செய்த வஞ்சனை யென் றுணர்ந்து,நான்மறை வல்லோர்கள் = (அந்த) முனிவர்கள், வேதம் நூல் ஒழுக்கம் மாறி=வேத நூலில் விதிக்கப் பட்ட

ஒழுக்கத்தினின்றும் பிழைத்து, விடையவன் அன்பின் தீர்ந்து = இடபவாகனராகிய சிவபெருமானிடத்து அன்பின்றி, தீது உறு நரகின் வீழ்க என்று = கொடிய நரகங்களில் விழுந்து வருந்தக் கடவர் என்று, வெம் சினத்தின் வைதான் = கொடிய கோபத்தினுற் சபித்தனர். (உஉ)

வைதவெஞ் சாபந் தன்னுன் மறைபயின் முனிவர் யாரு
மைதுணர் விழந்து வேத முதலிய வனைத்து நீங்கிச்
செய்தவ வொழுக்க மாறித் தீவினைச் சிமிழ்ப்புண் டாரு
மெய்துதற் கரிதாம் வெய்ய விடர்க்கட லதனின் வீழ்ந்தார்.

(இ-ள்.) மறை பயில் முனிவர் யாரும்=வேதங்களை யத்தியயனஞ் செய்யும் இருடிகளெவரும், வைத வெம் சாபம் தன்னுல் = (கௌதமர்) சபித்த வெவ்விய சாபத்தினுல், ஐது உணர்வு இழந்து=நல்ல அறிவு குறைந்து, வேதம் முதலிய அனைத்தும் நீங்கி= வேத மோதுதன் முதலிய(நற்கிரியைகளை)எல்லாம் விடுத்து, செய் தவம் ஒழுக்கம் மாறி= செய்தற் குரிய தவவொழுக்கத்தையும் மாறுகக் கொண்டு, தீ வினை சிமிழ்ப்பு உண்டு= கொடிய கன்மமாகிய (தளையினுல்) கட்டப்பட்டு, ஆரும் எய்துதற்கு அரிது ஆம் = எவ்வகைப் பாதகரும் அடைதற் கரியதாய, வெய்ய இடர் கடல் அதனின் வீழ்ந்தார் = மிக்க துன்பமாகிய சமுத்திரத்தில் முழுகினர். (உ௩)

தீவினை யுழக்கும் வேத முனிவரர் சிறுகட் பேழ்வாய்ப்
பாவடிப் பரும யானை யுரித்தபண் ணவனு மந்தண்
பூவைமே னியனும் வைகு மவையினிற் புகுந்து போற்றி
யோவுறு துடற்றுஞ் சாப மொழியுமா றுரைக்க வென்றுர்.

(இ-ள்.) தீ வினை உழக்கும் வேதம் முனிவரர்=பாவச் செய்கைகளால் வருந்தும் இருடியர்கள், சிறு கண் = சிறிய விழிகளையும், பேழ் வாய் = பிளவுபட்ட வாயினையும், பா அடி பருமம் யானை உரித்த பண்ணவனும் = பரந்த கால்களையு முடைய பெரிய யானையின் றேலை யுரித்துத் தரித்த சிவபெருமானும், அம் தண் பூவை மேனியனும் = அழகிய குளிர்ந்த காயாம்பூப்போன்ற வடிவினராய திருமாலும், வைகும் அவையினில் புகுந்து= இருந்த சபையின்கட் சென்று, போற்றி=துதித்து, ஓ உறுது=ஒழிவில்லாமல், உடற்றும் சாபம்=வருத்துகின்ற (கௌதம முனிவரிட்ட) சாபம், ஒழியும் ஆறு உரைக்க என்றுர்= நீங்கும் விதத்தைக் கூறியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

யானையை யுரித்த சரிதமாவது:—யானை வடிவுடைய கயாசுர னென்பவன் மேருமலையி னிடத்துச் சென்று பிரமனை நோக்கித் தவமிருக்க, அவன் தோன்றி வேண்டிய வரங்களை யெல்லாங் கொடுத்து, அன்பனே! அந்திவண்ணனுழை யெதிர்ப்பையே லிவை யந்தமாகுமென் றறைந்து சென்றனன். கயாசுரன் சிவபெருமானை யெதிர்க்காது மற்றையாருடன் பொருது வெற்றி கொள்வே மென்று புறப்பட்டு, தேவபதங்க டோறுஞ் சென்று சென்று வென்று, சுவர்க்கத்திற்குப் போயினன். ஆங் கிந்திர னெதிர்க்க வவனை முறியடித்து, ஐராவதத்தின் நான்கு கொம்பர்களையும் முரித்து, வாலிற் பற்றிச் சுழற்றிக் கிழறைந்து, பொன்னுலகையு மெரியிற் புகுத்தி மீண்டு, ஏனைய திக்குப் பாலகர், அரக்கர், அவுணர்கள்,மனுடர்கள் முதலாயினுரையுங் கொன்று குலைத்து முனிவர்பாற் செய்ய, அன்னவர் யாவரும் மன்னிய காசி மாதல மடைந்தனர். இன்னவன் ஆண்டேர் துரந்து செல்ல, அறவோர் அஞ்சி, இணை மிகலின்றி யெழுந்தருளும் விசுவநாதனை யடைக்கலங் கொண்டனர். அதுகண்ட அசுரன் உருத்து மணிகன்றிகை வாயிலை யிழுத்தான். பெருமான் முனிவர்களின் பேரோலத்திற் கருள்சுரந்து,உக்கிர வடிவமுற் றெழீஇ யுரித்துத் தரித்தருளினர் என்று கந்தபுராணங் கூறிற்று. (உ௪)

நெற்றித் தழற்கட் பெரியோனு நேமி யோனு மீங்கிவர்க
ளுற்ற தீமை் நிரயத்திற் பன்னு ளுழப்பி னல்லாது
முற்று ருதென் றுளத்தெண்ணித் தீமை பயக்கு முன்னூல்கள்
சொற்ரு ரவரை மதிமருட்ட முனிவ ரவற்றிற் றுவக்குண்டார்.

(இ·ள்.) நெற்றி தழல் கண் பெரியோனும்=நெற்றியில் அக்கினிக்கண்ணை யுடைய பரம்பொருளாகிய சிவபெருமானும், நேமியோனும் = சக்கரபாணி யாகிய திருமாலும், ஈங்கு இவர்கள் உற்ற தீமை = இங்கு வந்த இவர்கள் கொண்ட பாவம், நிரயத்தில் பல் நாள் உழப்பின் அல்லாது = நரகத்திற் பல கற்ப காலம் வீழ்ந்து அநுபவித்தன்றி, முற்று உறாது என்று உளத்து எண்ணி = முடிவு பெறாதென்று (தமது) மனக்க ணினைத்து, அவரை மதி மருட்ட = அம் முனிவர்களது அறிவை மயக்கும்படி, தீமை முன் பயக்கும் நூல்கள் சொற்ரூர் = தீவினைகளை மேன்மேலும் விளைக்கும் நூல்களைச் சொன்னார்கள், முனிவர் அவற்றின் துவக்குண்டார்=இருடியர்கள் அந்நூல்கள் வழியிற் கட்டுப் பட்டனர்.

அன்ன நூலின் வழிநூல்கண் முனிவ ரோதி யஞரெய்தி
யின்னற் கடலுள் வீழ்ந்திடலு மெம்மா னதனுக் குளமிரங்கிப்
பன்னு மறையோர் துயர்தீர்ப்பான் பலியேற் றுண்ட றலைக்கிடாய்
மன்னு முயர்தா ருகவனத்தி னன்னோர் சாலை மருங்கடைந்தான்.

(இ-ள்.) முனிவர்=இருடிகள், அன்ன நூலின்=அந்த நூல்களின்படி, வழி நூல்கள் ஓதி அஞர் எய்தி=வழி நூல்களைச் சொல்லி யொழுகி யஞ்ஞானமுற்று, இன்னல் கடலுள் வீழ்ந்திடலும்=துன்ப சாகரத்தின் முழுகி யிருத்தலும், எம்மான் அதனுக்கு உளம் இரங்கி = எமது கடவுளாய சிவபெருமான் அதற்குத் திருவுள மிரங்கி, பன்னும் மறையோர் துயர் தீர்ப்பான்=சொல்லப்பட்ட முனிவர்களது துன்பத்தை நீக்கும் பொருட்டு, பலி ஏற்று உண்டல் தலைக்கிடாய்=பிச்சையெடுத் துண்ணலைக் காரணமாக்கொண்டு, மன்னும் உயர் தாருக வனத்தின் = நிலைபெற்ற பெருமை வாய்ந்த தாருகா வனத்தின்கண், அன்னோர் சாலை மருங்கு அடைந்தார்=அவர்களது பன்ன சாலையின் பக்கத்திற் சென்றனர்.

எம்பெருமான் இயற்கையே யருளுடைய னாதலால், முனிவ ரின்ன தீர்த்து மும்மல மோசித்துத் திருவடி முத்தி சேர்க்க நினைந்தனன். இது மார்ச்சார சம்பந்தமாய் மறக்கருணையின் பாற்படும். இக்கருத்து "மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி" எனவருஞ் சிவஞான சித்தியார்த் திரு விருத்தத்தானுந் தெளியப்படுதல் காண்க. (உ௬)

வெயில்வீற் றிருக்குங் கடவுண்மணி விளக்கு மார்பன் முதலமர
ரயில்வீற் றிருக்கு மதர்நெடுங்க ணங்நல் லோதி சிலைப்புருவ
மயில்வீற் றிருக்கு மென்சாயன் மகளி ராகி வரையுயிர்த்த
குயில்வீற் றிருக்கு மந்தீஞ்சொற் கோதை யேவற் றலைநின்றார்.

(இ-ள்.) வெயில் வீற்றிருக்கும் கடவுள் மணி விளங்கும் = ஒளி செறிந்திருக்குந் தெய்வத் தன்மை பொருந்திய கௌத்துவ ரத்தினந் துலங்கும், மார்பன் முதல் அமரர்= மார்பினை யுடைய திருமால் முதலிய தேவர்கள், அயில் வீற்றிருக்கும் மதர் நெடு கண்= வேலாயுதம் வீற்றிருந்தாற் போன்ற மதர்த்து நீண்ட விழிகளையும், அம் நல் ஓதி=அழகிய நன்மையான கூந்தலையும், சிலை புருவம்=விற்போன்ற புருவங்களையும், மயில் வீறு இருக்கு மென் சாயல்=மயிலினது பெருமை கொண்ட மென்மை யாகிய சாயலையு முடைய, மகளிர் ஆகி=தேவமகளிர் வடிவுற்று, வரை உயிர்த்த=பருவத ராசன் பெற்ற, குயில் வீறு இருக்கும் = குயிலின் அகங்காரத்தையும் அடக்கும், அம் தீம் சொல் கோதை = அழகிய

இனிமையாகிய மொழிகளை வசனிக்கின்ற உமாதேவியாரது, ஏவல் தலை நின்றார் = ஏவலின் வழிநின்றனர்.

சிவபெருமான் தாருக வனத்திற் கெழுந்தருள, உமாதேவியார் மந்தரமலையிற் சென்றிருந்தனர் என்பது வருவிக்க. அப்போது திருமால் முதலிய தேவர்கள் அரமகளிராகி, அம்மையாரது ஏவல்களைச் செய்திருந்தனர் என்பதாம். (௨௭)

ஆல முயிர்க்கு முத்தலைவே லடுபோர் நந்தி யமரரொடுங்
காலக் கனல்கட் கடைகவிழ்க்குங் கணங்கள் யாவுஞ் சூழ்போதப்
பால்வெண் ணீற்றி னொளிபழுத்த படிவத் தண்ணல் பங்குறையு
ஞாலம் பூத்த சிற்றுதரத் தணங்கி னேவ னயந்திருந்தான்.

(இ-ள்.) ஆலம் உயிர்க்கும் மு தலை வேல்=விடத்தைக் கக்கும் மூன்று கவருடைய சூலாயுதத்தினால், அடு போர் நந்தி=கொல்லும் போர்த்தொழிலில் வல்ல நந்திதேவர், அமரர் ஒடும் = (எஞ்சிநின்ற) தேவர்களோடும், கண் கடை காலம் கனல் கவிழ்க்கும்=விழிகளின் கடையி னின்றும் ஊழித்தீயைச் சொரியும், கணங்கள் யாவும் சூழ் போத = பூதகணங்க ளெல்லாமுஞ் சுற்றி நிற்ப,பால் வெள் நீற்றின் ஒளி பழுத்த=பால்போன்ற வெள்ளிய திருநீற்றின் பிரகாசம் மிகுத்த, படிவத்து அண்ணல் பங்கு உறையும்=திருமேனியையுடைய சிவபெருமானது வாமபாகத்தின்கண் வீற்றிருக்கும், ஞாலம் பூத்த சிறு உதரத்து = உலகங்களை யெல்லாம் பெற்ற சிறிய திருவயிற்றினை யுடைய, அணங்கின் ஏவல் நயந்து இருந்தான்=உமாதேவியாரது குற்றேவல்களை விரும்பி யிருந்தனர்.

நந்தி தேவர் எஞ்சிய தேவரும் பூதருஞ் சூழ்ந்து நிற்ப, எம்மன்னையாரது குற்றேவலைச் செய்வா னிருந்தனர் என்பது கருத்து. (௨௮)

அனைய காலை விசும்பளக்கு மம்பொற் குடுமி மந்தரத்திற்
கனைதெண் டிரைநீர்க் கடல்கிளர்ந்தா லென்னக் கலின மாப்பூண்ட
புனைபொற் கொடிஞ்சி மணிநெடுந்தேர் முதனாற் படைகள் புடைசூழச்
சினவுங் கொல்லேற் றடலரியிற் சென்றா னந்த காசுரனே.

(இ-ள்.) அனைய காலை=அவ்வாறாய சமையத்தில், அந்தக அசுரன்=அந்தகன்என்னும் அசுர னென்பான்,கனை தெள் திரை நீர் கடல் கிளர்ந்தால் என்ன=ஒலிக்கின்ற தெள்ளிய அலைகள் மறியும் நீர் கொண்ட சமுத்திரம் பொங்கினாற்போல, கலினம் மா பூண்ட=கடிவாளம் பூண்ட குதிரைகள் கட்டப்பட்ட, பொன் புனை கொடிஞ்சி மணி நெடு தேர் முதல்=பொன்னாற் செய்த கூவிரங்களை யுடைய அழகிய நீண்ட இரதங்கள் முதலிய,நால் படைகள் புடை சூழ = சதுரங்க சேனைகளும் பக்கத்திற் சூழ்ந்துவர, விசும்பு அளக்கும் அம் பொன் குடுமி மந்தரத்தின்=ஆகாயத்தை யெட்டுகின்ற அழகிய பொன்மயமான சிகரங்களை யுடைய மந்தர மலைக்கண், சினவும் அடல் கொல் ஏறு அரியின் சென்றான்=கோபமும் வீரமு முடைய கொல்லுந் தொழில் கொண்ட ஆண் சிங்கத்தைப் போல வந்திறங்கினன். (௨௯)

அரில்பூத் தலர்ந்த வுள்ளத்தி னவுணன் மடமை மீதுர
வரிபூத் தலர்ந்த மதர்நெடுங்க ணணங்கைக் கவர்வான் வந்தனனென்
றெரிபூத் திலங்கு முத்தலைவே லேந்தி நந்தி முதலானோர்
செருவேற் றெழுந்தார் வாட்டலைகள் புகையச் சாரி திரித்தனரால்.

(இ-ள்.) நந்தி முதலானோர் = திருநந்தி தேவர் முதலாயினோர், அரில் பூத்து அலர்ந்த உள்ளத்தின் அவுணன்=குற்ற மிகுந்து விரிந்த மனத்தையுடைய அந்தகாசுரன்,

மடமை மீது ஊர=அறியாமை மிகப் பெருக, அரி பூத்து அலர்ந்த மதர் நெடு கண்=செவ்வரி கிளர்ந்து பரந்த மதர்த்து நீண்ட கண்களை யுடைய, அணங்கை கவர்வான் வந்தனன் என்று = உமாதேவியாரை யபகரிக்கும்படி யிவ்விடம் வந்திறங்கினன் என்று நினைத்து, எரி பூத்து இலங்கு மு தலை வேல் ஏந்தி=அக்கினி கான்று விளங்குஞ் சூலமுதலிய ஆயுதங்களைத்தாங்கி, செரு ஏற்று எழுந்தார்=போர் செய்தற் கிசைந்து எழுந்தவராய், வாள் தலைகள் புகைய=வாளாயுதங்களின் நுதிகள் புகைசெய்ய, சாரி திரித்தனர்=இடசாரி வலசாரியாகச் சுழற்றினர். ஆல் – அசைநிலை. (௩0)

கொல்லேற் றுரிவை புறம்போர்த்த கிடுகு குறங்கின் மிசைத்தூக்கி
யெல்லேற் றொளிகான் றிலங்குதிறல் வடிவாள் விதிரா விதழ்மடியா
மல்லேற் றுயர்ந்த திணிதடந்தோட் கணங்கள் வெகுண்டு வரனோக்கி
யல்லேற் றுடைய விருள்பழுத்த நிறத்தோர் நெஞ்ச மழன்றெழுந்தார்.

(இ-ள்.) கொல் ஏறு உரிவை புறம் போர்த்த=கொல்லுந் தொழில் வாய்ந்த இடபத்தின் றோலினால் மேன்மூடப்பட்ட, கிடுகு குறங்கின் மிசை தூக்கி = கேடகங்களைத் தொடையின் மேற் றொங்க விட்டு, எல் ஏறு ஒளி கான்று இலங்கு = சூரியனிலு மிக்க பிரகாசத்தை வீசி விளங்கும், திறல் வடி வாள் விதிரா=வலிய கூர்மையான வாட்படையைச் சுழற்றி, இதழ் மடியா = உதடுகளை மடித்து, மல் ஏற்று உயர்ந்த திணி தடம் தோள் = மல் யுத்தங்களைச் செய்து வெற்றி கொண்ட வலிய நீண்ட புயங்களை யுடைய, கணங்கள் வெகுண்டு வரல் நோக்கி = பூதகணங்கள் கோபித்து எதிர்த்து வருதலைப் பார்த்து, அல் ஏற்று உடைய இருள் பழுத்த நிறத்தோர்=இருளு மெதிர்த்துத் தோல்வியடையக் கருமை முதிர்ந்த நிறத்தினை யுடைய அசுரர்களும், நெஞ்சம் அழன்று எழுந்தார்=மனங் கோபித்து எதிர்த்தனர். (௩௧)

எழுந்தார் வரிவி னாண்கொளுவி யெய்தார் வைதா ரெரியுமழற்
கொழுந்தா லிமைதீய்ந் திடவிழித்தார் குனித்தார் கொம்மை கொட்டினார்
பிழிந்தார் கணங்க ளுடற்குருதி பில்கி யோட வவைநோக்கி
யழிந்தார் நெஞ்சம் விண்ணோர்க ளவுண ருரறி யார்த்தெழுந்தார்.

(இ-ள்.) எழுந்தார் = எதிர்த்தவர்களாகிய அசுரர்கள், வரி வில் நாண் கொளுவி எய்தார் = வரிந்த வில்லிற் கயிற்றைப் பூட்டி (பாணங்களைப்) பிரயோகஞ் செய்தார்கள், வைதார்=நிந்தித்தனர், எரியும் அழல் கொழுந்தால் = எரிகின்ற அக்கினிச் சுவாலையினால், இமை தீய்ந்திட விழித்தார் = இமைகளு மெரியுமாறு விழித்துப் பார்த்தார்கள், குனித்தார்=ஆடினார்கள், கொம்மை கொட்டினார் = கொம்மை யடித்தார்கள், கணங்கள் உடல் குருதி பில்கி ஓட பிழிந்தார் = பூதகணங்களினது சரீரத்தி லிருந்து இரத்தம் வழிந்தோடப் பிசைந்தார்கள், அவை நோக்கி = அவைகளைப் பார்த்து, விண்ணோர்கள் நெஞ்சம் அழிந்தார்=தேவர்கள் மனமயக்க முற்றார்கள், அவுணர் உரறி ஆர்த்து எழுந்தார் = (அதனைக்கண்ட) அசுரர்கள் மிகவு மூர்க்கங்கொண்டு ஆரவாரித் தெதிர்த்தார்கள்.

கொம்மை கொட்டலாவது இருகரங்களையுங் குவித்தும் விரித்துஞ் சேர்ந்தடிக்கும் ஓர் விளையாட்டு. இதனை இக்காலத்துக் கொம்மி யடித்தல் என வழங்குப. (௩௨)

கூற்றும் வெருவிக் கண்புதைப்பக் குனிக்கும் வரிவிற் றிறன்மணிமா
னேற்றை யுயர்த்த விறனந்தி கண்டா கன்ன னிவர்முதலோர்
சீற்றங் கதுவ வீரொயிறு தின்றுங் கவுணர் படைவெள்ள
நூற்றின் மேலு மொருநொடியிற் கொன்றார் நூழி லாட்டயர்ந்தார்.

(இ-ள்.) கூற்றும் வெருவி கண் புதைப்ப=யமனு மஞ்சிக் கண்களை மூட, குனிக்கும் வரி வில் திறல் மணிமான் = வளைக்கின்ற வரியப்பட்ட விற்போரில் வல்ல மணிமானும், ஏற்றை உயர்த்த விறல் நந்தி = இடபக் கொடியைத் தூக்கிய வீரமுடைய திருநந்தி தேவரும், கண்டா கன்னன் இவர் முதலோர்=கண்ட கன்னன் முதலிய கணத்தலைவர்களும், சீற்றம் கதுவ=கோப மூள, வாள் எயிறு தின்று=ஒளிபொருந்திய பற்களைக் கடித்து, நூழில் ஆட்டு அயர்ந்தார் = கொலை செய்யும் விளையாட்டைக் கொண்டாராய், ஒரு கொடியில்=ஒரு கணப்போதினுள், ஆங்கு = அவ்விடத்துள்ள, அவுணர் படைவெள்ளம் நூற்றின் மேல் ஒரு நொடியில் கொன்றார் = அசுர சேனைவெள்ளத்தை நூற்றுக்கு மேற்பட ஒரு கணப்போதினுள் அழித்தனர். (௩௩)

சூர்த்த நோக்கின் வாளவுணர் தொலைதல் காணு வவுணர்கோ
னார்த்தா னண்ட முகடிடிய வமரர் வயிற்றி னெரிதவழப்
பார்த்தா னரவின் முடிக்கிடந்த வவனி நெளியப் பதம்பெயர்த்தான்
வேர்த்தான் கணங்க டமையள்ளி யண்டச் சுவரின் விட்டெறிந்தான்.

(இ-ள்.) அவுணர் கோன் = அந்தகாசுரன், சூர்த்த நோக்கின் வாள் அவுணர்= அச்சம் விளைக்கும் பார்வையை யுடைய வாளேந்திய அசுரர்கள், தொலைதல் காணு=அழிவதைப் பார்த்து, அண்டம் முகடு இடிய ஆர்த்தான்=அண்டத்தி னுச்சியும் இடிந்து விழ ஆர்ப் பரித்தான், அமரர் வயிற்றின் எரி தவழ பார்த்தான் = தேவர்கள் வயிற்றி னிடத்து நெருப்பு மூள நோக்கினன், அரவின் முடி கிடந்த அவனி நெளிய பதம் பெயர்த்தான்= ஆதிசேடனது தலையிற் பொறுத்த பூமி நெளியும்படி கால்களை யெடுத்து நடந்தான்,வேர்த்தான்=கோபித்தான், கணங்கள் தமை அள்ளி=பூதகணங்களை யெல்லாம் வாரி, அண்டம் சுவரின் விட்டு எறிந்தான்=அண்டச்சுவர்க்கண் விழுமாறு எறிந்தான். (௩௪)

கணங்க ளுடைந்து புறங்கொடுப்பக் காயா மேனித் திருநெடுமா
லணங்கு நோய்செய் வரிநெடுங்கட் சத்தி யொருநூ றமைத்துவிட
நிணங்கொள் வடிவே லந்தகப்பே ரவுணன் றன்னை நிகர்வோரைத்
துணங்கை யயர்ந்து பேய்க்கணங்க டுள்ள மலைதி ரெனவிடுத்தான்.

(இ-ள்.) கணங்கள் உடைந்து புறம் கொடுப்ப=பூதகணங்கள் தோல்வி யடைந்து முதுகு காட்டி யோட, காயா மேனி நெடு திருமால் = காயா மலர் போன்ற வடிவினை யுடைய நெடிய மாயவன்,அணங்கு நோய் செய் வரி நெடு கண் ஒரு நூறு சத்தி அமைத்து விட = (கண்டார்க்குப்) பிரீதியையும் வருத்தத்தையுஞ் செய்கின்ற செவ்வரி பரந்த நீண்ட விழிகளை யுடைய நூறு மாயாசத்திகளை யுண்டாக்கி யனுப்ப, நிணம் கொள் வடி வேல் அந்தகன் பேர் அவுணன் = தசை கொண்ட கூரிய வேற்படை தரித்த அந்தகன் என்னும் பெயரை யுடைய அசுரன், பேய் கணங்கள் துணங்கை அயர்ந்து துள்ள=அலகைக் கூட்டங்கள் துணங்கைக் கூத்தாடித் துள்ளாநிற்ப, தன்னை நிகர்வோரை = தனக்கு ஒப்பான வீரர்களைப் (பார்த்து) மலைதிர் என விடுத்தான் = (அத்தேவர்களுடன்) போர் செய்வீராக வென்று செலுத்தினன். (௩௫)

விடுத்த வோரா யிரமவுணர் விளிய நந்தி முதற்கணங்க
ளடுத்த விண்டு சத்திகள்வந் தடர்த்து வாகை புனைந்திடலுங்
கடுத்தாழ் மிடற்றெங் கண்ணுதலோன் கணங்கட் காற்று துடைந்துபுறங்
கொடுத்தா னுலக மொருமூன்றுங் கொலைசூ ழந்த காசுரனே.

(இ-ள்.) ஒரு மூன்று உலகமும் கொலை சூழ் அந்தக அசுரன்= மூவுலகங்களிலும் கொலைத்தொழில் செய்த அந்தகாசுர னென்பவன், விடுத்த ஓராயிரம் அவுணர் விளிய=

(தோன்) செலுத்திய ஆயிர மசுரர்களும் இறக்கும்படி, நந்தி முதல் கணங்கள் = நந்தி தேவர் முதலிய கண வீரர்களும், அடுத்த விண்டு சத்திகள்=சேர்ந்துள்ள விஷ்ணு சத்திகளும், வந்து அடர்த்து வாகை புனைந்திடலும்=ஒருங்கு கூடி வந்து போர்புரிந்து வெற்றி மாலை சூடுதலும், கடு தாழ் மிடறு எம் கண் நுதலோன் கணங்கள் கு=நஞ்சார்ந்த திருக்கண்டத்தினை யுடைய எமது நெற்றிக்கண்ண ராகிய சிவபெருமானது கணங்களுக்கு, ஆற்ருது உடைந்து புறம் கொடுத்தான் = எதிர் நிற்க முடியாமல் தோற்று முதுகுகாட்டியோடினுன். (௩௬)

அன்ன தாலே முனிவரர்க ளமரு முயர்தா ருக்வனத்திற்
பன்னீ ராண்டு நல்லருளிற் பலியேற் றுலவி வார்சடையிற்
பின்னற் றிரைவான் புனற்கங்கை முடித்த பெம்மான் பிறைதவழும்
பொன்னங் குடுமி மந்தரமால் வரையின் விழைவிற் போந்தனனுல்.

(இ-ள்.) அன்ன காலை = அந்தச் சமையத்தில், வார் சடையின் பின்னல் திரை வான் புனல் கங்கை முடித்த பெம்மான் = நீண்ட சடைமுடிக்கண் நெருங்கிய அலை பொருந்திய பெரிய நீர்கொண்ட கங்கை நதியை யணிந்த சிவபெருமான், முனிவரர்கள் அமரும் உயர் தாருக வனத்தில்=இருடி சிரேட்டர்கள் வசிக்கும் மேன்மையாகிய தாருகா வனத்தில், நல் அருளில்=நல்ல திருவருட் குணத்தினுல், பன்னீராண்டு பலி ஏற்று உலவி=பன்னிரண்டு வருடம் ஐயமேற்றுத் திரிந்து, பிறை தவழும் பொன் அம் குடுமி=பிறைச்சந்திரன் மெல்லென நடக்கின்ற பொன்போன்ற அழகிய சிகரங்களை யுடைய,மால் மந்தர வரையின்=பெரிய மந்தர மலையினிடத்து, விழைவின் போந்தனன்=விருப்புடன் சென்றனர். (௩௭)

அருவி மதவெங் கவுட்கலுழி வேழ முகன்வா னகடணவுங்
குருகு பெயர்க்குன் றிறவெறிந்த குமர னடுபோர் விறனந்தி
செருவெங் கோலத் தலங்கிலைவே றிரிக்குங் கால வைரவன்வெம்
பரிதி வடிவேற் கணங்களொடும் பரமன் பாதம் பணிந்தனரால்.

(இ-ள்.) அருவி வெம் கவுள் மதம் கலுழி வேழமுகன்=அருவி போல வெவ்விய கபோலமத மாகிய கான்யாறு வழியும் யானை முக விநாயகக் கடவுளும்,வான் அகடு அணவும் குருகு பெயர் குன்று இற எறிந்த=ஆகாயமுகட்டை யளாவும் கிரவுஞ்சம் என்னும் பெயரை யுடைய மலையழியுமாறு (வேலாயுதத்தை) வீசிய, குமரன்=குமாரக் கடவுளும், அடுபோர் விறல் நந்தி=கொல்லும்போர் வீரமுடைய நந்தி தேவரும், வெம் செரு கோலத்து அலங்கு இலை வேல்திரிக்கும் காலவைரவன்=கொடிய போர்க்கோலங் கொண்டு பிரகாசிக்கின்ற மூவிலை வேலாகிய சூலாயுதத்தைச் சுழற்றும் காலவைரவக் கடவுளும், வெம் பரிதி வடி வேல் கணங்கள் ஒடும்=வெப்பமுடைய சூரியனைப் போன்ற கூரிய வேலாயுதத்தை யேந்திய பூத கணங்களுடன், பரமன் பாதம் பணிந்தனர்=சிவபெருமானது திருவடிகளை வணங்கினர்.

குருகு பெயர்க்குன்ற மிறவெறிந்த சரிதமாவது:—மேருமலையுடன் பகைத்து உயர்ந்து வளர்ந்த விந்தமலையி னகங்காரத்தை யடக்கும் வரத்தைப் பெற்ற அகத்தியனூர் சிவபூசைக்காகக் கயிலைக்க ணுள்ள எழுவகை நதிகளுட் சிறந்த காவிரியாரைச் சிவபெருமானருளக் கமண்டலக்க ணிரப்பி,தென்றிசைப் போதுகின்றூர் சற்புத்திரப் பேற்றினிமித்தம் விதர்ப்பராசன் மகளான உலோபாமுத்திரையை வேட்டுச் சித்தனை யீன்று, தாரகன் வைகும் மாயாபுரக்கண் சார்ந்தனர். அவ்வுழிக் காவல் கொண்டிருந்த மாயத்தில் வல்லானோருவனன் சகத்தின்மிகுத்த தவத்திற் கதித்த அகத்தியனூரவரை யநேக மாயைத்

தொழிலான் மயக்கா நின்றனன். முனிவரர் பெருமான் அச்சோ! ஈதோர் வஞ்சகப் புணர்ப்பென வெண்ணி, ஞானக்கண்ணு லுண்ணுடி யூழ்த்திறன் றெரிந்து வெகுண்டு, கரதலம் புடைத்து நகைத்து, குன்றுருவா யிருந்த கிரவுஞ்சன் வன்மை நீங்கத் தண்டாற் றுக்கிச் சாபஞ் சாற்றுவான். மாண்மதி பெருத கொடியோய்! நின்னுரு நீங்கி யிவ்வுருவே மன்னுருவாய் நிற்றி. நின்று முனிவர் தேவர்க்கும் பன்னுட் டீத்தொழி லிழைத்தி. பின்னுட் செந்தமிழ்ப் பரமாசாரிய எம்பெருங் கடவுளாய திருவேங்கட பதித்தெய்வம் ஈண்டெழுந்தருளித் தந் திருக்கரமிருக்கும் எதிரிலாத கதிரைவேலை நின்பாற் செலுத்த வன்மையிழந்து துரும்புபோலப் பொடியிற் சிதைந்து விரைவின் விளிகுதியென் றகன்றனராக; அவுணனு மாண்டு நின்றனன். ஈரமிலாத தாரகனுறையுளா மாறுகண்டு போரில்வந்த ஏரகக் கடவுள் வேலேவி யெறிந்தா னென்று புராணங் கூறிற்று. (௩௮)

கொங்கு கமழு மலர்ப்பொகுட்டி லுறையுங் கோதின் மறைக்கிழவ
னங்கண் விசும்பு பொதுநீக்கி யளிப்போன் வெய்ய தழற்கடவுள்
வெங்கட் கூற்றுஞ் சுறவுயர்த்த வெள்வேல் வருணன் முதற்றேவர்
திங்கட் குழவி வனைந்தசடைத் தேவின் கமலத் தாள்பணிந்தார்.

(இ-ள்.) கொங்கு கமழும் மலர் பொகுட்டில் உறையும் = வாசனை மணக்கின்ற தாமரைப்பூம் பொகுட்டில் வீற்றிருக்கும், கோது இல் மறை கிழவன் = குற்றமற்ற வேதங்களில் வல்ல பிரமனும், அம் கண் விசும்பு பொது நீக்கி அளிப்போன் = அழகிய இடமகன்ற தேவலோகத்தைப் பொதுவின்றிக் காக்கும் இந்திரனும், வெய்ய தழல் கடவுள் = வெப்பமுள்ள அக்கினி தேவனும், வெம் கண் கூற்றும் = கொடிய விழியையுடைய யமனும், சுறவு உயர்த்த வெள் வேல் வருணன் முதல் தேவர் = மகரக் கொடிநாட்டிய வெள்ளிய வேற்படை யேந்தும் வருணன் முதலிய தேவர்களும், குழவி திங்கள் வனைந்த சடை தேவின் = பிள்ளைமதி சூடிய வேணியை யுடைய சிவபெருமானது, கமலம் தாள் பணிந்தார் = தாமரை மலர்போன்ற திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். (௩௯)

பணிந்த குமரர் தனையெடுத்தாங் குச்சி மோந்து பரிவினெடும்
வணங்கு மமர ருளங்களிப்ப மகிழ்வி னேக்கி மறைக்கிழவ
னணங்கு முரக கங்கணத்தை யேந்த வளகைக் கிறைவழுத்தக்
கணங்கொண் மணிகூ ரிருடுருவிக் கதிர்செய் கோயி லுட்புகுந்தான்.

(இ-ள்.) ஆங்கு = அப்போது (பரமசிவன்) பணிந்த குமரர் தனை யெடுத்து = (தம்மை) வணங்கிய புத்திரர்களைத் திருக்கரத்தா லெடுத்து, உச்சி மோந்து = உச்சியை மணந்து, பரிவின் ஒடும் வணங்கும் அமரர் உளம் களிப்ப = அன்புடன் பணிந்த தேவர்களது மனத்துக் களிதோன்ற, மகிழ்வின் நோக்கி = உவகை யுடன் திருக்கடைக்கணேக்கஞ் செய்து, மறை கிழவன் அணங்கும் உரகம் கங்கணத்தை ஏந்த = பிரமன் அழகிய சர்ப்பகங்கணத்தைத் தாங்கவும், அளகைக்கு இறை வழுத்த = குபேரன் றுதிகூறவும், கணம் கொள் மணி = கூட்டமாகிய இரத்தினங்கள், கூர் இருள் துருவி கதிர் செய் = மிக்க இருளைத் துரந்து ஒளிசெய்யா நிற்கும், கோயில் உள் புகுந்தான் = மந்திரத்துட் பிரவேசித்தனர். (௪௦)

கரைகொன் றிரங்குங் கருங்கடலி னஞ்சு மமிழ்துங் கடையுயிர்க்கும்
பொருவே னெடுங்க ணரமகளிர் பொன்னங் கவரி புடையிரட்ட
நிரைவா லுளைய பைங்கண்ண புலவு கமழு நீளெயிற்ற
வரிமீச் சுமந்த மலரணையி னண்ணல் செம்மாந் திருந்தனனால்.

(இ-ள்.) கரை கொன்று இரங்கும் கரு கடலின் = கரையை யழித்து முழங்குங் கரிய சமுத்திரத்திற் றோன்றிய, நஞ்சும் அமிழ்தும் கடை உயிர்க்கும் = விடத்தையும் அமிர்

த்தையும் கடையிடத்தாற் கக்கும், பொரு வேல் நெடு கண் அரமகளிர்=போர்த்தொழிற் குரிய வேல்போன்ற நீண்ட விழிகளை யுடைய தேவப்பெண்கள், பொன் அம் கவரி புடை இரட்ட = பொற்பிடி கொண்ட அழகிய சாமரைகளைப் பக்கத்தி னின்று அசைக்கவும், நிரை வால் உளைய=ஒழுங்காய வெள்ளிய பிடர் மயிரை யுடையதும், பை கண்ண=பசிய விழிகளை யுடையதும், புலவு கமழும் நீள் எயிற்ற=புலால் மணம் வீசும் நீண்ட பற்க ளுள் ளதும் ஆகிய, அரி மா சுமந்த மலர் அணையின் = சிங்க வேற்றினாற் றாங்கப்படுகின்ற பூவ மளிக்கண், அண்ணல் செம்மாந்து இருந்தனன்=பெருமையிற்சிறந்த சிவபெருமான் வீற் றிருந்தனர். (௪௧)

இமையாக் கருங்கண் முலைதாங்கி யிடுகு மிடைபோ யுள்வாங்க 116
வமையார் தடந்தோள் வளைபுலம்ப வம்பொற் சிலம்பு கிடந்தலற
வுமையா ளோடும் பெண்ணுருவம் வாய்ந்த திருமா லுவந்தெய்தித்
தமரக் கடலின் விடமயின்ற தலைவ னடியிற் றாழ்ந்தனனால்.

(இ-ள்.) இமையா கரு கண் முலை தாங்கி = சுருங்குத லில்லாத கரிய சூசுகத்தை யுடைய தனங்களைச் சுமந்து, இடுகும் இடை போய் உள் வாங்க = சுருங்கிய நுசுப்புத் தேய்ந்து உள் வளையவும், அமை ஆர் தடம் தோள் வளை புலம்ப=மூங்கில் போன்ற பெரிய தோள்களி லணிந்த வளையல்கள் சத்திக்கவும், அம் பொன் சிலம்பு கிடந்து அலற=அழகிய பொன்னாற் செய்யப்பட்ட சிலம்புகள் கிடந் தொலிக்கவும், பெண் உருவம் வாய்ந்த திரு மால்=பெண் வடிவங் கொண் டுள்ள விஷ்ணு, உமையாள் ஓடும் உவந்து எய்தி = உமா தேவியா ரோடும் மகிழ்வுடன் சென்று, தமரம் கடலின் விடம் அயின்ற = ஒலிக்கின்ற சமுத்திரத்திற் றோன்றிய நஞ்சை யுண்ட, தலைவன் அடியில் தாழ்ந்தனன் = சிவபெருமா னது திருவடியிற் றோய வணங்கினர். (௪௨)

நாணொடு மெருத்தங் கோட்டி நகைமுக விருந்து நல்கி 117
மாணிழை யுருவி னின்ற மாயனை யுமையி னோடுங்
காண்வரத் தனது செம்பொற் கவானிடை யிருத்தி நீங்கா
வேணவா வோடும் புல்லி மேதக விருந்தா னன்றே.

(இ·ள்.) நாண் ஓடும் எருத்தம் கோட்டி=நாணத்துடன் பிடரை வளைத்து, நகை முகம் விருந்து நல்கி = முறுவல் பூத்த முகநயங் காட்டி, மாண் இழை உருவின் நின்ற மாயனை = மாட்சிமை யுற்ற ஆபரணங்களைத் தரித்த பெண் வடிவு கொண்டு நின்ற திரு மாலை, உமையின் ஓடும்=உமாதேவியுடன், காண் வர=கண்டபோது, தனது செம்பொன் கவான் இடை இருத்தி = தமது சிவந்த பொன் போன்ற அழகிய தொடைக்க ணிருத்தி, நீங்கா வேணவா ஓடும் புல்லி = பிரியாத பேரவாவுடன் றழுவி, மேதக இருந்தான்= மேலாய தகுதியுடன் வீற்றிருந்தனர்.

அன்று ஏ-அசைகள். நகை முகம் என்பது மெய்ப்பாட்டுக்குறியுளொன்று. இதனைப் புகுமுகம் என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். முகமென்பது தலைமகன் நோக்கிய நோக்குப் புகுதற் கிடமா யுள்ளது. "நோக்கெதிர் நோக்க லலைமுக நோக்குதல்" என்று ராகலின், இந்த நோக்கத்தை முகமென்றான். மாண் இழை - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை. வேணவா-மரூஉ மொழி. (௪௩)

திருமறு மார்ப னோடு முமையொடுஞ் சிறந்து தோன்று 118
மரியணைப் புறத்து வைகு மண்ணலை வணங்கி யேத்தி
யெரியுமிழ் தறுக ணந்த காசுர னிழைத்த வெல்லாங்
குருதிதோய் வ்வர வொள்வா ளிந்திரன் கூறி னனே.

(இ-ள்.) குருதி தோய் ஒள் வைரம் வாள் இந்திரன் = இரத்தந் தோய்ந்த ஒளி பொருந்திய குலிசப்படை தாங்கும் இந்திரன், திருமறுமார்பன் ஓடும் = திருமாலாகிய சத்தியோடும், உமை ஓடும் = உமாதேவி யாகிய சத்தியுடனும், சிறந்து தோன்றும் அரி அணை புறத்து=சிறப்புற்று விளங்கும் சிங்காசனத்தின் கண்,வைகும் அண்ணலை வணங்கி ஏத்தி=வீற்றிரா நின்ற சிவபெருமானைப் பணிந்து துதித்து, எரி உமிழ் தறுகண் அந்தகாசுரன்=அக்கினியைக் காலும் அஞ்சா விழியுடைய அந்தகாசுரன், இழைத்த எல்லாம் கூறினுன்=செய்தவற்றை யெல்லாஞ் சொன்னுன்.

திருமால் உமை யென்னும் இரு சத்திகளும் முறையே வலத்தும் இடத்து முறைய வீற்றிருந் தருளிய சிவபிரானுக்கு அந்தகாசுரன் செய் தவற்றை யெல்லாம் இந்திரன் கூறினன் என்பது. வாள்-ஆயுதப் பொதுப்பெயர். (சச)

மாயனுண் டளித்த நூறு சத்தியும் வணங்கி யேத்தித்
தூயநீ யாரை மற்று னிடமருங் கதனிற் றோன்று
மாயிழை யெவள்கொ லுன்றன் வலப்புறத் தழகு பூத்த
சேயிழை யார்கொ லென்னத் திங்களஞ் சடையோன் கூறும்.

(இ-ள்.) மாயன் = திருமால், ஆண்டு அளித்த நூறு சத்தியும் வணங்கி ஏத்தி= அவ்விடத்து உண்டாக்கிய நூறு சத்திகளும் (சிவபெருமானைப்) பணிந்து துதித்து, தூய நீ யார் = பரிசுத்தமுடைய நீவிர் யாவர், உன் இடம் மருங்கதனில் தோன்றும் = நமது இடப்பாகத்திற் காணப்படும், ஆய் இழை எவள்=ஆராய்ந்த ஆபரணமுடையாள் யாவள், உன் தன் வலம் புறத்து=நமது வலப்பாகத்தி லிருக்கும், சேய் இழை யார்=அழகுபூத்த அழகுள்ள செவ்விய அணியுடையாள் யாவள், என்ன=என்று வினவ,திங்கள் அம் சடையோன் கூறும்=சந்திரனைத் தரித்த அழகிய சடாமுடியையுடைய சிவபெருமான் திருவாய் மலர்ந் தருளுவார். (சரு)

தத்துவங் கடந்து நின்ற தனிப்பொரு ளாகி மேலாஞ்
சித்தினி லறிவ தாகித் தெரிவரும் பிரம மாகிப்
பத்திமை யோடுந் தம்மைத் தம்முளே பார்க்குந் தூய
முத்தர்நல் லிதய நீங்கா முழுப்பொருள் யாமே யாமால்.

(இ-ள்.) தத்துவம் கடந்து நின்ற தனி பொருள் ஆகி = தத்துவங்களை யெல்லாங் கடந்து மிகுந்து நின்ற ஒப்பற்ற பரம்பொரு ளாகியும், மேல் ஆம் சித்தினில் அறிவது ஆகி = ஒப்பற்ற சிவஞானத்தானே யறியப் படுவ தாகியும், தெரிவு அரு பிரமம் ஆகி= (ஏனைய ஞானங்களான்) அறிதற்கரிய பிரமப் பொருளாகியும், பத்திமை ஓடும் தம்மை தம் உள்ளே பார்க்கும்=அன்புடன் ஆன்மாக்க ளாகிய தங்களைத் தங்க ளுள்ளே பார்த்துத் தெளிந்த, தூய முத்தர் நல் இதயம் நீங்கா=பரிசுத்த குணமுடைய தற்போத மிழந்தாரது நல்ல இரு தயத்தை விட்டுப் பிரியாத, முழுப்பொருள் = முழு முதலாகிய பதிப்பொருள், யாமே ஆம்=நாமே யாகும்.

இதனுல் பதிப்பொருளி னிலக்கணம் பகரப்பட்டது. என்னை? சித்துப்பொருளாதலும், சத்துப் பொருளாதலும், உடைமையா நிற்றலும் அதற் கிலக்கண மெனச் சொரூப லக்கணமெனப் படுஞ் சிறப்பியல்புக் குணங்களைக் கூறியதனு னெஃக. இக் கருத்தையே சிவஞானபோதமும் "உணருரு வசத்தெனி னுணரா தின்மையி - னிருதிற னல்லது சிவசத் தாமென-விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே. என்று கூறிற்று.

பிருதிவி முதற் சிவமீறுவுள்ள தத்துவ தாத்துவிகங்க ளெல்லாம் ஞளவைகளா னறியப்படு பொருளாகலின், அவை யசத்தின் பாலவாய் அழிவே[illegible] நிற்றவான் அவை கடந்த பொருளென்பான் "தத்துவங் கடந்து நின்ற தனிப்பொரு ளாகி" என்றுன். இத

னுற் சத்தினிலக்கணங் கூறியதோடு உலகம் போலப் பதிப்பொருளுஞ் சுட்டறிவா னறியப்படும் என்னும் நையாயிகவாதி சங்கற்பமும், அவ்வாறளக் தறிபொருளுஞ் சத்தாமென்னுஞ் சாங்கியவாதி சங்கற்பமும் கிராகரணஞ் செய்யப் பட்டது.

அங்ஙனங் கடந்து நின்ற பொருள் எவ்வாற்றானும் அறியப்படாத இயல்பிற்றெனின், சசவிடாணம் (முயற்கொம்பு) போலச் சூனியமாதலா னின்றாக, பசுபாசஞானங்களான் அறியப்படாது சிவஞான மொன்றானே யறியப்படு மென்பான் "மேலாஞ் சித்தினிலறிவதாகி" என்றான். இதனால் அப் பதிப்பொருள் ஒருவாற்றா னுணரப்படாது சிவமாதலும், ஒருவாற்றா னுணரப்பட்டுச் சத்தாதலுமாகிய சிவசத்தி யிலக்கணங் கூறப்பட்டது. ஈண்டுச் சித்து என்றது ஒரு பொருளை முற்பட்டு அது வதுவாகச் சுட்டிக்காணும் அளவைச்சித்தன்று. இதுவன்றிச் சீவனுஞ் சித்துடைப் பொருளாக, அது கண்போலத் தன்னையறியாச்சித்தும், பதிப்பொருள் அறிந்து அறிவிக்குஞ் சித்து மாகலின் சித்துடைப் பொருளில் அறிந்து அறிவிக்குஞ் சித்தாகி யென் றுரைப்பது மாம்.

"பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலு-மீசனை யறிய வொண்ணா திறையருள் ஞான கண்ணித்-தேசுறும்." எனவருஞ் சிவப்பிரகாசத் திருவிருத்தப்படி, அருள் வழி யன்றி யறிதல் கூடாமையான் "தெரிவரும் பிரமமாகி" என்றான்.

அன்புஞ் சிவமும் வேறன்மையாற் சிவஞானங் கூடற்கு அன்பு வேண்ட லொருதலையாகலின், அதனை யுடையராய்த் தற் போத மிழந்தார் மாட்டு இரண்டற்று விளக்கும் அகண்டப் பொரு ளென்பான் "பத்திமை யோடுந் தம்மைத் தம்முளே பார்க்குந் தூய-முத்தர்கல் விதய நீங்கா முழுப்பொருள்" என்றான். இதனாற் சிவஞான சாதனமும் பயனுந் தெளிவித்தமையு மாம். (௪௯)

உலகெலா மீன்றுங் காவல் புரிந்துமீட் டொடுக்கு கின்ற
வலகிலா விச்சைக் கென்றுங் காரண மாகி யொன்றா
யிலகுபே ரொளியா யெந்த னிடமருங் கொளிக்குஞ் செல்வி
நிலவுநான் மறையு மேத்து நிகரில்சிற் சத்தி யாமால்.

-இ·ள்.- எந்தன் இடம் மருங்கு ஒளிக்கும் செல்வி = எமது இடப்பாகத்தினை யடுத்திருக்கும் இவள், உலகு எலாம் ஈன்றும்=உலகங்க ளெல்லாவற்றையும் பெற்றும், காவல் புரிந்தும்=காத்தலைச் செய்தும், மீட்டு ஒடுக்குகின்ற= பின்னரு முதற் காரணத்தி லொடுக்கா நிற்கும், அலகு இலா விச்சைக்கு=அளவில்லாத(எமது)திருவிளையாடல்களுக்கு, என்றும் காரணம் ஆகி=எக்காலுந் துணைக் காரணமாகி நின்று, ஒன்றாய்=ஒன்றாகியும், இலகு பெரு ஒளியாய்=விளங்கா நின்ற பெரிய ஒளிவடிவாகியும், நிலவும் நான்மறையும் ஏத்தும் = அறி வொளி வீசும் நான்கு வேதங்களாலும் துதிக்கப்படுகின்ற, நிகர் இல் சிற் சத்தி ஆம்=ஒப்பிலாத சிற்சத்தியே யாம்.

எல்லாவற்றையுந் தன துடைமையா வுடைய ளாகலின் "செல்வி" என்றும், வியாபார பேதத்தால் ஐவகைச் சத்திகளாகிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையு நடத்துதற் கருவியாய் நிற்றலின், "உலகெலா மீன்றுங் காவல் புரிந்து மீட்டொடுக்கு கின்ற- வலகிலா விச்சைக் கென்றுங் காரணமாகி" என்றும், ஆன்மாக்களுக்கு மலபரி பாகம் வருவித்த னிமித்தம் பஞ்சகிருத்திய காரணமாக வியாபரித்துப் பலதிறப்படினும் பொது வகையான் அறிவித்து நிற்பதாகிய தடையிலா ஞான மொன்றே சத்தி யெனப் படு மாகலான் "ஒன்றாய்" என்றும்,

ஒளியான [illegible]ருவரு வுடைத்தாகியும் அவையல்ல வாகியு மிருத்தல் போலச் சத்தியுமே வடிவெனிற் பரிணமித்தழி வெய்தலானும், அருவெனில் அத்துவாக்களு ளொன்றாய்

முடிதலானும்,விவர்த்த விருத்தி பரிணமித்து ளொன்றினு மடங்கா தென்பான்"பேரொளி யாய்" என்றும்,

இங்ஙனமே வித்தைகளுன் மேலாய் விளங்கும் பொது சிறப்பாய வேதங்கள் புகன்று துதிக்கு மென்பது உண்மை யாகலின் "நிலவு நான்மறையு மேத்து நிகரில் சிற்சத்தி யாமால்" என்றுங் கூறினான். (௪எ)

வலப்புற மதனின் மேய வண்டுகண் படுக்குங் கூந்த
லுலப்பருங் காலா தீத வுருவமா யொளியா யொன்றாய்க்
கலப்பிலவ் வியத்தந் தோன்றுங் காரண மாகி யானாய்
நலத்தகு குணக்குன் றாகு நாரண னாகு மன்றே.

(இ-ள்.) வலம் புறமதனின் மேய=வலப்பாகத்தி லிருக்கின்ற, வண்டு கண்படுக்கும் கூந்தல்=வண்டுகள் நித்திரை செய்யுங் கூந்தலையுடையாள் (யாவளெனில்) உலப்பு அரு கால அதீத உருவம் ஆய் = கெடுதலில்லாத காலதத்துவத்தையுங் கடந்த மாயை வடிவாகியும், ஒளி ஆய்=சோதி வடிவாகியும், ஒன்றாய்=அபின்னமாகியும், கலப்பு இல் அவ்வியத்தம் தோன்றும் காரணம் ஆகி = வேறுபடுத லில்லாத பிரகிருதி மாயை பிறத்தற்கு முதற்காரண மாகியும், யான் ஆய்=நான் என்னும் அகங்காரந் தோன்றுதற் கிடமாகியும், நலம் தகு குணம் குன்று ஆகும் = நன்மையின் மேற்பட்ட குணமலை யாகியும் விளங்கா நின்ற, நாரணன் ஆகும்=திருமாலென்னும் மாயைச் சத்தியே யாகும்.

அதீதம்=எட்டாதது. காலாதீத வுருவம் என்றதனால், ஈண்டுக் கூறப்பட்ட திருமால் பாஞ்சராத்திரிகளாற் கூறப்படுகின்ற இருபத்தைந்தாந் தத்துவ வாசுதேவனன்று. சுத்தமாயையின் காரியமாய்ப் பிரகிருதி மாயையின் காரணமாயுள்ள அசுத்தமாயா சத்தியென்க. இங்ஙனம் மாயாசத்தியா யிருத்தலான் மாயன் எனப் பெயர் வந்தது. இதனானே விண்டு இருவகையாகின்றனர். இதனை ஸ்ரீமந் மாணிக்க வாசக சுவாமிகள் முதலிய உண்மை நாயன்மார்களும் "மாலாய் நான்முகனாய்" எனவும், "திருமாலும் பன்றியாச் சென்றுணராச் சேவடி" எனவுங் கூறி விளக்கி யருளினர். வண்டுகண் படுக்குங்கூந்தல்- அன்மொழித் தொகை. அடியார் வேண்டுவ வளித்தலானும், அசுரர்க் கோறலானும், நிதிநடத்தலானும் "குணக்குன்று" என்றான். (௪அ)

பூந்துழாய்ப் படலை மாலைப் பூவைவண் ணனையுஞ் செய்ய
மாந்தளிர் கவற்று மேனி மலைமக டனையும் வேறா
வோர்ந்துரைப் போரெம் மன்பிற் றீர்ந்தவ ரொருவராக
வாய்ந்துணர் கிற்போ ரெந்த னன்பரிற் சிறந்தோ ரன்றே.

(இ-ள்.) பூ துழாய் படலை மாலை பூவை வண்ணனையும்=பொலிவாகிய துழாயிலை மாலை தரித்த காயாம்பூ நிறத்தின னாகிய திருமாலினையும், செய்ய மா தளிர் கவற்றும் மேனி = சிவந்த மாவி னிளந்தளிரையும் வருத்துகின்ற நிற வடிவினை யுடைய, மலைமகள் தனையும்=பார்வதி தேவி யினையும், வேறு ஓர்ந்து உரைப்போர்=(நமக்கு)வேறென் றறிந்து சொல்லுவோர், எம் அன்பின் தீர்ந்தவர் = எம்மீது அன்பில்லாதவ ராவர், ஒருவர் ஆக வாய்ந்து உணர்கிற்போர் = (எம்மையு மிவர்களையும்) ஒருவராகப் பொருந்தி நின் றறிபவர், எம் தன் அன்பரின் சிறந்தோர்=எமது அடியவருள்ளுஞ் சிறந்தவரே யாவர்.

இதனாற் சத்தியுஞ் சத்தனுங் குண குணியாய் நிற்றலான் வேறு பிரித்தோர் தலாகா தென்று கூறப்பட்டது. ஓர்ந்துரைப்போர்-உணரும்படி சொல்வோருமாம். (௪௯)

அலத்தகம் விளர்ப்பச் சேந்த சிறடி யம்மெல் லோதி
சிலைக்கரும் புருவ வாட்க ணுமையைவண் டேறல் க...

மலர்த்துழா யலங்கற் பூவை வண்ணனை யிகழ்ந்து ளோர்க
ளுலப்பிலு ளெரிவாய்த் தீய நரகிடை யுழப்ப ரன்றே.

(இ-ள்.) அலத்தகம் விளர்ப்ப சேந்த சிறு அடி=செம்பஞ்சும் வெண்மையென்று சொல்லும்படி சிவந்த சிறிய பாதங்களையும், அம் மெல் ஓதி=அழகிய மிருதுவான கூந்தலையும், சிலை கரு புருவம்=விற்போன்ற கரிய புருவங்களையும், வாள் கண் உமையை = வாட்படை போன்ற விழிகளையு முடைய பார்வதியையும், வண் தேறல் கக்கும் மலர் துழாய் அலங்கல்=வளவிய தேனைப் பிலிற்றுகின்ற மலரா லாகிய துழாய் மாலையை யணிந்த, பூவை வண்ணனை இகழ்ந்து உள்ளோர்கள் = காயாம்பூ மேனியனான நாரணனையும் நிந்தித்தவர்கள், உலப்பு இல் நாள்=அளவற்ற காலம், எரி வாய் தீய நரகு இடை உழப்பர்= எரிகின்ற வாயினை யுடைய கொடிய நரகங்களி னிடத்து வீழ்ந்து வருந்தா நிற்பர். (ரு0)

என்றுவெண் டிங்கள் வேணி யிறையவ னிசைத்த லோடுங் 125
குன்றெறி வயிர வொள்வாட் குரிசிலை முதல தேவர்
மன்றநாண் மலர்க டூவி வலஞ்செய்து வணங்கி யேத்தி
யொன்றுபே ருணர்வி னோடு மீங்கிவை யுரைக்க லுற்றார்.

(இ-ள்.) என்று = என்றிவ்வாறு, வெண் திங்கள் வேணி இறையவன் இசைத்தலோடும் = வெள்ளிய சந்திரனைத் தரித்த சடாமுடியை யுடைய சிவபெருமான் திருவாய் மலர்க் தருளலும், குன்று எறி வயிரம் ஒள் வாள் குரிசில் முதல தேவர்=மலைகளின் (சிறகர்களை) அரிந்த குலிசாயுத மாகிய ஒள்ளிய ஆயுதத்தைத் தாங்கிய இந்திரனை முதலாக நின்ற வானவர்கள், நாள் மலர்கள் மன்ற தூவி=புதிய புட்பங்களை மிகவுஞ் சொரிந்து, வலம் செய்து வணங்கி ஏத்தி=பிரதக்கிணஞ் செய்து பணிந்து துதிசெய்து, ஒன்று பெரு உணர்வின் ஓடும் = ஒருமைப்பட்ட நல்லறிவுடன், ஈங்கிவை உரைக்கல் உற்றார் = இவற்றைச் சொல்வா ராயினர். (ருக)

முருங்கெரி புரத்தி னிட்ட முதல்வநின் மேலுந் தெண்ணீர்க் 126
கருங்கடல் புகைய விற்காற் குழைத்திட்ட கடவுண் மீது
மருந்தினு மினிய தீஞ்சொன் மலைமகண் மீது மன்பு
பொருந்திட வேண்டு மென்னப் பொலிவொடு நல்கி னானே.

(இ-ள்.) முருக்கு எரி புரத்தின் இட்ட முதல்வ=கொலைத்தொழில் செய்யும் அக்கினியைத் திரிபுரங்களினுஞ் செலுத்தி யழித்த தலைவனே, நின் மேலும்=நின்னிடத்தும், தெள் நீர் கரு கடல் புகைய = தெளிந்த நீர் செறிந்த கரிய சமுத்திரம் புகையும்படி, வில் கால் குழைத்திட்ட கடவுள் மீதும்= வில்லைக் காலிற் பொருந்த வளைத்த திருமாலி னிடத்தும், மருந்தினும் இனிய தீம் சொல் = அமிர்தத்தைப் பார்க்கினுஞ் சிறந்த தித்திப்பாகிய மொழிகளை யுடைய, மலைமகள் மீதும்=பார்வதி தேவியி னிடத்தும், அன்பு பொருந்திட வேண்டும் என்ன = அன்பு நிலைக்க வேண்டு மென்று பிரார்த்திக்க, பொலிவு ஓடும் நல்கினான்=உவகையுடன் கொடுத்தருளினர். (ருஉ)

கலிநிலைத்துறை.

முத்தம் பருமித் திடைதேய்த்து முகிழ்ந்து வீங்கி 127
யத்தம் பொருவு மணிமென்முலை யங்க லோதி
மைத்தங் குவேற்கட் டிருநா யகனுதி வானோர்
தத்தம் பதிக்கு விடைகொண்டெழு மேல்வை தன்னில்.

(இ-ள்.) [illegible]தம் பருமித்து=முத்துக்களா லலங்கரிக்கப்பட்டு, இடை தேய்த்து= நுசுப்பினைக் குறை[illegible]து, முகிழ்ந்து = குவிந்து, வீங்கி அத்தம் பொருவும் மணி மெல்

முலை=பெருத்துப் பொன்னிறமொத்த அழகிய பிருதுவாய தனங்களையும், அம் நல் ஓதி=சிறந்த நன்மையாகிய கூந்தலையும், மை தங்கு வேல் கண் திருநாயகன்=கருமைபொருந்திய வேலாயுதம் போன்ற விழிகளையு முடைய இலக்குமி கணவனுகிய திருமால், ஆதி வானோர் = முதலாய தேவர்கள், தம் தம் பதிக்கு விடை கொண்டு = தங்கள் தங்களுது நகரத்திற்கு உத்தரவு பெற்று, எழும் எல்லை தன்னில்=புறப்படுஞ் சமயத்தில். (ருங)

நிழல்கொண்டு தெவ்வ ருயிர்மேயு நிணங்கொள் கோடட
வழல்வெஞ் சினத்த களிறுயிர வெள்ள மேக
மழவெங் கதிரி னிழறும்மு கொடிஞ்சி மான்றேர்
குழுமிப் புவியோ ரிடமின்றெனக் குன்றி னேக.

(இ-ள்.) நிழல் கொண்டு = தன்னிழலுடன் கறுவித்து, தெவ்வர் உயிர் மேயும் நிணம் கொள் கோட்ட = பகைவரது உயிரைக் கொல்லுந் தசை பொருந்திய கொம்பர்களை யுடையனவும், அழல் வெம் சினத்த=அக்கினி போன்ற வெவ்விய கோபத்தை யுடையனவும் ஆகிய, களிறு ஆயிரம் வெள்ளம் ஏக=யானைச்சேனைகள் ஆயிரவெள்ளஞ் செல்லவும், மழ வெம் கதிரின்=இளஞ் சூரியனது, நிழல் தும்மு கொடிஞ்சி மான் தேர் = ஒளியைக் காலுகின்ற கூவிரத்தை யுடைய குதிரைகள் கட்டப்பட்ட இரதங்கள், குழுமி=கூடி, புவி ஓர் இடம் இன்று என = பூமியின் கண் சிறிது வெள்ளிடமு மில்லை யென்று சொல்லும்படி, குன்றின் ஏக=மலைபோலச் செல்லவும். (ருச)

திரைமுற்று முந்நீ ரிடைத் தெள்ளமு தோடும் வந்த
பருமித்த கூந்தற் பரியாயிரம் வெள்ள மேக
வுருமுக் குரலர் வடிவாள ருலங்கொ டோளர்
வெருவற்ற மள்ளர் பதினுயிர வெள்ள மேக.

(இ-ள்) திரை முற்றும் முந்நீர் இடை=அலைகள் சூழுஞ் சமுத்திரத்தினிடத்து, தெள் அமுது ஓடும் வந்த=தெளிந்த அமிர்தத்துடன் பிறந்த, பருமித்த கூந்தல் பரி = ஒப்பனை செய்யப்பட்ட பிடர் மயிரினை யுடைய குதிரைகள், ஆயிரம் வெள்ளம் ஏக = ஆயிர வெள்ளஞ் செல்லவும், உருமு குரலர் = இடிபோன்ற சத்தத்தை யுடையவர்களும், வடி வாளர்=கூரிய வாளாயுதத்தை யேந்தினவரும், உலம் கொள் தோளர் = கல்லைப்போன்ற புயங்களை யுடையவரும், வெருவு அற்ற மள்ளர்=பயமில்லாத வீரர்கள், பதினுயிரம் வெள்ளம் ஏக=பதினுயிர வெள்ளம் என்னு மளவாகச் செல்லவும். (ருரு)

உடலுஞ் சினத்த வயவெம்புலிப் போத்தி னோடா
வடுவெந் திறல்வா ளவுணர்க் கிறையாய வெய்யோன்
கடன்மொண் டெழுந்த முகில்போற் கடற்றுனை யார்ப்ப
மிடல்கொண்டு போதந் துயர்மந்தர வெற்ப டைந்தான்.

(இ-ள்.) உடலும் சினத்த வயம் வெம் புலி போத்தின்=கொல்லுங் கோபத்தை யுடைய வெற்றி பொருந்திய கொடிய ஆண் புலியைப் போல, ஓடா=ஓடிச் சென்று, அடு வெம் திறல் வாள் அவுணர்க்கு இறை ஆய= (பகைவரை) அழிக்கின்ற மிக்க வீரமுடைய வாளேந்திய அசுரர்களுக்குத் தலைவனுகிய, வெய்யோன்= அந்தகாசுரன், கடல் மொண்டு எழுந்த முகில் போல் = சமுத்திர நீரை யுண்டெழுந்த கரு மேகத்தைப் போல, தானை கடல் ஆர்ப்ப = சேனு வெள்ளம் ஆரவாரிக்க, மிடல் கொண்டு போ[illegible]து = வீரமுற்றுச் சென்று, உயர் மந்தரம் வெற்பு அடைந்தான்=மேலாய மந்தர ம[illegible]ப் சேர்ந்தான். ()